# ஓர் புதிய ஒளியில்

ஆண்டறிக்கை 2015

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

# ஓர் புதிய ஒளியில்

**எண்ணியலில் மிகவும் முன்னேற்றமடைந்த நிறுவனமாகுவதை குறிக்கோளாகக் கொண்டு மக்கள் வங்கியிலுள்ள நாங்கள் எங்களுடன் இலங்கையர்கள் ஊடாடும் விதத்தில் ஓர் முற்றான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தை நிறுவியுள்ளோம்.**

வங்கியினுள் காணப்படும் முன்னேற்றமடைந்த எமது தொழில்நுட்பத்தின் உதவியுடன் எமது பங்காளிகளுடன் நாம் ஈடுபடும் மார்க்கங்களை அதிகரிப்பதற்கும், உங்களது அனைத்து வங்கியியல் தேவைகளுக்கும் ஓர் நவீனமான மற்றும் முழுமையான தீர்வினை வழங்குவதற்கு ஆர்வமாயுள்ளோம். விரைவான மற்றும் இலகுவான ஆனால் நாடு பூராவுமுள்ள வாடிக்கையாளர்களது தெரிவுடைய வங்கியின் பாரம்பரியத்திற்கு நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

ஓர் புதிய ஒளியில் நீங்கள் எங்களைப் பார்க்கும்வேளை ஓர் உன்னதமான வங்கியியல் அனுபவம் காத்திருக்கின்றது.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

# உள்ளடக்கம்



## முகாமைத்துவ அறிக்கைகள்

4 எமது குறிக்கோள் மற்றும் செயற்பணி
5 வங்கியினைப் பற்றி
6 நிதியியல் சிறப்பம்சங்கள்
7 நிதியியலல்லாத சிறப்பம்சங்கள்
8 எமது மைற்கற்கள்
13 விருதுகள் மற்றும் அங்கீகாரம்
14 இந்த அறிக்கையினைப் பற்றி
18 வருடத்திற்கான நிகழ்வுகள்
22 தலைவரின் செய்தி
26 பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளரது அறிக்கை
30 பணிப்பாளர் சபை
34 கூட்டாண்மை முகாமைத்துவம்
42 நிறைவேற்று முகாமைத்துவம்

## பெறுமதி உருவாக்கம்

52 வணிக உருப்படிவம்
54 போக்குகள், இடர்நேர்கைகள், வாய்ப்புகள் மற்றும் மூலோபாய வழிகாட்டல்
55 வழங்கல் தொடர் முகாமைத்துவம்
56 விநியோக மார்க்கங்கள்
58 பங்குதாரர் ஈடுபாடு
62 வணிக சூழல்
66 எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள்
68 நிறுவனக் கட்டமைப்பு மற்றும் துறைசார் செயற்திறன்
76 எமது துணைக்கம்பனிகள்
77 எமது மூலதனத்தை முகாமைப்படுத்தல்

## செயன்முகமைப் பொறுப்பு

98 ஆளுகை மற்றும் நெறிமுறைகள்
104 இடர்நேர்கை முகாமைத்துவம்
131 சபை உப குழுக்களது அறிக்கைகள்
138 முறைமைப்படுத்தல் இணக்கப்பாடுகள்
140 சிறந்த நடைமுறை நியமங்களுக்கு அமைவுறுதல்
148 உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று
150 உள்ளகக் கட்டுப்பாடுகளில் கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிப்பாட்டு அறிக்கை
152 கூட்டாண்மை ஆளுகை மற்றும் உண்மை கண்டுபிடிப்புகளில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

## நிதியியல் அறிக்கைகள்

177 நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்புகள்
178 நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை
180 வருமானக் கூற்று
181 இலாபம் அல்லது நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று
182 நிதி நிலைமைக் கூற்று
183 உரித்துடைமை மாற்றங்களிலான கூற்று - வங்கி
184 உரித்துடைமை மாற்றங்களிலான கூற்று - குழுமம்
185 காசுப்பாய்ச்சல் கூற்று
186 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## ஏனைய தகவல்கள்

264 வருமானக் கூற்று அமெரிக்க டொலர்கள்
265 நிதி நிலைமைக் கூற்று அமெரிக்க டொலர்கள்
266 செயற்திறன் மீளாய்வு 2006-2015
267 நீடிப்புத்திறன் அறிக்கையில் வெளிவாரி உறுதிப்பாடு
270 உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பின் உள்ளடக்கச் சுட்டி
"பொருந்துதல்" தெரிவு : மையம்
275 நிதியியல் / வங்கியியல் பதங்களின் திரட்டு
280 குறிப்புகள்

## எமது குறிக்கோள்

நிதிச் சேவைகளில் இலங்கையின் மறுக்கவியலாத சந்தை முன்னணித்துவராக அங்கீகரிக்கப்படுதல்

## எமது செயற்பணி

- நாம் பின்வருவனவற்றிற்கு பங்களிப்பு செய்யும் நிதிச் சேவைகள் வழங்கும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளோம். கட்டுப்படியாகக்கூடிய, அணுகத்தக்க மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் விநியோகிப்படும் தீர்வுகளூடாக வாழ்க்கைத் தரம் மற்றும் நிறுவன அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்.
- எமது வாடிக்கையாளர்களை கவனிக்கவும் பாதுகாப்பதற்குமாக நாம் எமது மனித வளங்களுக்கு அதிகாரமளித்து அபிவிருத்தி செய்கின்றோம்.
- போட்டியுள்ள விதத்தில் இலாபகரமாக காணப்படும்வேளை நாம் தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கின்றோம்.
- எமது வணிக நடைமுறைகளில் நீடிப்புத்திறனுடன் காணப்படும் அதேவேளை நாம் செயற்படும் சமூகத்திற்கு திருப்பி வழங்கவேண்டும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

# வங்கியைப்பற்றி

(G4-6) (G4-7) (G4-8) (G4-9)

வங்கிச் சட்டத்தின் கீழ் ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாக 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினூடாக மக்கள் வங்கியானது ஸ்தாபிக்கப்பட்டது. மக்கள் வங்கியானது கிராமிய பொருளாதாரத்திற்கு வங்கியியல் சேவைகளை வழங்கும் வடிகாலாகும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. இன்று, மக்கள் வங்கியானது சொத்துக்களைப் பொறுத்தளவில் நாட்டின் இரண்டாவது பெரிய வங்கியாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் இலங்கையில் அதிகமான வங்கிக் கிளைகள் வலையமைப்பினைக் கொண்டுள்ளது. உள்ளடக்கப்பட்ட வங்கியியல் கருத்தாக்கத்தின் அடிப்படையில் வங்கியானது முதன்மை, இரண்டாந்தர மற்றும் மூன்றாந்தர துறைகளை உள்ளடக்கிய அனைத்து சமூக பொருளாதார படிகளிலும் காணப்படும் சமுதாயத்திற்கு சேவையளிக்கின்றது. கம்பனிகள், சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள், நுண் வணிகம், சிறார்கள், இளைஞர்கள், வயது வந்தவர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளது தேவைகளை சந்திப்பதற்கு வங்கியானது அதன் கருவிகளது வீச்சினை பரவலாக்கியுள்ளது.

மக்கள் வங்கியானது அரசு உடைமையான ஓர் வங்கியாவதுடன் மூன்று துணைக் கம்பனிகளைக் கொண்டுள்ளது. துணைக்கம்பனிகளாவன, பீபள்ஸ் லீசிங் வைனான்ஸ் பி.எல்.சி., பீபள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் மெர்ச்சன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. என்பனவாகும். தற்போது மக்கள் வங்கியின் வணிகச் செயற்பாடுகள் இலங்கைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வங்கியில் சேவைகளில் 54 வருடங்களுக்கு மேல் »

கிளைகளின் எண்ணிக்கை 740 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. »

தானியக்க வங்கி இயந்திரங்களது எண்ணிக்கை 492 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. »

வாடிக்கையாளர் கணக்குகள் 16 மில்லியனுக்கும் மேல் »

# நிதியியல் சிறப்பம்சங்கள்

| | வங்கி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|
| | **2015** | 2014 | மாற்றம் % | **2015** | 2014 | மாற்றம் % |
| **நிதியியல் செயற்திறன் - ரூபா மில்லியன்** | | | | | | |
| மொத்த வருமானம் | **103,649** | 96,377 | 7.5 | **123,831** | 118,641 | 4.4 |
| மொத்த செயற்பாட்டு வருமானம் | **54,743** | 41,894 | 30.7 | **67,635** | 54,308 | 24.5 |
| வரிக்கு முந்திய இலாபம் | **19,520** | 17,231 | 13.3 | **24,121** | 21,628 | 11.5 |
| வரிக்கான ஏற்பாடு | **6,922** | 3,012 | 129.8 | **9,053** | 4,674 | 93.7 |
| வரிக்கு பிந்திய இலாபம் | **12,598** | 14,219 | (11.4) | **15,068** | 16,953 | (11.1) |
| **நிதி நிலைமை - ரூபா மில்லியன்** | | | | | | |
| மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள் | **829,234** | 685,310 | 21.0 | **933,290** | 782,301 | 19.3 |
| வைப்புகள் | **899,238** | 793,342 | 13.3 | **932,906** | 829,019 | 12.5 |
| மொத்த சொத்துக்கள் | **1,177,143** | 1,026,769 | 14.6 | **1,295,366** | 1,139,258 | 13.7 |
| பங்குதாரர் நிதியம் (மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்) | **49,495** | 43,470 | 13.9 | **72,801** | 64,062 | 13.6 |
| **முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள்** | | | | | | |
| சொத்தக்களிலான விளைவு (%) - வரிக்கு முந்தியது | **1.8** | 1.8 | - | **2.0** | 2.0 | - |
| - வரிக்கு பிந்தியது | **1.1** | 1.5 | - | **1.2** | 1.6 | - |
| உரித்துவத்திலான விளைவு (%) | **27.1** | 35.5 | - | **22.0** | 28.5 | - |
| நடைமுறை சேமிப்பு / மொத்த வைப்புகள் | **47.8** | 46.3 | - | **46.3** | 44.7 | - |
| **சட்டபூர்வமான விகிதங்கள்** | | | | | | |
| **ஏற்ற அளவு மூலதன விகிதங்கள்** (%) | | | | | | |
| அடிப்படை மூலதன விகிதம் - ஆகக்குறைந்த தேவைப்பாடு 5% | **9.9** | 10.9 | - | **11.5** | 12.4 | - |
| மொத்த மூலதன விகிதம் - ஆகக்குறைந்த தேவைப்பாடு 10% | **12.5** | 14.3 | - | **13.8** | 14.9 | - |
| சட்டபூர்வமான திரவத்தன்மை சொத்துக்கள் விகிதம் (%) | | | | | | |
| உள்ளூர் வங்கியியல் அலகு - ஆகக்குறைந்த தேவைப்பாடு 20% | **25.9** | 30.3 | - | **N/A** | N/A | - |
| கரைகடந்த வங்கியியல் அலகு - ஆகக்குறைந்த தேவைப்பாடு 20% | **21.7** | 21.8 | - | **N/A** | N/A | - |

**19.5 பில்லியன்**
வரிக்கு முந்திய இலாபம்

**12.6 பில்லியன்**
வரிக்கு பிந்திய இலாபம்

**899 பில்லியன்**
மொத்த வைப்புகள்

**829 பில்லியன்**
மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள்

**1.8%**
சொத்துக்களிலான விளைவு (வரிக்கு முந்தியது)

**47.8%**
நடைமுறை சேமிப்பு / மொத்த வைப்புகள்

# நிதியியலல்லாத சிறம்பம்சங்கள்

**வாடிக்கையாளர்கள்**

16.7 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர் கணக்குகள்
740 கிளைகள் மற்றும் 3>000 க்கும் அதிகமான தானியங்கி வங்கியியல் இயந்திரங்கள்

**ஊழியர்கள்**

8>300 க்கும் அதிகமான நிரந்தர ஊழியர்கள்
வருடத்திற்கு ஓர் ஊழியருக்கான சராசரி பயிற்றுவித்தல் மணித்தியாலங்கள் 21.6
ஊழியர் புரள்வு விகிதம் 5™

**அரசாங்கம்**

இலங்கை அரசாங்கத்திற்கு வரிகள் மற்றும் பங்கிலாபமாக ரூபா 16.8 பில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு**

எண்ணியலாக்கலை ஆரம்பித்தோம்
தரவுகள் களஞ்சியசாலை திட்டத்தினை முன்னெடுத்தோம்.
இலத்திரணியல் விநியோகத் தொடர் முகாமைத்துவ முன்னெடுப்பு
தன்னியக்க வங்கியியல் இயந்திரக் கட்டமைப்பானது ஓர் நிறுவன வலிமை வன்பொருள் மேடைக்கு புதுப்பிக்கப்பட்டது.
விற்பனை முனைக் கட்டமைப்பானது நவீன விற்பனை முனை வன்பொருளின் அறிமுகத்துடன் புதுப்பிக்கப்பட்டது.

**சுற்றுச்சூழல்**

பசுமை வங்கியியல் மற்றும் பசுமை கட்டிட கருத்தாக்கம் கடைப்பிடிக்கப்பட்டது.
நிறுவன செயற்பாட்டிற்கான ஓர் நீடிப்புத்திறன் கொள்கையினது அறிமுகம்.

# 60 களில்

## 1961 »

1961 ஜூலை 1 இல் மக்கள் வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. முதலாவது கிளையானது கொழும்பு டியூக் வீதியில் திறந்துவைக்கப்பட்டது. இவ்வருடத்தில் கொழும்பில் வெளிநாட்டு கிளையுடன் சேர்த்து பொலன்னறுவை, இங்குராக்கொட, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், புத்தளம், மாத்தளை மற்றும் கண்டி ஆகிய நகரங்களில் மேலும் எட்டு கிளைகள் திறந்துவைக்கப்பட்டன. மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 169 ஆகக் காணப்பட்டது.

## 1962 »

தலைமைக் காரியாலயம் கொழும்பு 02 இல் யூனியன் ஒழுங்கையிலுள்ள ரத்னம் கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதுடன் மேலும் 17 கிளைகள் திறந்து வைக்கப்பட்டன.

## 1963 »

வங்கியானது அதன் நகை அடவுபிடிக்கும் சேவையினை ஆரம்பித்தது.

## 1964 »

கூட்டுறவு கிராமிய வங்கியியல் திட்டமானது அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

## 1965 »

வங்கியின் சில திணைக்களங்கள் கொழும்பு 02 இல் சேர் சிற்றம்பழம் ஏ கார்டினர் மாவத்தையிலுள்ள ஜிசிஎஸ்யு கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. கிளைகளின் மொத்த எண்ணிக்கை 48 ஆக அதிகரிக்கப்பட்டது. இது ஹொரண, கெக்கிராவ, பதவிய, மன்னார், எம்பிலிபிட்டிய, கஹாட்டகஸ்டிகிலிய, ராகல மற்றும் தலவாக்கலை ஆகிய புதிய கிளைகளை உள்ளடக்கியது.

## 1967 »

வங்கியானது ஓர் புதிய விவசாயக் கடன் திட்டத்தினை ஆரம்பித்ததன் மூலம் சிறிய பண்ணைத் துறைக்கான முன்னோடி கடன் வழங்குவோனாகியது.

# 70 களில்

## 1970 »

முறைசாரா துறையினது பொருளாதார நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்காக “அதமாறு“ கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கிரமமான சேமிப்பாளர்களை கவர்வதற்காக முதலீட்டு சேமிப்புத் திட்டம் மற்றும் ஓர் கடன் இணைப்பு சேமிப்புத் திட்டம் என்பன ஆரம்பிக்கப்பட்டன.

## 1971 »

வங்கியினது 100ஆவது கிளையானது மரந்தகஹாமுள்ளவில் திறந்துவைக்கப்பட்டது.

## 1973 »

உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகியவற்றிற்கு கடன் வசதியினை வழங்குவதற்காக ஓர் விரிவான கிராமிய கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வங்கியானது “கொடுக்கல் வாங்கல்“ திட்டத்தினை முன்னெடுத்தது. இது தமிழ் சிங்கள புத்தாண்டு பாரம்பரியத்துடன் இனங்காண்பதுடன் வங்கியுடன் சுபநேரத்தில் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கின்றது.

## 1975 »

ஓர் ஆளுமை உணர்வுடனான கிளை விரிவாக்கல் திட்டமானது மொத்த கிளைகளின் எண்ணிக்கையினை 158 ஆகக் கொண்டுவந்தது.

## 1977 »

எமது 200ஆவது கிளையானது கொள்ளுப்பிட்டியில் திறந்துவைக்கப்பட்டது. தலைமைக் காரியாலயமானது கோட்டையிலுள்ள ஓர் கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 5,000 இனை எட்டியது. கொரலவெலவில் முதலாவது மீன்பிடிக் கிளையானது திறந்துவைக்கப்பட்டது.

# 80 களில்

**1981 »**
எமது கிளைகள் வலையமைப்பானது 290 கிளைகளாக அதிகரிக்கப்பட்டது. நீடிக்கப்பட்ட இளவர்களது சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

**1982 »**
வங்கியின் 300ஆவது கிளையானது இங்கிரியவில் திறந்துவைக்கப்பட்டது. மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 10,000 இனை எட்டியது.

**1984 »**
வங்கியின் துணைக்கம்பனியான பீபள்ஸ் மெர்ச்சன்ட் வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்லேவ் ஐலன்டிலுள்ள எமது கிளையானது சர்வதேச பிரிவுடனும் கோட்டையிலுள்ள வெளிநாட்டு கிளையுடனும் இணைக்கப்பட்டது.

**1986 »**
எமது தலைமைக் காரியாலத்திலும் சில தெரிவு செய்யப்பட்ட நகரக் கிளைகளிலும் கனணிமயமாக்கல் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. ஓர் கருப்பு வெளிச்ச திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் வாடிக்கையாளர் சுழற்சிநேரம் கணிசமானளவு குறைக்கப்பட்டது.

**1987 »**
எமது தலைமைக்காரியாலயக் கிளையானது வங்கியின் முதலாவது முற்றான தன்னியக்க கிளையாக மாறியது. இலங்கை மின்சார சபையுடனான கூட்டு முயற்சியுடன் கிராமிய மின்சாரமயமாக்கலுக்காக ஓர் விசேட கடன் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

**1989 »**
ஊழியர் சேமலாப நிதி நிலுவைக்கு எதிராக வீட்டுக் கடன்களை வழங்குவதற்காக வங்கியானது தொழிலாளர் அமைச்சின் அனுசரணையுடன் ஓர் கடன் திட்டத்தில் பங்கேற்றது. வெளிநாடுகளில் வேலை தேடுபவர்களுக்கு கடன்களை வழங்குவதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து ஓர் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1983 இல் உள்நாட்டு கலவரத்தில் பாதிப்படைந்தவர்களுக்கு கடன் வழங்குவதற்காக REPIA இனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கடன் திட்டத்தில் வங்கியானது பங்குபற்றியது. இவ்வருடத்தில் ஜனசவியவுடன் தொடர்புபட்ட கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வருடத்தில் வங்கியானது மாற்றுமுறை சேமிப்புச் சான்றிதழ்கள் வழங்குவதனை ஆரம்பித்தது.

# 90 களில்

**1990 »**
ஓர் அறக்கட்டளை சேமிப்ப வைப்புத் திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது. சர்வதேச வீசாவுடன் இணைந்து பீபள்ஸ் வீசா அட்டையானது அறிமுகப்படுத்தப்பட்டது. 24 கிளைகள் முற்றாக கனணிமயமாக்கப்பட்டன.

**1991 »**
முதலாவது தன்னியக்க வங்கியியல் இயந்திரமானது எமது தலைமைக்காரியாலயக் கிளையில் நிறுவப்பட்டது.

**1992 »**
வங்கியானது அரசாங்கத்தின் 200 ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்திற்கு உறுதுணை புரிந்தது. “பீபள்ஸ் தன்னியக்க வங்கியியல் முறையானது”, உள்ளகத்தே அபிவிருத்தி செய்யப்பட்ட வங்கியியல் பிரயோக முறையானது நேரலை செயற்பாட்டினை ஆரம்பித்தது.

**1993 »**
முன்னூற்று முற்பது வங்கிக் கிளைகள் நாடு பூராவும் செயலாற்றியதுடன் 35 பிரதான கிளைகள் முற்றாக தன்னியக்கமயமாக்கப்பட்டன. பெண்களுக்கான ‘வனிதா வாசனா’ சேமிப்புத் திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது.

**1994 »**
எட்டு புதிய தன்னியக்க வங்கியியல் இயந்திரங்கள் நிறுவப்பட்டதுடன் தன்னியக்கமயமாக்கல் திட்டத்தின் கீழ் 160 கிளைகள் கனணிமயமாக்கப்பட்டன.

**1995 »**
அரசாங்க ஆசிரியர்களுக்கு சேவையாற்றுவதற்காக ‘குருசெத்த’, ஓர் புதிய வைப்புத் திரட்டல் மற்றும் கடன் திட்டமானது கல்வி அமைச்சின் கூட்டு முயற்சியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

**1996 »**
அரசாங்கத் துறை சுகாதார ஆளணியினருக்காக ‘சுவ செவன’ எனப்படும் கடன் திட்டமானது ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்காக ‘சிசு உதான’ எனப்படும் ஓர் புதிய வைப்புத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. வங்கியானது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்படும் இரண்டு கடன் திட்டங்களான - சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர் அபிவிருத்தித் திட்டம்

# 90 களில்

மற்றும் வற்றாப் பயிர் அபிவிருத்தி திட்டம் என்பவற்றில் வங்கியானது பங்குபற்றியது. வங்கியின் முற்றான துணைக்கம்பனிகளான, பீபள்ஸ் லீசிங் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் என்பன அவற்றின் செயற்பாட்டினை ஆரம்பித்தன. பகிரப்பட்ட நிர்வாகத்தைப் பலப்படுத்துவதற்கும் சிறந்த வாடிக்கையாளர் சேவைக்கு வசதியளிப்பதற்கும் வலயக் காரியாலயங்கள் திறந்து வைக்கப்பட்டன.

## 1997 »

சுய வேலைவாய்ப்பு திட்டங்களுக்கு துணைபுரிவதற்காக 'சுரதுர' கடன் திட்டமானது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

NDB நிதியளிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கான உதவித் திட்டத்தின் கீழ் வங்கியானது சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கு கடன் வசதிகளை விரிவாக்கியது.

## 1998 »

125,000 பெட் (PET) அட்டை உரிமையாளர்களுக்கு சேவையளிப்பதற்காக தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களது எண்ணிக்கையானது 36 ஆக அதிகரிக்கப்பட்டது. நூற்று எழுபத்தைந்து கிளைகள் முற்றாக தன்னியக்கமயமாக்கப்பட்டதுடன் நகை அடவுபிடிக்கும் மையங்களது எண்ணிக்கை 188 ஆக உயர்த்தப்பட்டது. வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு உதவும் விதத்தில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் கூட்டிணைந்து 'விதேசிக்க' எனப்படும் ஓர் விசேட கடன் மற்றும் வைப்புத் திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது.

## 1999 »

பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் அவர்களது இளம் பிள்ளைகளது நலனுக்கு சேமிப்பதனை ஊக்குவிப்பதற்காக 'இசுரு உதான' எனப்படும் சேமிப்புத் திட்டமானது வங்கியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# 2000 களில்

## 2000 »

"ஜன ஜய" சேமிப்பு மற்றும் கடன் திட்டமானது ஆரம்பித்துவைக்கப்பட்டது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "ஜய சிறி" சீட்டிழுப்பானது வைப்பாளர்களுக்கு கவர்ச்சிகரமான பரிசில்களை வழங்கியது. நாடுபூராவும் தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களின் வலையமைப்பானது 74 ஆக பரவலடைந்தது. மத்திய தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களின் விசை இயக்கியானது, பீபள்ஸ் தன்னியக்க வங்கியியல் முறை கிளைகளையும் தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களையும் இணைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

## 2001 »

தனியார் வங்கியியல் துறையின் சில பிரிவுகளின் தலைவர்கள் வங்கியின் கூட்டாண்மை முகாமைத்துவக் குழுவினை பலப்படுத்துவதற்காக வேலைக்கமர்த்தப்பட்டார்கள். ஓர் மூலோபாய திட்டத்தினூடாக வங்கியின் மீள்கட்டமைப்பானது முன்னெடுக்கப்பட்டது. மொத்த தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களின் எண்ணிக்கையானது 90 ஆக அதிகரித்தது.

## 2002 »

பீபள்ஸ் தன்னியக்க வங்கியியல் முறை கிளைகளின் எண்ணிக்கையானது 219 ஆக அதிகரித்ததுடன் 119 கிளைகள் மத்திய தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களின் விசை இயக்கியுடன் இணைக்கப்பட்டது. ஓர் திறைசேரி தன்னியக்க பொதித்திட்டமானது அமுல்படுத்தப்பட்டது.

## 2003 »

திரு. அசோகா டி சில்வா அவர்கள் 2003 ஜனவரி 01இல் வங்கியின் 11ஆவது பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளராக பதவியேற்றார். இளம் நிறைவேற்றுனர்களுக்கான சேமிப்புக் கணக்கானது ஆரம்பித்து வைக்கப்பட்டது. வங்கியானது சில்வர் லேக் சிஸ்டம் SDV BUD மலேஷியாவுடன் ஓர் நவீன முக்கிய வங்கியியல் பொதித்திட்டம் மற்றும் வர்த்தக சேவைகள் தீர்வு என்பவற்றை நிறுவுவதற்காக ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இது ஆரம்பத்தில் தலைமைக் காரியாலயம் உள்ளடங்களாக தெரிவுசெய்யப்பட்ட 60 கிளைகளில் செயற்படுத்தப்படும்.

## 2004 »

ஆசிய அபிவிருத்தி வங்கியில் மீள்மூலதனமயமாக்கல் உறுதுணையினை அடிப்படையாகக் கொண்டு 2004-2008 க்கான இரண்டாவது கட்ட மீள்கட்டமைப்பானது ஆரம்பிக்கப்பட்டு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. வங்கியானது விச் ரேட்டிங்ஸ் லங்கா நிறுவனத்தினடமிருந்து முதலாவது பொது கடன் தரப்படுத்தல் தரமான BBB+ தரத்தினை பெற்றுக்கொண்டது. முக்கிய வங்கியியல் திட்டமானது வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டது.

## 2005 »

வங்கியின் 15ஆவது தலைவராக கலாநிதி. பி.ஏ.கிரிவந்தெனிய அவர்கள் 2005 டிசம்பர் ஆரம்பத்தில் பதவியேற்றார். இதனைத் தொடர்ந்து, அரசாங்கம், ஆசிய

அபிவிருத்தி வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திற்கமைய இலங்கை அரசாங்கத்தின் முதற்கட்ட உரித்துடைமை மூலதன முதலீடான ரூபா 2 பில்லியன் பெறப்பட்டது. மைய வங்கியியல் திட்டமானது வங்கியினது கிளை வலையமைப்பிடையே மேலும் விஸ்தரிக்கப்பட்டது. டிசம்பர் 2004 இல் ஏற்பட்ட சுனாமியின் பின்னரான மீள்கட்டியெழுப்புதலுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதி வசதிக்கு ஓர் முக்கியமான இடைநடுவராக வங்கியானது கடமையாற்றியது.

## 2006 »

வங்கியானது விச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிட்டட்டிடமிருந்து A- தரத்தினை பெற்றுக்கொண்டது. இது முன்னைய தரத்திலிருந்து ஓர் முன்னேற்றத்தைக் குறித்துக்காட்டியது.

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தினால் 2006 ஆம் வருடத்திற்கான வங்கியியல் மற்றும் நிதியியல் துறையில் POP விருதானது மக்கள் வங்கியினால் வழங்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்திடமிருந்து இரண்டாம் கட்ட மூலதனமாக ரூபா 1 பில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டது.

## 2007 »

வங்கியின் 16ஆவது தலைவராக திரு. டபிள்யு கருணாஜீவ அவர்கள் மே 2007 இல் பதவியேற்றார். இந்த வருடத்தில் விச் ரேட்டிங்ஸ் நிறுவனத்தின் A- தர மட்டமானது பேணப்பட்டது. இலங்கை அரசாங்கமானது மூன்றாம் கட்ட மூலதனமாக ரூபா 1.5 பில்லியனை மக்கள் வங்கிக்கு செலுத்தியது. தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக மக்கள் வங்கியானது வங்கி மற்றும் நிதியியலுக்கான வருடத்திற்குரிய மக்களது விருதினை வென்றது. 2007 ஆம் ஆண்டில் வங்கியின் மொத்த வைப்புக்கள் ரூபா 300 பில்லியன் இலக்கினை கடந்தது.

## 2008 »

திரு. எம். விக்கிரமசிங்க அவர்கள் வங்கியின் 12 ஆவது பிரதம நிறைவேற்று அதிகாரி /பொது முகாமையாளர் பதவியினை பொறுப்பேற்றார்.

இலங்கை அரசாங்கமானது நான்காவது கட்ட மூலதனமாக ரூபா 1.5 பில்லியனை விடுவித்தது. இவ்வருடத்தின் இறுதியில் வங்கியானது ஏற்ற அளவு மூலதன மட்ட விகிதமான 10.5% இனை எட்டியது. மேலும், வங்கியின் முதலாவது தொகுதிக்கடன் வழங்கலான ரூபா 2.5 பில்லியன் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது.

வங்கியினது பணமனுப்பல் சேவையில் ஓர் குறிப்பிடத்தக்க முன்னேற்றமானது பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டது. நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் வெளிநாடுகளிலிருந்து சில நிமிடங்களில் பணமனுப்பக்கூடிய "பீபள்ஸ் ஈ-ரெமிட்டன்ஸ்" எனப்படும் ஓர் இணையத்தளத்தை அடிப்படையாகக்கொண்ட பணமனுப்பல் கருவியானது அறிமுகப்படுத்தப்பட்டது. "தூ தரு எதெர இசுரு" எனப்படும் குழந்தைகளுக்கான ஓர் வெளிநாட்டு நாணய வைப்பு கருவியும், "விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு" எனப்படும் இரண்டு புதிய வெளிநாட்டு நாணய வைப்புக் கருவிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

## 2009 »

திரு. பி. வி. பதிரண அவர்கள் வங்கியின் 13 ஆவது பிரதம நிறைவேற்று அதிகாரி /பொது முகாமையாளர் பதவியினை 2009 ஜனவரியில் பொறுப்பேற்றார். இவ்வருடத்தில் வங்கியானது அதன் இரண்டாவது தொகுதிக்கடன் வழங்கலான ரூபா 2.5 பில்லியனை மேற்கொண்டது.

214 கிளைகளும் 236 சேவை மத்திய நிலையங்களும் நேரலையாக இணைக்கப்பட்டன. வங்கியானது கேந்திர நிலையங்களில் 300 க்கும் அதிகமான தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களை நாடு பூராவும் நிறுவியது.

மொத்த வைப்புகள் ரூபா 400 பில்லியனை எட்டியது. அதிகூடிய வரிக்கு முந்திய இலாபமான ரூபா 6.1 பில்லியன் பதிவுசெய்யப்பட்டது.

வங்கியின் வரலாற்றிலேயே முதன் முறையாக 2008 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கு தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் விருது பெறப்பட்டது.

## 2010 »

திரு. எச். எஸ் தர்மசிறி அவர்கள் வங்கியின் 14 ஆவது பிரதம நிறைவேற்று அதிகாரி /பொது முகாமையாளர் பதவியினை 2010 ஒக்டோபரில் பொறுப்பேற்றார்.

கிளை வலையமைப்பும் சேவை மத்திய நிலையங்களும் 679 ஆக விரிவடைந்தன. தன்னியக்க வங்கியியல் இயந்திரங்கள் 330 ஆக அதிகரித்தன.

ஜூலை 2010 இல் பீபள்ஸ் சர்வதேச வீசா பற்று அட்டையானது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வங்கியானது விச் ரேட்டிங்ஸிடமிருந்து AA- தரத்தினையும் ராம் ரேட்டிங்ஸிடமிருந்து AAA தரத்தையும் பெற்றுக்கொண்டது.

2010 ஆம் ஆண்டில் மொத்த வைப்புகள் ரூபா 462 பில்லியனை தாண்டியது. அதிகூடிய வரிக்கு முந்திய இலாபமான ரூபா 8.7 பில்லியன் பதிவுசெய்யப்பட்டது.

நியூயோர்க் நகரில் இடம்பெற்ற ARC விருது வழங்கலில் மக்கள் வங்கியின் ஆண்டறிக்கையானது இரண்டு தங்க விருதுகளை வென்றது.

2009 ஆண்டறிக்கைக்கு பொதுத் துறை பிரிவில் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் விருது வழங்கலில் முதலாமிடம் கிடைத்தது.

## 2011 »

திரு. என். வசந்தகுமார் அவர்கள் வங்கியின் 15 ஆவது பிரதம நிறைவேற்று அதிகாரி /பொது முகாமையாளர் பதவியினை 22 பெப்ரவரி 2011 இல் பொறுப்பேற்றார்.

வங்கியானது அதன் பொன்விழாவினை 1 ஜூலை 2011 இல் கொண்டாடியது.

மொத்த கிளைகள் வலையமைப்பானது 714 இனை எட்டியதுடன் நாட்டின் அனைத்து பாகங்களையும் உள்ளடக்கிய தன்னியக்க வங்கியியல் இயந்திரங்கள் காணப்படும் இடங்கள் 382 ஆக அதிகரித்தது.

வங்கியானது விச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிட்டட்டிடமிருந்து மேம்படுத்தப்பட்ட AA (திடமான) தரத்தினை பெற்றது.

வங்கியின் மொத்த சொத்துக்கள், மொத்த வைப்புகள் மற்றும் மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள் என்பன முறையே ரூபா 663 பில்லியன், ரூபா 539 பில்லியன் மற்றும் ரூபா 478 பில்லியன் இலக்கினை தாண்டியது. அதிகூடிய வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 15.3 பில்லியனும் வரிக்கு பிந்திய இலாபமாக ரூபா 10.2 பில்லியனும் பதிவுசெய்யப்பட்டன.

மக்கள் வங்கியானது இலங்கையின் வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகள் துறையின் மிகவும் பிரபல்யமடைந்த வங்கிக்கான SLIM-நீல்சன் மக்கள் விருதினையும், SLIM-நீல்சன் மக்கள் விருது - வருடத்திற்கான சேவைகள் வர்த்தகச்

சின்னம் மற்றும் 2011 SLIM வர்த்தகச் சின்ன தனிச் சிறப்பு விருது வழங்கலில் வெண்கல விருதினையும் வென்றது.

## 2012 »

மொத்த கிளைகள் வலையமைப்பானது 728ஐ எட்டியதுடன் நாட்டின் அனைத்து பாகங்களையும் உள்ளடக்கிய தன்னியக்க வங்கியியல் இயந்திரங்கள் காணப்படும் இடங்கள் 420 ஆக அதிகரித்தது.

வங்கியானது விச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிட்டட்டிடமிருந்து மேம்படுத்தப்பட்ட AA+ (திடமான) தரத்தினை பெற்றது. வங்கியின் மொத்த சொத்துக்கள், மொத்த வைப்புகள் மற்றும் மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள் என்பன முறையே ரூபா 873 பில்லியன், ரூபா 683 பில்லியன் மற்றும் ரூபா 660 பில்லியன் இலக்கினை தாண்டியது.

வங்கியின் 2011 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கையானது ஓர் மதிப்புவாய்ந்த விருதினையும் மூன்று தங்க விருதுகளையும் 2012 சர்வதேச ARC விருது வழங்கலில் தேசிய பிரிவில் வென்றது.

## 2013 »

திரு. காமினி சேனரத் அவர்கள் வங்கியின் 17ஆவது தலைவராக 2013 பெப்ரவரியில் பதவியேற்றார்.

நாடு பூராவும் 23 சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவு மையங்கள் நிறுவப்பட்டன.

உலகம் பூராவுமுள்ள 30 மில்லியன் வீசா ஒப்புதல் பெற்ற வர்த்தகர்களை அணுகக்கூடியதாக 1 மில்லியன் அட்டைகள் மைற்கள் தாண்டப்பட்டது.

ஊழியர் சேமலாப நிதிய, ஊழியர் நம்பிக்கை நிதிய மற்றும் சுங்கத் தீர்வை கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு நிகழ்நேர நேரலைக் கொடுப்பனவு வசதிகள் வழங்கப்பட்டன.

தேசிய பொது தன்னியக்க வங்கியியல் இயந்திர விசை இயக்கியுடன் இணைக்கப்பட்ட முதலாவது வங்கியாக மக்கள் வங்கி காணப்பட்டது.

தன்னியக்க வங்கியியல் இயந்திரங்கள் காணப்படும் இடங்கள் 460 ஆகவும் மொத்த கிளைகள் வலையமைப்பானது 735 ஆகவும் அதிகரித்தன.

வங்கியின் நான்காவது தொகுதிக்கடன் வழங்கலில் ரூபா 5 பில்லியன் பெறுமதியான தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்டன.

## 2014 »

வங்கியின் சொத்து மட்டமானது ஒரு டிரில்லியன் ரூபா தாண்டியதுடன் துறையில் காணப்படும் இரண்டாவது பாரிய வங்கியாக திகழ்ந்தது.

வங்கியானது பின்வரும் மூன்று கௌரவ விருதுகளை வென்றது. ஐரோப்பிய உலகளாவிய வங்கியியல் மற்றும் நிதியியல் விருது - இலங்கை 2014 இல் “வருடத்திற்கான வங்கி 2014”, உலக நிதியியில் வங்கியியில் விருதுகள் 2014 இல் “சிறந்த வங்கியியல் குழுமம் ஸ்ரீலங்கா மற்றும் மிகவும் நீடிப்புத் திறனுடைய வங்கி ஸ்ரீலங்கா என்பனவாகும்.

# 2015 »

» வங்கியானது முழுதாக எண்ணியலாக்கப்பட்ட வங்கியாக மாறுவதற்கான முன்னெடுப்பினை மேற்கொண்டுள்ளது.

» வங்கியானது அதன் வாடிக்கையாளரை 3600 பாகையில் அவரது மொத்த கடன் வெளிப்பாட்டினை அறிந்து கொள்ளுவதற்கான முன்னெடுப்பினை மேற்கொண்டுள்ளது. இப்பெறுமதி கருத்து விளக்கத்தினை பெற்றுக்கொள்வதற்காக அதன் அனைத்து தரவு மூலங்களையும் ஒன்றிணைக்கும் “தரவுக் களஞ்சியசாலை“ திட்டத்தினை முன்னெடுத்தது.

» வங்கியானது அதன் தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களின் பருமன், நம்பகத்தன்மை மற்றும் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கக்கூடியதன்மை ஆகிவற்றை பலப்படுத்துவதற்காக அதன் தன்னியக்க வங்கியியல் இயந்திரக் கட்டமைப்பினை ஓர் நிறுவன ஆற்றல் வன்பொருள் மேடைக்கு நிலை உயர்த்தியது.

» வங்கியானது அதன் மைய வங்கியியல் கட்டமைப்பினை பின்வரும் காரணங்களுக்காக ஓர் அதிநவீன வன்பொருள் மேடைக்கு நிலை உயர்த்தியது. அதன் சேவையாற்றும் திறனை பலப்படுத்தல், செயற்திறன் மற்றும் செயலாக்கல் ஆற்றலை மேம்படுத்தல் என்பனவாகும்.

» வங்கியானது அதன் விற்பனை மையக் கட்டமைப்பினை அதன் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றவும், மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்த பொருட்கொள்வனவு அனுபவத்தை வழங்கவும் நிலை உயர்த்தியது.

» 2016-2020 காலப்பகுதிக்கான மூலோபாய திட்டமிடலானது வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டது.

» வங்கியானது அதன் 54ஆவது வருடாந்த கொண்டாட்டங்களுடன் ஓர் “பசுமை வங்கியியல் கருத்தாக்கத்தினை“ ஆரம்பித்தது.

# விருதுகள் மற்றும் அங்கீகாரம்

## சிறந்த வங்கியியல் குழுமம் 2015 - இலங்கை

2015 இல் இடம்பெற்ற மதிப்புமிக்க உலக நிதியியல் வங்கியியல் விருது வழங்கலில் "சிறந்த வங்கியியல் குழுமம் 2015 - இலங்கை" விருது

## அதிக நீடிப்புத்திறனுடைய வங்கி - 2015

2015 இல் இடம்பெற்ற மதிப்புமிக்க உலக நிதியியல் வங்கியியல் விருது வழங்கலில் " அதிக நீடிப்புத்திறனுடைய வங்கி 2015 - இலங்கை" விருது

## வருடத்திற்கான வங்கியியல் சேவை வழங்குனர்

2015 இல் இடம்பெற்ற SLIM - நீல்சன் மக்கள் விருது வழங்கலில், தொடர்ச்சியாக 9 வருடங்களாக " வருடத்திற்கான வங்கியியல் சேவை வழங்குனர்" விருது

## வருடத்திற்கான சேவைகள் வர்த்தகச் சின்னம்

2015 இல் இடம்பெற்ற SLIM - நீல்சன் மக்கள் விருது வழங்கலில், தொடர்ச்சியாக 9 வருடங்களாக " வருடத்திற்கான சேவைகள் வர்த்தகச் சின்னம்" விருது

## 2015 ஆம் வருடத்திற்கான வங்கி

பிரசித்தி பெற்ற சர்வதேச நிதியியல் மற்றும் வணிக சஞ்சிகையான, யூரோப்பியன், சமீபத்தில் மக்கள் வங்கிக்கு ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையர்களுக்கு சேவையாற்றியதற்கும் அவர்களது அனைத்து நிதியியல் மற்றும் வங்கியியல் தேவைகளை சந்திப்பதற்கு வசதியளித்ததற்காகவும் 2015 ஆம் வருடத்திற்கான வங்கி எனும் விருதினை வழங்கி கௌரவித்தது.

# இந்த அறிக்கையைப் பற்றி



(G4 - 28,29,30,31,32)

மக்கள் வங்கியானது அதன் முதலாவது ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது. இந்த அறிக்கையானது 2015 ஆம் ஆண்டின் எமது செயற்திறனை அறிக்கையிடுவதற்காக 2013 இன் சர்வதேச ஒன்றிணைக்கப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்பினை அடிப்படையாகக்கொண்டும் நீடிப்புத்திறன் அறிக்கையிடலுக்கான உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்புகளின் (GRI) G4 முக்கிய வழிகாட்டிகளுடனும் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

## செயலெல்லை மற்றும் தோற்றங்களின் வரம்பு

இந்த அறிக்கையானது வங்கியின் மூன்று துணைக்கம்பனிகளான - பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி., பீபள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் மெர்ச்சன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. ஆகியவற்றின் செயற்திறனை உள்ளடக்காத போதும் இந்த நிறுவனங்கள் வங்கியின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## அறிக்கையிடல் சுழற்சி

இந்த ஒன்றிணைக்கப்பட்ட அறிக்கையானது மக்கள் வங்கியின் ஆண்டறிக்கைகளுக்கான பாரம்பரிய 12 மாத அறிக்கையிடல் சுழற்சிகளுக்கமைய 2015 ஜனவரி 01 முதல் 2015 டிசம்பர் 31 வரையான காலப்பகுதியினை உள்ளடக்கியுள்ளது. எமது மிகவும் சமீபத்தைய ஆண்டறிக்கையானது 2014 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையாகும்.

## செயற்பரப்பு மற்றும் தோற்ற வரம்புகளுக்கான மறுவிளக்கம் மற்றும் மாற்றங்கள்

முன்னைய அறிக்கைகளில் பிரசுரிக்கப்பட்ட எவ்வித தகவல்களையும் மீள்விளக்கமளிக்குமாறு வங்கி ஒருபோதும் கேட்டுக்கொள்ளப்படவில்லை. தற்போதைய அறிக்கைக்கும் முன்னைய ஆண்டறிக்கையான 2014 ஆம் ஆண்டின் அறிக்கைக்கும் இடையே குறிப்பிடும்படியாக செயற்பரப்பு மற்றும் தோற்ற வரம்புகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. இந்த அறிக்கை, வரம்புகள் மற்றும் செயற்பரப்பு என்பன மக்கள் வங்கியின், துணைக்கம்பனிகள் தவிர்ந்த, பொருளாதார, சமூக மற்றும் சூழல் தாக்கங்களுக்கு மாத்திரம் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

## வெளிவாரி உறுதிப்பாடுகள்

2015 ஆம் நிதியாண்டிற்கு வங்கியின் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதற்கும் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைகளுக்கு அமைவுற்றுள்ளது எனும் உறுதிமொழியினை வழங்குவதற்காகவும் இலங்கை கணக்காய்வாளர் நாயகத்தினால் KPMG ஸ்ரீலங்கா நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த அறிக்கையில் நீடிப்புத்திறன் அறிக்கையிடலுக்காக KPMG ஸ்ரீலங்காவிடமிருந்து வெளிவாரி உறுதிப்பாடு பெறப்பட்டுள்ளது.

பின்வருவனவற்றிற்காக நீடிப்புத்திறன் அறிக்கையிடலில் வெளிவாரி உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது. முக்கியமான நிதியியல் சிறப்பம்சங்களில் சாதாரண உறுதிப்பாடும் ஆறு மூலதனங்களை அடிப்படையாகக்கொண்ட செயற்திறனில் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாடும் வழங்கப்பட்டுள்ளது.

## முன்னெச்சரிக்கை அணுகுமுறை

(G4 - 14)

வங்கியானது முறைமைப்படுத்தல் மற்றும் இணக்கப்பாட்டு செயல்முறைகளுக்கமைவான கருவிகள் மற்றும் சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கு கடப்பாடுடையதாயுள்ளது. இதன் விளைவாக ஒவ்வொரு புதிய கருவி மற்றும் சேவையானது சந்தைக்கு விடப்படுவதற்கு முன்னர் இணக்கப்பாடு மற்றும் கணக்காய்வு பிரிவுகள் உள்ளடங்கலாக பொருத்தமான அலகுகளினால் சரிபார்க்கப்படுகின்றது. இத்தகைய அனைத்து வழியலகுகளுடன் வங்கியானது அது எப்போதும் சிறந்த நியமங்களை பின்பற்றுகின்றது என்றும் சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் எவ்வித எதிர்மறையான பாதிப்பும் இல்லை எனவும் உறுதிப்படுகின்றது.

## வெளிவாரி பட்டயங்கள் மற்றும் கொள்கைகளுக்கு வங்கியின் பங்களிப்பு

(G4 - 15)

மக்கள் வங்கி வெளிவாரியாக அபிவிருத்திசெய்யப்பட்ட பொருளாதார, சூழல் மற்றும் சமூக பட்டயங்கள், கொள்கைகள் அல்லது ஏனைய முன்னெடுப்புகளுக்கு பங்களிப்பு செய்வதில்லை. எவ்வாறாயினும், வங்கியானது வெளிவாரியாக அபிவிருத்தி செய்யப்பட்ட ஓர் ஆளுகை நடத்தை விதித்தொகுப்பிற்கு அமைவுறுகின்றது.

தயவு செய்து 97ஆம் பக்கத்தில் காணப்படும் செயன்முகாமையிலான அத்தியாயத்தையும் விபரங்களுக்கான இணக்கப்பாட்டு அறிக்கை எனத் தலைப்பிடப்பட்ட அத்தியாயத்தையும் பார்வையிடவும்.

## சங்கங்களிலான அங்கத்துவம்

(G4 - 16)

வங்கியானது பின்வரும் துறைகளுடன் தொடர்புடைய சங்கங்களில் அங்கத்துவம் பெற்றுள்ளது.

- ஆசிய பசிபிக் கிராமிய மற்றும் விவசாய கடன் சங்கம்
- இலங்கை, வங்கிகளது இணக்கப்பாட்டு உத்தியோகத்தர்களின் சங்கம்.
- வரையறுக்கப்பட்ட இலங்கை நிதியியல் குறைதீர்ப்பாணயம் (உத்தரவாதம்)
- இலங்கை வங்கியாளர்கள் நிறுவகம்
- இலங்கை வர்த்தகச் சம்மேளனம்
- வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர்கள் (உத்தரவாதம்) சங்கம்
- வங்கியியல் துறை இடர்நோக்கை தொழில்வல்லுனர்கள் சங்கம் - இலங்கை
- வங்கியாளர்களது தீர்வகச் சங்கம்
- இலங்கை முதலாளிமார் சம்மேளனம்
- முதன்மை வர்த்தகர்களது சங்கம்

## இந்த அறிக்கை தொடர்பான பின்னூட்டல்

ஏதேனும் கருத்துரைகள் மற்றும் வேண்டுதல்கள் தொடர்பாக தயவுசெய்து பின்வரும் முகவரியை அணுகவும்.

முகாமைத்துவத் தகவல்கள் பிரிவு
மக்கள் வங்கி
இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை
கொழும்பு 02
இலங்கை

தொலைபேசி : +9411 232 7841 (6 இணைப்புகள்)
+9411 244 6316 (4 இணைப்புகள்)
+9411 248 1481

மின்னஞ்சல் : info@peoplesbank.lk
இணையம் : www.peoplesbank.lk

## முக்கியத்தன்மை மதிப்பீடு

முக்கியத்தன்மை என்பது எமது வணிகத்திற்கும் மற்றும் எமது பங்காளிகளுக்கும் மிகவும் முக்கியமான விடயங்கள் என இனங்காண்பது பற்றியதாகும். எமது பங்காளிகளுக்கு மிகவும் தொடர்புடைய பொருளாதார, சமூக மற்றும் சூழல் விடயங்களையும் அவை எமது நற்பெயர், செயற்பாடுகள் மற்றும் நிதிகளுக்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய தாக்கத்தையும் நாம் குறிப்பிடுகின்றோம். இவற்றுடன் சேர்ந்து எமது பலன்கள், எமது வணிகத்தினால் முகங்கொடுக்கும் தொடர்ச்சியான, வெளிப்படும் அல்லது புதிய முக்கிய விடயங்களை எடுத்துக்காட்டுகின்றது. இந்த முக்கியத்தன்மை தோற்றங்கள் ஒரு நிறுவனத்தின் குறுகிய அல்லது நீண்டகாலத்தில் முக்கியமான நிதியியல் தாக்கங்களை அடிக்கடி கொண்டிருக்கும். "முக்கியமானது" என இனங்காணப்பட்ட தோற்றங்கள் மற்றும் முக்கியத்தன்மையினை தீர்மானிக்கும் செயல்முறை என்பன கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் விளக்கப்பட்டுள்ளது.




எமது வியூகமானது செலுத்தக்கூடிய, அணுகக்கூடிய மற்றும் பயனுறுதிமிக்கதாக விநியோகிக்கக்கூடிய தீர்வுகளூடாக வாழ்க்கைத்தரம் மற்றும் நிறுவன அபிவிருத்தி என்பனவற்றிற்கு பங்களிப்பு செய்யும் நிதியியல் சேவைகளை வழங்குவதில் குவிந்துள்ளது. முக்கியமான தோற்றங்களை இனங்காணும்போது எமது நீண்டகால நீடிப்புத்திறனுக்கு முக்கியமானதென நாம் நம்பிக்கை கொள்ளும் நிறுவனத்தினுள் காணப்படும் வரம்பெல்லைகள் மற்றும் நிறுவனத்திற்கு அப்பாலான வரம்பெல்லைகள் என்பவற்றை நாம் கவனத்திலெடுத்துள்ளோம். தாக்கங்கள் மற்றும் வரம்பெல்லைகளை அளவிடுவதற்காக நாம் பின்வரும் வரைகூறுகளை பிரயோகித்தோம்.

1. வாடிக்கையாளர் மற்றும் ஊழியர் திருப்தி
2. பொருளாதார வளர்ச்சி மற்றும் உட்கட்டமைப்பு
3. முதலீட்டாளர்களுக்கு நம்பகத்தன்மை மட்டங்களை கட்டியெழுப்புதல்
4. சமூகத்திற்கு ஓர் கூட்டிணைப்பு பிரஜை
5. தொழில்நுட்பத்தினூடாக வணிக சௌகரியம்
6. சுற்றுச்சூழல் அடிச்சுவடுகள் மற்றும் வலு நுகர்வினை குறைத்தல்

இந்த விடயங்களின் அடிப்படையில், நாம் இவற்றை ஓர் தாக்க வரைச்சட்டத்தினூடாக மதிப்பிட்டு முன்னுரிமைப்படுத்தினோம். இது முக்கியமான பங்காளிகளது விடயங்களை முன்னுரிமைப்படுத்தி கீழ், மிதம் மற்றும் உயர் என வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இறுதியாக நாம் எமது மறுமொழியினை




*குறிப்பு: வரைச்சட்டத்தினுள் காணப்படும் எண்கள் பின்வரும் அட்டவணையில் உள்ள தோற்ற எண்களை பிரதிபலிக்கின்றன.*

# இந்த அறிக்கையைப் பற்றி

| இல. | தோற்றம் | தோற்ற வரம்பெல்லை | | | | | முக்கியத்தன்மை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | உள்வாரி | வெளிவாரி | | | | | |
| | | | வாடிக்கையாளர் | சமூகம் | வழங்குனர் | சூழல் | வங்கி | பங்காளி |
| | **பொருளாதார** | | | | | | | |
| 1 | பொருளாதாரச் செயற்திறன் | √ | | | | | உயர் | உயர் |
| 2 | சந்தைப் பிரசன்னம் | √ | | | | | உயர் | உயர் |
| 3 | நேரிடையான பொருளாதார தாக்கங்கள் | | √ | | | | தாழ் | தாழ் |
| | **சுற்றுச்சூழல்** | | | | | | | |
| 4 | பொருட்கள் | | | | | | தாழ் | மத்திமம் |
| 5 | வலு | √ | | | | | உயர் | உயர் |
| 6 | நீர் | | | | | | தாழ் | தாழ் |
| 7 | நீரியற் கழிவுகள் மற்றும் கழிவுகள் | | | | √ | | தாழ் | தாழ் |
| 8 | பொருட்கள் மற்றும் சேவைகள் | √ | √ | | | | உயர் | உயர் |
| 9 | போக்குவரத்து | | | | | | தாழ் | தாழ் |
| 10 | சுற்றுச்சூழல் மனக்குறை பொறிமுறைகள் | | | | | | தாழ் | தாழ் |
| | **சமூக - தொழிலாளர் நடைமுறைகள் மற்றும் பண்பார்ந்த தொழில்** | | | | | | | |
| 11 | தொழில்வாய்ப்பு | √ | | | √ | | உயர் | உயர் |
| 12 | தொழிலாளர் / முகாமைத்துவ உறவு | √ | | | | | உயர் | உயர் |
| 13 | தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு | √ | | | | | மத்திமம் | மத்திமம் |
| 14 | பயிற்சி மற்றும் கல்வி | √ | | | | | உயர் | உயர் |
| 15 | பல்வகைமை மற்றும் சம வாய்ப்பு | √ | | | | | உயர் | உயர் |
| 16 | ஆண் மற்றும் பெண்களுக்கு சமமான வேதனம் | √ | | | | | உயர் | உயர் |
| 17 | தொழிலாளர் நடைமுறைகளுக்கான வழங்குனர் மதிப்பீடு | | | | | √ | தாழ் | தாழ் |
| 18 | தொழிலாளர் நடைமுறைகள் மனக்குறை பொறிமுறை | √ | | | | | உயர் | உயர் |

| இல. | தோற்றம் | தோற்ற வரம்பெல்லை | | | | | முக்கியத்தன்மை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | உள்வாரி | வெளிவாரி | | | | | |
| | | | வாடிக்கையாளர் | சமூகம் | வழங்குனர் | சூழல் | வங்கி | பங்காளி |
| | **சமூக - மனித உரிமைகள்** | | | | | | | |
| 19 | பாரபட்சமின்மை | √ | | | | | உயர் | உயர் |
| 20 | கூட்டமைப்பு சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேரம்பேசல் | √ | | | | | உயர் | உயர் |
| 21 | சிறுவர் தொழில் | √ | | | | | உயர் | உயர் |
| 22 | மனித உரிமை மனக்குறை பொறிமுறை | √ | | | √ | | உயர் | உயர் |
| 23 | நிர்ப்பந்த அல்லது கட்டாய தொழில் | √ | | | | | உயர் | உயர் |
| 24 | பாதுகாப்பு நடைமுறைகள் | √ | | | | | உயர் | மத்திமம் |
| | **சமூக - சமூதாயம்** | | | | | | | |
| 25 | உள்ளூர் சமூகங்கள் | √ | | √ | | | உயர் | உயர் |
| 26 | ஊழலுக்கெதிர் | √ | | | | | உயர் | உயர் |
| 27 | இணக்கப்பாடு | √ | | | | | உயர் | உயர் |
| 28 | சமூகத்தின் தாக்கங்களுக்காக வழங்குனர் மதிப்பீடு | | | | √ | | உயர் | உயர் |
| 29 | சமூக தாக்கங்களுக்கான மனக்குறை பொறிமுறை | | | | | | மத்திமம் | தாழ் |
| 30 | **சமூக -பொருள் பொறுப்பாண்மை** | | | | | | | |
| 31 | பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு முகப்புச்சீட்டிடுதல் | √ | | | | | உயர் | உயர் |
| 32 | சந்தை தொடர்பாடல்கள் | √ | | | | | உயர் | உயர் |
| 33 | வாடிக்கையாளர் இரகசியம் | √ | | | | | உயர் | உயர் |
| 34 | இணக்கப்பாடு | √ | | | | | உயர் | உயர் |

வங்கி மற்றும் பங்காளிகளுக்கு உயர்ந்த முக்கியத்துவம் நிறைந்த தோற்றங்களை அறிக்கையிடுவதற்கு வங்கி தீர்மானித்துள்ளது.

# வருடத்திற்கான நிகழ்வுகள்

*25 வருடங்களுக்கு வங்கியில் சேவையாற்றியவர்கள் அவர்களது விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பிற்காக கௌரவிக்கப்பட்டார்கள். இந்த நிகழ்வில் மொத்தமாக 94 ஊழியர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.*

*ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் "பணித்துறை வழிகாட்டல்" எனத் தலைப்பிடப்பட்ட தொழில் மற்றும் தொழில்முயற்சி சந்தை நிகழ்வானது மக்கள் வங்கியினால் அனுசரணையளிக்கப்பட்டது. இந்நிகழ்வானது இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் இளம் அங்கத்தவர்கள் மன்றம் மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழகம் ஆகியவற்றால் கூட்டாக ஒழுங்குசெய்யப்பட்டது.*

*மக்கள் வங்கியின் கிறிஸ்தவ குழாமினால் ஒழுங்கு செய்யப்பட்ட வருடாந்த நத்தார் கீதங்கள் வெகு விமரிசையாக பிஷப் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம் மற்றும் வன்னி பிராந்தியங்களது ஊழியர்கள் ஒன்று சேர்ந்து நத்தார் கீதங்கள் பாடுவதனைக் காணக்கூடியதாயிருந்தது.*

*மக்கள் வங்கியின் அபூர்வ திறமையுடைய விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை கௌரவிப்பதற்காக மக்கள் வங்கியின் விளையாட்டுக் கழகமானது 14ஆவது வருடாந்த வர்ண இரவினை ஒழுங்கு செய்தது. இந்த நிகழ்வில் 141 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் 2014/2015 இல் அவர்களது சாதனைகளுக்காக வர்ணங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.*

*மக்கள் வங்கியின் 22 கிளைகள் மற்றும் சேவை மத்திய நிலையங்கள் 2015 தீபாவளி பண்டிகையினை அனுசரித்தன. பிரதான கொண்டாட்டமானது மக்கள் வங்கியின் வெள்ளவத்தை கிளையில் இடம்பெற்றது.*

*மக்கள் வங்கியின் பெண் வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் தனித்துவமாக வனிதா வாசன பணத் திட்டமிடல் முதலீட்டுத் திட்டக் கணக்கு எனத் தலைப்பிடப்பட்ட ஓர் முதலீட்டத் திட்டக் கணக்கானது 2015 சர்வதேச பெண்கள் தினத்தில் மக்கள் வங்கியினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.*

*உயர் பாராட்டப்படும் மதிப்பிற்குரிய உலக நிதியியல் வங்கியியல் 2015 விருது வழங்கலில் மக்கள் வங்கியானது 2015 இல் இலங்கையின் "சிறந்த வங்கிக் குழுமம்" மற்றும் "மிகவும் நிடிப்புத்திறன் வாய்ந்த வங்கி" என தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக தீர்மானிக்கப்பட்டது.*

*மக்கள் வங்கியானது அதன் முதலாவது பசுமை வங்கியியல் முன்னெடுப்பினை அதன் இளைஞர் நேசமுள்ள நாமமான "YES" இல் ஆனந்தா கல்லூரியில் ஆரம்பித்து வைத்தது. இளம் கணக்கு உரிமையாளர்களை இலக்கு வைத்து YES முகப்புநூல் பக்கத்தினை ஆரம்பித்து வைக்கும் தொடக்க விழாவில் மக்கள் வங்கியின் தலைவர் திரு. ஹேமசிரி பினாந்து பங்குபற்றுவதனைக் காணலாம்.*

சுதந்திர தினத்தை ஒட்டிய கிழமையில் பிறந்த குழந்தைகளுக்கு பரிசில்களை வழங்கி மக்கள் வங்கியானது 67 வருட தேசிய சுதந்திரத்தை கொண்டாடியது. இக்கொண்டாட்டத்தின் முக்கியமான நிகழ்வானது பொரள்ளை காசல் வீதி மகப்பேற்று வைத்தியசாலையில் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளரது ஆதரவுடன் இடம்பெற்றது.

மக்கள் வங்கியின் வருடாந்து ஆய்வு மகாநாடு 2015 மூலோபாய திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்டது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட "PeMEx 2015" எனும் மருத்துவ கண்காட்சிக்கு மக்கள் வங்கியானது தங்க அனுசரணை வழங்கியது.

SLIM நீல்சன் 2015 மக்கள் விருது வழங்கலில் தொடர்ச்சியாக ஒன்பதாவது தடவையாக மக்கள் வங்கிக்கு வருடத்திற்கான சேவை நாமக்குறியீடு மற்றும் வருடத்திற்கான வங்கியியல் சேவை வழங்குனர் விருதுகள் வழங்கப்பட்டன.

மக்கள் வங்கியின் வர்த்தகக் கடன் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பிரிவினால் மிகவும் பகட்டுடனும் ஆரவாரத்துடனும் வர்த்தகக் கடன் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவன சாதனையாளர்கள் விருது 2015 இடம்பெற்றது.

மக்கள் வங்கியின் முகாமைத்துவக் குழுவானது எதிர்கால வளர்ச்சிக்கான அதன் 5வருட மூலோபாயத் திட்டத்தினை தலைமைக்காரியாலயம் மற்றும் கிளை வலையமைப்பிலுள்ள பல மட்டங்களில் காணப்படும் தொழில்வல்லுனர்கள் 1,000 பேருக்கும் அதிகமானோருக்கு சமீபத்தில் காட்சிப்படுத்தியது.

வெசாக் பண்டிகையினை முன்னிட்டு மக்கள் வங்கியின் கலைப் பிரிவானது சமீபத்தில் வெசாக் பக்தி கீதங்களை ஒழுங்குபடுத்தியது. பக்தி கீதங்கள் வங்கியின் ஊழியர்களினால் முன்வைக்கப்பட்டதுடன் அவர்கள் கீதங்களின் வரிகளுக்கும் பங்களிப்பு செய்தார்கள்.

"த யூரோப்பியன்" எனப்படும் மதிப்புமிக்க சர்வதேச நிதியியல் மற்றும் வங்கியியல் சஞ்சிகையானது அதன் உலகளாவிய வங்கியியல் மற்றும் நிதியியல் விருதுகள் 2015 இல் மக்கள் வங்கிக்கு வருடத்திற்கான வங்கி - இலங்கை எனும் விருதினை வழங்கி கௌரவித்தது.

# உங்களது அனைத்து வங்கியியல் தேவைகளுக்குமான ஓர் விரிவான தீர்வு.

மக்கள் வங்கியானது எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு பலதரப்பட்ட சேவைகளை வழங்கும் ஓர் ஒற்றை நிறுத்தல் கடையாகும். எமது தத்துவம் என்னவெனில், எமது வாடிக்கையாளர்களுக்கு வசதியான மற்றும் பயனுறுதிமிக்க சேவைகளை வழங்கும் அதேவேளை வங்கிக்கு மேலதிக கருவிகளை வழங்கக்கூடிய வாய்ப்புகளை உருவாக்குதலாகும். எமது வாடிக்கையாளர்கள் பல்வேறு மக்கள் தொகையியலை உள்ளடக்குகின்றது. இது குழந்தைகள் முதல் சிரேஷ்ட பிரஜைகள், தொழில்முனைவோர்கள் மற்றும் பாரிய கம்பனிகளையும் உள்ளடக்கும். சிக்கலான முதலீட்டு வங்கியியல் கருவிகளுக்கு நாம் எளிமையான கொடுக்கல் வாங்கல் வங்கியியலை வழங்குகின்றோம். இலங்கையில் அதிகூடிய கிளைகள் வலையமைப்பினைக் கொண்ட மக்கள் வங்கியானது தேசத்திற்கு சேவையாற்றுவதற்கு தயார் நிலையிலுள்ளது.

# 492

## தன்னியக்க வங்கியியல் இயந்திரங்கள்

# தலைவரின் செய்தி

மக்கள் வங்கிக்கான எனது குறிக்கோள் என்னவெனில் அதனை இலங்கையின் முதலாந்தர வங்கியாக மாற்றுவதாகும். சொத்துக்களைப் பொறுத்தளவில் மக்கள் வங்கியானது ஏற்கனவே இரண்டாவது பாரிய வங்கியாவதுடன், நாம் எமது கணிசமான சொத்துக்கள் மற்றும் நிறுவன அடையாள உரித்துவத்தை மேலும் பயனுறுதிமிக்க விதத்தில் பயன்படுத்தினால் முதலாவது இடத்தை அடையமுடியுமென நான் நம்புகின்றேன்.

**ஹேமசிறி பர்னாந்து**
தலைவர்

"2015 ஆம் ஆண்டானது மக்கள் வங்கியின் 55 வருட வரலாற்றில் ஓர் திருப்புமுனை ஆகக் கருதப்படுகின்றது ஏனெனில் இது வங்கிக்கு ஓர் புதிய யுகத்தின் ஆரம்பமாகும். இவ்வாண்டில், மக்கள் வங்கியினை நவீன எண்ணியல் யுகத்திற்கு மாற்றுவதற்கான செயல்முறையினை நாம் முன்னெடுத்தோம்".

மக்கள் வங்கியின் முதலாவது ஒன்றிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியினை வழங்குகின்றது. இது அறிக்கையிடல் சுழற்சியில் ஏற்பட்ட மாற்றம் மாத்திரம் அல்ல என நான் அழுத்திக்கூற விரும்புகின்றேன். இவ்வறிக்கையில் கூறப்படும் அடிப்படைக் கருத்தான "ஓர் புதிய விதத்தில்" என்பதற்கேற்றாற்போல் இந்த அறிக்கையானது மக்கள் வங்கியினை மீள்நிலைப்படுத்தக்கூடியதான பரவலான மற்றும் ஆழமான மாற்றங்களை பகிரங்கப்படுத்துகின்றது. 2015 ஆம் ஆண்டானது மக்கள் வங்கியின் 55 வருட வரலாற்றில் ஓர் திருப்புமுனை ஆகக் கருதப்படுகின்றது ஏனெனில் இது வங்கிக்கு ஓர் புதிய யுகத்தின் ஆரம்பமாகும். இவ்வாண்டில், மக்கள் வங்கியினை நவீன எண்ணியல் யுகத்திற்கு மாற்றுவதற்கான செயல்முறையினை நாம் முன்னெடுத்தோம். நான் எண்ணியல் யுகம் என்று கூறும்போது வங்கியின் சில பிரிவுகளை கணினிமயமாக்கும் சில ஒப்பனை மாற்றங்களைக் குறிப்பிடவில்லை. அதாவது வங்கியின் முற்றான வணிக மாதிரியினை மேலிருந்து கீழாக அனைத்த செயற்பாட்டு கடமைகளையும் எண்ணியற்படுத்தல் என்று பொருள்படும். இப்போதிருந்து ஐந்து வருடங்கள் முன்னோக்கி பார்க்கும்போது 2020 இல் ஓர் உருமாற்றம்பெற்ற நிதியியல் நிறுவனம், நவீன, ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மேடையில் செயற்படும், தொழில்நுட்ப அறிவுத்திறன் மிக்க இலங்கையர்களினால் முகாமைப்படுத்தப்படும் ஓர் வங்கியினை காண்பதற்கு எதிர்பார்க்கின்றேன்.

## 2015 இல் எமது மூலோபாயக் குவியம்

மக்கள் வங்கியானது நாட்டில் காணப்படும் எந்த ஓர் நிறுவனத்துடனும் ஒப்பிடும்போது பாரிய கிளை வலையமைப்பினைக் கொண்டுள்ளதுடன் இது நாடுபூராவும் பரவலாகப் பரந்து காணப்படும் 8,000 பணியாளர்களை பணிக்கமர்த்தியுள்ளது. எமது கிளைகள் தொழில்நுட்ப கிடைப்புத்திறனில் சமச்சீரற்றதாக காணப்படுவதுடன், பூகோள பரப்பு மற்றும் உட்பகுதி இடங்களில் காணப்படுதல் வழங்கல் சங்கிலியினை எண்ணியலாக்கல் மற்றும் பௌதீகரீதியில் வலையமைப்பினை மேற்கொள்வதில் பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது. எமது பாரிய மற்றும் பரந்து காணப்படும் பணியாளர் அடித்தளமானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப திறமைகள் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் நவீனமயப்படுத்தலில் மாறுபட்டுக் காணப்படுவதனால் தொழில்நுட்ப அடிப்படையிலான சேவை வாய்க்கால்களை அமுல்படுத்தும் அதேவேளை அதற்கு இணையாக இந்த திறமைகளும் விருத்திசெய்யப்படல் வேண்டும். 16 மில்லியனுக்கும் அதிகமான கணக்குகளை உள்ளடக்கிய எமது வாடிக்கையாளர் அடித்தளமானது தொழில்நுட்ப பரிட்சய மட்டத்தில் மிகவும் வேறுபட்டு காணப்படுகின்றது. மொழியானது அடுத்த சவாலாகக் காணப்படுகின்றது ஏனெனில், தொழில்நுட்ப அடிப்படையிலான எந்த வங்கியியல் கருவியும் மூன்று மொழிகளிலும் கிடைக்கப்பெறுதல் வேண்டும். எமது இறுதியான குறிக்கோளினை அடைவதற்கு நாம் வெற்றிகொள்ளவேண்டிய பரவலான சவால்களுள் இவை சிலவாகும்.

எமது பணியின் பரிமாணத்திற்கமைய நாம் 2015 இல் ஓர் ஒற்றை வளைவுண்டாக்கும் மூலோபாய முனைப்பினை நிறுவினோம். இது முதலில், வங்கியினை முழுவதுமாக எண்ணியலாக்கும் விரிவான மூலோபாயத்தினை முடிவுறுத்தல், இரண்டாவதாக 2016 ஆம் புதிய நிதியாண்டில் எமது மூலோபாயத்தின் முதலாம் கட்டத்தினை உடனடியாக ஆரம்பிப்பதற்கு வங்கிக்கு அனுமதியளிக்கும் அனைத்து ஆயத்தப் பணிகளையும் இனங்கண்டு அமுல்படுத்தல் என்பனவாகும். இவற்றில் நாம் வெற்றியடைந்துள்ளோம் என அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நாம் 2015 இனை ஓர் எண்ணியலாக்கல் மூலோபாயத் திட்டத்தினை முடிவுறுத்துவதுடன் நிறைவு செய்தோம். இது 2016-2020 வரையான ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு படிநிலைப்படுத்தப்பட்ட ஓர் விபரமான அமுலாக்கல் திட்டமாகும்.

இந்தச் செயல்முறை முழுவதும், ஓர் பங்காளிகள் பங்குபற்றும் அணுகுமுறையினை கடைப்பிடிப்பதன் மூலம் நாம் நீடிப்புத்திறன் கருத்தாக்கத்தினை தக்கவைத்தோம். எமது மூலோபாயத்தினை வடிவமைப்பது மற்றும் அபிவிருத்திசெய்வதில் நாம் முகாமைத்துவத்துடனும் பணியாளர்களுடனும் பல சுற்று கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். இத்துடன் வாடிக்கையாளர் சுற்றாய்வுகள், வழங்குனர் கருத்துக்கள், முறைப்படுத்தல் அங்கங்களின் தேவைப்பாடுகள் மற்றும்

# தலைவரின் செய்தி

"மக்கள் வங்கியின் பணியாளர்களுக்கான எனது செய்தி என்னவெனில் எமது நாட்டுக்கும் எமது மக்களுக்கும் நாம் கூட்டாக கடமையுள்ளவர்களாயுள்ளோம். குறுகிய கால இலாபங்களுக்கு மாத்திரமன்றி தேசிய சொத்துக்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதனை உறுதிசெய்வதற்கு நாம் கூட்டாக செயற்படல்வேண்டும். மக்கள் வங்கியின் பணியாளர்கள் என்ற ரீதியில், எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக அனைவரும் உங்களது முழு பலத்தையும் சாதகமான மாற்றத்தின் பின்னணியில் இடுமாறு வேண்டுகின்றேன்."

மக்கள் வங்கியின் பிரதான பங்குதாரராகிய இலங்கை அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி இலக்குகள் என்பவற்றையும் கவனத்திலெடுத்தோம். நாம் எமது தற்போதைய மற்றும் சாத்தியப்படக்கூடிய சுற்றுச்சூழல் தாக்கங்களையும் கவனத்திலெடுத்தோம். ஒரு பக்கத்தில் எண்ணியலாக்கல் வளங்களது நுகர்வினை குறைப்பதுடன் பாரியளவு தொழில்நுட்பத்தினூடாக எழக்கூடிய தாக்கங்களைக் குறைப்பதற்காக புதிய முறைகளை விருத்திசெய்வதற்கான தேவை காணப்படுகின்றது என்றும் உணர்ந்துள்ளோம். இதனைக் கருத்திற்கொண்டு, நாம் பசுமைக் கருவிகளை வடிவமைப்பதனை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதுடன் எமது எதிர்கால கட்டுமாண நடவடிக்கைகளில் "சுற்றுச்சூழல் நேசமுடைய" கட்டுமாணங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

தூர இலக்கினை அடையக்கூடிய எமது எண்ணியலாக்கல் மூலோபாயத்திற்கு தயாராகுவதில் நாம் ஏற்கனவே பணியாளர் பயிற்றுவித்தல் மற்றும் தொழில்நுட்ப கையகப்படுத்தலை ஆரம்பித்துள்ளோம். நாம் எமது மைய வங்கியியல் முறையினை ஓர் புதிய மிகவும் நவீன மேடைக்கு மாற்றுவதற்காக நிதியியல் ஒதுக்கங்களை மேற்கொண்டுள்ளோம். அத்துடன் தொழில்நுட்ப அடிப்படையான மிகவும் சிறந்த கருவிகளுக்கு வசதியளிப்பதற்காக உதவி முறைகளை அபிவிருத்தி செய்துமுள்ளோம். நாம் மிகவும் முன்னேற்றமடைந்த பாதுகாப்பு முறைகளிலும் முதலீடு செய்துள்ளோம். இந்த அறிக்கையின் பெறுமதி உருவாக்க அத்தியாயம் காணப்படும் பக்கங்கள் 50 - 96 இனை வாசிக்குமாறு நான் உங்களை கேட்டுக்கொள்கின்றேன்.

## வழமைக்கு மாறான வணிகம்

2015 ஆம் ஆண்டு மக்கள் வங்கிக்கு வழமைக்கு மாறான வணிகம் என்று குறிப்பிடலாம் என நான் கூறுகின்றேன். நாம் மூலோபாய அபிவிருத்தியின் நிமித்தம் எமது வழக்கமான வணிக விடயங்களை அசட்டை செய்யாமலும் வருடத்தின் பெரும்பகுதியில் காணப்பட்ட அரசியல் ஸ்திரமற்றதன்மையிலும் செயற்பட்டோம்.

இதன் காரணமாகவே மக்கள் வங்கிக்கு மிகவும் சிறந்த நிதியியல் ஆண்டினை அறிக்கையிடுவதில் நான் விசேடமாக மகிழ்ச்சி அடைகின்றேன். இதுநாள் வரைக்குமான சிறந்த இலாபத்திற்காக நான் பொது முகாமையளரையும் அவரது அணியினரையும் பாராட்டுவதுடன் வங்கியின் 2015 இற்கான செயற்திறனில் மேலதிக தகவல்களுக்கு பொதுமுகாமையாளரின் அறிக்கையினை வாசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## பங்காளிகளுக்கான செய்தி

மக்கள் வங்கியானது முறைப்படியான நிதியியல் சேவைகளை நாட்டினுள் ஆழமாக கொண்டுசெல்லக்கூடிய ஆற்றலுடன் பயன்படுத்தப்படாத பாரிய திறனைக்கொண்டுள்ளது என நான் நம்புகின்றேன். இலங்கையில் சமூக மற்றும் பொருளாதார தரங்களை கணிசமான அளவு உயர்த்துவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளதுடன் இந்த மறைந்துள்ள நன்மைகளை திறப்பதற்கான மிகவும் பயனுறுதியுடைய முக்கிய திறப்பாக தொழில்நுட்பம் காணப்படுகின்றது என நான் எண்ணுகின்றேன்.

எனவே ஓர் நவீன, மிகவும் இளக்கமான மற்றும் பிரதிபலிப்புடனான தேசிய பொருளாதார சொத்து என்பவற்றுக்கான இந்த குறிக்கோளை அடைவதற்கு எமது பங்காளிகள் அனைவரும் அவர்களது உறுதுணையை வழங்குமாறு நான் வேண்டுகின்றேன். மக்கள் வங்கியின் பணியாளர்களுக்கான எனது செய்தி என்னவெனில் எமது நாட்டுக்கும் எமது மக்களுக்கும் நாம் கூட்டாக கடமையுள்ளவர்களாயுள்ளோம். குறுகிய கால இலாபங்களுக்கு மாத்திரமன்றி தேசிய சொத்துக்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதனை உறுதிசெய்வதற்கு நாம் கூட்டாக செயற்படல்வேண்டும். மக்கள் வங்கியின் பணியாளர்கள் என்ற ரீதியில், எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக அனைவரும் உங்களது முழு பலத்தையும் சாதகமான மாற்றத்தின் பின்னணியில் இடுமாறு வேண்டுகின்றேன்.

மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு, முக்கியமாக எமது கிராமிய வாடிக்கையாளர்களுக்கு நான் அழுத்தமாக

கூற விரும்புவது என்னவெனில் நீங்களே எமது பலம் மற்றும் என்றும் அவ்வாறே காணப்படுவீர்கள். எமது எண்ணியலாக்கல் வியூகமானது என்றுமில்லாதவாறு உங்களுக்கு பின்வரும் விதத்தில் உறுதுணையளிக்கும் என நான் நம்புகின்றேன். சிறந்த சௌகரியங்கள், பரவளான தெரிவு மற்றும் மிகவும் போட்டித்தன்மையுடைய விலையிடல் என்பவற்றுக்கு வசதியளிக்கும்.

## எதிர்கால கண்ணோட்டம்

மக்கள் வங்கிக்கான எனது குறிக்கோள் என்னவெனில் அதனை இலங்கையின் முதலாந்தர வங்கியாக மாற்றுவதாகும். சொத்துக்களைப் பொறுத்தளவில் மக்கள் வங்கியானது ஏற்கனவே இரண்டாவது பாரிய வங்கியாவதுடன், நாம் எமது கணிசமான சொத்துக்கள் மற்றும் நிறுவன அடையாள உரித்துவத்தை மேலும் பயனுறுதிமிக்க விதத்தில் பயன்படுத்தினால் முதலாவது இடத்தை அடையமுடியுமென நான் நம்புகின்றேன். மக்கள் வங்கியினை தன்னியக்க வங்கியியல் இயந்திரங்கள். கடன் மற்றும் பற்று அட்டைகள் உள்ளடங்களான தொழில்நுட்ப அடிப்படையிலான சிறந்த வங்கியியல் சேவைகளில் முன்னணி இடத்திற்கு கொண்டுவருவதற்கு நான் விரும்புகின்றேன். குறுகிய காலத்தில், மக்கள் வங்கியானது நாட்டில் மிகவும் எண்ணியலாக்கப்பட்ட வங்கியாக வெளித்தோன்றுவதைக் காண்பதற்கும் இதனை 2016 ஆம் ஆண்டின் இறுதியில் அடைவதற்கும் விரும்புகின்றேன்.

நீண்டகாலத்தில், சிறந்த சர்வதேச வங்கிகளுக்கு இணையான ஓர் வங்கியாக உருவாக்க நான் முனைகின்றேன். சிலர் மத்தியிலே மக்கள் வங்கி இன்னமும் வரையறுத்த வங்கியியல் சேவைகளை வழங்கும் ஓர் கிராமிய அல்லது மாகாண வங்கி எனும் அபிப்பிராயம் காணப்படுகின்றது. இது தவறானதாகும், நாம் ஓர் முற்று முழுதான வர்த்தக வங்கியாகும். எமது பாரம்பரிய கருவிகளுக்கும் மேலாக நாம் சிக்கலான முதலீட்டு வங்கியியல் தீர்வுகளை வழங்குவதுடன் நாம் ஏற்கனவே நாட்டின் முதல் ஐந்து முதலீட்டு வங்கியியல் சேவை வழங்குனர்களுக்குள் அடங்குகின்றோம். 2020 இறுதியில், மக்கள் வங்கியானது ஓர் முற்று முழுதான எண்ணியல் வங்கியியல் தீர்வு வழங்குனராக உருமாற்றமடைவதனையும் மக்கள் வங்கியின் வணிகக் குறியானது பேராற்றல் வாய்ந்த சர்வதேச வங்கிகளுடன் போட்டியிடுவதனையும் காண விரும்புகின்றேன். இது நிச்சயமாக அடையக்கூடிய ஓர் இலக்கு என நாம் நம்புகின்றேன்.

எதிர்வரும் சில வருடங்கள் வங்கிக்கு பல வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை திறக்கும். இவ்வாய்ப்பானது ஓர் எண்ணியல் மேடையில் அபிவிருத்திசெய்யக்கூடிய புதிய கருவிகள் மற்றும் சேவைகளு டாக மாத்திரமன்றி தேசிய அபிவிருத்தி திட்டங்களூடாகவும் கிடைக்கும். ஓர் மேற்குப் பாரிய நகரத்திற்கான அரசாங்கத்தின் திட்டம் மற்றும் அதனோடிணைந்த அபிவிருத்தி திட்டங்கள் என்பன அரசாங்கம், வணிகங்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோருக்கு நிதிச் சேவைகளை வழங்குவதற்கான பலதரப்பட்ட வழிகள் வங்கிக்கு திறக்கும். இந்த நாட்டின் தோற்றத்தை மாற்றப்போகும் இந்த பாரிய அபிவிருத்தி உந்துதலில் பங்கேற்பதற்கு மக்கள் வங்கியானது தயாராயிருக்கும்.

மற்றுமோர் வளர்ச்சிக்கான மார்க்கமாக நாம் எண்ணிப்பார்ப்பது உள்ளூர் கரைகளுக்கப்பாலான பரவலாக்கலாகும். 2016 இல், மக்கள் வங்கியின் நிபுணத்துவத்தை வெளிநாட்டு தேசங்களுக்கு கொண்டுசெல்லும் சாத்தியப்பாட்டினை நாம் ஆராய்ந்து பார்ப்போம். முற்று முழுதான கிளைகளை நிறுவும் நோக்கில் சில வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை நாம் தற்போது ஆராய்ந்தவண்ணமுள்ளோம்.

இறுதியாக, நிலைமாற்றமடையும் இந்த நேரத்தில் எமது பங்காளிகள் அனைவருக்கும் அவர்களது உறுதுணைக்காக நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். முக்கியமாக எமது பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவத்திற்கு அவர்களது மீளெழும்தன்மை மற்றும் மாற்றத்தை தழுவுவதற்கான விருப்பம் என்பவற்றுக்கு நான் நன்றியுடையவனாய் இருக்கின்றேன். எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது விசுவாசம் மற்றும் வங்கிக்கான நீண்டகால உறுதுணை என்பவற்றுக்கு நன்றியுள்ளவனாய் இருக்கும் அதே சமயம் எதிர்காலத்தில் அவர்களுக்கு பாரிய மற்றும் சிறந்த சேவைகளை வழங்குவதற்கு வாக்குறுதியளிக்கின்றேன். இந்த சமயத்தில் நான் பொது நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சர், மதிப்பிற்குரிய கபீர் ஹசீம் அவர்களுக்கு அவரது தொடர்ச்சியான ஆதரவுக்கு எனது நன்றியைத் தெரிவிப்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களுக்கு அவர்களது ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டலுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நன்றி.

**ஹேமசிறி பர்னாந்து**
தலைவர்

23 மார்ச் 2016

# பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளரின் மீளாய்வு

"நாட்டிற்கான எமது கடப்பாட்டினை 2015 இல் எமது வணிக நடவடிக்கைகளினூடாக நாம் தொடர்ச்சியாக நிலைத்து நிற்கக்கூடியதாயிருந்தது. நாட்டிற்கான அபிவிருத்தி உறுதுணை என்ற வடிவத்தில் நாம் கணிசமான அளவு தொகையினை வழங்கியதுடன் அதில் ரூபா 199 பில்லியன் தேசிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு வசதியளிப்பதற்காக வழங்கப்பட்டது."



**என். வசந்தகுமார்**
பிரதம நிறைவேற்று அதிகாரி - பொது முகாமையாளர்

"எமது ஒட்டுமொத்த சொத்துக்களின் தரத்தை மேம்படுத்துவதில் நாம் தீவிர வெற்றியடைந்துள்ளோம் என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். மெய்யாகவே, இவ்வருடத்தின் இறுதியில் மொத்த செயற்திறனற்ற கடன் விகிதசாராமானது 2.4% ஆக காணப்பட்டதுடன், இது துறைசார் சராசரியான 3.2% உடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவானதாகும்."

ஓரளவு உறுதியற்ற வருடத்தின் மத்தியிலும் மக்கள் வங்கிக்கு ஓர் தீவிர ஆக்கவளமுடைய மற்றும் இலாபகரமான வருடத்தினை அறிக்கையிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நாம் எமது கவனத்தினை பேணி எமது வருடாந்த இலக்குகளை விஞ்சியுள்ளதுடன் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கான ஓர் மூலோபாயத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான அடித்தளத்தினை நிறுவி முடிவுறுத்தினோம்.

அரசியல் சூழலானது முழுவதுமான நிதியியல் துறைக்கான தொனியினை தீர்மானித்ததுடன், இதில் நாட்டின் பாரிய கடன் வழங்குனர்களுள் ஒன்றான மக்கள் வங்கியும் அடங்கியது. கடனுக்கான அரச துறை கேள்வியானது வருடத்தின் அனேகமான பகுதிகளில் ஒரே மட்டமாக காணப்பட்டதுடன், வருடத்தின் ஆரம்பத்தில் தனியார் துறை கடனுக்கான கேள்வி வளர்ச்சியானது மெதுவாகக் காணப்பட்டாலும் வருடத்தின் இறுதியில் கணிசமான அளவு அதிகரித்தது, சந்தையில் தொடர்ச்சியாக காணப்பட்ட மேலதிகத் திரவத்தன்மையானது ஆரம்பத்தில் காணப்பட்ட கடனுக்கான மந்தமான கேள்வியினை பிரதிபலித்ததுடன் வருடம் முன்னேற முன்னேற இது குறைவடைந்தது. வருடத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட மேலதிகத் திரவத்தன்மையான ரூபா 325.6 பில்லியன் 2015 செப்டம்பர் இறுதியில் ரூபா 62.4 பில்லியனாகக் குறைவடைந்ததாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிடுகின்றது. இத்தகைய ஓர் மெதுவான தொடக்கத்தின் மத்தியிலும் மக்கள் வங்கியானது வருடத்தின் இறுதிப் பகுதியில் கடனுக்கான துரித வளர்ச்சியினை கண்டதுடன் வருடத்தின் இறுதியில் திடமான முற்றுமுழுதான கடன் பெருக்கத்தினை அடைந்தது.

மிதமிஞ்சிய திரவத்தன்மையின் காரணமாக வருடத்தின் பெரும்பாலான பகுதிகளில் சந்தை வட்டி வீதமானது தொடர்ச்சியாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டாலும் சராசரி நிறையிடப்பட்ட அழைப்பு பணச்சந்தை வட்டி வீதமானது சில தளம்பல்களைக் காட்டியதுடன் 2015 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் ஓர் அதிகரிக்கும் போக்கினை சுட்டிக்காட்டியது. வருடத்தின் முதல் அரையாண்டில் இலங்கை ரூபாவானது அமெரிக்க டொலர், பிரித்தானிய பவுண்ட், இந்திய ரூபா என்பவற்றுக்கு எதிராக பெறுமதியிழந்ததுடன், சென்ற வருடத்துடன் ஒப்பிடும்போது அமெரிக்க டொலருக்கு எதிராக 9% பெறுமதியிழந்தது. வட்டி வீதங்கள் மற்றும் அந்நிய செலாவணி வீதங்களில் காணப்பட்ட இந்த தளம்பல்களின் காரணமாக மக்கள் வங்கியானது கணிசமான எதிர்மறையான தாக்கங்களை அனுபவிக்கவில்லை. மெய்யாகவே, எமது விழிப்புடைய அணுகுமுறையானது அந்நிய செலாவணி வருமானத்தில் ஓர் ஒட்டுமொத்த சாதகமான விளைவினை உருவாக்கியதுடன் வட்டி வருமானங்களையும் பேணக்கூடியதாயிருந்தது.

கொழும்புப் பங்குச் சந்தையானது இவ்வருடத்தில் தேறிய வெளிநாட்டு விற்பனையின் பலனாக ஓர் துரித ஏற்றத் தாள்வினை சந்தித்ததுடன் விலைச் சுட்டிகள், சந்தை மூலதனவாக்கங்கள் மற்றும் புரள்வு ஆகியன வீழ்ச்சியடைந்தன. இந்த மூலதனப் பெயர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமெரிக்க சந்தையின் மீட்சியும் எதிர்கால கொள்கை திசையில் முதலீட்டாளர்களது நிச்சயமற்ற தன்மையும் காணப்பட்டன. வீழ்ச்சியடையும் மசகெண்ணெயின் விலை மற்றும் மத்திய கிழக்கில், இலங்கையின் பாரிய புலம்பெயர் பணியாட்கள் பணிபுரியும் இடம், காணப்பட்ட விடாப்பிடியான நிச்சயமற்ற தன்மை என்பன புலம்பெயர் பணியாட்களது பண உள்வருகைகளது வீழ்ச்சிக்கு காரணியாயிருந்தன. எவ்வாறாயினும், பண உள்வருகைகளைக் கைப்பற்றுவதில் மக்கள் வங்கியானது தீவிர முன்னேற்றத்தை அடைந்தது.

## எமது செயற்திறன்

நாட்டிற்கான எமது கடப்பாட்டினை 2015 இல் எமது வணிக நடவடிக்கைகளினூடாக நாம் தொடர்ச்சியாக தாங்கிப்பிடிக்கக்கூடியதாயிருந்தது. வருடத்திலிருந்து வருடம் அடிப்படையில் நாம் எமது பொருளாதார பங்களிப்பினை 25%ஆல் அதிகரித்ததுடன் எமது மொத்த பங்களிப்பானது ரூபா 16.8 பில்லியனை எட்டியது. நாட்டிற்கான அபிவிருத்தி உறுதுணை என்ற வடிவத்தில் நாம் கணிசமான அளவு தொகையினை பாய்ச்சியதுடன் அதில் ரூபா 199 பில்லியன் தேசிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு வசதியளிப்பதற்காக வழங்கப்பட்டது. 2015 இல் பரவலான சமூக நலன்களை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு வீதி அபிவிருத்தி, நீர் முகாமைத்துவம் மற்றும் வைத்தியசாலை கட்டுமாண திட்டங்கள் என்பவற்றுக்கு நிதியியல் உறுதுணையினை மக்கள் வங்கி வழங்கியது. பல்வேறு மீள்நிதியளித்தல்

# பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளரின் மீளாய்வு



"வங்கியினை எண்ணியல்படுத்தும் எமது புதிய ஐந்து வருட கூட்டாண்மை வியூகமானது நாம் எதிர்காலத்தில் எவ்வாறு வணிகத்தை மேற்கொள்கின்றோம் என்பதை மாற்றியமைக்கும். இம்மாற்றமானது மக்கள் வங்கியினை ஓர் தொழில்நுட்ப அடிப்படையிலான நிதியியல் சேவைகள் வழங்குனராக மீள்நிலைப்படுத்துவதற்கான தொடர்பாடல் மற்றும் நிறுவன அடையாள பிரச்சாரம் என்பவற்றுடன் இணைக்கும்."

திட்டங்களினூடாக அபிவிருத்தி குன்றிய பொருளாதாரப் பகுதிகளாகிய கிராமிய மற்றும் குறைவாக நிதியளிக்கப்படும் பகுதிகளுக்கு ரூபா 10 பில்லியனை மூலதனமாக உட்செலுத்தினோம். 6,000 க்கும் அதிகமான சிறு மற்றும் நுண்ணிய வணிக முயற்சியாளர்களுக்கு முறையான அவர்களது வணிகப் பயணத்திற்கு துணைபுரிந்தோம். பெறுமதியினைப் பொறுத்தளவில் வரையறைக்குட்பட்டிருந்தாலும் இந்த பொருளாதார பங்களிப்புகள் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை நோக்கிய பங்களிப்பின் சாத்தியப்பாட்டிற்கு வரையறையின்றி காணப்பட்டன என நான் எண்ணுகின்றேன்.

எமது நிதியியல் சூழ்நிலைகள் தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்ததை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். பாரிய அரசியல் சூழல் நிமித்தம் சில உள்வாரி கவனமாற்றங்கள் மற்றும் வெளிவாரி ஸ்திரமற்ற தன்மைக்கும் நாம் முகங்கொடுத்தபோதிலும் எம்மால் எமது நிதியியல் நிலைமைக் கூற்றினை ரூபா 150 பில்லியனால் விரிவுபடுத்தி 2015 இன் இறுதியில் ரூபா 1.2 டிரில்லியனை எட்டக்கூடியதாயிருந்தது.

ஒட்டுமொத்த சோர்வான கடன் சந்தைக்கு மத்தியிலும் எமது சிற்றளவு கருவிகளை வெற்றிகரமாக ஊக்குவித்ததன் காரணமாக வருடத்தில் பலமான கடன் விரிவாக்கலை நீடிக்கக்கூடியதாயிருந்தது. நடைமுறை ஆண்டில் சிற்றளவு கடன் வழங்கலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை காணக்கூடியதாயிருந்தது. 2015 இல் மக்கள் வங்கியின் கடன் வழங்கலில் 45% க்கும் அதிகமான தொகையானது தொடர்ச்சியாக அரசாங்கத் துறைக்கு வழங்கப்பட்டது. கம்பனிகள் மற்றும் தனிநபர் கடன் கருவிகளினூடாக தனியார் துறை கடன் சந்தையில் எமது பங்களிப்பினை விரிவாக்குவதற்கு ஒன்றுதிரண்ட முயற்சிகளை மேற்கொண்டோம். கடன் அட்டைகள் வங்கிக்கு வெளித்தோன்றும் வருமான மூலமாகக் காணப்படுவதுடன் அடுத்த ஐந்து வருடங்களில் இந்தத்துறையிலிருந்து பலமான உட்பாய்ச்சல்களை எதிர்பார்க்கின்றோம். இதற்கு எமது எண்ணியலாக்கல் வியூகத்தினூடாக அமைப்புமுறை மேம்படுத்தலானது துணைபுரியும்.

ஓர் அதிநவீன நிதியியல் சேவைகள் வழங்குனராக எமது நன்மதிப்பினை மேலும் திடமாக்கக்கூடியதாயிருந்தது. இவ்வாண்டில், மக்கள் வங்கியின் முதலீட்டு வங்கியியல் அலகானது நாட்டின் மிகப்பெரிய தொகுதிக்கடன் வழங்கலில் இரண்டினை அறிமுகப்படுத்தக்கூடியதாகவும், எமது சகோதர கம்பனியான பீபள்ஸ் இன்சூரன்ஸ்க்கு வங்கியின் முதலாவது ஆரம்பப் பொது வழங்கலை அரங்கேற்றக்கூடியதாயிருந்தது. இந்த மூலதனச் சந்தை கருவிகளின் வெற்றியானது மக்கள் வங்கியின் நிதியியல் நிபுணத்துவத்தின் பன்முகத்தன்மையினையும் தனியார் துறைக்கு எம்மால் எதனை வழங்கமுடியும் என்பதையும் வெளிக்காட்டக்கூடியதாயுள்ளது என நான் நம்பிக்கை கொள்கின்றேன். எனவே, புதிய நிதியாண்டில் பாரிய வாய்ப்புகள் கிட்டும் என நான் நம்புகின்றேன்.

மக்கள் வங்கியில், எமது வளர்ச்சியுடன் எமது இடர்நேர்கையினை சமநிலைப்படுத்தல் குறித்து நாம் உயர்ந்த உணர்வுநிலையில் உள்ளோம். எனவே, நடைமுறை நிதியாண்டில் எமது கடன் இடர்நேர்கையினை முகாமைப்படுத்தல் எமது கவனத்தை ஈர்த்த இன்னுமோர் பிரிவாகும். எமது ஒட்டுமொத்த சொத்துக்களின் தரத்தை மேம்படுத்துவதில் நாம் தீவிர வெற்றியடைந்துள்ளோம் என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். மெய்யாகவே, இவ்வருடத்தின் இறுதியில் மொத்த செயற்திறனற்ற கடன் விகிதசாராமானது 2.4% ஆக காணப்பட்டதுடன், இது துறைசார் சராசரியான 3.2%உடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவானதாகும். அடுத்த வருடத்தில் நாம் தொடர்ச்சியாக செயற்திறனற்ற கடன் விகிதாசாரத்தினை கட்டுப்படுத்தி குறைக்க முடியுமென நான் நம்புகின்றேன்.

2015 இன் இறுதியில் நாட்டில் காணப்படும் மிகப்பெரிய சேமிப்பு அடித்தளங்களில் ஒன்றாக ரூபா 372.2 பில்லியனுக்கு நாம் பொறுப்பாளராக உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இது மக்கள் வங்கி நிறுவன அடையாளத்தில் பொதுமக்களது நம்பிக்கையினை வெளிப்படுத்துகின்றது என நான் நம்புகின்றேன். அதே தொனியில், மக்கள் வங்கியானது SLIM நீல்சன் மக்களது விருதுகள் 2015 இல் "வருடத்திற்கான சேவை நிறுவன அடையாளம்" மற்றும் தொடர்ச்சியாக ஒன்பதாவது தடவையாக "வருடத்திற்கான

வங்கியியல் சேவை வழங்குனர்“ என்ற விருதுகளை வென்றது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

இவ்வருடத்தின் வரிக்கு முந்திய தேறிய இலாபம் ரூபா 19.5 பில்லியனை எட்டியதுடன் இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 13.3% வளர்ச்சியினை அடைந்து இதுவரைக்கும் பதிவுசெய்யப்பட்ட அதிகூடிய இலாபமாகும்.

## எண்ணியலாக்கல்

2015 இல், இன்று உங்களுக்கு தெரிந்த மக்கள் வங்கியினை உருமாற்றம் செய்யும் செயல்முறையினை ஆரம்பித்துள்ளோம். வங்கியினை எண்ணியல்படுத்தும் எமது புதிய ஐந்து வருட கூட்டாண்மை வியூகமானது நாம் எதிர்காலத்தில் எவ்வாறு வணிகத்தை மேற்கொள்கின்றோம் என்பதை மாற்றியமைக்கும். இம்மாற்றமானது மக்கள் வங்கியினை ஓர் தொழில்நுட்ப அடிப்படையிலான நிதியியல் சேவைகள் வழங்குனராக மீள்நிலைப்படுத்துவதற்கான தொடர்பாடல் மற்றும் நிறுவன அடையாள பிரச்சாரம் என்பவற்றுடன் இணைக்கும்.

நடைமுறையாண்டில், இந்த உருமாற்றலுக்கான அடித்தளத்தினை நாம் பின்வருவனவற்றினூடாக தயார்படுத்தினோம். கைவேலை செயல்முறைகளை எண்ணியலாக்கல் மேடைகளுக்கு ஒருநிலைப்படுத்தல், தொழில்நுட்ப தேவைப்பாடுகளை இனங்காண்தல் மற்றும் தொழில்நுட்ப வழங்குனர்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் தொழில்நுட்ப மற்றும் சேவைகள் வழங்குனர்களுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல் என்பனவாகும். எமது மூலோபாயத்தின் வெற்றிக்கு எமது ஊழியர்களின் திறன் மற்றும் செயல்வல்லமை என்பவற்றை கட்டியெழுப்புதல் முக்கியமாவதுடன் இந்த செயல்முறையில் நாம் ஏற்கனவே முதலீட்டினை மேற்கொண்டுள்ளோம். மேலதிகத் தகவல்களுக்கு பக்கம் 82 இல் காணப்படும் மனித மூலதனம் என்னும் பிரிவினை பார்வையிடவும். இந்த மாற்றத்தின் ஓர் அங்கமாக, வங்கியின் உள்ளக அலகுகளை நாம் பின்வருமாறு மூன்று பிரதான வணிகத் துறைகளாக மீள்கட்டமைப்பு செய்தோம். மொத்தவியாபார வங்கியியல், தொழில்முனைவு அபிவிருத்தி மற்றும் சிற்றளவு வங்கியியல் என்பனவாகும். எமது இறுதி நோக்கத்திற்கு துணைபுரிவதற்கான மிகவும் ஒட்டிணைவான ஓர் மேடையாக இந்த புதிய உள்ளக நிறுவன கட்டமைப்பு காணப்படுகின்றது என நாம் நம்புகின்றோம். எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் 2016-2020, அனைத்துமான 740 கிளைகளையும் வங்கியின் அனைத்து செயற்பாட்டு தோற்றங்களையும் எண்ணியலாக்க முடியும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

## 2016 க்கான திட்டங்கள்

2015 இல் மேற்கொண்ட விரிவான தயாரிப்புவேலை காரணமாக, மூலோபாய அமுலாக்கலில் 2016 இல் உடனடியாக ஆரம்பிப்பதற்கு நாம் தயாராயுள்ளோம். எனவே, 2016 இல் தெரிவுசெய்யப்பட்ட சில கிளைகளில் எமது எண்ணியலாக்கல் நிகழ்ச்சி எழுவதனைக் காணலாம். முற்றான நிகழ்ச்சி எழுப்புதலானது இதன்பின்னர் இடம்பெறும். 2016 இல் மக்கள் வங்கியினை மீள்நிலைப்படுத்துவதற்கான அடையாளக் குறியிடுதல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சாரமும் ஆரம்பிக்கப்படும். நடைமுறையிலுள்ள கருவிகளது தேக்கங்கள் சீரமைக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட கருவிகள் மேலதிக சிறப்பம்சங்கள் மற்றும் சேவைகளுடன் மேம்படுத்தப்பட்டு புதிய தொழில்நுட்ப அடிப்படையிலான கருவிகள் அறிமுகப்படுத்தப்படும். அதி நவீன தொழில்நுட்பங்களது உதவியுடன் அட்டை துறை மற்றும் மொத்தவிற்பனை வங்கியியல் என்பவற்றில் எமது சந்தை பங்களிப்பினை நாம் தொடர்ந்தும் விரிவுபடுத்துவோம்.

மக்கள் வங்கியானது அதன் கிராமிய அடிச்சுவடுக்கு பெயர் பெற்றது என்ற போதிலும் மக்கள் வங்கியானது பெரும்பாலான சிறிய மற்றும் நுண் தொழில்முனைவோரது முதற் தெரிவாகக் காணப்படுவது என்பது பலருக்கு தெரியாத ஒன்றாகும். கணக்குவைக்க தகுதியற்றவர்கள் என பாரம்பரிய வர்த்தக வங்கிகளினால் வகைப்படுத்தப்பட்ட நூற்றுக்கும் அதிகமான தொழில்முனைவோர்கள் மக்கள் வங்கியில் அவர்களது பயணத்தினை ஆரம்பித்து கணக்கு வைப்பதற்கான தகுதியினை பெற்றுள்ளார்கள். இந்த சாதனை குறித்து நாம் பெருமைப்படுவதுடன், எதிர் காலத்தில், எமது சிறிய மற்றும் நுண்ணிய வாடிக்கையாளர்களுக்கு அவர்களது தனிப்பட்ட காசுப்பாய்ச்சல் மற்றும் வளர்ச்சி தேவைகளுக்கேற்ப வழக்கப்படுத்தக்கூடிய இலத்திரணியல் வங்கியியல் கருவிகளது வசதிகளுடன் துணைபுரியலாம் என நான் நம்புகின்றேன்.

## ஒப்புக்கொள்ளல்கள்

எமது தலைவர் திரு. ஹேமசிறி பர்னாந்து அவர்களுக்கும், மற்றும் பணிப்பாளர் சபைக்கும் வங்கியினை அதன் தற்போதைய நிலையிலிருந்து உருமாற்றத்திற்கான திசைதிருப்பலில், அவர்களது தலைமைத்துவம் மற்றும் உறுதுணைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்த வருடத்தில் வங்கியின் பணியாளர்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் அவர்களது கடின உழைப்பிற்கு நன்றியைத் தெரிவிப்பதுடன், வங்கியின் ஓர் புதிய அத்தியாயத்தை எழுதுவதற்கு நாம் ஆரம்பிக்கும்வேளை அவர்களது தொடர்ச்சியான உறுதுணையினை எதிர்பார்க்கின்றேன். என்றும்போல, எமது பலமான எமது வாடிக்கையாளர்கள், பெறுமதிமிக்க வணிகப் பங்காளிகளது தொடர்ச்சியான நம்பிக்கை மற்றும் விசுவாசம் என்பவற்றிற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**என். வசந்தகுமார்**
பிரதம நிறைவேற்று அதிகாரி -
பொது முகாமையாளர்

23 மார்ச் 2016

# பணிப்பாளர் சபை

6 5 4 1

# பணிப்பாளர் சபை

## 1. திரு. ஹேமசிறி பர்னாந்து

தலைவர்

பல்வேறு அனுபவங்களைக் கொண்ட திரு. பர்னாந்து அவர்களது பொதுத் துறைக்கான பிரவேசம் பிரதம மந்திரிக்கான செயலாளராக ஆகும். இவர் பின்னர் ஸ்ரீ லங்கா ரெலிகொம், ஏயார்போர்ட் அன்ட் ஏவியேஷன் சேர்விஸஸ் மற்றம் ரெலிகொம் சேர்விஸஸ் ஆகியவற்றின் தலைவராகவும் ஏனைய பதவிகளுக்கிடையே தபால் அமைச்சிற்கு செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவராகவும் மற்றும் சர்வதேச செயலகங்களான ஆசியாவின் ஒலிம்பிக் மன்றம் மற்றும் பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனம் ஆகியவற்றின் உப தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். இதற்கும் மேலாக, தேசிய விளையாட்டு சம்பியனாக சுழல் துப்பாக்கி சுடுவதில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியும் உள்ளதுடன் இவை இவரை இலங்கையில் விளையாட்டுக்கான ஜனாதிபதியின் ஆலோசகராக வருவதற்கு பொருத்தமான தெரிவாக காட்டியது. இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் பட்டதாரியாவதுடன் ஐக்கிய இராச்சியத்தின் பயணம் மற்றும் சுற்றுலா நிருவகத்தின் (A INST TT) பங்காளி அங்கத்தவரும் பிரித்தானிய முகாமைத்துவ நிருவகத்தின் (FBIM) சக அங்கத்தவரும் ஆவார். இவர் கிரிஜிஸ்தான் குடியரசின் இலங்கைக்கான மதிப்பார்ந்த அந்நிய நாட்டுப் பிரதிநிதியாவார். இலங்கை கடற்படையில் (விருப்பார்வத் தொண்டர் படை) இவரது பதவிக்காலத்தில் போர் பிராந்தியங்களில் சேவையாற்றியதுடன் தலைமைக் கட்டளை அதிகாரியாக இளைப்பாறியதும் விசேடமாக குறிப்பிடத்தக்கது.
இலங்கை புகையிரதத்துடனான இவரது தொடர்பானது இவர் இரண்டு நூல்களை எழுதுவதற்கு வழிவகுத்தது. இலங்கையில் சுற்றுலாவிற்காக இவரால் உருவாக்கப்பட்ட நீராவி இரயில் என்ஜினை அடிப்படையாகக் கொண்ட, "த விசரோய் ஸ்பெஸல்" மற்றும் "த ஊவா ரெயில்வே" என்பனவாகும்.
ஆசியாவின் ஒலிம்பிக் மன்றத்தினால் இவருக்கு OCA சிறப்பு விருதும், தேசிய ஒலிம்பிக் குழுக்களின் சங்கத்தினால் ANOC சிறப்பு விருதும் வழங்கப்பட்டன.

## 2. திரு. ஜெஹான் பி. அமரதுங்க

பணிப்பாளர்

திரு. ஜெஹான் பிரசன்ன அமரதுங்க அவர்கள் இலங்கையின் MTD வோர்க்கர்ஸ் பி.எல்.சி. இன் நிறைவேற்றதிகாரமுடைய பிரதி தலைவராவார். இவர் இலங்கைக் பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தோழமை அங்கத்தவராகவும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் நிருவகத்தின் தோழமை அங்கத்தவருமாவார். திரு. அமரதுங்க அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் இறுதிப் பரீட்சையில் தகுதி வரிசையில் முதலாவது பரிசினை வென்றார்.
திரு. அமரதுங்க அவர்கள் தற்போது மக்கள் வங்கி, பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிருவகம் (SLIIT) மற்றும் JAT ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார். இவர் பீபள்ஸ் இன்சூரன்ஸ் பி.எல்.சி. இன் தலைவரும் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழுவின் அங்கத்தவருமாவார்.
நிதியியல் மற்றும் முகாமைத்துவம் எனும் துறைகளில் இவர் 25 வருடங்களுக்கும் மேலாக அனுபவத்தினை கொண்டுள்ளார்.
திரு. அமரதுங்க அவர்கள் பல கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் வணிக நிறுவனங்களில் ஆலோசகராகவும் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.
இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தேசிய கருத்தரங்கில் "நாணயக் கணக்கியலின் பெறுமதி" என்று தலைப்பிடப்பட்ட ஓர் கட்டுரையினை சமர்ப்பித்தார். இது அவரது தொழிலில் வெளிப்பட்டுக் காணப்படும் குறிப்பிடத்தக்க சாதனைகளினுள் ஒன்றாகும். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் ஆளுமை மன்றத்தின் ஓர் அங்கத்தவருமாவார்.

## 3. செல்வி. ஜி.டி.சந்திரா ஏக்கநாயக்க

பணிப்பாளர்

செல்வி. ஏக்கநாயக்க அவர்கள் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு 2015 பெப்ரவரியில் ஓர் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் சபையின் கணக்காய்வுக் குழு, சபையின் இடர்நேர்கை முகாமைத்துவக் குழு மற்றும் சபையின் முதலீட்டு வங்கியில் குழு ஆகியவற்றின் அங்கத்தவருமாவார்.

செல்வி. ஏக்கநாயக்க அவர்கள் இலங்கை நிர்வாக சேவையிலிருந்து வந்ததுடன் இவர் 1984 இல் சேவையில் இணைந்தார். இவர் 2015 மார்ச் 09 முதல் திறைசேரிக்கான பிரதி செயலாளராக நியமிக்கப்பட்டதுடன் இதுவரைக்கும் அந்த பதவியில் இருக்கின்றார். இந்த நியமனத்திற்கு முன்னர், திறைசேரியில் பின்வரும் சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ளார். பொருளாதார விவகாரங்களுக்கான பணிப்பாளர், காப்புறுதிக் கட்டுப்பாட்டு அலுவலர், வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம், வர்த்தம், காப்புவரி மற்றம் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றினார்.
செல்வி. ஏக்கநாயக்க அவர்கள் களனிப் பல்கலைக்கழகத்தின் விசேட விஞ்ஞானப் பட்டத்தையும் பட்டப்படிப்பின் பின்னரான இலங்கை முகாமைத்துவ நிறுவனத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். பின்வரும் சிறப்புத்துறைகளில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமாக்களையும் பெற்றுள்ளார். அபிவிருத்தி திட்டமிடல் தொழில்நுட்பங்கள் (ISS, த ஹேக்), சர்வதேச உறவுகள் (BCIS கொழும்பு) மற்றும் பொருளாதார அபிவிருத்தி (கொழும்புப் பல்கலைக்கழகம்) என்பனவாகும். இவர் ஆசிய மீள்காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மன்றத்தில் 2002 முதல் 2013 வரை திறைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் 2008 முதல் 2013 வரை அதன் பிரதித் தலைவராகவும் பணிபுரிந்தார். இவர் 2011 பெப்ரவரியிலிருந்து 2015 மார்ச் வரை NDB வங்கியில் திறைசேரியினைப் பிரதிநிதித்துவம் செய்தார். தற்போது, இவர் இலங்கை ரெலிகொம் பி.எல்.சி. மற்றும் மேல் நீதிமன்ற வளாகத்திற்கான முகாமைத்துவ சபை ஆகியவற்றில் திறைசேரியினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றார். செல்வி. ஏக்கநாயக்க அவர்கள் MILODA, மற்றும் நிதி அமைச்சின் பயிற்றுவிப்பு அங்கமான நிதியியல் கற்கைக்கான கல்லூரி ஆகியவற்றின் தலைவராக 2015 மே மாதத்தில் நியமிக்கப்பட்டார்.

## 4. திரு. விலீசியன் பெரேரா

பணிப்பாளர்

திரு. விலீசியன் பெரேரா அவர்கள் மக்கள் வங்கியின் பணிப்பாளராக 2015 மார்ச் மாதம் நியமிக்கப்பட்டார். இவர் குற்றவியல் தத்துவத்தில் முதுமானிக் கலைப் பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் ஓர் உத்தியோகப்பற்றற்ற குற்றவியல் நீதிபதி /வழக்குரைஞர் /பதிவுரிமை அதிகாரி / சமாதான நீதவான் /உறுதிமொழிகள் ஆணையாளர் மற்றும் பதிவுசெய்யப்பட்ட கம்பனி காரியதரிசியுமாவார். இவர் மகாவலி வென்சர் கெப்பிட்டல் கம்பனியின் தலைவராகவும் வர்த்தகச் சம்மேளனத்தின் (வட மத்திய மாகாணம்) பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

## 5. கலாநிதி அமிந்த எம் பெரேரா

பணிப்பாளர்

கலாநிதி அமிந்த மெத்சில பெரேரா அவர்கள் இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகத்தின் கணக்கியல் திணைக்களத்தில் நிதியியல் முகாமைத்துவத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராவார். இவர் தனது ஆரம்ப கல்வியை மாத்தளை பரிசுத்த தோமஸ் கல்லூரியில் பயின்றும் இவரது

மேற்படிப்பினை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கல்வி மற்றும் வர்த்தகப் பீடத்தில் மேற்கொண்டு பொது நிர்வாகத்தில் இளமானி விஞ்ஞான (விசேட) பட்டத்தினை பெற்றார்.

கலாநிதி பெரேரா அவர்கள் தனது முதலாவது வணிக முகாமைத்துவ முதுமானி பட்டத்தினை இந்தியாவின் IGNOU வில் சர்வதேச நிதியியல் துறையில் பெற்றதுடன், இரண்டாவது வணிக முகாத்துவ முதுமானி பட்டத்தினை இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகத்தில் சந்தைப்படுத்தல் துறையிலும் பெற்றார். இதே பல்கலைக் கழகத்தில் நுகர்வோர் நடத்தையில் தத்துவக் கலாநிதி பட்டத்தையும் பெற்றார். இவர் 1998 இல் ஜேர்மனியில் இடம்பெற்ற கிளஸ்நோவ் அகடமியினால் நடாத்தப்பட்ட NGO ஊழியர் முகாமைத்துவத்தில் ஓர் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தினை பின்பற்றியுள்ளார்.

இவரது தொழில் வாழ்க்கையில், கலாநிதி பெரேரா அவர்கள் வெவ்வேறு தராதரத்தில் பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றியுள்ளார். தற்போது இவர் சிவில் ஏவியேஷன் அதிகாரசபை, தேசிய வாசிகசாலை மற்றும் பிரைட் ஒவ் சிலோன் (பிரைவேட்) லிமிட்டட் ஆகிய நிறுவனங்களில் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார். இதற்கும் மேலாக, அவுஸ்திரேலியாவின் AKSAP சர்வதேச நிறுவனத்திற்கு இலங்கையின் பிரதிநிதியாகவும் உள்ளார்.

கலாநிதி பெரேரா அவர்கள் 2015 நவம்பர் 02ஆந் திகதி முதல் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார்.

### 6. திரு. டி.டி. அன்டன் ஹேமந்த
பணிப்பாளர்

திரு. அன்டன் ஹேமந்த அவர்கள் ஓர் தொழில்முனைபவர். இவர் செல்மோ பிரைவேட் லிமிட்டட்டின் உரிமையாளரும் தலைவருமாவார். இது 1983 இலிருந்து ஓர் பிளாஸ்டிக் படலப் பிதுக்கல், அச்சிடுதல் மற்றும் தகட்டடுக்கு உற்பத்தி நிறுவனமாகும். சுவீடன், ஒரெப்ரோவினைத் தளமாகக் கொண்ட சர்வதேச கிறிஸ்துவ வர்த்தக சம்மேளனத்தின் (ICCC) சபை அங்கத்தவரும் ICCC இன் ஆசியப் பிராந்திய பணிப்பாளாருமாவார். தற்போது இவர் இலங்கையின் தகட்டடுக்கு பொதிகட்டுதல் சம்மேளனமான ALFPM இன் தலைவரும் ஏற்றுமதி அபிவிருதி சபையின் பொதிகட்டுதல் திரளுக்கு தலைவருமாவார்.

### 7. திரு. எம்.எச். ஜமால்டீன்
பணிப்பாளர்

இவர் 15 வருடங்களுக்கு மேலான நிதியியல் தொழில்வல்லுனராவார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் சான்றளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர்கள் சங்கத்தின் தோழமை அங்கத்தவருமாவார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் வோர்விக் பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் வணிக பட்டதாரியுமாவார். இவர் தற்போது நிதியளித்தல், கூட்டாண்மை கட்டமைப்புகள், கையகப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிற்கு பொறுப்பான ஸ்டெரடியன் கெப்பிட்டல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டில் பணிப்பாளராக பணிபுரிகின்றார். இவர் ஹேலீஸ் பி.எல்.சி. இன் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளருமாவர். இவர் பின்வரும் மனைச்சொத்து அபிவிருத்தி கம்பனிகளில் நிறைவேற்றதிகாரமுடைய பணிப்பாளருமாவர். HJAW இன்டர்நேஷனல் (பிரைவேட்) லிமிட்டட், துடெல்ல ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், ஹார்டி ஜேம்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், பேஸ்லைன் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், டச் பே ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், கிரவுண் ரிசோர்ட் (பிரைவேட்) லிமிட்டட், மல்பெரி ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், ஹாமன்ட் ட்ரீஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் அலெக்ஷன்ரா ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட். இவர் சமர் சீசன் லிமிட்டட், சமர் சீசன் ரெசிடன்சீஸ் லிமிட்டட், சன்டேன் பீச் ரிசோர்ட் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் வெரூட்டி (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றினதும் பணிப்பாளராவார்.

### 8. திரு. எஸ். சீ. பீ. செனவிரத்ன
பணிப்பாளர்

திரு. சந்திரசிறி செனவிரத்ன அவர்கள் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையில் 2015 இல் இணைந்தார். இவர் கலைத்துறையில் இளமானி பட்டதாரியாவார். இவர் 14 வருடங்களுக்கு மேலான அனுபவம் வாய்ந்த உயர்ந்த தேர்ச்சியுடைய ஓர் வழக்குரைஞராவார். திரு. செனவிரத்ன அவர்கள் சிரேஷ்ட நிர்வாகத் தரத்தில் 30 வருடங்களுக்கும் மேலான நிர்வாக அனுபவமுடையவராவார். அவரது சட்ட மற்றும் நிர்வாக அனுபவத்திற்கும் மேலாக, திரு. செனவிரத்ன அவர்கள் பகுதிநேர பத்திரிகையாளராக 45 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தை உடையவராவார். இவர் பல பிரசுரங்களின் எழுத்தாளருமாவார்.

### 9. திரு. டி.எம்.கே.பி. தென்னக்கோன்
பணிப்பாளர்

திரு. தென்னக்கோன் அவர்கள் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் பதவியினை வகிக்கின்றார். இதற்கு முன்னர், இவர் பொது ஒழுங்கு மற்றும் கிறீஸ்தவ விவகாரங்களுக்கான அமைச்சின் செயலாளர், பொது ஒழுங்கு, பேரிடர் முகாமைத்துவம் மற்றும் கிறீஸ்தவ விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார். திரு. தென்னக்கோன் அவர்கள் ஓர் தொழில்துறை நிர்வாகியாவார். இவர் முன்னர் சிலோன் உள்நாட்டு சேவைகள் என்று தெரிந்துகொள்ளப்பட்ட இலங்கை நிர்வாகச் சேவைகளில் 1984 இல் இணைந்து நாடு பூராவும் பல பதவிகளை வகித்துள்ளார். திரு. தென்னக்கோன் அவர்கள் படிநிலைகளினூடாக கடந்த 29 வருடங்களில் எழுந்து, இலங்கை நிர்வாகச் சேவைகளில் தற்போது ஓர் விசேட தர அதிகாரியாவார்.

இவர் ஓர் நிர்வாகியாக, ஓர் துறைசார் திட்டமிடுபவராக, ஓர் கொள்கை பகுப்பாய்வாளராக, அமுல்படுத்துபவராக, ஒருங்கிணைப்பாளராக பணியாற்றியுள்ளதுடன் அரசாங்க மற்றும் ஐக்கிய நாடுகள் அங்கங்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச கொடையளிப்பு முகவர்களுடனும் கருமமாற்றியுள்ளார்.

பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றில் கூரிய ஆர்வமுடைய திரு. தென்னக்கோன் அவர்கள் சட்டம் மற்றும் பொது நிதியியல் மற்றும் வரிவிதிப்பு ஆகிய துறைகளில் இரண்டு இளமானி பட்டங்களையும் பொருளியலில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் தற்போது தத்துவக் கலாநிதி பட்டத்துக்காக செயற்படுகின்றார்.

இவர் ஓர் பல்கலைக்கழக மாணவனாக இருக்கும்போதே சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்களில் இவரது வெளிப்பாடு காரணமாக உலகின் பல பாகங்களில் இடம்பெற்ற 15 நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

திரு. தென்னக்கோன் அவர்கள் பின்வருவன அடங்கலாக பல தொழில்சார் அங்கங்களில் அங்கத்தவராவார். இலங்கை நிர்வாகச் சேவைகள் சங்கம், இலங்கை வழக்கறிஞர்கள் சங்கம், இலங்கை பொறியலாளர்கள் சங்கம் என்பனவாகும்.

இவரது ஆய்வுகள் பொருளாதார வளர்ச்சி, வருமான ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமூக நலன் நிலைமை என்பவற்றை உள்ளடக்குகின்றன.

# கூட்டாண்மை முகாமைத்துவம்

3 6 8 7 2

1 4 5 11 10



17 18 9 15 16



12 13 19 14

# கூட்டாண்மை முகாமைத்துவம்

## 1. திரு. என். வசந்தகுமார்

*(பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர்)*

திரு. என். வசந்தகுமார் அவர்கள் வணிக நிர்வாகத்தில் ஓர் முதுமானி பட்டத்தையும் தொழில்சார் திறைசேரி முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார் இவர் மக்கள் வங்கியில் மார்ச் 2001 இல் இணைந்தார். இதற்கு முன்னர் இவர் ANZ கிரீன்ட்லேஸ் வங்கியின் கொழும்புக் கிளையில் திறைசேரிப் பிரிவில் பல வருடங்கள் பணிபுரிந்துள்ளார்.

இவர் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி., பீபள்ஸ் டிரெவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், பீபள்ஸ் இன்சூரன்ஸ் பி.எல். சி., பீபள்ஸ் பிரொபர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட், பீபள்ஸ் லீசிங் எவ்லொக் பிரொபர்ட்டி லிமிட்டட், பீபள்ஸ் லெசர் லிமிட்டட், கடன் தகவல் மையம் மற்றும் தேசிய கொடுப்பனவு சங்கம் ஆகியவற்றின் பணிப்பாளராக உள்ளார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் ஆளுமைச் சபையின் அங்கத்தவராகவும் உள்ளார்.

இவர் முதன்மை வர்த்தகர்கள் சங்கம் மற்றும் இலங்கை அந்நிய செலாவணிச் சந்தை சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவருமாவார்.

## 2. திரு. ஹாமட் சப்ரி இப்ராஹீம்

*(சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் - மொத்த வங்கியியல்)*

திரு. இப்ராஹீம் அவர்கள் சர்வதேசத்திலும் உள்ளூரிலுமாக 32 வருடங்களுக்கு மேற்பட்ட வங்கியியல் அனுபவத்தைக் கொண்டுள்ளார். முக்கியமாக கூட்டாண்மை வங்கியியல், திறைசேரி முகாமைத்துவம் மற்றும் இடர்நேர்கை முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளில் பணியாற்றியுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கௌரவ இளமானி விஞ்ஞான பட்டதாரியும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய வங்கியாளர்கள் நிருவகத்தின் தோழமை அங்கத்தவருமாவார்.

## 3. திரு. தீபால் அபேசேகர

*(சந்தைப்படுத்தல் மற்றும் ஆய்வுப் பிரிவின் தலைமைத்துவம்)*

மக்கள் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் ஆய்வுப் பிரிவின் தலைமைத்துவத்தை வகிக்கும் திரு. தீபால் அபேசேகர அவர்கள் மூலோபாய வணிக அபிவிருத்தி மற்றும் நிறுவன அடையாளத்தை கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் இவரது ஆற்றலுக்கு தெரிந்துகொள்ளப்பட்டவராவார். இவர் நிதியியல் துறை நிறுவனங்களில் விற்பனையை உருவாக்குதல், சந்தைப்படுத்தல் மற்றும் மூலோபாய வணிக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பொறுப்பாயுள்ளார். அத்துடன் இவர் கம்பனி அடையாளங்களை அந்தந்த துறையில் நிறுவன நாமத்தின் பெறுமதியில் உயர்ந்த ஸ்தானத்திற்கு வெற்றிகரமாக வழிகாட்டியுள்ளார்.

இவரது சிறப்பான சாதனைகளுக்காக இலங்கை சந்தைப்படுத்தல் நிருவகத்தினால் "வருடத்திற்கான நிறுவன அடையாள சாம்பியன்" மற்றும் உலக நிறுவன அடையாள பேராயத்தின் "நிறுவன அடையாள முதன்மைத்துவ விருது" என்பன வழங்கப்பட்டன.

இவர் பட்டய சந்தைப்படுத்துபவர் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சந்தைப்படுத்தல் நிருவகத்தின் தோழமை அங்கத்தவர், ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ நிருவகத்தின் அங்கத்தவர் மற்றும் சான்றிதழிடப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தினதும் அங்கத்தவராவார்.

இவர் அவுஸ்திரேலியாவின் தெற்கு குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவத்தில் முதுமானி பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் முகாமைத்துவக் கழகத்தின் முன்னாள் தலைவரும், இலங்கையின் தொழில்சார் வங்கியியலாளர்களது சங்கத்தின் தலைவரும் ஐக்கிய இராச்சியத்தின் குளோபல் மார்க்கட்டிங் நெட்வேர்க்கின் நாட்டுக்கான ஆலோசனை மன்றத்தின் அங்கத்தவருமாவார்.

## 4. திருமதி. சாந்தனி வேரபிட்டிய

*(பிரதிப் பொது முகாமையாளர் - மூலோபாயத் திட்டமிடல் மற்றும் செயற்திறன் முகாமைத்துவம்)*

செல்வி சாந்தனி வேரபிட்டிய அவர்கள் மூலோபாயத் திட்டமிடல் மற்றும் செயற்திறன் முகாமைத்துவத்திற்கு பொறுப்பாயிருப்பதுடன் 2016/2020 காலப்பகுதிக்கான வங்கியின் மூலோபாயத் திட்டத்தின் அமுலாக்கல் செயல்முறைக்கு பங்களிப்பாற்றுகின்றார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவத்தில் இளமானி விஞ்ஞான (கௌரவ) பட்டதாரியும் இரண்டாம் வகுப்பு உயர் மற்றும் முகாமைத்துவத்தில் முதுமானி விஞ்ஞான பட்டதாரியும் ஆவார். அத்துடன் இலங்கையின் வங்கியலில் தோழமை அங்கத்துவத்தையும் பெற்றுள்ளார்.

இவர் ஜூன் 1987 இல் வங்கியில் ஓர் முகாமைத்துவ பயிற்சியாளராக இணைந்து 29 வருடங்கள் அனுபவத்தினை பின்வரும் பரவலான துறைகளில் பெற்றுள்ளார். கூட்டாண்மை மற்றும் நிறுவன வங்கியியல், சர்வதேச வங்கியியல், வாடிக்கையாளர் சேவைகள், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை திட்டக் கடனளிப்பு, கிளைச் செயற்பாடுகள், கடன் முகாமைத்துவம், மூலோபாயத் திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவு என்பனவாகும். இவர் பல ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் வருடாந்த ஆய்வுக் கருத்தரங்குகளை நடாத்தியுள்ளார், பதிப்பாசிரியர் சபையிலிருந்து பள்ஸ் சஞ்சிகைக்கு தலைமைத்துவம் வழங்கியுள்ளார். ஆய்வு மற்றும் மூலோபாய திட்டமிடல் நடவடிக்கைகளை சீரமைப்பு செய்யும் நோக்கில் வங்கியின் ஆய்வு நடவடிக்கைகளை புதுப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் ஆளுமைச் சங்கத்தின் மாற்று பணிப்பாளரும், இலங்கை சர்வதேச வர்த்தகச் சம்மேளனத்தின் சபை அங்கத்தவரும், பெண்களுக்கான கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் அங்கத்தவருமாவார். அத்துடன் இலங்கை கைவினை சபையின் இடைக்கால குழுவின் சபை அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

## 5. திரு. கே.பி.ராஜபக்ஷ

*(பிரதிப் பொது முகாமையாளர் - வினைத்திட்ட வங்கியியல்)*

திரு. ராஜபக்ஷ அவர்கள் வர்த்தகக் கடனளிப்பு, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை அபிவிருத்தி, நுண்கடனளிப்பு மற்றும் கூட்டுறவுத்துறைப் பிரிவுகள் ஆகியவற்றுக்கு பொறுப்பாயுள்ளார். இவர் 1987 இல் ஓர் முகாமைத்துவ பயிற்சியாளராக வங்கியில் இணைந்து மக்கள் வங்கியில் 29 வருடங்கள் அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

இவர் பொது நிர்வாகத்தில் இரண்டாம் வகுப்பு கௌரவ இளமானி விஞ்ஞானப் பட்டதாரியும், இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் தோழமை அங்கத்தவரும்,

இலங்கையின் வழக்குரைஞரும், இலங்கையின் கடன் முகாமைத்துவ நிருவகத்தின் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் வங்கியின் கிளைகள் வலையமைப்பு மற்றும் கூட்டாண்மை வங்கியியல் பிரிவு ஆகியவற்றில் பல்வேறு தரத்திலான பரவலான முகாமைத்துவ அனுபவத்தினைப் பெற்றுள்ளதுடன் தற்போது மக்கள் வங்கியின் வினைத்திட்ட வங்கியியல் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளராக சேவையாற்றுகின்றார்.

திரு. ராஜபக்ஷ அவர்கள் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் பணிப்பாளராகவும் இலங்கை கடன் தகவல் மையத்தின் மாற்றுப் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.

### 6. திரு. எஸ். ஏ. ஆர். எஸ். சமரவீர

*(பிரதிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள்)*

திரு. சமரவீர அவர்கள் மனித வளங்கள் பிரிவிற்கு தலைமை தாங்குகின்றார். இவர் ஓர் முகாமைத்துவப் பயிற்சியாளராக வங்கியில் இணைந்து வங்கியலில் 28 வருடங்களுக்கு மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இந்தக் காலப்பகுதியில், இவர் கிளை வங்கியியல், கூட்டாண்மை வங்கியியல், அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கடன் மீளப்பெறுகைகள் ஆகிய பிரிவுகளில் பணியாற்றியுள்ளார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் இரண்டாம் வகுப்பு உயர் இளமானி விஞ்ஞானப் பட்டதாரியும், இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவருமாவார்.

இவரது உள்ளூர் மற்றும் வெளியூர் வெளிப்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. முகாமைத்துவ அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை முகாமைத்துவம், திட்டங்களினது புனர்வாழ்வு மற்றும் மூலோபாய மனித வள முகாமைத்துவம் என்பனவாகும்.

### 7. திரு. ரொஹான் பத்திரகே

*(பிரதிப் பொது முகாமையாளர் - பணிப்பாளர் சபைக்கான செயலாளர்)*

திரு. பத்திரகே அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பட்டதாரியும், நியுசீலாந்தின் மசே பல்கலைக்கழகத்தில் வங்கி முகாமைத்துவத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் வங்கியலில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமாவையும் கொண்டுள்ளார். இவர் ஓர் வழக்குரைஞராவார்.

இவர் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி., பீபள்ஸ் இன்சூரன்ஸ் பி.எல்.சி., பீபள்ஸ் விலீட் மனேஜ்மன்ட் லிமிட்டட், பீபள்ஸ் பிரொபர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் ட்ரெவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றினதும் கம்பனிச் செயலாளராவார். இவர் வங்கியில் 21 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

### 8. திருமதி. எம். எஸ். அரசகுலரத்ன

(பிரதிப் பொது முகாமையாளர் - இணக்கப்பாடு)

செல்வி. அரசகுலரத்ன அவர்கள் தரம் II மட்டத்தில் சிரேஷ்ட நிதியியல் உத்தியோகத்தராக வங்கியில் இணைந்து 30 வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றியுள்ளார்.

இவர் கடந்த 34 வருடங்களில் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவராவார். இவர் ஓர் பட்டய உலகளாவிய முகாமைத்துவ கணக்காளர், இலங்கையின் சான்றிதழிடப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் தோழமை அங்கத்தவரும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தகுதிச்சான்றுடையவருமாவார். இவர் ஓர் வழக்குரைஞர் மற்றும் இலங்கையின் திறந்த பல்கலைக்கழகத்தின் இளமானி சட்டத்துறை பட்டதாரியுமாவார்.

இவர் முகாமைத்துவம் / நிதியியல் கணக்கியல், முகாமைத்துவ தகவல்கள், ஏற்பாட்டியல் மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் பரந்த அனுபவத்தை அடைந்துள்ளார். இவர் வங்கியில் இணைவதற்கு முன்னர் 8 வருடங்கள் தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருந்தார். சிலோன் செரமிக்ஸ் கூட்டுத்தாபனத்தில் ஓர் பயிற்சி கணக்காளராக இவரது தொழிலை ஆரம்பித்து சிலோன் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் மற்றும் வேளாண்மை ஆய்வு மற்றும் பயிற்றுவித்தல் நிருவகம் என்பவற்றில் ஓர் கணக்காளராகவும் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தில் ஓர் விசேட தர கணக்காளராகவும் பணியாற்றியுள்ளார்.

### 9. திருமதி. ஜி. பி. ஆர். ஜயசிங்க

*(பிரதிப் பொது முகாமையாளர் - சிற்றளவு வங்கியியல்)*

செல்வி. ரேணுகா ஜயசிங்க அவர்கள் 1987 இல் வங்கியில் ஓர் முகாமைத்துவ பயிற்சியாளராக இணைந்து வங்கியியற் துறையில் 28 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

இவரது தொழில்வாழ்க்கையில் கிளை வங்கியியல் பிரிவில், கிளை முகாமையாளர், வலய சிரேஷ்ட முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் ஆகிய மட்டங்களில் பணியாற்றியுள்ளார். 2011 இலிருந்து இவர் பிரதிப் பொது முகாமையாளர் (சிற்றளவு வங்கியியல்) ஆக சேவையாற்றுகின்றார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முதலாம் வகுப்பு விசேட வர்த்தக இளமானி பட்டதாரியும், இலங்கையின் வங்கியாளர்கள் நிருவகத்தின் தொழில்சார் வங்கியியல் தகமையினையும் கொண்டுள்ளார். இவர் இலங்கை தொழில்சார் வங்கியாளர்கள் சங்கம் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிருவகம் ஆகியவற்றின் ஆயுள் அங்கத்தவரும் ஆவார்.

இவரது வங்கியியல் தொழில் வாழ்வில், பல்வேறு உள்ளூர் மற்றும் வெளியூர் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுள்ளார். இவர் பிராந்திய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் ஓர் அங்கத்தவரவார்.

### 10. திரு. கிளைவ் பொன்சேகா

*(திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கியியல் பிரிவின் தலைமைத்துவம்)*

திரு. பொன்சேகா அவர்கள் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் தோழமை அங்கத்தவரும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் ACI கொடுக்கல் வாங்கல் சான்றிதழில் தனித்தன்மை பெற்றுள்ளதுடன் திறைசேரி முகாமைத்துவத்தில் 22 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் அவுஸ்திரேலியாவின் சான்றிதழிடப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் ஓர் சான்றிதழிடப்பட்ட அங்கத்தவராவார்.

# கூட்டாண்மை முகாமைத்துவம்

இவர் 2002 இல் வங்கியில் இணைவதற்கு முன்னர், அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி மற்றும் ஸ்டான்ரட் சாட்டர்ட் வங்கி ஆகியவற்றிலும் பணியாற்றியுள்ளார். இவர் 2011 நவம்பர் முதல் மக்கள் வங்கியின் சிரேஷ்ட கூட்டாண்மை முகாமைத்துவ குழுவின் அங்கத்தவருமாவார்.

### 11. திரு. எம். ஏ. பொனிவெஸ் சில்வா

*(பிரதிப் பொது முகாமையாளர் - விநியோக மார்க்க முகாமைத்துவம்)*

திரு. சில்வா 1987 இல் வங்கியில் இணைந்து மக்கள் வங்கியில் 27 வருடங்களுக்கும் அதிகமாக சேவையாற்றியுள்ளார்.

இவரது தொழில் அனுபவமானது பின்வரும் பிரிவுகளை உள்ளடக்குகின்றது. கிளை வணிக வங்கியலில் கிளை முகாமையாளர், பிராந்திய முகாமையாளர், வலய உதவிப் பொது முகாமையாளர் போன்ற மட்டங்களில் பணியாற்றியுள்ளதுடன் தற்போது பிரதிப் பொது முகாமையாளர் - விநியோக மார்க்க முகாமைத்துவம் பதவியினை வகிக்கின்றார்.

இதற்கும் மேலாக இவரது வரம்பினுள் முழுவதுமான கிளை வலையமைப்பின் மையப்படுத்தப்பட்ட பின்புல காரியாலய செயற்பாடுகள் மற்றும் காசுப் பிரிவு என்பன செயற்படுத்தப்படுகின்றன.

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளமானி பட்டத்தையும், இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தில் தொழில்சார் வங்கியியல் தகமையையும் பெற்றுள்ளார். அத்துடன் இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவருமாவார்.

இவர் விரிவான உள்ளூர் மற்றும் வெளியூர் பயிற்சிகளையும் கிளை வணிக / வங்கியியலில் வெளிப்பாட்டினையும் கொண்டுள்ளார்.

### 12. திரு. பி. எம். பிரேமநாத்

*(பிரதிப் பொது முகாமையாளர் - வங்கியியல் துணைச் சேவைகள்)*

திரு. பிரேமநாத் அவர்கள் மக்கள் வங்கியில் 28 வருடங்களுக்கும் அதிகமாக சேவையாற்றியுள்ளார். இவர் 1987 இல் ஓர் முகாமைத்துவ பயிற்சியாளராக இணைந்து பல கிளைகளில் முகாமையாளராக வங்கிக்கு சேவையாற்றியுள்ளார். இதன் பின்னர் இவர் உதவி பிராந்திய முகாமையாளர் மற்றும் பிராந்திய முகாமையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் மத்திய வலயத்தில் உதவிப் பொது முகாமையாளராக வந்தார். தற்போது இவர் பிரதிப் பொது முகாமையாளர் (வங்கியியல் துணைச் சேவைகள்) ஆக பணிபுரிகின்றார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் 2ஆவது உயர் இளமானி வர்த்தக பட்டத்தையும் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் இடைநிலை பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவரது வங்கியியல் தொழில்வாழ்வில் உள்ளூரிலும் சர்வதேசத்திலும் பல்வேறு வெளிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றியுள்ளார்.

### 13. திருமதி. என். எஸ். திலகரத்ன

*(பிரதம உள்வாரி கணக்காய்வாளர்)*

செல்வி நந்தனி திலகரத்ன அவர்கள் வங்கியின் பிரதம உள்வாரி கணக்காய்வாளராக 2010 ஆகஸ்ட் மாதத்தில் நியமிக்கப்பட்டார்.

இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தோழமை அங்கத்தவராவார். இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வகுப்பு உயர் தரத்துடன் வணிக நிர்வாகத்தில் இளமானி (கௌரவ) விஞ்ஞான பட்டதாரியுமாவார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் தோழமை அங்கத்தவருமாவார்.

இவர் இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தொழில்நுட்ப கூட்டிணைப்புடன் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் நடாத்தப்பட்ட தகவல் அமைப்புகள் பாதுகாப்பு கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் 1990 மார்ச் மாதம் உதவி நிதியியில் அதிகாரியாக வங்கியில் இணைந்து 26 வருடங்கள் அனுபவத்தை திட்டக் கடனளிப்பு மற்றும் கணக்காய்வு துறைகளில் பெற்றுள்ளார்.

### 14. திரு. ஜி. பி. ஆர். பி. குணவர்தன

*(பிரதிப் பொது முகாமையாளர் - இடர்நேர்கை முகாமைத்துவம்)*

திரு. ரசித்த குணவர்தன அவர்கள் மக்கள் வங்கியில் 28 வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றியுள்ளார். இவர் 1987 இல் ஓர் சிரேஷ்ட நிதியியல் அதிகாரியாக வங்கியில் இணைந்தார்.

வங்கியில் இவரது வெளிப்பாடானது, நிதியியல், செயற்திறன் முகாமைத்துவம், கூட்டாண்மை மற்றும் வர்த்தக கடன், திறைசேரி செயற்பாடுகள் மற்றும் கடன் கட்டுப்பாடு மற்றும் இடர்நேர்கை முகாமைத்துவ செயற்பாடுகளை உள்ளடக்கும்.

மக்கள் வங்கியில் இணைவதற்கு முன்னர் இவர் தனியார் துறை மற்றும் அரசாங்க துறையில் பிரயாண மற்றும் ஹோட்டல்கள், பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் கட்டுமான துறைகளில் அனுபவத்தை பெற்றுள்ளார்.

இவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவராவார்.

### 15. திரு. லயனல் கலகெதர

*(பிரதிப் பொது முகாமையாளர் - மீட்டல்)*

திரு. லயனல் கலகெதர அவர்கள் வங்கியின் கடன் மீட்டல் பிரிவிற்குப் பொறுப்பாயுள்ளார். இவர் வங்கியில் ஓர் முகாமைத்துவ பயிற்சியாளராக இணைந்து வங்கியில் 28 வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றியுள்ளார். இவரது பல்வகை அனுபவங்கள் சிற்றளவு வங்கியியல், வர்த்தக நிதியிளிப்பு, கடனளித்தல், கடன் நிர்வாகம் மற்றும் மீட்டல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இளமானி வர்த்தக (விசேட) பட்டதாரியும் இலங்கையின் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவரும் ஓர் வழக்குரைஞருமாவார்.

### 16. திரு. ஜி. ஜி. மங்கள

*(நிதியியல் பிரிவிற்கான தலைமைத்துவம்)*

திரு. ஜி. ஜி. மங்கள அவர்கள் வங்கியின் நிதியியல் பிரிவிற்கான தலைமைத்துவத்தில் 2014 மார்ச் மாதம் இணைந்தார். இவர் வங்கியியல் வெளிப்பாட்டில் 25 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். இதில் பெரும்பகுதியானது வெளிநாடுகளிலாகும். மக்கள் வங்கியில் இணைவதற்கு முன்னர். HSBC ஓமான் கிளையின் நிதியியல் கட்டுப்பாட்டாளர், சொஹார் வங்கி ஓமானின் பிரதம நிதியியல் அதிகாரி மற்றும் இலங்கையின் பேன் ஏசியா வங்கியில் பிரதம நிதியியல் அதிகாரியுமாவார்.

இவரது அனுபவமானது சொத்து பொறுப்பு முகாமைத்துவம், மூலோபாய திட்டமிடல், நிதியியல் மற்றும் முகாமைத்துவ கணக்கியல், பாதிடல் மற்றும் செயற்திறன் பகுப்பாய்வு என்பவற்றை உள்ளடக்கும். இவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் தோழமை அங்கத்தவராவார்.

### 17. திரு. பிரியந்த எஸ். எதிரிசிங்க

*(தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கான தலைமைத்துவம்)*

திரு. எதிரிசிங்க அவர்கள் வங்கியின் தகவல் தொழில்நுட்பப் பிரிவிற்கான தலைமைத்துவத்தில் 2015 பெப்ரவரி 02 இல் இணைந்தார். இவர் இளமானி வர்த்தகப் பட்டதாரி (தகவல் அமைப்பில் முக்கிய) மற்றும் அவுஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தில் முதுமானி வர்த்தகப் பட்டதாரியுமாவார்.

திரு. எதிரிசிங்க அவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் 20 வருடங்களாக காப்புறுதி, வங்கியியல் மற்றும் தொலைத்தொடர்பு போன்ற பல்வேறு வணிகத் துறைகளில் கடமையாற்றியுள்ளார். மக்கள் வங்கியில் இணைவதற்கு முன்னர், இவர் சிங்கப்பூரின் சிட்டி வங்கி லிமிட்டட்டில் ஓர் திட்ட முகாமைத்துவ அதிகாரியாக கடமையாற்றினார். இவரது தொழில்சார் வாழ்க்கை முழுவதும் ஆய்வாளர் திட்டமிடுதலிலிருந்து பிரதம தகவல் அதிகாரியாக தலைமை கம்பனிகளான சிட்டி வங்கி (அவுஸ்திரேலியா, சிங்கப்பூர்) AON லிமிட்டட் அவுஸ்திரேலியா, கிளாரிட்டி இன்டர்நேஷனல் லிமிட்டட் சிங்கப்பூர் மற்றும் இலங்கை ரெலிகொம் ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.

### 18. திரு. எஸ். வன்னியாரச்சி

*(பிரதிப் பொது முகாமையாளர் - சர்வதேச வங்கியியல்)*

திரு. சுனில் வன்னியாரச்சி அவர்கள் 1987 இல் மக்கள் வங்கியில் ஓர் முகாமைத்துவ பயிற்சியாளராக இணைந்தார். இவர் கிளை வங்கியியல், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் கடனளிப்பு, சர்வதேச வங்கியியல், வர்த்தக நிதியளிப்பு மற்றும் குத்தகை ஆகிய பிரிவுகளில் கடமையாற்றியுள்ளார். இவர் கடனளிப்பு மற்றும் கரைகடந்த வங்கியியல் நடவடிக்கைகளில் பரந்த அனுபவமுடையவர்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இளமானி விஞ்ஞான (விசேட) பட்டதாரியாவர். பட்டதாரியானதன் பின்னர் இவர் இங்கு வேதியியலில் செயல்முறை விளக்குநர் மற்றும் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவராவார்.

தற்போது இவர், கூட்டாண்மை வங்கியியல் பிரிவு, வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவை அலகு, நிதியியல் நிறுவன அலகு மற்றும் திறைசேரி பின்னணி காரியாலயம் ஆகிவற்றின் தலைமைத்துவம் வகிக்கின்றார்.

### 19. திரு. டபிள்யு. கே. எஸ். பி. நந்தன

*(பிரதம சட்ட அதிகாரி)*

திரு. டபிள்யு. கே. எஸ். பி. நந்தன அவர்கள் ஓர் வழக்குரைஞர் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை பட்டத்தையும் கொண்டுள்ளார். இவர் வங்கியியல் மற்றும் சட்டத்துறையில் 37 வருடங்கள் அனுபவத்தைக் கொண்டுள்ளார். சட்டப் பிரிவு, சர்வதேச பிரிவு, காலிப் பிராந்தியம், மேற்கு வலயம் -1 மற்றும் விசேட சொத்துக்கள் அலகு ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.

இவரது அனுபவம், கம்பனிச் சட்டம், வர்த்தகச் சட்டம், தொழிலாளர் சட்டம் மற்றும் வங்கியில் மற்றும் கடன் மீட்டல் என்பவற்றை உள்ளடக்கும். மேலும், இவர் உள்ளூர் மற்றும் வெளியூரில் பல வெளிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றும் முக்கியமாக முகாமைத்துவம் மற்றும் தலைமைத்து அபிவிருத்தி, ஆசியாவின் நீதித்துறை அமைப்பு முதலியவற்றில் பங்குபற்றியுள்ளார்.

# நிறைவேற்று முகாமைத்துவம்

6
**திரு. ஆர். ரணதுங்க**
உதவிப் பொது முகாமையாளர் -
விநியோக மார்க்க முகாமைத்துவம்

1
**திருமதி. எஸ். பிரதாபசிங்க**
உதவிப் பொது முகாமையாளர் -
நிதியியல் மற்றும் கணக்கியல்

3
**திருமதி. எஸ். டபிள்யு. ஏ. டி. எஸ். கல்யாணி**
உதவிப் பொது முகாமையாளர் -
சிற்றளவு வங்கியியல்

9
**திருமதி. பி. ஆர். மதுரவல**
உதவிப் பொது முகாமையாளர் - கணக்காய்வு

4
**திரு. எச். சி. பர்ணாந்து**
உதவிப் பொது முகாமையாளர் -
வங்கியில் துணைச் சேவைகள்

5
**திரு. ஈ. ஏ. டி. ஜே. பிரியசாந்த**
பிரதிப் பிரதம உள்வாரி கணக்காய்வாளர்

11

**திரு. ஆர். எம். ஏ. கே. பண்டார**
உதவிப் பொது முகாமையாளர் -
(தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக
விடுவிக்கப்பட்டுள்ளார்.)

12

**திரு. டபிள்யு. எம். எஸ். வீரக்கோன்**
உதவிப் பொது முகாமையாளர் -
வினியோக மார்க்க முகாமைத்துவம்

10

**திருமதி. வி. கே. நாரங்கொட**
உதவிப் பொது முகாமையாளர் -
கூட்டாண்மை வங்கியியல் 1

7

**திருமதி. என். சி. முதலிகே**
உதவிப் பொது முகாமையாளர் -
வினியோக மார்க்க முகாமைத்துவம்

2

**திரு. ஆர். எம். எஸ். பி. ரத்நாயக்க**
உதவிப் பொது முகாமையாளர் -
சிற்றளவு வங்கியியல்

8

**திருமதி. ஏ. எஸ். லியனாராச்சி**
உதவிப் பொது முகாமையாளர் -
கடன் கட்டுப்பாடு

17

**திருமதி. பி. எஸ். ஜே. குருகுலசூரிய**
உதவிப் பொது முகாமையாளர் -
மனித வளங்கள் அபிவிருத்தி

13

**திருமதி. டி. வை. எஸ். மென்டிஸ்**
உதவிப் பொது முகாமையாளர் -
சந்தைப்படுத்தல் மற்றும் பொது விவகாரங்கள்

19

**திரு. ஆர். கொடித்துவக்கு**
உதவிப் பொது முகாமையாளர் -
கரைகடந்த வங்கியியல்

20

**திரு. ஐ. டி. எஸ். எஸ். இலுக்கும்பர**
உதவிப் பொது முகாமையாளர் -
சிற்றளவு வங்கியியல்

14

**திரு. டி. டி. டி. இஷட். குணவர்தன**
உதவிப் பொது முகாமையாளர் -
புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள்;

21

**திரு. கே. டி. ஜே. பெரேரா**
உதவிப் பொது முகாமையாளர் -
விநியோக மார்க்க முகாமைத்துவம்

16

**திரு. பி. ஆர். எஸ். ஜயதிஸ்ஸ**
உதவிப் பொது முகாமையாளர் -
மனித வளங்கள் - நிர்வாகம்

18

**திருமதி. ஜி. எம். ஆர். பி. விஜேரத்ன**
பிரதித் தலைமைத்துவம் -
முதன்மை வர்த்தக அலகு

15

**திருமதி. கே. என். சேனாரத்ன**
உதவிப் பொது முகாமையாளர் -
கடன் அலகு 11 - சி. பி. டி.

22

**திருமதி. யு. எஸ். கேர்ட்டி**
உதவிப் பொது முகாமையாளர் - கடன்

23

**திரு. ஏ. எஸ். எம். வி. குமாரசிறி**
உதவிப் பொது முகாமையாளர் -
வர்த்தக நிதியளிப்பு

24

**திரு. எல். விதான**
உதவிப் பொது முகாமையாளர் -
முயற்சியாண்மை வங்கியியல்

27

**திருமதி. பி. ஏ. கே. பதிரண**
உதவிப் பொது முகாமையாளர் -
கூட்டாண்மை வங்கியியல்

25

**திருமதி. என். ஆர். ஜயரத்ன**
உதவிப் பொது முகாமையாளர் - ஒ.சி. எஸ்.
மற்றும் நிதியியல் நிறுவனங்கள்

26

**திரு. எஸ். என். பி. எம். டபிள்யு. நாரயண**
உதவிப் பொது முகாமையாளர் -
சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள்

29

**திரு. கே. ஜே. விஜேவர்தன**
உதவிப் பொது முகாமையாளர் -
அட்டைகள்

30

**திரு. கே. டி. கருணாதிலக்க**
உதவிப் பொது முகாமையாளர் -
விநியோக மார்க்க முகாமைத்துவம்

33

**திரு. எம். கே. டி. எஸ். குணரத்ன**
உதவிப் பொது முகாமையாளர் -
விநியோக மார்க்க முகாமைத்துவம் -
தன்னியக்க வங்கியியல் இயந்திரச் செயற்பாடுகள்

32

**திருமதி. ஆர். பி. என். பிரேமலால்**
பிரதித் தலைமைத்துவம் நிதியியல் -
முகாமைத்துவ தகவல்கள் பிரிவு

28

**திரு. யு. அலிமொஹமட்**
உதவிப் பொது முகாமையாளர் -
கடன் மீட்டல்

31

சமூகமளிக்கவில்லை
**திரு. டி. பி. சம்பிக்க**
உதவிப் பொது முகாமையாளர் - திறைசேரி அலகு

# சேவையுடனான ஓர் உயர்ந்த வங்கியியல் அனுபவம்

வாடிக்கையாளர்கள் மேலும் மேலும் எண்ணியலாக்கலால் உந்தப்பட்டு வருகின்றார்கள். எனவே, மக்கள் வங்கிக்கு எமது திடமான கிளைகள் வலையமைப்புடன் மாற்று விநியோக மார்க்கங்களில் பயனடையும் அதே சமயம் வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துதல் முக்கியமானதாகும். வாடிக்கையாளர்கள் அவர்களது வங்கியியல் தேவைகளுக்காக வங்கிகளுடன் தொடர்புகொள்ளும் விதத்தினை மாற்றியமைப்பதற்காக சமூக, அலைப்பேசி மற்றும் இணையத்தள தொடர்பாடல் மார்க்கங்கள் ஒன்றிணைந்து வந்துள்ளன. புதிய தொழில்நுட்பமானது தொடர்ந்தும் வெளிவரும்சமயம் மக்கள் வங்கியானது ஏற்கனவே இந்த பாதையில் கணிசமான அளவு முன்னேற்றத்தை மேற்கொண்டுள்ளது.

740
கிளைகள்

# பெறுமதி உருவாக்கம் »

52 வணிக மாதிரி
54 போக்குகள். இடர்நேர்கைகள், வாய்ப்புகள் மற்றும் மூலோபாய திசை
55 வழங்கல் தொடர் முகாமைத்துவம்
56 விநியோக மார்க்கங்கள்
58 பங்காளிகள் ஈடுபாடு
62 வணிகச் சூழல்
66 எமது கருவிகள் மற்றும் சேவைகள்
68 நிறுவன கட்டமைப்பு மற்றும் துறைசார் செயற்திறன்
76 எமது துணைநிறுவனங்கள்
77 எமது மூலதனங்களை முகாமைப்படுத்தல்

# பெறுமதி உருவாக்கம்

## வணிக மாதிரி

செயற்பாடுகளது அளவுகோளை சுத்தமாக எடுத்தால், எமது வணிக மாதிரியானது நாட்டில் காணப்படும் மிகவும் பரவலான மற்றும் மிகவும் கலப்பான பொருளாதார செயல்முறைகளில் ஒன்றாகும். இதற்கும் மேலாக, வாடிக்கையாளர்களது நிதியத்தின் ஓர் மிகப்பெரிய காப்பாளர் மற்றும் அரசாங்கத்தின் ஓர் பிரதிநிதி என்ற விதத்தில் எமது வணிக மாதிரியானது நிதியியல் செயற்திறன் காரணிகளுக்கு அப்பால் விநியோகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மக்கள் வங்கியினது ஆழமான வளங்களான நிதியியல், இயற்பியல், மனித, அறிவுத்திறன் மற்றும் விசேட மூலதனங்கள் என்பவற்றை அதன் ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு, கணிசமான சமூக அபிவிருத்தி பெறுபேறுகளை உருவாக்குவதற்கு கட்டுப்படுத்தி பயன்படுத்தப்படல் வேண்டும்.

நடைமுறை நிதியாண்டில், நாட்டிற்கான எமது கடப்பாட்டினை பொருளாதார பெறுமதியில் ரூபா 25 பில்லியனுக்கும் மேலாக நாட்டிற்கு பங்களிப்பு செய்து நிறைவேற்றினோம். இதற்கும் அதிகமாக ஆயிரத்திற்கும் மேலான தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் வணிகங்களுக்கு சக்தியளித்தோம். மிகவும் குறிப்பிடத்தக்கதாக, 2015 இல் எமது டிரில்லியன் ரூபா வணிக மாதிரியினை ஓர் புதிய எண்ணியல் பரிமாணமாக உயர்த்துவதற்காக ஓர் ஆர்வமிக்க திட்டத்தை நாம் வடிவமைத்ததுடன் இதன் மூலம் எமது பொருளாதாரத்திற்கும் எமது மக்களுக்கும் நாம் உருவாக்கும் பெறுமதியினை பெருக்கமுடியும் என நாம் நம்புகின்றோம்.

## கருவிகள் மற்றும் சேவைகள்

கடன்களும் முற்பணங்களும்

வைப்புகள்

அட்டைகள்

கூட்டாண்மை நிதியளித்தல்

வர்த்தக நிதியளித்தல்

கரைகடந்த வங்கியியல்

திறைசேரி, முதன்மை வர்த்தகர் மற்றும் முதலீட்டு வங்கியியல்

பணமனுப்பல் சேவைகள்

## வாடிக்கையாளர் உறவுகள்

மெய்யான மற்றும் நியாயமான ஈடுபாடுகளினூடாக எமது வாடிக்கையாளர்களுடன் நீண்டகால நெறிமுறையான உறவுகள்

நிர்வாகக் கட்டுப்பாடுகளைக் குறைத்தல், முகாமைத்துவ கடப்பாடு, விரைவான தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் அமுலாக்களினூடாக நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு முக்கியத்துவத்தை வழங்குகின்றோம்.

தன்னியக்க சேவைகள்

## பாதைகள்

கிளைகள் 740

தன்னியக்க வங்கியியல் இயந்திர (த.வ.இ.) வலையமைப்பு - எமது சொந்த த.வ.இ. 492 மற்றும் நாடுபூராவும் 3000 த.வ.இ. க்கான பிரவேசம்

இணையத்தளம், அலைப்பேசி, குறுந்தகவல் கைக்கணினி வங்கியியல் மற்றும் வீசா பற்று அட்டைகள்

விளம்பரம் மற்றும் ஆக்கமுயற்சி

## வாடிக்கையாளர் பிரிவுகள்

இளவர்கள்

இளைஞர்கள்

வயதுவந்தோர்கள்

சிரேஷ்ட பிரஜைகள்

சிற்றளவு

சிறிய மற்றும் நடுத்தர வணிக முயற்சிகள்

கம்பனிகள்

## வருமான ஓடை

வட்டி வருமானம் → கட்டணம் மற்றும் தரகு வருமானம் → வர்த்தகத்திலிருந்து இலாபம் → ஏனைய செயற்பாட்டு வருமானம்

# பெறுமதி உருவாக்கம்

## போக்குகள், இடர்நேர்கைகள், வாய்ப்புகள் மற்றும் மூலோபாய திசை



நடைமுறை நிதியாண்டில், வங்கியின் முக்கியமான மூலோபாய முனைப்பானது அடுத்த ஐந்து ஆண்டுகளில், 2016 - 2020 காலப்பகுதியில், வங்கியின் வளர்ச்சியை வழிப்படுத்தும் ஒட்டிணைவான மற்றும் நீடிப்புத்திறனுடைய மூலோபாயத்தை விருத்தி செய்தலாகும். சாத்தியப்படக்கூடிய இடர்நேர்கைகள் மற்றும் வாய்ப்புகளை இனங்காண்பதற்காகவும் எதிர்கால வங்கியியல் வணிகத்தை வடிவமைக்கும் முக்கியமான போக்குகள் மற்றும் விசைகள் என்பவற்றை இனங்காண்பதற்காகவும் இச்செயல்முறையானது பாரிய சூழலது பகுப்பாய்வினை உள்ளடக்கியது.

எமது முயற்சியில் நாம் அடைந்த வெற்றியை அறிக்கையிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். நாம் 2015 இனை ஓர் மிகத்தெளிவான மூலோபாய ஆவணம் மற்றும் படிப்படியான அமுலாக்கல் திட்டத்தோடு நிறைவு செய்தோம். மக்கள் வங்கியினை ஓர் "புதிய விதத்தில்", ஓர் நவீன, தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான, சந்தையினால் நெறிப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனமாக நிலைப்படுத்துவதற்கு எமது புதிய ஐந்தாண்டு கூட்டாண்மை மூலோபாயமானது கருவியாகப் பயன்படும் என நாம் நம்புகின்றோம்.

மக்கள் வங்கியின் நீடிப்புத்திறன் மூலோபாயம்




### மூலோபாயக் கவனம் 2015

மேம்பட்ட தொழில்நுட்பத்தின் உறுதுணையுடன் பயனுறுதிமிக்க செயல்முறைகள் மற்றும் விநியோக மார்க்கங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வங்கியினது பாரம்பரிய வணிக மாதிரியில் எமது மூலோபாயத் திட்டமானது ஓர் கருத்தியலான நகர்வினை எதிர்பார்க்கின்றது. எண்ணியல் வங்கியியலானது வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட ஓர் பேராவலுடைய திட்டமாகும். இது வணிகம், சேவை, செயற்பாடு, நிர்வாகம் மற்றும் தொடர்பாடல் செயல்முறைகளை எண்ணியலாக்குவதன் மூலம் பாரம்பரிய வங்கியியல் மேற்கொள்ளப்படும் முறையினை மாற்றுவதற்காகும். இத்தகைய கருத்தியலான நகர்வானது வங்கியினுள் சேவை கலாச்சாரத்தினுள் ஓர் மாற்றத்தை வேண்டுகின்றது. இதற்கும் மேலாக, ஓர் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு, வங்கியும் பொதுமக்கள் மத்தியில் அவர்களது நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டுமென நாம் நம்புகின்றோம். குறிப்பாக, வங்கியின் வாடிக்கையாளர் தளத்தில் பெரும்பங்கினை பிரதிநிதித்துவப்படுத்தும் கிராமப்புற மக்களுக்கு எவ்வாறு எண்ணியல் வங்கியியல் சேவைகளை அணுகி அவற்றைப் பயன்படுத்துவது என்பது பற்றி தெளிவுபடுத்தல்வேண்டும். நடைமுறை நிதியாண்டானது இந்த மாற்றத்திற்கான அடித்தளமிடும் கட்டமாவதுடன் நாம் ஓர் புதிய யுகத்திற்கு தயாராகுவதற்காக தொழில்நுட்பம், செயல்முறைகள் மற்றும் மக்கள் ஆகிய மூன்று பரவலான பிரிவுகளில் கவனஞ்செலுத்தினோம்.

வங்கியின் மூலோபாய திசையைப் பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து தலைவரின் கூற்றினை வாசிக்கவும். பக்கம் 82 இல் காணப்படும் மனித மூலதனம் எனும் அத்தியாயமானது இவ்வாண்டில் எமது மனிதவள அபிவிருத்தி முன்னெடுப்புகளை விவரிக்கின்றது. நாம் எவ்வாறு எமது செயல்முறைகளை மேம்படுத்துகின்றோம் என்பதன் விபரங்களை பக்கம் 55 இல் உள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ அத்தியாயத்தையும் பக்கம் 89 இல் காணப்படும் அறிவுத்திறன் மூலதனத்தையும் வாசிக்கவும். நாம் எவ்வாறு எமது தொழில்நுட்பத்தினை மேம்படுத்துகின்றோம் என்பது பற்றிய மேலதிக தகவல்களுக்காக தயவு செய்து பக்கம் 88 இல் உள்ள உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் எனும் பிரிவினை வாசிக்கவும்.

வங்கியின் பாரிய எண்ணிக்கையிலான மற்றும் பரந்தகன்று காணப்படும் மார்க்கங்களது வலையமைப்பின் காரணமாக வணிகத் தொடர்ச்சிக்கும்

# வழங்கல் தொடர் முகாமைத்துவம்

மற்றும் சேவைகளின் தரத்திற்கும் வழங்கல் தொடர் முகாமைத்துவம் அவசியமாகும். வங்கியானது நாளாந்த தேவைப்பாடுகளை சந்திப்பதற்காக பாரியளவு இருப்புகளையும் அதிக எண்ணிக்கையிலான வழங்குனர்களையும் பராமரிக்கின்றது.

## இலத்திரனியல் வழங்கல் தொடர் முகாமைத்துவம்

வங்கியின் வழங்கல் தொடரானது தற்போது கையினால் இயக்கி முகாமைப்படுத்தப்படுகின்றது. வங்கியின் எண்ணியலாக்கல் மூலோபாயத்தின் ஊடான முக்கியமான மாற்றமாக முடிவிலிருந்து முடிவுக்கு, நிகழ்நேரம், 24x7, வழங்கல் தொடர் முகாமைத்துவத்திற்கு நேரலை இடம்பெயர்வாகும். வழங்கல் முகாமைத்துவத்தின் செயல்முறைகளது அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றுசேர்ப்பதற்கு வங்கியானது இலத்திரனியல் ஒப்பந்தப்புள்ளி செயல்முறைகளில் கவனஞ்செலுத்தும். இந்த நகர்வானது கிளைகள் வலையமைப்பின் தேவைகளுக்கு பதிலளிப்பதற்கான எமது ஆற்றலை கணிசமான அளவு மேம்படுத்தும். இது எமது வழங்கல் தொடர் முகாமைத்துவச் செயற்பாட்டில் செயற்திறன், வேகம் மற்றும் கூடிய நெகிழ்ச்சி என்பவற்றை சேர்ப்பதுடன் தாள் பாவனையில் கணிசமான அளவு வீழ்ச்சியையும் ஏற்படுத்தும்.

பெறப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளை அடிப்படையாகக் கொண்ட வழங்குனர்களது பட்டியல்

நுகர்பயன் சேவை வழங்குனர்கள்
மின்சாரம்
தண்ணீர்
தொலைத்தொடர்பு

பொருள் வழங்குனர்கள்
தாள்கள்
தகவல் தொழில்நுட்பம் தொடர்பான வழங்கல்கள்
ஏனைய எழுதுபொருட்கள்

வளாக வழங்குனர்கள்
தனிப்பட்ட கட்டிட உரிமையாளர்கள்
காரியால இடத்தை வாடகைக்கு விடும் நிறுவனங்கள்

ஒப்பந்தக்காரர்கள்
கட்டிடம்
உட்புற வடிவமைப்பு மற்றும் பிரிப்புகள்

மனித வளங்கள்
புற ஒப்படைப்பு ஊழியர்களின் வழங்குனர்கள்

பராமரிப்பு
தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் / மென்பொருள் பராமரிப்பு கம்பனிகள்
காரியாலய உபகரணங்கள் பராமரிப்பு கம்பனிகள்
தூய்மைப்படுத்தல் சேவைகள்

ஊழியர் நலன்
பயிற்றுவிப்பவர்கள் மற்றும் ஆலோசகர்கள்

சொத்துக்கள் வழங்குனர்கள்
வாகன வழங்குனர்கள்
தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் /மென்பொருள் விற்பனையாளர்கள்

தொடர்பாடல்
ஊடகம்
பொதுவான தபால் தொலைத்தொடர்பு

சேவைகள்
காப்புறுதிக் கம்பனிகள்
கணக்காய்வாளர்கள்
மதிப்பீடு செய்பவர்கள்

## வழங்குனர் ஈடுபாடு

வழங்குனர் தொடர் முகாமைத்துவத்தில் சிறந்த ஆளுகை நியமங்களை பின்பற்றுவதற்காக வழங்குனர்களை பதிவுசெய்து ஒப்பந்தங்களை வழங்குவதற்கு வங்கியானது முறைப்படியான, சபை அங்கீகரிக்கப்பட்ட விலைக்கோரல் செயல்முறைகளை கடைப்பிடிக்கின்றது. ஒவ்வொரு வருடமும் பொது விலைக்கோரல்களைக் கோரியும் அதனைத் தொடர்ந்து ஓர் மதிப்பீட்டு செயல்முறையின் பின்னர் புதிய வழங்குனர்கள் பதிவுசெய்யப்படுகின்றார்கள். 2015 ஆம் நிதியாண்டில், வங்கியானது ஏற்கனவே உள்ள வழங்குனர்களை மாற்றவில்லை. எவ்வாறாயினும், வங்கியினது எண்ணியலாக்கல் மூலோபாயத்திற்கு ஆலோசனைச் சேவைகள், உபகரணங்கள் மற்றும் மென்பொருள் என்பவற்றினூடாக துணைபுரிவதற்கு வங்கியின் வழங்கல் தொடருக்கு பல புதிய வழங்குனர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

மூலோபாய மற்றும் வணிக இலக்குகளை அடைவதற்கு தேவைப்படும் சார்புநிலை மட்டம் மற்றும் ஊடாட்ட மட்டம் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு வங்கியானது வழங்குனர்களுடன் வெவ்வேறு மட்டத்திலான தொடர்பாடல்களைப் பேணுகின்றது.

## வழங்குனர் முன்னுரிமையளித்தல் வரைச்சட்டம்




## எதிர்கால கவனம்

நடைமுறை நிதியாண்டில் வங்கியினது வழங்கல் தொடர் முகாமைத்துவ செயல்முறையினை மேம்படுத்துவதற்காக வங்கியானது பல முறைகளை இனங்கண்டது.

- தேவைக் கோரிக்கை எழுப்புதல், நேரலை சுவடுபற்றிச் செல்லல் மற்றும் கையிருப்பின் முகாமைத்துவம் என்பவற்றுக்கு ஓர் இலத்திரணியல் கையிருப்பு முறையினை அமுல்படுத்தல்
- வழங்கல் விலைகோரல்களுக்கு வசதியளிப்பதற்காக ஓர் இலத்திரணியல் விலைக்கோரல் முறையினை அறிமுகப்படுத்தல்
- ஓர் சூழல் தோழமையான கழிவு முகாமைத்துவ முறையினை கடைப்பிடித்தல்
- சூழல் நியமங்களுக்கு அமைவுறுவதற்காக (முக்கியமாக பொருள் வழங்குனர்கள்) வழங்குனர்களை ஊக்குவிப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்குதல்
- தொழிலாளர் நடைமுறைகள் தொடர்பாக சிறந்த ஆளுகையினை கடைப்பிடிப்பதனை உறுதிசெய்வதற்காக வழங்குனர்களது தொழிலாளர் நடைமுறைகளை பரிசீலித்துப் பார்த்தல்.

பாரம்பரியமாக வங்கியினது கிளைகள் ஓர் முக்கியமான பங்கினை எந்நேரமும் வகித்துள்ளதுடன் ஓர் முக்கியமான மார்க்கமாக இருந்துள்ளன. எவ்வாறாயினும், வாடிக்கையாளர்களது மாற்றமடையும்

# பெறுமதி உருவாக்கம்

## விநியோக மார்க்கங்கள்

தேவைகள் மற்றும் விருப்புத்தேர்வு என்பன வளர்ச்சியடையும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுடன் சேர்ந்து கடந்த தசாப்தத்தில் புதிய மார்க்கங்களது அதிகரித்த செல்வாக்கு மற்றும் ஏற்றுக்கொள்ளலுக்கு வழிசமைத்தன. எனவே, எமது வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறனான, கிரயம் குறைந்த, தடையற்ற வங்கியியல் சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் மக்கள் வங்கியானது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் முக்கியமானதெனக் கருதப்படும் மார்க்கங்களை இனங்கண்டுள்ளது. இந்த வருடத்தில், தொழில்நுட்பத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடானது வாடிக்கையாளர் சேவைகளை உயர்ந்த கிரயத்திலிருந்து குறைவான கிரயத்தையுடைய மார்க்கங்களுக்கு மாற்றுவதனை இயலுமையாக்கும். இதன் மூலம் அவர்களது சேவைக்கான மொத்த கிரயத்தினை குறைக்கும் அதேவேளை 24/7 சேவை மார்க்கங்களுடன் வினைத்திறன் மட்டங்களை மேம்படுத்தும். தொழில்நுட்பத்திலான எமது முதலீடானது வாடிக்கையாளர்களுக்கு புதிய அனுபவங்களை வழங்குவதுடன் வணிகங்களுக்கும் சிறப்பான வாடிக்கையாளர் தேக்கிவைப்பிற்கும் உறுதுணைபுரியும்.

### கிளை வலையமைப்பு, அலைப்பேசி வங்கியியல், தன்னியக்க வங்கியியல் இயந்திரங்கள், இணையம், கைத்தொலைப்பேசிகள்

மக்கள் வங்கியானது பாரம்பரியமற்ற இலத்திரணியல் மற்றும் அலைப்பேசி மேடைகள் உள்ளடங்களாக அனைத்து விநியோக மார்க்கங்களிலும் திடமான வணிக வளர்ச்சியினைக் கண்டது. இவ்வருடத்தில் சம்பிரதாயமான வங்கிக் கிளைகள் பெரும்பான்மையான கொடுக்கல் வாங்கல்களுக்கு பங்களிப்பு செய்ததுடன், ஏனைய விநியோக மார்க்கங்களான த.வ.இ., இணையத்தள வங்கியியல் மற்றும் அலைப்பேசி வங்கியியலது பயன்பாடு போன்ற ஏனைய விநியோக மார்க்கங்களது பயன்பாட்டில் வருடத்திலிருந்து வருடம் விரைவான வளர்ச்சியினை அறிக்கையிடுவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். முக்கியமாக மேல் மாகாணத்திற்கு அப்பாலிருந்து கணிசமான வளர்ச்சியினை நாம் நோக்கியதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், இது எமது வாடிக்கையாளர்களில் அனேகமானோர் இலங்கையின் நவீன தொழில்நுட்ப அடிப்படையிலான நிதியியல் முறையின் கீழ் வருவதனை குறிப்பிடுகின்றது. 2016 - 2020 மூலோபாய திட்டத்திற்கமைய சேவை விநியோக மார்க்கங்களில் வங்கியானது ஓர் மூலோபாய நோக்கினை எடுக்கின்றது. த.வ.இ. பாவனை, இணைய வங்கியியல் மற்றும் வங்கியியலுக்கு அலைப்பேசியின் பாவனை போன்றவற்றை மேம்படுத்துவதற்காக 2015 இல் பல முன்னெடுப்புகள் நிறைவேற்றப்பட்டன. காசு வைப்புகள், பண மாற்றல்கள், நுகர்பயன் பட்டியல் கொடுப்பனவுகள், காசோலை வைப்புகள் போன்ற பெரும்பாலான கொடுக்கல் வாங்கல்களை தொழில்நுட்ப மார்க்கங்களினூடாக மேற்கொள்வதே எதிர்காலத்தில் எமது பிரதான இலக்காகும்.

இணையம் மற்றும் கைத்தொலைப்பேசி வங்கியியல் என்பன நவீன தொழில்நுட்பத்துடன் துறைசார் சிறந்த நியமங்களுக்கு இணையாக மேம்படுத்தப்படும். இந்த மார்க்கங்களை அபிவிருத்திசெய்வது தொடர்பான பெரும்பாலான பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக அலைப்பேசி வங்கியியலின் செல்வாக்கானது இந்த வருடத்தில் எழுச்சிபெற்று கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கையானது 71%த்தால் அதிகரித்தது. இணைய வங்கியியல் கொடுக்கல் வாங்கல்களும் மெச்சத்தக்க வளர்ச்சியினைக் காட்டியிருந்தாலும் இது குறைவான இணைய ஊடுருவல் காரணமாக கைத்தொலைப்பேசி அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களிலும் பார்க்க பின்தங்கி காணப்பட்டது.

அலைப்பேசி வங்கியியல் மற்றும் இணைய வங்கியியல் கொடுக்கல் வாங்கல்கள்

**அலைப்பேசி வங்கியியல் மற்றும் இணைய வங்கியியல் கொடுக்கல் வாங்கல்கள்**




### கிளை வலையமைப்பு

2015 டிசம்பர் இறுதியில், மக்கள் வங்கியினது கிளை வலையமைப்பே நாட்டில் காணப்படும் பாரிய கிளை வலையமைப்பாகும். நாடு பூராவும் 740 முற்றுமுழுதான மற்றும் வரையறுக்கப்பட்ட சேவையை வழங்கும் கிளைகள் பரந்து காணப்பட்டன. கிளை வலையமைப்பானது வருடத்திலிருந்து வருடத்தில் ஓர் சாதனைமிக்க செயற்திறனாக 13% இலாப அதிகரிப்பினை கண்டதுடன் வங்கியின் வரிக்குப் பின்னரான மொத்த இலாபத்தில் 23% பங்களிப்பினை ஆற்றியது.

### த.வ.இ. வலையமைப்பு

மக்கள் வங்கியின் தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களது எண்ணிக்கையானது 2014 இல் காணப்பட்ட 469 இலிருந்து 2015 இல் 492 ஆக அதிகரித்தது. எவ்வாறாயினும், 11 ஏனைய வங்கிகளது பங்களிப்பினை உள்ளடக்கிய பொதுவான தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களது வலையமைப்பினூடாக மக்கள் வங்கியின் நாடுபூராவுமான மொத்த த.வ.இ. எது பாவனையானது 3,000 இனை எட்டியது. 2016 இல் நாம் மேலதிகமாக 300 த.வ.இ. ளை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதுடன், இதில் ஒரு பகுதி சில பழைய இயந்திரங்களை மாற்றியமைப்பதற்கும் புதிய இடங்களில் நிறுவுவதற்குமாகும்.

### உயர்நிலையான தொழில்நுட்ப உறுதுணை

த.வ.இ. வலையமைப்பினை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்காக ஓர் அர்ப்பணிப்புடனான கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு அலகு வங்கியில் காணப்படுகின்றது. கண்காணிப்பு முறையானது நாட்டில் எந்தவொரு இடத்திலும் காணப்படும் த.வ.இ. வலையமைப்பிலான செயலிழப்பு மற்றும் பழுதடைதலை உடனடியாக துல்லியமாக குறிப்பிட்டு அதனை சரிசெய்வதற்கான ஆற்றலை வங்கிக்கு வழங்குகின்றது. இந்த உயர்நிலையான தொழில்நுட்ப உறுதுணை சேவைகள் வாடிக்கையாளரது சௌகரியத்தையும் அணுகக்கூடிய இயலுமையையும் மேம்படுத்தியுள்ளது. மக்கள் வங்கியினது த.வ.இ. ளது நம்பத்தகுந்த நிலை மற்றும் குறைவான இணையா நிலை நேரத்தின் காரணமாக மக்கள் வங்கியின் த.வ.இ. கொடுக்கல் வாங்கல்களில் கணிசமான பங்கானது ஏனைய வங்கிகளது வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### இணைய மற்றும் கைத்தொலைபேசி வங்கியியல்

மிகவும் சுற்றுச்சூழல் நீடிப்புத்திறனுடைய நவீன தொழில்நுட்பக் கருவிகளில் வங்கியானது 2015 இல் திடமாக கவனஞ்செலுத்தியது. இவ்வாண்டில், நாம் நேரடியாக கைத்தொலைபேசி வங்கியியல் கணக்குகளுக்கு வாடிக்கையாளரிடையே ஊக்கமளித்து பிராச்சாரம் மேற்கொண்டதன் பலனாக வாடிக்கையாளர் பதிவீட்டின் எண்ணிக்கையானது 113% ஆக அதிகரித்தது. வாடிக்கையாளர்கள் மக்கள் வங்கியுடன் பதிவு செய்யுமாறு வேண்டப்படுவதுடன் மக்கள் வங்கியின் அலைப்பேசி வசதியினை பயன்படுத்தி பண மாற்றல்களையும் அவர்களது கணக்கு நிலுவைகளை சரிபார்க்கவும் இயலுமையாயுள்ளது. இந்த வசதியின் மூலமாக மக்கள் வங்கிக்கும் மூன்றாம் தரப்பு கணக்குகளுக்கு பண மாற்றல் செய்வதற்கும் நுகர்பயன் பட்டியல்களை செலுத்துவதற்கும் கைத்தொலைபேசியினை பயன்படுத்த முடியும்.

மக்கள் வங்கியின் இணைய வங்கியியல் வசதிகள் மேற்கூறப்பட்ட அனைத்து நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள், நேரலை, 24x7 என்பவற்றுக்கு வசதியளிப்பதுடன் நாட்டில் எந்தப் பகுதியிலுமுள்ள வாடிக்கையாளர்களுக்கு வங்கியியலை இதுவரை காணப்படாத அளவுக்கு சௌகரியமாக்கியுள்ளது. இந்த வருடத்தல் வங்கியின் இணை வங்கியியல் வாடிக்கையாளர்களது தளமானது 43% ஆல் வளர்ச்சியடைந்தது.




மக்கள் வங்கியின் கிளை வலையமைப்பு (2015)

| இடம் | கிளைகளின் எண்ணிக்கை |
|---|---|
| அம்பாறை | 25 |
| அநுராதபுரம் | 32 |
| பதுளை | 35 |
| மட்டக்களப்பு | 19 |
| புத்தளம் | 23 |
| கொழும்பு | 124 |
| காலி | 36 |
| கம்பஹா | 59 |

| இடம் | கிளைகளின் எண்ணிக்கை |
|---|---|
| அம்பாந்தோட்டை | 21 |
| யாழ்ப்பாணம் | 29 |
| களுத்தறை | 36 |
| கண்டி | 50 |
| கேகாலை | 28 |
| குருணாகலை | 52 |
| மாத்தளை | 19 |
| மாத்தறை | 29 |

| இடம் | கிளைகளின் எண்ணிக்கை |
|---|---|
| மொனராகலை | 14 |
| நுவரெலியா | 27 |
| இரத்தினபுரி | 28 |
| பொலுன்னறுவை | 18 |
| திருகோணமலை | 17 |
| வன்னி | 19 |
| மொத்தம் | 740 |

# பெறுமதி உருவாக்கம்

## பங்காளிகளுடனான ஈடுபாடு

(G4 - 24,25,26,27)

எமது வாக்குறுதி, "நாம் தரம் மற்றும் நிறுவன அபிவிருத்திக்கு பங்களிக்கின்றோம்", என்பது வணிகத்திற்கான எமது அணுகுமுறையினை சுருக்கமாக விளக்குகின்றது; எமது பங்காளிகளது தேவைகளை சந்திப்பதனூடாக நாம் வெற்றியடைகின்றோம் என்பதை நாம் புரிந்துகொண்டுள்ளோம். எமது பங்காளிகளுடன் ஓர் திறந்த, வெளிப்படையான கலந்துரையாடலை பராமரிப்பது முக்கியமாக இன்றியமையாததாகும். ஏனெனில், ஒரு வணிகம் எவ்வளவுக்கு நுட்பமாக உணர்ந்து செயலாற்றுகின்றதோ அவ்வளவுக்கு வெற்றிபெறும் என்பது எமக்கு தெரியும்.

பங்காளிகளுடனான ஈடுபாட்டு செயல்முறையானது கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (இத்துடன் இனங்காணப்பட்ட எமது பங்காளிகள் குழுக்கள், ஈடுபாட்டு அணுகுமுறைகள், பங்காளிகளது எதிர்பார்ப்புகள் மற்றும் அந்த எதிர்பார்ப்புகளுக்கு எமது முன்னெடுப்புகள் மற்றும் எமது பதிலளிப்புகள் ஓர் அட்டவணையில் வழங்குப்பட்டுள்ளன).

*பங்காளிகளுடனான ஈடுபாட்டின் செயல்முறை ஓட்டம்*

| *நிலை 1:* | *நிலை 2:* | *நிலை 3 :* | *நிலை 4:* | *நிலை 5:* |
|---|---|---|---|---|
| *பங்காளி இனங்காண்தல்* | *பங்காளிகளது தேவைப்பாடுகளை முன்னுரிமைக்கேற்ப வரிசைப்படுத்தல்* | *பொருத்தமான தொடர்பாடல் மார்க்கங்களை உருவாக்கி உள்ளக வளங்களை ஒதுக்குதல்* | *செவிமடுத்து மதிப்பிடுதல்* | *பதிலளித்து அமுலாக்குதல்* |

பங்காளிகளை இனங்காணுதல் நாம் அவர்களது எதிர்பார்ப்புகளை புரிந்துகொள்வதற்கும் முன்னுரிமைக்கேற்ப வரிசைப்படுத்துவதனையும் உறுதிப்படுத்துவதற்கு முக்கியமானதாகும். எமது பங்காளிகளது பிரச்சனைகளில் அவர்களது நிலைமையானது தீர்த்துவைக்கப்படுவதனை உறுதிசெய்வதற்காக செயல்முறையானது, எமது முக்கியமான பங்காளிகளை ஓர் குழுச்சிந்திப்பு செயல்முறையினூடாக செல்வாக்குகள் மற்றும் பங்காளிக் குழுக்களை முறையாக விவரணையாக்கி பகுப்பாய்வு செய்வதாகும். எமது வழக்கமான வணிக நடவடிக்கைகள் ஒவ்வொரு நாளும் எம்மை எமது பங்காளிகளுடன் தொடர்புகொள்ளச் செய்வதனால் உள்வாரி மற்றும் வெளிவாரி பங்காளிக் குழுக்கள் மிகவும் கவனமாக கருத்திலெடுக்கப்பட்டன.

முக்கியமான பங்காளிகளை இனங்காணும்போது நாம் பொறுப்பாண்மை, செல்வாக்கு மற்றும் எமது பங்காளிகளது நெருக்கம் என்பவற்றை கவனத்திலெடுத்தோம்.

எமது நிறுவனத்திற்கும் எமது உள்வாரி மற்றும் வெளிவாரி பங்காளிகளுக்கு மிகவும் முக்கியமான 15 நீடிப்புத்திறன் விடயங்களை அடிப்படையாகக்கொண்டு நாம் எமது முக்கியமான பங்காளிகளை முன்னுரிமை வரிசைப்படுத்தினோம்.

| எமது வணிகத்தை முகாமைப்படுத்தல் | பொறுப்புடைய வங்கியியல் | எமது மக்களை ஊக்கமளித்தல் | திடமான சமூகத்தை கட்டியெழுப்புதல் | எமது சூழல் அடிச்சுவடுகளை குறைத்தல் |
|---|---|---|---|---|
| 1. வணிக நடத்தை<br>2. நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் வெளிப்படைத் தன்மை<br>3. கூட்டாண்மை ஆளுகை<br>4. வாடிக்கையாளர் பின்னூட்டம்<br>5. அந்தரங்கம் மற்றும் தரவுப் பாதுகாப்பு | 6. அணுகுதல் / நிதியியல் சேர்மானம்<br>7. பொறுப்புடைய முதலீடு<br>8. பொறுப்புடைய கடனளிப்பு | 9. பன்முகத்தன்மை மற்றும் சேர்மானம்<br>10. பணியாளர்கள் ஈடுபாடு<br>11. கற்றல் மற்றும் அபிவிருத்தி<br>12. செயற்திறன் கவருதல் மற்றும் தேக்கி வைத்தல் | 13. பங்களிப்பு மற்றும் சமூகம்<br>14. நிதியியல் கல்வியறிவு | 15. எமது சூழல் அடிச்சுவடுகளை குறைத்தல் |

முக்கியமான 15 நீடிப்புத்திறன் விடயங்களை மட்டக்குறியாக எடுத்து மேலே மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் நாம் பின்வருமாறு எமது பங்காளிகளை வரிசைப்படுத்தினோம். மக்கள் வங்கியின் பங்காளிகள், வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்கள், பணியாளர்கள், முறைமைப்படுத்துபவர்கள், வழங்குனர்கள், சமூகம் /உள்ளூர் சமுதாயக் குழுக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஆய்வுச் சமூகம் ( உதாரணமாக பகுப்பாய்வாளர்கள், தரப்படுத்தல் முகவர்கள்) ஆகியோரை உள்ளடக்குகின்றது. இந்த குழுக்கள் ஒவ்வொன்றும் எமக்கு முக்கியமானதாகும்.

## மக்கள் வங்கியின் முக்கிய பங்காளிகள்




வங்கியானது அதன் பங்காளிகளது கூட்டுமுயற்சியுடன் ஓர் தொடர்ச்சியான உரையாடலில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கின்றது. இது அவர்களை புரிந்துகொள்வதற்கும் மற்றும் எவ்வளவு தூரம் சாத்தியமோ அந்தளவுக்கு அவர்களது எதிர்பார்ப்புகள், தேவைகள், கரிசனைகள் மற்றும் வேண்டுதல்களுக்கு பதிலளிப்பதற்கும் ஆகும். மேலும், இந்த உரையாடல்களை நீடிக்கவும் மற்றும் பங்காளிகள் அவர்களுக்கு முக்கியமானதாகக் கருதப்படும் நீடிப்புத்திறன் விடயங்களுக்கான முக்கியத்துவத்தினை எவ்வாறு வரிசைப்படுத்துகிறார்கள் என்பதை புரிந்துகொள்வதற்கு எமக்கு உதவுவதற்குமாக வடிவமைக்கப்பட்ட ஈடுபாட்டு முன்னெடுப்புகளை நாம் அபிவிருத்திசெய்துள்ளோம். வெளித்தோன்றும் பிரச்சனைகள் மற்றும் வாய்ப்புகளை இனங்காண்பதற்காக நாம் எமது இணைநிலையினருடனான வட்டமேசை கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதுடன் முக்கியமான துறைசார் மற்றும் சமுதாய சங்கங்களில் உயிர்ப்புள்ள அங்கத்தவர்களாயுமுள்ளோம்.

இந்த பரிமாற்றங்கள் மற்றும் கலந்துரையாடல்களது விளைவானது நாம் வெறுமனே அவர்களது முன்னுரிமைகளைப்பற்றி தெரிந்கொள்வது மாத்திரமன்றி அவர்களுக்கு முக்கியமான விடயங்களில் செயற்படுவதற்கு நாம் கடப்பாடுடையவர்களாய் உள்ளோம் என்பது எமது பங்காளிகளுக்கு நம்பிக்கையை வழங்குகின்றது. பின்வரும் அட்டவணையானது பங்காளிகளது எதிர்பார்ப்புகளுக்கு வங்கியினது கடப்பாடு மற்றும் பதிலளிப்புகளை வழங்குகின்றது. இந்தக் கடப்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட உரிய நடவடிக்கைகள் என்பன வங்கியினது தினசரி செயற்பாடு மற்றும் அதன் பங்காளிகளுடனான அதன் ஊடாட்டத்தினூடாக இனங்காணப்பட்ட வாய்ப்புகளும் ஆகும்.

# பெறுமதி உருவாக்கம்

## பங்காளிகளுடனான ஈடுபாடு

### வாடிக்கையாளர்கள்

| உள்ளீர்க்கப்படும் விதம் | முன்னுரிமைகள் | வங்கியினது பதிலளிப்பு |
|---|---|---|
| » திருப்தி மதிப்பீடுகள்<br>» சந்தைப்படுத்தல் முன்னெடுப்புகள்<br>» உறவுகள் மற்றும் வணிக முகாமையாளர்கள்<br>» வாடிக்கையாளர் வலையமைப்பாக்க நிகழ்வுகள்<br>» கூட்டாண்மை இணையத்தளம் ஊடக விளம்பரங்கள் | » வைப்புகளில் நல்ல விளைவுகள்<br>» சிறப்புடனான விரைவான சேவைகள் விநியோகம்<br>» முன்னுரிமையான விலையிடல், கட்டணங்கள் மற்றும் தரகு<br>» சந்தை கேள்வியினை சந்திக்கும் பல்வகையான கருவிகள்<br>» பாதுகாப்பான கொடுக்கல் வாங்கல்கள், இரகசியத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையுடனான நேரலை வங்கியியல் தீர்வுகள்<br>» சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கான நிதியளிப்பிற்கு அனுமதியளித்தல்<br>» வாடிக்கையாளர் பாதுகாப்பு | » நேரத்துடனான, போதிய, தெளிவான மற்றும் துல்லியமான தகவல்களை கருவிகள் மற்றும் சேவைகளில் வழங்குதல்<br>» வாடிக்கையாளர் திருப்தியினை முன்னுரிமைப்படுத்துவதன் மூலம் தரமுடைய சிறப்பான சேவையினை விருத்தி செய்தல்<br>» நேர்மையினை நிலைநிறுத்தும் விளம்பரப்படுத்தல் மற்றும் விற்பனையினை பயன்படுத்தல்<br>» முறைகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தல்<br>» வாடிக்கையாளர் திருப்தி மதிப்பாய்வு |

### சமூகங்கள்

| உள்ளீர்க்கப்படும் விதம் | முன்னுரிமைகள் | வங்கியினது பதிலளிப்பு |
|---|---|---|
| » கூட்டாண்மை சமூக பொறுப்பு நடவடிக்கைகள்<br>» உதவித்தொகை<br>» சமூக செயலமர்வுகள், கவனக் குழுக்கள், மதிப்பாய்வுகள் மற்றும் திறனூட்டல் முன்னெடுப்புகள் | » சமூக திட்டங்களில் பங்குபற்றல்<br>» சிறப்புரிமையற்ற மக்களுக்கு உதவுதல்<br>» வாழ்வதற்கான அடிப்படை தேவைகளுக்கு உதவுவதல்<br>» தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு | » கல்வி, கலாச்சாரம், அடிப்படை மனித தேவைகள் மற்றும் சூழல் போன்ற சமூக நடவடிக்கைகளிலான ஈடுபாட்டினை ஊக்குவித்தல் |

### பணியாளர்கள்

| உள்ளீர்க்கப்படும் விதம் | முன்னுரிமைகள் | வங்கியினது பதிலளிப்பு |
|---|---|---|
| » வழங்குனர் மதிப்பாய்வுகள்<br>» தொடர்ச்சியான வழங்குனர் உறவு முகாமைத்துவம்<br>» தளத்திலான விஜயங்கள் மற்றும் கூட்டங்கள் | » கொள்முதல் செயல்முறைகள் மற்றும் தேவைப்பாடுகள்<br>» பசுமையான தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க வளங்களுக்கான தேவை | » விழுத்தொடர் கொள்கைகள்<br>» மெய்நேர மேம்படுத்தல்<br>» பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் |

### பணியாளர்கள்

| உள்ளீர்க்கப்படும் விதம் | முன்னுரிமைகள் | வங்கியினது பதிலளிப்பு |
|---|---|---|
| » பணியாளர் கூட்டங்கள், தொலைக் கருத்தரங்குகள், வீடியோ கருத்தரங்குகள் முதலியன.<br>» பயிற்சி, செயலமர்வுகள் மற்றும் நெறிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்<br>» குழும மின்னஞ்சல்கள், அக இணைய சுற்றோட்டம்<br>» வணிக பிராந்திய ஈடுபாடு<br>» வங்கியினது இணைய தலைவாசல் | » மக்கள் வங்கியினுள் மற்றும் வங்கியியல் துறையினுள் நாணயம்<br>» குழுக்களது கட்டமைப்பு, முறைகள் மற்றும் செயல்முறைகளின் சிக்கல்கள்<br>» வெகுமதி மற்றும் அங்கீகாரத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயமானதன்மை<br>» ஊதியப் பொதி திட்டமிடலில் பணவீக்க செம்மையாக்கல்<br>» தனிப்பட்ட திறமைக்கேற்ற பொருத்தமான தொழில் விளக்கம்<br>» தொடர்ச்சியான பயிற்றுவித்தல்<br>» ஆரோக்கியமான பணியாற்றல் சூழல் மற்றும் பணிமனை பாதுகாப்பு<br>» செயற்திறனால் இயக்கப்படும் தொழில்துறை விருத்தி | » பணியாளர் தன்னார்வ நிகழ்ச்சித்திட்டங்கள்<br>» பணியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், முறைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளில் புத்தாக்கம்<br>» வங்கியின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் குறிக்கோள், வெளிப்படைத்தன்மை, நியாயமான மற்றும் சமனாக நடத்துதல்<br>» ஆக்கத்திறனை அதிகரிப்பதற்கு உகந்த பணிமனைச் சூழலை வழங்குதல் |

### முதலீட்டாளர்கள் / பங்குதாரர்கள், பகுப்பாய்வாளர்கள்

| உள்ளீர்க்கப்படும் விதம் | முன்னுரிமைகள் | வங்கியினது பதிலளிப்பு |
|---|---|---|
| » வருடாந்த பொதுக் கூட்டம்<br>» வருடாந்த அறிக்கை, காலாண்டு நிதிக்கூற்றுக்களை பிரசுரித்தல்<br>» பத்திரிகைத்துறை கருத்தரங்குகள்<br>» ஊடக வெளியீடுகள்<br>» கூட்டாண்மை இணையத்தளம் | » முதலீடுகளில் ஆரோக்கியமான விளைவுகள் மற்றும் பங்கிலாப கொள்கை<br>» வளர்ச்சியடையும் உழைப்புகள்<br>» திடமான ஆளுமை மற்றும் இடர்நேர்கை முகாமைத்துவம் | » வெளிப்படையான மற்றும் நேரத்துடனான வெளிப்படுத்தல்கள் |

### அரசாங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முறைமைப்படுத்துபவர்கள்

| உள்ளீர்க்கப்படும் விதம் | முன்னுரிமைகள் | வங்கியினது பதிலளிப்பு |
|---|---|---|
| » வருடாந்த மற்றும் அரையாண்டு மற்றும் காலாண்டு நிதிக்கூற்றுக்களை பிரசுரித்தல்<br>» இ.ம.வ. னால் தளத்திலான கண்காணிப்பு<br>» முறைமைப்படுத்தல் விபரத்திரட்டுக்களின் சமர்ப்பிப்பு<br>» பத்திரிகை வெளியீடுகள் | » முதலீடுகளில் ஆரோக்கியமான விளைவுகள் மற்றும் பங்கிலாப கொள்கை<br>» வளர்ச்சியடையும் உழைப்புகள்<br>» திடமான ஆளுமை மற்றும் இடர்நேர்கை முகாமைத்துவம் | » வெளிப்படையான மற்றும் நேரத்துடனான வெளிப்படுத்தல்கள் |

## உலகளாவிய பொருளாதாரம்

சர்வதேச நாணய நிதியத்தினது (ச.நா.நி.) உலக பொருளாதார கண்ணோட்ட அறிக்கையின் 2016 ஜனவரி முன்னிறுத்தலுக்கமைய, 2015 இல் உலக பொருளாதாரமானது வேகம்குறைந்து காணப்பட்டது. இது பல பாரிய வெளித்தோன்றும் பொருளாதாரங்கள் எதிர்மறையான வளர்ச்சியினை பதிவுசெய்ததினாலும் அனேகமான வளர்ச்சியடைந்த பொருளாதாரங்கள் 2014 உடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவான வளர்ச்சியடைந்ததனாலும் ஆகும். உலகளாவிய மொத்த உள்ளூர் உற்பத்தியானது 2015 டிசம்பர் இறுதியில் 3.1% ஆக முன்னிறுத்தப்படுவதுடன் இது 2014 இல் காணப்பட்ட 3.4% இலிருந்து ஓர் வீழ்ச்சியாகும். இதற்கு ரஷ்யா மற்றும் பிரேசில் நாடுகளின் பொருளாதாரங்கள் 2014 இல் முறையே காணப்பட்ட 0.6% மற்றும் 0.1% வளர்ச்சியிலிருந்து 3.7% மற்றும் 3.8% எதிர்மறையான வளர்ச்சியும் ஓர் காரணமாகும். சீனாவின் பொருளாதாரமானது 7.3% வளர்ச்சியிலிருந்து 6.9% வளர்ச்சியாக குறைவடைந்தது. அமெரிக்க மற்றும் ஐரோப்பிய பிராந்தியமானது ஒரு வருடத்திற்கு முன்பு காணப்பட்ட முறையே 2.4% மற்றும் 0.9% இலிருந்து 2.5% மற்றும் 1.5% ஆக ஓர் சிறிய வளர்ச்சியைப் பதிவுசெய்தன. ஜப்பானிய பொருளாதாரமானது 2014 இல் காணப்பட்ட எவ்வித வளர்ச்சியுமற்ற நிலையிலிருந்து 2015 இல் 0.6% குறைவான வளர்ச்சியினை எட்டியது. இந்தியா அதன் வளாச்சி வீதமான 7.3% த்தினை தக்கவைத்துக்கொண்டது.

ச.நா.நி. 2015 இல் உலகளாவிய பொருளாதாரக் கண்ணோட்டத்தில் மூன்று முக்கிய மாறுதல்கள் தொடர்ந்தும் செல்வாக்கு செலுத்தியதாக குறிப்பிடுகின்றது.

(1) சீனாவில் முதலீடு மற்றும் உற்பத்தியிலிருந்து நுகர்வு மற்றும் சேவைகள் நோக்கிய பொருளாதார நடவடிக்கைகளின் மீள்நிலைப்படுத்தல் மற்றும் உலகளாவிய வேகக் குறைப்பு,
(2) வலு மற்றும் ஏனைய பண்டங்களுக்கான குறைவான விலை மட்டங்கள் மற்றும்
(3) ஏனைய பல பாரிய விருத்தியடைந்த பொருளாதாரங்களின் மத்திய வங்கிகள் தொடர்ச்சியாக நாணயக் கொள்கையினை தளர்த்தும்வேளை மீளெழும் அமெரிக்க மீட்பின் சூழலில் அமெரிக்காவின் நாணயக் கொள்கையில் படிப்படியான இறுக்கம்.

2015 இல் உலகளாவீய ரீதியில் உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் வர்த்தகம் பலவீனமாக காணப்பட்டது. இது சீனாவில் ஏற்பட்ட அபிவிருத்திகளை மாத்திரமன்றி மந்தமான உலகளாவிய கேள்வி மற்றும் முதலீட்டினையும் பிரதிபலித்தது. தொடர்ச்சியான மேலதிக வழங்கல்களின் மத்தியில் 2015 செப்டம்பரிலிருந்து எண்ணெய் விலைகள் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்தன. ஏனைய பண்டங்களின் விலைகள் விசேடமாக உலோகங்களும் வீழ்ச்சியடைந்துள்ளன.

எவ்வாறாயினும், ச.நா.நி. ஆனது உலக பொருளாதாரத்தில் ஓர் படிப்படியான வளர்ச்சியினை எதிர்பார்க்கின்றது. உலகளாவிய வளர்ச்சியானது 2016 இல் 3.4% ஆலும் 2017 இல் 3.6% ஆலும் வளர்ச்சியடையுமென முன்னிறுத்தப்படுகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதாரமானது 2.1% ஆல் வளர்ச்சியடைந்து 2017 இல் திடமாகக் காணப்படுமென முன்னிறுத்தப்படுகின்றது. வெளித்தோன்றும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடையும் பொருளாதாரங்களில் வளர்ச்சியானது 2015 இல் காணப்பட்ட 4% இலிருந்து, 2008-09 நிதியியல் சிக்கல்களிலிருந்து ஆகக்குறைவானது, 2016 மற்றும் 2017 இல் முறையே 4.3% மற்றும் 4.7% ஆக அதிகரிக்கும் என முன்னிறுத்தப்படுகின்றது.

| | வருடத்திலிருந்து வருடத்திற்கான வளர்ச்சி | | | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு | | உத்தேசம் | |
| | 2014 | 2015 | 2016 | 2017 |
| உலக உற்பத்தி | 3.4 | 3.1 | 3.4 | 3.6 |
| அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள் | 1.8 | 1.9 | 2.1 | 2.1 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.4 | 2.5 | 2.6 | 2.6 |
| ஐரோப்பிய பிராந்தியம் | 0.9 | 1.5 | 1.7 | 1.7 |
| ஜப்பான் | 0.0 | 0.6 | 1.0 | 0.3 |
| ஐக்கிய இராச்சியம் | 2.9 | 2.2 | 2.2 | 2.2 |
| வெளித்தோன்றும் சந்தைகளின் பொருளாதாரம் | 4.6 | 4.0 | 4.3 | 4.7 |
| ரஷ்யா | 0.6 | -3.7 | -1.0 | 1.0 |
| சீனா | 7.3 | 6.9 | 6.3 | 6.0 |
| இந்தியா | 7.3 | 7.3 | 7.5 | 7.5 |
| பிரேசில் | 0.1 | -3.8 | -3.5 | 0.0 |
| ஆசியான் | 4.6 | 4.7 | 4.8 | 5.1 |

## உள்ளூர் பொருளாதார அபிவிருத்தி 2015

ச.நா.நி. 2015 இல் இலங்கையின் மெய்யான மொத்த உள்ளூர் உற்பத்தியானது 6.5% வளர்ச்சியினை அடையுமென உத்தேசிக்கின்றது. கிடைக்கப்பெற்ற திரண்ட மூன்றாம் காலாண்டு வளர்ச்சியானது ஓர் திடமான 5.2% மொத்த உள்ளூர் உற்பத்தி வளர்ச்சியினை முன்னைய ஆண்டின் மூன்றாம் காலாண்டின் 2.4% க்கு எதிராக குறிப்பிடுகின்றது. இது சேவைகள், கைத்தொழில் மற்றும் விவசாயம் ஆகிய மூன்று பாரிய பொருளாதார துறைகளின் சாதகமான செயற்திறனினால் உந்தப்பட்டது. 2015 இன் மூன்றாம் காலாண்டானது திரண்ட சேவைகளது வளர்ச்சி 5.2%ஆகவும், கைத்தொழில் வளர்ச்சி 3.6% ஆகவும் விவசாய துறையில் ஓர் திடமான வளர்ச்சியான 6.1% த்தையும் எட்டியது.

**நாணயமாற்று வீதங்களிலான அசைவுகள்**



2015 இல் ஏற்றுமதி இறக்குமதி இரண்டும் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதி வருமானம் 4.4% ஆல் விரைவாக வீழ்ச்சியடைந்தும் இறக்குமதி செலவினமானது 2.1% ஆலும் வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாக ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் வருடத்திலிருந்து வருட அடிப்படையில் வர்த்தக பற்றாக்குறையானது 1% ஆல் விரிவடைந்தது. இவ்வருடத்தில் சுற்றுலாத்துறை வருமானமானது 17.8% ஆல் அதிகரித்து அமெரிக்க டொலர்கள் 2,862.9 மில்லியனை எட்டியது. எவ்வாறாயினும், இலங்கையின் பாரிய பணமனுப்பும் இடமான மத்திய கிழக்கில் காணப்பட்ட ஸ்திரமற்ற தன்மையின் காரணமாக பணியாளர்களது பணமனுப்பலானது 0.5% ஆல் வீழ்ச்சியடைந்து அமெரிக்க டொலர்கள் 6,980.3 மில்லியனை எட்டியது.

இலங்கை ரூபாயானது அனேகமாக பிரதான நாணயங்களுடன் ஒப்பிடும்போது வீழ்ச்சியடைந்தது. அமெரிக்க டொலருக்கு எதிராக 9% ஆல் வீழ்ச்சியடைந்தும், ஸ்டேர்லிங் பவுண்டிற்கு எதிராக 4.5% ஆல் வீழ்ச்சியடைந்தும், ஜப்பானிய யென்னிற்கு எதிராக 8.25% ஆல் வீழ்ச்சியடைந்தும், இந்திய ரூபாவிற்கு எதிராக 4.5% ஆல் வீழ்ச்சியடைந்தும் யூரோவிற்கு எதிராக 1.3% ஆல் அதிகரித்தும் காணப்பட்டது.

திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி வீதங்கள் மற்றும் கொள்கை வட்டி வீதங்கள் வருடத்தின் அனேகமான நேரங்களில் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும் போக்கினை பராமரித்தன. எவ்வாறாயினும், வட்டி வீதங்கள் வருடத்தில் சில தளம்பல்களை அனுபவித்ததுடன் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் மேல்நோக்கி நகர ஆரம்பித்தன.

**திறைசேரி உண்டியல் வட்டி வீதங்கள் மற்றும் கொள்கை வட்டி வீதங்கள்**




**புதிய வைப்பு மற்றும் புதிய கடனளித்தல் வட்டி வீதங்கள்**




கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியின் (கொ.நு.வி.சு.) இன் அடிப்படையில், வருடத்திலிருந்து வருடம் தலைப்பு பணவீக்கமானது டிசம்பர் 2015 இல் 2.8% ஆகவும், வருடாந்த சராசரி தலைப்பு பணவீக்கமானது டிசம்பர் 2015 இல் 0.9% ஆகவும் காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியின் அடிப்படையில் (தே.நு.வி.சு.) தலைப்பு பணவீக்கமானது வருடத்திலிருந்து வருடம் நவம்பர் 2015 இல் காணப்பட்ட 4.8% இலிருந்து டிசம்பர் 2015 இல் வருடத்திலிருந்து வருடம் 4.2% ஆக வேகம் குறைவடைந்தது.

*பணவீக்க சதவீதம் 2015*

| | டிசம்பர் 2014 | செப்டம்பர் 2015 | ஒக்டோபர் 2015 | நவம்பர் 2015 | டிசம்பர் 2015 |
|---|---|---|---|---|---|
| கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியின் அடிப்படையில் தலைப்பு பணவீக்கம் | | | | | |
| வருடத்திலிருந்து வருடம் | 2.1 | -0.3 | 1.7 | 3.1 | 2.8 |
| வருடாந்த சராசரி | 3.3 | 0.7 | 0.7 | 0.9 | 0.9 |
| தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியின் அடிப்படையில் தலைப்பு பணவீக்கம் | | | | | |
| வருடத்திலிருந்து வருடம் | - | 1.9 | 3.0 | 4.8 | 4.2 |

# பெறுமதி உருவாக்கம்

வணிகச் சூழல்

## வங்கியியல்துறைக்கு மக்கள் வங்கியின் பங்களிப்பு

பெரும்பாலும் வைப்புகளினால் நிதியளிக்கப்பட்டு, மொத்த வங்கித்துறையின் சொத்துக்கள் 2015 இன் இறுதியில் மதிப்பிடப்பட்ட ரூபா 8.07 டிரில்லியனை எட்டியது.

## துறைசார் செயற்திறன் 2010 - 2015

**மொத்த வங்கியியல் துறையின் சொத்துக்கள்**




**மொத்த வங்கியியல் துறையின் கடன்கள**




**மொத்த வங்கியியல் துறையின் வைப்புகள்**




**வங்கியியல் துறையின் செயற்திறனற்ற கடன்**




2015 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியானது அனைத்து வங்கியியல் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 17.6% த்தினை பிரதிநிதித்துவப்படுத்தியது. மக்கள் வங்கியின் சொத்துக்கள் ரூபா 1.03 டிரில்லியனிலிருந்து 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1.18 டிரில்லியனாக விரிவடைந்தது. ஜனவரி 2015 இலிருந்து டிசம்பர் 2015 வரையான 12 மாதக் காலப்பகுதியில் வங்கியியல் துறையின் வைப்புகளின் மொத்த பெறுமதி ரூபா 4.68 டிரில்லியனிலிருந்து ரூபா 5.40 டிரில்லியனாக அதிகரித்தது. மக்கள் வங்கியானது ரூபா 899.2 பில்லியன் வைப்பு மட்டத்துடன் மொத்த வங்கியியல் துறையின் வைப்புகளில் 16.6% இனை பங்களிப்பு செய்தது.

2015 இல் வங்கியியல் துறையின் கடன் தேக்கமானது தொடர்ச்சியாக விரிவடையும் வேளை 2014 உடன் ஒப்பிடும்போது கடனுக்கான மந்தமான கேள்வியின் காரணமாக வளர்ச்சி வீதமானது மிதமானதாகக் காணப்பட்டது. வங்கிகளினால் வழங்கப்பட்ட மொத்த கடன்களில் கட்டுமாணத் துறையானது 16.8% த்தைப் பெற்றுக்கொண்டது. திரண்ட பெறுமதியின் அடிப்படையில், மொத்த கடன்களில் 51.5% மானது கட்டுமாணம், வர்த்தகம், உற்பத்தி மற்றும் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைகள் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டது.

**வங்கியியல் துறை கடனின் துறை ரீதியான பங்களிப்பு 2015**




**2015 இல் மக்கள் வங்கி எதிர் துறையினது சொத்துக்கள், வைப்புகள் மற்றும் கடனளித்தல்**



## செயற்திறனற்ற கடன்கள்

வங்கித் துறையினது செயற்திறனற்ற கடனானது ரூபா 12.7 பில்லியனால் குறைவடைந்து மொத்த செயற்திறனற்ற கடன் வீதமானது 2014 டிசம்பரில் காணப்பட்ட 4.2% இலிருந்து 2015 டிசம்பரில் 3.2% ஆக வீழ்ச்சியடைந்தது. இது ஓர் ஆரோக்கியமான சொத்து அடித்தளத்திற்கு இட்டுச்சென்றது. மக்கள் வங்கியின் செயற்திறனற்ற கடன் வீதமானது 2014 இல் காணப்பட்ட 3.2% இலிருந்து 2015 இல் 2.4% ஆக வீழ்ச்சியடைந்தது.

**துறை எதிர் மக்கள் வங்கியின் செயற்திறனற்ற கடன் வீதம்**




## இலாபங்கள்

2014 உடன் ஒப்பிடும்போது வங்கித்துறையின் இலாபகரத்தன்மையானது 2015 இல் அதிகரித்தது. இதற்கு முக்கிய காரணியாக வீழ்ச்சியடையும் வட்டி வீதங்கள் காணப்பட்டன. வீழ்ச்சியடையும் வட்டி வீதங்களின் காரணமாக வைப்புக்களுக்கான வட்டிச் செலவினமானது வங்கி கடன்களுக்கு அறவிடும் வட்டியில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க அதிக சதவீதத்தினால் குறைவடைந்ததன் விளைவாக ஏற்பட்ட உயர்ந்த தேறிய வட்டி வருமானத்தினாலும் ரூபாவின் பெறுமதியில் காணப்பட்ட அசைவுகளின் காரணமாக கிடைத்த நாணயமாற்று இலாபங்களினாலும் இலாபம் அதிகரித்தது. துறையினது வரிக்கு முந்திய இலாபத்தில் மக்கள் வங்கியின் பங்களிப்பானது 13.6% இலிருந்து 13.9% ஆக அதிகரித்தது.

## வங்கியியல் துறை இலாபகரத்தன்மை விகிதங்கள் 2015

வங்கித் துறையானது 2015 இல் இலாபகரத்தன்மை வளர்ச்சியினை பதிவு செய்தபோதிலும், வருடத்திலிருந்து வருட அடிப்படையில் சராசரி இலாபகரத்தன்மை விகிதாசாரங்கள் சற்று வீழ்ச்சியடைந்தன. இது வட்டியல்லாத செலவினங்களான பணியாளர்களது கிரயம் மற்றும் செயற்பாட்டு கிரயங்களில் ஏற்பட்ட அதிகரிப்பினாலாகும். சராசரி வங்கியியல் துறை சொத்துக்களிலான விளைவு (வரிக்கு முந்தியது) டிசம்பர் 2014 இல் காணப்பட்ட 2.0% இலிருந்து 2015 இல் 1.9% ஆக வீழ்ச்சியடைந்தது. அதேசமயம் உரித்துவத்திலான விளைவானது 16.6% இலிருந்து 16.1% ஆக வீழ்ச்சியடைந்தது. நிகர வட்டி ஆதாய அளவானது 3.5% ஆக தொடர்ந்துமிருந்தது. மக்கள் வங்கியானது அதன் சொத்துக்களிலான விளைவினை 1.8% ஆக பேணியதுடன் வங்கியின் உரித்துவத்திலான விளைவு 27.1% ஆகவும் நிகர வட்டி ஆதாய அளவானது 4.0% ஆகவும் டிசம்பர் 2015 இல் காணப்பட்டது.

**துறை எதிர் மக்கள் வங்கியின் உரித்துவத்திலான விளைவு**




**துறை எதிர் மக்கள் வங்கியினது நிகர வட்டி ஆதாய அளவு**



## பெறுமதி உருவாக்கம்

### எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள்



## வியாபார நிறுவன வங்கியியல்

- நடைமுறை கணக்குகள்
- சேமிப்பு கணக்குகள்
- நிலையான வைப்புகள்
- மேலதிகப்பற்றுக்கள்
- தவணைக் கடன்கள்
- சி.ந.மு. கடன்கள்
- அபிவிருத்தி மற்றும் நுண் நிதியளித்தல் கடன்கள்
- வர்த்தக நிதியளித்தல்

## மொத்த விற்பனை வங்கியியல்

- நடைமுறை கணக்குகள்
- சேமிப்பு கணக்குகள்
- நிலையான வைப்புகள்
- மேலதிகப்பற்றுக்கள்
- தவணைக் கடன்கள்
- வர்த்தக நிதியளித்தல்
  - இறக்குமதி /ஏற்றுமதி நிதியளித்தல்
  - கடல் வாணிபம் மற்றும் வங்கி உத்தரவாதம்
  - சர்வதேச வர்த்தகக் கொடுப்பனவுகளுக்கான வசதிகள் (நாணயக் கடிதம், ஏற்புகள்)

## திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கியியல்

- பணச் சந்தை நடவடிக்கைகள்
- அரசாங்கப் பிணையங்களில் வர்த்தகம்
- அரசாங்கப் பிணையங்களில் மீள்கொள்வனவு
- கொடுக்கல் வாங்கல்கள்
- வெளிநாட்டு நாணயமாற்று கொடுக்கல் வாங்கல்கள்
- மூலத்தினின்று எழும் கருவிகளில் கொடுக்கல் வாங்கல்கள்
  ( முன்னோக்கிய நாணயமாற்று உடன்படிக்கைகள், அந்நிய செலாவணி பரிமாற்று வணிகம்)
- முதலீட்டு வங்கியியல்
  - *கடன் கட்டமைத்தல் ஆலோசனை சேவைகள்*
  - *நம்பிக்கைப் பொறுப்பு சேவைகள்*

# பெறுமதி உருவாக்கம்

## நிறுவன கட்டமைப்பு மற்றும் துறைசார் செயற்திறன்

### நிறுவன கட்டமைப்பு

மூலோபாயத் திட்டத்திற்கேற்ப, வளர்ச்சி மற்றும் பன்முகப்படுத்தல் வாய்ப்புக்களுடன் தொடர்புபடுத்தி ஓர் சந்தை பகுதியாக்கல் பயிற்சியினை அடித்தளமாகக் கொண்டு வங்கியானது அதன் உள்ளக செயற்பாடுகளை மறுசீரமைத்தது. புதிய வணிக வகைப்படுத்தலானது துறை ரீதியாக சிறப்புத் தேர்ச்சியினை கட்டியெழுப்புவதற்கு இயலுமையாக்குவதுடன் இலக்குவைத்த சந்தை தேவைப்பாடுகளின் அடிப்படையில் மிகவும் பயனுறுதிமிக்க வளங்களது ஒதுக்கத்திற்கும் வசதியளிக்கும். இது ஒவ்வொரு வாடிக்கையாளரது உறவிலுமான உரித்துவத்தினை தெளிவாக இனங்காண்பதனை இயலுமையாக்குவதுடன் ஒவ்வொரு வணிக அலகினதும் சிறந்த செயற்திறன் அளவீட்டிற்கு வசதியளிக்கின்றது. இவை அனைத்தும் நாம் இப்போது கையேற்கும் புதிய தொழில்நுட்பத்துடன் ஒன்றிணைக்கப்படும்.




மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாட்டு கட்டமைப்பிற்கேற்ப தொழில்நுட்பம், செயல்முறைகள் மற்றும் ஆளணியினரை மேம்படுத்துவதற்காக ஓர் செயல்திட்டம் ஏற்கனவே விருத்தி செய்யப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்புகள் புதிய நிதியாண்டின் ஆரம்பத்திலிருந்து தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டு கிளை வலையமைப்பிடையே மாற்றல் செய்யப்படும்.

### துறைசார் செயற்திறன்

#### மொத்தவிற்பனை வங்கியியல்

மொத்த விற்பனை வங்கியியல் பிரிவானது முழுவீச்சாக மத்தியத்திலிருந்து பாரிய வணிகங்கள், அனைத்து பட்டியலிடப்பட்ட கம்பனிகள், பல்தேசிய நிறுவனங்கள் கரைகடந்த வங்கியியல் உள்ளடங்களாக அனைவருக்கும் சேவையாற்றுவதற்கு ஆயத்தமாயுள்ளது. அத்துடன் ரூபா 1,500 மில்லியனிற்கு அதிகமான புரள்வு மற்றும் ரூபா 100 மில்லியனிற்கும் அதிகமான நிகர மதிப்பையுடைய அரசு உடைமை நிறுவனங்கள் மற்றும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளுக்கும் சேவையாற்ற தயாராயுள்ளது. வங்கியினது உரித்துவம் அரசு உடைமையாதலால், பாரம்பரியமாக வங்கியானது அரச உடைமை நிறுவனங்களுக்கு முதன்மை வங்கியாளராக காணப்படுவதுடன் இது வரைக்கும் அரசாங்க துறையானது வங்கியின் கூட்டாண்மை தேக்கத்தில் பாரிய பங்கினை வகிக்கின்றது. இருப்பினும், வங்கியானது அதன் தேக்கத்தினை பன்முகப்படுத்தவும் அதன் தனியார்துறை அடிச்சுவட்டினை அதிகரிப்பதற்காகவும் தனியார் துறைக்கு வங்கியியல் வசதிகளை ஊக்குவிப்பதற்காக தொடர்ச்சியாக சுறுசுறுப்புடன் ஈடுபட்டது.

2015 இல் மொத்த மொத்தவிற்பனை கடனளிப்பானது வருடத்திலிருந்து வருடம் 11% அதிகரித்ததுடன் ரூபா 158 பில்லியனை எட்டியது. அரச உடைமை வலு நிறுவனங்கள் மற்றும் சில உட்கட்டமைப்பு திட்டங்கள் ஆகியவற்றின் கேள்வியானது தொடர்ந்தும் தேக்கத்தினை ஆதிக்கம் செலுத்தியதுடன் மொத்த கடன்களில் பாரிய பங்களிப்பினை வகித்தது. பெறுமதியின் அடிப்படையில் தனியார் துறைக்கான கடனானது இரட்டிப்பானதுடன் மந்தமான பொருளாதார நடவடிக்கையின் காரணமாக எதிர்பார்த்ததிலும் பார்க்க குறைவாக காணப்பட்டது.

சொத்துப் பரவலாக்களிலான கவனத்தின் மத்தியிலும், வங்கியானது சொத்தின் தரத்தை மேம்படுத்தல் நோக்கிய அதன் வேட்கையினை தொடர்ந்தது. இது மிகவும் ஒழுக்கமுடைய கடனளித்தல் வரைகூறுகளை அமுல்படுத்தியும், கடன்கள் மற்றும் பணியாளர் பயிற்சியினை உன்னிப்பாக கண்காணிப்பு செய்தும் மேற்கொள்ளப்பட்டது. 2014 இல் காணப்பட்ட செயற்திறனற்ற கடன் வீதமான 3.2% 2015 இறுதியில் 2.4% ஆக கணிசமான அளவு முன்னேற்றமானது எமது முயற்சிகளின் வெற்றியாகும் என்று தெரிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

#### *கரை கடந்த வங்கியியல் அலகு*

கரை கடந்த வங்கியியல் அலகின் வளர்ச்சியானது அரச மற்றும் தனியார் துறையின் உயர்ந்த கேள்வியினால் உந்தப்பட்டது. கரை கடந்த வங்கியியல் அலகானது முதலீட்டுச் சபையின் கீழ் பதிவிசெய்யப்பட்ட கம்பனிகள், நாணய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அரச துறை நிறுவனங்கள் மற்றும் கரை கடந்த வணிக முயற்சிகள் என்பவற்றிற்கு சேவையினை வழங்குகின்றது. இந்த சேவைகள் பிரசித்தி பெற்ற வெளிநாட்டு நாணய

அடிப்படையிலான வர்த்தக நிதியளித்தல் வசதிகள், கடன் வசதிகள் மற்றும் வைப்புகளை உள்ளடக்கும். 2015 இல் ஆடைகள் மற்றும் கைத்தொழில் ஏற்றுமதி துறைகளினால் உந்தப்பட்டு வர்த்தக கடன்களுக்கான கேள்வியானது 40% ஆல் அதிகரித்தபோது அரச துறையின் கேள்வியானது 23%ஆல் அதிகரித்தது. கரை கடந்த வங்கியியல் அலகினூடாக நாட்டில் பாரிய அளவிலான வெளிநாட்டு திட்டங்களில் முதலீடுகளுக்கான கேள்வியும், நாட்டிற்கு வெளியில் காணப்படும் உல்லாசத்துறை திட்டங்களுள் ஓர் சாத்தியமான போக்கினை

*எதிர்கால முனைப்பு*

» தொலைவு வாடிக்கையாளர் அணுகுதலுடனான கூட்டாண்மை இணையத்தளத்தின் அபிவிருத்தி. இந்த கூட்டாண்மை தலைவாசலானது கூட்டாண்மை இணையத்தள வங்கியியல் மற்றும் கூட்டாண்மை அலைப்பேசி வங்கியியல் வசதிகளது துணையுடன் எமது அனைத்து வாடிக்கையாளர்களது தேவைப்பாடுகளையும் தன்னியக்கமயமாக்குவதற்காகும். இத்திட்டமானது 2015 இல் ஆரம்பிக்கப்பட்டது. மொத்தவிற்பனை வங்கியியல் வாடிக்கையாளர்கள் மக்கள் வங்கியின் புதிய மொத்தவிற்பனை வங்கியியல் முகப்பினை மிகச் சிறந்த வினைத்திறன் மற்றும் வாடிக்கையாளர் வசதியினையும் சேர்த்து அனுபவிக்கக்கூடியதாயிருக்கும்.

» விலையிடல் தீர்மானங்களுக்காக ஓர் வாடிக்கையாளர் இலாபகரத்தன்மை அளவீட்டு முறையொன்றை நிறுவுதல். இந்தத் திட்டமானது (தரவுக் களஞ்சியத் திட்டம்) 2015 இல் ஆரம்பிக்கப்பட்டு 2017 இன் மூன்றாம் காலாண்டில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## நிறுவன வங்கியியல்

நிறுவன வங்கியியலானது வர்த்தக வங்கியியல் ( வருடாந்த புரள்வாக ரூபா 600 மில்லியன் முதல் ரூபா 1,500 மில்லியன் வரையுடைய வணிகங்கள்), சிறிய மற்றும் நடுத்தர நிறுவன வங்கியியல் (ரூபா 15 மில்லியன் முதல் ரூபா 600 மில்லியன் வரை வருடாந்த புரள்வாகக் கொண்டு வணிகங்கள்) மற்றும் வருடாந்த புரள்வாக ரூபா 15 மில்லியனுக்கும் குறைவான வணிகங்களுக்கான அபிவிருத்தி /நுண்கடன் நிதியளித்தல் என்பவற்றை உள்ளடக்கும்.

*வர்த்தக வங்கியியல்*

இலங்கையில் வர்த்தகக் கடன் சந்தையானது கடுமையான போட்டித்தன்மையுடையதாகும். இருப்பினும், இவ்வருடத்தில் எமது கடன் தேக்கமானது 20% வளர்ச்சியுடன் ரூபா 431 பில்லியனை எட்டியதனை அறிக்கையிடுவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஓர் வளர்ச்சி மூலோபாயமாக, வாடிக்கையாளர்களது வெவ்வேறு காசுத் தேவைப்பாடுகள் மற்றும் மீளச்செலுத்தும் ஆற்றல் என்பவற்றை சந்திப்பதற்காக கட்டமைக்கப்பட்ட ஏற்புடைய மற்றும் உயர்ந்த நெகிழ்வுடைய கடன் வசதிகளை வழங்குவதில் வங்கியானது கவனஞ்செலுத்தியது. இந்த அணுகுமுறையானது நாட்டின் நடுத்தர மற்றும் பாரிய வணிகங்களின் கணிசமான பிரிவிற்கு கடனுக்கான அணுகலானது அதிகரிக்குமென நாம் நம்புகின்றோம். இந்த அலகானது காசுப் பாய்ச்சல்கள் மற்றும் சிறந்த வணிக திட்டமிடலை அடிப்படையாகக் கொண்ட கடனுக்கான அணுகுமுறையினை வாடிக்கையாளருக்கு வழங்குகின்றது. இது பாரம்பரியமான பிணையில் தனியாக கவனஞ்செலுத்தும் கடன் வழங்கலிலிருந்து வேறுபடுகின்றது.

*சிறிய மற்றும் நடுத்தர நிறுவன வங்கியியல் (சி.ந.நி.)*

மக்கள் வங்கியானது நாட்டின் முக்கியமான சி.ந.நி. வணிக பூகோளங்களில் அமைந்துள்ள 23 சி.ந.நி. மத்திய நிலையங்களை செயற்படுத்துகின்றது. சி.ந.நி. மத்திய நிலையங்களின் நோக்கம் என்னவெனில் சி.ந.நி. தேவைப்பாடுகளுக்கு தனிப்பயனுள்ள நிதியியல் சேவைகளை வழங்குவதற்கும் குறிப்பிட்ட சி.ந.நி. வணிக தேவைகளை சந்திப்பதற்கான நிதியியல் உறுதுணை பொதிகளை வடிவமைப்பதற்குமாகும். எனவே, சி.ந.நி. மத்திய நிலையங்கள் குறிப்பிட்ட சி.ந.நி. தொடர்பான இடர்நேர்கை காரணிகளுடனான சி.ந.நி. தேவைகளை சந்திப்பதற்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஓர் வித்தியாசமான கடன் வழிகாட்டிகள் மற்றும் கருவிகளை பராமரிக்கின்றது.

இவ்வருடத்தில், சில சி.ந.நி. நிதியளித்தல் தோற்றப்பாடுகளில் கவனஞ்செலுத்துவதன் மூலம் வங்கியானது சி.ந.நி. கடன்களுக்கான அணுகுதலை அதிகரித்தது. நீடிப்புத்திறனுடைய சி.ந.நி. வளர்ச்சிக்கு உறுதுணையளிப்பதற்காக சி.ந.நி. கடன்களுக்கான காலமானது 10 வருடங்கள் வரை நீடிக்கப்பட்டது. இத்தேக்கமானது 38%ஆல் அதிகரித்து பெறுமதியினைப் பொறுத்தளவில் ரூபா 7.5 பில்லியனை எட்டியது. 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன் தொகையானது ரூபா 1.6 பில்லியனாகக் காணப்பட்டது. மக்கள் வங்கியானது நாட்டிலுள்ள பாரிய சி.ந.நி. கடன் வழங்குனர்களில் ஒருவராவதுடன் சி.ந.நி. துறையினை இலங்கையில் விருத்தி செய்வதற்கு முற்றாக கடப்பாடுடையதாயுள்ளது.

*அபிவிருத்தி வங்கியியல் / நுண்கடன் நிதியளித்தல்*

அபிவிருத்தி வங்கியியல் / நுண்கடன் நிதியளித்தலானது இலங்கையின் கிராமப் பகுதிகளில் அபிவிருத்தி சக்தியளிப்பவர் பங்கினை வகிப்பதுடன் இது வங்கியினால் விநியோகிக்கப்படும் கிராமிய அபிவிருத்தி உறுதுணையில் பிரதான மார்க்கங்களில் ஒன்றாகும். 2015 ஆம் நிதியாண்டில் அபிவிருத்தி மற்றும் நுண்கடன் நிதியளித்தல் அலகானது 29,603 நுண்கடன்களுக்கு ரூபா 9.6 மில்லியனை பிரித்துக்கொடுத்தது.

*துறைசார் பகிர்ந்தளிப்பு*




பகிர்ந்தளிப்பில் விவசாயக் கடனானது பாரிய பங்கு வகித்தவேளை, ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் கூட்டாக இரண்டாவது உயர்ந்த நிதியளித்தல் பங்கினை வகித்தது.

வங்கியானது புதிய நிதியாண்டில், கிராமிய பொருளாதாரங்களை பலப்படுத்தவும் கிராமிய வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் கூட்டுறவுத் துறை மற்றும் விவசாய அடிப்படையான வணிகங்களை விருத்தி செய்வதில் கவனஞ்செலுத்தும்.

# பெறுமதி உருவாக்கம்

நிறுவன கட்டமைப்பு மற்றும் துறைசார் செயற்திறன்

## நுகர்வோர் வங்கியியல்

### *தனிப்பட்ட வங்கியியல்*

ஒவ்வொரு சனத்தையும், அது வயதாக, இடமாக, அறிவு மட்டம் அல்லது சமூக பொருளாதார கண்ணோட்டமாக இருக்கலாம் அத்துடன் இணையற்ற சேவை தனிச்சிறப்பினையும் உள்ளடக்கிய பரந்த மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட கருவிகளது தேக்கமானது வங்கி அதன் ஐந்து தசாப்த கால இருப்பில் தொடர்ச்சியாக விருத்தி செய்த போட்டித்தன்மை காப்பரணாகும். மக்களுடனான வங்கி மற்றும் மக்களுக்கான வங்கி எனும் நடைமுறைவழக்கத்திற்கு உண்மையாய் இருப்பதற்காக பின்வருவன மேற்கொள்ளப்பட்டன. எமது தனிப்பட்ட வங்கியியல் கருவிகளது தேக்கமானது ஓர் செழிப்பான தனிக்குழுவான தேக்கத்தைக் கொண்டுள்ளது. இது ஒரு நபருடன். தொட்டிலிலிருந்து அவரது அந்திமக் காலம்வரைக்கும் பங்காளியாக செயற்படுவதில் பிரசித்தி பெற்றதாகும். இந்த வங்கியியலானது கிராமிய அல்லது நகர சூழலிருக்கலாம் அல்லது பல்வேறு சமூக படிநிலைகளிலிருந்து எழலாம். இது அவர்களது தேவைகள் மற்றும் ஆவலுடன் சீரமைக்கப்பட்டிருக்கும்.

எமது தேக்கமானது கடன் அட்டைகளிலிருந்து தனிப்பட்ட கடன்கள் வரை, சேமிப்பு வைப்புகளிலிருந்து நிலையான தவணை வைப்புகள் வரை, இளம் சேமிப்பாளர் கணக்கிலிருந்து ஓய்வூதியத் திட்டங்களை வரை, பல தசாப்தங்களாக வங்கியின் தரக்குறியீடாக முன்னேறிய வாடிக்கையாளர் சேவைகளினால் திறம்பட உறுதுணை செய்யப்பட்டுள்ளது. எமது வாடிக்கையாளர்களுடன் நீண்டகால தொடர்பினை விருத்திசெய்திலும் அவர்களது பல்வேறு தேவைகளை சந்திப்பதில் செயல்திறனுடன் காணப்படுவதிலும் எமது கவனம் செலுத்தப்பட்டது.

பல்வேறு வருடகாலமாக தொழில்நுட்பத்தில் எமது தந்திரோபயமான முதலீடானது எமது வாடிக்கையாளர்களுக்கு தொழில்நுட்ப பரிட்சயமான கருவிகளை எளிதாகவும், செயற்திறனாகவும், அணுகக்கூடியதாகவும், உட்புகக்கூடியதாகவும் மற்றும் தொந்தரவற்ற வங்கியியலை எந்நேரமும் எந்தஇடத்திலும் வழங்குவதற்கு இயலுமையாக்கும்.

மக்கள் வங்கியானது புதிய தலைமுறைக்கு பசுமை வங்கியியலுக்கான கதவுகளை திறந்ததுடன், தற்போது அவர்கள் இந்த கருத்தாக்கத்தின் சௌகரியத்தினை அனுபவிக்கின்றார்கள். நிகழ்நிலை கணக்குத் திறத்தல், தாளற்ற வங்கியியல் மற்றும் "YES E கூற்று போன்ற நேரம் மற்றும் வலுவினை சேமிக்கும் சூழல் தோழமையான வங்கியியல் தீர்வுகளே பசுமை வங்கியியலின் முக்கிய விளைவுகளாகும்.

அலைப்பேசி மற்றும் இணையத்தள வங்கியியல், இலத்திரணியல் கற்கை இருவெட்டு, தளர்ச்சி கணிப்புக் கருவி, உள்ளங்கை வங்கியியல், பற்று மற்றும் கடன் அட்டைகள், பீபள்ஸ் அஞ்சல் பெட்டி என்பன தனிப்பட்ட வங்கியியல் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய பசுமைக் கருவிகளுள் சிலவாகும்.

### *இசுரு உதான*

புதிதாக பிறந்த குழந்தைகளிலிருந்து 5 வயது வரைக்குமானவர்களை இலக்கு வைத்த "இசுரு உதான" சேமிப்புக் கணக்கினை ஓர் பெயரளவு வைப்பாக ரூபா 100/- உடன் திறக்க முடிவதுடன் இக்கணக்கிற்கு வழக்கத்திலும் பார்க்க அதிக வட்டி வீதமும் பரபரப்பான பரிசில்களும் வழங்கப்படுகின்றன. இசுரு உதான பரிசில் சான்றிதழ்கள் ரூபா 500/-, ரூபா 1,000/- மற்றும் ரூபா 2,000/- க்கு கிடைக்கப்பெறுவதுடன் இது தனித்தன்மை வாய்ந்ததுடன் இதனை புதிய கணக்கொன்றை திறப்பதற்கும் பயன்படுத்தலாம் அல்லது நடைமுறையிலுள்ள ஓர் கணக்கில் வரவுவைக்கலாம். கணக்குடைமையாளர் 5 வயதினை எட்டியவுடன், இந்தக்கணக்கானது தன்னியக்கமாக "சிசு உதான" கணக்காக மாற்றப்படும்.

### *சிசு உதான*

6 முதல் 18 வயது வரைக்குமான கணக்குடைமையாளர்களுக்கு இந்தக் கணக்கினை பெயரளவு பெறுமதியான ரூபா 100/- உடன் திறக்கலாம். பரபரப்பான பரிசில்கள், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் சாதனையாளர்கள் மற்றும் சாதாரண தர பரீட்சைகள் மற்றும் உயர்தர பரீட்சைகளின் இளம் சாதனையாளர்கள் ஆகியோருக்கான விசேட பண விருதுகள் மற்றும் வெகுமதிகள் கவர்ச்சியினை அதிகரித்தன. 18 வயதில், கணக்குடைமையாளரது "சிசு உதான" கணக்கானது தன்னியக்கமாக YES கணக்காக மாற்றப்படும்.

### Yes

'Yes' கணக்கானது யதார்த்தமான உலகத்தில் காலடி எடுத்தவைக்கும் இளைஞர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டதாகும். ரூபா 2,000/- வைப்புடன் திறக்கப்படும் இக்கணக்கானது பின்வருவனவற்றிற்கு வசதியளிக்கின்றது. இலவசமான நிலை ஆணைகள், கடன் அட்டை வசதிகள், குத்தகை வசதிகள் மற்றும் வீடமைப்பு, வாகனக் கொள்வனவு மற்றும் உயர்கல்வி ஆகியவற்றுக்காகும். கணக்கின் நிலுவையானது ரூபா 25,000/- இனை விஞ்சும்போது 1% உபகார வட்டி சேர்க்கப்படுகின்றது.

### *அஸ்வென்ன*

"அறுவடை", இக்கணக்கின் பெயர் குறிப்பிடுவதுபோல் இது பருவகால வருமானத்திற்காக உழைக்கும் விவசாயிகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஓர் கணக்காகும். இக்கணக்கினை ரூபா 1,000/- ஆரம்ப வைப்புடன் ஆரம்பிக்கலாம். கணக்கின் நிலுவையானது ரூபா 10,000/- இனை விஞ்சியவுடன் 1% உபகார வட்டி வீதத்திற்கு உரிமையளிக்கப்படும். இந்தக் கணக்கின் உடைமையாளர்களுக்கு சலுகையான வட்டி வீதங்களும் விவசாயக் கடன்களும் வழங்கப்படும்.

### *மக்கள் வங்கியின் பரிசுப் பற்றுச்சீட்டு*

ரூபா 500/- மற்றும் ரூபா 1,000/- முக மதிப்புகளின் கிடைக்கும் மக்கள் வங்கியின் பரிசுப் பற்றுச்சீட்டானது எந்த ஒரு கிளையிலும் எந்த ஒரு கணக்கிலும் வைப்பிலிட முடியும். இது வழங்கிய திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

*வனிதா வாசனா*
நாட்டில் பெண்கள் வகிக்கும் எண்ணற்ற பாத்திரங்களை கொண்டாடும் முகமாக வனிதா வாசனா கணக்கானது சாதாரண சேமிப்புக்கு வழங்கப்படும் வட்டி வீதங்களிலும் பார்க்க அதிக வட்டியினை வழங்குவதுடன் இக்கணக்கினை ரூபா 500/- ஆரம்ப வைப்புடன் திறக்கலாம். சிறிய தொழில்முனைவு முயற்சிகள், ஆதனம் அல்லது வீட்டுக் கொள்வனவு மற்றும் உயர் கல்விக்கு கடன் வசதியினை வழங்கும் நன்மைகளைக் கொண்டுள்ளது.

*பரினத்த*
"பரினத்த" கணக்கினை ரூபா 500/- உடன் திறக்க முடிவதுடன் இது கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை வழங்குவதுடன் சிரேஷ்ட பிரஜைகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டு லங்கா ஹொஸ்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்டில் பல கவர்ச்சிகரமான நலன்களையும் உள்ளடக்குகின்றது

*ஜனஜய*
ஓர் நிலையான மாதாந்த வருமானத்தை உடையவர்கள் ரூபா 2.000/- ஆகக் குறைந்த வைப்புடன் இந்தக் கணக்கினை திறக்கலாம். இக்கணக்கிற்கு விசேட கடன் மற்றும் குத்தகை வசதிகள், கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள் என்பன வழங்கப்படுகின்றன.

*பீபள்ஸ் நெட்*
பீபள்ஸ் நெட் உடன், இணையத்தள வங்கியியலின் அடிப்படைக் கொள்கைகளை உட்புகுத்தி பல கணக்குகளை இலகுவாக முகாமைப்படுத்தியும் பல்வேறு வங்கியியல் கொடுக்கல் வாங்கல்களை நிறைவேற்றியும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் வங்கியியலிடுவது ஓர் மெய்யான சாத்தியப்பாடாகும்.

*பீபள்ஸ் வீசா சர்வதேச பற்று அட்டை*
இந்த பற்று அட்டையானது பாதுகாப்பான நிதியியல் சேவைகளின் மேலதிக நம்பிக்கையுடன் எண்ணற்ற சௌகரியங்களை சேர்ப்பதுடன் உலகளாவிய ரீதியில் 30 மில்லியன் வர்தகக் கடைகள் மற்றும் 2 மில்லியன் தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களை பயன்படுத்தக் கூடியதாயுள்ளது.

*பீபள்ஸ் அலைப்பேசி வங்கியியல்*
பல்திறனுடைய கைத்தொலைப்பேசியானது 24x365 வங்கியியல் சூழலில் எமது வாடிக்கையாளர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க சௌகரியங்களை ஒரு தொடலுடன் விரல் நுனியில் வழங்குகின்றது. கணக்குகளது நிலுவைகளை சரிபார்த்தல், கொடுக்கல் வாங்கல் வரலாறுகள், சொந்த கணக்குகளிடையே, மக்கள் வங்கியின் மூன்றாம் தரப்பினர் கணக்குகள் மற்றும் இலங்கையிலுள்ள ஏனைய வங்கிகளின் மூன்றாம் தரப்பினரிடையே நிதி மாற்றல்கள், கடன் அட்டை மற்றும் நுகர்வுப் பயன் பட்டியல்களது கொடுப்பனவுகள், காசோலைப் புத்தகங்கள் மற்றும் வங்கிக் கூற்றுக்களுக்கு கட்டளை பிறப்பித்தல், அடகு வைக்கப்பட்ட பொருட்களது விபரங்களை விசாரித்தல், வட்டி வீதங்கள் மற்றும் நாணயமாற்று விகிதங்களை விசாரித்தல் மற்றும் அருகாமையிலுள்ள வங்கிக் கிளைகள் மற்றும் த.வ.இ. பற்றி விசாரித்தல் என்பன எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சௌகரியங்களாகும்.

*பீபள்ஸ் ரிலக்ஸ் - உங்களது பிரகாசமான எதிர்காலம் இன்று ஆரம்பிக்கின்றது*
பீபள்ஸ் ரிலக்ஸ் சேமிப்புத் திட்டமானது இளைப்பாறுதலின் பின்னர் ஓர் நிலையான மாதாந்த வருமானம் மற்றும் நிதியியல் சுயாதீனம் என்பவற்றை வழங்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட ஓய்வுபெறல் நலக் கணக்காகும். இக்கணக்கினை ரூபா 500/- ஆரம்ப வைப்புடன் திறக்க முடிவதுடன் வாடிக்கையாளர் காலந்தோறும் ஓர் உடன்பட்ட நிலையான தொகையினை, ஓர் ஒட்டு மொத்த தொகையினை, அவர் மேலதிக வருமானத்தை உழைக்கும்போது ஏதாவது தொகையினை வைப்பிலிடலாம்.

*பீபள்ஸ் நிரோகி*
பீபள்ஸ் நிரோகி" மருத்துவ நலன் திட்டமானது அனைத்து மக்கள் வங்கி வாடிக்கையாளர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. இங்கு அனைத்து வாடிக்கையாளர்களும் லங்கா ஹொஸ்பிட்டலில் தனித்துவமான பலதரப்பட்ட மருத்துவ நலன்களை அனுபவிக்கலாம். இந்த விசேட மருத்துவ நலன்களை லங்கா ஹொஸ்பிட்டலில் மருத்துவ கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது பீபள்ஸ் வீசா கடன் அட்டை அல்லது பீபள்ஸ் வீசா பற்று அட்டைகளூடாக பெற்றுக்கொள்ளலாம்.

*சுவர்ண பிரதீப*
சுவர்ண பிரதீப, நம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கையுடன் பாதுகாப்பாக உங்களது தங்க ஆபரணங்களை வைத்து உங்களது ஏதேனும் அவசர பணத் தேவைகளுக்கு கடன் வசதிகளை வழங்குகின்றது.

வாடிக்கையாளர்களது தனிப்பட்ட நிதியியல் தேவைப்பாடுகளை சந்திப்பதற்காக புத்தாக்கமான தனிப்பட்ட கடன் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதற்கும் மேலாக, மக்கள் தொகையியல், சமுதாயப் படிநிலைகள், வருமான மட்டங்கள் மற்றும் நடைமுறை வாழ்க்கைமுறைகள் ஆகியவற்றில் மாற்றமடையும் கருத்தியலுக்கு பொருத்தமான விதத்தில் நடைமுறையிலுள்ள திட்டங்களுக்கு நாம் நெகிழ்ச்சியினை உருவாக்கினோம்.

குருசெத. சுவ செவன, ஜய நிவச, பஹாசு, பீபள்ஸ் விஸ்டம், ப்ரொவெஷனல், பீபள்ஸ் ஓட்டோ, தெய விரு பிரணாம, GMOA/GDSA மற்றும் பீபள்ஸ் கனவு இல்லம் என்பன நெகிழ்வுத்தன்மை மற்றும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களில் எம்மால் வழங்கப்படும் சில தனிப்பட்ட கடன் திட்டங்களாகும். ஓர் அரச வங்கியென்ற வகையில், எமது வாடிக்கையாளார்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதனூடாக எமது சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இந்த கருவிகள் எம்மை இயலுமையாக்கியுள்ளன.

*பீபள்ஸ் விஸ்டம் கடன் திட்டங்கள்*
இளம் சமுதாயத்தினர் அனைத்து வரையறைகளையும் கடந்துசெல்வதற்கு உதவுவதற்காக மக்கள் வங்கியானது தற்போது நெகிழ்வுத்தன்மையுள்ள கல்விக் கடன்களை வழங்குகின்றது.

கல்வி நோக்கான கடன் திட்டமானது "பீபள்ஸ் விஸ்டம் கடன் திட்டம்" என அடையாளக் குறியிடப்பட்டுள்ளது. "பீபள்ஸ் விஸ்டம் கடன் திட்டம்" தற்போது மிகவும் நெகிழ்ச்சியான தன்மை மற்றும் தளர்த்தப்பட்ட நிபந்தனைகளைப் கொண்டுள்ளது. இந்தக் கடன் திட்டத்தின் கீழ் யாரேனும் நபர் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கல்வி நோக்கங்களுக்காக ஓர் கடனுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி வேலையற்றவர் / போதாமையான மீள்செலுத்தல் திறன் / கல்விக்காக வெளிநாடு செல்வதாயின் கடன்களை பெற்றோருடன்/ வாழ்க்கைத்துணையுடன் / நெருங்கிய உறவினருடன் கூட்டாக விண்ணப்பிக்கலாம்.

விஸ்டம் கடன் திட்டமானது பாடசாலையை விட்டு விலகியோர் (ஓர் கூட்டு விண்ணப்பதாரியுடன்) , ஓர் பட்டப்படிப்பு / டிப்ளோமா அல்லது தொழில்சார் /தொழிற்கல்வித் தகமை மற்றும் உயர் கல்வியினை தொடரும் தொழில்புரிபவர்களுக்கு திறந்திருக்கின்றது. கடன் தொகையானது நிறுவன /பல்கலைக்கழக கட்டணங்கள் மற்றும் வாழ்க்கை / மருத்துவ / கல்விச் செலவுகள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

ஆகக்கூடிய கடன் தொகையானது ரூபா 10 மில்லியனாவதுடன் ஆகக்கூடிய மீள்செலுத்தல் காலமானது 7 வருடங்களாகும். வாடிக்கையாளர்களது தேவைகளுக்கு பொருத்தமான நெகிழ்ச்சியான மீள்செலுத்தல் முறைகள் காணப்படுகின்றன. கடனினை தனிப்பட்ட

# பெறுமதி உருவாக்கம்

நிறுவன கட்டமைப்பு மற்றம் துறைசார் செயற்திறன்

உத்தரவாதம் அல்லது ஆதன அடைமானத்தை பிணையாக வைத்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

*குருசெத கடன் திட்டம்*

குருசெத கடன் திட்டமானது விசேடமாக பின்வரும் நபர்களுக்காக வடிவமைக்கப்பட்டு 1995 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அரசாங்கப் பாடசாலைகள் மற்றும் அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்கள், அரசாங்கத்தினால் கொடுப்பனவு செய்யப்படும் பிரிவேன ஆசிரியர்கள் மற்றும் அங்கீகாரமளிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் என்பவர்களுக்காகும்.

ஆசிரியர்களுக்கான குருசெத கடன் திட்டமானது வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிலத்தை கொள்வனவு செய்வதற்கும், வீட்டினை நிர்மாணிப்பதற்கு / கொள்வனவு செய்வதற்கு, வீட்டுத் திருத்தவேலைகள் / புதுப்பித்தல் / வீட்டினை விரிவாக்குதல் அல்லது ஏனைய நோக்கங்களுக்காக திறந்துள்ளது.

நாட்டின் பாடசாலை ஆசிரியர்களிடையே மிகவும் பிரபல்யமடைந்த கடன் திட்டமாக குருசெத கடன் திட்டம் காணப்படுகின்றது.

*தொழில் நிபுணர்களுக்கான கடன் திட்டம்*

அரசாங்கத்துறை, முப்படைகள் மற்றும் பொலீஸ் ஆகியவற்றின் உயர் தரத்திலான அதிகாரிகள் மற்றும் ஒப்பீட்டளவில் உயர்ந்த சம்பளம் / வருமானத்தினை பெறும் தனியார் துறை ஆளணியினர்களுக்கு அவர்களது தேவைகளை நிவர்த்திசெய்வதற்காக இந்த கடன் திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த தொழில் நிபுணர்களுக்கான கடன் திட்டத்தின் கீழ் உயர் தரத்திலான அதிகாரிகள் மோட்டார் வாகனங்களை கொள்வனவு அல்லது இறக்குமதி செய்வதற்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கங்களுக்காக விண்ணப்பிக்கலாம்.

*ஜய நிவச வீட்டுக் கடன் திட்டம்*

வாடிக்கையாளர்களது தேவைகளுக்கு பொருத்தமான நெகிழ்ச்சியுடைய கடன் ஏற்பாடுகள் மற்றும் போட்டித்தன்மையான வட்டி வீதங்களை வழங்குவதன் மூலம் மிகவும் சௌகரியமான விதத்தில் கனவு இல்லத்தை கட்டியெழுப்புவதற்கு இந்த "ஜய நிவச" கடன் திட்டம் உதவுகின்றது. நிலம் / வீடு கொள்வனவு செய்வதற்கு, வீட்டினை கட்டுவதற்கு, வீட்டினை புதுப்பிப்பதற்கு அல்லது விரிவாக்குவதற்கு கடனைப் பெற்றுக்கொள்ளலாம். இக்கடன் திட்டமானது ஆதனத்தின் பெறுமதியில் 75% க்கு கடனை வழங்குகின்றது.

இந்தக் கடன் திட்டத்தின் கீழ் அரசாங்க மற்றும் தனியார் துறை பணியாளர்கள், தொழில் நிபுணர்கள், வெளிநாடுகளில் தொழில்புரிவோர் மற்றும் பிரசித்தி பெற்ற வணிகர்கள் வீட்டுக் கடன்களை பெறுவதற்கு உரிமையுடையவர்களாவர்.

*சுவசெவன கடன் திட்டம்*

சுவசெவன கடன் திட்டமானது விசேடமாக அரசாங்க மருத்துவ துறை பணியாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒன்றாகும். இத்திட்டமானது மேற்கத்தைய மற்றும் ஆயுர்வேத துறைகளிலுள்ள வைத்தியர்களிலிருந்து சிறிய தரத்திலுள்ளவர்கள் வரையான ஒவ்வொரு தரத்திலுள்ளவர்களுக்கும் பொருத்தமான விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

*பீபள்ஸ் தானூர்திக் கடன் திட்டம்*

பீபள்ஸ் தானூர்திக் கடன் திட்டமானது தனிப்பட்ட தேவைகளுக்காக மற்றும் வியாபார தேவைகளுக்காக வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக கடன் வசதிகளை வழங்குவதற்கு விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. எமது வாடிக்கையாளர்கள் அவர்களது கனவு வாகனத்தினை கொள்வனவு செய்வதனூடாக வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் வணிகங்கள் அவர்களது சொந்த வாகனங்களை வைத்திருப்பதனூடாக வணிகத்திற்கு பெறுமதி சேர்த்தல் போன்ற பல்வேறு தேவைகளுக்கு பொருத்தமானவாறு தனிப்பட்ட விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

*GMOA / GDSA அங்கத்தவர்களுக்கான விசேட கடன் திட்டம்*

GMOA / GDSA கடன் திட்டமானது அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றம் அரசாங்க பல் அறுவை சிகிச்சை அதிகாரிகளது சங்கம் ஆகியவற்றின் அங்கத்தவர்களான நிபுணர்கள் / ஆலோசகர்கள், மருத்துவ அதிகாரிகள், நிர்வாக பணியாளர்கள் ஆகியோருக்கு அவர்களது தனிப்பட்ட தேவைகளுக்கு பொருத்தமான நிதியியல் உதவிகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டது..

*பீபள்ஸ் கனவு இல்லம்*

ஜய நிவச கடனைப் போன்று வெளிநாடுகளிலுள்ள உயர்ந்த வருமான மட்டங்களையுடைய தொழில் நிபுணர்களது வீட்டுத் தேவைகளை சந்திப்பதற்காக வடிவமைக்கப்பட்ட வீட்டுக் கடன் திட்டமாகும்.

## திறைசேரி செயற்பாடுகள்

*வர்த்தகம்*

ரூபாயினது கணிசமான பெறுமதியிறக்கம் மற்றும் உயர்வடையும் வட்டி வீதங்களையுடைய ஓர் தளம்பலான வர்த்தக சூழலுக்கு வங்கி முகங்கொடுத்தது. அமெரிக்க மீளெழுச்சிக்கான திடமான சைகைகளுடன் இலங்கையின் பங்குச் சந்தையானது ஓர் மூலதன வெளியேற்றச் சூழல் மற்றும் சந்தை வீழ்ச்சியினை அனுபவித்தது. இதற்கு மேலும், அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலும் வெளிநாடு முதலீடுகளில் ஓர் தேறிய வெளிப்பாய்ச்சல் காணப்பட்டது. சீன யூவான் மற்றும் ஏனைய நாணயங்களிலான பெறுமதி இறக்கம் உலகளாவிய அந்நிய செலாவணிச் சந்தைகளில் எதிரொலித்ததுடன் வருடத்தின் இறுதியில் காணப்பட்ட இலங்கை ரூபாவின் தடையற்ற மிதவையானது இலங்கை ரூபாவில் ஓர் சாதனையான வீழ்ச்சியினை ஏற்படுத்தியது.

இவ்வருடத்தில் அனுபவித்த இந்த நாணயமாற்று விகிதத் தளம்பலின் பின்னணியில், திறைசேரி அலகானது இலக்குகளை விஞ்சியதுடன் 2014 உடன் ஒப்பிடும்போது வெளிநாட்டு நாணய பரிமாற்று வருமானமானது கணிசமான அளவு அதிகரித்தது. மொத்த வர்த்தக வருமானமும் அதிகரித்தது. இதன் நிமித்தம் வங்கியின் வரிக்கு முந்திய இலாபத்திற்கு ஓர் கணிசமான பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

2014 இலும் 2015 இன் ஆரம்பத்திலும் நாடு வரலாற்று ரீதியாக குறைவான வட்டி வீதங்களை அனுபவித்ததுடன், சந்தையின் உணர்ச்சிப் பிணைப்பானது வருடத்தின் இறுதிப் பாகத்தில் உயர்வடையும் வட்டி வீதத்தை நோக்கி சாய்ந்தது. மக்கள் வங்கியானது அதன் அரசாங்கப் பிணையங்கள் தேக்கத்தின் காலவரையறையினை குறைப்பதனூடாக மிகவும் அவதானமான முதலீட்டு மூலோபாயத்தினை கடைப்பிடித்தது. இந்த மூலோபாயமானது உயர்ந்த விளைவுகளில்

முதிர்வு வருமானங்களை பதிவுசெய்வதற்கு எம்மை இயலுமையாக்கியது. இந்த மூலோபாயமானது வட்டி வீத கட்டமைப்பில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக எழும் பெறாத நட்டங்களுக்கு எதிராக வங்கியினை பாதுகாப்பதற்கு உதவியது. சுறுசுறுப்பான வர்த்தகத்திற்கான இந்த தடங்கல்களுக்கு மத்தியில், 2015 ஓர் கணிசமான தொகையினை மூலதன இலாபமாக பதிவுசெய்வதில் வங்கியானது வெற்றியடைந்தது.

## முதலீட்டு வங்கியியல்

மக்கள் வங்கியின் முதலீட்டு வங்கியியல் அலகானது நாட்டிலுள்ள முதல் ஐந்து ஸ்தானத்திலுள்ள முதலீட்டு வங்கியியல் சேவைகள் வழங்குனர்களில் ஒன்றாக நிலைநிறுத்தி 2015 இனை நிறைவுசெய்தது. இந்த அலகானது மூலதன மற்றும் கடன் சந்தை நிபுணத்துவத்திற்கான நிறுவன மற்றும் கூட்டாண்மை தேவைகளை நிறைவேற்றுவதற்காக 2012 இல் நிறுவப்பட்டது. நான்கு ஆண்டுக் காலப்பகுதியில் கட்டமைக்கப்பட்ட வழங்கல்களின் பெறுமதியானது ரூபா 7 பில்லியனிலிருந்து ரூபா 13 பில்லியனாக வளர்ச்சியடைந்தது. 2015 இல் இந்த அலகானது இரண்டு முக்கிய கடன் ஆரம்ப பொது வழங்கல்களை முகாமைப்படுத்தியது - செப்டம்பர் 2015 இல் ரூபா 4 பில்லியன் பேன் ஏசியா வங்கி தொகுதிக்கடன் வழங்கல் மற்றும் நவம்பர் 2015 இல் ரூபா 6 பில்லியன் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் தொகுதிக் கடன் வழங்கல் ஆகியன. இந்த அலகானது அதன் முதலாவது உரித்துவ ஆரம்ப பொது வழங்கலாக பீபள்ஸ் இன்சூரன்ஸ் லிமிட்டட்டின் ரூபா 750 மில்லியன் உரித்துவ ஆரம்ப பொது வழங்கலினையும் முகாமைப்படுத்தியது.

### *முதன்மை வர்த்தக அலகு*

வங்கியின் முதன்மை வர்த்தக அலகானது (மு.வ.அ.) திறைசேரி அலகின் ஓர் அங்கமாக கடமையாற்றினாலும் ஓர் தனிப்பட்ட நிறுவனமாக கருதப்படுகின்றது. மு.வ.அ. ஆனது 2015 இல் ஓர் கணிசமான தொகையினை இலாபமாக பதிவுசெய்து முதன்மை மற்றும் இரண்டாந்தர சந்தையில் விறுவிறுப்பாக பங்குபற்றுவதன் மூலம் மூலதன இலாபங்களை உருவாக்கும் பொறுப்பினை நிறைவேற்றியது. அத்துடன் அரசாங்கப் பிணையங்களில் அதன் மூலோபாயமான முதலீட்டு தீர்மானங்களூடாக கணிசமான அளவு வட்டியினையும் உழைத்தது. இது வங்கியின் அரசாங்கப் பிணையங்கள் தேக்கத்தினை முகாமைப்படுத்துவதுடன் வட்டி வருமானமாக கணிசமான அளவு வருமானத்தை பெற்றுள்ளது.

## சர்வதேச வங்கியியல்

### *வெளிநாட்டு வாடிக்கையாளர் அலகு*

வங்கியின் வெளிநாட்டு வாடிக்கையாளர் அலகானது, பரிமாற்றக கம்பனி பங்குடைமைகள் மற்றும் வங்கியின் பிரதிநிதிகள் வலையமைப்பினூடாக தொடர்ச்சியாக பண உள்வருகைகளை ஊக்குவித்தது. வெஸ்டர்ன் யூனியர் பண மாற்றல்களுக்கு வங்கியும் ஓர் பிரதான வங்கியாளராகும். 2015 இல் இலங்கையின் மிதமான பண உள்வருகைகளின் மத்தியிலும் (11 மாதங்களுக்கு 0.8% வளர்ச்சி) மக்கள் வங்கியானது பிரதானமாக அதன் திடமான பிரசன்னம் மற்றும் பங்குடைமை வலையமைப்புடன் இவ்வருடத்தில் 8.55% வளர்ச்சியினை பதிவு செய்யக்கூடியதாயிருந்தது.

உலகளாவிய ரீதியில் வங்கியானது 75 க்கும் அதிகமான பரிமாற்றக கம்பனிகளுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் சில எமது சொந்த பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. எமது பண உள்வருகைகளில் பெரும்பகுதி மத்திய கிழக்கிலிருந்து வருகின்றது. வருடத்தில் பண உள்வருகைகள் வங்கியின் தரகு வருமானத்தில் அண்ணளவாக 25% பங்களிப்பினை வழங்கின.

கூட்டாண்மை வங்கியியல் பிரிவின் வர்த்தக சேவைகள் திணைக்களமானது வங்கியின் பிரதானமான வணிக அலகுகளில் ஒன்றாகும். இத்திணைக்களமானது சிறந்த சேவைகளை வழங்குவதற்காக எமது மிகவும் அனுபவம் வாய்ந்த பணியாளர்களினால் செயற்படுகின்றது. 900 தொடர்பு வங்கியியல் உறவுகளின் மூலம் நாம் 103 நாடுகளுக்கும் மேலாக சேவையாற்றுகின்றோம். எமது வர்த்தக வாடிக்கையாளர்களது சுங்கத் தீர்வை / வரிகள் மற்றும் துறைமுக கட்டணங்கள் ஆகியவற்றுக்கு நிகழ்நிலை கொடுப்பனவின் அறிமுகமானது எமது புதிய சேர்க்கையாகும். 2013 இலிருந்து தரமான முகாமைத்துவ முறைக்காக எமக்கு ISO-9001 2008 தரப்படுத்தல் சான்றிதழளிக்கப்பட்டது.

கவனத்திலெடுக்கப்படும் காலப்பகுதியில் பயனுறுதிமிக்க மற்றும் தொடர்ச்சியான சேவையினை உறுதிப்படுத்துவதற்காக நாம் எமது கட்டண கட்டமைப்பினை போட்டித்தன்மையுடன் மீளாய்வு செய்து செயல்முறையினை மீள்கட்டியெழுப்பினோம்.

மத்திய கிழக்கு சிக்கல்கள், பெற்றோலிய தொடர்பு பொருட்களின் விலையில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி மற்றும் ரூபாவிலான பாரமான அழுத்தம் ஆகியவற்றின் மத்தியில் எமது உள்ளூர் வங்கியியல் அலகு (உ.வ.அ.) மற்றும் வெளிநாட்டு வங்கியியல் அலகுகளின் (வெ.வ.அ.) ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிதியளித்தல்கள் 2015 இல் சிறந்து செயல்பட்டன.

| | உ.வ.அ. | வெ.வ.அ. |
|---|---|---|
| ஏற்றுமதி நிதியளித்தல் | அமெரிக்க டொலர் 306 மில்லியன் | அமெரிக்க டொலர் 281 மில்லியன் |
| இறக்குமதி நிதியளித்தல் | அமெரிக்க டொலர் 1039 மில்லியன் | அமெரிக்க டொலர் 2023 மில்லியன் |

வர்த்தக நிதியளித்தல் வணிகத்தின் செயல்முறைகளில் பலவற்றை தன்னியக்க மயமாக்குவதற்கு புதிய தொழில்நுட்பங்களை அமுல்படுத்தும் செயல்முறையில் உள்ளோம். எமது வாடிக்கையாளர்கள் எமது கிளைக்கு பிரசன்னம் தராமல் அவர்களது வணிக இடங்களிலிருந்துகொண்டே வங்கியுடன் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கான வெட்டுமுனை தொழில்நுட்பமானது எதிர்வரும் காலங்களில் கிடைக்கும். இது நாம் எதிர்காலத்தில் வணிகம் மேற்கொள்ளும் விதத்தினை முற்றிலும் மாற்றியமைக்கும்.

## உலகளாவிய பங்காளிகள்

### ஐரோப்பா

பங்கா நெஷானல் டெல் லவோரோ SpA (BNL) ரோம்
பேங்க் ஒவ் சிலோன், இலண்டன்
பேங்க் ஒவ் சிலோன் பப்ளிக் கம்பனி லிமிட்டட், நிகோசியா
பார்க்ளேஸ் பேங்க் பி.எல்.சி. இலண்டன்
பிஎச்எவ் பேங்க் அக்டியென்கிசெல்சாவ்ட், விராங்வேர்ட் ஏஎம் மெயின்
பிஎன்பி பரிபாஸ் எஸ்ஏ. பரிஸ்
புடாபெஸ்ட் பாங்க் ஆர்டி, புடாபெஸ்ட்
கொமர்ஷ் பேங்க் ஏஜி. விராங்வேர்ட் ஏஎம் மெயின்
கிரடிட் சூயஸ், சுரிச்
செக்கோஸ்லொவென்கா ஒப்சொட்னா பேங்கா ஏஎஸ்
பெரட்டிஸ்லாவா
டன்ஸ்கி பேங்க் ஏஎஸ், கோப்பனேகன்
டொயிஷ் பேங்க் ஏஜி, விராங்வேர்ட் ஏஎம் மெயின்
கொரென்ஸ்கா பேங்கா டிடி, ஜூபில்ஜானா
எச்.எஸ்.பி.சி. பேங்க் பி.எல்.சி. இலண்டன்
ஐஎன்ஜி பேங்க் என்வி, அம்ஸ்டர்டாம்
ஐஎன்ஜி பெல்ஜியம் எஸ்ஏ/என்வி, பிரசல்ஸ்
இன்டெசா சன்போலோ எஸ்பிஏ, மிலானோ
கொமர்ஷினி பேங்க் என்ஏ, பிரகுவே
எம்கேபி பாங்க் இசட்.ஈ.டி. புடாபெஸ்ட
நெஷனல் வெஸ்ட்மினிஸ்டர் பேங்க் பி.எல்.சி. இலண்டன்
நெடிக்சிஸ், பரிஸ்
நோர்டியா பேங்க் ஏபி (பப்ளிக்), ஸ்டொக்ஹோம்
நோர்டியா பேங்க் நோர்ஜ் ஏஎஸ்ஏ, ஒஸ்லோ
ரய்வய்ஷன் பேங்க், வியன்னா
எஸ்.ஈ.பி. பேங்க், டாலின்
எஸ்.ஈ.பி. பேங்க், வில்னியஸ்
ஸ்கன்டிநெவிஸ்கா என்ஸ்கில்டா பேங்கன் ஏபி (பப்ளிக்) ஸ்டொக்ஹோம்
சொசயிட்டி ஜெனரால், பரிஸ்
ஸ்பார்கஸி கோன்போன், கொலோன்
ஸ்வென்ஸ்கா என்டல்ஸ்பேங்கன் ஏபி (பப்ளிக்) ஸ்டொக்ஹோம்
யுபிஏஈ எஸ் பி ஏ, ரோம்
யுபிஏஎவ், பரிஸ்
யுபிஎஸ் ஏஜி, சுரிச்
யுக்ரெக்ஷிம் பேங்க், கிவ்
யுனிகிரடிட் பேங்க் ஒஸ்ட்ரியா ஏஜி, வியன்னா
யுனிகிரடிட் பேங்க், சோவியா
யுனிகிரடிட்டோ இத்தாலியானோ எஸ்பிஏ, மிலான்
ஷக்ரிபெக்கா பேங்க்கா டிடி, ஷக்ரெப்
சர்ச்சர் கென்டொனாலே பேங்க், சுரிச

### வட அமெரிக்கா

பேங்க் ஒவ் மொன்ரியல், மொன்ரியல்
பேங்க் ஒவ் நோவா ஸ்கோசியா, மொன்ரியல்
கனேடியன் இம்பீரியல் பேங்க் ஒவ் கொமர்ஸ், டொரன்டோ
சிட்டி பேங்க் என்ஏ, நியூ யோர்க்
டொயிஷ் பேங்க் ட்ரஸ்ட் கம்பனி அமெரிக்காஸ், நியூ யோர்க்
அபிப் அமெரிக்கன் பேங்க், நியூ யோர்க்
எச் எஸ் பி சி பேங்க் யுஎஸ்ஏ என்ஏ, நியூ யோர்க்
ஜே பி மோர்கன் சேஸ் பேங்க் என்ஏ, நியூ யோர்க்
மஸ்ரெக்பேங்க் பிஎஸ்சி, நியூ யோர்க்
ஸ்டான்ரட் சார்டர்ட் பேங்க், நியூ யோர்க்
வெல்ஸ் வார்கோ பேங்க் என்ஏ, யுஎஸ்ஏ

### தென் அமெரிக்கா

பேங்க்கோ டி சில்லி, சன்தியாகோ
பேங்க்கோ சன்டென்டர் பிரேசில் எஸ்ஏ, சஹோ போலோ
பிபிவிஏ பேங்க்கோ கொன்டினென்ட்டல், லீமா
டொயிஷ் பேங்க், சஹோ போலோ

### ஆபிரிக்கா

ஏபிஎஸ்ஏ பேங்க் லிமிட்டட், ஜொஹனர்ஸ்பேர்க்
பேங்க் மிஸர், கயிரோ
பார்க்லேஸ் பேங்க் ஒவ் கென்யா லிமிட்டட், நயிரோபி
சிட்டி பேங்க் -அபிஜான்
மொரிசியஸ் கொமர்ஸல் பேங்க் லிமிட்டட் - போர்ட் லூயிஸ்
நேஷனல் பேங்க் ஒவ் ஈஜிப்ட், கயிரோ
நெட்பேங்க் லிமிட்டட், ஜொஹனர்ஸ்பேர்க்

### ஆசியா

எக்சிஸ் பேங்க் லிமிட்டட், மும்பாய்
பேங்க் வொர் வொரின் ட்ரேட், ஹனோய்
பேங்க் ஒவ் சிலோன், சென்னை
பேங்க் ஒவ் சைனா, சங்காய்
பேங்க் ஒவ் கொமுயினிகேஷன்ஸ் கொம்பனி லிமிட்டட், சங்காய்
பேங்க் ஒவ் மால்டிவ்ஸ், மாலே
பேங்க் ஒவ் டோக்கியோ மிட்சுபிசி யுஎவ்ஜி லிமிட்டட், டோக்கியோ
சைனா கொன்ஸ்ட்ரக்ஷன் பேங்க், பீஜிங்
சைனா டெவலப்மன்ட் பேங்க், சங்காய்
சிஜஎம்பி பேங்க் லிமிட்டட், கோலாலம்பூர்
டிபிஎஸ் பேங்க். லிமிட்டட், சிங்கப்பூர்
எக்சிம் பேங்க் ஒவ் கொரியா, சியோல்
எக்ஸ்போர்ட் இம்போர்ட் பேங்க் ஒவ் சைனா, பீஜிங்
ஹனா பேங்க், சியோல்
எச் எஸ் பி சி பேங்க், ஹொங்கொங்
ஐ சி ஐ சி ஐ பேங்க், மும்பாய்
இன்டஸ்ரியல் பேங்க் ஒவ் கொரியா, சியோல்
மஸ்ரெக் பேங்க் பிஎஸ்சி, மும்பாய்
எம் சி பி பேங்க் லிமிட்டட், கராச்சி
மிசுஹோ கோப்பரேட் பேங்க் லிமிட்டட், டோக்கியோ
நேபாள் பேங்க் லிமிட்டட், காத்மண்டு
ஓவர்சீஸ் சைனீஸ் பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டட், ஹொங்கொங்
ஓவர்சீஸ் சைனீஸ் பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டட், கோலாலம்பூர்
ஓவர்சீஸ் சைனீஸ் பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டட், சிங்கப்பூர்
பியுபாலி பேங்க் லிமிட்டட், டாக்கா
ரூபாலி பேங்க் லிமிட்டட், டாக்கா
ஸ்டான்டர்ட் சார்ட்டட் பேங்க், கார்ட்டோம்
ஸ்டான்டர்ட் சார்ட்டட் பேங்க் (பாக்கிஷ்தான்) லிமிட்டட், கராச்சி

ஸ்டான்டர்ட் சார்ட்டட் பேங்க், டாக்கா
ஸ்டான்டர்ட் சார்ட்டட் பேங்க், காத்மண்டு
ஸ்டான்டர்ட் சார்ட்டட் பேங்க், டோக்கியோ
ஸ்டேட் பேங்க் ஒவ் இந்தியா, சென்னை
சுமிட்டோமோ மிட்சுயி பேங்கிங் கோப்பரேஷன், டோக்கியோ
யு பி ஏ எவ், சிங்கப்பூர்
வூரி பேங்க், ஹனோய்

### ஓசியானியா

ஏ என் இசட் நெஷனல் பேங்க் லிமிட்டட், வெலிங்டன்
அவுஸ்திரேலியா அன்ட் நியுசிலாந்து பேங்கிங் குரூப் லிமிட்டட், மெல்பேர்ன்
நெஷனல் அவுஸ்திரேலியா பேங்க் லிமிட்டட், மெல்பேர்ன்
வெஸ்ட்பெக் பேங்க் பிஎன்ஜி லிமிட்டட், போர்ட் மோர்ஸ்பி
வெஸ்ட்பெக் பேங்கிங் கோபரேஷன், சுவா

### மத்திய கிழக்கு

அஹிலி யுனய்டட் பேங்க், குவைட் சிட்டி
அல் ராஜி பேங்கிங் அன்ட் இன்வெஸ்ட்மென்ட் கோர்ப் - ரியாட்
பேங்க் டோவார், ருவி
பேங்க் ஒவ் பஹ்ரேன் அன்ட் குவைட், மனாமா
பேங்க் மஸ்கட் எஸ் ஏ ஓ ஜி, ரூவி
பைபிலோஸ் பேங்க் எஸ் ஏ எல், பெய்ரூட்
கொமர்ஷல் பேங்க் ஒவ் டுபாய் பிஎஸ்சி, டுபாய்
கொமர்ஷல் பேங்க் ஒவ் கட்டார், டோஹா
டோஹா பேங்க், டோஹா
எமிரேட்ஸ் என்பிடி பேங்க் பிஜேஎஸ்சி, டுபாய்
ஜோர்டன் இஸ்லாமிக் பேங்க், அம்மான்
மஸ்ரெக் பேங்க் பிஎஸ்சி, டுபாய்
நேஷனல் பேங்க் ஒவ் அபுதாபி, அபுதாபி
நேஷனல் பேங்க் ஒவ் ஓமான் எஸ்ஏஓஜி, மஸ்கட்
யு பி ஏ ஈ எஸ்.பி.ஏ., டுபாய்
யுனய்டட் பேங்க் லிமிட்டட், டுபாய்

# பெறுமதி உருவாக்கம்

## எமது துணைக்கம்பனிகள்

**பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி எல் சி**

இலங்கையின் பாரிய மற்றும் உயர் தரப்படுத்தப்பட்ட வங்கியல்லாத நிதியியல் நிறுவனமான பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி எல் சி (பி.எல்.சி.) 1995 ஆகஸ்ட் 22ஆம் திகதி மக்கள் வங்கியின் முழுமையான உரித்துடைமையுடைய துணைக்கம்பனியாகவும் ஓர் தனியார் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகவும் கூட்டிணைக்கப்பட்டது. இலங்கையின் வரலாற்றில் இரண்டாவது மிகப் பெரிய ஆரம்ப பொது வழங்கலின் நிமித்தம் கம்பனியானது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பிரதான பலகையில் நவம்பர் 2011 இல் பட்டியலிடப்பட்டது. பி.எல்.சி. நிதியியல் வணிக உரிமத்தினை 2012 இல் பெற்று ஓர் குத்தகை நிறுவனத்திலிருந்து அதன் நிலைமையை ஓர் நிதியியல் நிறுவனமாக மாற்றியமைத்தது. இது நிதியியல் அரங்கில் கம்பனியின் பிரசன்னத்தை வலுப்படுத்துவதற்கான அதிக வாய்ப்புக்களை உண்டாக்கியது. 2014 டிசம்பரில் கம்பனியானது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் எஸ் அன்ட் பி ஸ்ரீலங்கா 20 சுட்டியினுள் உள்ளடக்கப்பட்டது. இந்தச் சுட்டியானது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து கம்பனிகளிலிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 20 அதிகூடிய புளூ சிப் கம்பனிகளை உள்ளடக்கிய சுட்டியாகும்.

குத்தகைத் துறையில் 13 வருடங்கள் அடுத்துடுத்து சந்தை முதல்வராக தொடர்ந்தும் காணப்பட்ட கம்பனியானது தற்போது அதன் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களை நாடுபூராவும் 92 கிளைகளினூடாகவும் 110 ஜன்னல் காரியாலங்களினூடாகவும் எட்டுகின்றது. பி.எல்.சி. இன் சிறகுகளுக்குள் நிறுவப்பட்ட ஐந்து துணைக்கம்பனிகளூடாக செயற்பாடானது பின்வருமாறு பன்முகப்படுத்தப்பட்டது. பொதுக் காப்புறுதி, நுண்கடன் நிதியளித்தல், ஆதன அபிவிருத்தி மற்றும் பன்னூர்த்தி முகாமைத்துவ சேவைகள் என்பனவாகும். இந்த ஐந்து துணைக்கம்பனிகளும் பின்வருவனவாகும்:- பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி, பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட், பீபள்ஸ் லீசிங் பிரொபர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட், பீபள்ஸ் லீசிங் ஹவ்லொக் பிரொபர்ட்டீஸ் லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் மைக்ரோவைனான்ஸ் லிமிட்டட் என்பனவாகும். இவை கம்பனியின் கூட்டாண்மை செயல்நோக்கிற்கு துணைபுரிவதற்கு நன்கு பொருத்தமானவையாகும். துணைக்கம்பனி வலையமைப்பானது குழுமத்திற்கு சிறப்பான கூட்டுவிளைவினை கிடைக்கக்கூடியதாய் நன்கு பின்னிப்பிணையப்பட்டுள்ளது.

பீபள்ஸ் லீசிங் குழுமமானது 2015 ஆம் ஆண்டில் ரூபா 6,820 மில்லியனை வரிக்கு முந்திய இலாபமாகவும் ரூபா 4,691 மில்லியனை வரிக்குப் பிந்திய இலாபமாகவும் ஈட்டி ஓர் மனதில் பதியத்தக்க செயற்திறனை பதிவு செய்தது. 2014 இல் பதிவு செய்த வரிக்கு முந்திய இலாபம் மற்றும் வரிக்கு பிந்திய இலாபம் என்பவற்றுக்கெதிராக இவ்வருட விளைவானது முறையே 18% மற்றும் 14% வளர்ச்சியினை காட்டியது. இவ்வருடத்தில் இலங்கை மத்திய வங்கியினால் பராமரிக்கப்பட்ட குறைவான வட்டி வீதத்தின் பயனாக குழுவானது 2014 உடன் ஒப்பிடும்போது வட்டி வருமானத்தில் ஓர் வீழ்ச்சியினை அனுபவித்தது. எவ்வாறாயினும், கடன் பெறும் வளங்களது பயனுறுதிமிக்க முகாமைத்துவத்தின் மூலம் குழுவானது அதன் நிகர வட்டி பரப்பினை பராமரித்து 2014 உடன் ஒப்பிடும்போது 2015 இல் தேறிய வட்டி வருமானம் 8% உயர்வடைந்து ரூபா 10,548 மில்லியனை எட்டியது. மேம்படுத்தப்பட்ட மீளப்பெறல் முயற்சிகள் கடன் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான வலுக்குன்றல் கட்டணங்களை முன்னைய ஆண்டில் பதிவுசெய்த தொகையுடன் ஒப்பிடும்போது 53% ஆல் கட்டுப்படுத்தியதுடன் இது குழுமத்தின் தேறிய செயற்பாட்டு வருமானத்தில் 9% வளர்ச்சிக்கு சாத்தியமான பங்களிப்பை வழங்கியது.

குழுமத்தின் மொத்தச் சொத்துக்கள் 31 டிசம்பர் 2014 இல் காணப்பட்ட ரூபா 118,987 மில்லியனிலிருந்து 31 டிசம்பர் 2015 இல் ரூபா 129,194 மில்லியனாக அதிகரித்து 9% வளர்ச்சியினை பிரதிபலித்தது. கம்பனியின் மொத்த சொத்துக்களும் ரூபா 121,559 இனை எட்டி ஓர் ஆரோக்கியமான நிதியியல் நிலைமையினை பிரதிபலித்ததுடன் மொத்த சொத்துக்களில் 88% பங்களிப்பினை செலுத்தும் கடன்கள் மற்றும் வருமதிகள் 31 டிசம்பர் 2015 இல் ரூபா 107,424 மில்லியனை எட்டியது.

**பீபள்ஸ் ட்ரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்**

மக்கள் வங்கியின் முழுமையான உரித்துடைமையையுடைய துணைக்கம்பனியான பீபள்ஸ் ட்ரவல்ஸ் 2015 ஆம் ஆண்டில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 10.8 மில்லியனை பதிவு செய்ததுடன் இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 7% வளர்ச்சியாகும். வரிக்குப் பிந்திய இலாபமானது 11% வளர்ச்சியினை காண்பிக்கின்றது.

கம்பனியானது தொடர்ந்தும் அதன் அளவு மற்றும் பன்முகத்தன்மையிலிருந்து பயனடைகின்றது. பீபள்ஸ் ட்ரவல்ஸினது சிற்றளவு, கூட்டாண்மை மற்றும் ஓய்வுநேர பிரயாண வணிகம் என்பன தற்போது அதன் பாரிய வணிகமாகக் காணப்படுகின்றது. இது கம்பனி தனியாக ஒரு பிரயாண துறையினை மாத்திரம் நம்பியிருக்கவில்லை என்பதனை விளக்குகின்றது.

அனைத்து துறைகளும் 2015 இல் வளர்ச்சியடைந்தாலும் நாம் சந்தையில் எமது நிலையினை ஓர் நம்பகரமான பிரயாண முகாமையாளராக ஒன்று திரட்டியதனால் கூட்டாண்மை மற்றும் ஓய்வு வளர்ச்சியானது திடமாகக் காணப்பட்டது.

**பீபள்ஸ் மெர்ச்சன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.**

2015 ஆம் நிதியாண்டில் பீபள்ஸ் மெர்ச்சன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. இணை நிறுவனத்திலிருந்து அதன் நிலையினை துணைநிறுவனமாக மாற்றியது. இது மக்கள் வங்கி, கம்பனியின் 50.2% கட்டுப்பாட்டு நலனை கையகப்படுத்தியும் மக்கள் வங்கி மற்றும் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. (மக்கள் வங்கியின் துணைக் கம்பனி) கூட்டாக அதன் 87.21% சாதாரண பங்குகளை கையகப்படுத்தியதனாலும் ஏற்பட்டது. இதற்கமைய மக்கள் வங்கி கம்பனியின் தாய் நிறுவனமாகவும் இறுதிக் கட்டுப்பாட்டு தரப்பினராகவும் காணப்படுகின்றது.

31 டிசம்பர் 2015 இல் நிறைவடைந்த நிதியாண்டில் பீபள்ஸ் மெர்ச்சன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. வரிக்கு பிந்திய நட்டமாக ரூபா 297.1 மில்லியனை பதிவுசெய்தது. பீபள்ஸ் மெர்ச்சன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. 2015 இல் தேறிய வட்டி வருமானமாக ரூபா 151.2 மில்லியனை பதிவு செய்தது. இது கம்பனி ஆகஸ்ட் 2015 வரைக்குமான ஒரு வருட காலப்பகுதியில் வணிகங்களை கைப்பற்றும்போது ஏற்பட்டது. பீபள்ஸ் மெர்ச்சன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. அதன் முகாமைத்துவ முகவரான பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. இன் வழிகாட்டலின் கீழ் வணிகத்தினை செயற்படுத்துகின்றது.

31 டிசம்பர் 2015 இல் குழுமத்தின் சொத்துக்கள் ரூபா 3,660 மில்லியனை பதிவு செய்தது. கம்பனியின் நிதி நிலைமையின் மொத்த சொத்துக்களில் 46% இனை கடன்கள் மற்றும் வருமதிகள் பங்களிப்பு செய்ததுடன் இது ரூபா 1,720 மில்லியனாகக் காணப்பட்டது.

# எமது மூலதனத்தை முகாமைப்படுத்தல்

## நிதியியல் மூலதனம்

### நிதியியல் மீளாய்வு

2015 இல் வங்கியினது எதிர்கால வளர்ச்சிக்காக நாம் பல மூலோபாய முக்கியமான முதலீடுகளை பொறுப்பேற்றோம். இவற்றுள் தகவல் தொழில்நுட்பத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடானது வங்கியின் எதிர்கால வளர்ச்சிக்கும் சந்தை ஊடுருவலுக்கும் மிகவும் முக்கியமானதாகும்.

2015 நிதியாண்டானது வங்கிக்கு இன்னுமோர் வெற்றிகரமான ஆண்டாகும். வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 19.5 பில்லியனை பெற்று சாதனை முறியடிக்கப்பட்டது. இது முன்னைய வருடத்தின் வரிக்கு முந்திய இலாபத்துடன் ஒப்பிடும்போது 13.3% சிறப்பாக காணப்பட்டது. வங்கியின் ஐந்தொகையானது வருடத்தின் இறுதியில் ரூபா 1.2 டிரில்லியனை எட்டியதுடன் இது முன்னைய ஆண்டிலிருந்து 14.6% முன்னேற்றத்தைக் குறிப்பிடுகின்றது.

சவால் மிக்க சந்தை நிலைமைகளின் மத்தியிலும் வங்கியின் வருமானமானது, பிரதானமாக ஆரோக்கியமான தேறிய வட்டி வருமானத்தின் காரணமாக, முன்னைய ஆண்டிலும் பார்க்க உயர்வாகக் காணப்பட்டது. 2015 இல் செயற்பாட்டு செலவினங்களை எம்மால் கட்டுப்படுத்தக்கூடியதாயிருந்தது, ஆனால் பணியாளர்களது செலவினம் அதிகரிப்பினை காட்டியது. பணியாளர் செலவின அதிகரிப்பிற்கு பிரதான காரணியாக காணப்பட்டது 2015 இல் ஏற்பட்ட கூட்டு ஒப்பந்தமாகும்.

முக்கியமான நிதியியல் சிறப்பம்சங்கள்:

- 2015 இல் வரிக்கு முந்திய இலாபம் ரூபா 19.5 பில்லியன், 2014 க்கு எதிராக ரூபா 2.3 பில்லியன் உயர்வடைவு
- 2015 இல் வரிக்கு பிந்திய இலாபம் ரூபா 12.6 பில்லியன்
- 2015 இல் தேறிய செயற்பாட்டு வருமானம் ரூபா 51.0 பில்லியன், 2014 க்கு எதிராக ரூபா 7.7 பில்லியன் உயர்வடைவு
- 2015 இல் தேறிய வட்டி வருமானம் ரூபா 43.7 பில்லியனுக்கு அதிகரித்தது, 2014 க்கு எதிராக ரூபா 13.6 பில்லியன் உயர்வடைவு
- 2015 இல் மொத்த செயற்பாட்டு செலவினம் (ஏயுவு உள்ளடங்களாக) ரூபா 31.5 பில்லியனுக்கு அதிகரித்தது, 2014 க்கு எதிராக ரூபா 5.4 பில்லியன் உயர்வடைவு

கிரய /வருமான விகிதம் 57.5%, 2014 இல் காணப்பட்ட 62.3% இலிருந்து வீழ்ச்சி
நிகர வட்டி விளிம்பு 4.0%, 2014 இல் காணப்பட்ட 3.1% இலிருந்து முன்னேற்றம்
நிதியளித்தலற்ற வருமான சதவீதம் 20.2%, 2014 இல் காணப்பட்ட 28.1% இலிருந்து வீழ்ச்சி

முக்கிய வணிகங்களில் திடமான செயற்திறன், சிறப்பான மீட்பு முயற்சிகளினால் துணையளிக்கப்பட்ட குறைவான வலுக்குன்றல் கிரயங்கள் என்பனவே வரிக்கு முந்திய இலாபத்திலான கணிசமான வளர்ச்சிக்கு காரணியாகக் காணப்பட்டன.

*ஓர் பார்ய ஐந்தொகை*

மக்கள் வங்கியானது அதன் ஐந்தொகை 2014 இல் காணப்பட்ட ரூபா 1 ட்ரிலியனிலிருந்து ரூபா 1.2 ட்ரிலியனை எட்டி 14.6% வளர்ச்சியினை பிரதிபலித்து நிதியாண்டினை நிறைவு செய்தது. இந்த வளர்ச்சியானது பிரதானமாக ஏனைய வாடிக்கையாளர்களுக்கான தேறிய கடன்கள் மற்றும் வருமதிகளினால் உந்தப்பட்டது. இது வைப்புகளில் கணிசமான வளர்ச்சியின் பின்னணியில் வருடத்திலிருந்து வருடம் 22.5% ஆல் அதிகரித்தது.

2015 இல் மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள் ரூபா 829.2 பில்லியனை எட்டியதுடன் இது 2014 உடன் ஒப்பிடும்போது 21.0% சதவீத வளர்ச்சியாகும். இது வங்கியின் மொத்த சொத்து அடித்தளத்தின் 70.4% பங்களிப்பாகும். வங்கியானது 2015 இல் தொடர்ந்தும் அடைவு பிடித்தலுக்கான வெளிப்பாட்டினைக் குறைத்ததுடன் இது மொத்த கடன்கள் மற்றும் வருமதிகளில் 12.5% த்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**இலாபகரத்தன்மை**




**தேறிய வட்டி வருமானம்**




**மொத்த நிதியளித்தலற்ற வருமானம்**



# பெறுமதி உருவாக்கம்

## எமது மூலதனத்தை முகாமைப்படுத்தல்

அனேகமாக அனைத்து கடனளித்தல் தேக்கங்களிலுமான தூரித விரிவாக்கலின் மத்தியிலும் வங்கியானது பின்வருமாறு வெற்றிகரமாக அதன் செயற்திறனற்ற கடன் விகிதத்தினை கட்டுப்படுத்தக்கூடியதாயிருந்தது. மிகவும் கடுமையான கடனளித்தல் வரன்முறைகள் மற்றும் மீட்டல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட குவிமுனைப்படுத்தப்பட்ட மீட்டல் இயக்கம் என்பன இதற்கான காரணிகளாகக் காணப்பட்டன. கடந்த காலங்களில் மக்கள் வங்கியின் செயற்திறனற்ற கடன்களது முன்னேற்றமானது துறையுடன் ஒப்பிடப்பட்டு பக்கம் 65 இல் விளக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களது வைப்புகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக வங்கியின் மொத்த நிதியளித்தல் தளமானது 2015 இல் கணிசமான வளர்ச்சியினை காட்டியது. நாடு பூராவுமான சேமிப்பு பிராச்சாரத்தின் காரணமாக வங்கியானது பாரியளவு தொகையினை குறைந்த கிரயத்தில் பெற்றுக்கொள்ள இயலுமையாயிருந்ததுடன் இதன் விளைவாக மொத்த சேமிப்புத் தளமானது ரூபா 53.3 பில்லியனால் அதிகரித்து ரூபா 372.2 பில்லியனை எட்டியது. இதுவரைக்கும் நாட்டிலுள்ள எந்த ஒரு தனியான நிதி நிறுவனத்தினாலும் வைத்திருக்கும் ஓர் அதிகூடிய சேமிப்பு வைப்பாக இது காணப்படுகின்றது. சேமிப்பு பிரச்சாரமானது நீண்ட கால நிதியினை உருவாக்கும் குழந்தைகளது சேமிப்பு, சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் பெண்களுக்கான சேமிப்பு என்பவற்றை இந்த சனத்திற்கு பொருத்தமாக வடிவமைக்கப்பட்ட பல கருவிகளினூடாக கவனஞ்செலுத்தப்பட்டது.

### *இலாபகரத்தன்மை விகிதங்கள்*

வங்கியின் செயற்பாட்டு வருமானம் 30.7% ஆல் அதிகரித்து ரூபா 54.7 பில்லியனை எட்டியது. வங்கியின் மொத்த வருமானம் 75% வளர்ச்சியடைந்து ரூபா 103.6 பில்லியனை எட்டியது. சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள், தனிப்பட்ட வங்கியியல், வர்த்தக நிதியளித்தல் நடவடிக்கைகள் என்பன சிறப்பான வளர்ச்சியினைப் பதிவு செய்ததுடன் வட்டி வருமானம் மற்றும் ஏனைய வருமான மார்க்கங்களான தரகு மற்றும் பரிமாற்றக வருமானங்கள் என்பவற்றை வங்கிக்கு வழங்கியது. எவ்வாறாயினும் வட்டி வருமானத்தின் பிரதான மூலமாக வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் காணப்பட்டதுடன் இது வங்கியின் மொத்த வட்டி வருமானத்தில் 76.1% பங்களிப்பினை செய்தது.

நிதியளித்தலற்ற மொத்த வருமானமானது 6% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 11.1 பில்லியனை எட்டியது. வங்கியானது 2015 இல் மிக மேன்மை இலாப வரியாக ரூபா 2.8 பில்லியனை செலுத்தியுள்ளது.

உயர்ந்த வருமானமானது நேரடியாக இலாப அதிகரிப்பிற்கு பங்களித்த வேளை, செலவினங்களது முகாமைத்துவமும் 2015 இல் கணிசமான பங்கினை வகித்தது. புதிய கூட்டு ஒப்பந்த நடைமுறையுடன் பணியாளர்களது வேதனமானது சராசரியாக 20.5% ஆல் அதிகரித்த போதிலும் அனைத்து செலவினங்களும் இவ்வருடத்தில் பாதீட்டினை விஞ்சாதவாறு நன்கு முகாமைப்படுத்தப்பட்டன. வருமானத்திற்கான செலவின வீதமானது 2014 இல் காணப்பட்ட 62.3% இலிருந்து 57.5% ஆக வீழ்ச்சியடைந்தமை சிறந்த செலவின முகாமைத்துவத்தினை குறிப்பிடுகின்றது. ஏனைய செலவுகளை கட்டுப்படுத்தவதற்கும் மேலாக தாள் மற்றும் மின்சாரம் ஆகிய வளங்களது பராமரிப்பு போன்ற முனைப்படுத்தப்பட்ட செலவுக் கட்டுப்பாட்டு வழிமுறைகளினால் இலாபமானது உயர்வடைந்தது.

**மொத்த செயற்பாட்டு வருமானம்**




**வருமானத்திற்கான செலவின வீதம்**




**கடன்கள் மற்றும் வருமதிகள்**




**மொத்த வைப்புகள்**



*திரவத்தன்மை விகிதங்கள்*

2015 இல் மக்கள் வங்கியின் திரவத்தன்மை விகிதமானது பிரதானமாக கடனுக்கான குறைவான கேள்வியின் காரணமாக முன்னேற்றமடைந்தது. 2015 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கியினால் பதிவுசெய்யப்பட்ட திரவத்தன்மை விகிதங்கள் உள்ளூர் வங்கியியல் அலகிற்கு 25.9% ஆகவும் வெளிநாட்டு நாணய வங்கியியல் அலகிற்கு 21.7% ஆகவும் காணப்பட்டன.

*சட்டமுறையான விகிதங்கள்*

மக்கள் வங்கியானது 2015 இல் அனைத்து சட்டபூர்வமான தேவைப்பாடுகளையும் சந்தித்தது. வங்கியின் மைய மூலதன போதுமை விகிதாசாரம் மற்றும் மொத்த மூலதன போதுமை விகிதாசரம் என்பன 2015 இன் இறுதியில் முறையே 9.9% ஆகவும் 12.5% ஆகவும் காணப்பட்டன. இவை எதிர்கால கடன் புத்தக விரிவாக்கலுக்கு போதுமான தாங்கலைக் காண்பிக்கின்றன.

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| மைய மூலதனம் | 9.6% | 9.8% | 10.4% | 10.9% | 9.9% |
| மொத்த மூலதனம் | 14.8% | 14.0% | 15.0% | 14.3% | 12.5% |

*முதலீட்டாளர் விகிதங்கள்*

மக்கள் வங்கியின் பிரதான முதலீட்டாளர், இலங்கை அரசாங்கம், மொத்த கொடுப்பனவாக ரூபா 16.8 பில்லியனை 2015 இல் பெற்றுக்கொண்டது. அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட மொத்த விசேட பங்கிலாபங்கள் ரூபா 3.0 பில்லியனாகவும், வருமான வரிக் கொடுப்பனவானது அதிகூடியதாக ரூபா 6.9 பில்லியனாகக் காணப்பட்டது.

**சாதனை முறியடிக்கப்பட்ட வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 19.5 பில்லியனை அடைந்து 2015 ஆம் நிதியாண்டானது வங்கிக்கு இன்னுமோர் வெற்றிகரமான ஆண்டாக அமைந்தது. இது முன்னைய ஆண்டின் வரிக்கு முந்திய இலாபத்திலும் பார்க்க 13.3% சிறந்து காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ஐந்தொகையானது ரூபா 1.2 ட்ரில்லியனை எட்டி முன்னைய ஆண்டிலும் பார்க்க 14.6% முன்னேற்றத்தினை குறிப்பிட்டது.**

**Contribution to GOSL**



## பொருளாதாரச் செயற்திறன்

(G4 - EC1)

மக்கள் வங்கியே இலங்கையின் இரண்டாவது பாரிய வங்கியாகும். 2015 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கித் துறையின் மொத்தச் சொத்துக்களில் 14.6% இனை மக்கள் வங்கி வைத்திருக்கின்றது. 2015 இல் வரிகள் மற்றும் பங்கிலாபங்களாக அரசாங்கத்திற்கான வங்கியின் பங்களிப்பு அண்ணளவாக ரூபா 16.8 பில்லியன் ஆகும்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு வலுவளிப்பதற்கு உதவும் பல பாரிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு எமது கூட்டாண்மை வங்கியியல் பிரிவானது நிதியளிக்கின்றது. 2015 ஆம் ஆண்டின் இறுதியில், இந்த பிரிவின் கீழ் வங்கியானது ரூபா 199 பில்லியன் கடன் தேக்கத்தினை கொண்டிருந்தது.

*2011 - 2015 காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட மற்றும் விநியோகிக்கப்பட்ட நேரடி பொருளாதார பெறுமதி*

| 31 டிசம்பரில் நிறைவடைந்த வருடத்திற்குரியது | 2011<br>ரூபா 000 | 2012<br>ரூபா 000 | 2013<br>ரூபா 000 | 2014<br>ரூபா 000 | 2015<br>ரூபா 000 |
|---|---|---|---|---|---|
| **வருமான மூலங்கள்** | | | | | |
| வட்டி | 61,788,438 | 85,241,301 | 110,440,562 | 84,479,961 | 92,403,546 |
| பரிவர்த்தனை | 1,207,902 | 2,126,109 | 1,418,430 | 1,598,506 | 3,050,646 |
| தரகு மற்றும் வட்டி | 2,929,812 | 3,541,589 | 3,478,015 | 3,820,242 | 3,712,147 |
| மூலதன இலாபம் | 133,485 | 127,794 | 396,910 | 1,042,108 | 305,011 |
| ஏனையவை | 2,238,616 | 3,740,606 | 10,135,606 | 5,436,664 | 4,177,616 |
| மொத்தம் | 68,298,253 | 94,777,399 | 125,869,523 | 96,377,482 | 103,648,963 |
| **வருமானப் பயன்பாடு** | | | | | |
| வைப்பாளர்களுக்கு வட்டியாக | 31,470,220 | 51,523,506 | 73,791,102 | 54,362,126 | 48,731,974 |
| பணியாளர்களுக்கு ஊதியமாக | 12,692,931 | 13,503,921 | 12,384,396 | 14,005,555 | 17,377,025 |
| பொருட்கள் மற்றும் சேவை வழங்குனர்களுக்கு | 6,507,736 | 6,916,917 | 7,719,560 | 7,414,998 | 7,166,999 |
| நிதியியல் சொத்துக்களில் தேறிய வலுக்குன்றல் நட்டம் | 410,443 | 3,874,384 | 13,716,320 | (1,430,440) | 3,739,914 |
| அரசாங்கத்திற்கு வரிகள் மற்றும் பங்கிலாபங்கள் | 12,489,254 | 12,311,765 | 10,039,483 | 14,125,646 | 16,834,192 |
| சமூகத்திற்கு | 20,109 | 18,458 | 14,735 | 24,675 | 39,461 |
| வளர்ச்சிக்காக தக்கவைத்தல் | 4,707,560 | 6,828,448 | 8,203,927 | 7,874,923 | 9,765,398 |
| மொத்தம் | 68,298,253 | 94,977,399 | 125,869,523 | 96,377,482 | 103,648,963 |

**வருமானத்திற்கான மூலம் மற்றும் பயன்பாடு (ரூபா 000 )**



## சேர்க்கப்பட்ட பொருளாதார பெறுமதி

2015 இல் வங்கியினால் உருவாக்கப்பட்ட பொருளாதார பெறுமதியானது முன்னைய ஆண்டோடு ஒப்பிடும்போது 25% ஆல் அதிகரித்து பெறுமதி அடிப்படையில் ரூபா 28.3 பில்லியனை எட்டியது.

| 31 டிசம்பரில் நிறைவடைந்த வருடத்திற்கானது | 2015<br>ரூபா "000 | 2014<br>ரூபா "000 | மாற்றம்<br>% |
|---|---|---|---|
| முதலீடு செய்யப்பட்ட உரித்துவம் | | | |
| பங்குதாரர் நிதியங்கள் | 49,494,740 | 43,469,552 | 14 |
| சேர்க்க: கடன் நட்டங்களுக்கான திரண்ட ஒதுக்கம் / வலுக்குன்றலுக்கான ஒதுக்கம் | 60,719,312 | 58,100,867 | 5 |
| மொத்தம் | 110,214,052 | 101,570,419 | 11 |
| | | | |
| உழைப்புகள் | | | |
| வரிக்குப் பிந்திய இலாபம் | 12,597,843 | 14,218,812 | -11 |
| சேர்க்க: கடன் நட்ட ஒதுக்கங்கள் / வலுக்குன்றல் ஒதுக்கங்கள் | 3,739,914 | (1,430,440) | -361 |
| கழி: பதிவழிக்கப்பட்ட கடன்கள் | (267,051) | (920,896) | -71 |
| மொத்தம் | 16,070,706 | 11,867,476 | 35 |
| உரித்துவத்திலான கிரயம் (12 மாத சராசரி நிறையிடப்பட்ட திறைசேரி உண்டியல் + 2[TRADEMARK Graph] இடர்நேர்கை வட்டத்தின் அடிப்படையில்) | 9.11% | 8.73% | |
| சராசரி உரித்துவத்தின் கிரயம் | 9,646,783 | 8,718,843 | 11 |
| சேர்க்கப்பட்ட பொருளாதார பெறுமதி | 25,717,489 | 20,586,318 | 25 |

# பெறுமதி உருவாக்கம்

எமது மூலதனத்தை முகாமைப்படுத்தல்

## மனித மூலதனம்

மனித மூலதனமென்பது வங்கியின் பணியாளர்களிடம் காணப்படும் திறமைகளின் இருப்பாகும். வங்கியியல் வணிகத்தினைப் பொறுத்தவரையில் மனித மூலதனத்தின் இரண்டு முக்கிய பாகங்களாக பயிற்சியும் அபிவிருத்தியும் காணப்படுகின்றன. பணியாளர்களது திறமைகளின் அபிவிருத்திக்கு வங்கியின் முதலீடானது அவசியமாகின்றது. பணியாளர்களில் அத்தகைய முதலீடானது ஓர் தனிப்பட்ட நபரின் ஆக்கத்திறனை அதிகரிக்கின்றது.

***புதிய மனித வளங்கள் கொள்கை***

*எமது மனித வளங்கள் முகாமைத்துவ செயற்பாட்டினை மேம்படுத்துவதற்காக, ஒக்டோபர் 2015 இல் பணிப்பாளர் சபையானது வங்கிக்கு உத்தியோகபூர்வமான ஓர் புதிய மனித வளக் கொள்கையினை அங்கீகரித்தது.*

*இந்த முழுமையான ஆவணமானது, ஆட்சேர்ப்பு, பதவியுயர்வுகள், நட்டஈடு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி, ஒழுக்காற்று நடவடிக்கைகள், மாற்றல்கள், பணியினை முடிவுறச் செய்தல், சேவைக்கால நீடிப்பு, லீவு மற்றும் நலன்களுக்கான மேம்படுத்தப்பட்ட நியமங்கள் மற்றும் செயல்முறைகளை விளக்குகின்றது.*

## பணியாளர் தோற்றுருவம்

(G4-10,11)

நடைமுறை நிதியாண்டின்போது எமது மொத்த மனித வள அடித்தளமானது, வணிக விரிவாக்கலின் நிமித்தம் ஏற்பட்ட மேலதிக வளத் தேவைப்பாடுகளை சந்திப்பதற்காக, 212 பணியாளர்களினால் (2014 இல் காணப்பட்ட 8,156 இலிருந்து 2015 இல் 8,368 ஆக அதிகரித்தது) அதிகரித்தது. இவர்கள் பிரதானமாக நிரந்தர பணியாளர்களாவர். பாதுகாப்பு சேவைகள் போன்ற சில கடமைகள் புற ஒப்படைப்பு சேவை வழங்குனர்களினால் வழங்கப்படுகின்றன. ஏனைய அனைத்து வங்கியியல் கடமைகளும் வங்கியினது நிரந்தர பணியாளர்களினால் கையாளப்படுகின்றன.

பணியாளர் ஒப்பந்தம் மற்றும் பால் அடிப்படையில் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை (2015)

| ஒப்பந்தம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| நிரந்தரம் | 2,794 | 3,805 | 6,599 |
| ஒப்பந்தம் | 649 | 1,120 | 1,769 |
| மொத்தம் | 3,443 | 4,925 | 8,368 |

பணியாளர் வகை மற்றும் பால் அடிப்படையில் நிரந்தர பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை(2015)

| பணியாளர் வகை | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| கூட்டாண்மை முகாமைத்துவம் | 15 | 4 | 19 |
| நிறைவேற்ற முகாமைத்துவம் | 19 | 14 | 33 |
| அதிகாரிகள் ( 3-III - Gr. I) | 1,432 | 2,002 | 3,434 |
| உதவிப் பணியாளர் தரம் | 866 | 1,540 | 2,406 |
| ஏனைய வகைகள் | 517 | 339 | 856 |
| வாடிக்கையாளர் சேவை உதவியாளர்கள் | 214 | 729 | 943 |
| ஏனைய ஒப்பந்த பணியாளர்கள் | 380 | 297 | 677 |
| மொத்தம் | 3,443 | 4,925 | 8,368 |

பால், பணியாளர்கள் மற்றும் மேற்பார்வைசெய்யப்படும் தொழிலாளர்கள் உள்ளடங்களான மொத்த பணியாளர் சேனை (2015)

| ஒப்பந்தம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| பணியாளர்கள் | 3,180 | 4,102 | 7,282 |
| மேற்பார்வை செய்யப்படும் தொழிலாளர்கள் | 263 | 823 | 1,086 |
| மொத்தம் | 3,443 | 4,925 | 8,368 |

பிராந்தியம் மற்றும் பால் அடிப்படையிலான மொத்த பணியாளர் சேவை (2015)

| மாகாணம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| மேற்கு | 1,251 | 2,007 | 3,258 |
| தெற்கு | 339 | 527 | 866 |
| மத்திய | 349 | 558 | 907 |
| வடக்கு | 190 | 214 | 404 |
| வட மத்திய | 265 | 310 | 575 |
| ஊவா | 226 | 269 | 495 |
| சபரகமுவ | 205 | 331 | 536 |
| வட மேற்கு | 290 | 414 | 704 |
| கிழக்கு | 328 | 295 | 623 |
| மொத்தம் | 3,443 | 4,925 | 8,368 |

## வேலை வாய்ப்பு

(G4-LA1, LA2, LA3)

தகுதிகள் மற்றும் மனப்பான்மைகள் ஆகியவற்றின் சரியான கலவையானது கருவிகள் மற்றும் சேவை நியமங்களது தரம் மற்றும் நிலைத்தன்மையினை உறுதிசெய்வதற்கு அவசியமானதாகும். இதற்கும் மேலாக, ஓர் அரச உடைமை நிறுவனம் என்ற வகையில், நாட்டிற்காக உயர் தரத்திலான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது ஓர் தேசிய பொறுப்பு என்று வங்கி நம்புகின்றது. எனவே, எப்போது சாத்தியப்படுகின்றதோ அப்போது வங்கியானது உள்ளூர் பிரதேசங்களிலிருந்து பணிக்கமர்த்த முயற்சிக்கின்றது.

மனித வளங்களின் தளத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் தரத்தினை பராமரிப்பதற்காக, வங்கியானது ஓர் முறைப்படியான பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பணிக்கமர்த்தல் செயல்முறையினால் வழிநடத்தப்படுகின்றது. இது 2015 இல் ஓர் முழுமையான மனித வளக் கொள்கையினது அபிவிருத்தியனுடாக மேலும் பலப்படுத்தப்பட்டது.

பணிக்கமர்த்தல் செயல்முறையானது, மனித வளத் தேவைகளை பொறுத்தளவில் திறமைகள் மற்றும் தகுதிகளைச் சந்திப்பதனையும் மற்றும் சமமான வாய்ப்புக்கள் மற்றும் பாகுபாடற்ற கொள்கைகளைப் பராமரிப்பதனையும் நோக்காகக் கொண்டுள்ளது. மனித வளத் தேவைகள் மற்றும் திறன் இடைவெளிகளை இனங்காண்பதன் மூலம் பணிக்கமர்த்தல் செயல்முறைக்கு துணைபுரிவதற்காக ஓர் மனித வள விவரணையாக்கம் நடாத்தப்படுகின்றது.

வயது அடிப்படையிலான புதிய பணிக்கமர்த்தல்கள் (2015)

| | வயதுப் பிரிவு | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | 18-25 | 26-45 | 46-55 | 56+ | |
| ஆண்கள் | 43 | 244 | 15 | 2 | 304 |
| பெண்கள் | 96 | 284 | - | - | 380 |
| மொத்தம் | 139 | 528 | 15 | 2 | 684 |

பிராந்திய அடிப்படையிலான புதிய பணிக்கமர்த்தல்கள் (2015)

| பிராந்தியம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| அநுராதபுரம் | 7 | 15 | 22 |
| பதுளை | 12 | 21 | 33 |
| மட்டக்களப்பு | 16 | 10 | 26 |
| கொழும்பு | 127 | 139 | 266 |
| கம்பஹா | 9 | 20 | 29 |
| காலி | 6 | 10 | 16 |
| யாழ்ப்பாணம் | 9 | 4 | 13 |
| கண்டி | 9 | 11 | 20 |
| களுத்தறை | 11 | 11 | 22 |
| குருணாகலை | 10 | 5 | 15 |
| கேகாலை | 10 | 17 | 27 |
| மாத்தறை | 8 | 9 | 17 |
| மாத்தளை | 3 | 0 | 3 |
| நுவரஎலிய | 5 | 13 | 18 |
| இரத்தினபுரி | 10 | 14 | 24 |
| அம்பாறை | 4 | 16 | 20 |
| திருகோணமலை | 14 | 11 | 25 |
| பொலன்னறுவை | 12 | 16 | 28 |
| மொனராகலை | 5 | 11 | 16 |
| புத்தளம் | 2 | 5 | 7 |
| வன்னி | 9 | 16 | 25 |
| அம்பாந்தோட்டை | 6 | 6 | 12 |
| மொத்தம் | 304 | 380 | 684 |

வயது அடிப்படையில் பணியாளர்கள் புரள்வு (2015)

| | வயதுப் பிரிவு | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | 18-25 | 26-45 | 46-55 | 55+ | |
| ஆண்கள் | - | 8 | 5 | 277 | 290 |
| பெண்கள் | - | 13 | 4 | 129 | 146 |
| மொத்தம் | - | 21 | 9 | 406 | 436 |

பிராந்திய அடிப்படையில் பணியாளர்கள் புரள்வு ( 2015)

| பிராந்தியம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| அம்பாறை | 4 | 1 | 5 |
| அநுராதபுரம் | 6 | 3 | 9 |
| பதுளை | 10 | 5 | 15 |
| மட்டக்களப்பு | 11 | 1 | 12 |
| கொழும்பு | 93 | 76 | 169 |
| காலி | 15 | 7 | 22 |
| கம்பஹா | 21 | 7 | 28 |
| அம்பாந்தோட்டை | 6 | 1 | 7 |
| யாழ்ப்பாணம் | 5 | 1 | 6 |
| களுத்தறை | 13 | 8 | 21 |
| கண்டி | 19 | 12 | 31 |
| கேகாலை | 8 | 5 | 13 |
| குருணாகலை | 19 | 8 | 27 |
| மாத்தளை | 5 | 3 | 8 |
| மாத்தறை | 10 | 2 | 12 |
| மொனராகலை | 3 | 2 | 5 |
| நுவரஎலிய | 10 | 1 | 11 |
| பொலன்னறுவை | 5 | 1 | 6 |
| புத்தளம் | 7 | 1 | 8 |
| இரத்தினபுரி | 12 | 3 | 15 |
| திருகோணமலை | 4 | 1 | 5 |
| வன்னி | 1 | - | 1 |
| மொத்தம் | 287 | 149 | 436 |

## மகப்பேற்று லீவு

(G4 - LA3)

மகப்பேற்று லீவு வழங்கல் (2015)

| | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|
| மகப்பேற்று லீவுக்கு உரிமையுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை | 3,430 | 3,093 | 2,881 |
| மகப்பேற்று லீவினை எடுத்த பணியாளர்களின் எண்ணிக்கை | 566 | 773 | 424 |
| மகப்பேற்று லீவின் பின்னர் வேலைக்கு திரும்பிய பணியாளர்களின் எண்ணிக்கை | 566 | 773 | 424 |
| வேலைக்குத் திரும்பியோரின் *TRADAX Graph | 100% | 100% | 100% |

## பணியாளர் நலன்கள்

(G4 - LA2)

பிராந்தியம் / செயற்படும் இடத்தினை பொருட்படுத்தாது, வங்கியானது வேலைவாய்ப்பு வகுப்பின் அடிப்படையில் பணியாளர் நலன்களை அனைத்து நிரந்தர பணியாளர்களுக்கும் வழங்குகின்றது. ஒப்பந்த மற்றும் பயிற்சி பணியாளர்களுக்கு சில நலன்களுக்கு அனுமதியில்லை.

வங்கியானது பகுதி நேர பணியாளர்களை பணிக்கமர்த்துவதில்லை. எமது நிரந்தர பணியாளர்களுக்கு பின்வரும் நலன்கள் வழங்கப்படுகின்றன:

1. உபகாரங்கள்
2. குறிப்பிட்ட தரத்திற்கு பிரயாணப் படிகள்
3. விடுமுறை சொகுசு வீடுகள்
4. பணியாளர் கடன்கள்
5. மருத்துவ நலன்கள்
6. மரணப் பணிக்கொடை
7. தனிப்பட்ட விபத்துக் காப்புறுதித் திட்டம்
8. ஊனநிலை மற்றும் செல்லத்தகாததாக்கல் காப்பு
9. மகப்பேற்று லீவு
10. ஓய்வுபெறல் நலன்கள்

## தொழிலாளர் முகாமைத்துவம்

(G4 - LA4)

திடமான தொழிலாளர் உறவிற்கு பயனுறுதிமிக்க தொடர்பாடல்கள் அவசியமாகும். வங்கிக்கு சாத்தியமான தொடர்பாடல்கள் முக்கியமாவதுடன் சாத்தியப்படக்கூடிய முரண்பாடு மற்றும் தொழிலாளர் அமைதியின்மையினை குறைக்கின்றது. வணிகத்தின் தொடர்ச்சிக்கு, செயற்திறனுக்கு மற்றும் நிலைமாறா சேவையின் தரம் என்பனவற்றிற்கு இணக்கப்பாடான தொழிலாளர் உறவுகள் முக்கியமானதாகும். இதற்கும் மேலாக, உள்ளூர் வங்கியியல் துறையின் அதிகரித்த போட்டித்தன்மையினைப் பொறுத்தளவில் நல்ல தொழிலாளர் உறவுகள், சந்தை பங்களிப்பினை பராமரிப்பதற்கும் வளர்க்கவும் ஓர் போட்டிசார் மேம்பாடாகக் கருதப்படுகின்றது.

மக்கள் வங்கியில், தொழிலாளர் உறவுகள், பல்வேறு பங்காளிகளுடனான பேரம்பேசல் மற்றும் ஓர் முறையான மனக்குறை கையாளும் பொறிமுறை ஆகிய இரட்டிப்பு செயல்முறையினூடாக முகாமைப்படுத்தப்படுகின்றது. இவ்விரண்டின் பிணைப்பு ஸ்திரத்தன்மை நோக்கி பங்களிக்கின்றது.

வேதனம் மற்றும் ஏனைய சலுகைகள் போன்ற பணியாளர் நலன்கள் ஓர் கூட்டு ஒப்பந்தத்தினூடாக தொழிற் சங்கங்களுடன் பேரம் பேசப்பட்டு பரஸ்பரமாக இணங்கப்படுகின்றது. கூட்டு ஒப்பந்த கலந்துரையாடல்கள் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கொரு முறையும் இடம்பெறுகின்றது.

### *கணிசமான செயற்பாட்டு மாற்றங்கள் தொடர்பான அறிவித்தல்*

கூட்டு ஒப்பந்த பேரம்பேசல் செயல்முறையானது அனைத்து பணியாளர்களுக்கும் தெரிந்த ஓர் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் ஆரம்பிக்கப்படும்.

### *செயற்பாட்டு மாற்றங்களுக்கான ஆகக்குறைந்த அறிவித்தல் காலம்*

| மாற்றங்களின் வகை | அறிவித்தல் காலம் |
|---|---|
| மாற்றல்கள் | 2 கிழமைகள் |
| இராஜினாமாக்கள் | 1 மாதம் |
| இளைப்பாறுதல்கள் | 3 மாதங்கள் |
| முடிவு | 1 - 3 மாதங்கள் |

## பயிற்றுவித்தல் மற்றும் கல்வி

(G4 - LA9, LA10)

புதிய மூலோபாய திட்டத்தின் கீழ், மக்கள் வங்கியானது அனைத்து வணிகச் செயல்முறைகள் மற்றும் நவீன தொழில்நுட்ப அடிப்படையிலான வாழ்க்கை முறைகளுக்கேற்ப புதிய கருவிகளது அபிவிருத்தி என்பவற்றிற்கு எண்ணியலாக்கலை இலக்குவைக்கின்றது. எனவே, வங்கியின் எதிர்கால வளர்ச்சிக்கு வசதியளிப்பதற்காக ஓர் முக்கியமான மூலோபாய தேவைப்பாடாக பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு இனங்காணப்பட்டுள்ளது.

வங்கியின் மனித வளத் தளத்தினை அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தலின் மூலோபாய முக்கியத்துவத்தின் நிமித்தம், பயிற்றுவித்தல் தேவைகளை இனங்காண்பதற்காக, ஓர் முறையான பயிற்றுவித்தல் தேவைகள் விவரணையாக்கம் நடைமுறை நிதியாண்டில் அமுல்படுத்தப்பட்டது.

பயிற்றுவித்தல் தேவைகளது விவரணையாக்கமானது பின்வருவனவற்றின் மூலம் விருத்திசெய்யப்பட்டது:

1. மூலோபாயத் திட்டத்தின் அடிப்படையில் மூலோபாய பயிற்றுவித்தல் தேவைப்பாடுகளை இனங்காணுதல்.
2. அனைத்து பிராந்தியங்கள் மற்றும் திணைக்களங்களில் ஓர் பயிற்றுவித்தல் தேவைகள் மதிப்பீட்டினை நடாத்துதல்
3. சந்தைப் போக்குகள்

பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் வினைத்திறனானது செயற்திறன் மீளாய்வுகள் மற்றும் பணியாளர் பின்னூட்டச் செயல்முறைகளினூடாக மதிப்பிடப்படுகின்றது.

2015 இல் வங்கியானது ரூபா 120 மில்லியனை பணியாளர் பயிற்றுவித்தலுக்காக முதலீடு செய்தது.

2015 க்கான பயிற்றுவித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

| பயிற்றுவித்தல் வகை | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளது எண்ணிக்கை | பயிற்றுவித்தல் மணித்தியாலங்கள் |
|---|---|---|---|
| உள்வாரி பயிற்றுவித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 293 | 18,323 | 168,176 |
| வெளிவாரி பயிற்றுவித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 150 | 810 | 10,745 |
| வெளிநாட்டு பயிற்சிகள் | 22 | 42 | 1,928 |
| மொத்தம் | 465 | 19,175 | 180,849 |

பணியாளர் வகை மற்றும் பால் அடிப்படையில் பயிற்றுவித்தல் மணித்தியாலங்கள் (2015)

| வகை | 2015 பயிற்சியின் சராசரி மணித்தியாலங்கள் | |
|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் |
| கூட்டாண்மை முகாமைத்துவம் | 39 | 34 |
| நிறைவேற்று முகாமைத்துவம் | 29 | 68 |
| அதிகாரிகள் ( 3-III - Gr. I) | 22 | 22 |
| உதவிப் பணியாளர் தரம் | 15 | 15 |
| முகாமைத்துவ பயிற்சிகள் | 215 | 215 |
| வாடிக்கையாளர் சேவை உதவியாளர்கள் மற்றும் ஏனையோர் | 21 | 21 |
| மொத்தம் | 341 | 375 |

## நிலைமாற்றல் பயிற்சி

(G4 - LA10)

வங்கியானது ஓர் தொழில்நுட்ப ரீதியில் மேம்பட்ட சேவை மற்றும் செயற்பாட்டு கட்டமைப்பிற்கு மாற்றமடையும் வேளை திறமை அபிவிருத்தியானது மக்கள் வங்கியின் எதிர்கால வணிக வளர்ச்சிக்கு அவசியமான கூட்டுப்பொருளின் ஒரு பகுதியாகும். வங்கியின் வளர்ச்சி மூலோபாயத்தினை தீர்மானிக்கும் மூலப்பொருளாக திறமை அபிவிருத்தி காணப்படும். எனவே, 2015 க்கான மற்றும் எதிர்காலத்திற்கான வங்கியின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த நிலைமாற்று பயிற்சி தேவைக்கு வசதியளிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பணியாளர்களுக்கான பயிற்சியினை மூன்று வகுப்பாகப் பிரிக்கலாம். அவையாவன, உள்வாரி பயிற்சி, வெளிவாரி பயிற்றுவித்தல் ஆளணியினரது துணையுடன் வெளிவாரி பயிற்சி மற்றும் வெளிநாட்டு பயிற்சி என்பனவாகும். நிலையான மற்றும் வழக்கமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உள்வாரி பயிற்சி வளங்களுடன் உள்ளகத்தே நடாத்தப்படுகின்றன. வெளிநாட்டு பயிற்சியானது சிரேஷ்ட பணியாளர்களுக்கு விசேட திறமை அபிவிருத்தி பிரிவுகளில் வழங்கப்படுகின்றது.

## செயற்திறன் மதிப்பீடு

(G4 - LA11)

வருடாந்த செயற்திறன் மதிப்பீடானது வருடத்தின் ஆரம்பத்தில் நியமிக்கப்பட்ட முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் மற்றும் இலக்குகளுக்கு எதிராக வங்கியில் நடாத்தப்படுகின்றது. முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் வங்கியின் கூட்டாண்மை நோக்கங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இலக்குகள் தனிநபர் பணியாளர்கள் / முகாமையாளர்களுடன் இணைந்து நிர்ணயிக்கப்படுகின்றன. பணியாளர்களது செயலூக்கத்தினை மேம்படுத்துவதற்காக செயற்திறன் மதிப்பீடானது பதவியுயர்வுகள் மற்றும் வருடாந்த அதிகரிப்புகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

வங்கியானது பணியாளர்களை அவர்களது தொழில்துறை அபிவிருத்தி செயல்முறைக்கு உதவும் முகமாக தொழில்சார் தகமைகளை பெற்றுக்கொள்வதற்கு ஊக்கமளிக்கின்றது. மேலும், அத்தகைய தொழில்சார் தகமைகளைக் கொண்டிருப்பது உள்வாரி பதவியுயர்வுகளின்போது கவனத்திலெடுக்கப்படுவதுடன் இது பணியாளர்களை தொழில்துறை அபிவிருத்திக்கு ஊக்கப்படுத்துகின்றது.

## ஆண் பெண் இருபாலாருக்குமான சமனான ஊதியம்

(G4 - LA13)

வங்கியானது எந்நேரமும் பாகுபாடற்ற ஊதியக் கொள்கையினை பராமரிக்கின்றது. சமனான ஊதியத்தினை உறுதிசெய்வதற்காக வங்கியினது ஊதியக் கொள்கையானது அனைத்து செயற்பாட்டு இடங்கள் மற்றும் அனைத்து பணியாளர் பிரிவுகளுக்கும் பால் சார்பற்றுக் காணப்படுகின்றது. டிசம்பர் 2015 இன் இறுதியில் பெண்கள் ஆண்களுக்கான அடிப்படை சம்பளம் மற்றும் ஊதியத்தின் விகிதாசாரமானது ஒவ்வொரு பணியாளர் பிரிவிலும் சமனாக (1:1) காணப்படுகின்றது.

கடந்த ஐந்து வருடங்களில் ஆண்கள் பெண்களுக்கான வங்கியின் பணியாளர்சேனையின் விகிதாசாரமானது பெரும்பான்மை ஆண்களிலிருந்து பெரும்பான்மை பெண்களாக மாற்றமடைந்துள்ளது. டிசம்பர் 2015 இன் இறுதியில் பணியாளர் சேவையின் 59% பெண்களாகும்.

## பால் அடிப்படையில் ஆரம்ப நிலை வேதனத்தின் விகிதாசாரம்

(G4 - EC5)

இலங்கையின் கடைகள் மற்றும் காரியாலய பணியாளர்கள் சட்டத்தில் பணியாளர்களுக்கான ஆகக்குறைந்த வேதனத்தை ஆளுமை செய்யும் எவ்வித நிலையான முறைமைப்படுத்தல்களும் காணப்படவில்லை. எவ்வாறாயினும், கூட்டு பேரம்பேசல் மற்றும் தொழிலாளர் சங்கங்கள் மற்றும் நிதி அமைச்சுடனான கலந்துரையாடல்களூடாக வங்கியானது பணியாளர்களுக்கான வேதன வீதங்களை தீர்மானிக்கின்றது. வங்கியினது சம்பளக் கொள்கையானது பிரதானமாக கூட்டு ஒப்பந்தங்களின் அடிப்படையிலானதாகும். இது பிரதான முகாமையாளர் மற்றும் அதற்கும் குறைவான பணியாளர் பிரிவுகளை உள்ளடக்கும். சிரேஷ்ட முகாமைத்துவ பிரிவிற்கு ( உதவிப் பொது முகாமையாளர் மற்றும் அதற்கு மேல்) சம்பளமானது பெரும்பாலும் இணைநிலை வங்கிகளது வேதன வீதம் மற்றும் பொருத்தமான பணியாளர் பிரிவின் இடர்நேர்கை பொறுப்பு என்பவற்றை கவனத்திலெடுத்து தீர்மானிக்கப்படுகின்றது. வங்கியின் வேதன நடைமுறைகள் இனம், பால் அல்லது ஊனநிலை மற்றும் பணியாளர் பிரிவு அடிப்படையில் வேறுபடுத்துவதில்லை. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஆரம்ப நிலை அடிப்படை சம்பள விகிதம் 1 : 1 ஆகும்.

ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார் மற்றும் கொரியா ஆகிய நாடுகளிலுள்ள வணிக ஊக்கமளிப்பு உத்தியோகத்தர்களாக சேவையாற்றும் பணியாளர்களுக்கு வெளிநாடுகளில் ஏற்படும் தனிச்சிறப்பான செலவினங்களை சந்திப்பதற்காக ஒரு விசேட படி வழங்கப்படுகின்றது.

## உள்ளூர் சமூகத்தில் பணிக்கமர்த்தப்பட்ட சிரேஷ்ட முகாமைத்துவத்தினது சதவீதம்

(G4 - EC6)

வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ பிரிவுகளுக்கு (நிறைவேற்று முகாமைத்துவம் மற்றும் அதற்கு மேலான தரங்கள்) தோந்தெடுக்கப்படும் அனைவரும் இலங்கைப் பிரஜைகளாவர்.

## தொழிலாளர் நடைமுறை பொறிமுறைகள்

(G4 - LA16)

தொழிலாளர் நடைமுறைகள் வணிகத்தின் நீடிப்புத்திறன் மற்றும் பணியாளர் மனவுறுதியில் நேரடியான தாக்கத்தைக் கொண்டுள்ளன. மோசமான தொழிலாளர் நடைமுறைகள், தொழில் இடைமறிப்பு, குறைவான ஆக்கத்திறன் மற்றும் மோசமான சேவைத் தரத்தின் விளைவாக நிதியியல் நட்டங்களை ஏற்படுத்தும். தொழிலாளர் நடைமுறைகளை முகாமைப்படுத்துவதற்கான வங்கியின் பிரதான பொறிமுறைகள், நடத்தை விதித்தொகுப்பு புத்தகத்தின் மூலமாகும். ஓர் முறையான குறைகள் கையாளும் வழிமுறை மற்றும் குறைகள் விதிகள் காணப்படுகின்றன. குறைகள் கையாளும் வழிமுறையானது இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கு அமைவுறுகின்றது.

குறைகள் கையாளும் வழிமுறை




முறையான குறைகள் கையாளும் பொறிமுறைகளுடாக தொழிலாளர் நடைமுறைகள் பற்றி தாக்கல் செய்யப்பட்ட குறைகள் (2015)

| | |
|---|---|
| குறைகளின் மொத்த எண்ணிக்கை | 4 |
| அறிக்கையிடப்படும் காலப்பகுதியில் கவனித்தவை | 4 |
| அறிக்கையிடப்படும் காலப்பகுதியில் தீர்த்துவைக்கப்பட்டவை | 3 |

## பாகுபாடற்றல்

(G4 - HR3)

பாகுபாடானது செயலூக்கமற்றல் மற்றும் வணிக நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தொழிலாளர் பிணக்குகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு எதிராக தொழிலாளர் பிணக்குகளை விளைவிக்கும். எனவே, வங்கியானது எவ்விதமான மக்களிலும் பாகுபாட்டினை ஊக்கமளிப்பதோ அல்லது நடைமுறைப்படுத்துவதோ கிடையாது.

பாகுபாட்டு நடைமுறைகளைத் தவிர்ப்பதற்காக பணியாளர் நிர்வாகத்தின் அனைத்து தோற்றுருவங்களிலுமான முறையான செயல்முறைகள் காணப்படுகின்றன. இதற்கும் மேலாக, குறைகள் கையாளும் செயல்முறை மற்றம் தொழிற்சங்க பிரதிநிதித்துவத்தினூடாக பணியாளர்களுக்கு நிவர்த்தி செய்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

சமூக நல்லிணக்கம் மற்றும் சகிப்புத்தன்மை கலாச்சாரத்தினை ஊக்குவிப்பதற்காக வங்கியானது பல்வேறு மதப்பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கங்களை நிறுவுவதற்கு பணியாளர்களுக்கு அனுமதியளித்துள்ளது. இந்த சங்கங்களினால் நடாத்தப்படும் நலன்புரி மற்றும் கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வுத் திட்டங்களுக்கு வங்கியானது வருடாந்தம் நிதியினை ஒதுக்குகின்றது. 2015 இல் எவ்வித பாகுபாடும் அறிக்கையிடப்படவில்லை.

## கூட்டமைப்பு சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம்பேசல்

(G4 - HR4)

கூட்டமைப்பு சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம்பேசல் என்பன இலங்கையின் தொழிலாளர் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமைகளாகும். இலங்கை கூட்டமைப்பு சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம்பேசலில் சர்வதேச தொழிலாளர் நிறுவன பழக்கவழக்கங்களுக்கு ஓர் கையொப்பதாரியாகும். எனவே, வங்கிக்கு இந்த உரிமைகளை நிறைவேற்றுவதற்காக சட்டரீதியான கடப்பாடு காணப்படுகின்றது.

2015 இன் இறுதியில் வங்கியானது உயிர்ப்புள்ள ஐந்து தொழிற்சங்கங்களை கொண்டிருந்தது. அவையாவன,

1. இலங்கை வங்கிப் பணியாளர்கள் சங்கம்
2. உத்தியோகத்தர்களது சங்கம்
3. இலங்கை சுதந்திர வங்கிச் சேவையாளர்கள் சங்கம்
4. தேசிய சேவைகள் சங்கம்
5. அனைத்து இலங்கை வங்கிப் பணியாளர்கள் சங்கம்

இதற்கும் மேலாக, வங்கியானது சம்பளம் மற்றும் சம்பளமற்ற நலன்கள் தொடர்பாக இரண்டு கூட்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

வங்கியினது தலைமைக் காரியாலயம் மற்றும் கிளைகளில் தொழிற்சங்க கூட்டங்களுக்காக நேரம் மற்றும் இடத்தை ஒதுக்குவதன் மூலம் இச்சங்கங்களது உரிமைகளுக்கு உறுதுணை புரிகின்றது.

## மனித வள குறைபாட்டு பொறிமுறை

(G4 - HR12)

ஓர் பொது நிறுவனம் என்ற ரீதியில், இலங்கை அரசாங்கத்தினால் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கடப்பாடுகளுக்கு மக்கள் வங்கியானது கட்டுப்பட்டுள்ளது. எனவே, அனைத்து கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் பொறிமுறைகள் என்பன ஐக்கிய நாடுகள் மாநாடுகளில் தீர்மானிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகளுக்கு அமைவுறும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கமானது இதில் ஓர் கையொப்பதாரியாகும்.

வங்கியினால் ஓர் கட்டமைக்கப்பட்ட குறைகள் பொறிமுறையானது கடைப்பிடிக்கப்படுகின்றது. இச்செயல்முறை பற்றியும் எவ்வாறு ஓர் முறைப்பாட்டினை மேற்கொள்வது என்பது பற்றி பணியாளர்களுக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளது.

2015 இல் எழுப்பப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான குறைபாடுகள் பிரதானமாக பின்வருவன பற்றியதாகும். வேலைவாய்ப்பினை முடிவுறுத்தல், வேலைவாய்ப்பினை தடைசெய்தல், பணிநீக்கம் மற்றும் ஒரு இடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கான மாற்றல்கள் என்பனவாகும்.

# பெறுமதி உருவாக்கம்

எமது மூலதனத்தை முகாமைப்படுத்தல்



## உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

மக்கள் வங்கியானது நாடு பூராவும் பரந்து காணப்படும் கட்டிடங்கள், வாகனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய பாரிய உற்பத்தி செய்யப்பட்ட மூலதன அடித்தளத்தினை கொண்டுள்ளது. இவை தடையற்ற வணிகச் செயற்பாடுகள் மற்றும் வணிக இணைப்புகளுக்கு வசதியளிப்பதற்காக முக்கிய பங்கினை வகிக்கின்றன.

இந்த உற்பத்தி செய்யப்பட்ட மூலதன அடித்தளமானது ஓர் அர்ப்பணிப்புடனான வங்கியியல் துணைச் சேவைகள் பிரிவினூடாக பராமரிப்பு, முகாமைப்படுத்தல் மற்றும் விருத்திசெய்யப்படுகின்றது. மீளாய்வாண்டில், மக்கள் வங்கியினது உற்பத்தி செய்யப்பட்ட மூலதன அடித்தளமானது புதிய கட்டிடங்களின் சேர்க்கைகள், புதிய வாகனங்கள் மற்றும் உபகரண மேம்படுத்தல் ஆகியவற்றுடன் பெறுமதியளவில் ரூபா 1.9 பில்லியனாக அதிகரித்தது.




## 2015 இல் எமது உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தின் முகாமைத்துவம்

### கட்டிடங்கள்

2015 இல் மத்துகம, பேருவளை, நுவுல, அத்தரலியத்த மற்றும் அக்மன ஆகிய இடங்களில் புதிக கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. 2015 இல் வங்கியானது இப்புதிய கட்டிட நிர்மாணித்தலுக்கு ரூபா 523 மில்லியனை முதலீடு செய்தது. இதற்கும் மேலாக 25 க்கும் அதிகமான கிளைகள் சீரமைப்பு செய்யப்பட்டன. இதன் பிரகாரம் 2015 இறுதியில் வங்கியானது 130 க்கும் மேலான கட்டிடங்களைச் சொந்தமாய் வைத்துள்ளது.

மக்கள் வங்கியினது தலைமைக் காரியாலய கட்டிடத்தின் முன்பகுதியில் புதுப்பித்தல் வேலை நடைபெற்றவண்ணமுள்ளது. இது 2016 இல் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### வாகனங்கள்

வங்கியின் வாகனக் கலத்தொகுதியானது இவ்வருடத்தில் 63 புதிய வாகனங்களினால் மேம்படுத்தப்பட்டு டிசம்பர் 2015 இல் 220 வாகனங்களை எட்டியது. இந்த வாகனங்கள் வணிக உதவி மற்றும் பணப் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படுகின்றன.

### தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

2016 இல் அமுல்படுத்தப்படவிருக்கும் வங்கியின் புதிய எண்ணியலாக்கல் மூலோபாயத்திற்கு வங்கியின் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பானது ஓர் முக்கிய மூலகமாகும். எனவே வங்கியானது 2015 இல் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை மேம்படுத்தல் மற்றும் புதிய உபகரணங்களுக்காக கணிசமான தொகையினை ஒதுக்கியது. இவை திட்டமிடப்பட்டுள்ள வங்கியியல் மேடையினது மேம்படுத்தலுக்கு துணைபுரியும் IBM வழங்கிகளது கொள்வனவினை உள்ளடக்கும். புதிய முறையானது தினசரி செயலாக்கல் நேரத்தினை நான்கு மணித்தியாலங்களால் குறைப்பதுடன், வங்கி நீடித்த நேரத்தில் செயலாற்றுவதற்கு அனுமதிக்கும். இதற்கும் மேலாக, வங்கியினது தன்னியக்க வங்கியியல் இயந்திர விசை வன்பொருளானது (HP TRNDEM சேர்விஸஸ்) பின்வரும் காரணங்களுக்காக மேம்படுத்தப்பட்டது. நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி எமது த.வ.இ. வலையமைப்பினை மிகவும் பாதுகாப்பான, மீள்மேலாக்கல் மற்றும் பயனுறுதி மிக்க வாடிக்கையாளர் சேவை மையமாக மாற்றும் நோக்கத்தில் தனிப்பயனாக்கலாக்கப்பட்டது.

### தன்னியக்க வங்கியியல் இயந்திரங்கள் (த.வ.இ.)

2015 இன் இறுதியில் வங்கியினது சொந்த த.வ.இ. வலையமைப்பானது 492 இனை எட்டியது. அத்துடன். வங்கியானது சில பழைய த.வ.இ. களுக்குப் பதிலாக சிறந்த தொழில்நுட்ப திறனுடைய புதிய த.வ.இ. களை நிறுவியது. வங்கியின் எண்ணியலாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஓர் அங்கமாக மக்கள் வங்கியின் அனைத்து த.வ.இ. வலையமைப்பும் பல பணி நியமங்களுக்கு தரமுயர்த்தப்படும். த.வ.இ. கள் ஓர் புதிய வணிக வடிகாலாகக் கருதப்படுவதுடன், இவை பணம் எடுத்தல், பண வைப்பிலிடல், நிதி மாற்றல்கள், நுகர்பயன் பட்டியல் கொடுப்பனவுகள் போன்ற வழமையான கிளை வங்கியியல் நடவடிக்கைகளை கையாளுவதற்காக மேம்படுத்தப்படும்.

## அறிவுசார் மூலதனம்

(G4 - PR8)

வங்கியின் அறிவுசார் மூலதனம் பிரதானமாக பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. சந்தை மற்றும் வாடிக்கையாளர் கற்கைகளை அடிப்படையாகக்கொண்டு வங்கியினால் விருத்திசெய்யப்பட்ட கருவிகள் போன்ற ஆய்வு மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு அமைப்புகள் உள்ளடங்களாக வங்கியினுள் காணப்படும் முறைகள் மற்றும் செயல்முறைகள் என்பனவாகும்.

## பாதுகாப்பு முறைகள்

நாளாந்தம் ஆயிரக்கணக்கான இலத்திரணியல் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிக்கும் நாட்டிலுள்ள பாரிய நிதியியல் நிறுவனங்களில் ஒன்று என்றவகையில், வங்கியின் தினசரி செயற்பாடுகள் மற்றும் வங்கியினது நற்பெயரின் நாணயம் என்பவற்றுக்கு தகவல் தொழில்நுட்ப முறையின் பாதுகாப்பானது முக்கியமானதாகும். வங்கியானது உடலுழைப்பு செயல்முறையிலிருந்து எண்ணியல் மேடைக்கு மாற்றமடைவதன் மூலம் அதன் எண்ணியலாக்கல் சுவட்டினை விரிவாக்குவதற்கு தயாராகும் வேளை தகவல் தொழில்நுட்ப முறையின் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

எனவே, 2015 இல், வங்கியானது தீச்சுவர்கள் போன்ற பாதுகாப்பு முறைகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பு சோதனைகள் மேம்படுத்தல் என்பவற்றின் மூலம் இந்த அம்சங்களில் பலமாக கவனஞ்செலுத்தியது. மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கு அமைய, தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கான அடிநிலை பாதுகாப்பு நியமத்திற்கு தகமை பெறுவதற்கான செயல்முறையினை வங்கி ஆரம்பித்துள்ளதுடன் பாதுகாப்பு முறைகளுக்கான ISO சான்றிதழ் நோக்கி செயற்படுகின்றது. மேலும், ஓர் வலையமைப்பு கண்காணிப்பு முறையொன்றும் நிறுவப்பட்டுள்ளது. இது பல்வேறு விற்பனையாளர் உபகரணங்களது மையப்படுத்தப்பட்ட முகாமைத்துவத்தினை இயலுமையாக்கும் ஒட்டுமொத்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை கண்காணிப்பதற்காகும்.

2016 இல் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் ஓர் பேரிடர் மீட்பு மத்தியநிலையத்தை நிறுவுதல் நோக்கிய ஆரம்பநிலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## எண்ணியலாக்கல் முன்னெடுப்பு

வங்கியானது ஓர் பாரிய எண்ணியலாக்கல் செயல்முறையினை 2015 இல் தொடங்கியதுடன் இது வங்கியினது செயற்பாடுகள் மற்றும் எவ்வாறு அது வணிகத்தை மேற்கொள்கின்றது என்பதை மாற்றியமைக்கும். ஓர் தொழில்நுட்ப அடிப்படையிலான நிதியியல் நிறுவனமாக மக்கள் வங்கியினது எதிர்கால வளர்ச்சிக்கு துணைபுரியக்கூடிய புதிய தனிப்பயனாக்கல் மென்பொருளிலான முதலீடானது இச்செயல்முறையின் முக்கியமான அம்சமாகும்.

இந்த முதலீடானது கொடுக்கல் வாங்கல் கிரயம் மற்றும் நேரம் என்பவற்றை தீவிரமாக குறைப்பதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு நன்மை பயக்கும். எனவே, 2015 இல் முக்கிய நடவடிக்கையாக ஓர் முழுவதுமான மென்பொருள் பிரயோகத் தொகுப்பினை விரிவுறுத்துவதற்கு பயன்படுத்தப்படும் ஓர் புதிய நிறுவன கட்டமைப்பினை விருத்திசெய்வதற்கான செயல்முறையினது தொடக்கம் காணப்படுகின்றது.

## ஆய்வு மற்றும் அபிவிருத்தி

புதிய கருவிகளது அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாடல்களுக்கு துணைபுரிவதற்காக வழக்கமான சந்தை ஆய்வுகள் வங்கியினால் நடாத்தப்படுகின்றன. 2015 இல் பல வாடிக்கையாளர் கருத்தாய்வுகளை வங்கி நடாத்தியது. மேலதிகத் தகவல்களுக்கு பக்கம் 91 இல் காணப்படும் கருவிகள் மற்றும் சேவை குறியிடுதல் பகுதியினை தயவுசெய்து வாசிக்கவும்.

# பெறுமதி உருவாக்கம்

எமது மூலதனத்தை முகாமைப்படுத்தல்



## சமூக மற்றும் தொடர்புடைய மூலதனம்

மக்கள் வங்கியின் வர்த்தகக் குறியானது வங்கியின் சமூக மற்றும் தொடர்புடைய மூலதனத்தின் அதி முக்கிய தோற்றமாகும். இது ஓர் அருவச்சொத்தாகக் காணப்பட்டாலும், வர்த்தகக் குறியுடன் தொடர்புபட்டுள்ள நன்மதிப்பானது சேமிப்பு வைப்புகள் மற்றும் கடனுக்கான கேள்வி எனும் வடிவத்தில் அளவிடக்கூடிய நிதியியல் இலாபங்களாக மாற்றமடைகின்றது. 2015 இன் இறுதியில், நாட்டில் உள்ள மிகப்பெரிய சேமிப்பு வைப்பினை வைத்திருப்பவராக மக்கள் வங்கி காணப்படுவதுடன், இந்தச் சேமிப்பில் மிகப்பெரிய பங்களிப்பானது மேல் மாகாணத்திற்கு வெளியிலிருந்து வந்துள்ளதுடன், இது வங்கியில் கிராமப்புற சமூகத்தின் நம்பிக்கையினை குறிப்பிடுகின்றது. சமூக அபிவிருத்தி நிதியளிப்பில் வங்கியின் நீண்டகால வரலாறானது அனேகமாக நீண்டகால உறவுகளாக மாற்றமடைவதுடன், சில சமயங்களில் பல தலைமுறைகளுக்கு நீடிப்பதுடன், வங்கியின் நீண்டகால நீடிப்புத்திறனை நோக்கி பங்களிப்பு செய்கின்றது.

***எமது சமூக மற்றும் தொடர்புடைய மூலதனத்திலான முதலீடு***




நாம் எமது சமூக மற்றும் தொடர்புடைய மூலதனத்தில் பின்வருவன ஊடாக முதலீடு செய்கின்றோம்.

- எமது நுண்ணிய நிதியளித்தல் அலகினூடாக பிரதானமாக வழங்கப்படும் சமூக அபிவிருத்தி நோக்கிய வங்கியியல் சேவைகள். மீள்நிதியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் எமது சிறிய மற்றும் நடுத்தர நிதியளித்தல் கருவிகள்
- தொழில்முனைவோருக்கான கொள்திறன் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டங்கள்
- சமூக சேவைகள் திட்டங்கள் (கூட்டாண்மை சமூக பொறுப்பாண்மை (கூ.ச.பொ,) நடவடிக்கைகள்) வங்கியின் கூ.ச.பொ. பாதீட்டின் மூலமும் ஓர் சிறிய அளவில் வங்கியினது பணியாளர்கள் சங்கங்களினூாகவும் இடம்பெறுகின்றன.

## சமூகத்திற்கு பெறுமதியினை உருவாக்குதல்

எமது வாடிக்கையாளர் கருத்தாய்வுகள் வினைத்திறன் மற்றும் சௌகரியத்திற்கான வாடிக்கையாளரது கேள்வியினை கோடிட்டுக்காண்பிக்கின்றது. எனவே, 2015 இல், நாம் தொழில்நுட்ப அடிப்படையிலான பின்வரும் கருவிகளில் முதலீடு செய்தோம். பல சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர நடவடிக்கைகளூடாக எமது வாடிக்கையாளர்களுக்கு சௌகரியம் மற்றும் அணுகுதலை மேம்படுத்தும் குறுஞ்செய்தி அனுப்பல் சேவைகள் / அலைப்பேசி வங்கியியல் மற்றும் இணைய வங்கியியல் என்பனவாகும். எமது தொழில்நுட்ப அடிப்படையிலான கருவிகளது நோக்குநிலையும் எண்ணியலாக்கல் வங்கியியலில் எமது எதிர்கால மூலோபாய முனைப்புடன் சீரமைக்கின்றது. அலைப்பேசி வங்கியியல் மற்றும் இணைய வங்கியியல் போன்ற வசதிகள் முக்கியமாக பிரயாணம் மற்றும் நேரக் கிரயம் என்பவற்றினால் வங்கியினது கிளைகளை அணுகுவதற்கு சிரமப்படும் கிராமிய சனத்தொகைக்கு முக்கியமாக நன்மை பயக்கின்றது. இந்த புதிய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப மேடையானது சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் நுண் தொழில்முனைபவர்களுக்கு உயர்ந்த பயனை வழங்குகின்றது. இது 24/7 தொலை அணுகுமுறையினை வழங்குவதுடன் பல்வேறு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கும் வசதியளிக்கின்றது.

2015 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் எமது அலைப்பேசி வாடிக்கையாளர்கள் 113% ஆல் அதிகரித்தும் இணைய வங்கியியல் வாடிக்கையாளர்கள் 43% ஆல் அதிகரித்தும் உள்ளதை அறிக்கையிடுவதில் நாம் பெருமைப்படுகின்றோம். இந்த வளர்ச்சியில் அரைவாசிக்கும் அதிகமானது மேல் மாகாணத்திற்கு வெளியிலிருந்து வந்துள்ளது.

## வர்த்தகக்குறி மூலோபாயங்கள்

எமது வாடிக்கையாளர் தளமானது தனிநபர்களிலிருந்து பாரிய மொத்தவிற்பனை வணிகங்கள் வரை பரந்து காணப்படுகின்றது. பல்வேறு வாடிக்கையாளார் பிரிவுகளுக்கு பொதுவான ஓர் வர்த்தகக் குறியினை விருத்திசெய்வது சிரமமான காரியமாகும். இதற்காகத் தான் நாம் எமது வாடிக்கையாளரது பின்னூட்டங்களுக்கு மதிப்பளிப்பதுடன் குறிப்பிட்ட வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு பொருத்தமான வர்த்தகக்குறிகளை விருத்திசெய்வதற்கு சந்தை கருத்தாய்வுகளது துணையினை எடுக்கின்றோம். CMD / ஊடக சேவை கருத்தாய்வுகளுக்கமைய மக்கள் வங்கியானது இலங்கையில் இரண்டாவது உயர்ந்த தரப்படுத்தப்பட்ட வர்த்தகக் குறியாகும்.

## கருவிகளுக்கு பெறுமதி சேர்த்தல்

எமது வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர்க்கும் வழிவகைகளாக, மாற்றமடையும் வாடிக்கையாளர் தெரிவுகளுக்கேற்ப நாம் வழக்கமாக நடைமுறையிலுள்ள கருவிகளை புதுப்பித்தும் மற்றும் / அல்லது புதிய கருவிகளை அறிமுகப்படுத்தியும் உள்ளோம். இந்த வருடத்தில், முறையற்ற சீட்டு முறைக்கு மாற்றீடாக ஓர் கருவியினை அறிமுகப்படுத்தி சர்வதேச பெண்கள் தினத்தை அனுசரித்தோம். வனிதா பணத் திட்டமிடலானது நுண்ணிய பெண் தொழில்முனைவோர் அவர்களது வணிக முயற்சிகளுக்கு உறுதுணையளிக்கும் முறையான வங்கியியல் பாதுகாப்பிலிருந்து நன்மையடைவதுடன் வளர்ச்சிக்கான ஓர் திடமான அடித்தளத்தை வழங்குகின்றது.

## சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள்

(G4 - PR6, PR7)

அனைத்து சந்தைப்படுத்தல் தொடர்பாடல்களும் வங்கியின் வளர்ச்சி மூலோபாயம் மற்றும் கூட்டாண்மைத் திட்டம் என்பவற்றுடன், இலக்குவைத்த தொடர்பாடல்கள் மற்றும் அதிகூடிய செயல்விளைவினை இயலுமையாக்குவதற்காக சீரமைக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியான வர்த்தகக்குறியிடல் மூலோபாயத்தினை பராமரிக்கும் வேளை, அனைத்து தொடர்பாடல்களும் வங்கியின் கூட்டாண்மை தொடர்பாடல் கொள்கைக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், முறைப்படுத்தல் மற்றும் நெறிமுறை தேவைப்பாடுகளுக்கும் அமைவுறுகின்றன.

சந்தைப்படுத்தல் தொடர்பாடல்களது பயனுறுதித்தன்மை வங்கியின் பரந்த வளர்ச்சி முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

### தடைசெய்யப்பட்ட பொருட்களது விற்பனை (G4 - PR6)

வங்கி தடைசெய்ப்பட்ட பொருட்களை விற்பனை செய்யவோ விளம்பரப்படுத்துவதோ கிடையாது. இதற்கும் மேலாக, வங்கியின் கடன் கொள்கையானது ஆயுதங்கள், வெடிமருந்துகள், சூதாட்டம், கசினோக்கள் மற்றும் அதற்குச் சமனான வணிகங்கள் போன்ற சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதனை தடைசெய்துள்ளது. 100% இணக்கப்பாடானது வங்கியினால் கடுமையாக கடைப்பிடிக்கப்படுகின்றது.

### சந்தைப்படுத்தல் தொடர்பாடல் ஒழுங்குவிதிகளுக்கு அமைவுறுதல் (G4 - PR7)

மீளாய்வாண்டில், விளம்பரப்படுத்தல், விற்பனை ஊக்குவிப்புகள் மற்றும் அனுசரணைகள் உள்ளடங்களான சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் பற்றிய மனமுவந்த நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் அமைவுறாத எவ்வித நிகழ்வுகளுக்கும் முகங்கொடுக்கவில்லை.

### கருவி மற்றும் சேவை குறியிடுதல் (G4 - PR3, PR4, PR5)

வங்கியினது கருவிகள் மற்றும் சேவைகளது குறியிடுதலானது சட்டரீதியான தேவைப்பாடுகளுக்கும் வங்கியியல் துறை சிறந்த நடைமுறைகளுக்கும் அமைவுறுமாறு வேண்டப்படுகின்றது. அமைவுறாமையானது வங்கியினை தண்டப்பணங்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் போன்ற இடர்நேர்கைகளுக்கு வெளிப்படுத்தலாம். எனவே, கருவிகள் மற்றும் சேவைகளை குறியிடும் பிரயோகத்தினை கட்டுப்படுத்தும் முறையான பொறிமுறைகளை வங்கி கொண்டுள்ளது. சேவைகள் குறியீடானது பிரதானமாக கருவிகளது விற்பனை ஊக்க பொருள்கள் மற்றும் விளம்பரம் எனும் வடிவத்தில் வருகின்றது. .

- ஓர் நிலையான சபை அங்கீகரிக்கப்பட்ட அச்சுரு மக்கள் வங்கியின் அனைத்து விற்பனை ஊக்க பொருட்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. இந்தப் பொருட்கள் உள்வாரி நெறிமுறை வழிகாட்டிகளுடன் அமைவுறுவதுடன் வர்த்தகக்குறி உருவத்துடனும் நிலைப்பேருள்ளதாகவும் காணப்படுகின்றது. இது நிறம், வடிவம் மற்றும் செய்தியின் தெளிவு என்பவற்றின் பயன்பாட்டில் நிலைப்பேரினை உறுதிப்படுத்துகின்றது.
- வங்கியினது அனைத்து விளம்பரம் பொருட்களும் மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கு அமைவுறுகின்றன. இது உரிமமளிக்கப்பட்ட வங்கி என இனங்காண்பதுடன் தொடர்பாடல் தகவல்களை வழங்கி மற்றும் தெளிவாக பிரயோகிக்கப்படும் வீதங்களையும் குறிப்பிடுகின்றது.

### குறியிடுதல் மற்றும் கருவிகளது தகவல்களுடன் அமைவுறுதல் (G4 - PR4)

2015 ஆம் நிதியாண்டில், பொருட்கள் மற்றும் சேவைகள் தகவல்கள் மற்றும் குறியிடுதல் தொடர்பாக ஒழுங்குவிதிகள் மற்றும் மனமுவந்த நியதிகளுடன் அமைவுறா எந்த நிகழ்வும் காணப்படவில்லை.

### வாடிக்கையாளர் திருப்தி கருத்தாய்வு (G4 - PR5)

2015 இல் நாம் சேர்வே ரிசர்ச் லங்கா எனும் வெளிவாரி நிபுணத்துவத்துடன் இணைந்து மூன்று வாடிக்கையாளர் கருத்தாங்களை நடாத்தினோம். தெரிவு செய்யப்பட்ட வங்கியின் கிளைகளில் நாம் புலனுணர்வு, மனப்பான்மை மற்றும் அறிவு கருத்தாங்களை முன்னெடுத்தோம். அனைத்து கருத்தாங்களின் கண்டுபிடிப்புகளும் மூலோபாய அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ தீர்மானம் மேற்கொள்வதற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

### வாடிக்கையாளர் தனிமை (G4 - PR8)

வாடிக்கையாளர் இரகசியத்தன்மையானது ஓர் சட்டரீதியான மற்றும் வங்கியியலின் தொழில்சார் தேவைப்பாடாகும். எனவே, வங்கியானது வாடிக்கையாளரது தனிமையை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றது.

- அனைத்து பணியாளர்களினாலும் ஓர் இரகசிய காப்பு ஆணை உறுதிமொழி உறுதிசெய்யப்படுகின்றது.
- ஓர் மூன்றாம் நபருக்கு கணக்கு தகவல்களை வெளிப்படுத்தாமை.
- மின்னஞ்சலது தனிமையினை உறுதிப்படுத்துதல்
- துல்லியமான வாடிக்கையாளர் தகவல்களை பராமரித்தல்
- பெற்றோர் அனுமதித்தாலொழிய வங்கியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கு குழந்தைகள் அணுகுவதனை தடைசெய்தல்.
- வாடிக்கையாளர்களது தனிப்பட்ட தகவல்களில் பணியாளர்களது அணுக்கத்தில் வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

உணர்திறனுள்ள மற்றும் தனிப்பட்ட ஆவணங்களை அகற்றும்போது பாதுகாப்பு செயல்முறைகள் அவதானிக்கப்படுகின்றன. அத்தகைய ஆவணங்கள் ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வங்கி உத்தியோகத்தரது மேற்பார்வையின் கீழ், கசிவுகள் மற்றும் தகவல்களது துஷ்பிரயோகத்தினை தடுப்பதற்காக, எரித்து சாம்பலாக்கப்படுகின்றன.

### *வாடிக்கையாளர் இரகசியத்தன்மை மீறலிலான முறைப்பாடு*

2015 ஆம் நிதியாண்டில் வாடிக்கையாளர்களது இரகசியத்தன்மையின் மீறல் தொடர்பாக சில முறைப்பாடுகள் காணப்பட்டன.

### கருவிகள் மற்றும் சேவைகளில் சட்டரீதியான இணக்கப்பாடு (G4 - PR9)

வங்கியானது நுகர்வோர்கள் மற்றும் வணிகங்களுக்கு பல நிதியியல் கருவிகள் மற்றும் சேவைகள் வரம்பினை வழங்குகின்றது. இந்த ஆண்டறிக்கையின் ஆளுகைப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பல தேசிய ஒழுங்குவிதிகளினால் இந்த கருவிகள் மற்றும் சேவைகளின் அபிவிருத்தி மற்றும் விற்பனை என்பன ஆளுமைப்படுத்தப்படுகின்றது. முறைமைப்படுத்தல் கடப்பாடுகளுக்கு அமைவுறாமை தண்டப்பணங்கள் மற்றும் உரிமத்தின் இழப்பிற்கு வழிவகுக்கும். இதற்கும் மேலாக, கருவிகள் மற்றும் சேவைகளின் தரமானது வங்கியின் நற்பெயரில் நாணயம் மற்றும் வர்த்தகக்குறி தோற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே, வங்கியானது ஏதேனும் புதிய கருவிகளது அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தலுக்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் முறையான செயல்முறையினைக் கொண்டுள்ளது. நடைமுறையிலுள்ள அனைத்து கருவிகளது சட்டரீதியான இணக்கப்பாடானது கிளை வலையமைப்பிடையே வழக்கமாக கண்காணிக்கப்படுகின்றது. மீளாய்வாண்டில், முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டு நிலைமையினை பக்கம் 138 இல் காணப்படும் இணக்கப்பாட்டு அறிக்கையினை பார்வையிடவும்.

இவ்வருடத்தில், வங்கியின் கருவிகள் மற்றும் சேவைகள் வழங்கலில் ஒழுங்குவிதிகள் அல்லது மனமுவந்த நியதிகளுடன் அமைவுறா எவ்வித நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

## உள்ளூர் கடப்பாடுகள்
(G4 - SO1, SO2)

கிராமிய பொருளாதார வளர்ச்சி, தொழில்முயற்சியாண்மை மற்றும் வாழ்க்கைத்தர மேம்படுத்தல்கள் என்பவற்றை ஊக்குவிப்பதற்காக வங்கியின் அபிவிருத்தி மற்றும் நுண்கடன் நிதியளித்தல் அலகானது அடிமட்ட மற்றும் கிராமிய சமூகத்துடன் நெருங்கி செயலாற்றுகின்றது. இது பின்வருவனவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது:

1. குறைவான சேவையளிக்கப்பட் சனத்தொகைக்கு மீள்நிதியளித்தல் கடன்களை வழங்குதல்
2. நுண்கடன் கடனளித்தல்
3. நுண் தொழில்முனைவோர் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான கொள்திறன் கட்டியெழுப்புதல் பயிற்சியினை வழங்குதல்
4. கூட்டாண்மை சமூக பொறுப்பு திட்டங்கள்

நிதியியல் சந்தைகளில் காணப்படும் அதிகரித்த போட்டித்தன்மையின் மத்தியிலும் பொது வைப்புகள் மற்றும் கடனுக்கான கேள்வி என்பவற்றிலான தொடர்ச்சியான வளர்ச்சியின் மூலம் வங்கியின் சமூக உறவுகளைக் கட்டியெழுப்புதல் நோக்கிய அணுகுமுறையின் பயனுறுதித்தன்மைக்கு சான்று பகர்கின்றது. டிசம்பர் 2015 இன் இறுதியில் நாட்டில் ரூபா சேமிப்பில் பாரிய வைப்பினை வைத்துள்ளது.

### சமூக தேவைகள் அடிப்படையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

உள்ளூர் சமூகத்துடனான வங்கியின் ஈடுபாட்டில் விளைவுமிக்க முறையுள் ஒன்றாக, தொழில்முனைபவர்களது வளர்ச்சித் தேவைகளுக்கு உதவியளிப்பதற்காக விசேடமாக விருத்திசெய்யப்பட்ட கொள்திறன் கட்டியெழும்பும் நிகழ்ச்சித்திட்டம் காணப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அறிவுமட்டத்தில், முக்கியமாக கிராமியத் துறையில் நவீன வணிகங்கள் மற்றும் சந்தை அறிவில் காணப்படும் பரந்த இடைவெளியினை நிரப்புகின்றது.

#### *சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தொழில்முனைவு மகிமை*

மக்கள் வங்கியானது நிதியியல் கல்வியறிவு மற்றும் வணிகத் திறன்களை விருத்திசெய்வதற்காக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இந்த ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் இலவசமாக நடாத்தப்படுகின்றது. இது ஏனைய வங்கிகளிலிருந்து 40% பங்குபற்றுனர்களுக்கு சந்தர்ப்பமளிக்கின்றது. 2015 வரைக்கும் வங்கியானது 1,821 நபர்கள் நன்மையடையும் இத்தகைய 11 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

*கேகாலை மாவட்டத்திலுள்ள உத்துவங்கந்தவில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம்*

#### *சமூக அணிதிரட்டல் நிகழ்ச்சித்திட்டம்*

இது சமூகங்களுடன் நேரடியாக மற்றும் தொடர்ச்சியாக கூட்டுமுயற்சியுடன் நடாத்தப்படும் வங்கியின் மிகவும் பயனுறுதிமிக்க அடிமட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பிராந்திய வங்கிக் காரியாலயங்கள் இந்நிகழ்ச்சியில் தோன்றும் கிராமங்களை இனங்காண்கின்றன. இதற்கான தெரிவு வரன்முறையானது தேசிய வறுமைக்கோடான மாதாந்தம் 15,000 க்கும் குறைவாக வாழும் மொத்த சனத்தொகையின் சதவீதமாகும். உயர்ந்த வறுமை மட்டங்களுடனான கிராமங்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன. வங்கியின் நுண்கடனளிப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் கிளைகள், முக்கியமான கிராமிய நபர்களது உள்ளீடு மற்றும் உள்ளூர் அறிவுடன் உதவியளிப்பதற்கு இலக்குவைக்கப்படும் பொருத்தமான நபர்களை இனங்காண்கின்றன. தெரிவு செய்யப்பட்ட நபர்கள் தொடர்பு கொள்ளப்பட்டு, பங்குபற்ற விருப்பமாயின், ஆறு பேர் அடங்கிய குழுக்களாக பிரிக்கப்பட்டு நிதியியல் கல்வியறிவு மற்றும் வணிகத் திறன்களை மேம்படுத்துவதற்கான பல்வேறு கொள்திறன் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அழைக்கப்படுகின்றார்கள். இதன் பிறகு இவர்களுக்கு சுய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு அல்லது விருத்திசெய்வதற்கு ரூபா 25,000 இலிருந்து ஆரம்பிக்கும் தனிப்பட்ட கடன்கள் வழங்கப்படுகின்றன. நுண் தொழிலகங்கள் வங்கியின் உத்தியோகத்தர்களால் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றன.

2015 இன் இறுதியில், வங்கியானது 6,270 நுண்கடன் குழுக்களுக்கு உறுதுணை வழங்கியதுடன் இவற்றில் 90% மான பெறுனர்கள் பெண்களாவர்.

*கம்பஹா மாவட்டத்திலுள்ள அலவ்வ கிராமத்தில் நுண் குழு அங்கத்தவர்களுக்கான நுண்நிதியளிப்பு கடன்கள்*

### பின்தங்கிய மக்களுக்கான நிதியியல் சேவைகளது அணுகுதலை மேம்படுத்துவதற்கான முன்னெடுப்புகள்
(G4 - FS14)

உள்ளடக்கிய நிதியியல் எனும் கொள்கைகளினால் வழிநடத்தப்பட்டு, மக்கள் வங்கியின் கிளை வலையமைப்பானது நாட்டின் பல கிராமிய மற்றும் குறைசேவையளிக்கப்படும் பகுதிகளுக்கு விரிவாக்கப்படுவதுடன், இது சமூகங்களுக்கு முறையான வங்கியியல் சேவைகளுக்கான அணுக்கத்தை வழங்குகின்றது. இந்த கிளை வலையமைப்பிற்கும் மேலாக, வங்கியியல் வசதிகளுக்கான அணுகுதலை மேம்படுத்துவதற்காக பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றன.

- மூன்று மொழிகளிலும் தொடர்பாடக்கூடிய பணியாளர்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஈடுபடுத்தல்
- மூன்று மொழிகளிலும் அனைத்து விளம்பரப் பொருட்களையும் வழங்குதல்
- மூன்று மொழிகளிலும் வங்கியின் ஆண்டறிக்கையினை வழங்குதல்
- கிளைகளில் சக்கரநாற்காலிகளது அணுக்கத்துக்கு வசதியளித்தல்
- வயது முதிர்ந்த மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு விசேட சேவைகளை வழங்குதல்

## பொருளாதார ரீதியில் பின்தங்கிய பகுதிகளுக்கான அணுகுதல் மையங்கள்

(G4 - FS13)

வங்கியானது முறையான நிதியியல் சேவைகளை நாட்டின் சில வறுமையான மற்றும் மிகவும் குறைசேவையளிக்கப்படும் பகுதிகளுக்கு கொண்டுசெல்கின்றது. உதாரணமாக, முரண்பாடுகளிலிருந்து மீளெழும் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி தேவைப்படுகின்றது. அதேநேரம், நாட்டின் ஏனைய பாகங்களோடு ஒப்பிடும்போது உயர்ந்த மட்டத்திலான வறுமையின் காரணமாக அபிவிருத்தி குன்றிய பகுதியாக ஊவா மாகாணம் காணப்படுகின்றது. பின்வரும் அட்டவணையானது வங்கியின் கிளைகள், த.வ.இ., வைப்புகள் மற்றும் இந்த பகுதிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட முற்பணங்கள் பற்றிய சுருக்க விளக்கத்தினை வழங்குகின்றது.

| | 2015 | 2014 |
|---|---|---|
| வட மாகாணம் | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 48 | 47 |
| தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களின் எண்ணிக்கை | 22 | 16 |
| வைப்புகள் (ரூபா மில்லியன்) | 32,871 | 28,212 |
| முற்பணங்கள் (ரூபா மில்லியன்) | 16,591 | 13,186 |
| கிழக்கு மாகாணம் | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 61 | 59 |
| தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களின் எண்ணிக்கை | 37 | 34 |
| வைப்புகள் (ரூபா மில்லியன்) | 32,249 | 25,542 |
| முற்பணங்கள் (ரூபா மில்லியன்) | 29,099 | 20,984 |
| ஊவா மாகாணம் | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 49 | 49 |
| தன்னியக்க வங்கியியல் இயந்திரங்களின் எண்ணிக்கை | 28 | 27 |
| வைப்புகள் (ரூபா மில்லியன்) | 33,095 | 27,931 |
| முற்பணங்கள் (ரூபா மில்லியன்) | 22,198 | 17,370 |

## விசேட பிராந்தியம், கருவிகளது வகைகள் மற்றும் துறைகள் அடிப்படையிலான வணிகங்களுக்கான தேக்கத்தின் சதவீதம் (பக்கம் 112 ஐ பார்வையிடவும்)

## சமூக நலன்களை வழங்குவதற்கான வடிவமைக்கப்பட்ட கருவிகள்

மக்கள் வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களது அபிவிருத்தி அலகு மற்றும் அபிவிருத்தி மற்றும் நுண்நிதியளித்தல் அலகு என்பன பின்வரும் துறைகளுக்கு உறுதுணையளிப்பதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட நிதியியல் பொதிகளை வழங்குகின்றன. விவசாயம், கால்நடை, சிறிய கைத்தொழில்கள், தேயிலை மற்றும் தென்னைப் பயிர்ச்செய்கை போன்றவற்றுக்காகும். நிதியியல் உதவிகள் வங்கியின் நிதியினாலும் மீள்நிதியளித்தல் கடன் திட்டங்களினூடாகவும் வழங்கப்படுகின்றன. பின்வரும் அட்டவணையானது சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள், அபிவிருத்தி மற்றும் நுண்நிதியளித்தல் என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட வசதிகளது விபரங்களை சுருக்கி விளக்குகின்றது.

2015 டிசம்பர் 31 இல் நிறைவடைந்து வருடத்திற்குரியது

| துறை | 31.12.2015 இல் உள்ளவாறானது | | | |
|---|---|---|---|---|
| | வங்கியினால் நிதியளிக்கப்பட்டது | | மீள்நிதியளித்தல் திட்டங்களினூடாக நிதியளிக்கப்பட்டவை | |
| | கடன்களின் எண்ணிக்கை | நிலுவையிலுள்ள மீதி (ரூபா மில்லி.) | கடன்களின் எண்ணிக்கை | நிலுவையிலுள்ள மீதி (ரூபா மில்லி.) |
| விவசாயம் | 4,752 | 6,450 | 9,482 | 858 |
| வணிகம் | 34 | 12 | 1,800 | 276 |
| நுகர்வு | 5 | 7 | 11 | 1 |
| நிதியியல் | - | - | 39 | 3 |
| வீடு மற்றும் ஆதன அபிவி, | 10 | 1 | 12 | 0 |
| கைத்தொழில் | 2,626 | 92 | 989 | 144 |
| ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் | 31,860 | 3,912 | 10,095 | 629 |
| சேவைகள் | 1 | 0 | 149 | 6 |
| உல்லாசத்துறை | - | - | 14 | 8 |
| உப கூட்டுத்தொகை | 39,288 | 10,474 | 22,591 | 1,925 |

## கூட்டாண்மை சமூக பொறுப்பு (கூ.ச.பொ.) திட்டங்கள்

இவ்வாண்டில், நாம் வங்கியின் கூ.ச.பொ. பாதீடு மற்றும் வங்கியின் பணியாளர்கள் சங்கங்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட நலன்புரி திட்டங்களினூடாகவும் சமூக நலன்புரி திட்டங்களில் ரூபா 39 மில்லியனுக்கும் அதிகமாக செலவிட்டுள்ளோம். வங்கியின் கூ.ச.பொ, முன்னெடுப்புகள் குறைசேவையளிக்கப்பட்ட பிள்ளைகளது கல்வி, கலாச்சார நிகழ்வுகள் மற்றும் சுற்றுச்சூழல் முன்னெடுப்புகளுக்கு உதவுவதில் கவனஞ்செலுத்தப்பட்டது. வங்கியினது பணியாளர்கள் சங்கங்களான - பௌத்த சங்கம், இந்து சங்கம், கிறீஸ்தவ சங்கம் மற்றும் இஸ்லாமிய மஜ்லிஸ் என்பன வங்கியினால் வழங்கப்படும் நலன்புரி நிதிகளினூடாக பல சமூக திட்டங்களை நடாத்தின.

*இந்த வருடமும் மக்கள் வங்கியானது வரலாற்று சிறப்புமிக்க கண்டி எசல பெரஹராவுக்கு பிரதான அனுசரணையாளராக முன்வந்துள்ளது.*

*மக்கள் வங்கியின் பௌத்த சங்கத்தினால் வெலிகந்த அரசாங்க வைத்தியசாலையிலுள்ள மகப்பேற்று மருத்துவமனையானது முற்றாக நவீனமயப்படுத்தப்பட்டு பொதுமக்களது நலனுக்காக திறந்துவைக்கப்பட்டது.*

*மக்கள் வங்கியின் கிறீஸ்தவ சங்கமானது புத்தளம் மாவட்டத்திலுள்ள கட்டைக்காடு ரோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தின் பிள்ளைகளுக்கு எழுதுகருவிகள் மற்றும் பாடசாலை உருப்படிகளான பாடசாலை பைகள் மற்றும் புத்தகங்களை நன்கொடை செய்தது.*

*வங்கியின் இந்து சங்கத்தினால் மொனராகலை ஸ்ரீ கௌரி தமிழ் வித்தியாலயத்திற்கு தளபாடம், புத்தகங்கள், ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் வாசிகசாலை உபகரணங்களை நன்கொடை செய்தது.*

*மக்கள் வங்கியின் இஸ்லாமிய மஜ்லிஸ்ஸினால் காலி மாவட்டத்திலுள்ள நகதுவ எனுமிடத்திலுள்ள ஓர் வறிய குடும்பத்திற்கு ஓர் வீடு கொடையளிக்கப்பட்டது.*

## சுற்றுச்சூழல் பொறுப்பாண்மை (G4 - EN27)

கருவிகள் மற்றும் சேவைகள் விநியோகத்தினூடாக வங்கியினது சுற்றுச்சூழல் தாக்கமானது பிரதானமாக வளங்களது நுகர்வு வடிவத்தினாலாகும். வருடாந்தம் வங்கியானது அதன் கிளைகள் மற்றும் தலைமைக்காரியாலயத்தின் பாவனைக்காக அண்ணளவாக 200 மெட்ரிக்தொன் ஆவணங்களை அச்சிடுகின்றது. இதற்கும் மேலாக, வங்கியினது தலைமைக் காரியாலயம் மற்றும் கிளைகள் வலையமைப்பானது தண்ணீர் மற்றும் வலுவினை நுகர்வு செய்கின்றது. ஏனைய சுற்றுச்சூழல் தாக்கங்கள் வங்கியினது கிளைகளது கட்டுமாணத்தினூடாக ஏற்படுகின்றன.

## எமது சுற்றுச்சூழல் நீடிப்புத்திறன் மூலோபாயம்

2015 இல், மக்கள் வங்கியானது எதிர்காலத்தில் சுற்றுச்சூழல் தாக்கங்களை முகாமைப்படுத்துவதற்காக பல பக்க மூலோபாயங்களை இயக்குகின்றது. அடுத்த ஐந்தாண்டுகளில் வங்கியின் சுற்றுச்சூழல் அடிச்சுவட்டினை கணிசமானளவு குறைப்பதற்காக ஓர் தாளற்ற மற்றும் மிகவும் ஒன்றோடொன்றிணைந்த வணிகச் செயற்பாட்டிற்கான ஓர் மூலவரைபடத்தினை வடிவமைத்துள்ளோம். 2020 ஆம் ஆண்டளவில் எமது பரவலான எண்ணியலாக்கல் திட்டங்கள் கடதாசி நுகர்வினையும் இயற்பியல் ஆவணங்களது அச்சிடுதலையும் கணிசமாக குறைக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம். உயர்ந்த இலத்திரணியல் இணைப்பானது கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் பயிற்றுவித்தல் என்பவற்றுக்கான பிரயாணத்தேவைகளையும் குறைக்கும். இது மறுபுறத்தில் போக்குவரத்திற்கான படிவ எரிபொருளுக்கான நுகர்வினையும் குறைக்கும். இந்த நன்மைகள் எமது வாடிக்கையாளர்களுக்கும் சென்றடையும் என நாம் நம்புகின்றோம். ஏனெனில், இணைய வங்கியியல் மற்றும் அலைப்பேசி வங்கியியல் வசதிகளின் நிமித்தம் வங்கியின் கிளைகளுக்கு வாடிக்கையாளர்கள் நேரடியாக பயணிக்கவேண்டிய தேவை குறைவடையும்.

## கரிமங்களது அடிச்சுவட்டினை குறித்தல்

2015 இல், வங்கியின் கரிமங்களது அடிச்சுவட்டினை கணக்கிடுவதற்காக, மக்கள் வங்கியானது கார்பன் கொன்சல்டேஷன் கம்பனியுடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை கைச்சாத்திட்டது. கணக்காய்வு செயல்முறையானது 2016 இல் ஆரம்பிக்கப்படும். வங்கியின் கரிமங்களது அடிச்சுவட்டினை புரிந்துகொள்வது மற்றும் கழிவு முகாமைத்துவம் உள்ளடங்களான கரிமங்களது அடிச்சுவட்டினை முகாமைப்படுத்துவதற்கான நீடிப்புத்திறன் முறைகளை அபிவிருத்திசெய்தல் என்பவற்றிற்கான முதற்படி இது என நாம் நம்புகின்றோம்.

## கழிவுகளை அகற்றல்

தாள், உபகரணங்கள் மற்றும் அச்சகத்திலிருந்து கழிவுகள் போன்ற கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக வங்கியானது தற்போது பல்வேறு செயல்முறைகளைக் கொண்டுள்ளது. சபை அங்கீகரிக்கப்பட்ட சுற்று நிருபங்கள் பின்வருவனவற்றின் அகற்றலுக்கு வழிகாட்டலை வழங்குகின்றது.

- பழுதடைந்த / பாவனைக்குதவாத உபகரணங்கள், இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள், எழுதுகருவி மற்றும் ஏனைய சரக்கிருப்பு உருப்படிகள்
- வங்கியின் வளாகத்தில் சேர்க்கப்படும் குப்பைகள்

மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்ட மூன்று தாள் மீள்சுழற்சி செய்யும் கம்பனிகளுடாக பாவிக்கப்பட்ட பாரியளவு தாள்களை மீள்சுழற்சி செய்வதன் மூலம் நாம் ஏற்கனவே நிலநிரப்பல் கழிவுகளை குறைத்துள்ளோம். நுண்உணர் ஆவணங்கள் எரித்துச் சாம்பலாக்குவதனூடாக அகற்றப்படுகின்றன. இலத்திரணியல் கழிவு மற்றும் தளபாடங்கள் ஒப்பந்தப்புள்ளியூடாக அகற்றப்படுகின்றன.

2015 இல் விருத்திசெய்யப்பட்ட நீடிப்புத்திறன் திட்டத்தின் கீழ், வங்கியானது ஓர் முற்றுமுழுதான கழிவு முகாமைத்துவத்தினை விருத்திசெய்யும். இது மீள்சுழற்சி மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் தாள் கழிவுகளை அழித்துவிடுவதற்காக ஓர் பொருண்மையான துண்டாக்குதல் இயந்திரத்தின் கொள்வனவினை உள்ளடக்கும். எதிர்காலத்தில் மிகவும் பயனுறுதி மிக்க மற்றும் சுற்றுச்சூழல் தோழமையான கழிவு முகாமைத்துவ வழிமுறைகளை விருத்திசெய்வதற்காக ஓர் கழிவு முகாமைத்துவ கணக்காய்வு நடாத்தப்படும்.

துண்டாக்கப்படும் தாள்கள் ஓர் மீள்சுழற்சி முறையாக தாள் உற்பத்திசெய்யும் கம்பனிகளுக்கு விற்பனை செய்யப்படும்.

சுற்றுச்சூழலுக்கு கேடுவிளைவிக்கும் உருப்படிகளது பாதுகாப்பான நீக்கத்திற்காக ஓர் முறையாக ஆவணப்படுத்தப்பட்ட செயல்முறை அமுல்படுத்தப்படும். இலத்திரணியல் குமிழ்கள், கணினிகள், வெற்று மைப்பொடி பெட்டகங்கள் மற்றும் பிளாஸ்டிக் என்பவற்றின் நீக்கமானது இந்த செயல்முறையின் கீழ் வரும்.

## பசுமை வங்கியியல்

பசுமை வங்கியியல் கருத்தாங்களது அறிமுகத்தினூடாக அதன் பாரம்பரிய வங்கியியல் மாதிரிக்கு மக்கள் வங்கியானது ஓர் கருத்தியல் நகர்வினை முன்னெடுத்துள்ளது. தற்போது வங்கியானது சுற்றுச்சூழல் தாக்கங்களை குறைக்கும் இணைய மற்றும் அலைப்பேசி அடிப்படையான வங்கியியல் வசதிகளை வழங்குகின்றது. அத்துடன் அனைத்து கடன் விண்ணப்பங்களும் எங்கெங்கு சட்டரீதியாக தாக்க மதிப்பீடுகள் தேவைப்படுகின்றதோ, சுற்றுச்சூழல் தாக்கங்களுக்கு சல்லடையிடப்படுகின்றது. ஓர் இலத்திரணியல், தாளற்ற மேடையில் மாத்திரம் விநியோகிக்கப்படும் பசுமைக் கருவிகளையும் வங்கி விருத்திசெய்கின்றது. வங்கியானது படிப்படியாக முழுவதுமான வங்கியியல் செயல்முறையினை ஓர் பாதுகாப்பான, இலத்திரணியல் மேடைக்கு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளது. மேலதிகத் தகவல்களுக்கு பக்கம் 89 இல் காணப்படும் அறிவுசார் மூலதனப் பகுதியினை வாசிக்கவும்.

***சூரியத்திறன் மக்கள் வங்கி***

*முதலாவது சூரியத்திறன் திட்டமானது மக்கள் வங்கியின் நுகேகொட கிளையில் 2016 இல் ஆரம்பிக்கப்படும். இதன் பின்னர் தேறிய அளவிடலுக்கு வசதியளிப்பதற்காக மக்கள் வங்கியின் அனைத்து கிளைகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும்.*

*வங்கியானது சூரியத்திறனால் இயக்கக்கூடிய இலத்திரணியல் வங்கியியல் இயந்திரங்களுக்கான சாத்தியப்பாட்டினையும் கருதுகின்றது.*

# பெறுமதி உருவாக்கம்

எமது மூலதனத்தை முகாமைப்படுத்தல்

## பசுமை கட்டியெழுப்புதல் கருத்தாக்கம்

எமது அனைத்து எதிர்கால கட்டுமாணங்களுக்கும் "பசுமை கட்டியெழுப்புதல்" கருத்தாக்கத்தினை (பசுமை நிர்மாணம் அல்லது நீடிப்புத்திறனுடைய கட்டிடம் எனவும் அறியப்படும்) அமுலாக்குவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். கட்டிட வடிவமைப்பிலிருந்து, பயன்படுத்தப்படும் கட்டமைப்பு மற்றும் செயல்முறை வரை கட்டுமாணமானது சுற்றுச்சூழல் தோழமை மற்றும் வளங்கள் ஏற்புடைவாய் இருக்கும். எமது அனைத்து எதிர்கால கூரைகட்டுதலும் சுற்றுச்சூழல் தோழமையான பொருட்களினால் மேற்கொள்ளப்படுவதுடன் கல்நாரின் (எஸ்பஸ்டஸினது) பயன்பாடு இடைநிறுத்தப்படும். அனைத்து புதிய கட்டிடங்களிலும் வலுவினை சேமிக்கும் சிறப்பியல்புகள் ஒன்றிணைக்கப்படும்.

பசுமை கட்டிட கருத்தாக்கத்துடன் நாம் பின்வருவனவற்றை அடைவதற்கு எண்ணியுள்ளோம்.

- வலு மற்றும் ஏனைய வளங்களது பயனுறுதிமிக்க பயன்பாடு
- பணியாளர்களது ஆரோக்கியத்தை பாதுகாத்தல் மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்தல்
- மீள்சுழற்சி, கழிவை குறைத்தல்

## ஓர் சுற்றுச்சூழல் முனைப்புடைய கருவிகள் மற்றும் சேவைகள்

(G4 - FS8)

பீபள்ஸ் நெட் : மக்கள் வங்கியினது இணைய வங்கியியல் தலைவாசலானது நவீன தொழில்நுட்பத்துடனும் வினைத்திறனான சேவையுடனும் மேம்படுத்தப்படும். எதிர்காலத்தில் இது எமது பாரிய வங்கியியல் மார்க்கங்களுள் ஒன்றாகக் காணப்படும். வங்கியியல் கொடுக்கல் வாங்கல்களை ஓர் இலத்திரணியல் மேடைக்கு இடம்பெயரச்செய்வது தாள் நுகர்வில் வியத்தக்க வீழ்ச்சியினை ஏற்படுத்தும்.

பீபள்ஸ் மொபைல் எப்: மக்கள் வங்கியின் அலைப்பேசி வங்கியியல் பிரயோகமானது ஏற்கனவே ஓர் திடமான வணிக வளர்ச்சி மார்க்கமாக உருவெடுப்பதுடன் இது வளங்களது நுகர்வினை குறைப்பதற்கும் வசதியளிக்கும்.

YES இளைஞர் சேமிப்புக் கணக்கு : இந்தக் கருவியானது இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் ஊடாக பயன்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய சேமிப்பு புத்தகங்களுக்குப் பதிலாக லுநுளு சேமிப்பாளர்கள் வங்கிக் கூற்றுக்களை மின்னஞ்சலூடாக பெற்றுக்கொள்கின்றார்கள்.

## குறிப்பிட்ட சுற்றுச்சூழல் கருவிகளது நாணயரீதியான பெறுமதி

சுற்றுச்சூழல் தோழமையான கருவிகள் மற்றும் சேவைகளது அமுலாக்கலானது பிரதானமாக எழுதுகருவிகள் மற்றும் மின்சாரம் என்பவற்றுடன் தொடர்புடைய செலவினத்தை குறைப்பதற்கு விரிவாக்கப்படுகின்றது. இது எமது செலவினத்தில் கணிசமான சேமிப்பு என நாம் நம்புகின்றோம்.

## சுற்றுச்சூழல் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு

2015 ஆம் ஆண்டில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல கட்டிடங்களது நிர்மாணத்தின் மத்தியிலும் வங்கியானது எவ்விதமான முறைமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கோ முகங்கொடுக்கவில்லை என்பதுடன் சுற்றுச்சூழல் ஒழுங்குவிதிகளில் எவ்விதமான மீறல்களை மேற்கொண்டதாகவோ குற்றஞ்சாட்டப்படவில்லை.

# செயன்முகாமைப் பொறுப்பு »

98 ஆளுகை மற்றும் நெறிமுறைகள்
104 இடர்நேர்கை முகாமைத்துவம்
131 சபை உப குழுக்களது அறிக்கைகள்
138 முறைமைப்படுத்தல் இணக்கப்பாடுகள்
140 சிறந்த நடைமுறை நியமங்களுக்கு அமைவுறுதல்
148 உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று
150 உள்ளகக் கட்டுப்பாடுகளில் கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிப்பாட்டு அறிக்கை
152 கூட்டாண்மை ஆளுகை மற்றும் உண்மை கண்டுபிடிப்புகளில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

# செயன்முகாமை

## ஆளுகை மற்றும் ஒழுக்கநெறி

ஆளுகை தொடர்பான மக்கள் வங்கியின் எண்ணக்கரு ஒருமுகப்படுத்தப்பட்ட படிமுறையாக அதாவது நிலையான வியாபார தொழிற்பாட்டின் உயிர் மூச்சாக நோக்கப்படுகின்றது. மக்களின் உடமையாக மற்றும் நாட்டின் இரண்டாவது பெரிய வங்கியாக, வங்கியின் செயற்பாட்டின் முக்கியத்துவத்துடன் சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கம் தொடர்பாகவும் நாங்கள் விழிப்பாக உள்ளோம். அதனால் மக்கள் வங்கியின் நல்லாளுகையானது வியாபாரத்தை மட்டும் கட்டாயமக் கொண்டிராமல் சமூகப் பொறுப்பையும் தன்னகத்தே கொண்டுள்ளது. நாங்கள் இலங்கை அரசாங்கத்திற்கும், எங்கள் பிரதான பங்குதாரர்களுக்கும் மட்டுமல்லாது, மக்கள் வங்கியாக இலங்கை மக்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டியவர்களாவோம்.

### எங்கள் ஆளுகையின் சட்டகம்

(G4 - 34)

மக்கள் வங்கியின் ஆளுகைச் சட்டகத்தின் அதிகமான பகுதிகள் சட்டத்தினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளதுடன், மக்கள் வங்கிச் சட்டத்திற்கு மேலதிகமாக, நிதித்துறைக்கு பிரயோகிக்கக்கூடிய சட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த சட்டரீதியான கட்டமைப்பு வியாபார தொழிற்பாடுகளின் ஒழுக்கநெறிக் கோவையை அடிப்படையைக் கொண்டிருக்கும் சம்பிரதாய உள்ளக விதிமுறைகளினால் ஆதாரப்படுத்தப்படுகின்றது. அத்துடன், சிறந்த ஆளுகையை அளவிடுவதற்கு சுதந்திரமான வெளிவாரிக் கணக்காய்வின் மீது இலங்கை கணக்காய்வாளர் நாயகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இணக்கப்பாடு மற்றும் நிதியியில் நேர்மை ஆய்வுசெய்யப்படுகின்றது. இந்த மீளாய்வு வருடத்திற்கான வங்கியின் இணக்கப்பாடு நிலை தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 138-139 வரையான பங்கங்களில் உள்ள இணக்கப்பாட்டு அறிக்கைகையையும் 152-173 வரையுள்ள பக்கங்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையினையும் வாசிக்கவும்.




### பெறுமதிகள் மற்றும் தொழிற் கோட்பாடுகள்

(G4 - 56)

அனைத்து ஊழிகர்களினதும், முகாமைத்துவத்தினதும் மற்றும் சபையினதும் தொழிற்கோட்பாட்டு நியமங்கள் எங்கள் மதிப்புக் கூற்று மற்றும் ஒழுக்கநெறிக் கோவையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. நாம், எங்கள் பெறுமதி வங்கியின் நேர்மையான நெறிமுறை மற்றும் எதிர்கால நிலைத்திருக்கும் தன்மையை பலப்படுத்தலை நோக்கி மையப்படுத்தப்பட்டுள்ளது என நம்புகின்றோம்.

### ஒழுக்கநெறிக் கோவை

ஒழுக்கநெறிக் கோவை அனைத்து ஊழியர்களுக்கும் மற்றும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களினதும் நேர்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நிறுவனத்தின் ஒழுக்கநெறி நியமங்களை உருவாக்குவதற்கும் பிரயோகிக்கப்படுகின்றது. அதன் பிரயோகத்தைப் பலப்படுத்துவதற்காக தற்போதைய நிதி ஆண்டில் கோவையானது மீள்திருத்தம் செய்யப்பட்டது.

### ஒழுக்காற்றல் கோவை

ஒழுக்காற்றல் கோவை தவறான நடத்தைகள் எனக் கருதப்படுபவை எவை மற்றும் அவ்வாறான நடவடிக்கைகளின் போது பிரயோகிக்கக்கூடிய சம்பிரதாயமான ஒழுக்காற்றல் நடைமுறைகள் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துகின்றது.

### விசில்புளோவர் கொள்கை

தவறான நடத்தை மற்றும் ஊழல் என்பவற்றுக்கு எதிராக விசில்புளோவர் கொள்கைகையைப் பின்பற்றுகின்றது. ஊழலுக்கு எதிராக பூஜ்ஜிய தாங்குதிறன் அணுகுமுறையைப் பின்பற்றுவதனால், இவ்வாறன முறைப்பாடுகளைக் கையாளுவதற்கு பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

### வாடிக்கையாளர் பட்டயம்

மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் பட்டயம் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள வாடிக்கையாளர் உரிமைகளைப் பாதுகாக்கும்.

**மக்கள் வங்கியின் மதிப்புக்கூற்று**

» **நாட்டின் உயிர்நாடியாக இருத்தல்**

எங்கள் வங்கியின் பணிவான ஆரம்பம் ஒவ்வொரு இலங்கையரினதும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதன் மூலமும், நாட்டின் அபிலாஷையைக் கருத்தில் கொண்டு அரசின் முயற்சிகள் மற்றும் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதன் மூலமும் நாடித்துடிப்பாக உள்ளது.

» **தொடர்ச்சியான கற்றல் கலாச்சாரம் மற்றும் குழுச் சக்தி**

நாங்கள் எங்கள் வினைத்திறனையும் செயற்திறனையும் மேம்படுத்திக் கொள்வதற்கு, எங்களுடைய அறிவினை வெளியில் இருந்து பெற்றுக்கொள்ளும் அறிவு மூலமும் சொல்லாமல் குறிப்பிடப்பட்ட அறிவினை கண்டுபிடித்து பதிவுசெய்வதன் மூலமும் மேம்படுத்திக்கொள்வதற்கு முயற்சி செய்கின்றோம்.

நாங்கள் இந்த வெற்றிக்கு எங்கள் மக்களும், பொதுவான இலக்கை நோக்கு குழுவாக ஒவ்வொருவரும் பணிபுரிவதே காரணம் என நம்புகின்றோம்.

» **வலுவூட்டல் மற்றும் பல்வகைமை**

நாங்கள் புத்தாக்கமுள்ள தயாரிப்புகளை, சேவைகளை மற்றும் படிமுறைகளை அவர்களுடைய ஆக்கதிறன் மூலம் வெளிக்கொணர்வதற்கு எங்கள் மக்களை வலுவூட்டுகின்றோம். நாங்கள், பல்வகைத்தன்மை எங்களை எப்போதும் பலமூட்டும் என விளங்கிக்கொண்டதனால் வாடிக்கையாளரின் வேறுபாடுகளை மதிக்கின்றோம்.

» **வாடிக்கையாளர் மையம் மற்றும் விரைவூக்கம்**

எங்கள் சேவைகளின் பெறுமதியை மேம்படுத்துவதன் ஊடாகவும் தீர்மானங்களின் போது எப்போதும் அவர்களை மையப்படுத்துவதன் ஊடாகவும் எங்கள் வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் வாடிக்கையாளர் தீர்வுகளை வழங்குகின்றோம். நாங்கள் மாற்றங்களை அரவணைத்து நாங்கள் எங்களை மீள வரைவிலக்கணப்படுவதனால், எங்கள் வாடிக்கையாளரின் தனிப்பட்ட தேவைகளை தீர்ப்பதற்கு பொறுப்புடையவர்களாகவும் நெகிழ்வுடையவர்களாகவும் இருக்கின்றோம்.

» **நேர்மை மற்றும் பொறுப்புக்கூறல்**

ஒரு நிதியியல் நிறுவனமாக, நேர்மை மற்றும் நியாயம் என்பன எமது பலமாகும். இது எங்கள் முழுமையான தாபனத்தில் எங்களுடைய தாபனக் கலாச்சாரத்தில் பேணிப்பாதுகாக்கப்பட்டுள்ளதுடன், நாங்கள் யார் என்பது பற்றி மிகப்பெருமையையும் அளிக்கின்றது. பொறுப்புக்கூறும் மற்றும் தங்கியிருக்கும் வங்கி எனும் வகையில், நாங்கள் எங்களுடைய நடவடிக்கைகளுக்கு எங்கள் பிரதான பங்குதாரர்களுக்கு பொறுப்புடையவர்களாகின்றோம்

## ஆளுகை கட்டமைப்பு

(G4-34)

மக்கள் வங்கியின் உயர் ஆளுகை அமைப்பாக ஏழு உபகுழுச் சபைகளினால் பலப்படுத்தப்படும் பணிப்பாளர் சபை அமைந்துள்ளது.



## சபை உபகுழுக்களும் அவற்றின் செயற்பாடுகளும்



## பொருளாதார, சூழல் மற்றும் சமூகத் தாக்கங்கள் மீது தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பொறுப்பாக உள்ள குழுக்கள்

வங்கியின் நிலையான நிதியியல் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு ALCO, நிறைவேற்றுக் கடன் குழுச் சபை (BECC) மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துக் குழுச் சபை (BIRMC) என்பவை நேரடிப் பொறுப்புடையவையாகும். அதனால் அந்தக் குழுக்கள் வங்கியின் பொருளாதார தாக்கத்திற்கு தங்கள் பங்களிப்பினை வழங்குகின்றன. விசேடமாக ஒப்படைக்கப்பட்ட சமூக மற்றும் பொருளாதார தீர்மானங்களை எடுப்பதற்கு உப குழுச் சபைகளை வங்கி கொண்டிருக்கவில்லை. எனினும், சமூக மற்றும் சூழல் கருத்திட்டங்களை உள்ளடக்கிய வங்கியின் கூட்டிணைந்த சமூக பொறுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சில வேளைகளில் சபையின் அனுமதி கோரப்படும். அதனால் வழமையான நடவடிக்கைகளில் சமூக மற்றும் சூழல் தாக்கத்தை உள்ளடக்கிய கூட்டிணைந்த சமூக பொறுப்பு நடவடிக்கைகளை சபை மீளாய்வு செய்யும்.

### 2015 இல் சபை கூட்டங்களில் சமூகமளிப்பு

| சபை அங்கத்தவர் | சமூகமளிப்பதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு ஹேமசிறி பிரணாந்து | 14 | 14 |
| திரு ஜெஹான் பி அமரதுங்க | 14 | 13 |
| செல்வி ஜி.டி.சி. ஏக்கநாயக்க | 14 | 13 |
| திரு பிலீசியன் பெரோ | 13 | 10 |
| டாக்டர். அமிந்த பெரேரா | 3 | 3 |
| திரு எம் எச் ஜமால்தீன் | 3 | 2 |
| திரு அன்டன் ஹேமந்த | 3 | 3 |
| திரு எஸ் சீ பி செனவிரத்ன | 3 | 3 |
| திரு ஜானக சுகததாச | 10 | 9 |
| திரு ஏ சீ எஸ் வர்ணசூரிய | 9 | 6 |
| திரு எஸ் ஏ கலபொட | 8 | 8 |
| திரு கே ராஜேந்திரன் | 8 | 7 |

### உபகுழுச் சபைக் கூட்டங்களுக்கான வருகை

*2015இல் நடைபெற்ற கணக்காய்வு குழுச் சபைக் கூட்டங்கள்*

| கணக்காய்வு குழுச் சபை (டீயுஊ) | சமூகமளிப்பதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு ஜெஹான் பி அமரதுங்க | 5 | 5 |
| செல்வி ஜி.டி.சி. ஏக்கநாயக்க | 5 | 5 |
| திரு எம் எச் ஜமால்தீன் | 1 | 1 |
| திரு எஸ் ஏ கலபொட | 3 | 2 |

*2015இல் நடைபெற்ற நிறைவேற்று கடன் குழுச் சபைக் கூட்டங்கள்*

| நிறைவேற்று கடன் குழுச் சபை (டீறு ஊஊ) | சமூகமளிப்பதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு ஜானக சுகததாச | 9 | 8 |
| திரு கே ராஜேந்திரன் | 5 | 4 |
| திரு ஏ சீ எஸ் வர்ணசூரிய | 8 | 7 |

*2015இல் நடைபெற்ற மனிதவள மற்றும் ஊதியக் குழுச் சபைக் கூட்டங்கள்*

| மனித வள மற்றும் ஊதியச் சபைக் குழுச் சபை (டீர் சுசுஊ) | சமூகமளிப்பதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு ஹேமசிறி பிரணாந்து | 5 | 5 |
| திரு பிலீசியன் பெரோ | 5 | 5 |
| திரு அன்டன் ஹேமந்த | 1 | 1 |

*2015இல் நடைபெற்ற ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபைக் கூட்டங்கள்*

| ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுச் சபை (BIRMC) | சமூகமளிப்பதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு ஜெஹான் பி அமரதுங்க | 4 | 4 |
| செல்வி ஜி.டி.சி. ஏக்கநாயக்க | 4 | 4 |
| திரு பிலீசியன் பெரோ | 4 | 3 |
| டாக்டர். அமிந்த பெரேரா | 2 | - |

*2015இல் நடைபெற்ற முதலீட்டு வங்கிச்சேவைக் குழுச் சபைக் கூட்டங்கள்*

| முதலீட்டு வங்கிச் சேவைக் குழுச் சபை (BIBC) | சமூகமளிப்பதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு ஜெஹான் பி அமரதுங்க | 3 | 3 |
| செல்வி ஜி.டி.சி. ஏக்கநாயக்க | 1 | 1 |
| திரு எஸ் சீ பி செனவிரத்ன | 1 | 1 |
| திரு ஜானக சுகததாச | 2 | 2 |
| திரு. கிறிஸ்மல் வர்ணசூரிய | 2 | 2 |

*2015இல் நடைபெற்ற நியமனக் குழுச் சபைக் கூட்டங்கள்*

| நியமனக் குழுச் சபை (BNC) | சமூகமளிப்பதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு ஹேமசிறி பிரணாந்து | 3 | 3 |
| திரு ஜெஹான் பி அமரதுங்க | 3 | 3 |
| செல்வி ஜி.டி.சி. ஏக்கநாயக்க | 3 | 3 |

### சபையின் பொறிநுட்பம் மற்றும் சுதந்திரம்

சபையின் நியமனங்கள் மக்கள் வங்கியின் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டம் பொறுப்பாக உள்ள அமைச்சரினால் சபைக்கு உச்சளவாக 10 பணிப்பாளர்கள் நியமிக்கப்படலாம் என எடுத்துரைக்கின்றது. ( ஒக்டோபர் 2015 இல் இருந்து மக்கள் வங்கி அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது). இரு பணிப்பாளர்கள் கூட்டுறவுத்துறைக்கு பொறுப்பாக உள்ள அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் தகுதியின்மைக்கான கட்டளைக்கற்களும் மக்கள் வங்கிச் சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்களுக்கான அனைத்து நியமனங்களும், பணிப்பாளருக்கான உரிய கட்டளைக்கற்களுடன் பொருந்துகின்றதா என மதிப்பீடு செய்வதற்காக இலங்கை வங்கிக்கு சமர்ப்பிக்கப்படும். அனைத்து நியமனங்களும் உச்சளவாக ஒன்பது வருடங்கள் மற்றும் உச்ச வயதெல்லை 70 இதில் எது முதலில் வருகின்றதோ அதற்கு வரையறுக்கப்படும்.

வங்கிச் சட்டத்தின் படி சபையின் அனைத்துப் பணிப்பாளர்களும் சார்புக் கட்சியினராக பராமரிக்கப்படுவது. யாதேனும் இது போன்ற சார்பு கட்சி ஆளுகையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், வருடாந்த அறிக்கையில் சார்புக் கட்சிப் பிரிவின் கீழ் அறிக்கையிடப்படும்.

### ஊதியம் மற்றும் செயலாற்றுகை மதிப்பீட்டுச் சபை

நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கு அமைவாக சபை ஊதியம் தீர்மானிக்கப்படுகின்றது. செயலாற்றுகை மதிப்பீட்டுக்கு வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டுக் கேள்வியாளராக சபை அங்கத்தவர்கள் செயற்படுவர்.

## ஊழலுக்கு எதிரான நடவடிக்கை
(G4 - SO4)

வங்கியின் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் உள்ளக கணக்காய்வுத் திணைக்களம், புலனாய்வு மற்றம் விசாரணைத் திணைக்களம், இடர் முகாமைத்துவத் திணைக்களம் எங்கள் கிளைகளில் உள்ள சுதந்திர கணக்காய்வு ஊழியர்களினால் பலப்படுத்தப்படுகின்றது. ஒழுங்குபடுத்துனர்களினால் ஒழுங்குபடுத்தல் தேவைகளும் சார்புடைய தொழிற்பாட்டு வழிகாட்டல்களும் பூர்த்திசெய்யப்படுகின்றது என்பதற்கான உத்தரவாதத்தை வங்கியின் இணக்கப்பாட்டுத் திணைக்களம் வழங்குகின்றது.

ஊழலுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பாக அதிகரித்துவரும் விழிப்புணர்வுடன் இணைக்கப்பட்ட முறையாக கட்டமைக்கப்பட்ட பயிற்சி நடவடிக்கைகள் தவறான நடவடிக்கைகளுக்கு ஊக்கம் கொடுக்காது என வங்கி நம்புகின்றது. உள்ளக கணக்காய்வுத் திணைக்களமும் புலனாய்வு மற்றும் விசாரரணத் திணைக்களமும் வங்கிக்கான பயிற்சி நடவடிக்கைகளை ஒழுங்குசெய்கின்றது. ஊழல் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பாக வங்கி கடுமையான கொள்கையைப் பின்பற்றுகின்றது. 2015ம் ஆண்டு மொத்தமாக 18,464 பயிற்சி மணித்தியாளங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## 2015 இல் பரிமாறப்பட்ட ஊழலுக்கு எதிரான கொள்கைகள்
(G4 - SO5)

| வகை | எண்ணிக்கை | % |
|---|---|---|
| நிறுவனத்தின் ஊழலுக்கு எதிரான கொள்கை மற்றும் நடைமுறைகள் தொடர்பாக அறிவூட்டப்பட்ட ஆளுகைச் சபை அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் வீதம் | அனைவருக்கும் | 100% |
| நிறுவனத்தின் ஊழலுக்கு எதிரான கொள்கை மற்றும் நடைமுறைகள் தொடர்பாக அறிவூட்டப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் வீதம் | அனைவருக்கும் | 100% |
| நிறுவனத்தின் ஊழலுக்கு எதிரான கொள்கை மற்றும் நடைமுறைகள் தொடர்பாக அறிவூட்டப்பட்ட வியாபார பங்குதாரர்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் வீதம் | பொருத்தமற்றது | |
| நிறுவனத்தின் ஊழலுக்கு எதிரான கொள்கை மற்றும் நடைமுறைகள் தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்ட ஆளுகைச் சபை அங்கத்தவதுகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் வீதம் | பொருத்தமற்றது | |
| நிறுவனத்தின் ஊழலுக்கு எதிரான கொள்கை மற்றும் நடைமுறைகள் தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் வீதம் | 2,308 | 28% |
| ஊழல் தொடர்பாக கிடைக்கப்பட்ட நிகழ்வுகளின் மொத்த எண்ணிக்கை மற்றம் அதன் தன்மை | 136 | |
| ஊழல் தொடர்பாக கிடைக்கப்பட்ட நிகழ்வுகள் உறுதிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்ட அல்லது ஒழுக்காற்றல் நடவடிக்கை எடுக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | 111 | பொருத்தமற்றது |
| ஊழல் தொடர்பாக கிடைக்கப்பட்ட நிகழ்வுகள் உறுதிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில ஊழலுடன் தொடர்புடைய அத்துமீறலுக்காக இடைநிறுத்தப்பட்ட அல்லது புதுப்பிக்கப்படாத வியாபார பங்காளிகளின் எண்ணிக்கை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |

## இணக்கப்பாடு
(G4 - SO8)

2015ம் நிதியாண்டில், மக்கள் வங்கி பணித்தலத்தில் பாரபட்சம் அல்லது ஊழலுக்கு பொறுப்புக்கூறும் ஒழுங்குபடுத்தலுடன் தொடர்புடைய இணக்காப்பாடின்மைக்கு யாருக்கும் தண்டனை அளிக்கவில்லை.

நாட்டின் பெரிய நிதி நிறுவனமாக, மக்கள் வங்கி மோசடி, பணியிடத்தில் பாரபட்சம், மற்றும் அல்லது ஊழல் என்பவற்றுக்கு பொறுப்புக்கூறுவதுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கடுமையாக இணங்குவதற்கு பலமான ஆளுகை சட்டம், வெளிவாரி புறக்கணிப்பு உட்பட பல்தரப்பட்ட மூலங்களைக் கொண்டுள்ளது.

## இணக்கப்பாட்டை ஊக்குவித்தல் (2015)

நிதியியல் நியமங்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் தொடர்ச்சியான கணக்காய்வுகளை நடாத்துகின்றது. அதேவேளை இணக்கப்பாட்டுத் திணைக்களம் ஒழுங்குபடுத்தல் இணக்கப்பட்டு கணக்காய்வினை நடாத்துகின்றது. ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை புலனாய்வு மற்றும் விசாரணைத் திணைக்களம் புலனாய்வு செய்கின்றது. வழமையான கணக்காய்வு மீளாய்வுகளை மேற்கொள்வதற்கு வங்கியின் உள்ளக கணக்காய்வு திணைக்களம் மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களை கணக்காய்வாளர் நாயகம் நியமித்துள்ளார்.

## முழுமையான இடர் முகாமைத்துவம்

### அறிமுகம

மக்கள் வங்கியும் மற்றும் அதன் துணைக் கம்பனிகளும் வங்கியியில் மற்றும் நிதியியல், காப்புறுதி, ஆதன அபிவிருத்தி மற்றும் பயணம் என கூறுகளாக்கப்பட்ட பல்வேறு வகையிலான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இந்த ஒவ்வொரு நிறுவனங்களும் அவர்களுடைய தனிப்பட்ட கம்பனியின் இடர் வெளிப்படுத்தலைக் கண்காணிப்பதற்கும் மீளாய்வு செய்வதற்கும் சொந்த பணிப்பாளர் சபையைக் கொண்டுள்ளது. இவை குறிப்பிடப்பட்ட பிரமாணத்திற்கு அமைவாக உள்ளனவா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கு குறைந்தபட்சம் காலாண்டுக்கொருமுறை மக்கள் வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபையினால் மீளாய்வு செய்யப்படுகின்றது.

இலங்கை வங்கிக் குழுவில் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, பீப்பல்ஸ் ட்ரவல்ஸ் லிமிடட் மற்றும் பீப்பள்ஸ் மோர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி எனும் மூன்று துணைக் கம்பனிகளும், பீப்பள்ஸ் லீசிங் பிளீட் மனேஜ்மன்ட் லிமிடட், பீப்பள்ஸ் லீசிங் புரொப்பட்டி டெவெலப்மன்ட் லிமிடட், பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி, பீப்பள்ஸ் மைக்ரோபினான்ஸ் லிமிடட், பீப்பள்ஸ் லீசிங் ஹவ்லொக் புரொப்பட்டிஸ் லிமிடட் எனும் உப துணைக் கம்பனிகளும் உள்ளன.

### மக்கள் வங்கியில் உள்ள குழு இடர் முகாமைத்துவச் சட்டகம்

தொடர்ச்சியாக மாறும் சந்தை, வளரும் நிலையற்றதன்மை, அதிகரித்துவரும் சிக்கலான வாடிக்கையாளர்கள், பாரிய தொழில்நுட்ப நடைமுறை மற்றும் அதிகரித்துவரும் ஒழுங்குபடுத்தல் ஈடுபாடு மற்றும் புறக்கணிப்பு என்பவற்றின் காரணமாக பாரிய வியாபாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது உள்ளாந்த இடரின் திடத்தன்மை மற்றும் சாத்தியமான மதிப்பீடுகள் மீது முன்னரைவிட தங்கியுள்ளது. ஒரு பாரிய வாடிக்கையாளர் அடித்தளம் மற்றும் வங்கியியல், நிதியியல் மற்றும் காப்புறுதித் துறைகளைகளில் பல்வேறுபட்ட பண்டங்களைக் கொண்ட நிதிக் குழுவாக, மக்கள் வங்கியும், அதன் துணைக் கம்பனிகளும் பரந்தளவிலான இடரை வெளிப்படுத்துகின்றது. மக்கள் வங்கிக் குழு அபாயகட்டத்திற்கு வருவதைத் தடுப்பதற்கு முதல் கட்டத்திலேயே இடர்களை ஒழுங்குமுறையாக அடையாளம் காணுதல் மற்றும் வரையறுப்பதற்கான தேவையை அதிகரிக்கின்றது. மக்கள் வங்கிக் குழுவின் நீண்ட கால நிலைத்திருப்பு தொடர்வதை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் நிலைத்திருப்பு அடிப்படையின் மீது வங்கியின் பெறுமதியை முறைப்படி அதிகரிப்பதற்கும் தொழிற்முயற்சி நெகிழ்ச்சி மற்றும் நிதியியல் ஸ்தீரத்தன்மையை பேணுதலை நோக்கமாக கொண்டுள்ளது.

இடர் அடையாளம் காணப்படுவதுடன், குழுவின் பாரிய இடர் முகாமைத்துவ சட்டகத்தின் ஒரு பகுதியாக முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும். இது சபையின் அனுமதியளிக்கப்பட்ட உபாயமார்க்கம், இடர் தேவை, மூலதனம், நிதியிடல் மற்றும் தொழிற்பாட்டு திட்டங்களுடன் ஆரம்பமாகும். இடர் தேவையானது வியாபாரதின் தரத்திலும் (இடர் கொள்கைகள், நியமங்கள் மற்றும் தொழிற்பாட்டு நடைமுறைகள் ஊடாக) அளவிலும் (எங்கள் இடர் அளவு, அமைப்பு மற்றும் தீர்மான அதிகாரத்தின் ஊடாக) மாற்றப்படுதல் வேண்டும்.

### குறிக்கோள்

**மக்கள் வங்கியின் இடர் முகாமைத்துவ சட்டகத்தின் குறிக்கோள் கீழ்வருமாறு குழுவின் இடர்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் உடனிருந்து வழிகாட்டுதல்.:**

1. குழுவின் பாரிய சொத்துத் தரம் மற்றும் இடரின் பெறுமதி என்பவற்றை முகாமைத்துவம் செய்தல் மற்றும் குறைத்தல்
2. குழுவின் இடர் தேவையை தீர்மானித்தல் மற்றும் கண்காணித்தல் மற்றும் மூலதனப் போதுமையை மதிப்பிடுதல்.
3. இடர் தேவை மற்றும் இடர்களின் குணம் தொடர்பாக சபைக்கு விதப்புரைகளை வழங்குதல்
4. வரைவிலக்கணப்படுத்தல் - ஒழுங்குபடுத்தல் தேவைகளுடன் இணக்கப்பாடு □ இடர் முகாமைத்துவத்திற்கான குழுவின் விதிகள், முறைகள், இடர் வரையறை வகைகள், கொள்கைகள் மற்றம் உபாயமார்க்கங்கள்
5. மாறிவரும் சூழலை வெற்றிகொள்வதற்கு பருவகாலத்தில் மீள் மதிப்பீடுசெய்தல்.
6. குழு முழுவதிற்கும் போதியளவு இடர் அளவீட்டு முறைமை இணைத்துக்கொள்ளப்படுதலை உறுதிப்படுத்தல்.
7. குழுவிற்குள் பரந்த இடர் கலாச்சாரத்தை உருவாக்கல்.

### இடர் அடையாளம் காணல்

மக்கள் வங்கிக் குழுவினால் எதிர்கொள்ளப்படும் பிரதான இடர்கள் கீழ்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| குழுக் கம்பனிகள் | பிரதான இடர் வகைகள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | சந்தை இடர் வுயசமநல னைம | வட்டி வீத இடர் | திரவத்தன்மை இடது | தொழிற்பாட்டு இடர் | இணக்கப்பாட்டு இடர் | உபாயமார்க்க இடர் | நற்பெயர் இடர் | செறிவு இடர் | காப்புறுதி இடர் சனைம |
| மக்கள் வங்கி | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | |
| பீப்பள் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | |
| பீப்பள்ஸ் மோர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | |
| பீப்பள் இன்சூரன்ஸ் பிஎல்சி | √ | | | √ | √ | √ | √ | √ | √ | √ |

## மக்கள் வங்கிக் குழுவின் குழு இடர் முகாமைத்துவ கோட்பாடுகள்

1. இடர் கொள்கை நிதியியல் மற்றும் நிதியியலல்லாத இடர்களை நோக்கி இணைக்கப்படுகின்றது. மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை குழுவின் இடர் உபாயமார்க்கம் மற்றும் முழுமையான இடர் தேவையை தீர்மானிப்பதுடன் பொறுப்புக்கூறல், அறிக்கையிடல் கட்டமைப்பு, ஆவணப்படுத்தல் மற்றும் அடையாளம் காணப்பட்ட முகாமைத்துவம் மற்றும் குறுமட்டத்தை வரைவிலக்கணப்படுத்துகின்றது.

2. குழுவின் பரந்த இடர் முகாமைத்துவம் மத்திமப்படுத்தப்பட்டு கொண்டு நடாத்தப்படுகின்றது : இடர் முகாமைத்துவம், நிதி உபாயமார்க்கம் மற்றும் தொழிற்பாட்டுத் திட்டமிடலுடன் நிதியியல் முகாமைத்துவமும் முடுக்கப்படும். இது பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் வேறுப்பட்ட தொழிற்பாடுகளை செயற்படுத்தம் நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ அலகினதும் பிரதான பொறுப்பாகும்.

3. பிரதான இடர் காட்டிகள் மற்றும் உரிய குறுமட்டம் என்பன குழுக்களின் இடர் தேவை, ஒவ்வொரு குழு நிறுவனத்திற்கும், மக்கள் வங்கியின் வெளிப்படுத்துகை ரூபா 500 மில்லியனை விஞ்சுகின்றவாறு விரிவாக வரைவிலக்கணப்படுத்துகின்றது. இவை கூட்டிணைந்த தீர்மானங்களை உறுதிப்படுத்துவதற்கும், கொண்டு நடாத்தும் வியாபார நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்ட இடர் எல்லைக்குள் வைத்திருப்பதற்கும் விசேடமாக மூலதனம், திரவத்தன்மை அல்லது நற்பெயர் நியதிகளை ஒழுங்குபடுத்தப்பட்ட சட்ட தேவைகளுடன் இணங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது

4. பரிந்துரைக்கப்பட்ட பிரதான இடர் காட்டிகளுடன் இணங்குமாறு குழுவின் ஒவ்வொரு நிறுவனமும் முகாமைப்படுத்துவதற்கும் மற்றும் மக்கள் வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபைக்கு காலாண்டு அடிப்படையில் இடர் மீதான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் கோரப்படுகின்றது.

5. இடரை முகாமைத்துவம் செய்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்ச்சியான அடிப்படையின் மீது நெருக்கமாக கண்காணிக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அவசியமாயின் புதிய இடர் மதிப்பீட்டை சீர்செய்வதற்கும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபைக்கு பொறுப்பாக உள்ளது. இது பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் தனிப்பட்ட நிறுவனங்களின் இடர் முகாமைத்துவ பிரிவுகளின் ஆலோசகையுடன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது.

6. மக்கள் வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபை இந்த அறிக்கைகளை, விசேடமாக விதிவிலக்குகள் மற்றும் நடைமுறை, மற்றும் இடர்களின் நிகழ்வைக் குறைப்பதற்கு மற்றும் அடிமட்ட சேதத்தை தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட எடுக்கப்பட்ட பொருத்தமான தடுப்பு செயற்பாடுகள், பாதுகாப்பு மற்றும் திருத்த நடவடிக்கைகள் என்பவற்றை மீளாய்வு செய்யும். தேவையாயின், அடையாளம் காணப்பட்ட அடிப்படை இடர்களை குறைப்பதற்கும் வரையறுப்பதற்கும் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

7. மக்கள் வங்கியின் பிரதான சபையில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபை உள்ளதுடன், மக்கள் வங்கியின் கணக்காய்வு குழுச் சபை யாதேனும் குறிப்பிடத்தக்க தவிர்க்கமுடியாத மாற்றங்கள் ஏற்படின் அல்லது யாதேனும் தற்போதுள்ள அல்லது எதிர்பார்க்கப்படும் இடர்கள் குழுவின் முழுமையான இடர் தேவையை விஞ்சுமாயின் அது பற்றி அறிவிக்கும்.

8. மக்கள் வங்கியின் கணக்காய்வுக் குழுச் சபை, மக்கள் வங்கியின் உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு குழுவின் இடர் நியமங்களுடன் ஒத்திசைகின்றதை உறுதிப்படுத்துவதற்கு குழுவில் உள்ள ஒவ்வொரு நிறுவனத்தின் கட்டுப்பாட்டு போதுமை மற்றும் வினைத்திறன் என்பவற்றை பருவகாலத்தில் பரீட்சிக்கும்.

## மக்கள் வங்கியின் இடர் ஆளுகை

### இடர் தேவை

வங்கியின் இடர் தேவையை உருவாக்குவதற்கும் அனுமதிக்கப்பட்ட மட்டத்தில் இடர்கள் பராமரிக்கப்படுகின்றதா மற்றும் வெளிப்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கும் பணிப்பாளர் சபை இறுதிப் பொறுப்பைக் கொண்டுள்ளது. அவர்கள் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபை, சொத்துப் பொறுப்புக் குழு, கணக்காய்வுக் குழுச் சபை மற்றும் நிறைவேற்று கடன் குழுச் சபை வழங்கிய விதப்புரைகள் மீது கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் தொழிற்பாடுகளுக்கான கொண்கைகளை தீர்மானிப்பர். தற்போதுள்ள கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் செயற்திறன் தொடர்பாக சபைக்கு உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாளர்கள் உத்தரவாதத்தை வழங்குவர்.

### இடர் முகாமைத்துவ சட்டகம்

இடரின் சூழ்ந்துகொண்டுள்ள முழுமையான நோக்கெல்லையை மக்கள் வங்கியின் இடர் முகாமைத்துவ சட்டகம் முகாமைத்துவம் செய்கின்றதுடன், படிமுறைகள் ஃ முறைமைகள் மற்றும் நடைமுறைகள் இடரை முகாமைத்துவம் செய்யக்கூடியதாக இருப்பதுடன், குழுவினதும் மற்றும் தனிப்பட்டவர்களினதும வகிபாகங்கள் மற்றம் பொறுப்புகள் இடர் முகாமைத்துவத்தில் சம்பந்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டகம் அனைத்து இடர்களையும் கைப்பற்ற போதுமானதாக இருப்பதுடன், யாதேனும் மாற்றத்திற்கு நெகிழ்வுத்தன்மை உடையதாகவும் விளங்குகின்றது.

மீளாய்வு தொழிற்பாடுகளில் ( இடர் மீளாய்வு, உள்ளக கணக்காய்வு, இணக்கப்பாடு போன்றவை) தனிப்பட்டவர்கள் மற்றும் இடர் ஏற்பதில் நேரடியாக பங்கு பற்றாது நேரடியாக சபைக்கு அல்லது உயர் முகாமைத்துவத்திற்கு அறிக்கை செய்யும் நபர்களின் பொறுப்பானது ஏனைய இடர் ஏற்கும் அலகுகளில் இருந்து சுதந்திரமானது.

*முக்கியமான இடர்கள்*

எதிர்தரப்பு கடன் இடரானது மக்கள் வங்கியில் குறிப்பிடக்கூடிய மிகப்பெரிய இடராக அமைவதுடன், தொழிற்பாட்டு மற்றும் சந்தை இடர்கள் ஒப்பீட்டளவில் குறைந்த இடரைக் கொண்டுள்ளது.

அதன்படி, நிறைவேற்று கடன் குழுச் சபையின் மீளாய்வு மற்றும் பெரிய தொகைகளை அனுமதிக்கும் போது ஆவணங்களின் தரம் என்பவற்றைக் கணகாணித்தல் மற்றும் கடன் இடர் தொடர்பான மீளாய்வு அனுமதிக்கும் கொள்கைகளுக்கு மேலதிகமாக எதிர்தரப்பு கடன் இடர் முகாமைத்துவம் அதிகளவு கவனத்தை ஈர்க்கும். கடன் இடர் மதிப்பீட்டுக் கலை தொடர்பான பயிற்சி, அனுமதிக்கும் அதிகாரிகளின் படிநிலை, கடன் இடர் மதிப்பீடு மீதான சரியான முறையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், இடர் ஏற்றுக்கொள்ளும் கட்டளைக்கற்கள், இடர் தரப்படுத்தல் முறைமை, விவேகமான எல்லை நிர்ணயிப்புகள், மாற்றுவழி, விலையிடல் என்பன கடன் இடர் முகாமைத்துவத்தின் அடிப்படைகளை உருவாக்குகின்றது.

## கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு

இலங்கையில் உள்ள மிகப் பெரிய வங்கியாக, நாடு முழுவதிலும் வியாபித்தள்ள வாடிக்கையாளர்களுக்கு முழுக் கற்றையான சேவைகளை வழங்குவதுடன், மக்கள் வங்கி கடன் மற்றும் நற்பெயர் மற்றும் தொழிற்பாட்டு இடர்களுக்கு காப்பற்றுள்ளது. மக்கள் வங்கி அதன் வளர்ச்சி, ஸ்திரத்தன்மை மற்றும் நீண்ட கால நிலைத்திருப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு வலுவுள்ள இடர் முகாமைத்துவ நடைமுறைகளை பின்பற்றுவதற்கான தேவை உள்ளது.

இடர் முகாமைத்துவம் என்பது வங்கித் தொழிற்பாடுகளின் துணை ஒழுக்கமாக அமைந்துள்ளதுடன், வங்கியின் இடர் வடிவத்தை தாக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியுள்ளது. அது இடரினை உறுதிப்படுத்துவதற்கு அடையாளம் காணுதல், அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் என்பவற்றில் பங்கேற்கும்.

- தனிப்பட்டவர்களில் யார் தெளிவாக விளங்கிக்கொண்டு இடரினை எடுத்துக்கொள்வர் அல்லது முகாமைத்துவம் செய்வர்.
- நிறுவனத்தின் இடர் வெளிப்படுத்தல் பணிப்பாளர் சபையினால் நிறுவப்பட்ட எல்லையினுள் இருக்கும்.
- இடர் ஏற்றுக்கொள்ளும் தீர்மானங்கள் வியாபார உபாயமார்க்கம் மற்றும் பணிப்பாளர் சபையினால் உருவாக்கப்பட்ட இலக்குடன் இணைந்திருக்கும்
- எதிர்பார்க்கப்பட்ட தீர்ப்பனவுகள் எடுக்கப்பட்ட இடரினை ஈடுசெய்வதற்கு இயலுமானதாக இருத்தல்.
- இடர் ஏற்றுக்கொள்ளும் தீர்மானங்கள் வெளிப்படையானதாகவும் தெளிவானதாகவும் இருத்தல்
- நாங்கள் நாட்டின் பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன், பிரசுரிக்கப்பட்ட ஆளுகை நியமங்களுடன் ஒழுகுவோம்.
- நாங்கள் எங்கள் அனைத்து வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடனும் உள்ள உறவுகளின் போது உயர் மற்றும் நிலையான ஒழுக்க நியமத்தைப் பிரயோகிப்போம்.
- செயற்பாடுகள் அடிப்படைக் கட்டுப்பாட்டு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும். இந்தக் கட்டுப்பாடுகள் திட்டமிடல் ஒழுக்கங்கள், கண்காணிப்பு, வேறுபாடுகள், அதிகாரமளிப்பு மற்றும் அனுமதி, பதிவு, பாதுகாத்தல், சரிபார்த்தல் மற்றும் மதிப்பிடுதல் என்பவற்றில் பயன்படுத்தப்படும்.
- போதியளவு மூலதனக் கையிருப்பு

எதிர்தரப்பு கடன் இடரானது மக்கள் வங்கியில் குறிப்பிடக்கூடிய மிகப்பெரிய இடராக அமைவதுடன், தொழிற்பாட்டு மற்றும் சந்தை இடர்கள் ஒப்பீட்டளவில் குறைந்த இடரைக் கொண்டுள்ளது.

அதன்படி, நிறைவேற்று கடன் குழுச் சபையின் மீளாய்வு மற்றும் பெரிய தொகைகளை அனுமதிக்கும் போது ஆவணங்களின் தரம் என்பவற்றைக் கணகாணித்தல் மற்றும் கடன் இடர் தொடர்பான மீளாய்வு அனுமதிக்கும் கொள்கைகளுக்கு மேலதிகமாக எதிர்தரப்பு கடன் இடர் முகாமைத்துவம் அதிகளவு கவனத்தை ஈர்க்கும். கடன் இடர் மதிப்பீட்டுக் கலை தொடர்பான பயிற்சி, அனுமதிக்கும் அதிகாரிகளின் படிநிலை, கடன் இடர் மதிப்பீடு மீதான சரியான முறையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், இடர் ஏற்றுக்கொள்ளும் கட்டளைக்கற்கள், இடர் தரப்படுத்தல் முறைமை, விவேகமான எல்லை நிர்ணயிப்புகள், மாற்றுவழி, விலையிடல் என்பன கடன் இடர் முகாமைத்துவத்தின் அடிப்படைகளை உருவாக்குகின்றது.

மக்கள் வங்கி தொழிற்பாட்டு இடரானது அதன் செயற்பாடுகளில் உள்ளாந்தது என அடையாளம் கண்டுகொண்டுள்ளதுடன், அதனை முழுமையாக அகற்றிவிட முடியாததுடன், கொள்கைகள், நடைமுறைகள் (னுசீ உட்பட), கட்டமைப்புகள், உள்ளக கணக்காய்வு, தாங்கும் எல்லை, காப்புறுதி, பயிற்சி மற்றும் தரவுகள் தொடர்பாட்டு இடர் முகாமைத்துவ சட்டகத்தின் அடிப்படையை வடிவமைக்கும். ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபை காலாண்டு தோறும் கட்டுப்பாடுகளின் போதுமை மற்றும் செயற்திறனை உறுதிப்படுத்துவதற்கு, தொலைந்த தரவுகள் தொடர்ச்சியாக வலையமைப்பை அணுகுவதன் மூலம் தொடர்ச்சியாக சேகரிக்கப்படுவதுடன், பின்னர் அதன் போக்கினை அறிந்துகொள்வதற்கும் இடைவெளியைக் கட்டுப்படுத்துவதற்கும் பகுப்பாய்வு செய்யப்பட்டு மீளாய்வுசெய்யும்.

மக்கள் வங்கி அதனற்கு சொந்தமான கணக்கின் மீது மற்றும் வாடிக்கையாளர் தேவைக்கு அமைவாக சேவைபுரிவதன் ஊடாக சந்தை இடர் தீர்மானிக்கப்படும். திறைசேரித் திணைக்களம் பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக வரையறைகளைத் தயாரிப்பதுடன், கொள்கை மற்றும் நடைமுறையை தயாரிக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுச் சபையளுன் வழிகாட்டுதலின் கீழ் அனைத்து சந்தை இடர் முகாமைத்துவம் செய்யப்படும். அவ்வாறான இடர்காப்பின்மை வங்கியின் முழுமையாக இடர் தேவையினுள் உள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு இவை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபை மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுச் சபையினால் மீண்டும் மீளாய்வு செய்யப்படம். வங்கியினால் ஏற்கப்பட்ட இடர் அளவீடு, அறிக்கையிடல் மற்றும் வரையறுத்தல் என்பன தொடர்பான இடர் பொறிமுறைகள் பல வங்கியினால் பயன்படுத்தப்படும். இவற்றினுள் இடர் பெறுமதி மாதிரி (ஏயசு) , கால இடைவெளி பகுப்பாய்வு மற்றும் பல்வேறுபட்ட அழுத்த பரிசோதனைகள் மற்றும் சந்தர்ப்ப பகுப்பாய்வு என்பன உள்ளடங்கும்.

அரச தொழில்முயற்சிகளில் எங்கள் இடர்காப்பின்மையில் பெரும்பான்மை உபாயமார்க்கமாக முக்கியமான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மினசார சபை மற்றும் அரசுக்கு சொந்தமான உர இறக்குமதிக் கம்பனிகள் என்பவற்றைக் கொண்டுள்ளது. இவ்வாறான நிறுவனங்கள் தேசிய ரீதியாக முக்கியமாவதுடன், அதன்படி அவற்றின் நிலைத்திருப்பை உறுதிப்படுத்துவதற்காக அரசின் உதவி கிடைக்கப்பெறும். அதன்படி, இவ்வாறான நிறுவனத்திடம் உள்ள எங்களுடைய இடர்காப்பின்மை தொடர்பாக இலங்கை அரசு தெளிவாக அல்லது முழுமையாக பொறுப்பேற்பதனால், இந்த நிபந்தனைகளின் கீழ் யாதேனும் மிதமிஞ்சிய இடர்களை சமர்ப்பித்தல் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.


சபை மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவ நிர்வாகம்
கூட்டிணைந்த ஆளுகை கட்டமைப்பு
பணிப்பாளர் சபை
இடர் தேவையை உருவாக்கல்
இடர் வெளிப்படுத்துகைகளை வரையறுத்தல் மற்றும் கண்ணகாணித்தல் பொறுப்பு
பிரதம நிறைவேற்று அலுவலர்
பிரதான இடர்நேர்கை அதிகாரி பி.பொ.மு. (இடர்நேர்கை முகாமைத்துவம்)
கடன் இடர்நேர்கை முகாமைத்துவம்
சந்தை இடர்நேர்கை முகாமைத்துவம்
செயற்பாட்டு இடர்நேர்கை முகாமைத்துவம்
சபை குழுக்கள்
ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுச் சபை
முழுமையான இடர் பட்டியல் மீதான அறிக்கைகளை மீளாய்வு செய்தல் இடர் முகாமைத்துவ பழக்கங்கள் மற்றும் கொள்கைகளை மீளாய்வு செய்தல் சபைக்கு முழுமையான இடர் தேவை விதப்புரையை வழங்கல்
கணக்காய்வுக் குழுச் சபை
கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடனான இணங்கல் தொடர்பான கண்காணித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடல் இடர் தொடர்பாக பழக்கங்கள் மற்றும் கொள்கைகளின் செயற்திறன் தொடர்பாக சபைக்கு உறுதிப்பாட்டை வழங்கல்
நிறைவேற்ற கடன் குழுச் சபை
கடன் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு அனுமதியை வழங்குதல் பெரிய கடன் வெளிப்படுத்துகைகளுக்கு அனுமதியை வழங்குதல் குறுக்குவெட்டுத் தோற்றத்தின் தரம் தொடர்பான கண்காணிப்பு மற்றும்
முதலீட்டு வங்கிச்சேவை குழுச் சபை
அனைத்து முதலீட்டுத் தீர்மானங்களையும் உரிய கொள்கைகளையும் அங்கீகரித்தல்
முகாமைத்துவக் குழுக்கள்
சொத்து மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்தவக் குழு
சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்கைகளை கண்காணித்து அறிக்கையிடல் தொடர்புடைய கொள்கைகளை மீளாய்வு செய்து சபைக்கு சிபாரிசு செய்தல்
செயற்பாட்டு இடர்நேர்கை முகாமைத்துவக் குழு
செயற்பாட்டு இடர்நேர்கை விடயங்களை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்
உள்வாரி கணக்காய்வு
இணக்கப்பாடு

## பணிப்பாளர் சபை மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் நிர்வாகம்

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை முழுமையான இடர் தேவையை தயாரித்தல் மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறையை பரீட்சித்தல் என்பவற்றுக்கு பொறுப்பாக இருப்பதுடன், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபை ஊடாக இது மேற்கொள்ளப்படும்.

## இடர் முகாமைத்துவத் திணைக்களம்

இடர் முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிகள் வியாபார தொழிற்பாடுகளிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கப்படும். அதன்படி, நடவடிக்கைகளில் சுதந்திரத்தை பேணுவதற்காக இடர் முகாமைத்தவத்தின் தலைவர் நேரடியாக ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபைக்கு அறிக்கையிடுவார்.

*இடர் முகாமைத்துவ அலகின் நிறுவனக் கட்டமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.*




இடர் முகாமைத்துவ திணைக்களம் பின்வருவனவற்றுக்கு பொறுப்பாக இருக்கும்,

இடது கொள்கைகள் மற்றும் சட்டகத்தை தயாரிப்பதற்கு உதவுதல். காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளில் இருந்து அதிகரித்த இடர் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டுதல்கள் என்பவற்றை விநியோகித்தல்.

மக்கள் வங்கியின் வியாபார மற்றும் தொழிற்பாட்டு அலகுகள், வங்கியின் இடர் முகாமைத்துவ சட்டகத்திற்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். மக்கள் வங்கியின் தொழிற்பாட்டு மாதிரி கீழ்வருமாறு மூன்று பாதுகாப்பு மாதிரிகள் பயன்படுத்தப்பட்டு வேறாக்கப்படும்.

*மூன்று பாதுகாப்பு வரிசைகள்*

முதலாவது வரிசை : முகாமைத்துவம் (இடருக்கு சொந்தமான நபர்)
இரண்டாவது வரிசை : இடர் (சட்டகத்தை நிறுவி, விளக்கம், நிர்வாகம் மற்றும் தேவைகளை வளங்கள்)
மூன்றாம் வரிசை உள்ளக கணக்காய்வு (சுயாதீன சான்றிதழ் வழங்குபவர்), இணக்கப்பாட்டுத் திணைக்களம்

## கடன் இடர்

வங்கியின் வாடிக்கைகயாளர்கள் மற்றும் எதிர்தரப்பினரால் அவர்களின் ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு இயலாமல் போவதுடன், அவர்களுக்கு மற்றும் எதிர்தரப்பினருக்கு வழங்கப்படும் கடன் மற்றும் முற்பணம் மற்றும் அவற்றை கொடுப்பனவு செய்ய முடியாது போகின்ற சந்தர்ப்பங்களில் கடன் இடர் ஏற்படும். அதேபோல், வங்கி வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் முற்றும் மேற்கொள்ளப்படும் நிதிப் பிணை, நாணயக் கடிதம் மற்றும் ஏற்றுக்கொள்ளல் மூலமும் கடன் இடர் ஏற்படும்.

கடன் இடர் முகாமைத்துத்தின் மீது மக்கள் வங்கியினால் வடிவமைக்கப்பட்ட அணுகுமுறை:

- எதிர்கால பணிப்புரை மற்றும் பரந்த உபாயமார்க்க முன்னுரிமைகளை அறிவித்தல்.
- மக்கள் வங்கியின் விளைவு வீதத்திற்கு இடர் சீராக்கலை உச்சப்படுத்தல் மற்றும் இடர் தேவை சீராக்கலை உறுதிப்படுத்தி ஏற்றுக்கொள்ள கூடிய கூட்டளவுகளினுள் கடன் இடர் காப்பின்மையினுள் பேணுவதன் ஊடாக செயற்திறன் கடன் இடர் முகாமைத்துவத்தினை அடைதல்.
- மக்கள் வங்கியின் நாளாந்த வியாபார நடவடிக்கைகளில் ஒவ்வொரு அலகிலும் பயன்படுத்தல்.

***கடன் இடர் முகாமைத்துவத்திற்கான நிறுவனக் கட்டமைப்பு***




பணிப்பாளர் சபை கடன் இடர் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுக்கான பொறுப்பு நிறைவேற்று கடன் குழுச் சபைக்குச் சாட்டப்பட்டுள்ளது. அதற்கு கீழ்வருவனவும் உட்படும்:

- ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபை மற்றும் வியாபார அலகுகளின் ஆலோசனையுடன் கடன் கொள்கைகளை தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்.
- மிகப் பெரிய மற்றும் உயர்ந்த கடன் இடர்காப்பை பொருத்தமான சிரேஸ்ட மட்டத்தில் மீளாய்வு செய்து அனுமதியளிக்கப்படும் என உறுதியளிக்கும் வகையில் கடன் அனுமதியளிக்கும் கட்டமைப்பை நிறுவுதல்.
- மிதமிஞ்சிய இடர் செறிவு இல்லையென சான்றுபடுத்துவதற்கு தனிநபர் கடன் வெளிப்படுத்தல்களையும் மற்றும் மொத்தப் பட்டியலையும் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்தல்.
- மிக உயர்ந்த இடர் வெளிப்படுத்துகைக்காக ஒதுக்கீடு மற்றும் முகாமைத்துவம் பற்றிய போதுமையை சான்றுபடுத்தல்
- கடன் இடரை அளவிடுதல், இடர் பற்றி பல்வேறு மட்டங்களில் வேறுபடுத்தல் மற்றும் அவசியமான கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையை பிரயோகித்தல் ஊடகமாக இடர் தரப்படுத்தல் முறைமையை அபிவிருத்தி செய்து பராமரித்தல்.
- முன் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட வரையறையைத் தாண்டும் கடன் யோசனைகளுக்கு அனுமதி அளித்தல் அல்லது நிராகரித்தல்.

அத்துடன், உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால் கட்டுப்பாட்டின் போதுமை தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு கிளைகள் மற்றும் வியாபார அலகுகளில் ஒழுங்குமுறையிலான கணக்காய்வுகளை நடாத்துதி சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கும் கணக்காய்வு குழுச் சபைக்கும் சுயாதீன மதிப்பீட்டை வழங்கும்.

## கடன் இடர் முகாமைத்துவம்

கடன் இடர் முகாமைத்துவம் தொடர்பான பிரதான கோட்பாடுகள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்:

1. வியாபார பிரிவுகளில் கடன் இடர் முகாமைத்துவம் தொடர்பான சுயாதீனத்தன்மை
2. வங்கியின் தீர்மானத்தின்படி சரியான இடர் தேவையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கடன்பெறுநர் தொடர்பாகவும் உள்ளக தரப்படுத்தலை மேற்கொள்ளல்.
3. கடன் அங்கீகரித்தல்கள், கடன் அனுமதிக்கும் குழு மற்றும் தனிநபர்களுக்கு சாட்டப்படும் கடன் அளிக்கும் அதிகாரத்தின் மீது தங்கியிருக்கும்.

மக்கள் வங்கியின் கடன் இடர் முகாமைத்துவத்தின் செயற்பாடுகளினுள் உள்ளடங்குவது:

- ஆரோக்கியமான பட்டியலிடப்பட்ட வளர்ச்சியை சான்றுபடுத்தும் வகையில் இடர்களை மீளாய்வு செய்தல், மீள்கட்டமைப்பு செய்தல் மற்றும் முக்கியத்துவம் அளித்தல்.
- கடன் கொள்கை வழிகாட்டல்களுக்கு மதிப்பளிக்கப்படுவதுடன், வேறுபாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றதை உறுதிப்படுத்தல்.
- கடன் சேகரிப்பு மாதிரிகளை அபிவிருத்தி செய்தல் / மேம்படுத்தல்.
- தொகுதி முகாமைத்துவம் - செறிவு, பாதகமான நிலை
- பொருளாதார மற்றும் கைத்தொழில் நிலமையின் மீது உள்ளீடுகளை வழங்குதல் (மக்கள் வங்கியின் ஆராச்சித் திணைக்களத்தின் உதவியுடன்)
- பலவீனமான கடன்களை தொடக்கத்தில் அடையாளம் காண்பதற்கு கண்காணிப்பு பட்டியல் படிமுறையை தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல் மற்றும் அழுல்படுத்துதல்.
- கிளைகளினால் அனுமதியளிக்கப்பட்ட யோசனைகளின் மாதிரிகளின் அடிப்படையில் வெளிப்படுத்துகை பற்றிய பிற்போட்ட வழங்கல் மீளாய்வுகளை மேற்கொள்ளல்.

கடன் இடர் முகாமைத்துவத்தின் பிரதான செலுத்துனராக வாடிக்கையாளர் இடர் குறுக்கவெட்டுத் தொடர்பான ஆரம்ப மதிப்பீடாகும். கடன் இடர் முகாமைத்துவத்தினுள் வங்கியினால் இணைத்துக்கொள்ளப்பட்ட பிரதான கோட்பாடாக கடனை மீளச் செலுத்துவதற்கான கடன் பெறுநரின் இயலுமையை ( கடன்பெறுநர் கடனைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதி) மதிப்பீடு செய்தல் அமைகின்றது. மீளச் செலுத்தும் இயலுமைக்கு மேலதிகமாக, கடன் வெளிப்படுத்தைகயின் தரம் பிணையத்தின் தரத்தினால் தாக்கத்திற்குட்படும். அதனால், பிணையத்தின் தரம் மற்றும் பெறுமதி, உள்ளக நடைமுறைகளில் காட்டப்பட்டுள்ள தெளிவாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட விதிகளின் அடிப்படையில் சரியாகவும் முழுமையாகவும் மதிப்பீடு செய்யப்படும். கடன் வசதிக்கு அனுமதி அளிப்பதற்கு முக்கியமான அளவுகோலாக நிலையான காசுப் பாச்சல் மற்றும் பிணையத்தின் தரம் என்பவற்றில் தங்கியுள்ளது.

அவசியம் எனக் கருதும் வகையில் புத்திசாலித்தனமான பிணையத்துடன் இணைந்த கண்டிப்பான எழுத்து மூலமான நியமங்களைப் பிரயோகிப்பதன் ஊடாக புத்திசாலித்தனமாக

# செயன்முகாமை

## இடர் முகாமைத்துவம்

வாடிக்கையாளர் தேர்வினை முதல் வரிசைப் பாதுகாப்பாளரான வங்கியின் வியாபார வரிசைத் தலைவர் மேற்கொள்வார். அதன் பின்னர் இவ்வாறான கடன் விதிவுபடுத்தல் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படும். ஒவ்வொரு வியாபார வரிசையும் நிலையாகப் பிரயோகிக்கக்கூடிய ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்வுமுறை, படிமுறை மற்றும் கோட்பாடுகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. பன்முகப்படுத்தப்பட்ட கடன் தொகுதியை உறுதிப்படுத்தி மற்றும் பல்வேறுபட்ட சந்தை நிலைமையினுள் வங்கியின் மூலதனத்தை செயற்திறனுடன் பாதுகாத்து அளவுக்கதிகமான செறிவினைக் குறைப்பதை வங்கி இலக்காகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கடன் விரிவுபடுத்துகை அல்லது கடன் வசதிக்கு (அதன் காலம், பிணையத்தின கட்டமைப்பு அல்லது பிரதான ஒப்பந்தம்) யாதேனும் வடிவ மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான அதிகார மட்டத்தின் கடனுக்கான அனுமதி அவசியமாகும். வங்கி கடன் வழங்கும் அதிகாரத்தை தனிநபர்களுக்கு அவர்களின் பதவிகளுக்கு ஏற்றவாறு சாட்டுதல் செய்வதுடன், இவை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படும். வங்கி ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு அமைவாக முழு வலையமைப்புக்கும் ஒவ்வொரு பிணையாளரும் மொத்தமாக செலுத்த வேண்டிய கடன் வெளிப்படுத்துகையை அளவிடும். கடன் அனுமதியளிக்கும் ஆரம்ப மற்றும் பிரதான காரணியாக அமைவது குறிப்பிட்ட வெளிப்படுத்துகை மட்டத்திற்கு மேல் இருக்கும் ஒவ்வொரு கடன்பெருநர் தொடர்பாக விரிவான இடர் தரப்படுத்தல் ஆகும். இடர் தரப்படுத்தல் வெளிப்படுத்துகை வரையறைகள் மற்றும் பொருத்தமான விலையிடலைத் தயாரிக்கும் போது உதவும்.

வங்கியின் கடன் அலுவலருக்கு வசதி தேவைப்படும் என்பதை நோக்காகக் கொண்டு கடன் வசதி கட்டமைப்பை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மீள்கொடுப்பனவு அட்டவணை வியாபாரத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் காசுப் பாச்சலுடன் தொடர்புபடுத்தப்படும். வியாபாரத்தின் தொழிற்பாட்டு மூலதனத்திற்கு நிதி வழங்கும் பொழுது, வங்கிக் காசுப் பாச்சல், குறுகிய மற்றும் நடுத்தர முதிர்ச்சி என்பவற்றுடன் தனிப்பட்ட ரீதியில் நிதியிடல் வசதி என்பை தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்படும். வட்டி வீத இடரும் இவ்வகையில் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்யப்படும்.

கடன் பெற்றுக்கொள்வதற்கு உள்ள தகைமையை மதிப்பீடு செய்வதற்கு, கடன் பெறுநர் தரப்படுத்தப்படும் பொழுது, வங்கயின் உள்ளக மதிப்பீட்டு நடைமுறையும், புள்ளியட்டவணை மற்றும் வங்கியின் 9 தர தரப்படுத்தல் அளவீடு என்பவை பயன்படுத்தப்படும். வங்கி பாரிய மொத்தக் கடன்பெருநர்கள், கம்பனிகள், சிறிய மற்றும் நடுத்தர கடன்பெருநர்களுக்கு வேறுபட்ட இடர் தரப்படுத்தல் புள்ளியட்டவணைகளை அபிவிருத்தி செய்துள்ளது. இந்த தரப்படுத்தல் புள்ளியட்டவணை காலத்திற்குகாலம் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுச் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு செல்லுபடியாக்கப்படும்.

கடன் இடர் நிலமையை தொடர்ச்சியாக செயற்படுத்திக் கண்காணித்து முகாமைத்துவம் செய்தல் வங்கியின் கடன் இடர் முகாமைத்துவ நடவடிக்கையின் முக்கிய பகுதியாகும். கண்காணிப்பு பணிகள் கடன் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நெருங்கிய ஒத்துழைப்புடன் வியாபார அலகுகளினால் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படும். வியாபார அலகினுள் தனிப்பட்ட கடன் அலுவலர்களுக்கு அவர்களுடைய கடன் பெறுநர்கள் மற்றும் அத்துடன் இணைந்த கடன் இடர்களை முகாமைத்துவம் செய்வற்கு அவர்களுக்கு நிபுணத்துவம் மற்றும் அனுபவம் உள்ளது. கடன் பெருநர்கள் தொடர்பாக தமக்கு ஒதுக்கப்பட்ட பட்டியல் தொடர்பாக தொடர்ச்சியாக கடனை கண்காணிப்பு செய்வற்கு கடன் அலுவலர்களுக்கு பொறுப்புள்ளது.

அதிகரித்துவரும் இடர் உள்ளாந்த தவறுகை கடன் வெளிப்படுத்தல்களை அடையாளம் காண்பதற்கு செயற்படுத்தப்படும் நடைமுறை வங்கியிடம் உள்ளது. ஆரம்ப எச்சரிக்கை முறைமையாகத் தொழிற்படும் கண்காணிப்பு பட்டியல், அவ்வாறான உள்ளாந்த தவறுகை தொடர்பாக முன்னறிவித்தலை வழங்கும்.

### கடன் இடரைக் குறைத்தல்

யாதேனும் கொடுக்கப்பட்ட கணக்கில் வாடிக்கையாளரின் அல்லது பட்டியலில் ஏற்படும் உள்ளாந்த கடன் நட்டங்கள் மீள்கட்டமைப்பு, பிணை, இலாப ஒப்பந்தம், கடன் காப்புறுதி, கடன் தற்பவங்கள் மற்றும் உத்தரவாதங்கள் மூலம் குறைக்கப்படும்

### கடன் இடர் மீளாய்வு

முன் மற்றும் பின் மீளாய்வுகள் - ரூபா 500,000 மேற்பட்ட அனைத்துக் கடன் வெளிப்படுத்தல்களும் உள்ளக கடன் தரப்படுத்தலுக்கு உள்ளாவதுடன், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் குழுச் சபையின் மூலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படும்.

### கடன் இடர் தேவை

வங்கி கீழ்வரும் தாங்குதிறன் மட்டத்தில் கடன் இடருக்கான அதன் தேவையைத் தயாரித்துள்ளது:

| இடர் மெட்ரிக் | குறைந்த இடர் | மத்திம இடர் | உயர் இடர் | 1.12.2015 இல் நிலை |
|---|---|---|---|---|
| வகைப்படுத்தப்பட்ட கடன்கள்/ மொத்தக் கடன்கள் | < 4.0% | 4 -5 % | > 5% | 2.45% |
| காலம் கடந்தவை/ மொத்தக் கடன்கள் | < 5% | 5 - 10% | > 10% | 10.50% |
| ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டது | > 90% | 75 - 90% | < 75% | 98.27% |
| ர்ர்ஐ – யெஅந உழஎ | < 0.15 | 0.15 - 0.25 | > 0.25 | 0.05 |
| ர்ர்ஐ – ளுநஉவழச உழஎ | < 0.15 | 0.15 - 0.25 | > 0.25 | 0.13 |
| நிறுவன எல்லை ஊடாக வெளிப்படுத்துகை – நாட்டின் இடர் | <10% | 10 - 15% | > 15% | 0.04% |

*தொழிற்படாத கடன்கள் மற்றும் ஒதுக்கீட்டு அணவல் வீதம்*

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| செயற்படாத கடன்கள் | 33,435 | 20,942 | 19,144 |
| ஏற்பாடுகள் அணவல் வீதம் (மு) | 61.8 | 84.3 | 98.3 |

## கடன் செறிவு இடர்

கடன் பட்டியலினுள் வெளிப்படுத்துகை பற்றிய செறிவு கடன் இடர் முகாமைத்துவத்தில் முக்கிய விடயமாகும். அது இரு வகை செம்மையற்ற பல்வகைப்படுத்தலாகும். முதலாவது சந்தர்ப்பத்தில், பெயர் செறிவு, குறிப்பிடப்பட்ட தனிநபர் பிணையாளருக்கு அது சிறிய அளவாகும் காரணத்தால் அல்லது பாரிய வெளிப்படுத்துகை காரணத்தினால் அல்லது பட்டியலில் விசேட இடர் தொடர்பான செம்மையற்ற பல்வகைப்படுத்தலுக்குரியதாகும். இரண்டாவது சந்தர்ப்பத்தில், துறை செறிவாக்கல், இடர் பற்றிய ஒழுங்கான அங்கங்கள் எனும் துறைசார் காரணிகள் செம்மையற்ற பல்வகைப்படுத்தலுக்குரியதாகும்.

வங்கி சிறந்த முறையில் பல்வகைப்படுத்தப்பட்ட பட்டியலை பேணுதல் அவசியம் தொடர்பாக முழுமையாக அறிவுறுத்தப்பட்டிருப்பதுடன், எனினும், அரசின் சமூக பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான வங்கியாகவும் ஈட்டு முற்பணம் நடவடிக்கைகளில் முன்னணி நிறுவனதாக அதன் வரலாற்று நிலையின் மீது உருவாகும் அரசுக்கு உரிய தொழில்முயற்சிகள், ஈடு மற்றும் வீட்டுக்கடன் வெளிப்படுத்துகை செறிவு மட்டத்தைக் கைப்பற்றியுள்ளது.

இன்னொரு வகையில், அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு எங்கள் வெளிப்படுத்துகை உபாயமார்க்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை மற்றும் இரு உர இறக்குமதிக் கம்பனிகளை உள்ளடக்கும். முதலில் குறிப்பிட்ட இரு நிறுவனங்களும் தனியுரிமை நிலையில் இருப்பதுடன், பின்னர் குறிப்பிட்ட இரு நிறுவனங்களும் நாட்டின் வளர்ச்சிக்கும் நிலைத்திருப்புக்கும் அவசியமான கைத்தொழிற்துறையின் முக்கிய நிறுவனங்கள் ஆகும். அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு எங்கள் வெளிபடுத்துகை அரச மற்றும் திறைசேரியின் தெளிவான பங்களிப்பின் ஊடாக மீள உறுதிப்படுத்தப்பட்டது. அதன்படி, அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளில் இருக்கும் வெளிப்படுத்துகை இடர் பற்றி தகைமையல்லாத வெளிப்படுத்துகை என கருதப்படமாட்டாது.

***பாரிய வெளிப்படுத்துகைகளின் செறிவாக்கல் (ரூபா 100 மில்லியனை விட அதிகம்) – 31.12.2015 அன்று***

அனைத்து இலக்கங்களும் ரூ.மில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | கைத்தொழிற் துறைகளின் எண்ணிக்கை | தனிப்பட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை | நேரடி வெளிப்படுத்துகை | மறைமுக வெளிப்படுத்துகை | மொத்தம் | ஐந்தொகைக்கு அமைவாக நேரடி வெளிப்படுத்துகை வீதம் |
|---|---|---|---|---|---|---|
| அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகள் | 16 | 171 | 404,913 | 166,412 | 571,325 | 51% |
| அரசுக்கு சொந்தமற்ற தொழில்முயற்சிகள் | 15 | 147 | 56,109 | 24,186 | 80,295 | 7% |

பாரிய வெளிப்படுத்துகை வாடிக்கையாளர்களின் பங்குக்கு அமைவாக நிதி ஆண்டின் முடிவில் வங்கிக் கணக்கில் சிறந்த 20 வாடிக்கையாளர்களின் நிலை

| பாரிய வெளிப்படுத்தைகளின் பங்கு | சிறந்த 3 | சிறந்த 5 | சிறந்த 10 | சிறந்த 20 |
|---|---|---|---|---|
| **பெயர் செறிவாக்கல் (அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகள்)** | 63% | 72% | 83% | 91% |
| **பெயர் செறிவாக்கல் (அரசுக்கு சொந்தமற்ற தொழில்முயற்சிகள்)** | 33% | 45% | 59% | 70% |
| **மொத்த வெளிப்படுத்துகையின் பங்கு** | | | | |
| **பெயர் செறிவாக்கல் (அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகள்)** | 46% | 53% | 60% | 66% |
| **பெயர் செறிவாக்கல் (அரசுக்கு சொந்தமற்ற தொழில்முயற்சிகள்)** | 3% | 5% | 6% | 7% |

## செறிவாக்கல் இடரின் முகாமைத்துவம்

தனியான கடன்கொடுப்பனவு வரையறைக்கு மேலதிகமாக, செறிவாக்கல் கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்தலை மேற்கொள்வதற்கு Herfindahl-Hirschman Index (HHI) சுட்டி பயன்படுத்தப்படும். இந்த சுட்டி ரூபா 100 மில்லியனுக்கு (நேரடியான மற்றும் தங்கியிருக்கும்) அதிகமான அனைத்து வெளிப்படுத்துகைகளும் (வரையறையை விட அதிகம் அல்லது நிலுவை) கணிப்பீடு செய்யப்படுவதுடன், பெயர் மற்றும் துறை அடிப்படையின் மீது கணிப்பீடு செய்யப்படும். பின்னர் குறிப்பிட்ட நோக்கத்திற்காக, வங்கி அதன் பட்டியலில் இலகுவாக இனங்காணக்கூடிய 16 கைத்தொழிற்துறைகளாகப் (கீழே பார்க்கவும்) மேலும் பிரித்துள்ளது. கீழ்வரும் தாங்குதிறன் மட்டத்தில் பணிப்பாளர் சபையினால் செறிவாக்கல் நிலைமை தயாரிக்கப்பட்டுள்ளது.

| மெட்ரிக் | குறைந்த செறிவாக்கல் | நடுநிலை செறிவாக்கல் | உயர் செறிவாக்கல் |
|---|---|---|---|
| ர்ர்ஐ | < 0.15 | 0.15 – 0.25 | > 0.25 |

2015 முழுவதுமாக மக்கள் வங்கியின் நிலைப்பாடு பின்வருமாறு:

| | 31/3/15 | 30/6/15 | 30/9/15 | 31/12/15 |
|---|---|---|---|---|
| பெயர் செறிவாக்கல் (அரசுக்கு சொந்தமற்ற தொழில்முயற்சிகள்) | 0.03 | 0.03 | 0.04 | 0.05 |
| பெயர் செறிவாக்கல் (அரசுக்கு சொந்தமற்ற தொழில்முயற்சிகள்) | 0.20 | 0.21 | 0.22 | 0.22 |
| துறைசார் செறிவாக்கல் (அரசுக்கு சொந்தமற்ற தொழில்முயற்சிகள்) | 0.20 | 0.18 | 0.19 | 0.13 |
| துறைசார் செறிவாக்கல் (அரசுக்கு சொந்தமற்ற தொழில்முயற்சிகள்) | 0.26 | 0.26 | 0.26 | 0.29 |

***பட்டியலை பல்வகைப்படுத்தல்***

# செயன்முகாமை

## இடர் முகாமைத்துவம்

வங்கியின் கடன் மற்றும் கிடைப்பனவுப் பட்டியலினுள் பல்வகைப்படுத்தப்பட்ட மட்டத்தில் வெளிப்படுத்துகை வரையறைகளுக்கு அமைவாக இடர் முகாமைத்துவ அலகினால் ஒழுங்குமுறையில் கண்காணிக்கப்படும்.

1. தயாரிப்பு மட்டத்தில்
2. நோக்கம் / கைத்தொழிற்துறை மட்டத்தில்

**கடன் மற்றும் பெறுகைகள் (தயாரிப்பு ரீதியாக) 2015**




**கடன் மற்றும் பெறுகைகள் (கைத்தொழில் ரீதியாக) - 2015**




**கடன் மற்றும் பெறுகைகள் (பூலோக ரீதியாக பிரித்தல்) - 2015**




**கடன் மற்றும் பெறுகைகள் (தயாரிப்பு ரீதியாக) 2014**




**கடன் மற்றும் பெறுகைகள் (கைத்தொழில் ரீதியாக) - 2014**




**கடன் மற்றும் பெறுகைகள் (பூலோக ரீதியாக பிரித்தல்) - 2014**



## சந்தை இடர்

சந்தை இடர் எனும் விசேட வெளிநாட்டு நாணயமாற்று வீதம், வட்டி வீதம் மற்றும் உரிமைப் பங்கு விலை மாற்றம் வங்கியின் வருமானத்திற்கு மற்றும் வங்கியினால் தாங்கக்கூடிய யாதேனும் நிதி கருவியின் பெறுமதிக்கு எதிரிடையாக தாக்கும்.

***சந்தை இடர் முகாமைத்துவத்தின் நிறுவனக் கட்டமைப்பு***




சந்தை இடரை முகாமைத்துவம் செய்யும் பொழுது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுச் சபையின் விதப்புரை மீது, பணிப்பாளர் சபை பல்வேறு திறைசேரி மற்றும் முதலீடு தொடர்பான நடவடிக்கைளுக்கான எல்லையைத் தீர்மானிக்கும். இவை உண்ணிப்பாக கண்காணிக்கப்பட்டு மத்திய அலுவலகத்திற்கு அறிக்கையிடப்படுவதுடன், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுச் சபையினால் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கலந்துரையாடப்படும். சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுச் சபை சந்தை இடர் முகாமைத்துவக் கொள்கைகளை அபிவிருத்தி செய்வதற்கான பொறுப்பைக் கொண்டிருப்பதுடன், மத்திய அலுவலகம் இந்த கொள்கை வழிகாட்டலுக்கு அமைவாக வெளிப்படுத்துகை தொடர்பாக நாளாந்த கண்காணிப்பை மேற்கொள்வதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது.

திறைசேரி மத்திய அலுவலகம் இடர் பொறுப்பேற்கும் மற்றும் தொழிற்பாட்டு அலகுகளில் (உதாரணமாக வர்த்தகம் மற்றும் தீர்ப்பனவு) சுயாதீன நிபுணர்களைக் கொண்டிருப்பதுடன், சந்தை இடர் முகாமைத்துவ அலகின் பகுதியாக அமைவதுடன், இடர் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்படுத்தல் பணிகளை மேற்கொள்வதற்காக தகவல்களை அணுகும்.

இலாபம் மற்றும் நட்டத்தின் இறுதி விளைவினை பரிசோதனை செய்வதற்கும் மற்றும் உச்சளவாக சந்தை மாற்றத்தை மாதிரியக் கொள்ளும் போது வெளிப்படையாக மட்டும் உருவாகும் பட்டியலினுள் மறைந்திருக்கும் சூட்சுமத்தை வெளிப்படுத்துவதற்கு அழுத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

சூட்சுமமான மற்றும் வேறு சந்தை இடர் வரையறைகள், மிகச்சிறிய மட்டத்தில் சந்தை இடரை முகாமை செய்தல் பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த வரையறைகள் சந்தை இடர் அலகின் ஊடாக சுயாதீனமாக தயாரிப்பு, துறை, இடம் மற்றும் கடன் தரப்படுத்தலின் படி கண்காணிக்கப்படுகின்றது. எனினும், திறைசேரியின் அனைத்து வரையறைகள் மற்றும் கொள்கைகளுக்கான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தி முன்செல்லும் அடிப்படையின் மீது மொத்த சந்தை இடர் முகாமைத்துவம் செய்தல் பிரதான பொறுப்பாகவுள்ளது.

## இடர் கலாச்சாரம்

மக்கள் வங்கியின் சந்தை இடர் மற்றும் சொத்து பொறுப்பு முகாமைத்துவம் கீழ்வரும் விடயங்களில் பங்களிப்பு செய்யும்.

1. திறைசேரியின் முன் அலுவலகம் மற்றும் அறிக்கையிடும் அலகுகளுக்கான வரையறைகளை உருவாக்குதல்.
2. சொத்து பொறுப்பு முகாமைத்துவத்திற்காக வரையறைகள் மற்றும் அளவீட்டு நியமங்களை உருவாக்குதல்.
3. மதிப்பீட்டு வீதம் மற்றும் பொறிமுறை பற்றி சுயாதீனமாக ஒப்பாய்வு செய்தல்
4. சந்தை இடரை அவர்கள் கணிப்பீடு செய்வதற்காக பயன்படுத்தப்படும் செல்லுபடியாக்கும் மாதிரிகளையும் முகாமைத்துவம் செய்வதற்கு இடர் பெறுமதி மற்றும் கால இடைவெளியைப் பயன்படுத்தல்.

## சந்தை இடருக்கான இடர் தேவை

வங்கி சந்தை இடருக்காக குறைந்த இடர் தேவையைக் கொண்டுள்ளது. உடமை சந்தை மிகக்குறைந்த நிலையைக் கொண்டிருப்பதுடன், வாடிக்கையாளர் தொடர்புடைய பரிமாற்றங்கள் தொடர்பாக நிலைமைகள் பல உள்ளன. கொள்கையாக வங்கி தற்பவங்களினுள் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதில்லை.

சந்தை இடர் கொள்கை, நியமங்கள் மற்றும் இடர் தேவை கூற்று தொடர்பாக திரட்டிய சட்டகத்தினுள் சாட்டப்பட்ட அதிகாரிகள், இடர் கணிப்பீடு மற்றும் அறிக்கையிடல் மற்றும் கட்டுப்பாட்டு நியமங்கள் உட்பட வியாபார இடரைக் கண்காணித்தல், நிர்வாகம், ஏற்ற இறக்க நிலை, ஆளுகை என்பவற்றுக்கு பணிப்பரைகளை வழங்கும்.

பணிப்பாளர் சபையினால் அனுமதியளிக்கப்பட்ட, வெளிநாட்டு நாணயம், நிலையான வருமானப் பிணையங்கள் மற்றும் உரிமைப் பங்குகள் வர்த்தகத்திற்கான வரையறைகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

*2015ம் ஆண்டினுள் வியாபார இடருக்கான வரையறைகள் மற்றும் நிலைகள்*

| | அனுமதிக்கப்பட்ட வரையறைகள் | 31.12.2015 |
|---|---|---|
| Fx நிகர திறந்த நிலை | ஐ.அ.டொ+/- 16 மில் | உச்சளவு: ஐ.அ.டொ 11.69 மில்<br>குறைந்தளவு : ஐ.அ.டொ 0.01 மில் |
| இடரின் போது பெறுமதி (VaR)<br>(Conf. மட்டம 99%, 1 நாள்) | ஐ.அ.டொ 250இ000 | உச்சளவு: ஐ.அ.டொ 33இ532<br>குறைந்தளவு : ஐ.அ.டொ 1இ696 |
| திரட்டிய இழப்புகள்<br>1. Fx வாத்தகம்<br>2. FIS வாத்தகம் (சாத்தியமான)<br>(அசாத்தியமான) | ஐ.அ.டொ 175இ000<br>ரூபா.. 25 மில்<br>ரூபா. 500 மில் | உச்சளவு: ஐ.அ.டொ 5இ842<br>உச்சளவு: ரூபா. 1.9 மில்<br>உச்சளவு: ரூபா. 282.7 மில் |
| முன்னோக்கிய Fx இடைவெளி வரையறை | மாதத்திற்கு ஐ.அ.டொ 210 மில்லியன் | உச்சளவு : ஐ.அ.டொ 208.8 மாதத்திற்கு மில்லியன்<br>குறைந்தளவு : ஐ.அ.டொ 1.7 மாதத்திற்கு மில்லியன் |
| இலங்கை அரசின் பிணையங்கள் - வர்த்தகம்<br>- மூலதனம்<br>- விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள (AFS) | ரூபா. 150 பில்<br>ரூபா. 155 பில்<br>ரூபா. 10 பில் | உச்சளவு முகப்பெறுமதி: ரூபா. 116.7 பில்<br>உச்சளவு முகப்பெறுமதி: ரூபா. 97.7 பில்<br>உச்சளவு முகப்பெறுமதி: ரூபா. 0.85 பில் |
| இலங்கை அபிவிருத்திப் முறிகள் (SLDB) | ஐ.அ.டொ 750 மில் | உச்சளவு: ஐ.அ.டொ 460 மில் |
| உள்ளக வங்கி கடன் பெறுகைகள் | ரூபா. 150 பில் | உச்சளவு: ரூபா. 141.3 பில்<br>குறைந்தளவு : ரூபா. 99.3 பில் |
| DBU வெளிநாட்டு நாணயக் கடன்பெறுவனவுகள் | ஐ.அ.டொ 50 மில் | உச்சளவு: ஐ.அ.டொ 23 மில்<br>குறைந்தளவு : ஐ.அ.டொ 6.5 மில் |
| பங்கு வர்த்தகப் பட்டியலில் முதலீட்டுப் பெறுமதி | ரூபா. 1,000 மில் | உச்சளவு: ரூபா. 778 மில் (MV: ரூபா. 754 மில்) |
| S&P SL20 சுட்டி மீதான பங்குகளின் வீதம் | குறைந்தளவு 25% | குறைந்தளவு : 27மூ |
| Gilt அலகு நம்பிக்கை வரையறை | ரூபா. 2.5 பில் | உச்சளவு: ரூபா 2.5 பில் |
| வுட்டி வீத இடர் (DGap+VaR on Fwd FX) | ரூபா. 5 பில் | உச்சளவு: ரூபா. 5.4 பில் |

## வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற இடர்

வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற இடர் வங்கியின் திறைசேரி திணைக்களத்தினால் நாளாந்த அடிப்படையில் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. திறந்த நிலைமையினுள் வெளிநாட்டு நாணயம் மற்றும் பகலிரவு நிலைமை தொடர்பாக முழுமையான திறந்த நிலைக்காக கொள்ளளவு வரையறை தயாரிக்கப்படும். இவ்வாறான கொள்ளளவு வரையறைகள் சொத்து மற்றும் பொறுப்பு குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட வரையறை அல்லது இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டுள்ள வரையறை எனும் இரண்டில் குறைவானது ஆகும். அத்துடன், இடரின் போது நாளாந்த பெறுமதி, வெளிநாட்டு நாணய பரிமாற்ற வீதத்தை கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுவதுடன், இறுதியில் அதற்காக பிரதான பொறிமுறையாக அமையும். இடரின் போது நாளாந்த பெறுமதி (DVaR) எனும் தற்போதைய நிலைமைகள் ஒரு வியாபார தினத்தினுள் மாற்றம் அடையாது இருக்குமாயின் ஏற்படக்கூடிய உத்தேச இழப்பின் 99% நம்பிக்கையின் மட்டத்துடன் கூடிய மதிப்பீடாகும். 100இல் 1 நிகழ்வு உள்ளதென்பதற்கு வங்கி மதிப்பீட்டை தயாரிக்கின்றது இதன் கருத்தாகும். வங்கியின் சந்தை நிலைமையில் சந்தை நட்டத்திற்கு புள்ளியொன்று இடர் அறிக்கையிடும் பெறுமதியை விட பெரிதாக அமைய முடியும். உள்ளக மூலதனத்தை மதிப்பீடு செய்யும் நடைமுறைக்காக, தாங்கியிருக்கும் காலம் பத்தாகக் கொள்ளப்படும்.

இடரின் பெறுமதியை கணிப்பிடுதல், இந்தியாவின் இன்வோசிசில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட, பராமெட்ரிக் முறை (வேறுபாடு உபமாறுபாடு) பயன்படுத்தப்படும் வங்கியின் திறைசேரி முகாமைத்துவ முறைமையினால் (பினக்கல்) மேற்கொள்ளப்படும். வழமையான மாதிரி செல்லுபடியாக்கல் (உள்நாட்டில் நிபுணர்கள் இதுவரை கிடைக்கப்பெறாமை) இல்லாததனால், சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புளும்பேர்க் முறைமையினால் வழங்கப்படும் இடர் பெறுமதி இயலளவு மற்றும் பினாக்கல் விளைவை ஒப்பிட்டு செல்லுபடியாக்குவதற்கு ஏற்ப தொடர்ந்தும் பயன்படுத்தப்படும்.

**2015ம் ஆண்டுக் காலப்பகுதியின் இறுதியில் FX NOP மற்றும் VaR**




**2015ம் ஆண்டுக்கான நாளாந்த இடர் பெறுமதி**




உரிமையாண்மை வர்த்தகம் மூலம் இறக்குமதி, ஏற்றுமதி, பண அனுப்பீடுகள் மற்றும் வேறு செயற்பாடுகள் காரணமாக சேவைபெறுநர்கள் சார்பாக அந்நியப் புழக்கப் பணக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதன்மூலம் ஆகிய இரண்டின் மூலமும் அந்நியச் செலாவணி வெளிக்காட்டுகைகள் எழும்.

அந்நியச் செலாவணி முதிர்வு இடைவெளிகள் காரணமாக எழக்கூடிய இடர்க்கள், மாதாந்தம் ஐ.அ.டொலர் மில்லியன்கள்மூலம் அளவிடப்படும் முன்னோக்கிய முதிர்வு இடைவெளியொன்றை ஏற்படுத்துவதன்மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

ALCO அல்லது பிற ஒழுங்குறுத்துகைக்கான வழிகாட்டுநெறிகளினால் காட்டப்படும் எல்லைகளுக்கு எதிரான இவ்வெளிப்படுத்தல்களை நடு அலுவலகம் கண்காணிக்கிறது.

அந்நியச் செலாவணி வெளிப்படுத்துகைகளின் கூருணர்வுத்தன்மை அல்லது வங்கியின் தேறிய திறந்த அமைவுநிலை அந்நியப் புழக்கப் பண வங்கியியல் அலகைத் தவிர்ப்பதன்மூலம் கணிப்பிடப்படுகிறது. அந்நிய புழக்கப் பண வங்கியியல் வெளிப்படுத்துகைகள் ஐ.அ.டொ/ரூபா பரிமாற்ற விகிதங்களின் 5%, 10%, 15% மாறுபாட்டெல்லைகளின் பேரில் அழுத்த சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. இதன் பெறுபேறுகள், பிரதான இடர் உத்தியோகத்தரினால் நாளாந்தம் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகிறது. ஒழுங்குறுத்துகை மேற்பார்வையாளராலும் காலாண்டு மீளாய்வுமூலம் அது தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகிறது.

## விலை மதிப்பிடல்கள்

### *சந்தைக்கு குறியிடல்*

இது திறைசேரியின் பின்வரிசை அலுவலகம் ஊடாக சகல மீதியாகவுள்ள நிலைமைகளின் நடப்பு சந்தைப் பெறுமானங்களைத் தீர்மானிக்கும் பொருட்டு நடப்பு சந்தை விகிதங்களின்படி அவற்றை மதிப்பிடுவதற்கான ஒரு செயன்முறையாகும். திறைசேரியின் பின்வரிசை அலுவலகம் மூலம் சந்தைப் பெறுமதிச் செயன்முறைக்கு குறியிடுவதற்கு சுயேட்சையான மூலமொன்றிலிருந்து சந்தை விகிதங்கள் சேகரிக்கப்படுகின்றன. மத்திய அலுவலகம் அத்தகைய கணிப்பிடல்களை சுயேட்சையாக செல்லுபடியானதாக்குகிறது.

அந்நியச் செலாவணி சொத்துக்களும் பொறுப்புக்களும் மத்திய சந்தை விகிதத்தின்படி மீள்மதிப்பீடு செய்யப்படுவதுடன், இலாபமீட்டல்கள் அல்லது நட்டமீட்டல்கள் ஏதும் இருக்குமாயின், அவை சம்பந்தமாக இலாப நட்டக் கணக்கின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

முன்னோக்கிய ஒப்பந்தங்கள் முன்னோக்கிய சந்தை விகிதங்களின்படி மதிப்பீடு செய்யப்படுவதுடன், இலாமீட்டல்கள் அல்லது நட்டமீட்டல்கள் இருக்குமாயின், அவை சம்பந்தமாக இலாப நட்டக் கணக்கின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## வட்டி வீத இடர்

வட்டி வீத இடர் என்பது சந்தை வட்டி வீத மட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு நிலையாகும். வங்கியின் தேறிய வட்டி வருமானம் மற்றும் நிறுத்திவைக்கப்பட்டுள்ள நிதி ஆவணங்கள் எவற்றினதும் பெறுமதியின்மீது அது பாதக தாக்கம் செலுத்தும். வட்டி இடைவெளிகளுக்கான எல்லைகளை விதித்து பேணிச் செல்வதன்மூலமும் பலதரப்பட்ட வட்டிக் கூருணர்வுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீள்விலையிடல் பக்கத்தோற்றங்களுடன் ஒப்பிடுவதன் மூலமும் இந்த இடர் முகாமை செய்யப்படுகிறது. (முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்களில் இடர் உட்பட) வங்கியியல், வர்த்தகம் ஆகிய இரு நூல்களிலும் வட்டி வீத இடர் உறுதிப்படுத்தப்படுவதுடன், இதற்கான கால எல்லை இடைவெளிப் பகுப்பாய்வு, இடர் பெறுமதி ஆகிய இரண்டும் பயன்படுத்தப்படுகிறது.

**கால இடைவெளிப் பகுப்பாய்வைப் பயன்படுத்தி 1% ஆல் பாதக வட்டி வீத மாற்றம் காரணமாக (MV of Equity) மீது ஏற்படுத்தும் தாக்கம்**




ஒப்பந்தம்சார் மற்றும் நடத்தைசார் ஆகிய இரண்டையும் அடிப்படையாகக்கொண்டு வட்டி இடைவெளிகள் கணிப்பிடப்படுகின்றன.

வட்டி வீத இடர்களில் பின்வரும் இடர்க்கள் அடங்கும்,

- மீள்விலைமதிப்பிடல் இடர், முழுதுமளாவிய வட்டி வீத மட்டங்களிலும் வங்கி ஏட்டு உருப்படிகளிலும் மீள்விலையிடல்களின் அதற்கேயுரிய இசைவறாமைகளின் வேறுபாடுகளினால் எழக்கூடிய இடர்க்களாகும்.
- விளைவு வளையி இடர், பல்வேறு காலங்களுக்கான வட்டி வீதங்களின் ஒப்பீட்டு மட்டங்களிலான மாற்றத்தினாலும் விளைவு வளையியின் சரிவில் அல்லது வடிவில் ஏற்படக்கூடிய வேறுபாடுகளினால் எழக்கூடிய இடர்க்களாகும்.
- அடிப்படை இடர், வங்கி ஏட்டு உருப்படிகளில் நிதிகளின் உட்கிடையான கிரயம் சம்பந்தமாக உள்ளபடியான மற்றும் உத்தேச வட்டி எல்லைகளுக்கு இடையிலான வேறுபாடுகளினால் எழக்கூடிய இடர்க்களாகும்.

*1 வருட காலத்துள் இடர்ள்ள வருவாய்கள்*

*(ரூ.மி.)*

| | 1 மாதம் வரையில் | 1 - 3 மாதங்கள் | 3 - 6 மாதங்கள் | 6 - 12 மாதங்கள் |
|---|---|---|---|---|
| தேறிய சொத்துக்கள் | (51,110) | (5,059) | (22,841) | (299,565) |
| 1% இடம்பெறும் நட்ட மாற்றம் | (21.00) | (8.43) | (85.65) | 2,246.74) |

*ரூ.மி. (2,361.83) 1% மாற்றத்தின் பேரிலான தேறிய தாக்கம்*

*வட்டி வீத இடர் முகாமைத்துவம்*

பணிப்பாளர் சபை வட்டி வீத இடர்களுக்கான இடர் நாட்டத்தை (VaR) அனுமதிப்பதுடன், இடர்க்களின் பெறுமானத்திற்கும் இடரிலுள்ள வருவாய்களுக்கும் (EAR) ஒட்டுமொத்த எல்லைகளைக் காட்டும்.

வட்டி வீத இடரிற்கான (IRR) முகாமை பணிச்சட்டத்தின் முக்கிய கூறுகளில் பின்வருவன அடங்கும்:

- வங்கி மற்றும் வர்த்தக ஏடுகளிலுள்ள சகல வட்டி வீது இடர் நிலைமைகளையும் அடையாளம்கண்டு, அளவிட்டு, நெறிப்படுத்தி அறிக்கையிட்டுள்ளதை உறுதிப்படுத்துகின்ற இசைவுகள் மற்றும் முகாமைத்துவ பணிச்சட்டம் பொருள்வரையறை செய்யும் கொள்கையானது திறைசேரி திணைக்களம் அனுமதித்த இடர் நாட்டத்திற்கு இசைவாக வங்கியின் வட்டி வீத இடர் முகாமைத்திற்கு பொறுப்பாக உள்ளது.
- அங்கீகரிக்கப்பட்ட இடர்நோக்கை வேட்கைக்கமைய வங்கியின் வட்டி வீத இடர்நோக்கையினை முகாமைப்படுத்துவதற்கு திறைசேரிப் பிரிவானது பொறுப்பாயுள்ளது.
- வங்கி மற்றும் வர்த்த நடு அலுவலகமானது சுயேட்சையான அலகொன்றாக வட்டி வீத நட்ட ஆபத்தைக் கண்காணிப்பதற்கு பொறுப்பாக உள்ளது.

*வங்கி மற்றும் வர்த்தக ஏடுகளில் வட்டி வீத ஆபத்து*

வங்கியின் கடன் மற்றும் வைப்புகளின் மீள்விலையிடலின் இசைவின்மைகள் காரணமாக வங்கி வட்டி வீத இடரிற்கு உள்ளாகிறது. மீள்விலையிடல் காலங்களை இயன்றளவுக்கு இசைவாக்க முயற்சி எடுத்துக்கொள்வதன் மூலம் இந்த இடர் முகாமை செய்யப்படுகிறது. மேலும், உரிய சொத்துக்களும் பொறுப்புக்களும், ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை மீளச் செலுத்துவதற்குள்ள அல்லது வட்டி வீதம் மீள நிறுவப்பட்ட அல்லது மீள மாற்றியமைக்கப்பட்ட முதிர்வுப் முறையொன்றுக்கு கொண்டுவரப்படுகிறது.

*அளவீடு*

வெளிப்படுத்துகைகள் தனிநபர் அடிப்படையில் அந்தந்த நாணயங்களில் (ரூ.000 களில்) அளவிட்டு, ஒவ்வொரு முதிர்வு முறையில் தேறிய மொத்தத்தை ஒவ்வொரு நாணத்திற்கும் கணிப்பிடப்படுவதுடன், சகல நாணயங்களின் மொத்தம் பின்னர் ஒன்றுதிரட்டப்படுகிறது. மொத்த வைப்பு பொறுப்புக்களில் 25% க்கு கூடுதலான நாணயங்கள் வெவ்வேறாக அறிக்கையிடப்படுகிறது.

*கண்காணிப்பும் அறிக்கையிடலும்*

வட்டி வீத இடர் அளவுமுறைகள்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைக் குழுவில் (ALCO) ஆகக்குறைந்தது மாதாந்தம் அளவிடப்பட்டு, கண்காணிக்கப்பட்டு, கலந்துரையாடப்படுகிறது.

*அரசாங்கப் பிணை முதலீட்டுப் பட்டியல் காலப்பகுதி (காலப்பகுதி வருடங்களில்)*

| திகதி | வர்த்தகம் | எச்.ரி.எம். |
|---|---|---|
| 2014 டிசம்பர் | 0.8513 வருடங்கள் | 3.3016 வருடங்கள் |
| 2015 மார்ச் | 0.6219 வருடங்கள் | 3.2431 வருடங்கள் |
| 2015 ஜூன் | 0.3927 வருடங்கள் | 2.9765 வருடங்கள் |
| 2015 செப்டம்பர் | 0.3630 வருடங்கள் | 3.1740 வருடங்கள் |
| 2015 டிசம்பர் | 0.4542 வருடங்கள் | 3.2468 வருடங்கள் |

### உரிமைமுதல் இடர்

பேணப்படும் யாதேனும் உரிமைமுதல் பங்குகளில் ஏற்படும் விலைமாற்றங்களின்படி உரிமைமுதல் இடர் எழுகிறது. அளவுரீதியான எல்லைகளிலும் நட்டங்களை நிறுத்துவதற்கான எல்லைகளினதும் ஒருங்கிணைப்பினால் இந்த இடர் முகாமைசெய்யப்படுகிறது. சந்தை இடர் முகாமை பற்றிய குறித்துரைக்கப்பட்ட கொள்கைகள் வங்கியின் முதலீட்டு வங்கியியல் கொள்கைக் கைந்நூலில் அடங்குகியுள்ளது. வர்த்தக முதலீட்டுப் பட்டியலுக்குப் புறம்பாக, வங்கிக்கு உபாயமுறை ரீதியான முதலீடுகளின் முதலீட்டு பட்டியலொன்றும் உள்ளது.

### இடர் நாட்டம்

வர்த்தக சாதாரண பங்குகளுக்கு பணிப்பாளர் சபையினால் வெளிப்படுத்துகை செறியத்திற்கான உப எல்லைகள் உட்பட 1,000 ரூ.மி. உயர்ந்தபட்ச வெளிப்படுத்துதலொன்று மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளது. குறித்த மட்டமொன்றின் பின் நட்டங்களைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு நட்டங்களை தவிர்ப்பதற்கான எல்லைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

### உரிமைமுதல் இடர் முகாமைத்துவம்

உரிமைமுதல் வர்த்தக ஏட்டிற்கு வெளியிலான உரிமைமுதல் முதலீடுகளை ஏற்றல், அளவீடு, கண்காணிப்பு, அறிக்கையிடல் தொடர்பிலான இசைவுகளையும் முகாமைத்துவ பணிச்சட்டத்தையும் விளக்குகிறது.

வர்த்தகமல்லாத உரிமைமுதல் இடர் எல்லைகளுடனான வியாபார அலகுகள் வர்த்தகமல்லாத உரிமைமுதல் இடர் பணிச்சட்டத்தின் தேவைகளுக்கு அமைவாக உரிமைமுதல் இடர் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும். வர்த்தக அலகுகளும் அவற்றின் இடர்க் குழுக்களும் சகல முக்கிய இடர்க்களையும் கண்காணிப்பதற்கும் இசைவடைவதற்கும் கொடுக்கல்வாங்கல்களின் சகல வணிக மற்றும் இடர்க் துறைகள் தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுப்பதை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

உரிமைமுதல் நட்டஆபத்து பொறுப்பளிக்கப்பட்ட அதிகாரசபையின்கீழ் இசைவுக்காக உத்தேச உரிமைமுதல் கொடுக்கல்வாங்கல்களின் சுயாதீன மீள்பரிசீலனை, முதலீடுகளின் காலப்பொருத்த மதிப்பீடு, சேத மதிப்பீட்டுக் கண்காணிப்பு மற்றும் எல்லைகளுக்கு எதிராக உரிமைமுதல் முதலீட்டுக் கண்காணிப்பும் அறிக்கையிடும் உள்ளிட்ட வர்த்தகமல்லாத உரிமைமுதல் இடர் பணிச்சட்டம் தொடர்பில் சுயாதீன மேற்பார்வையொன்றைப் பேணிச்செல்வதற்கு சந்தை இடர் திணைக்களம் பொறுப்புடையதாகும்.

### அடகு

அடகு மூலம் வாடிக்கையாளர் நிதிக்கு துரித மற்றும் எளிய அணுகுவழியொன்று வழங்கப்படுகிறது. 2015 இறுதிப்பகுதியில் உள்ளவாறு வங்கியின் ஐந்தொகையினால் ஏறத்தாழ 12% இந்த வியாபாரத்திற்கு திறந்திருந்தது.

துரிதமாக மீள சந்தைப்படுத்தக்கூடியதாகக் கருதப்படும் தங்க நகை அடகு வைத்தல்களின்மூலம் இந்த வெளிப்படுத்துதல் இடம்பெற்றிருந்தமையால், ஒழுங்குறுத்துநருக்கு இடர் சுமை சுமத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், சர்வதேச தங்கத்திற்கான விலை மாற்றம் உள்ளூரில் தங்கத்திற்கான விலை மீதும் தாக்கத்தை ஏற்படுத்துவதால், அவ்விலை மாற்றங்கள் அடகு வியாபாரத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

### அடகு முகாமைத்துவம்

அடகுச் செயன்முறைக்கே உரிய நட்ட ஆபத்தை முகாமைசெய்வதற்கும் தளர்த்தலுக்கும் வங்கி பின்வரும் செயன்முறைகளைக் கையாள்கிறது:-

- பெறுமதிக்கேற்ற கடன் விகிதங்களை சாதுரியமான முறையில் பேணுதல் - சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைக் குழுவினால் போட்டியாளர் உற்பத்திக் குணவியல்புகளுடன் தங்கத்திற்கான சந்தை விலைகள் அடிக்கடி மதிப்பீடுசெய்து பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன், இந்த உற்பத்தியின் இடர் சன்மான தொடர்பை உச்சப்படுத்துவதற்கு பெறுமதிக்கேற்ற கடன் மற்றும் வேறு சிறப்பியல்பு செம்மையாக்கப்படுகிறது.
- அடகு வைக்கப்படும் தங்க நகைகளின் கெரட் அளவுகளையும் வேறு தரப் பண்புகளையும் பரிசோதிப்பதற்கு செறிவுமானியையும் திராவக சோதனையையும் பயன்படுத்தல்.
- அடிப்படை வாடிக்கையாளர் சுறுசுறுப்பு.
- சம்பந்தப்பட்ட பணியாட்டொகுதியினருக்கு தொடரான பயிற்சி.
- போலியான மற்றும் திருடப்பட்ட பொருள்களை வாங்குவதனால் ஏற்படக்கூடிய நட்டங்களை ஈடுசெய்வதற்கு காப்புறுதிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல்.
- எந்தவொரு நாளிலும் அடகுவைக்கப்பட்ட பொருள்களில் 5% மாதிரியொன்றை நாளாந்தம் பரிசோதித்து உறுதிப்படுத்தல் உட்பட உரிய திகதி தாண்டிய பொருட்களை அடிக்கடி சுயமாக சட்டப்படி செல்லக்கூடியதாக்குதல்.
- உரிய திகதிகளில் மீட்கப்படாத பொருள்களை அடிக்கடி ஏலத்தில் விற்றல்.
- ஏலவிற்பனை சுழற்சி நிகழ்வினை அதிகரித்தல்
- அடகுச் சந்தை இடர்க்கு திறந்துள்ள ஓர் உற்பத்தி என்பதே வங்கியின் எண்ணப்பாடாகும். தங்கத்திற்கான விலை ஓயாது மாறுமியல்பு (volatility) அளவிடப்படுவதுடன், ICAAP செயன்முறையின்படி மூலதனம் ஒதுக்கப்படுகிறது.

## திரவத்தன்மை இடர்

திரவத்தன்மை இடரானது வங்கியின் ஒப்பந்தங்களின்படி உரிய முதிர்வின்போதும் அவ்வீதங்களின்படியும் சொத்து நிதியாக்கல் சிரமமாக அமைதல், நியாயமான ஒரு விலைக்கும் உரிய காலப்பகுதியிலும் சொத்துக்கள் ஒழிவுக்குட்படுத்த முடியாதிருப்பதும் அதில் அடங்கும்.

## திரவத்தன்மையை முகாமைத்தவம் செய்தல்.

திறைசேரியின் தலைவர், நிதியிடல் மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கிய நாளாந்த திறைசேரி தொழிற்பாடுகளுக்கும் வங்கியின் கொள்கைகளுக்கு இணங்குமாறும் குறித்துரைக்கப்பட்ட இடர் எல்லைக்குள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கும் பொறுப்பாவார். அத்துடன் திறைசேரித் தலைவர் நிதித் தலைவருடன் கூட்டாக, வங்கியின் நிதியிடல் மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவம் என்பற்றை அறிக்கையிடுவதற்கு பொறுப்பாவார். அத்துடன் திறைசேரித் தலைவர் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு சபையின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கு பொறுப்பாவார்.

யாதேனும் வரையறைகள் மீறப்பட்டால், அந்த எல்லைக்குள் அந்நிலமையை மீண்டும் கொண்டுவருவதற்கான திட்டத்துடன், இது தொடர்பாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சபை குழுவிற்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும். இடைக் காரியாலயம் சுயாதீனமக வங்கியின் திரவத்தன்மை நிலைமையை கண்காணிப்பதுடன் யாதேனும் மீறல்களை அறிக்கையிடும்.

வங்கி திரவத்தன்மை தேவையை பின்வரும் வழிகளில் முகாமைத்துவம் செய்யும்.:

அ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சியின் பொருத்தமான இணைப்பு
ஆ) போதியளவு திரவத்தன்மை சொத்துக்களை வைத்திருத்தல்.
இ) உள்ளக வங்கி வரிசை வடிவங்களில் போதியளவு கடன்பெறுகை கிடைக்கப்பெறுகை.
ஈ) பெரிய மொத்த வைப்புகளில் மேலதிகமாக தங்கியிராமை. மொத்த வைப்புகளில் குறைந்தபட்சம் 25% வீதத்தை நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்கு வடிவங்களில் பேணுதவதற்கு முயற்சித்தல் வங்கியின் கொள்கையாகும்.

## சாத்தியக்கூறு திட்டமிடல்

யாதேனும் அவசரகால நிலமைகளின் போது போதியளவு திரவத்தன்மையைக் கொண்டிருத்தலை உறுதிப்படுத்தல் வங்கியின் கொள்கையாக இருந்த போதிலும், உள்ளக மற்றும் வெளிவாரி நிலைமைகளில் வங்கியானது திரவத்தன்மை பிரச்சனைகழள எதிர்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது. அதனால், வங்கி இவ்வாறான நிலமைகளை எதிர்கொள்வதற்கு திரவத்தன்மை திட்டங்களை வைத்திருத்தல் வேண்டும்.

## திரவத்தன்மை இடர் – முதிர்ச்சி பொருந்தாமையை அளவிடும் அணுகுமுறை

இந்த பொருந்தாமை அணுகுமுறை வேறுபட்ட காலப் பட்டைகளில் உட்பாச்சல் மற்றும் வெளிப்பாச்சலுக்கு இடையான வேறுபாடு அல்லது பொருந்தாமை ஊடாக திரவத்தன்மையை அளவிடும். முன் தீர்மானிக்கப்பட்ட கால வரையறை மீது நிகர திரட்டலின் மீது பொருந்தாமைகள் அளவிடப்படும்.

## பிரதான கட்டுப்பாட்டு வழிகாட்டுதல்கள்

திரவத்தன்மை இடரை அளவிடுவதற்கும் முகாமைத்தவம் செய்வதற்கும் கீழ்வரும் வீதங்கள் வங்கியினால் பயன்படுத்தப்படும்.:

1. வைப்புகளுக்கான கடன்கல்கள் வீதம் (மொத்தத்தில் மற்றும் வெளிநாட்டு நாணயத்தில்) = மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் / மொத்த வாடிக்கையாளர் வைப்புகள்
2. ஈடுபாட்டு வீதம் = மேலதிகப் பற்றுக்களின் பயன்படுத்தப்படாத பகுதி / பயன்படுத்தப்படாத உள்ளக வங்கி வரிசை (இந்த வீதங்கள் DST கணக்குகளுடன் கணக்குகள் இல்லாமல் கணிப்பிடப்படல் வேண்டும்
3. இடைக்கால பொருந்தாமை = ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பொறுப்புகள் / ஒரு வருடத்திற்கு மேற்பட்ட சொத்துகள் (வீதங்கள் நடத்தை மற்றும் எஞ்சிய முதிர்ச்சி முறைகளில் கணிப்பிடப்படுதல் வேண்டும்)
4. காலப் பட்டைகளில் விவரிக்கப்பட்டவைக்கு மேலான மொத்த பொறுப்புகளுக்கான திரட்டிய பொருந்தாமை (நடத்தை முதிர்ச்சி முறை)
5. காலப் பட்டைகளில் விவரிக்கப்பட்டவைக்கு மேலான உள்ளக வங்கி வரிசைகளில் பயன்படுத்தப்படாத திரட்டிய பொருந்தாமை (நடத்தை முதிர்ச்சி முறை)
6. நியதிச்சட்ட திரவத்தன்மை சொத்துக்கள் வீதம் (SLAR) = திரவத்தன்மை சொத்துக்கள் / மொத்தப் பொறுப்பு அடிப்படை

## இடர் தேவை

சபை வழிகாட்டல்கள் வடிவத்தில் திரவத்தன்மை இடருக்கான அதன் தேவையை வெளியிட்டுள்ளதுடன், 31.12.15ம் திகதியில் நிலமை கீழே காட்டப்பட்டுள்ளது.

*பிரதான செயலாற்றுகை நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாட்டு வழிகாட்டல்கள்*

| | | ஐநஉ-15 | புரனைநடநெ |
|---|---|---|---|
| 1. | கடன்கள் / வைப்பு வீதம் ரூபா (நிகர)<br>(I) தற்போதுள்ள அடிப்படையில் வீதங்கள் அமைந்துள்ளது | 73.5% | <83% |
| | (II) DST கணக்கு இல்லாமல். | 66.5% | <80% |
| | (III) DST கணக்கு - ஈடுபடுத்தப்பட்ட மீதி ரூ. 5 பில். | | |
| 2. | கடன்கள் / வைப்பு வீதம்<br>வெளிநாட்டு நாணயம் | 186.3மூ | <90% |
| 3. | செயல்திட்ட வீதம் (உள்ளக வங்கி கடன்பெறுகை இயலளவு)<br>(O / D 's மீது பயன்படுத்தப்படாத எல்லைகள் / (I) DST கணக்குடன்) | 13.4% | <100% |
| | (O / D 's மீது பயன்படுத்தப்படாத எல்லைகள் / (I) DST கணக்குடன் மற்றும் பணச் சந்தை | 11.3% | <100% |
| | புயன்படுத்தப்படாத உள்ளக வங்கி எல்லைகள் (II) DST கணக்கு இல்லாமல் | 6.4% | <75% |
| 4. | நடுத்தர – காலப் பொருத்திமின்மை – நிதியிடல் (ஆயுடு முறை)<br>(ஒரு வருடத்திற்கு மேற்பட்ட மொத்த ஐந்தொகையின் மேலதிகச் சொத்தின் பொறுப்பு %) | 77.8% | >15% |
| 5. | நடுத்தர – காலப் பொருத்திமின்மை – நிதியிடல் (நடத்தை முறை)<br>(ஒரு வருடத்திற்கு மேற்பட்ட மொத்த ஐந்தொகையின் மேலதிகச் சொத்தின் பொறுப்பு %) | 82.3% | |
| 6. | திரட்டிய இடைவெளி மொத்த பொறுப்பின் வீதமாக (MAL முறை)<br>- 1 மாதம் வரை | -8.3% | -20% |
| | - 1 இருந்து 3 மாதங்கள் | -12.6% | -40% |
| | - 3 இருந்து 6 மாதங்கள் | -12.5% | -50% |
| | - 6 இருந்து 9 மாதங்கள் | -16.7% | -50% |
| | - 9 இருந்து 12 மாதங்கள் | -19.9% | -25% |
| | - 1 இருந்து 3 வருடங்கள் | -10.2% | -10% |
| | - 3 இருந்து 5 வருடங்கள் | -5.6% | -10% |
| | - 5 வருடங்களுக்கு மேல் | -4.4% | 0% |
| 7. | திரட்டிய பொருத்தமின்மைகள் மேலதிக பயன்படுத்தப்படாத உள்ளக வங்கி வரையறை %<br>(நடத்தை முறை)<br>- 1 மாதம் வரை | -7.9% | 75% |
| | - 1 இருந்து 3 மாதங்கள் | -23.8% | 25% |
| | - 3 இருந்து 6 மாதங்கள் | -32.2% | 10% |
| | - 6 இருந்து 9 மாதங்கள் | -48.4% | 5% |
| | - 9 இருந்து 12 மாதங்கள் | -65.5% | 5% |
| | - 1 இருந்து 3 வருடங்கள் | -37.0% | 26% |
| | - 3 இருந்து 5 வருடங்கள் | -22.2% | 5% |
| | - 5 வருடங்களுக்கு மேல் | -21.2% | 0% |
| 8. | நியதிச்சட்ட திரச் சொத்துக்கள் விகிதம் | | |
| | - உள்ளக வங்கிச் சேவைப் பிரிவு | 25.9% | >20% |
| | - கரைகடந்த வங்கிச் சேவைப் பிரிவு | 21.7% | >20% |

| | | ஹநஉ-15 | புரனைநடநெ |
|---|---|---|---|
| 9. | திரவத்தன்மை அளவீடு | | |
| | - மொத்தச் சொத்துக்களின் நிகரக் கடன்கள் | 65.0% | <70% |
| | - குறுகிய கால பொறுப்புகளுக்கான திரவத்தன்மை சொத்துக்கள் | 31.0% | >25% |
| | - பாரிய பொறுப்புகள் (கழி) உழைத்த சொத்துக்களுக்கு தற்காலிக முதலீடுகள் | 18.5% | <25% |
| | - மொத்த சொத்துக்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட நிதிகள் | 16.1% | <25% |
| | - மொத்த கடன்களுக்கான கடமை | 16.8% | <30% |
| 10. | SAL இடைவெளிகள் (ரூபா) | | |
| | - 1 மாதம் வரை | -4.8% | |
| | - 1 இருந்து 3 மாதங்கள் | -0.5% | |
| | - 3 இருந்து 6 மாதங்கள் | -2.1% | |
| | - 6 இருந்து 9 மாதங்கள் | -27.9% | |
| | - 1 இருந்து 2 வருடங்கள் | 4.1% | |
| | - 2 இருந்து 3 வருடங்கள் | 8.8% | |
| | - 3 இருந்து 4 வருடங்கள் | 3.5% | |
| | - 4 இருந்து 5 வருடங்கள் | 4.2% | |
| | - 5 வருடங்களுக்கு மேல் | 14.6% | |
| 11. | ஒரு வருடத்திற்கு குறைவான உழைக்கும் போதான இடர் P&L மீது வட்டியில் 1% வேறுபாட்டுத் தாக்கம் | (2,362) | 2 Bn |

## திரவத்தன்மை காப்பீட்டு வீதம்

» வங்கிச் சட்டத்தின் 46(1) மற்றும் 76(J)(1) பந்தியின் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ள 2015ஆண்டு 01ம் இலக்க ஏற்பாடுகளின் கீழ் திரவத்தன்மை காப்பீட்டு வீத தேவை பின்வருமாறு அமைகின்றது.

| அமுலாக்கல் திகதி | 1 ஏப்பிரல் 2015 | 1 ஜன 2016 | 1 ஜன 2017 | 1 ஜன 2018 | 1 ஜன 2019 இல் இருந்து |
|---|---|---|---|---|---|
| குறைந்தபட்ச தேவை % | 60% | 70% | 80% | 90% | 100% |

31.12.2015ம் திகதியில் மக்கள் வங்கியின் பதிவுசெய்யப்பட்ட திரவத்தன்மை காப்பீட்டு வீதம் (ரூபா) 96.57%; மற்றும் திரவத்தன்மை காப்பீட்டு வீதம் (அனைத்து நாடுகளுக்கும்) 74.52% ஆகும்.

## தொழிற்பாட்டு இடர்

தொழிற்பாட்டு இடர் அனைத்து வகைகளிலும் வியாபாரத்திற்கு உள்ளார்ந்ததாக இருப்பதுடன், போதாத அல்லது தவறிப்போன உள்ளகப் படிமுறைகள் அல்லது முறைமைகள் அல்லது வெளிவாரி நிகழ்வுகளாக நேரடியாக அல்லது மறைமுகத் தாக்கங்களாக உருவாக முடியும்.

கீழ்வரும் இடர்களுக்கான காரணங்களை தொழிற்பாட்டு இடர் பூர்த்திசெய்யும்.:

1. உள்ளக மற்றும் வெளியக மோசடி
2. பௌதீக சொத்துக்களுக்கான சேதங்கள்
3. வியாபாரத் தடங்கல்கள் மற்றும் முறைமை செயலிழப்புகள்
4. நிறைவேற்றல், விநியோகம் மற்றும் படிமுறை முகாமைத்துவம்
5. வாடிக்கையாளர், தயாரிப்பு மற்றும் வியாபார பழக்கங்கள்
6. தொழில் பழக்கங்கள் ∴பணியிடப் பாதுகாப்பு

மோசடி (உள்ளக மற்றும் வெளியக), தவறு, தகவல் தொழில்நுட்ப முறைமை தடங்கல்கள், இயற்கை அனர்த்தங்கள், பயங்கரவாத நடவடிக்கை என்பன சில பொதுவான தொழிற்பாட்டு இடருக்கான காரணங்கள் ஆகும். தொழிற்பாட்டு இடர்களை முழுமையாக நீக்க முடியாது. பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் இருக்குமாறு தொழிற்பாட்டு இடர்களை முகாமைப்படுத்தல் மற்றும் வரையறுத்தல்.

*தொழிற்பாட்டு இடரை முகாமைத்துவம் செய்வதற்கான நிறுவன ஒழுங்கமைப்பு கட்டமைப்பு*




தொழிற்பாட்டு இடர் கட்டுப்பாட்டுக்கான பிரதான பொறுப்பு, எங்கு இடர் எழுகின்றதோ அந்த கிளைகளுக்கும் மற்றும் வியாபார அலகுகளுக்கும் உரியதாகும் தொழிற்பாட்டு இடருக்கான முகாமைத்துவம் தொடர்பாக அனைத்து ஊழியர்கள், கிளைகள், வியாபார மற்றும் தொழிற்பாட்டு அலகுகளுக்கான வகிபாகங்கள் சபையினால் தெளிவாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. இது இடரை அடையாளம் காணுதல் மற்றும் மதிப்பிடுதல், இடர் நிகழ்வுகளை கைப்பற்றுதல் மற்றும் அறிக்கையிடுதல், இடரைக் குறைத்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவத்தில் கடமைகளைப் பிரித்தல் மற்றும் வியாபார தொடர்ச்சி திட்டமிடுதல் என்பவை முக்கியமான கூறுகள் ஆகும்.

தொழிற்பாட்டு இழப்பு நிகழ்வுகள் தொடர்பாக அறிக்கையொன்றை பருவகாலங்களில், இழப்பு நிகழ்வுகள் மற்றும் தவறுகைகள் தொடர்பான தரவுத்தளத்தைப் பேணும் இடர் முகாமைத்துவ அலகுக்கு சமர்ப்பிப்பதற்கு வியாபார அலகுகள் மற்றும் கிளைகள் கோரப்பட்டள்ளன. இவை போக்கினை அடையாளம் காண்பதன் ஊடாக எதிர்கால இடரினை குறைப்பதற்கு கட்டுப்பாட்டினை மேற்கொள்வதற்கு நடைமுறைகளை மீளாய்வு செய்வதற்கு தொடர்கின்ற அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

சில இடர்கள் உயர் சாத்தியக்கூறுகளையும் குறைந்த தாக்கத்தையும் கொண்டிருப்பதுடன், சில குறைந்த சாத்தியக்கூறுகளையும் உயர் தாக்கத்தையும் கொண்டிருப்பதனால் இழப்புகளைக் குறைப்பதற்காக காப்புறுதி செய்யப்படும்.

பணிப்பாளர் சபைக்கும் சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கும் சான்றுபடுத்தலை வழங்குவதற்காக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளும் அவ்வப்போது வலையமைப்புகள் முழுவதும் தொழிற்பாட்டு முகாமைத்துவ நடவடிக்கைகள் முழுவதையும் மீளாய்வு செய்கின்றது.

தொழிற்பாட்டு இடரினை முகாமைத்துவம் செய்வதற்கு குறித்துரைக்கப்பட்ட கொள்கைகள் வங்கியின் தொழிற்பாட்டு கொள்கை ஆவணத்தில் உள்ளடங்கியுள்ளது.

## தொழிற்பாட்டு இடரினை முகாமைத்துவம் செய்தல்

தொழிற்பாட்டு இடர்கள் அடிப்படையில் பின்வருமாறு முகாமைத்துவம் செய்யப்படும்.:

1. தெளிவாக வரையறுக்கப்பட்ட தொழிற்பாட்டு கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் இருப்பதை உறுதிப்படுத்தல். இவை பிரதான தொழிற்பாட்டு இடர்களை இலகுவாக அடையாளம் காண்பதற்கு, அணுகுவதற்கு, முகாமைத்துவம் செய்வதற்கு அறிகையிடுவதற்கான பொறிமுறைகளைக் கொண்டிருப்பதுடன். பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருக்கும்.
   - வங்கி அவர்களுடைய பாரிய இடர்களை அடையாளம் காண்பதற்கும் குறைப்பதற்கான திட்டங்களுக்குமான சட்டகம்
   - பிரதான கட்டுப்பாட்டு நியமங்கள்
   - பிரதான இடர் காட்டிகள்
   - வழமையான காரணிகள் மற்றும் தொழிற்பாட்டு இழப்புகளை அடையாளம் காண்பதற்கான நிகழ்வுகள் மற்றும் பிரச்சினைகளைக் கண்டறியும் பொறிமுறைகள்
2. உடன்பட்ட வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களை உறுதிப்படுத்திக்கொள்ளல் மற்றும் அனைத்து முகாமைத்துவ மட்டங்களினதும் கடமையின் பிரிவுகளை தெளிவாக விளங்கிக்கொள்ளல் வேண்டும்.
3. தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவத்திற்கான அவர்களுடைய பொறுப்புகளை வியாபார மற்றும் உதவி செயற்பாட்டுப் பிரிவுகளில் இருக்கும் அனைத்து ஊழியர்களும் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். (கலந்துரையாடல்கள் மற்றும் செயலமர்வுகள்)
4. மறைமுக தாக்கத்தைக் குறைத்துக்கொள்வதற்காக தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் மற்றும் நடவடிக்கைகளின் உத்தேச தொழிற்பாட்டு இடர் தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல்.
5. கட்டுப்பாட்டு தோல்விகள் உரிய முறையில் அறிக்கையிடப்பட்டுள்ளது மற்றும் தொழிற்பாட்டு இடர் குழுவிற்கும் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுச் சபை என்பவற்றுக்கு பௌதீக பிரச்சனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துதல்.
6. வழங்கப்பட்டுள்ள தொழிற்பாட்டு இடர் பயிற்சி அவர்களுடைய வகிபாகங்களுக்கு பொருத்தமானது என்பதை உறுதிப்படுத்தல்.
7. ஊழியர்கள் மற்றும் வங்கியின் சொத்துக்கள் போதியளவில் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தல்.
8. வியாபாரத் தொழிற்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் மீதான திட்டமிடப்படாத நிகழ்வுகளின் தாக்கத்தைக் குறைப்பதற்கு பணிபுரியக்கூடிய வியாபார திட்டங்களை நிறுவுதல் (இடர் காப்பீடு மற்றும் அவசரகால முகாமைத்துவ நடவடிக்கைகள் உள்ளடங்காலாக)

9. தொழிற்பாட்டு இழப்புகளின் நிதி இழப்புகளைக் குறைப்பதற்கு காப்புறுதியை அல்லது ஏனைய இடர் பரிமாற்றங்களில் பொருத்தமானதைப் பயன்படுத்தல்.
10. "இழப்புகள் நிகழும் மிகக்கிட்டிய சந்தர்ப்பம் " எதிர்காலத்தில் தடுத்தல் / வரையறுத்தல் செய்வதற்காக அவ்வாறான நிகழ்வுகளைப் பதிவுசெய்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.

தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவத்தின் நோக்கெல்லைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

1. வியாபார தொழிற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு, இடர் மற்றும் கட்டுப்பாடுகளை அடையாளம் காணுதலுக்கு தொழிற்படும் வியாபாரத் தலைவர்களுடன் ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளல்.
2. வங்கியினுள் தொழிற்பாட்டு இடர்களை அளவீடு செய்வதற்கு இழப்பு தரவுத்தளதொன்றை நிறுவுவதற்கு நிகழ்வுகளை அறிக்கையிடும் முறைமையொன்றை அமுல்படுத்தல்.
3. கணக்காய்வுத் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து, தற்போதுள்ள கட்டுப்பாடுகளின் செயற்திறன் / அமுல்படுத்தலை தீர்மானிப்பதற்காக தொடர்ச்சியாக தொழிற்பாட்டு இழப்புகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை உறுதிப்படுத்துதல்.
4. ஒவ்வொரு தொழிற்பாட்டுத் திணைக்களத்தினுள்ளும் தொழிற்பாட்டு இடர்கள் தொடர்பான சுயமதிப்பீட்டு செயன்முறைக்கு வழிகாட்டல்.
5. ஒவ்வொரு தொழிற்பாட்டு அலகுகள் / தயாரிப்புகளுக்கும் பிரதான இடர் காட்டியை வரைவிலக்கணப்படுத்துவதற்கு உதவுதல்.
6. வலையமைப்பு முழுவதிலும் உள்ள செயற்திறன் மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட சாத்தியக்கூறுத் திட்டமிடல் / DRP அளவீடுகள் என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வியாபார அலகுகளுடன் ஒருங்கிணைதல்.
7. உயர் தாக்கம் மற்றும் அல்லது உயர் மீள்திறன் உடைய இடரை பொருத்தமான காப்புறுதி ஒழுங்குபடுத்தல்கள் மூலம் போதியளவு பரிமாற்றம் செய்வதலை உறுதிப்படுத்தல்.

## தொழிற்பாட்டு இடர் அளவீடு

மக்கள் வங்கியின் தொழிற்பாட்டு இடரை அளவிடுவதற்கு பிரதானமாக கொள்ளப்படும் காரணிகள்:

- போதமையற்ற செயன்முறை, மக்கள், முறைமை மற்றும் வெளியக நிகழ்வுகளில் இருந்து வரும் இழப்பு இடர்.
- தவறுகள் மற்றும் மோசடிகள் காரணமான நிதியில் இழப்பு
- நட்டம் ஏற்படுவதற்கான மிகக்கிட்டிய சந்தர்ப்பம்
- நிர்வாகம், ஆவணப்படுத்தல் மற்றும் மதிப்பிடுதல் உட்பட செயன்முறைகள்
- மோசடி மற்றும் ஊழியர் சட்டத்தில் உள்ள நபர்கள்
- முறைமைத் தடங்கல்கள்
- வெளிவாரிக் காரணிகள்

## கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல்

வங்கி முழுவதிலும் பலமான இடர் விழிப்புணர்வு மற்றும் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் நடத்தைகளை தெளிவா மற்றும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தக்கூடிய முகாமைத்துவத்தின் இயலுமையினால் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ செயன்முறையின் வெற்றியானது தீர்மானிக்கப்படும். இடர் முகாமைத்துவத் திணைக்களம் கீழ்வரும அறிக்கையிடல்களை வழங்கும்:

விசேடமான இழப்பு நிகழ்வுகள், மேலெழும் பிரச்சனைள், நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் மீளாய்வு செயற்பாடுகள் தொடர்பான காலாண்டு அறிக்கையிடல். இந்த தகவல்கள், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்,

அநேக நேரங்களில் இடர் குழுக்கள் வியாபார தொடர்ச்சி முகாமைத்துவம் மற்றும் பௌதீக பாதுகாப்பு போன்ற தொழிற்பாட்டு இடர் தலைப்புகளையும் அறிக்கையிடும். தேடிக் கண்டுபிடிக்கப்பட்டவைகள் கோரிக்கை விடுத்தவதுகளுக்கு அறிக்கையிடப்படுவதுடன், முக்கியமாயின் இடர் ஆளுகை கட்டமைப்பின் ஊடாக இது தொடர்பாக மேலிடத்திற்கு அறிவிக்கப்படும்.

## இடர் தேவை

சபையினால் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவத்திற்கான குறுமட்டங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

| காட்டிகள் | குறைந்த இடர் | நடுத்தர இடர் | உயர் இடர் | 2015 நிலை |
|---|---|---|---|---|
| # தொழிற்பாட்டு இழப்புகள் - உள்ளக | < 10 | 10 – 25 | > 25 | 5 |
| # தொழிற்பாட்டு இழப்புகள் - வெளிவாரி | < 400 | 400-1000 | > 1000 | 248 |
| தொழிற்பாட்டு செலவுகளில் மொத்த தொழிற்பாட்டு இழப்புகளின் பெறுமதி வீதம் % | < 0.5% | 0.5% - 1.0% | > 1.0% | 0.41% |
| திருப்தியளவைக் விடக் குறைவான வங்கியின் கணக்காய்வுகளின் வீதம் % | பூஜ்ஜியம் | 15% | > 15% | 78.76% |

"திருப்தி" மட்டத்தைவிடக் குறைவானது என தரப்படுத்தப்பட்ட வங்கிக் கணக்காய்வுகள் திருப்தியான தீர்வுக்கு வரும்வரை தொடர்ச்சியாக பின்னூட்டல் செய்யப்படுவதுடன் கணக்காய்வுக் குழுச் சபையினால் மீளாய்வு செய்யப்படும்.

**2010–2015 தொழிற்பாட்டு இழப்புகள்**




**2010 – 2015 தொழிற்பாட்டு இழப்புத் தொகை**




**2010 – 2015 தொழிற்பாட்டு இழப்புகள்**




*2010 – 2015 வரையிலான காலப்பகுதிக்கான திரட்டிய தொழிற்பாட்டு இழப்புகள்*

| | எண்ணிக்கை | % | பெறுமதி (ரூ.மில்) | % |
|---|---|---|---|---|
| உள்ளக மோசடிகள் | 64 | 1.56% | 215.46 | 25.94% |
| வெளியக மோசடிகள் | 3,555 | 90.41% | 560.5 | 67.49% |
| ஊழியர்களின் பழக்கம் மற்றும் பணியிடப் பாதுகாப்பு | - | | - | |
| வாடிக்கையாளர், தயாரிப்புகள் மற்றும் வியாபாரப் பழக்கங்கள் | - | | - | |
| பௌதீக சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் | 50 | 1.27% | 7.56 | 0.92% |
| வியாபார தடங்கல்கள் மற்றும் முறைமை பழுதுகள் | 19 | 0.48% | 1.8 | 0.22% |
| நிறைவேற்றல், விநியோகம் மற்றும் செயன்முறை முகாமைத்துவம் | 244 | 6.21% | 45.05 | 5.42% |
| மொத்தம் | 3,932 | 100% | 830.47 | 100% |

அனேக "வெளியக மோசடி" நிகழ்வுகள் சந்தேகத்திற்கிடமான மற்றும் திருடப்பட்ட பொருட்களை ஈடு வைத்தல் தொடர்பானவையாகும்.

2010 இருந்து 2015 வரையிலான காலப்பகுதியில் இந்த நட்டங்களில் ரூபா 282 மில்லியன் காப்புறுதிக் கோரிக்கைகள் மூலம் ஈடுசெய்யப்பட்டது.

*2010 – 2015 வரை பதிவுசெய்யப்பட்ட தொழிற்பாட்டு இழப்புகள் – வழமையான வங்கி நடவடிக்கைகள் மற்றும் ஈடுவைத்தல் என்பவற்றில் இருந்து எழுந்தவை:*

| வருடம் | ஈடு வைத்தல் | வழமையான வங்கிச் சேவை | மொத்தம் |
|---|---|---|---|
| 2010 | 12.5 | 36 | 48.5 |
| 2011 | 43.2 | 208.4 | 251.6 |
| 2012 | 63.8 | 140 | 203.8 |
| 2013 | 80.1 | 35.5 | 115.6 |
| 2014 | 92.86 | 14.88 | 107.74 |
| 2015 | 36.11 | 67.12 | 103.23 |

ஈடுவைத்தல் இழப்புகள் உயர் நிகழ்வுகளைக் கொண்டிருப்பதுடன், அதன் தாக்கம் குறைவாகும்.

## தகவல் தொழில்நுட்ப இடர்கள்

தகவல் தொழில்நுட்ப முறைமை இருத்தல் வங்கியின் இடையூரின்றிய சேவைக்கு மற்றும் நிர்வாகத்திற்கு மிக முக்கியமாக உள்ளதனால் அதனை முகாமைத்துவம் செய்தல் வங்கியின் முழுமையான தொழிற்பாட்டுக்கு இடர் முகாமைத்துவம் மிக முக்கிய பகுதி ஆகும்.

அதன்படி, வங்கி அதன் உயர் முக்கிய முறைமைகளின் செயற்பாடுகளை அளவிடுவதற்காக கீழ்வரும் நியதிகளை நிறுவி உள்ளது. இவை தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவதுடன், காலாண்டு தோறும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுச் சபையினால் மீளாய்வு செய்யப்படும்.

# செயன்முகாமை

## இடர் முகாமைத்துவம்

2015ம் ஆண்டுக்கான வங்கியின் தகவல் தொழில்நுட்ப பிரதான இடர் காட்டிகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வகை | முறைமைகள் | பெற்றுக்கொள்வதற்கு கிடைக்கப்பெறும் மொத்த தொழிற்படும் மணித்தியாளங்களின் % | இடர் மட்டம் | | உண்மையாக கிடைப்பனவு |
|---|---|---|---|---|---|
| உயர் ஆபத்து (உண்மை நேர இடையறர் முறைமைகள்) | - *மத்திய தன்னியக்க டெலர் இயந்திர பரிமாற்றம் (*Central ATM Switch*)*<br>- *இடைமீட்டு வங்கிச் சேவை முறைமை (*CORE Banking System*)*<br>- SWIFT<br>- *கடனட்டை/வரவு அட்டை முகாமைத்துவ முறைமை* | > 99.9% | குறைந்த இடர் | | 100% |
| | | 99.8% - 97.5% | நடுத்தர இடர் | | |
| | | < 97.5 | உயர் இடர் | | |
| நடுத்தர ஆபத்து | - உருவத்தைக் கைப்பற்றல் மற்றும் சமர்ப்பித்தல் முறைமை<br>- குறுஞ்செய்தி வங்கிச் சேவை முறைமை<br>- வெப்தள ஞாபகமூட்டல் முறைமை<br>- இணைய வங்கிச் சேவை முறைமை<br>- நிதியில் திறைசேரி<br>- தன்னியக்க டெலர் இயந்திர பரிமாற்றம் | > 97.5% | குறைந்த இடர் | | 100% |
| | | 97.4% - 95% | நடுத்தர இடர் | | |
| | | < 95% | உயர் இடர் | | 98.5% |
| குறைந்த ஆபத்து | IHRM முறைமை<br>SLIPS முறைமை | > 90% | குறைந்த இடர் | | 100% |
| | | 89.9% - 87% | நடுத்தர இடர் | | |
| | | < 87% | உயர் இடர் | | |

முழுமையாக முறைமையில் உயர் கிடைப்பனவு

*முழுமையான அழுத்த பரிசோதனை முறைமை*

அழுத்தப் பரிசோதனை நியாயமாக கருதுகோள்களுடன், எதிர்பார்க்கப்பட்ட தொகுதியின் கீழ் வேறுபட்ட நிதியியல் பட்டியலின் விளைவைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஒருமைப்பாட்டு தொழில்நுட்பமாகும்.

அழுத்தப் பரிசோதனை வங்கியின் முறைமையின் ஒன்றிணைந்த பகுதியாவதுடன், பேரியப் பொருளாதாரம் மற்றும் சந்தை மாறிலிகளில் ஏற்படும் மாற்றங்களினால் வங்கியின் இடர் தோற்றமானது எவ்வாறுள்ளது என்பதை தெளிவான விளக்கத்தை முகாமைத்துவத்திற்கு வழங்குகின்றது. (பல்வேறுபட்ட அழுத்த சூழ்நிலைகளின் வங்கியின் உரிமைப்பங்குக்கு ஏற்படும் தாக்கம் அளவிடப்படுகின்றதுடன் இந்த அறிக்கையில் முன்குறிப்பிட பிரிவில் காட்டப்பட்டுள்ளது)

Basel II மாதிரி சட்டகத்தின் 2வது தூணின் தேவைக்கு அமைவாக அழுத்த பரிசோதனை சட்டகத்தினை தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல் வங்கியின் கொள்கை ஆகும். அதன்படி அது வங்கியின் உள்ளக மூலதன போதுமை மதிப்பீடு செயற்பாடுகளின் அத்தியாவசிய காரணியாக செயற்படும்.

வங்கி செயற்படும் சூழலில் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் என்பதை சபை அடையாளம் கண்டுள்ளதுடன், பேரினப் பொருளாதார சூழல், வங்கியின் கருவிகள், வர்த்தக உபாயமார்க்கங்கள் மற்றும் ஒழுங்கமைப்பு கொள்கைகள் மாற்றம் அடையும். அதன்படி, இடர் முகாமைத்துவ பொறிமுறை மற்றும் அழுத்த பரிசோதனை உத்தி இந்த வேறுபாடுகளுக்கு ஒத்திசைதல் வேண்டும் என்பது வங்கியின் கொள்கை ஆகும். ஆரம்பப்புள்ளியில் கீழ்வரும் பரிசோதனைகள் கட்டாயமானதாகும்:

அ. கடன் இடர்
ஆ. நாணயப் பரிமாற்ற வீத இடர்
இ. உரிமைப் பங்கு இடர்
ஈ. திரவத்தன்மை இடர்
உ. ஈடு
ஊ. பொருளாதார அழுத்தப் பரிசோதனை

ஒன்றுக்கொன்று வேறுபட்ட மூன்று அனுமானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அழுத்தப் பரிசோதனை நடாத்தப்படும்.:

| | |
|---|---|
| *சிறிய மட்ட அதிர்ச்சிகள்: | இவை பிரதிநிதித்துவப்படுத்துவது இடர் காரணிகளுக்கு இருக்கும் சிறிய அதிர்ச்சியாகும். வேறுபட்ட இடர் காரணிகளுக்கான மட்டங்கள் வேறுபடும்.. |
| *நடுத்தர மட்ட அதிர்ச்சிகள்: | நடுத்தர மட்டத்திலான அதிர்ச்சிகள் இங்கு எதிர்பார்க்கப்படுவதுடன், ஒவ்வொரு இடர் காரணிகளினுள் வெவ்வேறு மட்டங்கள் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. |
| *பாரிய மட்ட அதிர்ச்சிகள்: | அனைத்து இடர் காரணிகளிலும் இங்கு பாரிய அதிர்ச்சி தாக்கம் வெளிப்படுத்தப்படுவதுடன், ஒவ்வொரு இடர் காரணியும் வெவ்வேறாக வரைவிலக்கணப்படுத்தப்படும். |

பொருளாதாரத்தினுள் அழுத்த சந்தர்ப்பங்கள் உருவாகுமாயின், மிகச்சிறந்த மூலதனத்தைக் கொண்ட நிலைமையை கொண்டு நடாத்துவதற்காக இன்றைய தினம் எவ்வளவு மூலதனம் அவசியம் என்பது தொடாபான எதிர்கால நோக்குடன் மூலதன மதிப்பீட்டு அழுத்த பரிசோதனையின் இலக்காகும்.

## கடன் இடருக்கான அழுத்தப் பரிசோதனை

கடன் இடர் தொடர்பான அழுத்தப் பரிசோதனை ஊடாக வங்கியின் செயற்படாத கடன் மட்டம் அதிகரிப்பதளல் ஏற்படும் தாக்கம் மதிப்பீடு செய்யப்படும். இதில் ஐந்து வகையான அதிர்ச்சிகள் ஈடுபட்டுள்ளது. அவையாவன:

அ. கடன் அதிர்ச்சி - செயற்படாத கடன் அதிகரிக்கும்.
ஆ. கடன் அதிர்ச்சி - செயற்படாத கடன் வகைகளில் இடப்பெயர்வு
இ. கடன் இடர் - ஈடு வைத்த சமாந்தரதாரர்களின் FSV இல் வீழ்ச்சி
ஈ, கடன் இடர் - செயற்படும் கடன்கள் செயற்படாத கடனாக சறுக்கல்
உ. கடன் இடர் - பாரிய கடன் பெறுநர் 10 பேரினால் செயற்படாத கடன் அதிகதித்தல்

**செயற்படாத கடன் அதிகரிப்பதனால் மூலதனப் போதுமை வீதத்தின் மீது ஏற்படும் தாக்கம்.**




முடிவு : செயற்படாத கடனில் 20% வீத அதிகரிப்பு ஏற்பட்ட போதிலும், எங்கள் மூலமன போதுமை வீதத்தில் பிரதான தாக்கம் எதனையும் ஏற்படுத்துவதில்லை.

**செயற்படாத கடன் தொகுதிகளில் மறைமுக இடப்பெயர்வு மூலதனப் போதுமை வீதத்தின் மீது ஏற்படும் தாக்கம்.**




முடிவு : இடை மூலதன மற்றும் மொத்த மூலதன வீதங்கள் மூன்று சந்தர்ப்பங்களிலும் குறைந்தளவு தேவைக்கு அதிகமாக இருக்கின்றது.

**ஈடு வைக்கப்பட்ட பிணையங்களின் விற்பனைப் பெறுமதி குறைவடைதல் மூலதனப் போதுமை வீதத்தின் மீது ஏற்படும் தாக்கம்.**




முடிவு : ஈடு வைக்கும் பிணைகளின் விற்பனை பெறுமதி குறைந்தாலும் எங்களின் மூலதனப் போதுமை 15% வீதத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தாது.

**செயற்படாத கடன் அதிகரிப்பு (செயற்படும் கடன் செயற்படாத கடனாக மாற்றப்படும் காரணத்தினால்) மூலதனப் போதுமை வீதத்தில் மீது ஏற்படும் தாக்கம்.**




முடிவு: செயற்படாத கடன் மீது 3% வீத அதிகரிப்பு ஏற்பட்டால் கூட மூலதனப் போதுமை வீதத்தில் தாக்கம் ஏற்படாது.. செயற்படாத கடன் எங்கள் இடை மூலதனத்தின் வீதத்திற்கு மற்றும் மூலதனப் போதுமை வீதத்திற்கு தாக்கத்தை ஏற்படுவதாயின் செயற்படும் கடன்கள் 10.43% மற்றும் 9.65% வீதமாக வீழ்ச்சியுறல் வேண்டும

**பாரிய கடன் பெறுநர்கள் காரணமாக செயற்படாத கடனகளில் ஏற்படும் அதிகரிப்பினால் மூலதனப் போதுமை வீதத்தில் மீது ஏற்படும் தாக்கம்.**




முடிவு: பாரிய கடன் பெறுநர் 10 பேர் காரணமாக செயற்படாத கடன் மீது 10% வீதத்தால் அதிகரித்தாலும் கூட மூலதனப் போதுமை வீதத்தில் தாக்கம் ஏற்படாது.

*வட்டி இடருக்கான அழுத்தப் பரிசோதனை*

வங்கியில் உரிமைப் பங்குகள் மீது ஏற்படும் பாதகமான வட்டி வீதத்தினால் ஏற்படும் தாக்கத்தை அளவிடுவதற்கு கால இடைவெளி பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்படும்.

**வட்டி வீதம் 1% அதிகரிப்பு காரணமாக் மூலதனப் போதுமை வீதத்தில் மீது ஏற்படும் தாக்கம்.**




*திரவத்தன்மை இடர் அழுத்தப் பரிசோதனை*

சூடான பணத்தை மீளப்பெற்றுக்கொள்ளல் அதிக ஆபத்தான காலத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை அறிந்துகொள்வற்காக மேலும் அழுத்தப் பரிசோதனை மூலம் வங்கியின் உள்ள வரையறையை 20% வரை குறைப்பதைக் கைவிடல் வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. ( வட்டி வீதத்திற்கு உணர்வுகூர்மையுடையது எனக் கருதப்படும் ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட வைப்புகாக கருதபடும்)

**சூடான நிதி/ சில்லறை நிதி மீளப்பெறல் மாதத்திற்கு 1ற்க்கான காலத்திற்கு உருவாகும் தாக்கம்**



## இணக்க இடர்

மக்கள் வங்கி அனுபத்திவரும் கீர்த்தியும் நற்பெயரும் வங்கியின் வணிக வெற்றிக்கு பிரதான உந்துகோளக இருக்கின்றது. இந்தக் கீர்த்திக்கு வங்கியின்னால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக வாடிக்கையாளர் வைத்திருக்கும் நம்பிக்கையாகும். எங்கள் பொருட்களின் தரம் உயர்வாக இருப்பதுடன் , இந்த நம்பிக்கை ஒரு கையில் இருந்து நாணயத்தில் நம்பிக்கையுடன் இன்னொரு கைக்கு செல்கின்றதுடன் வங்கி ஊழியர்கள் எவ்வாறு செய்வதென்பதில் சிறப்பு தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்தக் காரணத்தினால் வங்கியின் பிரதான இணக்கக் கோட்டுபாடுகள் பின்வருமாறு அமைகின்றது.

- ஊழியர் நம்பிக்கையை உறுதிப்படுத்தல் மற்றும்
- சேவை மற்றும் பண்டங்களின் தரத்தினைப் பராமரித்தல்.

இணக்கம் வங்கியின் கீர்த்தியினை பேணுவதையும் தொடர்ச்சியாக மேம்படுத்தவதையும் முதன்மை இலக்காகக் கொண்டுள்ளது. யாக விளங்குகின்றது. வங்கியின் நம்பிக்கையை உறுதிப்படுத்தவதுடன், அதனால் ஊழியர்கள் உரிய சட்டவாக்கங்களை பின்பற்றுவதன் ஊடாக இணக்கத்தைப் பின்பற்றுகின்றர். அத்துடன் பின்பற்றுவதற்கு இணக்க சட்டவாக்கம் தொடர்பாக போதிய அறிவு பரிமாறப்படுவதுடன், இணக்கம் தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் கோட்பாடுகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதனால் இவை அடையப்படுகின்றது.

அடிக்கடி சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் மாற்றம் மற்றும் திருத்தம் தற்போதுள்ள சட்டம் வங்கியின் கடமைகளுக்கு பிரயோகிக்கப்படுகின்றதா என மேற்பார்வை செய்தல் அல்லது பார்வையிடாது விடுவதற்குரிய உயர் சாத்தியக்கூறினைக் கொண்டுள்ளது. இந்த நிலமையை எதிர்கொள்வதற்காக மக்கள் வங்கி நிறுவனத்தினுள் இணக்க செயற்பாட்டின் வகிபாகத்தை நிறுவியுள்ளது.

### *மக்கள் வங்கியின் இணக்க கட்டமைப்பு*

சட்டங்களையும் ஒழுங்குவிதகளையும் மீறுதல் வங்கிய்ன நற்பெயருக்கும் கீர்த்திக்கும் சேதத்தை உலுவாக்குவதற்கு அனுமதிக்கும் என்பதனால், இணக்க செயற்பாட்டு மூலம் நிதிச் சேவை கைத்தொழிற்துறைக்குரிய விசேடமான மற்றும் வங்கி வியாபாரத்திற்கு உரிய நியதிச்சட்டவாக்க மற்றும் ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தினால் வழங்கப்படும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் தரங்களில் ஏற்படும் இடரை முகாமைத்துவம் இலக்காகக் கொண்டுள்ளது. பணத் தூய்தாக்கலுக்கு எதிரான நடவடிக்கைகள், விருப்பங்களின் முரண்பாடு, விற்பனை மற்றும் வர்த்தக நடத்தை, வாடிக்கையாளர் விருப்பம் மற்றும் பயங்கரவாத நிதியிடல் பாதுகாப்பு மற்றும் முற்பாதுகாப்பு போன்ற விடயங்களை முகாமைத்துவம் செய்யும் போது தொடர்ச்சியாக அறிவூட்டுவதுடன் அதற்கான உதவிகளையும் வழங்குகின்றது.

இவற்றுடன் வங்கில் மேற்கொள்ளப்படும் இணக்கச் செயற்பாடு,

அ) வங்கியின் வியாபார நடவடிக்கைகள் கைத்தொழிலுக்கு உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் செயற்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிசெய்தல்.

ஆ) வங்கியின் அனைத்து ஊழியர்களும் அவாகளின் பணிகளை மேற்கொள்ளும் போது ஏற்றுக்கொண்ட ஒழுக்க நியதிப்படி பின்பற்றுகின்றார்கள் என்பதை உறுதிசெய்தல்

இ) வியாபாரத்திற்கு வசதிகளை வழங்கும் பொழுது நியதிச்சட்டங்களின் நோக்கம் மீறப்படாமல் அல்லது வங்கியின் கீர்த்திக்கு சேதம் ஏற்படாதவாறு சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் விளக்கப்படுகின்றது.

ஈ) வங்கியின் புலப்படும் மற்றும் புலப்படாத சொத்துக்கள் வியாபாரத்தின் நிதியியல் பாதுகாப்பு மற்றம் கீர்த்தியைப் பாதுகாக்கும்.

உ) வங்கிச் சேவை வியாபாரம் தொடர்பான சட்டங்கள் ∴ ஒழுங்குவிதிகள் ஏற்படும் மாற்றம் தொடர்பாக ஊழியர்களை தொடர்ச்சியாக இற்றைப்படுத்துவதுடன் அனைத்துச் சந்தர்ப்பத்திலும் இணக்க விழிப்புணர்வை உறுதிப்படுத்துவதற்காக கிளை வலையமைப்பு ஊடாக பயிற்சி வழங்கப்படும்.

ஊ) வங்கியின் அனைத்து மட்டங்களிலும் செயற்திறன் கூட்டியைந்த ஆளுகை கலாச்சராம் உள்ளதென்பதை உறுதிப்படுத்தல்.

எ) பொது மக்களின் நம்பிக்கை மற்றும் உறுதி என்பவற்றை பராமரிப்பதன் மூலம் வங்கியின் தொழிற்பாடுகள் பாதுகாப்பாகவும் சிறந்த முறையிலும் செயற்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தவதற்காக வங்கியின் கூட்டிணைந்த செயற்பாடுகள் மற்றும் நடத்தைகள் ஒருமுகப்படுத்தப்படுகின்றது.

ஏ) கிளை வலையமைப்புகள் கைத்தொழிற்துறையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றை பின்பற்றுகின்றன என்பதை உறுதிப்படுத்தவதற்காக கிளைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றதுஇ

ஐ) இணக்கத்தை உறுதிப்படுத்தல் செயன்முறைகள் காலத்திற்கு காலம் உரிய திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுவதுடன் மற்றும் யாதேனும் மீறல்கள் அடையாளம் காணப்பட்டால் அதனை நிவர்த்தி செய்வதற்காக சபைக்கு அறிவிப்பை வழங்குதல்.

ஒ) இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைக்கு இணங்குவதற்காக உறுதிப்படுத்தல் அறிக்கைகளை மேற்பார்வை திணைக்களத்திற்கு கையளித்தல்

*2007ம் ஆண்டு 11ம் இலக்க வங்கிச்சட்டத்திற்கு அமைவாக வங்கி ஒழுகுதல்.*

சிறந்த கூட்டிணைந்த ஆளுகைக்காகவிருக்கும் பணிப்பாளர் சபை மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் ஈடுபாட்டின் ஊடாக அவர்களுடைய உயர் ஒழுக்க பெறுமதிகள் மற்றும் பொறுப்புக்கூறுதல் என்பவற்றை இலக்காக கொண்டு இலங்கை மத்திய வங்கி 2007ம் ஆண்டு 11ம் இலக்க வங்கிச் சேவை சட்டத்தின் ஊடாக கூட்டிணைந்த ஆளுகை பற்றிய பணிப்புரையை அறிமுகப்படுத்தியது. பணிப்பாளர் சபை மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமைவாக இணங்குகின்றது என்பதை வங்கியின் இணக்கத் திணைக்கம் மற்றம் பணிப்பாளர் சபை செயலாளரினால் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கு மேலதிகமாக இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றம் செலவாணி ஆணைக்குழு என்பவற்றினால் சிபாரிசு செய்யப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

வங்கியினுள் சிறந்த கூட்டிணைந்த ஆளுகையை செயற்படுத்துதல் பணிப்பாளர் சபை மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் கடமை மற்றும் பொறுப்பாகும்.

### கூட்டிணைந்த ஆளுகை சட்டகம்

தொடர்ச்சியாக சந்திக்கும் மற்றும் உபாயமார்க்க பணிப்புரைகளை வழங்கும் செயற்திறன் மிக்க பணிப்பாளர் சபை மக்கள் வங்கியின் தலைமையை ஏற்கின்றது. வங்கியின் உயர் மட்டத்தில் பொறுப்புக்களின் தெளிவான பகிர்ந்தளிப்பு உள்ளதுடன், பணிப்பாளர் சபை கூட்டங்களை நிர்வாகிக்கும் மற்றும் அதற்கான பணிப்புரையை வழங்கும் தலைவருக்கும், வங்கி வியாபார நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருக்கும் பிரதான நிறைவேற்று அலுவலர் / பொது முகாமையாளர் இருவருக்கிடையே இருக்கும் பொறுப்புகள் தொடர்பாக தெளிவான வேறுபடுத்தல் உள்ளது. சபையின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான தகவல்கள் செயலாளரின் ஊடாக சபைக்கு வழங்கப்படும்.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்பாக பணிப்புரைக்கு அமைவாக செயற்படுவதன் ஊடாக பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ ஏழு உப குழுக்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு துறை தொடர்பாகவும் அவர்களுக்குரிய துறைகளில் மேற்பார்வையினை மேற்கொள்வதற்கு மற்றும் மதிப்பீடு செய்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் உள்ளது.

இணக்கச் செயற்பாட்டின் செயற்திறனை மதிப்பீடு செய்வதற்காக தயாரிக்கப்பட்ட புள்ளி அட்டை குறைந்த இடர் வகை குழுக்கள் தொடர்பாக 82 புள்ளிகள் இங்கே காட்டப்படும்.




*பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியியல் என்பவற்றை தோற்கடித்தல்*

இன்று பணத் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடல் வங்கிச் சேவை மற்றும் நிதித் துறைக்கு பாரிய அச்சுறுத்தலாக இருப்பதுடன் உலகலாவிய பிரச்சினைகள் பலவற்றை உருவாக்குகின்றது. இலங்கை பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடல் என்பவற்றை தண்டணைக்குரிய மற்றும் சிறைத்தண்டணைக்குரிய குற்றமாக அடையாளம் கண்டுள்ளதுடன், அவை தொடர்பாக சட்டங்களை இயற்றியுள்ளது.

மக்கள் வங்கி பணத்தூய்தாக்கல் பரிமாற்றங்களினால் ஏற்படும் இடரைக் குறைப்பதற்காக பணத்தூய்தாக்கலுக்கு எதிரான நடைமுறைகளை செயற்திறனுடன் பின்பற்றுகின்றது. இந்த முறைமையின் ஊமாக வங்கியில் மேற்கொள்ளப்படும் வங்கி கொடுக்கல் வாங்கல் தொடர்பாக சோதனைகளை நடாத்துகின்றது.

- எவ்வித பொருளாதார நோக்கம் அல்லது தெளிவான சட்டரீதியான நோக்கம் இல்லாத பாரிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சந்தேசகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை மேற்பார்வை செய்தல் ஊழியர்கள்களிடமிருந்து கிடைக்கப்பெறும் உள்ளக சந்தேகத்திடமான கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றை பகுப்பாய்வு மற்றும் புலனாய்வு செய்தல்.
- சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முகாமைத்தவத்திற்கும் நிதியியல் புலனாய்வு அலகுக்கும் உடனடியான அறிவித்தல்.

*இணங்கலுக்கான பிரதான இடர் காட்டிகள்*

| இணங்கல் | குறைந்த இடர் | இடைநிலை இடர் | உயர் இடர் | 31.12.2015 அன்று நிலை | 31.12.2014 அன்று நிலை |
|---|---|---|---|---|---|
| கண்காணிக்கப்பட்ட அத்துமீறல்களின் எண்ணிக்கை | எதுவுமில்லை | < 16 | > 16 | 3 | 13 |
| புலனாய்வு அலகில் கோப்பிடப்பட்ட சந்தேகத்திற்கிடமான பரிமாற்றங்களின் எண்ணிக்கை | எதுவுமில்லை | < 16 | >16 | 21 | 39 |
| வங்கியின் மீது விதிக்கப்பட்ட தண்டத் தொகை | பூஜ்ஜியம் | < LKR 0.5M | >LKR 0.5M | Nil | Nil |

வங்கியினால் பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடல் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் மற்றும் கூட்டிணைந்த ஆளுகைக் கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் கீழ்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.:

- பணத்தூய்தாக்கலுக்கு எதிரான நடவடிக்கைகள் / உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள், வாடிக்கையாளர் கொடுப்பனவு செய்யவேண்டிய பற்றாணை மற்றும் இடர் வகைப்படுத்தல் தொடர்பாக வங்கிக் கிளைகளின் ஊடாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- பணத்தூய்தாக்கலுக்கு எதிரான நடவடிக்கைகள் / உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள், மற்றும் வெஸ்டர்ன் யூனியன் பரிமாற்றங்கள் தொடாபான மின்னிலத்திரனியல் கற்றல் மொடல்கள் அபிவிருத்தி செய்யப்பட்டது.
- கூட்டிணைந்த ஆளுகையின் சிறந்த பழக்கத்திற்கான கோவை, பணத்தூய்தாக்கலுக்கு எதிரான நடவடிக்கைகள் / உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் கொள்கை, ஒழுக்கநெறிக் கோவை, இணக்கக் கொள்கை மற்றும் வாடிக்கையாளர் பட்டயம் என்பன செயற்படுத்தப்படுகின்றது.

இணங்கல் மற்றும் புகழ் இடரைக் குறைத்துக்கொள்வதற்காக மக்கள் வங்கியினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் இணங்கல் தேவைக்கு பூரணமாக இணங்கியுள்ளது. பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடல் என்பவற்றை தோற்கடிப்பதற்கு அவசியமான முறைமைகள் மற்றும் நடைமுறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இது தொடாபாக பிரயோகிக்கப்படும் அனைத்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் கடுமையான பின்னபற்றப்படும்.

## உபாயமார்க்க / வியாபார இடர்

வியாபார சூழலில் ஏற்படும் மாற்றங்களின் ஊடாக மற்றும் எதிர்மறை வியாபார தீர்மானங்களின் ஊடாக அல்லது வியாபாரச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு பதிலளிப்பதற்கு முடியாமல் போவதனால் எழும் உழைப்பு தொடர்பான மூலதனம் அல்லது உத்தேச இடர் என்பனவற்றை இது கருதும்.

சந்தைச் சூழலுடன் இணங்காத அதிகரிக்கும் வீதம் அல்லது சந்தை பங்குகள் என்பவற்றை அடைவதற்கு முயற்சியெடுத்தல், சூழல் மாற்றங்களுக்கு ஒத்திசையாமை மற்றும் உரிய முறையல் பதிலளிக்காமைஈ சரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட குறிக்கோள்களுக்கு சவால்களை ஏற்றக்கொள்ளல், வியாபார சூழலினுள் மாற்றங்களுக்கு மிகக்குறைவான நேரத்தில அல்லது உபாயமார்க்க குறிக்கோள்களுடன் இசையாத குறிப்பிட்ட செயற்பாடுகள் என்பன உபாயமார்க்க இடர் பற்றிய பொதுவான வளங்கள் ஆகும்.

*இடர் தேவை*

வியாபார இடர் தேவை பணிப்பாளர் சபையினால் வருடாந்த அடிப்படையில் வங்கியின் வரவுசெலவுத் திட்டத்தின் போதும் இடைக்கால திட்டங்களைத் தயாரிக்கும் போதும் கவனத்தில் கொள்ளப்படும். பிரிவுகளினதும் வியாபார அலகுகளினதும் திட்டங்கள் வங்கியின் முழுமையான இடர் தேவையுடன் ஒருங்கிணையும்.

வங்கியின் உபாயமார்க்கம் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்படும்.

உபாயமார்க்க இடருக்கான வளங்கள் உபாயமார்க்க இடர்கள் பிரதானமாக வெளிவாரி இடர் காரணிகளினால் மற்றும் உள்ளக இடர் காரணிகளினால் எழுகின்றது.

- உள்ளக காரணிகள் : வள இயலுமை மற்றும் கிடைப்பனவு, வாடிக்கையாளர் கவனிப்பு, பண்டங்கள் மற்றும் நிதியிடல் மற்றும் ஏனைய இடர் வகைகளின் இடர் தேவை மற்றும்
- வெளிவாரிக் காரணீிகககள் : பொருளாதாரம், தொழில்நுட்பம், சமூக போட்டித்தன்மை நடத்தை

*உபாயமார்க்க இடரைக் குறைத்தல்*

உபாயமார்க்க இடரைக் குறைப்பதற்காக வங்கி கீழ்வரும் செயன்முறைகளை பின்பற்றுகின்றது.:

- உபாயமார்க்கத்தை உருவாக்கும் பொழுது அனைத்து மட்டத்திலுள்ள முகாமைத்தவத்தினரும் பங்குபற்றல்
- சக்திமிக்க உபாயமார்க்கத் திட்டமிடல் செயன்முறையை நிறுவுதல்
- உபாயமார்க்க சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஒருங்கிணைவதற்காக தொடர்ச்சியான மீளாய்வு

வருடாந்த வரவுசெலவுத்திட்ட செயன்முறை நிதித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், வங்கியின் திட்டங்களுக்கு தாக்கத்தை உருவாக்கக்கூடிய இடர் அளவீட்டு மதிப்பீடுகள் இதில் உள்ளடங்கும். இந்த பயிற்சிக்கு தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் சமூக பொருளாதார மற்றும் சூழலி ஒழுங்குபடுத்தல்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

உபாயமாக்க இடரை அளவிடுவதற்காகவும் மேற்பார்வை செய்வதற்காகவும் புள்ளியிடல் அட்டை முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் இடை மட்ட உபாயமார்க்க இடர் வெளிப்படுத்தல்கள் காட்டப்படுகின்றது. எங்கள் மீயாள்வுக் காலப்பகுதியினுள் நாங்கள் உபாயமார்க்க திட்டமிடல் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளோம்.

# செயன்முகாமை

## இடர் முகாமைத்துவம்

*கண்காணிப்பு*

வருடாந்ம வியாபாரத் திட்டமிடல் செயன்முறையாக, வங்கி ஊடாக வியாபார இடர் சந்தர்ப்பங்களில் உழைக்கையில் ஏற்படும் இடர்களைத் தடுத்தல் அல்லது குறைப்பதற்காக முகாமைத்துவம் பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

அத்துடன், சொத்துக்கள் பொறுப்புக்கள் முகாமைத்துவக் குழு மற்றும் சபையின்ால் வாராந்தம் (ஐந்தொகைச் சுருக்கம்) மற்றும் மாதாந்தம் (இலாப நட்டம் மற்றும் ஏனைய பிரதான செயலாற்றுகை காட்டிகள்) வியாபார செயலாற்றுகை அறியப்படுகின்றது. இதன் விளைவாக சீர்செய்வதற்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் எதிர்காலத்தில் மறைத்தாக்கங்களை குறைப்பதற்கு திட்டமிடுதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றது.

2015ம் ஆண்டிலிருந்து உபாயமார்க்க இடர்களை அளவீடு செய்வதற்காக புள்ளி அட்டை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

### மூலதனப் போதுமை

மக்கள் வங்கி அதன் மூலதன முகாமைத்துவக் குறிக்கோள்களுக்கு உதவுவதற்கு மூலதனப் போதுமையை மதிப்பிடுகின்னறது.

- ஒழுங்குபடுத்தல் மூலதன தேவைகளை பூர்த்திசெய்தல்
- உள்ளக பொருளாதார மூலதன தேவைகளைப் பூர்த்திசெய்தல்
- எதிர்பாரா நிகழ்வுகளை கையாள்வதற்கான நெகிழ்வுத்தன்மையினை பராமரித்தல்
- மூலதன வகை மற்றும் தொகையில் வினைத்திறன்
- செயற்திறன் மிக்க மூலதனச் சேகரிப்பு

### உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீடு செயன்முறை

ஒழுங்குபடுத்தல் மூலதன முகாமைத்துவம் உள்ளக மூலதனத் தேவையை கணக்கிடும் வங்கியின் அணுகுமுறையில் இலங்கை மத்திய வங்கியினால் 1வது தூணாக அறிக்கையிடப்பட்டுள்ள மூலதனம் மற்றும் இடருடன் தொடங்குகின்றது. வங்கியின் ஊடாக கண்டறியப்பட்ட எனினும் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையிடலின் கீழ் சேர்த்தக்கொள்ளப்படாத ஏனைய இடர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றது.

மக்கள் வங்கி 1வது தூணின் மூன்று வகையான இடர்கயுக்காக இடர் நிறுக்கப்பட்ட சொத்தக்களை கணிப்பீடு செய்வதற்கு பின்வரும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றது.

- கடன் இடர்: நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை
- சந்தை இடர்: நியமப்படுத்தப்பட்ட அளவீட்டு முறை
- தொழிற்பாட்டு இடர் : அடிப்படை காட்டிகள் இடர்

மக்கள் வங்கியின் இடர்களின் இடையே பல்வேறுபட்ட இடர் தாக்கங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. ஒவ்வொரு இடர் குழுவிற்கும் மூலதனப் போதுமை இலகுவாக சேர்க்கப்பட்டுள்ளதுடன், இந்த முறையின் ஊடாக மூலதனப் போதுமைக்கும் மேலாக மத்தியதர நிலையைக் காட்டும்.

*மூலதன மற்றும் பங்குலாப திட்டத் மற்றும் வீத முகாமைத்துவம்*

அரச நிறுவனமாக மக்கள் வங்கியிடம் சாதாரண பங்குகள் மூலதனச் சந்தையில் பிரவேசிப்பதில்லை என்பதுடன் தேவைக்கேற்றவாரு அதன் மூலதன உருவாக்க அடிப்படையை அதிகரிப்பதற்காக அரச தியைசேரியின் பங்காக மற்றம் அதன் மூலதன உருவாக்கல் மீது முழுமையாக நம்பிக்கையை வைத்தல் வேண்டும். இது வரை வங்கி 1வது தூண் மூலதனப் போதுமை வீதத்தை உள்ளக மதிப்பீடு அடிப்படை மீடு காட்டப்பட்டுள்ள இடர் தேவையான, அதாவது 6% மட்டத்திற்கு மேல் மற்றும் உரிய அடிப்படை 6.5% மீது மட்டத்திற்கு கீழ் இறங்காமல் பங்குலாக விநியோகத்தை கட்டுப்படுத்துவதற்காக அரசின் திறைசேரியுடன் முறைசார ஒப்பந்தத்திற்கு வந்துள்ளது.

அத்தோடு வங்கி குறைந்தபட்சம் முறையே 11% இருந்து 12% வரையான மூலதன போதுமை வீதத்தை பேணுவமற்கு ஈடுபாட்டுடன் இருப்பதுடன், நீண்ட கால தொகுதிக்கடன் போன்ற 1வது தூண்களை பொருத்தமான கருவிகைள விநியோகிப்பதன் ஊடாக நிதியினைத் திரட்டுவது கவனத்தில் கொள்ளப்படும்.

பொதுவாக ஒழுங்குபடுத்தலாளரினால் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்சத்திற்கு மேல் உள்ளக மதிப்பீட்டு அடிப்படையில் கையிருப்பை பேணுதல் வங்கியின் கொள்கையாகும்.

# சபை உப குழு அறிக்கைகள்

## சபை கணக்காய்வுக் குழு (BAC) அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்பொன்றான இலங்கையின் உரிமம்பெற்ற வணிக வங்கிகளுக்கான கூட்டிணை ஆளுகையின் ஏற்பாடுகளின் பிரகாரம், சபை கணக்காய்வுக் குழு அமைக்கப்பட்டது. சபை கணக்காய்வுக் குழுவின் பணிகளுக்கு பணிப்பாளர் சபையினால் பயன்படுத்தப்பட்ட பட்டயத்தின் மீது இக்குழுவின் நடைமுறைகள் அமைந்துள்ளன.

திரு. ஜெஹான் பி.அமரதுங்க, பட்டயம்பெற்ற கணக்காளர்/ இணையுரிமைக்கழக கணக்காளர்/ இக்குழுவின் தலைவர் ஆவார். திறைசேரியின் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பிரதிநிதியாக திருமதி ஜீ.டி.சி.ஏக்கநாயக்க இருப்பதுடன், திரு. சஞ்ஜய கலபட 2015.11.24 ஆந் திகதி வரை இக்குழுவில் பணியாற்றினார். திரு. சஞ்ஜய கலபட கேட்டுவிலகியதைத் தொடர்ந்து வங்கியின் பணிப்பாளர் திரு. எம்.எச்.ஜமால்டீன் 2015 நவம்பர் 24 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவருமாறு நியமிக்கப்பட்டார். சபை கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் இரண்டு(2) பேராகும்.

பிரதிப் பொது முகாமையாளர்/பணிப்பாளர் சபை செயலாளர், இக்குழுவின் செயலாளராகத் தொழிற்படுகின்றார். பிரதிப் பொது முகாமையாளர் (நட்ட ஆபத்து முகாமைத்துவம்), பிரதிப் பொது முகாமையாளர் (இணக்கம்), பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஆகியோர் அழைப்பின்பேரில் இக்குழுக் கூட்டங்களில் கலந்துகொள்கின்றனர். அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகரும் இக்கூட்டங்களில் கலந்துகொள்கின்றார்.

சபை கணக்காய்வுக் குழுவின் செயற்பொறுப்பு

- சட்டத்தின்கீழ் நிதி அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரிசீலனைக்கு உட்படுத்துதல்.
- வியாபார நட்ட ஆபத்துக்கள் பற்றி உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவ முறைமையைப் பரீட்சித்தல்.
- உள்ளக, வெளிநிலை ஆகிய இருவிதங்களிலும் கணக்காய்வுச் செயன்முறையை பரிசீலனைக்கு உட்படுத்துதல்.
- சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் குறிப்பாக, இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுநெறிகளுக்கும் அமைவாக ஒழுங்குறுத்துகைக்காக அமுல்படுத்தப்படும் நடவடிக்கைமுறைகளை பரிசீலனைக்கு உட்படுத்துதல்.

பரிசீலனைக்கு உட்படும் காலப்பகுதியில், பின்வரும் செயற்பணிகளை குழு மேற்கொண்டது:

அ. 2015 ஆம் ஆண்டுக்கான வங்கியின் நோக்கெல்லை குறித்து நட்ட ஆபத்தின் பக்கத்தோற்றங்கள் மீதமைந்து தயாரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை அனுமதித்தல்.

ஆ. 2014 ஆம் ஆண்டுக்காக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் பிரிவு 13(7)(அ) இன்பிரகாரம் வெளியிடப்பட்ட முகாமைத்துவக் கடிதம் மற்றும் கணக்காய்வு அறிக்கையையும் அதனோடிணைந்த முகாமைத்துவத்தின் பதில்குறிப்புகளையும் பரிசீலனைக்கு உட்படுத்தி அதனை பணிப்பாளர் சபையில் சமர்ப்பிப்பதற்கு சிபார்சுசெய்தல்.

இ. 2015 ஆம் ஆண்டிற்குரிய வங்கியின் நிதிச் செயலாற்றுகையை காலாண்டு அடிப்படையில் பரிசீலனைக்கு உட்படுத்தி அதனை பணிப்பாளர் சபையில் சமர்ப்பிப்பதற்கு சிபார்சுசெய்தல்.

ஈ. 2013.'.2014 இல் இலங்கை மத்திய வங்கியின் நியதிச்சட்ட பரீட்சிப்புகளிலும் பின்தொடர் பரீட்சிப்புகளிலும் எழக்கூடிய பிரச்சினைகளை பரிசீலனைக்கு உட்படுத்தி கலந்தாலோசித்தலும் தவறுகளைத் திருத்திக்கொள்வதிலான முன்னேற்றத்தை ஒழுங்குறுத்துதலும்.

உ. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயலாற்றுகையை காலத்திற்குக் காலம் பரிசீலனைக்கு உட்படுத்துதல்.

ஊ. தகவல்முறை நடவடிக்கைமுறையை பரிசீலனைக்கு உட்படுத்தி, உகந்த மாற்றங்களை சிபார்சுசெய்து அவற்றை அமுல்படுத்துவத்திலான முன்னேற்றத்தை பரிசீலனைக்கு உட்படுத்துதல்.

2015 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டில் ஐந்து(5) கூட்டங்கள் நடைபெற்றன. சபை கணக்காய்வுக் குழு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள், அவற்றில் அவதானித்த குறைபாடுகள், சம்பந்தப்பட்ட பிரதிப் பொது முகாமையாளர்கள்/திணைக்களத் தலைவர்களினால் காண்பிக்கப்பட்ட பதில்குறிப்புகளும் கருத்திற்கொள்ளப்பட்டன. அவ்வாறு அவதானித்த குறைபாடுகளைச் சீர்செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் ஒழுங்குறுத்தப்பட்டன. இக்குழுக் கூட்ட அறிக்கைகள் பணிப்பாளர் சபைக்கும் அறிக்கையிடப்படுகின்றன.

இலங்கை மத்திய வங்கியின் நியதிச்சட்ட பரீட்சிப்பு அறிக்கைகளினாலும் 2014 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அறிக்கையில் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் குறித்து 2015 ஆம் ஆண்டில் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட சீர்செய்வதற்கான நடவடிக்கைகளையும் சபை கணக்காய்வுக் குழு பரீட்சிக்கின்றது.

நிதிக் கூற்றுகளைத் தயாரித்து சமர்ப்பிக்கும்போது கணக்காய்வு நோக்கத்திற்காக கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்பட்ட சகல தகவல்களும் ஆவணங்களும் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் அவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இசைவனவாக உள்ளன என்பதையும் சபை கணக்காய்வுக் குழு உறுதிப்படுத்தியது. போதிய கட்டுப்பாடுகளும் நடவடிக்கைமுறைகளும் அமுல்படுத்தப்பட்டது என்பதுடன் சகல முக்கியமான பக்கத்தோற்றங்களிலும் குழுவின் பட்டயம் பின்பற்றப்பட்டது என்பது சபை கணக்காய்வுக் குழுவின் அபிப்பிராயமாகும்.

**ஜெஹான் பி.அமரதுங்க**
*தலைவர்*
சபை கணக்காய்வுக் குழு

2016 மார்ச் மாதம் 24 ஆந் திகதி

## மனிதவள மற்றும் ஊதியக் குழு (BHRRC) அறிக்கை

### நோக்கெல்லை

மனிதவள மற்றும் ஊதியக் குழு, மனித வள மற்றும் ஊதியக் கொள்கையை வகுத்தமைப்பதற்கும் மனிதவள முகாமை சம்பந்தமான மூலோபாயங்களை ஆரம்பிப்பதற்கும் பொறுப்பு வகிக்கின்றது. குழுவினால் வகுத்தமைக்கப்பட்ட கொள்கைகள் முழுமையாக பரிசீலிக்கப்படுவதையும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவை பின்பற்றப்படுவதையும் குழு உறுதிப்படுத்துகிறது.

ஆட்சேர்ப்பின்போது, ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் ஏனைய நன்மைகளைத் தீர்மானிக்கும்போது ஒரு முக்கிய வகிபாகத்தை குழு நிறைவேற்றுகின்றது. அதேபோல், தாபன முகாமைத்துவத்தின் சேவை நீடிப்புகளைக் கருத்திற்கொண்டு பணிப்பாளர் சபைக்கு சிபார்சுகளை செய்வதற்கும் இக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

தாபன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ உறுப்பினர்களுக்கான சேவை ஒப்பந்தங்களைப் பரிசீலிக்கும் பொறுப்பும் இக்குழுவைச் சாரும்.

### குழுவின் அமைப்பு

பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்கள் மூவரும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்/ பொது முகாமையாளரும் (CEO/GM) இக்குழுவில் அடங்குவர். பின்வருவோர் மனிதவள மற்றும் ஊதியக் குழுவின் (BHRRC) தற்போதைய உறுப்பினர்களாவர்:

- திரு. ஹேமசிறி பர்னாந்து (தலைவர்)
- திரு. பிலீசியன் பெரேரா
- திரு. அன்ரன் ஹேமன்த
- திரு. என்.வசந்த குமார், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்/பொது முகாமையாளர் (CEO/GM)

வங்கியின் ஏனைய உத்தியோகத்தர் எவரும் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம்.

### குழுக் கூட்டங்கள்

குழு அதன் நோக்கெல்லைக்கு உட்படும் விடயங்களில் ஈடுபடுவதற்கும் அவற்றை பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுவதற்கும் இரு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டங்களை நடாத்துகிறது. இக்குழுவின் கூட்ட நடப்பெண் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்கள் இருவர், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்/பொது முகாமையாளர் (CEO/GM) ஆகியோராவர்.

தலைவர்
சபை மனிதவள மற்றும் ஊதியக் குழு

2016 மார்ச் மாதம் 24 ஆந் திகதி

## சபை ஒருங்கிணைந்த நட்ட ஆபத்து முகாமைத்துவ குழு (BIRMC) அறிக்கை

### நோக்கெல்லை

சபை ஒருங்கிணைந்த நட்ட ஆபத்து முகாமைத்துவக் குழு பணிப்பாளர் சபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வங்கியின் நட்ட ஆபத்து மூலோபாயத்தை அமுல்படுத்துவதற்கு பொறுப்பு வகிக்கின்றது. வியாபார அலகுகள் பயனுறுதியுடன் இயங்குவதற்கான பணிச்சட்டங்களுக்கு அனுமதியளிப்பதுடன், நட்ட ஆபத்தை ஒழுங்குறுத்தும் பொறுப்பு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்ட சூழமைவினுள் வங்கியின் நட்ட ஆபத்தின் பக்கத்தோற்றங்களை பரிசீலனைக்கு உட்படுத்துவதற்கும் குழு பொறுப்புடையதாகும்.

அதேபோல், பொருத்தமான நட்ட ஆபத்துக் குறிகாட்டிகளையும் முகாமைத்துவத் தகவல்களையும் உபயோகித்து கடன், சந்தை, திரவத்தன்மை, நடவடிக்கைசார் மற்றும் மூலோபாய நட்ட ஆபத்துக்களுக்கு உரியதான சகல நட்ட ஆபத்துக்களையும் மதிப்பீடுசெய்வதற்கும் பணிப்பாளர் சபைக்கு அவசியமான சிபார்சுகளைச் செய்வதற்கும் குழு பொறுப்புடையதாகும்.

நட்ட ஆபத்து முகாமைத்துவத்திற்கு உரியதான ஏனைய பொறுப்புக்களிடையே கடன், நிதி, நடவடிக்கைகள் மற்றும் சட்டரீதியான/இணக்கம் சம்பந்தமான நட்ட ஆபத்து முகாமைத்துவத்தை அமுல்படுத்துவது குறித்த கட்டுப்பாட்டை ஒழுங்குறுத்துவதுடன், நட்ட ஆபத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கு துரித சீர்திருத்த நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

### குழுவின் அமைப்பு

குழு குறைந்தபட்சம் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்கள் மூவரையும், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்/பொது முகாமையாளர் (CEO/GM) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நட்ட ஆபத்து முகாமைத்துவம்) ஆகியோரை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும். ஒருங்கிணைந்த நட்ட ஆபத்து முகாமைத்துவக் குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் பின்வருவோராவர்:

- திரு. ஜெஹான் பி.அமரதுங்க (தலைவர்)
- திருமதி. ஜி.டி.சி. ஏக்கநாயக்க
- திரு. பிலீசியன் பெரேரா
- கலாநிதி அமிந்த பெரேரா
- திரு. என்.வசந்த குமார், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்/பொது முகாமையாளர் (CEO/GM)
- திரு. ரசித குணவர்தன, பிரதிப் பொது முகாமையாளர் (நட்ட ஆபத்து முகாமைத்துவம்)

வங்கியின் ஏனைய உத்தியோகத்தர் எவரும் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம்.

### குழுக் கூட்டங்கள்

குழு நட்ட ஆபத்து முகாமைத்துவத்திற்கு உரியதான ஏனைய விடயங்களில் ஈடுபடுவதற்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டங்கள் நடாத்தப்படுவதுடன், அவற்றின் சிபார்சுகள் பணிப்பாளர் சபையில் சமர்ப்பிக்கப்படும். இக்குழுக் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்கள் இருவரும், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்/பொது முகாமையாளரும் ஆகும்.

தலைவர்
சபை ஒருங்கிணைந்த நட்ட ஆபத்து முகாமைத்துவக் குழு (BIRMC)

2016 மார்ச் மாதம் 24 ஆந் திகதி

## சபை நிறைவேற்றுக் கடன் குழு (BECC) அறிக்கை

### நோக்கெல்லை

வாடிக்கையாளர்களின் உதவிப் பொது முகாமையாளர் தரத்திற்கு மேற்பட்ட பணியாட்டொகுதி அங்கத்தவர்களின் சகல கடன் முன்மொழிவுகளுக்கும் அனுமதியளிப்பதற்கு குழு நிறைவேற்றுக் கடன் குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், கடன் மீள் அட்டவணைப்படுத்தும் முன்மொழிவுகளும் முழுமைத் தொகைகளைத் தீர்ப்பனவுசெய்வதும் குறித்து கருத்திற்கொள்வதற்கும் நிறைவேற்றுக் கடன் குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

குழுவின் அமைப்பு

குழு குறைந்தபட்சம் பணிப்பாளர் சபை பணிப்பாளர்கள் மூவரையும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்/பொது முகாமையாளர் (CEO/GM) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நட்ட ஆபத்து முகாமைத்துவம்) ஆகியோரை உள்ளடக்கியதாகும். ஒருங்கிணைந்த நட்ட ஆபத்து முகாமைத்துவக் குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் பின்வருவோராவர்:

- திரு. ரி.எம்.கே.பீ.தென்னகோன் (தலைவர்)
- திரு. அன்ரன் ஹேமந்த
- திரு. என்.வசந்த குமார், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்/பொது முகாமையாளர் (CEO/GM)
- திரு. ரசித குணவர்தன, பிரதிப் பொது முகாமையாளர் (நட்ட ஆபத்து முகாமைத்துவம்)

வங்கியின் ஏனைய உத்தியோகத்தர்கள் எவரும் அழைப்பின்பேரில் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம்.

### குழுக் கூட்டங்கள்

குழு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடும். இக்குழுக் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண், பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்கள் இருவர் உட்பட உறுப்பினர்கள் நால்வர் ஆகும்.

தலைவர்
சபை நிறைவேற்றுக் கடன் குழு (BECC)

2016 மார்ச் மாதம் 24 ஆந் திகதி

## சபை நியமனக் குழு (BNC) அறிக்கை

### நோக்கெல்லை

பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவரையும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரையும் தெரிவுசெய்தல்/நியமிப்பதற்கான நடவடிக்கைமுறையொன்றை அமுல்படுத்துவது சபை நியமனக் குழுவின் முக்கிய பணியாகும். பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்கும் பிரதான முகாமைத்துவ பதவிகளுக்கும் நியமிப்பதற்கும் பதவிஉயர்வு வழங்குவதற்கும் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய தகுதிக்கான அளவுகோல்களை குழு விதித்துரைக்கின்றது.

பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரை ஓய்வுபெறுவதற்கு முன்பு செய்த மேலதிக/புதிய நிபுணர்களின் தேவைகளையும் பின்னுரிமைத் திட்டத்தையும் கருத்திற்கொள்வதற்கும் சிபார்சுசெய்வதற்கும் குழு பொறுப்புடையதாகும்.

### குழுவின் அமைப்பு

குழு குறைந்தபட்சம் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்கள் மூவரைக் கொண்டதாக அமைந்திருக்கும். சபை நியமனக் குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் பின்வருவோராவர்:

- திரு. ஹேமசிறி பர்னாந்து (தலைவர்)
- திரு. ஜெஹான் பி.அமரதுங்க
- திருமதி. ஜி.டி.சி. ஏக்கநாயக்க

பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்/பொது முகாமையாளர் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம்.

### குழுக் கூட்டங்கள்

குழு காலாண்டு இடைவெளிக்கு ஒருமுறை ஒன்று கூடும் என்பதுடன், அதன் சிபார்சுகள் பணிப்பாளர் சபைக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இக்குழுவின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண், பணிப்பாளர் சபை பணிப்பாளர்கள் மூவர் (3) ஆவர்.

தலைவர்
சபை நியமனக் குழு (BNC)

2016 மார்ச் மாதம் 24 ஆந் திகதி

## சபை முதலீட்டு வங்கியியல் குழு (BIBC) அறிக்கை

### நோக்கெல்லை

வங்கியின் முதலீட்டு வங்கியியல் மாதிரியையும் வங்கியின் முதலீட்டு வங்கியியல் பிரிவின் நடவடிக்கைகளையும் காலத்திற்குக் காலம் பரிசீலனைசெய்வதற்கு சபை முதலீட்டு வங்கியியல் குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவுக்கு பங்கு வர்த்தக வரம்புகள், புதிய முதலீட்டு உற்பத்திகள் மற்றும் பங்குத் தரகர்களின் பயன்பாடு, வர்த்தக வாய்ப்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் தொகுதிகளுக்கு அனுமதி வழங்குவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

### குழுவின் அமைப்பு

குழு குறைந்தபட்சம் பணிப்பாளர் சபை பணிப்பாளர்கள் இருவரையும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்/பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (மொத்த வங்கியியல்), பிரதிப் பொது முகாமையாளர் (நட்ட ஆபத்து முகாமைத்துவம்) ஆகியோரை உள்ளடக்கியதாகும். சபை முதலீட்டு வங்கியியல் குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் பின்வருவோராவர்:

- திரு. ஜெஹான் பி.அமரதுங்க (பணிப்பாளர், தலைவர்)
- திருமதி. ஜி.டி.சி. ஏக்கநாயக்க - பணிப்பாளர்
- திரு. என்.வசந்த குமார், பிரதான நிறைவேற்ற உத்தியோகத்தர்.்பொது முகாமையாளர் (CEO/GM)
- திரு. சப்ரி இப்ராஹிம், சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (மொத்த வங்கியியல்)

ரசித குணவர்தன, பிரதிப் பொது முகாமையாளர் (நட்ட ஆபத்து முகாமைத்துவம்)

வங்கியின் ஏனைய உத்தியோகத்தர் எவரும் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம்.

### குழுக் கூட்டங்கள்

குழு அதற்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்களுடன் சம்பந்தப்பட்ட கலந்தாலோசனைக்காக காலாண்டுக்கு ஒருமுறை கூடும். சபை முதலீட்டு வங்கியியல் குழுவின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் பணிப்பாளர் சபையின் இரண்டு பணிப்பாளர்கள் உட்பட நான்கு (4) உறுப்பினர்கள் ஆவர்.

தலைவர்
சபை முதலீட்டு வங்கியியல் குழு (BIBC)

2016 மார்ச் மாதம் 24 ஆந் திகதி

## சபை தகவல் தொழில்நுட்பவியல் குழு (BITC) அறிக்கை

### நோக்கெல்லை

தகவல் தொழில்நுட்பவியல் பற்றிய நம்பத்தகுந்த மட்டத்தை உறுதிசெய்வதற்கும் தகவல் தொழில்நுட்பவியல் ஆளுகைக்கான அதிகரித்துவரும் கேள்வியுடன் வங்கிக்கு உதவுவதற்கும் சபை தகவல் தொழில்நுட்பவியல் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பவியலுக்குரிய முழுதுமளாவிய மூலோபாயங்களை வகுத்தமைத்து எதிர்கால கேள்வியை நிரம்பல்செய்வதற்கான அதிநவீன தொழில்நுட்பங்கள் பற்றி பணிப்பாளர் சபைக்கு சிபார்சுகளை முன்வைப்பதற்கு இக்குழு பொறுப்புடையதாகும்.

### குழுவின் அமைப்பு

குழு பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்கள் இருவரை உள்ளடக்கியதாகும். சபை தகவல் தொழில்நுட்பவியல் குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் பின்வருவோராவர்:

- திரு. ஹேமசிறி பர்னாந்து (தலைவர்)
- திரு. ஜெஹான் பி.அமரதுங்க

வங்கியின் ஏனைய உத்தியோகத்தர் எவரும் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம்.

சபை தகவல் தொழில்நுட்பவியல் குழுவின் கூட்ட நடப்பெண் உறுப்பினர்கள் எண்ணிக்கை இரண்டு (2) ஆகும்.

தலைவர்
சபை தகவல் தொழில்நுட்பவியல் குழு (BITC)

2016 மார்ச் மாதம் 24 ஆந் திகதி

# சொத்து மேற்பார்வைப் பொறுப்பு

## ஒழுங்குறுத்துகை இணக்கம்



### அறிமுகம்

இணக்கம் உயரத்திலிருந்து ஆரம்பிக்கிறது. அது நேர்மையும் நியாயமும் குறித்த தராதரங்களை வலியுறுத்தும் நிறுவன கலாசாரமொன்றினுள் மிகவும் பயனுறுதியானதாக அமையலாம் என்பதுடன், அதனுள் பணிப்பாளர் சபையும் சிரேட்ட முகாமைத்துவமும் முன்மாதிரியின்படி முன்னெடுக்கப்படும். அது வங்கியின் ஒவ்வொரு நபர் குறித்தும் கவனம் செலுத்துவதுடன், வங்கியின் வியாபார நடவடிக்கைகளில் அத்தியாவசிய பாகமொன்றாகக் காணலாம். வங்கி வியாபாரங்களை முன்னெடுத்துச் செல்லும்போது, அதனை உயர் தரங்களில் வைத்திருக்க வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தின் மெய்ப்பொருள் போன்றே சட்டம் பற்றிய கடிதத்தை தீவிரமாக அவதானிக்க வேண்டும். வங்கியின் பங்குரிமையாளர்கள், வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், சந்தை மீதான அதன் தாக்கத்தைக் கருத்திற்கொள்ளத் துணியாமை, எந்தவொரு சட்டத்தை மீறாதிருந்தபோதும், குறிப்பிடத்தக்க பாதக பிரபல்யத்தையும் நற்பெயருக்கு களங்கத்தையும் ஏற்படுத்தலாம்.

மக்கள் வங்கி அடைந்துள்ள அதிசிறப்பான நற்பெயர் வங்கியின் வியாபார வெற்றியின் முக்கிய அம்சமாக விளங்குவதுடன், அது வங்கியினால் வழங்கப்படும் சேவைகளில் சேவைபெறுநரின் நம்பிக்கைக்கு அடிப்படையை வகுக்கிறது. இந்த நம்பிக்கை நேர்மைத்திறம் மற்றும் வங்கி ஊழியர்களின் விசேட அறிவு குறித்தும் எமது உற்பத்திகளின் உயர் தரம் குறித்த நம்பிக்கையுடன் கைக்குக் கை மாறுகிறது.

வங்கியின் நேர்மைத்திறம், நற்பெயர் என்பவற்றைப் பேணுவதும் தொடர்ச்சியாக முன்னேற்றுவதும் பிரதானமாக இணக்கத்தின் ஊடாக இலக்கிடப்படுகிறது. வங்கி மற்றும் அதன் ஊழியர்களின் நேர்மைத்திறத்தை உறுதிசெய்வதும் பின்வருவனவற்றுடன் இடம்பெறுகிறது:

i. இணக்கத்துடன் சம்பந்தப்பட்ட சட்டவாக்கத்தைக் கடைப்பிடித்தல்.
ii. பின்பற்றி ஒழுகப்படவேண்டிய இணக்கம் சார்ந்த சட்ட முறைமைகள் பற்றிய போதிய அறிவை வழங்குதல் அத்துடன்
iii. கூட்டுவிளைவாக்கமான இணக்க வழிகாட்டுநெறிகளையும் மூலக் கோட்பாடுகளையும் கண்காணித்தல்.

### மக்கள் வங்கியின் இணக்கக் கட்டமைப்பு

வங்கி அதன் தொழிலில் ஏற்புடைத்தாகும் விதிகளுடனும் ஒழுங்குவிதிகளுடனும் வினைத்திறனாகவும் இணக்கத்துடனும் முன்னெடுக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் நோக்குடன் பின்வரும் நோக்கெல்லையுடன் இணக்கப் பணி குறித்த வகிபாகத்தை வங்கி நிறுவியுள்ளது.

- வங்கியின் வியாபாரச் செயற்பாடுகள் தொழிலுடன் தொடர்புபட்ட விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாக பேணிச் செல்லப்படுகின்றதா என்பதை நுண்ணாய்வுக்கும் பரிசோதனைக்கும் உட்படுத்துவதற்கான சுதந்திரம்.
- சபை ஒன்றிணைக்கப்பட்ட இடர்நோக்கை முகாமைத்துவ குழுவுக்கும் பணிப்பாளர் சபைக்கும் அறிக்கையிடுவதற்கான சுதந்திரம்
- வணிகத்திற்கு வசதியளிப்பதற்காக ஒழுங்குவிதிகளை வினைத்திறனுடன் கருத்து விளக்கமளிப்பதற்கும் அத்தகைய ஒழுங்குவிதிகளது மெய்ப்பொருளை மீறாதவாறு முறைமைப்படுத்துபவர்களுடன் வங்கியின் நன்னம்பிக்கையினை அபாயத்திற்குள்ளாக்காதவாறு பராமரித்தல்

*சபை ஒருங்கிணைந்த நட்ட ஆபத்து முகாமைத்துவக் குழு*

*பிரதிப் பொது முகாமையாளர்/இணக்கம்*

*இணக்க உத்தியோகத்தர்*

இணக்கப் பணிக்கு மேலதிகமாக, பின்வருவனவும் நிறைவேற்றப்படுகின்றன:-

அ) வங்கியின் வியாபாரச் செயற்பாடுகள் தொழிலுடன் தொடர்புபட்ட சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாக முன்னெடுத்துச் செல்லப்படுவதை உறுதிசெய்தல்.
ஆ) வங்கியின் சகல ஊழியர்களும் தமது கடமைகளை நிறைவேற்றும்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்கவியல் நியமங்களைப் பின்பற்றுகின்றனர் என்பதை உறுதிசெய்தல்.
இ) வியாபாரத்திற்கு வசதியளிக்கும் பொருட்டு சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் உகந்தவாறு வியாக்கியானம்செய்தலும் வங்கியின் நற்பெயருக்கு ஊறு விளைகின்றவாறு அத்தகைய ஒழுங்குவிதிகளின் மெய்ப்பொருளை மீறாதிருத்தலும்.
ஈ) வங்கியின் உருவச் சொத்துக்களையும் அருவச் சொத்துக்களையும் வியாபாரத்தின் நிதிப் பாதுகாப்பையும் மிக முக்கியமாக வங்கியின் நற்பெயரையும் பாதுகாத்தல்.
உ) வங்கி வியாபாரத்துடன் தொடர்புபட்ட சட்டவாக்கங்கள்., ஒழுங்குவிதிகளில் மாற்றங்கள் ஏதும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் அவை குறித்து முறைப்படி பதவியினரை இற்றைப்படுத்தலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இணக்க விழிப்புணர்வை உறுதிசெய்யக்கூடியதாக அமையும் பொருட்டு கிளை வலையமைப்பு முழுவதிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தலும்.
ஊ) வங்கியின் சகல மட்டங்களிலும் பயன்கூர் கூட்டு ஆளுகை கலாசாரமொன்று இருப்பதை உறுதிசெய்தல்.
எ) மக்களின் நம்பிக்கையையும் வரவேற்பையும் பேணி வங்கி நடவடிக்கைகள் பாதுகாப்பாகவும் சிறந்த முறையிலும் முன்னெடுத்துச் செல்லப்படுவதை உறுதிசெய்வதற்கு வங்கியின் கூட்டுச் செயற்பாடுகளையும் நடத்தைசார் செயற்பாடுகளையும் ஒன்றாக தொடர்புபடுத்துதல்.
ஏ) கிளை வலையப்பினுள் விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க செயலாற்றப்படுகின்றது என்பதை உறுதிசெய்வதற்கு கிளைகளை மதிப்பீடுசெய்தல்.
ஐ) சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் இணக்கப்பாடு குறித்து காலக்கிரமமான உறுதிப்படுத்திக்கொள்ளும் செயன்முறையொன்றை முன்னெடுத்துச்செல்லலும் சீராக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு அடையாளங்காணப்பட்ட ஏதும் மீறல்கள் குறித்து பணிப்பாளர் சபைக்கு அறியக் கொடுத்தலும்.
ஒ) இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுடன் இணக்கம் பற்றிய உறுதிப்படுத்தல் அறிக்கைகளை வங்கியின் மேற்பார்வைத் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல்.

### பணத் தூய்தாக்கல் தடுப்பு மற்றும் பயங்கரவாத நிதியீட்டலை அடக்கல் பற்றிய சட்டப் பணிச்சட்டம்

பணத் தூய்தாக்கல் தடுப்பு மற்றும் பயங்கரவாத நிதியீட்டம் தொடர்பான பின்வரும் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து வங்கித்துறையில் முக்கிய அபிவிருத்தியொன்றை அவதானிக்க முடிந்தது:

- 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பயங்கரவாத நிதியீட்டலை அடக்கல் பற்றிய சமவாயம்.
- 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பணத் தூய்தாக்கல் தடுப்புச் சட்டம்
- 2005 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம்

மேற்போந்த சட்ட ஏற்பாடுகளினால் பணிக்கப்பட்டவாறு நிதி நிறுவனங்களை பணத் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியீட்டல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கான அதிகாரத்துடன் இலங்கை மத்தியில் நிதிப் புலனாய்வுத் தகவல் பிரிவு நிறுவப்பட்டது.

வங்கியின் இணக்கப் பணிக்கு இது சம்பந்தமாக அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றிய பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மக்கள் வங்கி பணத்தூய்தாக்கல் கொடுக்கல்வாங்கல்களுக்கு உள்ளுணர்வின்றி வசதிப்படுத்தும் ஆபத்தைக் குறைப்பதற்கு பின்வரும் பயனுறுதியுள்ள பணத் தூய்தாக்கலுக்கு எதிரான நடவடிக்கைமுறைகள் வங்கியினால் உள்ளக ரீதியாக விருத்திசெய்யப்பட்டுள்ளது. பின்வருவனவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் ஊடாக வங்கி அதன் விழிப்புணர்வை செயலாட்சிசெய்கிறது.

- பொருளாதார அல்லது கட்புலனாகும் சட்டமுறையான நோக்கமற்ற, வழக்கத்துக்கு மாறான பாரிய கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் வழமைக்கு மாறான பாணிகளைக் கண்காணித்தல், பதவியினரிடமிருந்து கிடைக்கப்பெறும் உள்ளக சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் அறிக்கைகளைப் பெறல், அவற்றைப் பகுப்பாய்வுசெய்து புலனாய்வுசெய்தல்.
- சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் குறித்து இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுத் தகவல் பிரிவிற்கு துரிதமாக அறிக்கையிடல்.

பணத் தூய்தாக்கல், பயங்கரவாத நிதியீட்டம் ஆகியன பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தல், வங்கியில் நல்லாட்சிக் கலாசாரமொன்றை நிறுவுதல் பொருட்டு வங்கியினுள் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

- பணத் தூய்தாக்கல்/தங்கள் வாடிக்கையாளரை அறிதல், வாடிக்கையாளர் தளரா ஊக்கம், சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் பற்றி கிளை வலையமைப்பெங்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- பணத் தூய்தாக்கல்/தங்கள் வாடிக்கையாளரை அறிதல், வெஸ்டர்ன் யூனியன் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய இ-கற்றல் மொடியூல்கள் விருத்திசெய்யப்பட்டுள்ளன.
- கூட்டிணை ஆளுகையில் அதிசிறந்த நடைமுறைகள் பற்றிய ஒரு கோவை, பணத் தூய்தாக்கல், தங்கள் வாடிக்கையாளரை அறிதல் கொள்கை, நடத்தைமுறைக் கோவை, இணக்கக் கொள்கை, வாடிக்கையாளர் பட்டயம் என்பன அமுல்படுத்தப்பட்டிருத்தல்.

இணக்க மற்றும் நற்பெயர் சார்ந்த ஆபத்தைக் குறைத்துக்கொள்வதற்கு மக்கள் வங்கியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் இணக்கத் தேவைப்பாடுகள் பூரணமாக ஏற்கப்பட்டுள்ளது. பணத் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியீட்டலை முறியடிக்கும் பொருட்டு அவசியமான உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை வழங்குவதற்கு வங்கியினால் முறைமைகளும் நடவடிக்கைமுறைகளும் விருத்திசெய்யப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக ஏற்புடைய சகல சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் வலுவாகப் பின்பற்றப்படுகின்றன.

வங்கியில் சுயாதீனமான ஓர் அலகாக நிறுவப்பட்ட வங்கியின் இணக்கப் பணி, வாடிக்கையாளருக்கு முற்றிலும் இணக்கமான வங்கிச் சேவைகளை வழங்கி, வங்கித் தொழிலில் சகல விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க செயலாற்றப்படுவதை உறுதிசெய்வதற்கு சகல திணைக்களங்களுடனும் குறிப்பாக நட்ட ஆபத்து முகாமைத்துவம், உள்ளகக் கணக்காய்வு, நடவடிக்கைகள் திணைக்களத்துடன் ஒத்துழைத்துச் செயலாற்றுகிறது.

ஆகையால் வங்கியின் இணக்கப் பணி, பணியை சோதிப்பதாக மட்டுமன்றி வங்கியின் நோ்மைத்திறம், நற்பெயர் என்பவற்றைப் பேணிச்செல்வதுடன் அவற்றை முன்னேற்றும் நோக்குடன் களம் சார்பான சட்டங்களுக்கு இணங்க சகல ஊழியர்களுக்கும் வங்கிக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு திட்டமிடுவதாகக் கருதப்படலாம்.

# செயன்முகாமை

## நற்பிரயோகக் கோவையுடன் இணங்கல்

### இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினாலும் இலங்கை நாணயப் பரிமாற்று ஆணைக்குழுவினாலும் விநியோகிக்கப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை மீதான நற் பிரயோகக் கோவை தொடர்பாக வங்கியின் சார்புத்தன்மை

| விடயம் | கூட்டிணைந்த ஆளுகைக் கோட்பாடு | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் நாணயப் பரிமாற்று ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட நற்பிரயோகக் கோவைக்கான உசாத்துணை | இணங்கல் மட்டம் |
|---|---|---|---|
| அ. பொது | | | |
| தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி இரண்டும் ஒரே நபராக இருந்தால், பெயர் தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி என வெளிப்படுத்தப்படுவதுடன், சிரேஸ்ட சுயாதீன பணிப்பாளர் நியமிக்கப்பட்டு இரு பதவிகளையும் இணைப்பதற்கான தீர்மானம் நியாயப்படுத்தப்படும். | அ.2.1 & அ.5.7 | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் எனும் பதவிகள் இருவேறு நபர்களினால் வகிக்கப்படுகின்றது. |
| சபை சமப்படுத்துகை | » சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்கள் அடையாளம் காணப்படுதல் வேண்டும்.<br>» நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர் சுயாதீனமானவர் என அடையாளம் காணப்பட்டால், அவ்வாறு இருந்தாலும், யாதேனும் கீழ்வரும் காரணிகள் உளதாயின், அதுபோன்ற தீர்மானங்களுக்கான காரணங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.<br>» அவர் முன்கூறப்பட்ட நியமனத்திற்கு முன் உடனடுத்துவரும் இரு ஆண்டு காலப்பகுதியில் நிறுவனத்தில், துணைக் கம்பனியில் அல்லது தாய்க் கம்பனியில் தொழில்புரிந்திருந்தால்,<br>• தற்போது அல்லது பணிப்பாளராக முன்கூறப்பட்ட நியமனத்திற்கு முன் உடனடுத்துவரும் இரு ஆண்டு காலப்பகுதியில் கம்பனியுடன், நேரடியாக அல்லது மறைமுகமாக முக்கியமான வியாபார உறவுமுறையினைக் கொண்டிருந்தால்,<br>• பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி அல்லது பிரதான முகாமைத்துவ நபரின் (மற்றும் / அல்லது அதற்கு சமமான பதவி) மிக நெருங்கிய உறவுமுறையைக் கொண்டிருந்தால்,<br>• கம்பியின் முக்கியமான பங்குதாரர் அல்லது அலுவலரின் அல்லது கம்பனியின் முக்கியமான பங்குதாரருடன் நேரடியாக தொடர்புகொண்டவர்,<br>• முதலாவது நியமனத் திகதியிலிருந்து தொடர்ச்சியாக ஒன்பது வருடம் சபையில் பணிபுரிந்த நபர்,<br>• வேறொரு கம்பனியில் அல்லது வியாபாரத்தில் தொழில்புரியும் நபர் எனில், | அ.5.5 | 1961ம் ஆண்டு 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் சபையின் பணிப்பாளர்களை நியமிப்பதற்கான அதிகாரம் விடயத்திற்கு பொறுப்பாக உள்ள அமைச்சரிடம் உள்ளது. |

| விடயம் | கூட்டிணைந்த ஆளுகைக் கோட்பாடு | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் நாணயப் பரிமாற்று ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட நற்பிரயோகக் கோவைக்கான உசாத்துணை | இணங்கல் மட்டம் |
|---|---|---|---|
| சபை சமப்படுத்துகை | • எந்தக் கம்பனியில் ஏனைய பணிப்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள் பணியாற்றுகின்றனர் அல்லது பணிப்பாளர்களாக இருக்கின்றனர் ; அல்லது<br>- எந்தக் கம்பனியில் ஏனைய பணிப்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள் முக்கியமான பங்கினை அல்லது வியாபார உறவுமுறையினை வைத்திருக்கின்றனர்; அல்லது<br>- அந்தக் கம்பனி முக்கியமான பங்குகளை வைத்திருக்கும் அல்லது வியாபாரத்தொடர்புகள்.<br>• இன்னொரு கம்பனியின் பணிப்பாளர் எனில்<br>- எந்தக் கம்பனியில் ஏனைய பணிப்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள் பணியாற்றுகின்றனர் அல்லது பணிப்பாளர்களாக இருக்கின்றனர் ; அல்லது<br>- அந்தக் கம்பனி இந்தக் கம்பனியுடன் எந்த வியாபார உறவுகளைப் பேணுகின்றது ; அல்லது<br>• மற்றைய கம்பனியில் அல்லது வியாபாரத்தில் முக்கியமான உறவுமுறை பங்குகளைக் கொண்டிருப்பின்,<br>- எந்தக் கம்பனியில் ஏனைய பணிப்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள் பணியாற்றுகின்றனர் அல்லது பணிப்பாளர்களாக இருக்கின்றனர் மற்றும் ∴அல்லது<br>- கம்பனியுடன் வியாபாரத் தொடர்புகளை அல்லது முக்கியமான பங்குகளை வைத்திருக்கின்றது.<br>ஒரு பணிப்பாளர் சுயாதீனமானவராக கருதப்படமாட்டார். | | |
| சபை சமப்படுத்துகையின் தொடர்ச்சி | | | |
| நியமனக் குழு | தலைவர் மற்றும் நியமனக் குழு அங்கத்தவர்கள் அடையாளம் காணப்படுதல் வேண்டும். | அ.7.1 | இணங்குகின்றது. |
| புதிய பணிப்பாளர்களின் நியமனம் | » புதிய பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டால், கீழ்வரும் விபரங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.<br>» ஒவ்வொரு பணிப்பாளர் தொடர்பாகவும் சுருக்கமான பொழிப்பு<br>» அவர்களுக்குரிய தொழிற்பாட்டு பரப்புகளில் அவரது நிபுணத்துவம்.;<br>» பணிப்பாளர் வேறு கம்பனிகளில் பணிப்பாளராக பணியாற்றும் அல்லது சபை அங்கத்துவத்தினைக் கொண்டிருக்கும் கம்பனிகளின் பெயர்கள்.; மற்றும்<br>» அந்தப் பணிபாளர் சுயாதினமாகக் கருதப்பட்டாலும். | அ.7.3 | இணங்குகின்றது.<br>மக்கள் வங்கியின் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். |

| விடயம் | கூட்டிணைந்த ஆளுகைக் கோட்பாடு | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் நாணயப் பரிமாற்று ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட நற்பிரயோகக் கோவைக்கான உசாத்துணை | இணங்கல் மட்டம் |
|---|---|---|---|
| சபையின் செயலாற்கை மதிப்பீடு | எவ்வாறு செயலாற்றுகை மதிப்பீடு நடாத்தப்பட்டது என்பது வெளிப்படுத்தப்படல் வேண்டும். | அ.9.3 | அதன் செயலாற்றுகையையும் செயற்திறனையும் மதிப்பீடு செய்வதற்குரிய நடவடிக்கைகளை வருடம் தோறும் நடாத்துகின்றது. |
| சபை சார்ந்த வெளிப்படுத்தல்கள் | ஒவ்வொரு பணிப்பாளர் தொடர்பாகவும் கீழ்வரும் விபரங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.<br>» பதவி, தகைமை மற்றும் சுருக்கமாக சுருக்கக் குறிப்பு;<br>» அந்தப் தொழிற்பாட்டுப் பரப்பு தொடர்பான அவருடைய நிபுணத்துவம்;<br>» வங்கியின் ஏனைய பணிப்பாளர்களுடன் உள்ள நெருங்கிய உறவுமுறை மற்றும் / அல்லது முக்கியமான வியாபார உறவு;<br>» அவர் நிறைவேற்றுத்தர, நிறைவேற்றுத்தரமல்லாத மற்றும் / அல்லது சுயாதீனப் பணிப்பாளரா என்பது பற்றி;<br>» பணிப்பாளர் பணிப்பாளராக செயலாற்றும் இலங்கையின் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பெயர்கள்;<br>» எந்தப் பணிப்பாளர் ஒரு பணிப்பாளராக பணியாற்றுகின்றாரோ, அவர் குழுவிலுள்ள ஒரு கம்பனியின் பணிப்பாளர் பதவியை வைத்திருப்பார் எனில் அவர்களுடைய பெயர்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.; அந்தக் கம்பனிகளில் அவர் ஏனைய பணிப்பாளர் பதவியை வைத்திருப்பாராயின் இது போதுமானது.;<br>» அந்த வருடத்தில் நடைபெற்ற சபைக் கூட்டங்களுக்கு அவர் வருகைகளின் எண்ணிக்கை / வீதம்;<br>» ஒவ்வொரு பணிப்பாளரினாலும் பட்டியலிடப்பட்ட மற்றம் பட்டியலிடப்படாத கம்பனிகளில் நிறைவேற்றுதரத்தில் அல்லது நிறைவேற்று தரம் அல்லாத சபைப் பணிப்பாளரா வகிக்கும் மொத்த சபை ஆசனங்களின் எண்ணிக்கை;<br>» பணிப்பாளர் தலைவராக அல்லது அங்கத்தவராக இருக்கும் சபைகளின் பெயர்கள்; மற்றும்<br>» அந்த வருடத்தில் நடைபெற்ற சபைக் கூட்டங்களுக்கு அவர் வருகைகளின் எண்ணிக்கை / வீதம்.. | அ.10.1 | இணங்குகின்றது. இது தொடர்பான விரிவான தகவல்கள் 2015ம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| விடயம் | கூட்டிணைந்த ஆளுகைக் கோட்பாடு | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் நாணயப் பரிமாற்று ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட நற்பிரயோகக் கோவைக்கான உசாத்துணை | இணங்கல் மட்டம் |
|---|---|---|---|
| ஊதியத்தின் வெளிப்படுத்துகை | » ஊதியக் கொள்கைக் கூற்று;<br>» முழுமையான சபை ஊதியத்தின் விபரங்கள்;<br>» ஊதியக் குழுவில், ஊதியக் கொள்கை கூற்றில் மற்றும் நிறைவேற்றுத் தர மற்றும் நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களுக்கு மொத்த ஊதியம் தீர்ப்பனவு செய்யப்பட்டதில் உள்ள பணிப்பாளர்களின் பெயர்கள் (அல்லது குழுக் கம்பனியாக இருந்து தாய்க் கம்பனியாக இருந்தால்) | ஆ.3 & B.3.1 | பணிப்பாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய கட்டணம் / கொடுப்பனவுகள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் தீர்மானிக்கப்படும். |
| பிரதான மற்றும் முக்கியமான பரிமாற்றங்கள் | கம்பனியினால் மேற்கொள்ளப்படும் அனைத்து முக்கியமான பரிமாற்றங்களும் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். அத்துடன், சார்புக் கம்பனியுடன், பாரிய சார்பு கட்சி பரிமாற்றங்களை மேற்கொள்வற்கு அல்லது உடன்பாட்டுக்கு வருவதற்கு முன்னர், அதற்கான காரணம் மற்றும் அந்தப் பரிமாற்றத்தின் முக்கியமான காரணிகள் அனைத்தும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | இ.3 & இ.3.1 | இணங்குகின்றது. |
| கணக்காய்வுக் குழு | » கணக்காய்வுக் குழு அங்கத்தவர்களின் பெயர்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்..<br>» கணக்காய்வாளர்களின் சுயாதீனம் தீர்மானிப்பதற்கான அடிப்படை ஆகும். | னு.3.4 | கணக்காய்வுக் குழு அங்கத்தவர்களின் பெயர்கள் கணக்காய்வுக் குழு சபை அறக்கையில் 131ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் அரசியலமைப்புக்கு அமைவாக வங்கியின் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் நாயகம் இருப்பார். கணக்காய்வாளர் நாயகத்தின் சுயாதீனத்தன்மை அரசியலமைப்பினால் உறுதி செய்யப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் நாயகத்தினால் வங்கியின் வெளிவாரி கணக்காய்வுகளை மேற்கொள்வதற்காக கணக்காளராக கேபிளம்ஜி கணக்காளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். |
| வியாபார ஒழுக்கவியல் மற்றும் நடத்தைக் கோவை | » வங்கி பணிப்பாளர்களுக்கான வியாபார ஒழுக்கவியல் மற்றும் நடத்தை கோவை மற்றும் பிரதான ஊழியர் முகாமைத்துவக் கோவை என்பவற்றைக் கொண்டுள்ளதா என வெளிப்படுத்தல் வேண்டும்.<br>» அவர்கள் அந்த கோவையை இணங்கி ஒழுகுவதற்கான உடன்பாட்டு பிரகடணத்தை வெளியிடுமல் வேண்டும.<br>» அவர் இந்தக் கோவைகளின் ஏற்பாடுகளை மீறவில்லை என்பதை அறிந்துள்ளார் எனத் தலைவர் சான்றுபடுத்தல் வேண்டும. | னு.4.1 ரூ<br>னு.4.2 | இணங்குகின்றது. வங்கி பணிப்பாளர்களுக்கான் நடத்தை கோவையையும் ஊழியர்களுக்கான ஒழுக்கவியல் கோவையையும் கொண்டுள்ளது. |

| விடயம் | கூட்டிணைந்த ஆளுகைக் கோட்பாடு | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் நாணயப் பரிமாற்று ஆணைக்குழுவினால் விதியோகிக்கப்பட்ட நற்பிரயோகக் கோவைக்கான உசாத்துணை | இணங்கல் மட்டம் |
|---|---|---|---|
| நிறுவனத் தொடர்ச்சி | உதவும் கருதுகோள் மற்றும் தேவையான தகைமைகளுடன் வங்கி தொடர்ச்சியாக அக்கறையுள்ளது என்பதை அறிக்கையிடல் வேண்டும். | னு.1.5 | வங்கி நிறுவனத்தொடர்ச்சியுடையது. |
| பங்குதாரர்களுடன் தொடர்பாடல் | கம்பனி அதன் கொள்கை மற்றும் பங்குதாரர்களுடன் மேற்கொள்ளும் தொடர்பாடல் பொறிமுறை தொடர்பாக வெளிப்படுத்தல் வேண்டும்.<br>மேற்குறித்த கொள்கை மற்றும் பொறிமுறையை எவ்வாறு அமுல்படுத்துகின்றது என்பதை கம்பனி வெளிப்படுத்தல் வேண்டும்.<br>அவ்வாறான தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கான நபரின் விபரங்களை கம்பனி வெளிப்படுத்தல் வேண்டும்.<br>பங்குதாரர்களின் பிரதான பிரச்சனைகள் மற்றும் நலன் தொடர்பாக பணிப்பாளர்கள் அறிந்துகொள்வதற்கு செயல்முறையொன்று இருத்தல் வேண்டும் என்பதுடன், அந்த செயன்முறை கம்பனியினால் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.<br>பங்குதாரர்களின் விடயங்களை கையாளுவதற்கான நபரை கம்பனி தீர்மானித்தல் வேண்டும்.<br>பங்குதாரர்களின் விடயங்களுக்கு பதிலளித்த செயன்முறை வெளிப்படுத்தப்படல் வேண்டும். | இ.2.2 , இ.2.3 , இ.2.4 , இ.2.5, இ.2.6, இ.2.7 | இணங்குகின்றது. வங்கி அனுமதியளிக்கப்பட்ட தொடர்பாடல் கொள்கையைக் கொண்டுள்ளது. |
| ஆ. ஊழிய குழு அறிக்கை | | | |
| ஊழியக் குழு அங்கத்தவர்கள் | ஊழியக் குழுவின் அங்கத்தவர்களின் பெயர்கள் ஊழிய குழு அறிக்கையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | ஆ.1.3 | இணங்குகின்றது. ஊழியக் குழுவின் அங்கத்தவர்களின் பெயர்கள் ஊழிய குழுச் சபை அறிக்கையில் இந்த வருடாந்த அறிக்கையில் 132ம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.. |

| விடயம் | கூட்டிணைந்த ஆளுகைக் கோட்பாடு | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் நாணயப் பரிமாற்று ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட நற்பிரயோகக் கோவைக்கான உசாத்துணை | இணங்கல் மட்டம் |
|---|---|---|---|
| இ. பணிப்பாளர்களின் அறிக்கை | | | |
| பணிப்பாளர்களின் அறிக்கை | பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கீழ்வரும் பிரகடனங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.;<br>» சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு முரணான எந்தவொரு நடவடிக்கையிலும் கம்பனி ஈடுபடவில்லை.;<br>» கம்பனி சம்பந்தப்படும் அனைத்து முக்கியமான தேவை ஒப்பந்தங்கள் மற்றும் முக்கியமான விடயங்களில் வாக்குகளை அளிக்காமல் தவிர்த்தால் அவை அனைத்ததையும் பணிப்பாளர்கள் பிரகடனப்படுத்த வேண்டும்.;<br>» பங்குதாரர்களுக்கு சமமான சேவை வழங்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் கம்பனி மேற்கொள்ளல் வேண்டும்.;<br>» உதவும் கருதுகோள் அல்லது தேவையான தகைமைகளுடன் வியாபரம் தொடர்ச்சியாக அக்கறையுள்ளது; மற்றும்<br>» நிதியியல், தொழிற்பாடு மற்றும் இணங்கல் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் என்பவற்றை பூர்த்திசெய்யும் வகையில் உள்ளக கட்டுப்பாடு மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். அத்துடன், அவர்களுமைய செயற்திறன் மற்றும் வெற்றிகரமான சேர்க்கை என்பவற்றுக்கு நியாயமான உறுதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். | ஈ.1.2 | இணங்குகின்றது. |
| ஈ. நிதியில் கூற்று | | | |
| நிதியியல் கூற்றுகள் | » நிதியியல் கூற்றுக்களை தயாரித்து வழங்குவதற்கான பொறுப்பு கூற்றை பணிப்பாளர் சபை உட்படுத்தல் வேண்டும்.<br>» கணக்காய்வாளர் நாயகம் அவர்களுடைய அறிக்கையிடும் பொறுப்பு தொடாபாக கூற்றினை வழங்கல் வேண்டும். | ஈ.1.3 | இணங்குகின்றது. |
| சார்பு நிறுவன பரிமாற்றல்கள் | இலங்கை கணக்கியல் நியமங்கள், நாணய பரிமாற்று ஆணைக்குவின் ஒழுங்குவிதிகள் மற்றும் சார்புடைய ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு சார்பு நிறுவனம் மற்றும் சார்பு நிறுவனப் பரிமாற்றங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | ஈ.1.7 | இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக சார்பு நிறுவனப் பரிமாற்றங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. |

| விடயம் | கூட்டிணைந்த ஆளுகைக் கோட்பாடு | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் நாணயப் பரிமாற்று ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட நற்பிரயோகக் கோவைக்கான உசாத்துணை | இணங்கல் மட்டம் |
|---|---|---|---|
| உ. முகாமைத்துவ அறிக்கை | | | |
| முகாமைத்துவ அறிக்கை | குறைந்தபட்சம் கீழ்வரும் பிரச்சனைகளைக் கலந்துரையாடி "முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு அறிக்கை" யினை உட்படுத்தல் வேண்டும்.:<br>» கைத்தொழில் கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திகள்;<br>» வாய்ப்புகளும் அச்சுறுத்தல்களும்;<br>» இடர்களும் அக்கறையும்;<br>» உள்ளக கட்டுப்பாடு மற்றும் அவர்களின் போதுமை;<br>» வங்கியினால் மேற்கொள்ளப்படும் சமூக மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள்;<br>» நிதியியல் செயலாற்றுகை;<br>» மனித வளம் / கைத்தொழில் உறவுகளில் முக்கியமான அபிவிருத்திகள்; மற்றும்<br>» எதிர்கால சுவீட்சம். | ஈ.1.4 | இணங்குகின்றது. |
| ஊ. கூட்டிணைந்த ஆளுகை அறிக்கை | | | |
| கூட்டிணைந்த ஆளுகை அறிக்கை | வங்கி கோவையின் கோட்பாடுகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு இணங்கிய நடத்தையை வெளிப்படுத்தல் வேண்டும். | ஈ.5.1 | இணங்குகின்றது.. |
| ஏ. கணக்காய்வு குழு அறிக்கை | | | |
| கணக்காய்வு குழு அறிக்கை | ஆரம்பிக்கப்பட்ட பணிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்டல் வேண்டும். | ஈ.3.3 | இணங்குகின்றது. |
| உள்ளக கட்டுப்பாட்டுக் கூற்று | | | |
| உள்ளக கட்டுப்பாட்டுக் கூற்று | குறைந்தபட்சம் கீழ்வருவன வெளிப்படுத்தப்படல் வேண்டும்.<br>(அ) செயன்முறையை சபை பொழிப்புச் செய்தல் வேண்டும். இது வடிவமைப்பை மீளாய்வு செய்பவதற்கும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைக்கும் பிரயோகிக்கப்படும்.<br>(ஆ) வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள யாதேனும் முக்கியமான பிரச்சனைகளின் முக்கியமான உள்ளக கட்டுப்பாட்டு தன்மையுடன் தொடர்புகளுக்கு பிரயோகிக்கப்படும் செயன்முறை வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.<br>(இ) உள்ளகக் கட்டுப்பாட்டுக்கான கம்பனியின் முறைமை மற்றும் அதன் வடிவமைப்பு மற்றும் செயற்திறனை மீளாய்வு செய்தல் அதன் பொறுப்பு என்பதனை சபை வெளிப்படுத்தல் வேண்டும். அத்துடன், வியாபார நோக்கங்களை அடைவதற்கு வரும் இடர்களை நீக்குவதற்கு உகந்த வகையில் முறைமை வடிவமைக்கப்பட்டுளளது எனவும், விளக்குதல் வேண்டும். | ஈ.1.3 & ஈ.2.3 | இணங்குகின்றது.<br>148 – 149 ம் பக்கங்களில் உள்ள உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர் கூற்றினை வாசிக்கவும். |

| விடயம் | கூட்டிணைந்த ஆளுகைக் கோட்பாடு | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் நாணயப் பரிமாற்று ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட நற்பிரயோகக் கோவைக்கான உசாத்துணை | இணங்கல் மட்டம் |
|---|---|---|---|
| | (ஈ) இடர் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டுக்குரியதாக இருந்தாலும், இல்லாவிட்டால் தொடர்ச்சியாக சபையினால் மீளாய்வு செய்யப்பட்டதாக இருந்தாலும், கம்பனியினால் எதிர்கொள்ளப்படும் முக்கியமான இடர்களை அடையாளம் காணுதல், மதிப்பிடுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தலுக்கான செயன்முறைகள் செயற்படுத்தப்படுகின்றது என்பதை பணிப்பாளர்கள் வெளிப்படுத்துதல் வேண்டும்.<br>(உ) கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயற்திறனை மீளாய்வு செய்வதற்கு முடியாமல் போனால் அதனை சபை வெளிப்படுத்தல் வேண்டும்.<br>(ஊ) வெளிப்படுத்துகை கருத்து நிறைந்ததாகஈ உயர் மட்டத் தகவல்களைக் கொண்டுள்ளதை மற்றும் தவறான விளக்கத்தை தரவில்லை என்பதை சபை உறுதிப்படுத்தல் வேண்டும்.<br>(எ) பிரதான துணை நிறுவனங்கள், கூட்டு முயற்சிகள் மற்றும் பங்கு நிறுவனங்களுக்கு இந்த வழிகாட்டல்கள் பிரயோகிக்கப்படாவிட்டால், குழுவின் ஒரு பகுதியாக அந்த விடயங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.<br>(ஏ) சபையின் உறுதிப்படுத்தல்: அவர்களுடைய நிதியியல் பொறுப்புகள் தொடர்பாக நியாயமான காப்புறுதியை வழங்கும் வகையில் நிதியியல் அறிக்கையிடும் முறைமை உள்ளதுடன் வெளிவாரித் தேவைகளுக்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்று பிரயோகிக்கக்கூடிய கணக்கியல் நியமங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு இணக்கமாக உள்ளது என்பதை அதன் அறிக்கை ஊடாக சபை உறுதிப்படுத்தல் வேண்டும்.<br>(ஐ) நிதிக்கூற்றைக் கையொப்பமிடும் பணிபாபாளர்கள் மற்றும் கணக்காய்வுக் குழுவின் தலைவரினால் கையொப்பமிடப்படல் வேண்டும். | | |
| I. நிலைத்திருக்கை அறிக்கையிடல் | | | |
| நிலைத்திருக்கை அறிக்கையிடல் | கீழ்வரும் தறுவாய்களில் நிலையான வியாபார அபிவிருத்திக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வெளிப்படுத்தல்.;<br>» நிலையான பொருளாதார செயலாற்றுகை;<br>» சுற்றாடல்;<br>» ஊழியர் பழக்கங்கள்;<br>» சமூகங்கள்;<br>» தயாரிப்பு பொறுப்பு;<br>» பங்குதாரர் அடையாளங்கள், பங்களிப்புகள் மற்றும் செயற்திறன் மிக்க தொடர்பாடல்கள்;<br><br>நிலையான அறிக்கையிடல் மற்றும் வெளிப்படுத்துகை என்பன கம்பனியின் அறிக்கையிடும் செயன்முறைகள் மற்றும் வழமையான அடிப்படையில் வழக்கப்படுத்தப்படுதல் வேண்டும். | G.1 to G.107 | இணங்குகின்றது.<br>50 – 96ம் பக்கங்களில் உள்ள பெறுமதி உருவாக்கல் பிரிவை வாசிக்கவும். |

# செயன்முகாமை

## அகக் கட்டுப்பாடு சம்பந்தமான பணிப்பாளர்களின் கூற்று



### பொறுப்புடைமை

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரையின் பிரிவு 3(8)(ii)(ஆ) இற்கமைவாக, மக்கள் வங்கியின் நிதி அறிக்கையிடல் பற்றிய அகக் கட்டுப்பாடுகள் சம்பந்தமான இவ்வறிக்கையை பணிப்பாளர் சபை சமர்ப்பிக்கிறது.

வங்கியில் அமுலிலுள்ள நிதி அறிக்கையிடல் பற்றிய அகக் கட்டுப்பாட்டு பொறிமுறைமையின் போதியதாந் தன்மையும் பயனுறுதியும் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். அவ்வாறான போதியதாந் தன்மைகளைக் கருத்திற்கொண்டு, வங்கியின் வியாபாரங்களை முகாமைசெய்த அடிப்படையொன்றின் பேரில் ஆபத்துக்களுடன் எதிர்பார்த்த நன்மைகள் சமநிலையடைய வேண்டும் என்பதை வங்கி அடையாளம் காண்பதுடன், அதன்படி வங்கியின் ஆபத்து நாட்டத்திற்கு உட்படும் வரம்புகளும் குறிகாட்டிகளும் தொடர்பில் ஏதும் மாற்றங்கள் இருக்குமாயின், அவற்றை சிறப்பாக எடுத்துக்காட்டத் துணிந்த அகக் கட்டுப்பாட்டு முறைமைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் நோக்கும்போது, அகக் கட்டுப்பாட்டு முறைமை, நிதித் தகவல்கள் மற்றும் அறிக்கைகள் குறித்தும் நிதிசார் நட்டங்களும் மோசடிகளும் குறித்தும் முழுமையான நிலைமையொன்றாக இல்லாதவிடத்தும், யாதேனும் ஒரு நியாயமான மட்டத்தில் பாதுகாப்பொன்று வழங்கப்படுவதாக புலப்படுகிறது.

வங்கி எதிர்நோக்க நேரிட்ட முக்கிய நட்ட ஆபத்துக்களை அடையாளங்காணும் மதிப்பீட்டு மற்றும் முகாமைத்துவத்தின் தொடர்ச்சியான செயன்முறையொன்று பணிப்பாளர் சபையினால் நிறுவப்பட்டுள்ளதுடன், வியாபாரச் சூழலிலும் ஒழுங்குறுத்துகைக்கான வழிகாட்டுநெறிகள் ஏதும் மாற்றங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் அகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மேம்படுத்துவதும் இச்செயன்முறையில் அடங்கும். இச்செயன்முறை, பணிப்பாளர் சபையினால் அடிக்கடி பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட அகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டுநெறிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய அது மேற்கொள்ளப்படுகிறது. மேற்போந்த வழிகாட்டுநெறிகளில் அடங்கும் அகக் கட்டுப்பாட்டு முறைமையை மதிப்பீடுசெய்வதற்கான கணக்கீட்டுக் கோட்பாடுகளைக் கருத்திற்கொண்டு நிதி அறிக்கையிடல் பற்றிய அகக் கட்டுப்பாட்டு முறைமைகள் சபையினால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அமுலிலுள்ள அகக் கட்டுப்பாட்டு முறைமை சிறப்பான மட்டத்திலுள்ளது என்பதும், நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பில் நியாயமான உறுதிப்பாட்டை வழங்கப் போதியதாக உள்ளது என்பதும், அதேபோல் வெளி அலுவல்களுக்கு நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கும் ஒழுங்குறுத்துகைசார்ந்த தேவைப்பாடுகளுக்கும் அமைவாக உள்ளது என்பதும் பணிப்பாளர் சபையின் அபிப்பிராயமாகும்.

நட்ட ஆபத்துக்கள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் குறித்த பணிப்பாளர் சபையின் கொள்கைகளையும் நடவடிக்கைமுறைகளையும் அமுல்படுத்தும்போது எதிர்நோக்கும் நட்ட ஆபத்தை அடையாளங்கண்டு அவற்றை மதிப்பீடுசெய்வதன்மூலமும் சொல்லப்பட்ட நட்ட ஆபத்தைக் குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் ஏற்ற அகக் கட்டுப்பாட்டு முறைமைகளைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் கண்காணிப்பதன் மூலமும் முகாமைத்துவம் பணிப்பாளர் சபைக்கு உதவுகிறது.

### நிதி அறிக்கையிடல் பற்றிய அகக் கட்டுப்பாட்டு முறைமையின் உருவரைத்திட்டமும் பயனுறுதி பற்றிய பரிசீலனையின்போது பயன்படுத்திய செயன்முறையின் முக்கிய பண்புகளும்

நிதி அறிக்கையிடல் பற்றிய அகக் கட்டுப்பாட்டு முறைமையின் போதியதாந்தன்மையும் நேர்மைத்திறமும் குறித்த பரிசீலனைக்காக தாபிக்கப்பட்டுள்ள முக்கிய செயன்முறைகள் பின்வருமாறு:

- வங்கியில் அகக் கட்டுப்பாட்டுக்கான பயனுறுதியுள்ள பொறிமுறையை உறுதிசெய்வதற்கு பணிப்பாளர் சபையினால் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.்.பொது முகாமையாளர் தலைமையிலான தாபன முகாமைத்துவத்தின் நியமனம் பணிப்பாளர் சபை தொடக்கம் ஏனைய படிநிலைகள் வரை அதிகார ஒப்படைப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
- வங்கி எதிர்நோக்கிய நட்ட ஆபத்துக்களை அடையாளம் காண்பதன்மூலம் நட்ட ஆபத்துக்களும் கட்டுப்பாடுகளும் குறித்த பணிப்பாளர் சபையின் கொள்கைகளையும் நடவடிக்கைமுறைகளையும் அமுல்படுத்துவதில் இவ்வாறான நட்ட ஆபத்துக்களைக் குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உகந்த அகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், நெறிப்படுத்துதல், ஒழுங்குறுத்தும்போது முகாமைத்துவம் பணிப்பாளர் சபைக்கு உதவும்.

  கடன், சந்தை, செயற்பாட்டு நட்ட ஆபத்துக்கள் உட்பட பிரதான நட்ட ஆபத்துக்களை அடையாளங்காணல், கட்டுப்படுத்துதல், அவை குறித்து அறிக்கையிடுதல் ஆகியவற்றுக்கான முறைமைகளும் நடவடிக்கைமுறைகளும் அமுலில் உள்ளன. சபையின் ஒருங்கிணைந்த நட்ட ஆபத்து முகாமைத்துவக் குழு (டீஐசுஆஇ) இவ்வாறான நட்ட ஆபத்துக்களுக்கான வெளிப்பாட்டைக் கண்காணிக்கிறது.
- குழு, ஏற்ற முகாமைத்துவக் குறிகாட்டிகளும் முகாமைத்துவத் தகவல்களும் ஊடாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளும் அடிப்படையொன்றின் பேரில் வங்கியின் சகல நட்ட ஆபத்துக்களையும் மதிப்பீடு செய்வதுடன், வங்கியின் விசேட நட்ட ஆபத்துக்களை எதிர்நோக்குவதற்கும் அளவுரீதியான மற்றும் பண்புரீதியான நட்ட ஆபத்து எல்லைகளில் ஏற்படக்கூடிய நட்ட ஆபத்துக்களை முகாமைசெய்வதற்கும் முகாமைத்துவ மட்டத்தில் சகல குழுக்களதும் அளவுரீதியான மற்றும் பயனுறுதியுள்ள பரிசீலனை மேற்கொள்ளப்படுகிறது. அழுத்தப் பரிசோதனையும் நட்ட ஆபத்து உபகரணப் பலகையை பரிசீலித்தலும் இதில் அடங்கும். நட்ட ஆபத்துக்கள், ஒருங்கிணைந்த நட்ட ஆபத்து முகாமைத்துவக் குழுவினால் (டீஐசுஆஇ) தீர்மானிக்கப்பட்ட தூரநோக்குள்ள எல்லைகளைத் தாண்டிய ஒரு மட்டத்திலுள்ள குறித்துரைக்கப்பட்ட நட்ட ஆபத்துக்களின் பாதிப்பைக் குறைப்பதற்கு அவற்றைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் குழுவினால் எடுக்கப்படும்.
- வங்கியின் அகக் கணக்காய்வுப் பிரிவு, தொடர்ச்சியான அடிப்படையொன்றின் மீது மாதிரிகளையும் நடவடிக்கைமுறைகளையும் உபயோகித்து அனுமதித்த கொள்கைகளும் நடவடிக்கைமுறைகளும் மீதான இணக்கத்தையும் அகக் கட்டுப்பாட்டு முறைமையின் பயனுறுதியையும் பரிசோதிக்கின்றது. மேலும், இணக்கமற்ற சந்தர்ப்பங்கள் ஏதும்

இருக்குமாயின், அது குறித்து விசேடமாக வலியுறுத்தப்படுகிறது. சகல அலகுகளும் கிளைகளும் சம்பந்தமாக அகக் கணக்காய்வு ஒப்படைகள் இடம்பெறுவதுடன், அத்தகைய கணக்காய்வுகளின் தடவைகளின் எண்ணிக்கை மதிப்பிடப்பட்ட நட்ட ஆபத்துக்களின் மட்டத்தின்படி தீர்மானிக்கப்படும். சுயாதீனமானதும் செயல் இலக்குடையதுமான அறிக்கையொன்றை வழங்குவதே இதன் நோக்கமாகும். வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை பரிசீலனைக்கு உட்படுத்தி அனுமதிக்கும் பணியும் சபை கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்படுகிறது. அகக் கணக்காய்வு அறிக்கைகள், குறித்த கூட்டங்களில் பரிசீலனைக்கு உட்படுத்தும் பொருட்டு சபை கணக்காய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

» வங்கியின் அகக் கணக்காய்வுப் பிரிவு, வெளிவாரி கணக்காய்வாளர்கள், ஒழுங்குறுத்துகை அதிகாரிகள் மற்றும் முகாமைத்துவத்தினால் அடையாளங்காணப்பட்ட அகக் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகள் சபை கணக்காய்வுக் குழுவினால் பரிசீலிக்கப்படுவதுடன், நட்ட ஆபத்து முகாமைத்துவம் மற்றும் அகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதியதாந்தன்மையும் பயனுறுதியும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகிறது. குழு கணக்காய்வின் நோக்கெல்லையும் அதன் பண்புத்தரமும் மீது விசேட கவனத்துடன் அகக் கணக்காய்வுப் பணிகளையும் பரிசீலனைக்கு உட்படுத்துகிறது. சபை கணக்காய்வுக் குழு வங்கி மீது பாதிப்புச்செலுத்தும் பிரதான நட்ட ஆபத்துத் துறைகளின் நிலைமையை பரிசீலனையின்கீழ் வைத்திருப்பதுடன், அமுலிலுள்ள குறைப்பு நடவடிக்கைகள் பொருத்தமானவையா என்பது குறித்து ஆராயும். சபை கணக்காய்வுக் குழுவின் சகல அறிக்கைகளும் பணிப்பாளர் சபையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

» நிதி அறிக்கையிடல் பற்றிய அகக் கட்டுப்பாட்டு முறைமையை மதிப்பீட்டுக்கு உட்படுத்தும்போது வங்கியின் அகக் கணக்காய்வுப் பிரிவு, வங்கியின் நிதிக் கூற்றுகளில் முக்கிய கணக்குகளுடனும் வெளிப்பாடுகளுடனும் இணைந்த சகல நடவடிக்கைமுறைகளும் கட்டுப்பாடுகளும் ஒருங்குவைக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து, இவற்றை முன்னெடுத்துச்செல்லும் அடிப்படையொன்றின் பேரில் உருவரைத் திட்டத்தின் பொருத்தப்பாட்டுக்கும் பயனுறுதிக்கும் அப்பிரிவினால் அவதானிக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டது.

» வருடாந்த கணக்குகளைத் தயாரிப்பதற்கு வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை இலங்கை கணக்கீட்டு நியமங்களும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அறிக்கையிடல் தேவைகளும் மீதான அறிக்கையிடல் படிவங்களும் வழிகாட்டுநெறிகளும் மீதமைந்து விருத்திசெய்யப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தப்படுகிறது. இ.க.நி. மற்றும் இலங்கை நிதிப் பிரமாணங்களை உள்ளடக்கி இலங்கை கணக்கீட்டு நியமங்களைப் பயன்படுத்தியதுடன் அடையாளங்காணல், அளவை மற்றும் வகையீடு, வெளிப்படுத்தல் குறித்த புதிய தேவைகளைப் பின்பற்றுவதற்கான செயன்முறை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

» அதேபோல், SLSAS 3050 உறுதிப்படுத்தல் ஒப்பந்தங்கள் பற்றிய இலங்கை நியமத்தின் மீதமைந்து அகக் கட்டுப்பாட்டு முறைமை சம்பந்தமாக 2015 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டினுள் எம்மால் மேற்கொள்ளப்பட்ட கருத்துரைப்புகள் முகாமைத்துவத்தினால் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. வங்கியின் நிதிக்கூற்றுக்களில் முக்கிய கணக்குகளுடனும் வெளிப்படுத்தல்களுடனும் பிணைந்த சகல நடவடிக்கைமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் ஒருங்குசேர்த்து நடவடிக்கைமுறைக் கோவையொன்றாக விவரமான வழிகாட்டுநெறிக்கோவையொன்று விருத்திசெய்யப்பட்டதுடன், கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஆண்டில் சம்பந்தப்பட்ட தரப்புகள் கொடுக்கவாங்கல்களை அடையாளம் காண்பதற்கான கட்டுப்பாட்டு ஆவணத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைமுறைகளை விருத்திசெய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### உறுதிப்படுத்தல்

மேற்சொன்ன செயன்முறைகளின் அடிப்படையில் வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமை திட்டமிடப்பட்டுள்ளது, நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை சம்பந்தமான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவதற்கும், வெளிவாரி நோக்கங்களுக்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது, இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குறுத்துகை சார்ந்த தேவைப்பாடுகளுக்கும் ஏற்றவாறும் என்பதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகிறது.

### வெளிவாரி கணக்காய்வாளர்களின் கூற்று பற்றிய பரிசீலனை

2015 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்ட அகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்றானது வெளிவாரி கணக்காய்வாளர்களினால் பரிசீலிக்கப்பட்டது. வங்கியின் அகக் கட்டுப்பாட்டு முறைமையின் உருவரைத் திட்டத்தையும் அதன் பயனுறுதியுள்ள தன்மையையும் பரிசீலிக்கும்போது பணிப்பாளர் சபையினால் கையாளப்பட்ட செயன்முறை குறித்த தமது புரிந்துணர்வின்படி உடன்படமுடியாத ஏதும் கூற்று இருப்பதாக நம்பக் காரணமாக அமையக் கூடியவை எவையும் தமது கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என சபைக்கு அறிக்கையிட்டுள்ளது.

பணிப்பாளர் சபைக்காகவும் அதன் சார்பாகவும்,

**ஜெஹான் பி.அமரதுங்க**
*பணிப்பாளர்*
*சபை கணக்காய்வுக் குழு தலைவர்*

2016 மார்ச் மாதம் 24 ஆந் திகதி

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය எனது இல. My No. BAF/D/PB/IC/2015 ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 1st April 2016

**மக்கள் வங்கியின் அகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்றின் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உறுதிப்பாட்டு அறிக்கையை பணிப்பாளர் சபையில் சமர்ப்பித்தல்**

**அறிமுகம்**

2015 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்ட மக்கள் வங்கியின் அகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று பற்றி இவ்வறிக்கை மூலம் உறுதிப்பாடு வழங்கப்படுகிறது. இவ்வுறுதிப்பாட்டுக்கான பணிக் கடப்பாட்டை முன்னெடுக்கும்போது, பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனமொன்றினால் எனக்கு உதவியளிக்கப்பட்டது.

**முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரையின் பிரிவு 3(8)(ii)(ஆ) இற்கமைய வெளியிடப்பட்ட "அகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்றின் மீது வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டியை" தயார்செய்து சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்புடையதாகும்.

**எனது பொறுப்பும் SLSAE 3050 உடனான இணக்கமும்**

நிறைவேற்றிய பணி மீதமைந்த கூற்று பற்றி பணிப்பாளர் சபைக்கு அறிக்கையொன்றை வழங்குவதே எனது பொறுப்பாகும். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட அகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்றின் மீது வங்கிகளுக்கான உறுதிப்பாட்டு அறிக்கையை SLSAE 3050 உறுதிப்படுத்துவதற்கான பணிக்கடப்பாடு பற்றிய இலங்கை நியமங்களுக்கமைய எனது பணிக்கடப்பாட்டை நான் நிறைவேற்றினேன்.

**நிறைவேற்றிய பணி பற்றிய பொழிப்பு**

கூற்றுக்கு பணிப்பாளர்களினால் அவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணம் உதவியதா என்பதை மதிப்பீடு செய்வதற்கும் வங்கியின் அகக் கட்டுப்பாட்டு முறைமையை பரிசீலிக்கும்போது பணிப்பாளர்களினால் கையாளப்பட்ட செயன்முறையை குறிப்பாக பிரதிபலிப்பதற்கும் எனது பணிக்கடப்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்குறிக்கோளை எய்துவதற்கு பின்வரும் நடவடிக்கைமுறைகளைப் பின்பற்றி பொருத்தமான சாட்சிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன:

- அகக் கட்டுப்பாட்டின் உருவரைத்திட்டமும் பயனுறுதியும் குறித்த அவர்களின் பரிசீலனைக்காக பணிப்பாளர் சபையினால் விதித்துரைக்கப்பட்ட செயன்முறை குறித்த புரிந்துணர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக ஆண்டறிக்கையில் பணிப்பாளர்களினால் வெளியிடப்பட்ட கூற்றுடன் அவர்களின் புரிந்துணர்வை ஒப்பிடுதல்.
- பணிப்பாளர்களினால் வெளியிடப்பட்ட கூற்றுக்கு உதவியாக அமையும் பொருட்டு அவர்களினால் தயாரிக்கப்பட்ட ஆவணவாக்கலுக்கு உரிய கூற்றை பரிசீலனை செய்தல்.
- நிதிக் கூற்றுகளின் கணக்காய்வை மேற்கொள்ளும்போது வங்கி பற்றி நான் பெற்றுக்கொண்ட எனது அறிவையும் பணிப்பாளர்களினால் வெளியிடப்பட்ட கூற்றையும் தொடர்புபடுத்துதல்.
- பணிப்பாளர் சபை தொடர்புபட்ட சபை குழுக் கூட்டறிக்கைகளை பரிசீலனைக்கு உட்படுத்தல்.
- அகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்றின் மூலம் பரிசீலனைக்கு உட்படும் ஆண்டு உள்ளடக்கப்படுகின்றதா அத்துடன் போதியதான செயன்முறைகள் எழக்கூடிய முக்கிய விடயங்கள் எவற்றையும் அடையாளம் காண்பதற்கு அமுலில் உள்ளதா என்பதைக் கருத்திற்கொள்ளல்.
- பணிப்பாளர் சபையில் சமர்ப்பிப்பதற்கு அகக் கட்டுப்பாடு பற்றிய கூற்று உள்ளிட்ட ஆண்டறிக்கையை கருத்திற்கொண்டு அனுமதிக்கும் கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ளல்.
- வேறு போதியதான கணக்காய்வுச் சான்றுகள் இருப்பதாக நியாயமான முறையில் எதிர்பார்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் அகக் கட்டுப்பாடு பற்றிய கூற்று ஏற்புடைத்தாகின்ற விடயங்கள் குறித்த பணிப்பாளர்களின் எழுத்திலான தெரிவிப்புகளைப் பெற்றுக்கொள்ளல்.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

3050 இன் பிரகாரம், எல்லா நட்ட ஆபத்துக்களையும் கட்டுப்பாடுகளையும் கூற்று உள்ளடக்குகின்றதா என்பதை அல்லது வங்கியின் நட்ட ஆபத்துக்களதும் கட்டுப்பாட்டு நடவடிக்கைமுறைகளதும் பயனுறுதி பற்றி கருத்திற்கொண்டு கருத்தியலொன்றை உருவாக்குவதற்கு அவசியமில்லை. அதேபோல், இலங்கை கணக்கீட்டு நியமம் 3050 இன்பிரகாரம், ஆண்டறிக்கையின் வெளிக்காட்டப்படுகின்ற யாதேனும் முக்கிய பிரச்சினைகளின் விடயதான அகக் கட்டுப்பாட்டுக் கூறுகளுடன் செயற்படுவதற்கு விதித்துரைக்கப்பட்ட செயன்முறைகள் உண்மையில் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாகுமா என்பதைக் கருத்திற்கொள்வது அவசியமானதன்று.

**முடிவுரை**

அகக் கட்டுப்பாட்டு முறைமையை மதிப்பிடும்போது வங்கியின் நிதிக்கூற்றுகளில் முக்கிய கணக்குகளுடனும் வெளிப்பாடுகளுடனும் சம்பந்தப்படுகின்ற சகல நடவடிக்கைமுறைகளுடனும் கட்டுப்பாடுகளுடனும் ஒப்பீடுசெய்து நிதியாண்டு இறுதிப் பகுதியை நோக்கி நடவடிக்கைமுறைக் கோவையொன்றின் வடிவில் விவரமான வழிகாட்டியொன்று விருத்திசெய்யப்பட்டதுடன், பரிசோதனைகளையும் ஆவணவாக்கலையும் மேற்கொள்வது ஆரம்பிக்கப்பட்டது. அதேபோல், முகாமைத்துவம் அடுத்தாண்டில் தொடர்புபட்ட தரப்புக் கொடுக்கல்வாங்கல்களை அடையாளங்காண்பதன் பேரில் கட்டுப்பாடுகளின் ஆவணவாக்கலை முன்னேற்றுவதற்கு எதிர்பார்க்கிறது. நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைமுறைகள் மீதமைந்து, வங்கியின் நிதி அறிக்கையிடலில் வங்கியின் அகக் கட்டுப்பாட்டு முறைமையின் உருவரைத்திட்டத்தையும் அதன் பயனுறுதியையும் பரிசீலிக்கும்போது பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட செயன்முறை குறித்த எமது புரிந்துணர்வின்படி முன்னுக்குப் பின் முரணான அம்சங்கள் எவையும் இருப்பதாக தம்மால் நம்பக் காரணமாக அமையக்கூடிய எவையும் எமது கவனத்திற்கு உட்படவில்லை.

**எச்.எம். காமினி விஜேசிங்க**
*கணக்காய்வாளர் தலைமையதிபதி*

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. BAF/D/PB/CG/2015

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 21st April 2016

**இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கூட்டிணை ஆளுகைக்கான பணிப்பாணையின் இணக்கத் தேவைப்பாடு பற்றி மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மக்கள் வங்கியின் மெய்யான காண்புகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கூட்டிணை ஆளுகை பணிப்புரையின் இணக்கத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பணிப்பாளர் சபையினால் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட கூட்டிணை ஆளுகை அறிக்கை சம்பந்தமாக இவ்வறிக்கையின் பின்னிணைப்பில் நடவடிக்கைமுறைகள் என்னால் நிறைவேற்றப்பட்டு கணிப்பிடப்பட்டுள்ளன. உடன்பட்ட நடவடிக்கைமுறைகளின் பணிக் கடப்பாடுகள் சார்ந்த சேவைகள் பற்றிய இலங்கை நியமம் 4400 (SLSRS 4400) இல் காட்டப்பட்டுள்ள மூலக் கோட்பாடுகளுக்கு அமைவாக இப்பணிக் கடப்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளது. கூட்டிணை ஆளுகை பணிப்புரையின் இணக்கத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தங்களுக்கு உதவும் பொருட்டு நடவடிக்கைமுறைகள் நிறைவேற்றப்பட்டன. உடன்பட்ட நடவடிக்கைமுறைசார்ந்த பணிக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பில் எனது காண்புகள் அறிக்கையிடப்பட்டுள்ளது.

மேற்போந்த நடவடிக்கைமுறைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அல்லது பரிசீலனை என பொருள்வரையறை செய்யப்படுவதில்லையாதலால், இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கூட்டிணை ஆளுகை பணிப்புரையின் இணக்கப்பாடு பற்றிய யாதேனும் உறுதிப்பாடொன்றை நான் தெரிவிக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுகள் பற்றிய மேலதிக நடவடிக்கைமுறைகள் என்னால் நிறைவேற்றப்பட்டதாயின் அல்லது கணக்காய்வொன்று அல்லது பரிசீலனையொன்று என்னால் மேற்கொள்ளப்பட்டதாயின், தங்களுக்கு அறிக்கையிடக்கூடியதான ஏனைய விடயங்கள் எனது கவனத்திற்கு உட்படக்கூடியதாக இருந்தது.

எனது அறிக்கை, இவ்வறிக்கையின் முதலாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்கானதும் தங்கள் தகவலுக்குரியதுமாக மாத்திரம் இருப்பதுடன், வேறெந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படுதலோ அல்லது வேறெந்தத் தரப்பிற்கும் வழங்கப்படுதலோ ஆகாது.

இவ்வறிக்கை பின்னிணைப்புகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள விடயங்களுடன் மாத்திரம் தொடர்புபட்டதாக இருப்பதுடன், ஒட்டுமொத்தமாக மக்கள் வங்கியின் எந்தவொரு நிதிக் கூற்றுக்கும் நீடிக்கப்பட முடியாது.

**எச்.எம். காமினி விஜேசிங்க**
*கணக்காய்வாளர் தலைமையதிபதி*

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

**இணைப்பு - 1 மெய்யான காண்புகள் அறிக்கைக்கானது**

| பிரிவு | நிறைவேற்றிய நடவடிக்கைகள் | இணக்கம் மட்டம் |
|---|---|---|
| 3(1) | பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் | |
| 3(1)(i) | பணிப்பாளர் சபை வங்கியின் பாதுகாப்பு மற்றும் சிறந்த நிலைமையினை வலுப்படுத்தியுள்ளதாக உறுதிப்படுத்துவதற்கு செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகள் | |
| | அ) வங்கியின் முறைமை ரீதியிலான நோக்கம் மற்றும் நிறுவனத்தின் விழுமியங்கள் பற்றிய பணிப்பாளர் சபையின் அனுமதியினை பரிசீலனை செய்தல். | இணக்கம்<br>2015/2 பணிப்பாளர் சபை கூட்டத்தில் 2016-2020 கால எல்லைகளுக்காக வங்கிக்கு அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள் திட்டங்கள் உள்ளன. இது முகாமைத்துவ பயிற்சி நிறுவனத்தின் (MTI) ஆலோசனையாளர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டது. |
| | வங்கியினுள் அதன் முறைமை ரீதியிலான நோக்கம் மற்றும் நிறுவன விழுமியங்கள் தொடர்பாடல் செய்யப்பட்டுள்ளதாக பரிசீலனை செய்தல் | இணக்கம்<br>உபாய வழிகள் பற்றிய சுற்றுநிருபங்கள் ஊடாக உரிய கிளை முகாமையாளருக்கு தொடர்பாடல் செய்யப்படும். |
| | ஆ) வங்கியின் மொத்த வியாபார உபாயவழிகள் பற்றிய பணிப்பாளர் சபையின் அனுமதி பரிசீலனை செய்யப்படும். | இணக்கம்<br>2015/2 பணிப்பாளர் சபை கூட்டத்தில் 2016-2020 கால எல்லைக்காக வங்கியினால் அனுமதிக்கப்பட்ட முறைமை ரீதியிலான திட்டங்கள் உள்ளன. இது முகாமைத்துவ பயிற்சி நிறுவனத்தின் (MTI) ஆலோசனையாளர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டது. |
| | வங்கியினுள் மொத்த வியாபார உழைப்பு வழிக்கு அவதானம் கொள்கைஇ அவதானம் முகாமைத்துவம் முகாமைத்துவம் பற்றிய முகாமைத்துவ நடைமுறைவழிகள் மற்றும் உபகரணங்கள் உட்புகுத்தப்படும் எனவும் அவை ஆவணப்படுத்தப்படுத்தப்படுவன என பரிசீலனை செய்தல் | இணக்கம்<br>இந்த பிரிவின் அனுமதிக்கப்பட்ட முறைமை ரீதியிலான திட்டத்தினூடாக விளக்கப்படுவதுடன் சிரேஸ்ட ஒன்றிணைக்கப்பட்ட அவதானம் முகாமைத்துவ குழு கூட்டத்தில் கலந்துரையாடப்படும். |
| | இ) குறைந்தது தொடர்ந்து வரும் மூன்று வருடங்களுக்காக, வங்கியின் மொத்த வியாபார உபாயவழிகளினை அளவிடப்படவேண்டிய இலக்குகளினால் ஒன்றிணைவதாக பரிசீலனை செய்தல். | இணக்கம்<br>2016- 2020 கால எல்லைகளுக்காக முறைமை ரீதியிலான திட்டத்தின் ஊடாக அளவிடப்பட வேண்டிய இலக்குகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அவை அவ்வப்போது மீளாய்வு செய்யப்படும். |
| | பணிப்பாளர் சபையினால் அடையாளம் காணப்பட்ட ஆபத்து முகாமைத்துவத்தினை கட்டுப்படுத்துவதற்காக பொருத்தமான முறைமை தொலைநோக்கப்படுதல் மற்றும் நானாவித நடவடிக்கைகளில் இவை நடாத்தப்படுவதாக பரிசீலனை செய்தல். | இணக்கம்<br>சபையின் ஒன்றிணைக்கப்பட்ட ஆபத்து முகாமைத்துவம் குழுவினால் ஆபத்து முகாமைத்துவ கொள்கையினை மீளாய்வு செய்வதற்காக அவ்வப்போது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த குழு வங்கி சம்பந்தமாக ஆபத்து முகாமைத்துவ நடைமுறையினை நிகழ்த்தும். |
| | (ஈ) வைப்பாளர்கள், கடன்படுநர், பங்குதாரர்கள் மற்றும் கடன்கொடுநர் உட்பட அனைத்து திறத்தார்களுடனும் தொடர்பாடல் கொள்கைகள் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் நடைமுறைப்படுத்தப்படுவதனை பரிசீலனை செய்தல் | இணக்கம்<br>இது திறத்தார்களினை அறிவுறுத்திய அனுமதிக்கப்பட்ட முறைமை ரீதியிலான கொள்கையாகும். |
| | (உ) வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் முகாமைத்துவ தகவல்கள் முறைமையில் போதுமானளவு மற்றும் பூரணமானளவு பணிப்பாளர் சபையின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு பரிசீலனை செய்தல் | இணக்கம்<br>நிதி வகைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகள் பற்றிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளில் போதுமானளவு மற்றும் பூரணத்தன்மை கணக்காய்வு குழுக்கள் (BAC) மூலம் மதிப்பீட்டிற்கு உட்பட்டது. சபையின் கணக்காய்வு குழு அவ்வப்போது பணிப்பாளர் சபையிடம் கண்டுபிடித்தவற்றை அறிக்கையிடும். |

| பிரிவு | நிறைவேற்றிய நடவடிக்கைகள் | இணக்கம் மட்டம் |
|---|---|---|
| | (ஊ) இலங்கை கணக்காய்வு தரத்தினுள் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் பிரதான முகாமைத்துவ அலுவலக ஆளனியினர் பணிப்பாளர் சபையினால் அடையாளம் காணப்பட்டுள்ளதனை பரிசீலனை செய்தல். அவர்களினால் நிறைவேற்றப்படும் கடமைகளாவன.<br>(i) கருத்திற் கொள்ள வேண்டிய தாக்கம் செலுத்தும் கொள்கைகள்"<br>(ii) நேரடியான நடவடிக்கைகள், மற்றும்<br>(iii) வியாபார நடவடிக்கைகள், செயற்பாடுகள் மற்றும் அவதானம் முகாமைத்துவம் பற்றிய கட்டுப்பாடு. | பிரதான முகாமைத்துவம் அலுவலக ஆளணியினரில் பணிப்பாளர் சபை, மற்றும் நிறைவேற்று அலுவலர்/ பொதுமுகாமையாளர் , சிரேஸ்ட பிரதி பொதுமுகாமையாளர்- கடன், சிரேஸ்ட பொது முகாமையாளர் - ஆபத்து முகாமைத்துவம், செயற்பாட்டு, இணக்கப்பாடு( பொருந்துகை), நிறுவனத்தின் நிருவாகம் மற்றும் சிறிய மற்றும் மத்திய அளவிலான பிரிவுகள், தகவல் தொழிநுட்ப பிரதானி மற்றும் நிதி பிராதானி என்போர் உள்ளடங்குவர். |
| | (எ) பணிப்பாளர் சபையின் கொள்கைகளுக்கு இணங்கியதாக பிரதான முகாமைத்துவ அலுவலக ஆளனியினரினால் வங்கியின் நடவடிக்கைகள் பற்றிய பொருத்தமான நிருவாகத்தினை நடாத்துகின்றதா என பரிசீலனை செய்தல் | பணிப்பாளர் சபை அதன் உபக்குழுக்கள் மூலம வங்கியின் நடவடிக்கை பற்றிய பொருத்தமான நிருவாக முறைமையினை கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டினுள் பணிப்பாளர் சபை கூட்டத்தில் மற்றம் சபையின் உபக்குழு கூட்டத்தின் எண்ணிக்கைகள் கீழ் காண்படும் விதத்தில் ஆகும். |
| | | சபை கூட்டங்கள் - 14 |
| | | சுபையின் கணக்காய்வாளர் குழுக்கள் - 05 |
| | | சபையின் நிறைவேற்று கடன் குழுக்கள் - 08 |
| | | சபையின் மனித வளம் மற்றும் முயற்சி குழுக்கள் - 06 |
| | | சபையின் ஒன்றிணைக்கப்பட்ட அவதானம் முகாமைத்துவ குழுக்கள் - 04 |
| | | சபையின் பிரதிநிதித்துவ குழுக்கள் - 03 |
| | | சபையின் முதலீட்டு மற்றும் வங்கிக் குழுக்கள்- 03 |
| | (ஏ) பணிப்பாளர் சபையினால் அவர்களின் மற்றும் பிரதான முகாமைத்துவ அலுவலக ஆளனியினர் சபையின் துறைகள் மற்றும் பிரதான பொறுப்பு நியமப்படுத்தப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்தல். | இணக்கம்<br>பணிப்பாளர் உப குழுக்களுக்காக ஒதுக்கப்படுவர். ஆனைத்து குழுக்களும் நிறுவப்பட்ட நியமத்தினுள் அதிகார எல்லைகள் மற்றும் பிரதான பொறுப்புக்கள் நியமப்படுத்தப்படும். |
| | (ஐ) கீழ் காணப்படுபவை உள்ளடங்கலாக பணிப்பாளர் சபைக்குரிய நிருவாக பிரயோகங்களில் பயன்கள் அவ்வப்போது பணிப்பாளர் சபையினால் மதிப்பீட்டிற்கு உட்பட்டுள்ளதா என பரிசிலனை செய்தல்.<br>* பணிப்பாளர்கள், பிரதான முகாமைத்துவ அலுவலக ஆளணியினரை தெரிவு செய்தல், பெயர் குறிப்பிடல் மற்றும் நியமித்தல்.<br>* தொடர்பு சிக்கல்கள் சார் முகாமைத்துவம்<br>* பலவீனத்தினை தீர்மானித்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் மாற்றத்தினை நடைமுறைப்படுத்தல். | பணிப்பாளர் சபையின் நியமனம் மக்கள் வங்கிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் விடயதிற்கு பொறுப்பான அமைச்சரினால் நடாத்தப்படும். பணிப்பாளர் சபையின் உற்பத்தித்திறன் மதிப்பீடு சுய மதிப்பீட்டு நடைமுறைகள் மற்றும் பணிப்பாளரின் பிரதிக்கினையினை பெற்றுக்கொள்ளும் நடைமுறையின் ஊடாக நடாத்தப்படும்.<br><br>எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டிற்காக சுய மதிப்பீடு 2016 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் நடாத்தப்படுகின்றது.<br><br>பணிப்பாளரின் இணைவு சிக்கல்களில் முகாமைத்துவ நிருவாகம் வங்கியின் நிருவக நல்நிருவாகம் பற்றிய சிறந்த பழக்கம் பற்றிய விதிகளினுள் உள்ளடங்கும். எவ்வாறாயினும், இணைவு சிக்கல்களினை அடையாளம் காணல்.. எதிர்வு கூறல் நடைமுறைகள் மேலும் வலுப்படுத்தப்படல் வேண்டும். |

| பிரிவு | நிறைவேற்றிய நடவடிக்கைகள் | இணக்கம் மட்டம் |
|---|---|---|
| | (ஒ) பணிப்பாளர் சபைக்கு பிரதான முகாமைத்துவம் அலுவலக ஆளனியினருக்கான கொள்கைகள் உள்ளன என்பது பற்றி பரிசீலனை செய்தல் | பொருத்துகை<br>வங்கிக்கு இலக்கம் 2015/09 பணிப்பாளர் சபையின் கையேடு மூலம் அனுமதிக்கப்பட்ட கொள்கைகள் பற்றிய திட்டம் உள்ளது. உபகொள்கைகள் திட்டமானது பிரதான நிறைவேற்று அலுவலர், பிரதி பொதுமுகாமையாளர், உதவி பொதுமுகாமையாளர், மற்றும் முதலாவது வகுப்பின் அலுவலர்களுக்காக திட்டம் உள்ளன. அவர்களின் ஆயத்தத்தினை உறுதிப்படுத்தலுக்காக வங்கியினால் அபிவிருத்தி திட்டம் உபயோகிக்கப்படுகின்றது. |
| | (ஒ) நிறுவனத்தின் நோக்கம் மற்றும் கொள்கைகளினை பகுப்பாய்வு செய்தல், தொடர்பாடல் வழிகளினை நிறுவுதல் மற்றும் முன்னேற்றத்தினை நியமப்படுத்தலுக்காக பிரதான முகைமைத்துவ அலுவல ஆளனியினருடன் ஒழுங்குமுறையான கூட்டங்களினை அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன என்பது பற்றி பணிப்பாளர் சபை மூலம் பரிசீலனை செய்தல். | இணக்கம்<br>பிரதான நிறைவேற்று அலுவலர்/ பொதுமுகாமையாளர் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரதி பொதுமுகாமையாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் நிருவாக செயற்பாட்டுக் குழுக்களட வங்கியின் முக்கியத்துவமான செயற்பாட்டினை தீர்மானம் செய்வதற்காக வாரத்திற்கு ஒரு தடவை சந்திப்பர். அதுமன்டுமன்றி பணிப்பாளர சபை நியமித்த குழுக்களின் முன்னேற்றத்தினை நியமப்படுத்துவதற்காக பிரதான நிறைவேற்று அலுவலர்/ பொதுமுகாமையாளர் மற்றும் உரிய பிரதி பொதுமுகாமையாளர் ஒழுங்காக சந்திப்பர். |
| | (ஒள) நியமனப்படுத்தப்பட்ட சுற்றாடலினை அறிந்துக் கொள்வதற்காக பணிப்பாளர் சபை நடவடிக்கை வழிகளினை மேற்கொண்டு உள்ளது என்பது பற்றி மற்றும் நடவடிக்கை நடைமுறைகள் உள்ளன | இணக்கம்<br>சபையின் கணக்காய்வு குழு இது சம்பந்தமாக வங்கிக்கு உதவியளிக்கும். சட்டமாக்கப்பட்ட பரிசீலனை அறிக்கை காலாண்டுகள் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கும். பணிப்பாளர் சபை இது சம்பந்தமாக பொருத்தமான அலுவலரினை நியமித்துள்ளது. |
| | (க) வெளிக்கணக்காய்வு சேவையில் உள்ளீடு மற்றும் நிருவாகத்திற்காக நடைமுறைப்படுத்தப்படும் நடவடிக்கை பணிப்பாளர் சபை வசம் உள்ளது என பரிசீலனை செய்தல். | இணக்கம்<br>1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 34(1) ஆம் பிரிவிற்கிணங்க, கணக்காய்வுதிபதிக்கு அவரின் ஆலோசனை மற்றும் நிருவாகத்தின் கீழ் நடவடிக்கையினை மேற்கொள்ளும் தகைமையுடைய கணக்காய்வாளரின் அல்லது கணக்காய்வாளரினை கடமையில் ஈடுபடுத்த முடியும். |
| 3(1)(ii) | பணிப்பாளர் சபையினால் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரினை நியமித்தல் பற்றி பரிசீலனை மேற்கொள்ளல் | இணக்கம்<br>தலைவர் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுவார். பிரதான நிறைவேற்ற அலுவலர்/ பொதுமுகாமையாளர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளார் |
| | தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் இந்த ஒழுங்குவிதிகளில் 3(5) ஒழுங்குவிதிகளுக்கு ஏற்தாக நிகழ்த்தப்படுகின்றதா என பரிசீலனை செய்தல் | இணக்கம்<br>தயவு செய்து ஒழுங்குவிதியின் 3(5) இன் கீழ் அவதானிக்கப்பட்ட பிரதிபலனினை பார்க்கவும். |
| 3(1)(iii) | அவ்வப்போது பணிப்பாளர் சபை ஒழுங்காக சந்தித்துள்ளனர் எனவும் கிட்டிய விதத்தில் மாதாந்தம் பணிபாளர் சபைக்கூட்டம் நடாத்தப்பட்டது என பரிசீலனை செய்தல் | இணக்கம்<br>2015 ஆம் ஆண்டினுள் பணிப்பாளர் சபை 4 தடவைகள் சந்தித்துள்ளனர். |
| 3(1)(iv) | வங்கியில் வியாபார முன்னேற்றம் மற்றும் ஆபத்து முகாமைத்துவம் சம்பந்தமான விடயங்கள் மற்றும் ஆலோசனை உள்ள சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் சபை கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் அந்த விடயங்கள் மற்றும் ஆலோசனையினை உட்புகுத்தப்படுவதற்கான வசதிகள் பணிப்பாளருக்கு உள்ளதா என பரிசீலனை செய்தல் | இணக்கம்<br>நிகழ்ச்சி நிரல் தலைவரின் ஆலோசனையின் பேரில் தயாரிக்கப்படும். பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் காலஅட்டவணையானது வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்படுகின்றது. |

## மெய்யான காண்புகளும் கூட்டிணை ஆளுகையும் பற்றிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை



| பிரிவு | நிறைவேற்றிய நடவடிக்கைகள் | இணக்கம் மட்டம் |
|---|---|---|
| 3(1)(v) | பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் பங்களிப்பு செய்வதற்கு சந்தர்ப்பத்தினை பெற்றுக் கொள்வதற்காக கூட்டம் பற்றிய அறிவித்தல் 7 நாட்களுக்கு முன்பதாக பணிப்பாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டதனை பரிசீலனை செய்தல். அவ்வாறே, ஏனைய சபைக் கூட்டத்திற்காக அறிவித்தில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | இணக்கம்<br>பணிப்பாளர் சபையின் செயலாளரினால் ஒப்பமிடப்பட்ட கடிதம் மூலம் இது நிகழ்த்தப்படும். இந்த கடிதம் கூட்டத்திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பதாக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். |
| 3(1)(vi) | நடாத்தப்படும் கூட்டங்களுக்கு 12 மாத காலங்களினுள் குறைந்தது மூன்றில் இரண்டிற்காக வருகைதராத மற்றும் தொடர்ச்சியான அண்மைய கூட்டங்கள் மூன்றிற்கு வருகைத்தராத பணிப்பாளர்கள் பற்றி பணிப்பாளர் சபை தேவையான நடவடிக்கைகளினை மேற்கொண்டுள்ளதா என பரிசீலனை செய்தல். எவ்வாறாயினும், பதில் பணிப்பாளர் மூலம் பணிப்பாளர் கூட்டங்களுக்கு பங்களிப்பு செய்யின் அது ஏற்றுக்கொள்ள முடியும். | இணக்கம்<br>பணிப்பாளர்கள் தேவைக்கிணங்க கூட்டங்களில் பங்கேற்றுள்ளனர். |
| 3(1)(vii) | பணிப்பாளர் சபை வங்கயில் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது பற்றியும் அவர் 1988 ஆம் ஆண்டின் 30 அம் இலக்க வங்கிச் சட்டத்தின் 43 வது பிரிவின் ஒழுங்குவிதிகளினை பூர்த்தி செய்துள்ளார் எனவும் அவரின அடிப்படை பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு மற்றும் பங்குதாரர்களின் கூட்டங்களுக்கு செயலாளர் சேவையினை வழங்குவதும் ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளில் குறிப்பிடப்பட்ட வேறு கடமைகளினை நிறைவேற்றுவதும் என்பது | இணக்கம்<br>வங்கியினால் நியமிக்கப்பட்ட செயலாளரின் பெயர் திரு. ரொஹான் பதிரகே என்பதுடன் அவர் சட்டத்தரணியாவார். இலக்கம் 13/2010 கூட்டத்தில் இலக்கம் 406/2010 சபைக்கடிதம் |
| 3(1)(viii) | வங்கியின் செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகள் பணிப்பாளர்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும் என்பது | இணக்கம்<br>பணிப்பாளர் சபை செயலாளருக்கு ஆலோசனையினை பெற்றுக் கொடுப்பதற்காக மற்றும் அவரின் சேவைக்காக பணிப்பாளர்களுக்கு எல்லைப்படுத்தப்படாத பிரவேசம் உள்ளது. இது வங்கியின் அனுமதிக்கப்பட்ட பரிச்சயம் பற்றி விதிக்கோவைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| 3(1)(ix) | வங்கியின் செயலாளர் பணிப்பாளர் சபை கூட்டங்களில் நாளேட்டு பதிவுகளினை பேணுவார். மேலும் அவை பணிப்பாளர் சபையின் அனைத்து அங்கத்தவர்களினை பரிசீலனை செய்யும் வழி அவர் வசம் உள்ளது. | இணக்கம்<br>கூட்டத்தின் நாளேட்டு பதிவு புத்தகம் எந்தவொரு பணிப்பாளருக்கும் பரிசீலனை செய்துப் பார்ப்பதற்காக செயலாளர் வசம் வைத்திருப்பார் |
| | (அ) வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் விசேட தெளிவாக்கல் உட்பட உரிய கணக்கீட்டு அளவீடுகள் மற்றும் நியமங்களின் தேவைகளினை பூர்த்தி செய்யும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதற்கான பிரதிக்கினை | இணக்கம்<br>உரிய கணக்கீட்டு அளவீடுகள் மற்றும் நியமங்களின் தேவையின் இணக்கத்தின் பேரில் தெளிவாக்கல், நிதி அறிக்கையிடல் பற்றிய பணிப்பாளரின் பொறுப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது. தயவு செய்து 177 வது ஏட்டினை பார்க்கவும். |
| | (ஆ) நிதி அறிக்கையிடல் பற்றிய விசுவாசம் பற்றிய பொதுவான சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்காக நிதி அறிக்கையிடலின் முறைமை திட்டமிடப்பட்டுள்ளது என்பதனை மற்றும் வெளி நோக்கத்திற்காக நிதிக் கூற்றுக்களினை தயாரித்தல் உரிய கணக்கீட்டு மூலக்கோட்பாடுகள் மற்றும் நியமங்களின் தேவைக்கிணங்க நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு வங்கியின் உள்ளார்ந்த நிருவாக திட்டம் பற்றிய பணிப்பாளர் சபையின் அறிக்கை. | இணக்கம்<br>நிதி அறிக்கையிடல் பற்றிய விசுவாசம் பற்றிய பொதுவான சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்காக நிதி அறிக்கையிடலின் முறைமை திட்டமிடப்பட்டுள்ளது என்பதனை மற்றும் வங்கியின் உள்ளார்ந்த நிருவாக திட்டத்தின் தொழிலாற்றுகையினை பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிதல் பணிப்பாளர்களின் உள்ளக நிருவாகம் பற்றிய பிரதிக்கினை 149 வது ஏட்டில் காட்டபட்பட்டுள்ளது. |
| | (இ) மேற்குறிப்பிடப்பட்ட 3(8)(ஈ) இஆரூ ஒழுங்குவிதிகளினுள் குறிப்பிடப்பட்ட உள்ளக நிருவாக முறைமையின் உற்பத்தித் திறன் பற்றிய வெளியக கணக்காய்வாளர்களின அறிக்கை பணிப்பாளர் சபை பெற்றுக் கொண்டுள்ளது என்பதனை பரிசீலனை செய்தல் | இணக்கம்<br>உள்ளக நிருவாக முறைமையின் உற்பத்திற்ன் பற்றிய வெளியக கணக்காய்வாளர்களின் உறுதிப்படுத்தும் அறிக்கை வங்கி பெற்றுக்கொண்டுள்ளது. தயவு செய்து 150 வது ஏட்டினை பார்க்கவும். |
| | (ஈ) பெயர், தகைமைகள், வயது, வழிக்காட்டல்கள் மற்றும் தகைமைகள் பற்றிய தேவைகளினை நிறைவேற்றும் அனுபவம் உட்பட பணிப்பாளர், வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்த பணம்/ ஆற்றல் பற்றிய விபரங்களினை பரிசீலனை செய்தல். | இணக்கம்<br>பணிப்பாளர் பற்றிய விபரங்கள் 32-33 ஏடுகளில் காட்டப்பட்டுள்ளதுடன் வங்கியினால் பணிப்பாளர்களுக்கு செலுத்தப்படும் மொத்த பணம்/ ஆற்றல் 242 வது ஏட்டில் நிதிக் கூற்றின் கீழ் குறிப்ப 45 இல் காட்டப்பட்டுள்ளது. |
| | (உ) அனைத்து வகையிலும் தொடர்புடைய திறத்தவர்களுக்கு பெற்றத்தரப்படும் 3(7)(iii) இல் நியமப்படுத்தப்பட்டுள்ள மொத்த வசதிகளினை பரிசீலனை செய்தல். அனைத்து வகையிலும் தொடர்புடைய திறத்தவர்களுக்கு பெற்றுத்ரப்படும் மொத்த வசதிகள் வங்கியின் நியமப்படுத்தப்பட்ட மூலதன விகிதமாக தெளிவாக்கப்படும். | தெளிவாக்கல் அதிக முன்னேற்றப்பட வேண்டிய தேவை உள்ளது. |

| பிரிவு | நிறைவேற்றிய நடவடிக்கைகள் | இணக்கம் மட்டம் |
|---|---|---|
| | (ஊ) வங்கியின் பிரதான முகாமைத்துவ அலுவலக ஆளனியிற்கு வங்கியினால் செலுத்தப்படும் ஊக்குவிப்புக்கள் சேர்க்கப்பட்ட பெறுமதி மற்றும் வங்கி அதில் வங்கியின் பிரதான முகாமைத்துவ அலுவலக ஆளனியினருடன் கொடுக்கல் வாங்கல்களில் சேர்க்கப்பட்ட பெறுமதி செலுத்தப்பட்ட ஊக்குவிப்புக்கள், பெற்றுத்தரப்பட்ட வசதிகள் மற்றும் வங்கியினுள் இடம்பெற்ற வைப்புக்கள் அல்லது முதலீடுகள் ஆகிய விரிவாக வகைப்படுத்தலிற்கிணங்க காட்டப்பட்டுள்ளது என்பதனை பரிசீலனை செய்தல் | இணக்கம்<br>வங்கியுடன் வங்கியின் பிரதான முகாமைத்துவ அலுவலக ஆளனியினரின் கொடுக்கல் வாங்கல்களில் சேர்க்கப்பட்ட தொகை 242 வது ஏட்டில் நிதிக்கூற்று குறிப்பின் 45 இல் காட்டப்பட்டுள்ளது. |
| | (எ) நிறுவனத்தின் சிறந்த நிருவாக ஒழுங்குவிதிகளின் இணங்கம் பற்றி வெளியக கணக்காய்வாளர்களின் அறிக்கை பணிப்பாளர் சபை பெற்றுக் கொண்டுள்ளது என்பதனை பரிசீலனை செய்தல். | இணக்கம்<br>நிகழ்வுகள் வாய்மூலம் கண்டுபிடிக்கப்பட்ட அறிக்கைகள் இந்த ஒழுங்குவிதிகளின் தேவைகளுக்கு இணங்கும் மட்டத்தின் பேரில் வெளியக கணக்காய்வாளரினால் வழங்கப்படுடுள்ளது. |
| | (ஏ) தொலைநோக்கு தேவைகள், ஒழுங்குவிதிகள், சட்டம் மற்றும் உள்ளக நிருவாகத்துடனான இணக்கம் மற்றம் இணக்கமின்மை சந்தர்ப்ங்களினை சரிசெய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை வழிமுறைகளின் பற்றி காட்டப்படும் அறிக்கைகள். | இணக்கம்<br>தயவு செய்து 198-139 ஏடுகளினைப் பார்க்க |
| | (ஐ) வங்கியின் ஆபத்து முகாமைத்துவத்தின் குறைப்பாடுகள் அல்லது வங்கியின் கண்காணிப்பு பற்றிய பணிப்பாளரினால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள இந்த ஆலோசனைகளுடன் இணக்கமின்மை பற்றிய நியமங்கள் மற்றும் கண்காணிப்பின் கருத்து பற்றிய பிரதிக்கினைகள். அவ்வாறான கருத்தினை வெளிப்படுத்துவதற்கு வங்கியினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுடன் பொதுமக்களுக்கு தெளிவாக்கப்பட வேண்டும் என்பதற்கு நிதி சபையினால் அவ்வாறு ஆலோசனை தரப்பட்டிருக்குமாயின் அது பற்றிய பிரதிக்கினை | இலங்கை மத்திய வங்கியின் வங்கி கண்காணிப்பு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 2015.09.30 ந் திகதிய கண்காணிப்பு கருத்து பற்றிய வரைபு அறிக்கை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ( B. P. No. 82/2016 ) |
| 3.(9) | அமைப்பு மற்றும் வேறு பொதுவான ஒழுங்குவிதிகள் | இணக்கம்<br>1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம் சம்பந்தமான அமைப்பு மற்றும் வேறு பொதுவான ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் வழிக்காட்டல்கள் வங்கியினால் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. |

# பல்வகைப்பட்ட தேவைகளுக்கு சேவை வழங்கல்

எங்கள் வாடிக்கையாளரின் தேவைகளை, நாங்கள் எங்கள் திறமையை ஆழமான தேசிய அறிவுடன் இணைத்து புத்தாக்க பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதன் ஊடாக பூர்த்திசெய்கின்றோம். மக்கள் வங்கி வாடிக்கையாளர் சேவைகளை 24/7 திறமையுடன் செயற்திறன் மற்றும் வினைத்திறன் ஆகுசெலவுடன் வழங்குவதற்காக நவீன தொழில்நுட்பத்தில் முதலீடு செய்கின்றது.

# 1 டிரில்லியன் சொத்து அடித்தளம்

# நிதியியல் அறிக்கைகள் »

177 நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்புகள்
178 நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை
180 வருமானக் கூற்று
181 இலாபம் அல்லது நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று
182 நிதி நிலைமைக் கூற்று
183 உரித்துடைமை மாற்றங்களிலான கூற்று - வங்கி
184 உரித்துடைமை மாற்றங்களிலான கூற்று - குழுமம்
185 காசுப்பாய்ச்சல் கூற்று
186 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

# நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது, அது மேற்கொள்கின்ற சகல கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உரிய கணக்குப் பதிவுப் புத்தகத்தினைப் பேணி வருகின்றது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன், வங்கியானது, நிலவரங்களின் நியாயமான பார்வையினையும், உண்மையான நோக்கினையும் தெளிவுபடுத்துகின்ற மேலும் வருடத்தின் இலாபம் அல்லது நட்டம் பற்றிய உண்மையானதும், நியாயமானதுமான பார்வையினை வழங்குகின்ற நிதிக் கூற்றினைத் தயாரிக்கின்றது என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பினையும் கொண்டுள்ளது.

இதற்கமைய பணிப்பாளர்கள் சபையானது, அதன் கிரமமான கூட்டங்களின் மீளாய்வுகள் மூலமாகவும், கணக்காய்வுக் குழு மூலமாகவும் நிதி அறிக்கையிடலுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை மேற்பார்வை செய்கின்றது. கணக்காய்வுக் குழுவின் அறிக்கையானது, பக்கம் 131 இல் வழங்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையானது, செயற்திறன் மிக்கதும், பூரணமானதுமான உள்நிலைக் கட்டுப்பாட்டு முறையினை நிறுவியுள்ளது. இது உள்நிலைப் பரிசீலிப்புக்கள், உள்நிலைக் கணக்காய்வு மற்றும் வங்கிச் சேவையினை ஒழுங்கான முறையில் நடத்திச் செல்வதற்கான நிதி மற்றும் ஏனைய தேவைப்படுத்தப்படுகின்ற கட்டுப்பாடுகளின் ஒட்டுமொத்த முறையினையும் கொண்டுள்ளதுடன், வங்கியின் சொத்துக்களைப் பாதுகாத்து, பதிவுகளின் துல்லியத் தன்மையினையும், நம்பகத்தன்மையினையும் இயலுமான அளவு சாத்தியமான வகையில் பெற்றுக்கொள்வதையும் கொண்டுள்ளது. தாம் தொடர்ச்சியான அடிப்படையில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளை ஏற்று நடைமுறைப்படுத்துகின்றோம் என பணிப்பாளர்கள் கருதுவதுடன், 180-262 பக்கம் வரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள 2015 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றினைத் தயாரிப்பதில் நியாயமானதும், நடைமுறைச் சாத்தியமிக்கதுமான தீர்மானங்களும், மதிப்பீடுகளும் இவற்றுக்கு உதவி வழங்கியுள்ளன.

இந்த நிதி அறிக்கையில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள 2015 டிசெம்பர் 31ல் முடிவடைந்த வருடத்திற்கான வங்கியின் நிதிக் கூற்றுக்கள் 1988ம் ஆண்டின் 30ம் இலங்க வங்கிச் சேவைச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களுடனும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. திகதியில் உள்ளவாறான புறநிலைக் கணக்காய்வாளர்களின் அறிக்கைக்கு அமைய நிதிக் கூற்றானது, வங்கியினதும் அதன் குழுமத்தினதும் விவகாரங்களின் உண்மையானதும், நியாயமானதுமான நோக்கினைப் பிரதிபலிக்கின்றது.

**ரொஹான் பதிரகே**
பிரதிப் பொது முகாமையாளர்
பணிப்பாளர்கள் சபை செயலாளர்

2016 மார்ச் 24

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. BAF1/D/PB/1/15/1

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 30 March 2016

## மக்கள் வங்கியினதும், அதன் துணைக் கம்பனிகளினதும் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மக்கள் வங்கியினதும் ("வங்கி") வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் ("தொகுதி") 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளினதும், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களும், ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந்தக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுச் சேவையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவி பெறப்பட்டது. துணைக் கம்பனிகளின் நிதிக் கூற்றுக்கள் உரிய துணைக் கம்பனிகளின் உறுப்பினர்களால் நியமிக்கப்பட்ட பொதுச் சேவையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்களினால் கணக்காய்வு செய்யப்பட்டன.

### நிதிக் கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து, நியாயமாகச் சமர்ப்பித்தலுக்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாகவுள்ளது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை இப் பொறுப்பு உள்ளடக்குகின்றது.

### கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க, எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும், நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும், வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக, நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி, வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. சபையினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும், முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## அபிப்பிராயம் - வங்கி

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும், அதன் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும், நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## அபிப்பிராயம் - தொகுதி

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மக்கள் வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய உண்மையாகவும், நியாயமாகவும் திரண்ட நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளின் அறிக்கை

1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் அதிகாரச் சட்டத்தினால் வேண்டப்பட்ட தகவல்கள் மற்றும் அதன் பின்னரான அவற்றுக்கான திருத்தங்கள் என்பவற்றுடன் இந்த நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## விலக்களிப்பு

வங்கியானது, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவில் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி 1992 மே 14 ஆந் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அப்போதைய நிதி அமைச்சரின் கட்டளை மூலம் சொல்லப்பட்ட நிதி அதிகாரச் சட்டத்தின் பகுதி II இலுள்ள ஏற்பாடுகளிலிருந்து வங்கி விலக்களிக்கப்பட்டிருந்தது.

## பாராளுமன்றத்தின் அறிக்கை

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய பாராளுமன்றத்திற்கான என்னுடைய அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

**எச்.எம்.காமினி விஜயசிங்க**
*கணக்காய்வாளர் தலைமை அதிபதி*

# வருமானக் கூற்று

| 31 டிசெம்பரில் முடிவடைந்த வருடத்திற்கானது | குறிப்பு | வங்கி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 | 2014 | மாற்றம் | 2015 | 2014 | மாற்றம் |
| | | ரூபா. '000 | ரூபா. '000 | % | ரூபா. '000 | ரூபா. '000 | % |
| **முழு வருமானம்** | 5 | 103,648,962 | 96,377,482 | 7.5 | 123,830,806 | 118,640,810 | 4.4 |
| வட்டி வருமானம் | | 92,403,546 | 84,479,961 | 9.4 | 110,278,180 | 104,180,951 | 5.9 |
| வட்டிச் செலவுகள் | | (48,731,974) | (54,362,126) | (10.4) | (56,020,994) | (64,211,046) | (12.8) |
| **தேறிய வட்டி வருமானம்** | 6 | 43,671,572 | 30,117,835 | 45.0 | 54,257,186 | 39,969,905 | 35.7 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | | 3,712,146 | 3,820,242 | (2.8) | 4,037,408 | 4,129,540 | (2.2) |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவுகள் | | (174,479) | (121,627) | 43.5 | (174,479) | (121,627) | 43.5 |
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 7 | 3,537,667 | 3,698,615 | (4.4) | 3,862,929 | 4,007,913 | (3.6) |
| விற்பனையினால் கிடைத்த தேறிய இலாபம் | 8 | 3,115,216 | 2,508,352 | 24.2 | 3,115,573 | 2,648,889 | 17.6 |
| ஏனைய இயக்க வருமானம் (தேறியது) | 9 | 4,418,055 | 5,568,927 | (20.7) | 6,399,646 | 7,681,429 | (16.7) |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | | 54,742,510 | 41,893,729 | 30.7 | 67,635,334 | 54,308,136 | 24.5 |
| நிதிச் சொத்துக்கள் மீதான தேறிய பெறுமதி குறைப்பு | 10 | (3,739,914) | 1,430,440 | (361.5) | (5,167,881) | 117,979 | (4,480.3) |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | 51,002,596 | 43,324,169 | 17.7 | 62,467,453 | 54,426,115 | 14.8 |
| ஆளணிச் செலவுகள் | 11 | (17,056,303) | (13,083,142) | 30.4 | (19,045,558) | (14,849,137) | 28.3 |
| ஏனைய செலவுகள் | 12 | (8,577,333) | (8,840,209) | (3.0) | (12,929,760) | (13,419,236) | (3.6) |
| **நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மற்றும் தேசக் கட்டுமான வரிக்கு (NBT) முந்திய தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | 25,368,960 | 21,400,818 | 18.5 | 30,492,135 | 26,157,742 | 16.6 |
| நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேசக் கட்டுமான வரி (VAT & NBT) | | (5,849,440) | (4,169,761) | 40.3 | (6,370,969) | (4,510,317) | 41.3 |
| **நிதிச்சேவைகள் மீதான பெறுமதி சேர்ப்பு மற்றும் தேசக்கட்டுமான வரிக்கு (VAT & NBT) பிந்திய தொழிற்படு வருமானம்** | | 19,519,520 | 17,231,057 | 13.3 | 24,121,166 | 21,647,425 | 11.4 |
| இணைக்கம்பனிகளின் இலாபங்களின் பங்கு/(நட்டம்) (தேறிய வரி) | | - | - | - | - | (19,872) | (100.0) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | 19,519,520 | 17,231,057 | 13.3 | 24,121,166 | 21,627,553 | 11.5 |
| வரிச் செலவுகள் | 13 | (6,921,677) | (3,012,245) | 129.8 | (9,053,173) | (4,674,355) | 93.7 |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | | 12,597,843 | 14,218,812 | (11.4) | 15,067,993 | 16,953,198 | (11.1) |
| **பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:** | | | | | | | |
| வங்கியின் முதன்மை உரிமையாளர்களுக்கு | | 12,597,843 | 14,218,812 | (11.4) | 13,898,052 | 15,896,077 | (12.6) |
| கட்டுப்படுத்த முடியாத உரிமையாளர்களுக்கு | | - | - | - | 1,169,941 | 1,057,121 | 10.7 |
| | | 12,597,843 | 14,218,812 | (11.4) | 15,067,993 | 16,953,198 | (11.1) |
| **இலாபம் மீதான பங்கொன்றிற்கான வருவாய்** | 14 | | | | | | |
| சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை வருவாய் (ரூபா) | 14.1 | 12,598 | 14,219 | (11.4) | 13,898 | 15,896 | (12.6) |
| சாதாரண பங்கொன்றிற்கான வலுக்குறைக்கப்பட்ட வருவாய் (ரூபா) | 14.2 | 87 | 99 | (11.4) | 96 | 110 | (12.6) |

186 - 262 பக்கங்கள் வரையில் காணப்படுகின்ற குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகங்களை அமைக்கின்றன.

# இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்றும் ஏனைய பூரணமான வருமானக் கூற்றும்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 |
| | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| **வருடத்திற்கான இலாபம்** | 12,597,843 | 14,218,812 | 15,067,993 | 16,953,198 |
| **வரிக்குப் பின்னரான தேறிய ஏனைய முழுமையான வருமானம்** | | | | |
| **இலாபம் அல்லது நட்டத்தில் ஒருபொழுதும் வகைப்படுத்தப்படாத விடயங்கள்** | | | | |
| வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டங்கள் மீதான | | | | |
| காப்புறுதி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் | (635,394) | (1,066,589) | (635,372) | (1,124,163) |
| வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டப் | | | | |
| பொறுப்புக்களின் மீதான பிற்போடப்பட்ட வரி விளைவு | (1,884) | (77,795) | (1,953) | (58,094) |
| காணி மற்றும் கட்டிடங்களின் மீள் பெறுமதியிடலினால் | | | | |
| கிடைத்த இலாபங்கள் | - | - | 672,574 | (10,439) |
| ஏனைய பூரணமான வருமானங்களின் | | | | |
| ஆக்கக்கூற்றுகளுடன் தொடர்புடைய வரிச் செலவுகள் | - | - | (188,321) | - |
| | (637,278) | (1,144,384) | (153,072) | (1,192,696) |
| **இலாபம் அல்லது நட்டத்தின்** | | | | |
| **மீள் வகைப்படுத்தப்படுகின்ற அல்லது வகைப்படுத்தப்பட்ட விடயங்கள்** | | | | |
| விற்பனைக்குத் தயாரான நிதிச் சொத்துக்களை | | | | |
| மீள அளப்பதனால் கிடைக்கும் இலாபங்கள் (நட்டங்கள்) | 54,433 | 77,970 | 198,846 | 148,829 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் மீதான இலாபங்கள் அல்லது நட்டங்கள் | - | - | 30,594 | (21,062) |
| | 54,433 | 77,970 | 229,440 | 127,767 |
| **வரிக்குப் பின்னரான தேறிய வருடத்திற்கான ஏனைய பூரணமான வருமானம்** | (582,845) | (1,066,414) | 76,368 | (1,064,929) |
| **வருடத்திற்கான மொத்தப் பூரண வருமானம்** | 12,014,998 | 13,152,398 | 15,144,361 | 15,888,269 |
| **கூறமுடியுமான பகிர்ந்தளிக்கக்கூடியவை:** | | | | |
| வங்கியின் முதன்மைப் பங்குதாரர்களுக்கு | 12,014,998 | 13,152,398 | 13,809,600 | 14,830,776 |
| கட்டுப்படுத்த முடியாத உரித்துக்கள் | - | - | 1,334,761 | 1,057,493 |
| | 12,014,998 | 13,152,398 | 15,144,361 | 15,888,269 |

186 - 262 பக்கங்கள் வரையில் காணப்படுகின்ற குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகங்களை அமைக்கின்றன.

# நிதி நிலைமைக் கூற்று

| டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | வங்கி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 ரூபா. '000 | 2014 ரூபா. '000 | மாற்றம் % | 2015 ரூபா. '000 | 2014 ரூபா. '000 | மாற்றம் % |
| **சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 16 | 27,963,708 | 37,355,549 | (25.1) | 30,692,205 | 39,418,068 | (22.1) |
| இலங்கை மத்திய வங்கியுடனான மீதி | 17 | 42,947,711 | 43,584,872 | (1.5) | 42,947,711 | 43,584,872 | (1.5) |
| வங்கிகளிளான மீதிகள் | 18 | 8,097,147 | 13,681,425 | (40.8) | 8,097,147 | 13,681,425 | (40.8) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 19 | 4,109 | 22,233 | (81.5) | 24,853 | 22,233 | 11.8 |
| விற்பனைக்கான வைத்திருக்கப்படும் ஏனைய நிதிச் சொத்துக்கள் | 20 | 93,400,763 | 59,888,466 | 56.0 | 93,973,351 | 60,310,150 | 55.8 |
| வங்கிகளுக்கான கடன்களும் வருமதிகளும் | 21 | 114,606,980 | 129,488,851 | (11.5) | 115,519,933 | 133,005,677 | (13.1) |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் வருமதிகளும் | 22 | 768,514,659 | 627,209,062 | 22.5 | 869,780,503 | 722,099,483 | 20.5 |
| நிதிமுதலீடுகள்-விற்பனைக்குத் தயாரானவை | 23 | 3,533,745 | 3,387,770 | 4.3 | 5,661,807 | 5,011,892 | 13.0 |
| நிதிமுதலீடுகள்முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவை | 24 | 86,604,889 | 82,720,707 | 4.7 | 91,089,198 | 87,930,254 | 3.6 |
| துணை நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் | 25 | 1,475,766 | 1,045,908 | 41.1 | - | - | - |
| இணைக்கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் | 26 | - | 273,100 | (100.0) | - | 426,502 | (100.0) |
| நன்மதிப்பு மற்றும் புலப்படாச் சொத்துக்கள் | 27 | 126,888 | 114,548 | 10.8 | 462,355 | 462,073 | 0.1 |
| ஆதனங்கள், ஆலை மற்றும் உபகரணங்கள் | 28 | 16,303,750 | 14,946,764 | 9.1 | 22,695,989 | 19,364,133 | 17.2 |
| முதலீட்டுச் சொத்துக்கள் | 29 | 185,713 | 187,420 | (0.9) | 185,713 | 187,420 | (0.9) |
| குத்தகை முற்கொடுப்பனவுகள் | 30 | 536,321 | 558,877 | (4.0) | 536,321 | 558,877 | (4.0) |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 31 | 480,901 | 1,440,924 | (66.6) | 562,471 | 1,475,879 | (61.9) |
| ஏனைய சொத்துக்கள் | 32 | 12,359,723 | 10,862,382 | 13.8 | 13,136,823 | 11,719,016 | 12.1 |
| மொத்த சொத்துக்கள் | | 1,177,142,773 | 1,026,768,858 | 14.6 | 1,295,366,380 | 1,139,257,954 | 13.7 |
| **பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 33 | 143,923,634 | 143,754,943 | 0.1 | 162,687,453 | 162,433,372 | 0.2 |
| நிதி ஒப்பந்தங்கள் | 34 | 112,149 | 17,377 | 545.4 | 112,149 | 148,243 | (24.3) |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கானவை | 35 | 899,237,879 | 793,341,733 | 13.3 | 932,905,835 | 829,018,697 | 12.5 |
| ஏனைய கடன் பெறல்கள் | 36 | 48,159,101 | 13,442,898 | 258.2 | 63,107,816 | 31,391,206 | 101.0 |
| நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | | 3,845,472 | 459,612 | 736.7 | 4,505,841 | 1,052,831 | 328.0 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 31 | 842,007 | 1,060,634 | (20.6) | 3,494,727 | 2,936,209 | 19.0 |
| ஏனைய பொறுப்புக்கள் | 37 | 16,495,249 | 16,189,567 | 1.9 | 24,844,690 | 23,331,984 | 6.5 |
| துணைநிலை தவணைக்கடன்கள் | 38 | 15,032,542 | 15,032,542 | - | 30,907,240 | 24,883,132 | 24.2 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | 1,127,648,033 | 983,299,306 | 14.7 | 1,222,565,751 | 1,075,195,674 | 13.7 |
| **பங்குரிமை** | | | | | | | |
| கூறப்பட்ட மூலதனம்/ஒதுக்கப்பட்ட மூலதனம் | 39 | 7,201,998 | 7,201,998 | - | 7,201,998 | 7,201,998 | - |
| நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | 40 | 4,152,518 | 3,522,626 | 17.9 | 4,152,518 | 3,522,626 | 17.9 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 41 | 21,846,751 | 19,947,366 | 9.5 | 23,012,662 | 20,477,609 | 12.4 |
| தேக்கி வைக்கப்பட்ட வருவாய்கள் | 42 | 16,293,473 | 12,797,562 | 27.3 | 32,209,593 | 27,536,628 | 17.0 |
| மொத்த பங்காளர் உரிமை முதல் | | 49,494,740 | 43,469,552 | 13.9 | 66,576,771 | 58,738,861 | 13.3 |
| கட்டுப்படுத்த முடியாத உரித்துக்கள் | | - | - | - | 6,223,858 | 5,323,419 | 16.9 |
| **மொத்தப் பங்குரிமை** | | 49,494,740 | 43,469,552 | 13.9 | 72,800,629 | 64,062,280 | 13.6 |
| **மொத்த பங்குரிமை மற்றும் பொறுப்புக்கள்** | | 1,177,142,773 | 1,026,768,858 | 14.6 | 1,295,366,380 | 1,139,257,954 | 13.7 |
| நிகழ்சாத்தியப் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் | 43 | 181,532,583 | 182,573,201 | (0.6) | 181,545,417 | 182,597,120 | (0.6) |

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கான பொறுப்பினை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்களின் சார்பில் பின்வருவோரினால் ஒப்பிடப்பட்டுள்ளது.

**ஜீ.ஜீ.மஞ்சுல**
*நிதித் தலைவர்*

**என்.வசந்த குமார்**
*பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்/பொது முகாமையாளர்*

**ஹேமசிறி பெர்னான்டோ**
*தலைவர்*

2016 மார்ச் 23
கொழும்பு

| டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்காக | கூறப்பட்ட/ஒதுக்கப்பட்ட மூலதனம் | | ஒதுக்கங்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரண பங்குகள் | ஒதுக்கப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதி | மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | ஏனைய ஒதுக்கங்கள் | முதலீட்டு நிதி | விற்பனைக்கு கிடைக்கக் கூடியவை | தேக்கி வைக்கப்பட்ட வருவாய்கள் | மொத்தம் |
| | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா.'000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா.. '000 |
| **வங்கி** | | | | | | | | | |
| 01.01.2014 இல் உள்ளவாறு மீதி | 49,998 | 7,152,000 | 2,811,685 | 10,876,547 | 6,953,873 | 6,415,357 | 163,976 | 2,113,408 | 36,536,844 |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | - | - | - | - | 14,218,812 | 14,218,812 |
| **ஏனைய முழு வருமானம்** | | | | | | | | | |
| AFS முதலீட்டில் உள்ள நியாயப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்கள் | - | - | - | - | - | - | 77,970 | - | 77,970 |
| தேறிய ஓய்வூதியக் கடப்பாடு | - | - | - | - | - | - | - | (1,066,589) | (1,066,589) |
| வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் மீது பிற்போடப்பட்ட வரி விளைவு | - | - | - | - | - | - | - | (77,795) | (77,795) |
| ஏனைய பூரண வருமானங்கள் மீதான வரி | - | - | - | - | - | - | - | - | - |
| **மொத்த ஏனைய முழு வருமானம்** | - | - | - | - | - | - | 77,970 | (1,144,384) | (1,066,414) |
| **மொத்த முழு வருமானம்** | - | - | - | - | - | - | 77,970 | 13,074,428 | 13,152,398 |
| **உரிமை முதலில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரிமை முதல் வைத்திருப்போருடனான கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | | | |
| காலப்பகுதியின் போது ஒதுக்கத்திற்கான மாற்றம் | - | - | 710,941 | - | 1,875,000 | 157,096 | - | (2,743,037) | - |
| காலப்பகுதியின் போது தேக்கி வைக்கப்பட்ட வருவாய் மீதான மாற்றம் | - | - | - | - | - | (6,572,453) | - | 6,572,453 | - |
| இலங்கை அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - | - | - | - | - | - | (219,690) | (219,690) |
| திறைசேரிக்கான விசேட பங்கிலாபக் கொடுப்பனவு | - | - | - | - | - | - | - | (6,000,000) | (6,000,000) |
| **பங்குரிமையாளர்களுடனான மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள்** | - | - | 710,941 | - | 1,875,000 | (6,415,357) | - | (2,390,274) | (6,219,690) |
| **31.12.2014 இல் உள்ளவாறான மீதி** | 49,998 | 7,152,000 | 3,522,626 | 10,876,547 | 8,828,873 | - | 241,946 | 12,797,562 | 43,469,552 |
| **01.01.2015 இல் உள்ளவாறான மீதி** | 49,998 | 7,152,000 | 3,522,626 | 10,876,547 | 8,828,873 | - | 241,946 | 12,797,562 | 43,469,552 |
| விசேட அதிஷ்ட வரிக்கான சீராக்கம் (குறிப்பு 42.1) | | | | | | | | (2,770,120) | (2,770,120) |
| 01.01.2015 இல் உள்ளவாறான மீதி - சீராக்கப்பட்டது | 49,998 | 7,152,000 | 3,522,626 | 10,876,547 | 8,828,873 | - | 241,946 | 10,027,442 | 40,699,432 |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | - | - | - | - | 12,597,843 | 12,597,843 |
| **ஏனைய முழு வருமானம்** | | | | | | | | | |
| AFS முதலீடுகளில் உள்ள நியாயப் பெறுமதியில் ஏற்பட்ட இலாபம் | - | - | - | - | - | - | 54,433 | - | 54,433 |
| தேறிய ஓய்வூதியக் கடப்பாடு | - | - | - | - | - | - | - | (635,394) | (635,394) |
| வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் மீது பிற்போடப்பட்ட வரி விளைவு | - | - | - | - | - | - | - | (1,884) | (1,884) |
| ஆதனம் மற்றும் பொறிகளின் அகற்றல் நட்டம் | - | - | - | (30,048) | - | - | - | 30,048 | - |
| **மொத்த ஏனைய முழு வருமானம்** | - | - | - | (30,048) | - | - | 54,433 | (607,230) | (582,845) |
| **மொத்த முழு வருமானம்** | - | - | - | (30,048) | - | - | 54,433 | 11,990,613 | 12,014,998 |
| **உரிமை முதலில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரிமை முதல் வைத்திருப்போருடனான கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | | | |
| காலப்பகுதியின் போது ஒதுக்கத்திற்கான மாற்றம் | - | - | 629,892 | - | 1,875,000 | - | - | (2,504,892) | - |
| காலப்பகுதியின் போது தேக்கி வைக்கப்பட்ட வருவாய் மீதான மாற்றம் | - | - | - | - | - | - | - | - | - |
| இலங்கை அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம் (குறிப்பு 41.6) | - | - | - | - | - | - | - | (219,690) | (219,690) |
| திறைசேரிக்கான விசேட பங்கிலாபக் கொடுப்பனவு (குறிப்பு 41.7) | - | - | - | - | - | - | - | (3,000,000) | (3,000,000) |
| **பங்குரிமையாளர்களுடனான மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள்** | - | - | 629,892 | - | 1,875,000 | - | - | (5,724,582) | (3,219,690) |
| **31.12.2015 இல் உள்ளவாறான மீதி** | 49,998 | 7,152,000 | 4,152,518 | 10,846,499 | 10,703,873 | - | 296,379 | 16,293,473 | 49,494,740 |

| | பகிரப்பட்ட/ஒதுக்கப்பட்ட மூலதனம் | | ஒதுக்கங்கள் | | | | | | | மொத்தம் | கட்டுப்படுத்தாத உரிமை | மொத்தம் முதல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரண பங்குகள் ரூபா. '000 | ஒதுக்கப்பட்ட மூலதனம் ரூபா. '000 | நியதிச்சட்ட ஒதுக்க நிதி | மீள்பெறுமதியாக்க ஒதுக்கம் ரூபா. '000 | ஏனைய ஒதுக்கங்கள் ரூபா. '000 | முதலீட்டு நிதி ரூபா. '000 | விற்பனைக்குக் கிடைக்கக் கூடியவை ரூபா. '000 | காசுப்பாய்ச்சல் இழப்புக்காப்பீட்டு ஒதுக்கம் ரூபா. '000 | தேக்கி வைக்கப்பட்ட வருவாய்கள் ரூபா. '000 | ரூபா. '000 | உரித்துக்கள் ரூபா. '000 | முதல் ரூபா. '000 |
| **குழுமம்** | | | | | | | | | | | | |
| 01.01.2014 இல் உள்ளவாறு மீதி | 49,998 | 7,152,000 | 2,811,685 | 11,401,147 | 6,953,873 | 7,463,936 | 140,101 | - | 14,168,284 | 50,141,024 | 4,947,385 | 55,088,409 |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | - | - | - | - | - | 15,896,077 | 15,896,077 | 1,057,121 | 16,953,198 |
| **ஏனைய முழு வருமானம்** | | | | | | | | | | | | |
| AFS முதலீட்டில் உள்ள நியாயப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்கள் | - | - | - | - | - | - | 131,114 | - | - | 131,114 | 17,715 | 148,829 |
| தேறிய ஓய்வூதியக் கடப்பாடு | - | - | - | - | - | - | - | - | (1,109,769) | (1,109,769) | (14,394) | (1,124,163) |
| காணி மற்றும் கட்டடங்களின் மீள் பெறுமதியாக்கத்தினால் கிடைத்த இலாபம் | - | - | - | (7,829) | - | - | - | - | - | (7,829) | (2,610) | (10,439) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் தொடர்பான இலாபம்/நட்டம் | - | - | - | - | - | - | - | (15,797) | - | (15,797) | (5,265) | (21,062) |
| ஓய்வூதியத் திட்டத்தின் மீது பிற்போடப்பட்ட வரி விளைவு | - | - | - | - | - | - | - | - | (63,019) | (63,019) | 4,925 | (58,094) |
| ஏனைய பூரண வருமானங்கள் மீதான வரி | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **மொத்த ஏனைய பூரண வருமானம்** | - | - | - | (7,829) | - | - | 131,114 | (15,797) | (1,172,788) | (1,065,300) | 371 | (1,064,929) |
| **மொத்த பூரண வருமானம்** | - | - | - | (7,829) | - | - | 131,114 | (15,797) | 14,723,289 | 14,830,777 | 1,057,492 | 15,888,269 |
| **உரிமை முதலில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பங்குரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | | | | | | |
| காலப்பகுதியின் போது ஒதுக்கத்திற்கான மாற்றம் | - | - | 710,941 | - | 1,875,000 | 157,096 | - | - | (2,743,787) | (750) | (250) | (1,000) |
| காலப்பகுதியின் போது தேக்கி வைக்கப்பட்ட வருவாய் மீதான மாற்றம் | - | - | - | - | - | (7,621,032) | - | - | 7,621,032 | - | - | - |
| இலங்கை அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - | - | - | - | - | - | - | (219,690) | (219,690) | - | (219,690) |
| திறைசேரிக்கான விசேட பங்கிலாபக் கொடுப்பனவு | - | - | - | - | - | - | - | - | (6,000,000) | (6,000,000) | - | (6,000,000) |
| விற்றுத்தீர்த்ததால் இலாபம் எனக் கருதப்பட்டவற்றில் ஏற்பட்ட மாற்றம் | - | - | - | - | - | - | - | - | (12,500) | (12,500) | (187,500) | (200,000) |
| பங்கிலாபக் கொடுப்பனவு | - | - | - | - | - | - | - | - | - | - | (493,708) | (493,708) |
| **பங்குரிமையாளர்களுடனான மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள்** | - | - | 710,941 | - | 1,875,000 | (7,463,936) | - | - | (1,354,945) | (6,232,940) | (681,458) | (6,914,398) |
| **31.12.2014 இல் உள்ளவாறான மீதி** | 49,998 | 7,152,000 | 3,522,626 | 11,393,318 | 8,828,873 | - | 271,215 | (15,797) | 27,536,628 | 58,738,861 | 5,323,419 | 64,062,280 |
| **01.01.2015 இல் உள்ளவாறான மீதி** | 49,998 | 7,152,000 | 3,522,626 | 11,393,318 | 8,828,873 | - | 271,215 | (15,797) | 27,536,628 | 58,738,861 | 5,323,419 | 64,062,280 |
| வீசேட அதிகூட்ட வரிக்கான சீராக்கம் (குறிப்பு 42.1) | | | | | | | | | (3,413,319) | (3,413,319) | (214,400) | (3,627,719) |
| **01.01.2015 இல் உள்ளவாறான மீதி - சீராக்கப்பட்டது** | 49,998 | 7,152,000 | 3,522,626 | 11,393,318 | 8,828,873 | - | 271,215 | (15,797) | 24,123,309 | 55,325,542 | 5,109,019 | 60,434,561 |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | - | - | - | - | - | 13,898,052 | 13,898,052 | 1,169,941 | 15,067,993 |
| **ஏனைய முழு வருமானம்** | | | | | | | | | | | | |
| AFS முதலீடுகளில் உள்ள நியாயப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றம் | - | - | - | - | - | - | 162,726 | - | - | 162,726 | 36,120 | 198,846 |
| தேறிய ஓய்வூதியத் திட்டக் கடப்பாடு | - | - | - | - | - | - | - | - | (635,377) | (635,377) | 5 | (635,372) |
| ஆதனம் மற்றும் பொறிகளின் அகற்றல் நட்டம் | - | - | - | (30,048) | - | - | - | - | 30,048 | - | - | - |
| காணி மற்றும் கட்டட மீள் மதிப்பீட்டு மிகை | - | - | - | 504,430 | - | - | - | - | - | 504,430 | 168,144 | 672,574 |
| நிதி ஒப்பந்தச் சொத்துக்கள் மீதான இலாபமும் நட்டமும் | - | - | - | - | - | - | - | 22,945 | - | 22,945 | 7,649 | 30,594 |
| ஓய்வூதியத் திட்டங்கள் மீது பிற்போடப்பட்ட வரி விளைவு | - | - | - | - | - | - | - | - | (1,935) | (1,935) | (18) | (1,953) |
| மொத்த ஏனைய முழு வருமானம் மீதான வரி | - | - | - | - | - | - | - | - | (141,241) | (141,241) | (47,080) | (188,321) |
| **மொத்த ஏனைய முழு வருமானம்** | - | - | - | 474,382 | - | - | 162,726 | 22,945 | (748,505) | (88,452) | 164,820 | 76,368 |
| **மொத்த முழு வருமானம்** | - | - | - | 474,382 | - | - | 162,726 | 22,945 | 13,149,547 | 13,809,600 | 1,334,761 | 15,144,361 |
| **உரிமை முதலில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பங்குரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | | | | | | |
| காலப்பகுதியின் போது ஒதுக்கத்திற்கான மாற்றம் | - | - | 629,892 | - | 1,875,000 | - | - | - | (2,504,892) | - | - | - |
| பங்கு வெளியீடு | - | - | - | - | - | - | - | - | 609,561 | 609,561 | 140,439 | 750,000 |
| இலங்கை அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம் (குறிப்பு 41.6) | - | - | - | - | - | - | - | - | (219,690) | (219,690) | - | (219,690) |
| திறைசேரிக்கான விசேட பங்கிலாபக் கொடுப்பனவு (குறிப்பு 41.7) | - | - | - | - | - | - | - | - | (3,000,000) | (3,000,000) | - | (3,000,000) |
| குறிப்பிட்ட வருடத்தில் பெறப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | - | - | 133,346 | 133,346 |
| பங்கிலாபக் கொடுப்பனவு | - | - | - | - | - | - | - | - | - | - | (493,707) | (493,707) |
| கூட்டுமுயற்சிகளில் உள்ள உடமைகளின் மாற்றம் | - | - | - | - | - | - | - | - | 51,758 | 51,758 | - | 51,758 |
| **பங்குரிமையாளர்களுடனான மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள்** | - | - | 629,892 | - | 1,875,000 | - | - | - | (5,063,263) | (2,558,371) | (219,922) | (2,778,293) |
| **31.12.2015 இல் உள்ளவாறான மீதி** | 49,998 | 7,152,000 | 4,152,518 | 11,867,700 | 10,703,873 | - | 433,941 | 7,148 | 32,209,593 | 66,576,771 | 6,223,858 | 72,800,629 |

# காசுப் பாய்ச்சல் கூற்று

| டிசெம்பர் 31இல் முடிவடைந்த வருடத்திற்காக | குறிப்பு | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|
| | | 2015 | 2014 | 2015 | 2014 |
| | | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| **இயக்கச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | | |
| வரிக்கு முந்திய இலாபம் | | 19,519,520 | 17,231,057 | 24,121,166 | 21,627,553 |
| சீராக்கல்கள்: | | | | | |
| வரிக்கு முந்திய இலாபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள காசு சாரா விடயங்கள் | 49 | 5,332,075 | (417,875) | 7,534,618 | 1,154,022 |
| இயக்கச் சொத்துக்களில் ஏற்படும் மாற்றங்கள் | 50 | (159,548,878) | (68,905,022) | (162,772,110) | (77,940,172) |
| இயக்கப் பொறுப்புக்களில் ஏற்படும் மாற்றங்கள் | 51 | 138,914,804 | 86,697,864 | 132,999,699 | 93,785,221 |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்து கிடைக்கும் தேறிய இலாபங்கள் | | - | - | - | - |
| இணைக் கம்பனிகள் மற்றும் இணைந்த வியாபார முயற்சிகளில் உள்ள இலாபங்களின் பங்கு | | - | - | - | 19,872 |
| துணை நிறுவனங்கள் இணைக்கம்பனிகள் மற்றும் ஏனையவற்றில் இருந்து கிடைக்கும் பங்கிலாப வருமானம் உள்ள இலாபங்களின் பங்கு | | (1,659,531) | (1,648,601) | (219,051) | (98,589) |
| துணைநிலைக் கடன் மீதான வட்டிச் செலவு | | 1,987,500 | 2,014,583 | 1,987,500 | 2,014,583 |
| ஓய்வூதியத் திட்டம்/பணிக்கொடைக்கு செலுத்தப்பட்ட பங்களிப்பு | | 1,526,525 | 1,443,255 | 1,563,511 | 1,472,620 |
| செலுத்தப்பட்ட வரி | | (5,566,426) | (3,217,949) | (7,990,113) | (4,578,472) |
| **இயக்கச் செயற்பாடுகளில் இருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு** | | 505,589 | 33,197,313 | (2,774,780) | 37,456,638 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்து கிடைக்கும் காசுப்பாய்ச்சல்கள்** | | | | | |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணக் கொள்வனவு | | (2,079,622) | (1,124,878) | (2,378,217) | (2,161,371) |
| சொத்து, ஆலை மற்றும் உபகரண விற்பனையினால் கிடைத்த இலாபங்கள் | | 93,379 | 59,055 | 104,264 | 50,608 |
| நிதி முதலீடுகளின் கொள்வனவு | | (4,173,564) | (7,067,599) | (3,448,325) | (9,738,534) |
| நிதி முதலீடுகளின் விற்பனை மற்றும் முதிர்ச்சியினால் கிடைத்த இலாபங்கள் | | | | | |
| புலப்படாச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு | | (43,206) | (97,275) | (44,684) | (104,801) |
| துணைநிறுவனங்கள் மற்றும் இணைக்கம்பனிகளில் உள்ள முதலீடுகளை கொள்வனவு செய்ததனால் கிடைத்த தேறிய காசுப்பாய்ச்சல் | | (346,758) | - | (726,385) | - |
| துணைநிறுவனங்களின் முன்னுரிமைப் பங்குகளில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல் | | 200,000 | 200,000 | - | - |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டுமுயற்சிகளில் இருந்து கிடைத்த இலாபங்கள் | | - | - | - | - |
| துணை நிறுவனங்கள் மற்றும் இணைக்கம்பனிகளில் உள்ள முதலீட்டில் இருந்து கிடைத்த பங்கிலாபங்கள் | | 1,659,531 | 1,648,601 | 219,051 | 98,589 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்து கிடைத்த தேறிய காசு** | | (4,690,240) | (6,382,096) | (6,274,296) | (11,855,509) |
| **நிதிச் செயற்பாடுகளில் இருந்து கிடைக்கும் காசுப்பாய்ச்சல்** | | | | | |
| துணைநிலைக் கடன்களின் விநியோகத்தில் இருந்து கிடைத்த தேறிய இலாபங்கள் | | - | - | 6,024,110 | 1,741,681 |
| துணைநிலைக் கடன்கள் மீள் கொடுப்பனவு | | - | - | | |
| துணைநிலைக் கடன்கள் மீதான வட்டி கொடுப்பனவு | | (1,987,500) | (2,014,583) | (1,987,500) | (2,014,583) |
| இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | (219,690) | (219,690) | (219,690) | (219,690) |
| கட்டப்படுத்தப்படாத உரித்துடமையாளர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | - | - | (493,707) | (493,708) |
| ஏனைய பங்குமூலதன சாதனங்களைக் கொண்டிருப்போருக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | (3,000,000) | (6,000,000) | (3,000,000) | (6,000,000) |
| பங்கு வழங்கல் செலவுகள் | | - | - | - | - |
| உடமை மாற்றங்களை அகற்றல் | - | - | - | - | |
| **நிதிச் செயற்பாடுகளில் இருந்து கிடைக்கும் தேறிய காசு** | | (5,207,190) | (8,234,273) | 323,213 | (6,986,300) |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் உள்ள தேறிய அதிகரிப்பு/(குறைப்பு)** | | (9,391,841) | 18,580,944 | (8,725,863) | 18,614,828 |
| வருட ஆரம்பத்தில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | 37,355,549 | 18,774,605 | 39,418,068 | 20,803,240 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் தொடர்பான நாணயமாற்று வித்தியாசம் | | - | - | - | - |
| வருட முடிவில்போது உள்ளவாறான காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | 27,963,708 | 37,355,549 | 30,692,205 | 39,418,068 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்



## 1. அறிக்கையிடும் அமைப்பு

### 1.1 பெரு நிறுவனத் தகவல்

1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான வங்கியே மக்கள் வங்கியாகும். மக்கள் வங்கியானது, 1961 ஜூலை 01 ஆந் திகதியில் இருந்து இலங்கையில் இயங்கி வருகின்றது. 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வங்கியின் திரட்டிய நிதிக் கூற்றானது, வங்கியினையும், அதன் துணை நிறுவனங்களையும், மேலும் இணை நிறுவனங்களில் அது கொண்டுள்ள உரிமை முதல் அக்கறைகளையும் உள்ளடக்குகின்றது. (இவை ஒன்றாகச் சேர்த்து குழுமம் எனக் குறிப்பிடப்படுகின்றது).

### 1.2 முதன்மைச் செயற்பாடுகள்

**வங்கி**

வங்கியின் செயற்பாடுகளுள் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல், கடன் வசதிகளை வழங்குதல், தனிப்பட்ட வங்கிச் சேவை, அபிவிருத்தி வங்கிச் சேவை, அடகு, தரகராகச் செயற்படுதல், சர்வதேச வர்த்தகம், அரசாங்கப் பிணையங்களில் பங்கேற்றல், கடன் அட்டைச் செயற்பாடுகள், முதலீட்டு வங்கிச் சேவைகள் மற்றும் வெளிநாட்டு நாணயத்திலான வங்கிச் சேவைக்காக கடல் கடந்த வங்கிச் சேவைப் பிரிவினை நடத்துதல் போன்றவை உள்ளடங்குகின்றன.

**துணை நிறுவனங்கள்**

வங்கியின் துணை நிறுவனங்களின் முதன்மைச் செயற்பாடுகள் பின்வருமாறு:

| கம்பனியின் பெயர் | முதன்மைச் செயற்பாடு |
|---|---|
| பீபிள் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | நிதிக் குத்தகைகளையும், வாடகைக் கொள்வனவுச் சொத்துக்களுக்காக நிதியிடலையும் தவணைக் கடன்களையும் எல்லை வியாபாரத்தினையும் கடன் ஒப்பந்தங்களை வழங்குதலையும் வைப்புக்களைத் திரட்டுதலையும் மேற்கொள்கின்றது. |
| பீபிள்ஸ் டிரவல்ஸ் பிரைவேட் லிமிடட் | சுற்றுலாக்களையும், விமானப் பயணச் சீட்டுக்களையும் ஏற்பாடு செய்கின்றது. (பயண முகவர்) |
| பீபிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி | குத்தகை, வாடகைக் கொள்வனவு, நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்கள், நாணயமாற்று |

**உப துணை நிறுவனங்கள்**

வங்கியின் உப துணை நிறுவனங்களின் பிரதான செயற்பாடுகளில் உள்ளடங்குபவை:

| கம்பனியின் பெயர் | முதன்மைச் செயற்பாடு |
|---|---|
| பீபிள்ஸ் லீசிங் பிலீட் மனேஜ்மன்ட் லிமிடட். | வாகனத் தொடரணி முகாமைத்துவம், வாகனங்களின் பெறுமதி கணித்தல் மற்றும் வாகனச் சேவை நிலையத்தினை இயக்குதல். |
| பீபிள்ஸ் லீசிங் புரப்பட்டி டிவலப்மன்ட் லிமிடட். | கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தினை நடத்துதலும், சொத்துக்களின் விருத்திச் செயற்பாடுகளும். |
| பீபிள்ஸ் இன்சூரன்ஸ் லிமிடட். | பொதுக் காப்புறுதி வியாபாரத்தினை மேற்கொள்ளுதல். |
| பீபிள்ஸ் மைக்ரோ பினான்ஸ் லிமிடட். | தாழ்ந்த வருமானம் ஈட்டுவோருக்கும், சிற்றினத் தொழில்முயற்சியாளருக்கும் வங்கிச் சேவை வழங்குதல் நீங்கலாக நிதிச் சேவை வழங்குதல். |
| பீபிள்ஸ் லீசிங் ஹெவ்லொக் புரப்பட்டிஸ் லிமிடட். | அலுவலகக் கட்டிடம் ஒன்றை நிர்மாணித்து இயக்குதல். |

## 2. தயாரிப்பின் அடிப்படை

### 2.1 இயைபுறலுக்கான கூற்று

நிதிநிலைமைக் கூற்று, வருமானக் கூற்று, இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய பூரண வருமானக் கூற்று, உரிமை முதலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியவை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும், சமர்ப்பணமும் 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இயைபானதாகும். நிதிக் கூற்றின் சமர்ப்பணமும், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இயைபாக உள்ளது.

### 2.2 நிதிக் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

பணிப்பாளர் சபையானது, இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுக்கு அமைவாகத் திரட்டிய நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

### 2.3 நிதிக் கூற்றுக்களின் அங்கீகாரம்

2016 மார்ச் 23 இல் விநியோகிக்கப்படுவதற்காக 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான திரட்டிய நிதிக் கூற்றுக்களுக்கு பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டன.

### 2.4 அளவீட்டின் அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பின்வருவன தவிர்ந்த பணவீக்கக் காரணிகளுக்காக எவ்வித சீராக்கங்களும் மேற்கொள்ளப்படாது இவை தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டன:

- இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயப் பெறுமதியில் அளக்கப்பட்ட நிதி சாரா ஒப்பந்தங்கள்.
- நிதி ஒப்பந்தங்கள் நியாயப் பெறுமதியில் அளக்கப்பட்டன.
- விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதிச் சொத்துக்கள் நியாயப் பெறுமதியில் அளக்கப்பட்டன.
- ஓய்வூதியக் கடப்பாடுகளுக்கான பொறுப்புக்கள் காப்புறுதி ரீதியாகப் பெறுமதி கணிக்கப்பட்டு திட்டச் சொத்துக்களின் தேறிய மொத்தத்தில் ஓய்வூதியக் கடப்பாடுகள் நீங்கலாக தற்போதைய பெறுமதியாக அவை அடையாளம் காணப்பட்டன.
- காணிகள் மற்றும் கட்டிடங்கள், அவை கொள்வனவு செய்யப்பட்ட போதிருந்த

செலவில் அளக்கப்பட்டு அவற்றின் திரட்டிய தேய்மானச் செலவு மற்றும் சேத இழப்புக்கள் நீங்கலாக தொடர்ச்சியாக மீள் பெறுமதி கணிக்கப்பட்டன.

### 2.5 செயற்பாட்டு நாணயம் மற்றும் சமர்ப்பண நாணயம்

திரட்டிய நிதிக் கூற்றுக்கள், இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றன. இதுவே வங்கியின் செயற்பாட்டு நாணயமாகும். இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்ற நிதித் தகவல்கள் வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலேயன்றி கிட்டிய ஆயிரம் ரூபாவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.6 பொருட்பாடு மற்றும் மொத்தம்

ஒரே விதமான விடயத்தின் ஒவ்வொரு பொருள் வகையும் நிதிக் கூற்றில் வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சமமற்ற விடயங்கள் அல்லது செயற்பாடுகள் பொருட்படுத்தத் தகாதவையாக இருந்தாலேயன்றி வேறாகச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

## 03. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுத் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

வங்கியின் கணக்கீட்டுக் கொள்கையினைப் பிரயோகிக்கும் செயன்முறையில் நிதிக் கூற்றினில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகைகளைத் தீர்மானிக்கையில், முகாமைத்துவமானது, தீர்மானங்களையும், மதிப்பீடுகளையும், ஊகங்களையும் பயன்படுத்தியுள்ளது. உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகளில் இருந்து மாறுபடலாம்.

மதிப்பீடுகளும் உள்ளாந்த ஊகங்களும் தொடர்ந்து நடைபெறும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான மீளாய்வுகள், மதிப்பீடுகள் மீளாய்வு செய்யப்படுகின்ற எந்தவொரு காலப்பகுதியிலும், பாதிக்கப்பட்ட எந்தவொரு எதிர்காலப் பகுதியிலும் அங்கீகரிக்கப்படுகின்றன.

திரட்டிய நிதிக் கூற்றினில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகைகளில் மிகவும் கணிசமான விளைவுகளைக் கொண்டுள்ள, கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கையில், பயன்படுத்தப்பட்ட தீர்மானங்கள், ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய தகவல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

### 3.1 வங்கியானது எதிர்காலத்தில் தொடர்ந்தும் இயங்கும் என்கின்ற ஊகம்

வங்கியானது எதிர்காலத்தில் தொடர்ந்து இயங்குவதற்கான அதன் ஆற்றலை வங்கியின் முகாமைத்துவம் மதிப்பிட்டு அது எதிர்வரும் காலங்களில் தனது வியாபாரத்தினைத் தொடர்ந்து நடத்துவதற்கான வளங்களைக் கொண்டுள்ளது என்பதையிட்டுத் திருப்தியடைகின்றது. மேலும், எதிர்காலத்தில் தொடர்ந்து இயங்குவதற்கான வங்கியின் ஆற்றல் மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தை எழுப்பக்கூடிய முக்கியமான நிச்சயமற்ற தன்மைகள் எதனையும் பற்றி முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. எனவே, வங்கியானது, எதிர்காலத்திலும் தொடர்ந்து நிலைத்திருக்கும் என்கின்ற அடிப்படையிலேயே நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்தும் தயாரிக்கப்படுகின்றன.

### 3.2 நிதி ஒப்பந்தங்களின் நியாயப் பெறுமதி

நிதிநிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியினை, இயங்குகின்ற சந்தைகளில் இருந்து பெற முடியாமல் இருக்கையில், அவை கணக்கீட்டு மாதிரிகளைப் பயன்படுத்துதல் உள்ளடங்கிய பல்வேறு பெறுமதியாக்க உத்திகளைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றன. இந்த மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான பொழுது அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகளில் இருந்து பெறப்படுகின்றன. எவ்வாறாயினும், இது கிடைக்காத பட்சத்தில், நியாயப் பெறுமதியினை நிலைநாட்டுவதற்குத் தீர்மானங்கள் எடுக்கப்படுவது தேவைப்படுத்தப்படுகின்றது. நிதி ஒப்பந்தங்களின் பெறுமதி கணித்தலானது, மிகவும் விரிவாக குறிப்பு 46 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.3 கடன்கள் மற்றும் முற்பணங்களின் சேத இழப்புக்கள்

சேத இழப்பானது, இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்பட வேண்டுமா என்பதை மதிப்பிடுவதற்காக வங்கியானது, அதன் நிதி நிலைமையின் ஒவ்வொரு கூற்றிலும் தனித்தனியே முக்கியமான கடன்கள் மற்றும் முற்பணங்களை, ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்கின்றது. குறிப்பாக, சேத இழப்பீட்டினைத் தீர்மானிக்கும் போது எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களின் தொகை மற்றும் சேதத்தினை மதிப்பிடுவதற்கு முகாமைத்துவத் தீர்மானம் தேவைப்படுத்தப்படுகின்றது. இந்த மதிப்பீடுகள் பல காரணிகள் பற்றிய ஊகங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் உண்மையான பெறுபேறுகள் மாற்றமடையலாம்.

தனிப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் சேத மதிப்பீடு தேவைப்படுத்தப்படவில்லை எனின், அவ்வாறான தனித்தனியே முக்கியமான கடன்கள் மற்றும் சேரவேண்டியவைகள் ஒரே அபாயநேர்வுப் பண்புகளைக் கொண்ட சொத்துக் குழுக்களாகக் கூட்டாக மதிப்பிடப்படுகின்றன. நட்ட நிகழ்வு ஏற்படுவதற்கான புறவயமான சான்றுகள் இருக்கையிலும், அதன் விளைவுகள் இதுவரை சான்றாகாமல் இருக்கையிலும் ஏற்படக்கூடிய இழப்பிற்கு ஒதுக்கீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதை இது தேவைப்படுத்துகின்றது. கூட்டு மதிப்பீடானது, கடன் தொகுதியில் இருந்தான தரவுகளையும், அபாயநேர்வுகளின் செறிவு மற்றும் பொருளாதாரத் தரவுகளின் விளைவு பற்றிய தீர்மானங்களையும் கவனத்திற் கொள்கின்றது (கடன் உரித்தாண்மை வகைகள், நிலுவை மட்டங்கள், கைத்தொழிற் துறைகள் ஆகியவை).

### 3.4 விற்பனைக்குத் தயாராகவுள்ள முதலீடுகளின் சேதம்

சேதம் ஏற்பட்டுள்ளதா என்பதை மதிப்பிடுவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் போதும் வங்கியானது விற்பனைக்கு தயாராகவுள்ள முதலீடுகள் என வகைப்படுத்தியுள்ள அதன் பிணையங்களை மீளாய்வு செய்கின்றது. தனிப்பட்ட கடன்கள் மற்றும் சேரவெண்டியவைகளின் மதிப்பீட்டிற்குப் பிரயோகிக்கப்படாத பொன்ற அதே தீர்மானங்கள் இதற்கும் தேவைப்படத்தப்படுகின்றன.

நியாயப் பெறுமதியில் செலவுக்குக் கீழ் கணிசமான அல்லது நீடித்த வீழ்ச்சி காணப்படுகையில், விற்பனைக்குத் தயாராகவுள்ள உரிமை முதல் முதலீடுகளின் மீது வங்கியானது சேதக் கட்டணங்களைப் பதிவு செய்கின்றது. எது கணிசமானது அல்லது எது நீடித்தது எனும் தீர்மானம் தொடர்பில் நியாயப்படுத்தல்கள் தேவைப்படுத்தப்படுகின்றன.

### 3.5 வரையறுக்கப்பட்ட ஓய்வூதியக் கடப்பாடுகள்

காப்புறுதிப் பெறுமதி கணித்தல் உத்தியினைப் பயன்படுத்தி வரையறுக்கப்பட்ட ஓய்வூதியக் கடப்பாடுகளின் செலவானது தீர்மானிக்கப்படுகின்றது. காப்புறுதிப் பெறுமதி கணித்தலானது, கழிவு வீதங்கள், சொத்துக்களின் மீதான திரும்பல்களின் எதிர்பார்க்கப்பட்ட வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள், இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புக்கள் ஆகியவற்றின் மீதான ஊகங்களைத் தொடர்புபடுத்துகின்றது. சகல ஊகங்களும் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் போதும் மீளாய்வு செய்யப்படுகின்றன. இந்தத் திட்டங்களின் நீண்டகாலத் தன்மையின் காரணமாக இவ்வாறான மதிப்பீடுகள் கணிசமாக நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுகின்றன. பயன்படுத்தப்படுகின்ற ஊகங்கள் பற்றி குறிப்பு 37.1.5 மற்றும் 37.2.1னைப் பார்க்கவும்.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

### 3.6 சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதி

குழுமத்தின் உரித்துரிமை நிலம் மற்றும் கட்டிடங்கள் மற்றும் குத்தகைக் காணியில் உள்ள கட்டிடங்கள் நியாயப் பெறுமதியில் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறான சொத்துக்களின் நியாயப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்கு குழுமமானது சுயாதீனமான பெறுமதி கணித்தல் நிபுணர்களை ஈடுபடுத்தியது. ஒரேவிதமான சொத்துக்களின் நடப்புச் சந்தை விலைகள் கிடைக்கக்கூடியதாக இருக்கையில், இந்தச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியினை மதிப்பிடுவதில் அவ்வாறான சான்றுகள் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

### 3.7 சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் பயன்படு ஆயுட்காலம்

குழுமமானது, ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் போதும், சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் எஞ்சிய பெறுமதிகள், பயன்படு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்வுக்கான முறைகளை மீளாய்வு செய்கிறது. இந்தப் பெறுமதிகளை, கட்டணங்களை முறைகளை மதிப்பீடு செய்கையில் முகாமைத்துவத்தின் தீர்மானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, இவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுகின்றன.

## 04. கவனத்திற் கொள்ளப்படக்கூடிய கணக்கீட்டுக் கொள்கைகள்

இந்தத் திரட்டிய நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல காலப் பகுதிகளுக்கும் குழுமமானது, குறிப்பு 4.1 முதல் 4.28 வரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளைத் தொடர்ச்சியாகப் பிரயோகித்துள்ளது.

### 4.1 திரட்டல் அடிப்படை

வங்கியினதும் குழுமத்தினதும் நிதிக் கூற்றுக்கள் 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வங்கியினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன. திரட்டல் நோக்கத்திற்காக வங்கியின் துணைக் கம்பனிகளின் நிதிக் கூற்றுக்கள் மக்கள் வங்கியினது அதே அறிக்கையிடல் வருடத்திற்காக ஒத்திசைவான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன.

#### *4.1.1 வியாபாரச் சேர்க்கைகள்*

வியாபாரச் சேர்க்கைகள் கொள்வனவு முறையினைப் பயன்படுத்தி கொள்வனவுத் திகதியிலுள்ளவாறாகக் கணக்கு வைக்கப்படுகின்றன. அதாவது, கட்டுப்பாடானது, குழுமத்திற்கு மாற்றப்படுகையில், கொள்வனவில் மாற்றப்படுகின்ற பெருபேறானது, பொதுவாக நியாயப் பெறுமதியில் அளக்கப்படுகின்றது. இதேபோலவே அடையாளம் காணப்படக்கூடிய தேறிய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. எழுகின்ற எந்த நன்மதிப்பும், சேதத்திற்காக வருடாந்தம் பரிசீலிக்கப்படுகின்றது. பேரம் பேசி மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொள்வனவிலிருந்து கிடைக்கும் இலாபமும் உடனடியாக இலாபம் அல்லது நட்டத்தில் அடையாளம் காணப்படுகின்றது. கொடுக்கல் வாங்கல் செலவுகள் கடன் பிணையங்களின் அல்லது உரிமை முதல் பிணையங்களின் விநியோகத்துடன் தொடர்புபடாத போது, அவை ஏற்பட்ட செலவுகளாகச் செலவு வைக்கப்படுகின்றன. மாற்றப்பட்ட பெருபேறுகள் முன்பு நிலவிய உறவுகளை விற்றுத் தீர்த்தலுடன் தொடர்புடைய தொகைகளை உள்ளடக்காது. இவ்வாறான தொகைகள் பொதுவாக இலாபம் அல்லது நட்டத்தில் அடையாளம் காணப்படுகின்றன. செலுத்தப்பட வேண்டிய ஏதாவது நிகழ்சாத்திய பெருபேறுகள் கொள்வனவுத் திகதியின் போது நியாயப் பெறுமதியில் அளக்கப்படுகின்றன. நிகழ்சாத்திய பெருபேறுகள் உரிமை முதலாக வகைப்படுத்தப்பட்டால், அது மீள அளக்கப்பட மாட்டாது. மேலும், விற்றுத் தீர்த்தலானது, உரிமை முதலினுள் கணக்கு வைக்கப்படுகின்றது. இல்லாவிடின் நிகழ்சாத்திய பெருபெறுகளின் நியாயப் பெறுமதியில் ஏற்படும் தொடர்ச்சியான மாற்றங்கள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் அடையாளம் காணப்படுகின்றன.

#### *4.1.2 கட்டுப்படுத்த முடியாத உடமை*

கட்டுப்படுத்தாத உடமையானது கொள்வனவுத் திகதியின் போது கொள்வனவு செய்பவரின் அடையாளம் காணத்தக்க தேறிய சொத்துக்களின் விகிதாசார பங்கில் அளக்கப்படுகின்றது. கட்டுப்பாட்டு இழப்புக்கு இட்டுச் செல்லாத துணை நிறுவனம் ஒன்றில் குழு கொண்டுள்ள கரிசனையில் ஏற்படுகின்ற மாற்றமானது, உரிமை முதல் கொடுக்கல் வாங்கல்களாக கணக்கு வைக்கப்பட்டுள்ளன.

#### *4.1.3 துணை நிறுவனங்கள்*

துணை நிறுவனங்கள் என்பவை குழுமத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற முதலீட்டாளர்களாகும். முதலீட்டாளருடன் தான் கொண்டுள்ள ஈடுபாட்டின் காரணமாக ஏற்படுகின்ற மாறுபடுகின்ற திரும்பல்களின் மீது குழுமமானது உரிமையினைக் கொண்டிருக்கும் பொழுது அல்லது அதனை அனுபவிக்கும் பொழுது அது முதலீட்டாளரின் மீது கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ளது. மேலும், முதலீட்டாளரின் மீதான அதன் அதிகாரத்தின் மூலமாக அந்தத் திரும்பல்களில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலையும் அது கொண்டிருக்க வேண்டும். துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் கட்டுப்பாடு ஆரம்பித்த திகதியில் இருந்து கட்டுப்பாடு முடிவடையும் திகதி வரையில் திரட்டிய நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

#### *4.1.4 கட்டுப்பாட்டு இழப்பு*

குழுமம் ஒன்று ஒரு துணை நிறுவனத்தின் மீதான கட்டுப்பாட்டினை இழக்கும் போது அது துணை நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அங்கீகாரத்தை அளிக்கின்றது. மேலும் அதனுடன் தொடர்புடைய NCI மற்றும் உரிமை முதலீட்டின் ஏனைய ஆக்கக்கூறுகள் மீதான அங்கீகாரத்தினையும் அளிக்கின்றது. இதிலிருந்து எழுகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டமாக அங்கீகரிக்கப்படுகின்றது. கட்டுப்பாடு இழக்கும் போது முன்னைய துணை நிறுவனத்தில் தேக்கி வைக்கப்படுகின்ற ஏதாவது கரிசனையானது நியாயப் பெறுமதியில் அளக்கப்படுகின்றது.

#### *4.1.5 ஒருங்கிணைப்பின் போது அகற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்*

குழுமத்திற்கு இடையிலான மீதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் குழுமத்திற்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்களில் இருந்து எழுகின்ற பூர்த்தியாக்கப்படாத வருமானம் மற்றும் செலவுகள் திரட்டிய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் அகற்றப்படுகின்றன. (வெளிநாட்டு நாணயக்கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்பட்ட இலாபங்கள் அல்லது நட்டங்கள் நீங்கலாக) குழுமம் மற்றும் அதன் இணைக் கம்பனிகளுக்கு இடையில் ஏற்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களினால் எழுகின்ற நிறைவேற்றப்படாத இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இணை நிறுவனங்களில் குழுமங்களின் கரிசனைகள் எந்தளவு இருக்கின்றதோ அந்தளவிற்கு திரட்டிய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் அகற்றப்படுகின்றன.

நிறைவேற்றப்படாத இழப்புக்கள் நிறைவேற்றப்பாத இலாபங்களைப் போலவே அதே விதத்திலேயே அகற்றப்படுகின்றன. ஆனால், சேதத்திற்கான சான்று இல்லாமல் இருக்கும் வரையிலேயே இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது.

#### *4.1.6 இணை நிறுவனங்கள்*

இணை நிறுவனங்களின் நிதி மற்றும் இயக்கக் கொள்கைகள் மீது குழுமமானது கணிசமான செல்வாக்கினைக் கொண்டிருக்கின்றது. ஆனால், கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதில்லை. குழுமமானது, இன்னுமொரு அமைப்பின் வாக்களிக்கும் சக்தியின் மீது 20% – 50% இடையிலான விழுக்காட்டினைக் கொண்டிருக்கையில் கணிசமான செல்வாக்கு இருக்கின்றது எனக் கருதப்படுகின்றது. இணைக் கம்பனிகளில் மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகள் உரிமை முதல் முறையினைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றன. மேலும் இவை ஆரம்பத்தில் செலவில் அடையாளம்

காணப்படுகின்றன. முதலீட்டுச் செலவானது கொடுக்கல் வாங்கல் செலவுகளையும் உள்ளடக்குகின்றது.

திரட்டிய நிதிக்கூற்றுக்கள் கணிசமான செல்வாக்கானது ஆரம்பித்த திகதியில் இருந்து அது முடிவடையும் திகதி வரையில் குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இயைபுற்றவாறாக சீராக்கல்களை மேற்கொண்ட பின்னர் வங்கியின் இலாபம் அல்லது நட்டத்தின் பங்கினையும் வேறு பூரண வருமானத்தினையும் உள்ளடக்குகின்றது.

வங்கியின் நட்டத்தின் பங்கானது உரிமை முதலில் கணக்கு வைத்துள்ள முதலீட்டாளரின் வட்டியினைத் தாண்டுகையில் ஏதாவது நீண்டகால முதலீடுகள் உள்ளடங்கலாக அந்த வட்டியின் புத்தகப் பெறுமதியானது பூச்சியத்தில் அறிக்கையிடப்படுகின்றது. மேலும் குழுமமானது கடப்பாட்டினைக் கொண்டுள்ளது அல்லது முதலீட்டாளரின் சார்பில் கொடுப்பனவினைச் செலுத்தியுள்ளது என்பதைத் தவிர மேலதிக இழப்புக்களின் அங்கீகாரமானது துண்டிக்கப்படுகின்றது. இணைக் கம்பனியானது தொடர்ந்து இலாபத்தினை அறிக்கையிட்டால் அங்கீகரிக்கப்படாத நட்டத்தின் பங்கானது இலாபத்தின் பங்கிற்கு சமமான பின்னர் மாத்திரமே வங்கி அதன் இலாபத்தின் பங்கினை அங்கீகரிக்க ஆரம்பிக்கும்.

## 4.2 வெளிநாட்டு நாணய மாற்றம்

வெளிநாட்டு நாணயங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும் திகதியின் போது நிலவுகின்ற நாணயமாற்ற தள விகித அடிப்படையில் பதிவுசெய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தொகைகளில் குறிப்பிடப்படுகின்ற பணச்சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடல் திகதியின்போது உள்ள நாணயத்தள விகிதத்தில் மாற்றப்படுகின்றன. வியாபாரம் சாராத செயற்பாடுகளில் இருந்து எழுகின்ற சகல வித்தியாசங்களும் வருமானக்கூற்றினில் ஏனைய இயக்க வருமானமாக எடுக்கப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்றுச் செலவு எனும் அடிப்படையில் அளக்கப்படுகின்ற பணம், பணம் சாராத விடயங்கள் அங்கீகாரத் திகதியின்போது உள்ள நாணயமாற்று தள விகிதத்திற்கு மாற்றப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் நியாயப்பெறுமதியில் அளக்கப்படுகின்ற பணம் சாராத விடயங்கள் நியாயப்பெறுமதி தீர்மானிக்கப்படுகின்ற தினத்தில் உள்ள தள நாணயப்பரிமாற்ற வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றப்படுகின்றன.

## 4.3 நிதி ஒப்பந்தம் - ஆரம்ப அங்கீகாரம், வகைப்படுத்தல் மற்றும் அதனைத் தொடர்ந்த அளவீடு

### *4.3.1 அங்கீகாரத் திகதி*

கிரமமாக விற்பனை செய்யப்படுகின்ற நிதிச்சொத்துக்களின் கொள்வனவானது கொடுத்துத் தீர்க்கப்படுகின்ற திகதி கணக்கு வைத்தலைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்படுகின்றன. கொடுத்தல் தீர்த்தல் திகதியே சொத்தானது ஒரு நிறுவனத்திற்கு விநியோகிக்கப்படுகின்ற திகதியாகும். கொடுத்து தீர்க்கப்படுகின்ற திகதி கணக்கு வைத்தல் என்பதன் அர்த்தமாவது நிறுவனத்தினால் சொத்தானது பெற்றுக்கொள்ளப்படுகின்ற திகதியின்போது அச்சொத்தினை அங்கீகரித்தலாகும். கொடுத்தல் தீர்த்தல் திகதி கணக்கு வைத்தல் பிரயோகிக்கப்படுகையில் விற்பனைத்திகதி மற்றும் கொடுத்து தீர்த்தல் திகதிக்கு இடையிலான காலப்பகுதியின்போது பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய சொத்தின் நியாயப்பெறுமதியில் ஏற்படுகின்ற எந்த மாற்றத்தினையும் நிறுவனம் கணக்கு வைக்கின்றது.

நிதிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கிரமமற்ற கொள்வனவுகள் விற்பனைத் திகதியின்போது அங்கீகரிக்கப்படுகின்றன. அதாவது, ஒப்பந்தத்தின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளுக்கு வங்கியானது ஒரு தரப்பாக மாறுகின்ற திகதி.

கிரமமான கொள்வனவு என்பது ஒப்பந்தம் ஒன்றின் கீழ் நிதிச்சொத்து ஒன்றினை கொள்வனவு செய்வதாகும். இதன் நிபந்தனைகள் சம்பந்தப்பட்ட சந்தை கொண்டுள்ள மரபுகள் அல்லது ஒழுங்குவிதிகளினால் பொதுவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள காலவரம்பினுள் சொத்தினை விநியோகிப்பதை தேவைப்படுத்துகின்றது.

### *4.3.2 நிதி ஒப்பந்தங்களின் ஆரம்ப அளவீடு*

நிதி ஒப்பந்தங்களை ஆரம்ப அங்கீகாரத்திலே வகைப்படுத்துவதானது அதனைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்ற முகாமைத்துவத்தின் எண்ணத்திலும் அந்த ஒப்பந்தங்களின் நோக்கம் மற்றும் பண்புகளிலும் தங்கியுள்ளது. சகல நிதி ஒப்பந்தங்களும் ஆரம்பத்தில் அவற்றின் நியாயப்பெறுமதியுடனும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய கொடுக்கல் வாங்கல் செலவுகளுடனும் சேர்த்து அளக்கப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயப்பெறுமதியில் பதிவுசெய்யப்படுகின்ற நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப்பொறுப்புக்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் நீங்கலாக.

### *4.3.3 நிதிச்சொத்துக்களையும் நிதிப்பொறுப்புக்களையும் வகைப்படுத்தலும் பின்னர் அளத்தலும்*

**நிதிச் சொத்துக்கள்**

ஆரம்பத்தில் பின்வரும் வகைகளில் ஏதாவது ஒன்றில் நிதிச்சொத்தானது வகைப்படுத்தப்படுகின்றது.

- நியாயப்பெறுமதியில் வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படுகின்றது இலாபம் அல்லது நட்டம் மூலமாக அல்லது இலாபம் அலல்து நட்டம் மூலமாக நியாயப்பெறுமதியில் குறித்தொதுக்கப்படுவது.
- விற்பனைக்குத் தயாரானது
- கடன்களும் வருமதிகளும்
- முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுவது

நிதிச்சொத்துக்களின் தொடர்ச்சியான வகைப்படுத்தலானது அவற்றின் அளவீடுகளில் தங்கியுள்ளது.

**நிதிப் பொறுப்புக்கள்**

குழுமமானது ஆரம்பத்தில் சகல நிதிப்பொறுப்புக்களையும் அவை உருவாக்கப்படும் தினத்தில் அங்கீகரித்து இலாபம் அல்லது நட்டம் மூலமாக இலதாக்கப்பட்ட செலவில் அல்லது நியாயப்பெறுமதியில் அளக்கப்பட்டதாக வகைப்படுத்துகின்றது.

நிதிப்பொறுப்புக்களின் தொடர்ச்சியான அளவீடானது அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

### *4.3.4 விற்பனைக்கு வைத்திருக்கப்படும் நிதிச்சொத்துக்கள் அல்லது நிதிப்பொறுப்புக்கள்*

விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நிதிச்சொத்துக்கள் அல்லது நிதிப்பொறுப்புக்கள் நியாயப் பெறுமதியில் நிதிநிலைக் கூற்றில் பதியப்படுகின்றன. நியாயப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் தேறிய வியாபார வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஒப்பந்தத்தின் விதிகளுக்கு அமைவாக வட்டி மற்றும் பங்கிலாப வருமானம் அல்லது செலவுகள் தேறிய வியாபார வருமானத்தில் பதியப்படுகின்றன. அல்லது கொடுப்பனவிற்கான உரிமை நிலைநாட்டப்பட்டதும் பதியப்பட்டன.

இந்த வகைப்படுத்தலில் உள்ளடங்குபவை குறுகிய கால வியாபார நோக்கத்திற்காக அடிப்படையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் பிணையங்களும் உரிமை முதல்களுமாகும்.

*4.3.5 இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் பதியப்பட்ட நிதிப் பெறுதிகள்*

முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் போன்ற ஒப்பந்தங்களை வங்கி பயன்படுத்துகின்றது. ஒப்பந்தங்கள் நியாயப் பெறுமதியில் பதியப்படுகின்றன. அவற்றின் நியாயப் பெறுமதியானது, நேர்க்கணியமாக இருக்கையில், அவை சொத்துக்களாகவும், அவற்றின் நியாயப் பெறுமதியானது மறைப்பெறுமதியாக இருக்கையில் பொறுப்புக்களாகவும் பதியப்படுகின்றன.

*4.3.6 விற்பனைக்குத் தயாராகவுள்ள நிதி முதலீடுகள்*

விற்பனைக்குத் தயாராக உள்ள நிதிச் சொத்துக்கள் ஒப்பந்தம் சாராத நிதிச் சொத்துக்களாகும். இவை விற்பனைக்குத் தயாரானவையாகக் குறிக்கப்பட்டு வேறு எந்த வகைகளிலும் வகைப்படுத்தப்படாதவையாகும். குழுமத்தின் உரிமை முதல் பிணையங்களில் உள்ள முதலீடுகளும் சில கடன் பிணையங்களும் விற்பனைக்குத் தயாரான நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்ப ஏற்றுக்கொள்ளலினைத் தொடர்ந்து இவை நியாயப் பெறுமதியில் அளக்கப்பட்டு பின்னர் மாற்றமடைகின்றன.

காசாக்கப்படாத இலாபம் அல்லது நட்டங்கள் ஏனைய முழு வருமானத்தில் அடையாளம் காணப்படுகின்றன. இவ்வாறான முதலீட்டை விற்று விடுகையில் உரிமை முதலில் முன்பு அடையாளம் காணப்பட்ட திரட்டிய இலாபம் அல்லது நட்டம் "ஏனைய இயக்க வருமானத்தில்" வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றது. விற்பனைக்குத் தயாரான நிதி முதலீடுகளை வைத்திருக்கையில், ஈட்டிய பங்கிலாபங்கள் முதலீடு எக்கம்பனியில் மேற்கொள்ளப்பட்டதோ அக்கம்பனியினால் பிரகடனப்படுத்தப்படும் திகதியில் 'ஏனைய இயக்க வருமானமாக' வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. இவ்வாறான முதலீடுகளின் சேதங்களினால் ஏற்படுகின்ற நட்டமானது, நிதி முதலீடுகளில் இருந்து வருகின்ற தேறிய இலாபமாக (நட்டத்தின்) வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்டு, நிதிநிலைமைக் கூற்றின் சம்பந்தப்பட்ட சொத்துக்கள்.முதலீட்டுக் கணக்குகளில் இருந்து அகற்றப்படுகின்றது.

*4.3.7 முதிர்ச்சியடையும் வரை வைத்திருக்கப்பட்ட நிதி முதலீடுகள்*

முதிர்ச்சி வரையில் வைத்திருக்கப்படும் நிதி முதலீடுகள் என்பவை நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடிய கொடுப்பனவுகளையும், நிலையான முதிர்ச்சியினையும் கொண்டுள்ளதும், வங்கியானது முதிர்ச்சி வரையில் வைத்திருப்பதற்கான எண்ணத்தினையும் அதற்கான ஆற்றலையும் கொண்டுள்ளதுமான ஒப்பந்தம் சாராத நிதிச்சொத்துக்களாகும். இவ்வாறான முதலீடுகள் பிரதானமாக திறைசேரி முறிகளாக இருக்கின்றன. ஆரம்ப அளவீட்டினைத் தொடர்ந்து, முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் நிதி முதலீடுகள் செயற்திறன்மிகு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி சேதங்கள் இல்லாமல் இலதாக்கல் செலவில் அளக்கப்படுகின்றன. இலதாக்கல் செலவானது, கொள்வனவின்போது வழங்கப்படுகின்ற ஏதாவது கழிவுகள் அல்லது காப்பீட்டுக் கட்டணங்கள் போன்றவற்றினையும் EIR இன் இன்றியமையாத அங்கமான குறிப்பிட்ட கட்டணங்களையும் கருத்தில் கொள்வதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது. இலதாக்கலானது, வருமானக் கூற்றில் வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. இவ்வாறான முதலீடுகளின் சேதத்தினால் எழுகின்ற இழப்புக்கள் நிதி முதலீட்டில் இருந்து கிடைக்கின்ற தேறிய வருமானமாக.. (இழப்பு) வருமானக் கூற்று நிலையில் அடையாளம் காணப்படுகின்றது. வங்கியானது, முதிர்ச்சிக்காக வைத்திருக்கின்ற முதலீட்டின் குறிப்பிட்ட தொகையினை முதிர்ச்சிக்கு முன்னர் விற்பதற்கு அல்லது மீள்வகைப்படுத்துவதற்கு விரும்பினால் (குறிப்பிட்ட சூழ்நிலைகள் தவிர்ந்த சந்தர்ப்பங்கள்) முழு வகையுமே பாதிக்கப்படுவதுடன் அவை மீண்டும் விற்பனைக்குத் தயாரானவை என மீள்வகைப்படுத்தப்படல் வேண்டும். மேலும், இவ்வாறு நடைபெற்றால், முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுபவை என எந்தவொரு நிதிச்சொத்தினையும் வங்கியானது தொடர்ந்து வரும் இரண்டு வருடங்களுக்கு வகைப்படுத்துவதற்கு தடைசெய்யப்படும்.

*4.3.8 கடன்களாகவும் வருமதிகளாகவும் வகைப்படுத்தப்பட்ட நிதிச்சொத்துக்கள்*

கடன்களாகவும் சேரவேண்டியவைகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ள நிதிச்சொத்துக்கள் செயற்படுகின்ற சந்தையில் விலை குறிக்கப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடிய கொடுப்பனவுகளைக் கொண்ட பின்வருவன தவிர்ந்த ஒப்பந்தம் சாரா நிதிச் சொத்துக்களை உள்ளடக்குகின்றன.

- வங்கி உடனடியாக அல்லது எதிர்காலத்தில் விற்பதற்கு கருதியுள்ளவை, ஆரம்ப அங்கீகாரத்தின் பேரில் வங்கியினால் இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயப் பெறுமதியில் ஒதுக்கப்படுபவை
- ஆரம்ப அங்கீகாரத்தின் பேரில் விற்பனைக்குத் தயாரானவை என வங்கியினால் குறிக்கப்படுபவை
- கடன் தேய்மானக் காரணம் தவிர வங்கியானது அதன் அனைத்து ஆரம்ப முதலீடுகளையும் பூரணமாக அறவிட்டுக்கொள்ள முடியாதவை

ஆரம்ப அளவீட்டின் பின்னர் வங்கியிடமிருந்து வரவேண்டிய தொகைகளும் வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் EIR இனைப் பயன்படுத்தி சேதத்திற்கான ஒதுக்கீட்டுத் தொகை இல்லாமல் இலதாக்கல் செலவில் அளக்கப்படுகின்றன. இலதாக்கல் செலவானது கையகப்படுத்துகையின் போதான விலைக்கழிவுகள் அல்லது கட்டுப்பணத்தினையும் EIR இனது இன்றியமையாத பகுதியாகிய கட்டணங்களையும் செலவுகளையும் கருத்தில் கொள்வதன் மூலம் கணக்கிடப்படுகின்றது. இலதாக்கலானது வருமானக் கூற்றில் "வட்டி வருமானத்தில்" உள்ளடக்கப்பட்டுள்ளது. சேதத்தினால் ஏற்படுகின்ற நட்டமானது வருமானக் கூற்றில் "சேதச் செலவுகளாக" ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

*4.3.9 நிதிச்சொத்துக்களை மீள வகைப்படுத்தல்*

மீள்வகைப்படுத்தலானது, மீள்வகைப்படுத்தல் திகதியில் நியாயப் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றது. அது புதிய இலதாக்கல் செலவாக மாறுகின்றது.

விற்பனைக்குத் தயாரான வகையில் இருந்து மீள்வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்கான உரிமை முதலில் அடையாளம் காணப்பட்ட சொத்தில் இருந்தான முன்னைய இலாபம் அல்லது நட்டமானது EIR னைப் பயன்படுத்தி, எஞ்சியுள்ள முதலீட்டின் காலப்பகுதிக்கு இலாபமாக அல்லது நட்டமாக இலதாக்கப்படுகின்றது. புதிய இலதாக்கப்பட்ட செலவுக்கும் எதிர்பார்க்கப்படுகின்ற காசுப்பாய்ச்சலுக்கும் இடையிலான எவ்வித வித்தியாசமும் EIR னை பயன்படுத்தி எஞ்சிய ஆயுட்காலத்திற்காக இலதாக்கப்படுகின்றது. தொடர்ந்து சொத்தானது சேதமுற்றதாகத் தீர்மானிக்கப்படுகையில், உரிமை முதலில் பதியப்பட்ட தொகையானது, வருமானக்கூற்றுக்கு மீள்சுற்றாக்கப்படுகின்றது. வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படுகின்ற வகையில் இருந்து வங்கியானது ஒப்பந்தம் சாரா வியாபாரச் சொத்தொன்றினை கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைக்கு மீள்வகைப்படுத்தலாம். இவ்வாறு மேற்கொள்வதற்கு அது கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வரைவிலக்கணத்தினை பூர்த்தி செய்ய வேண்டும். அத்துடன் எதிர்காலத்தில் அல்லது முதிர்ச்சி வரையில் அந்த நிதிச் சொத்துக்களை வைத்திருப்பதற்கு வங்கிக்கு நோக்கமும் ஆற்றலும் இருக்க வேண்டும். நிதிச்சொத்தானது, மீள்வகைப்படுத்தப்பட்டால் அவ்வாறான

காசுப்பற்றுக்களின் அதிகரித்த அறவிடக்கூடிய தன்மையின் காரணமாக எதிர்கால காசுப்பற்றுக்களின் மதிப்பீட்டினை வங்கியானது அதிகரித்தால் அந்த அதிகரிப்பின் விளைவானது மதிப்பீட்டில் மாற்றம் மேற்கொள்ளப்பட்ட திகதியில் இருந்து EIR ற்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. முகாமைத்துவத்தின் தற்றுணிபிலேயே மீள்வகைப்படுத்தல் நடத்தப்படுகின்றன. மேலும், அது ஒப்பந்தங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டதன் பின்னர் வங்கியானது, எந்தவொரு நிதி ஒப்பந்தத்தினையும் இலாபம் அல்லது நட்டவகை மூலமாக நியாயவிலையில் மீள்வகைப்படுத்துவதில்லை.

*4.3.10 பணியாளர் கடன்களுக்கான நாள் 1 வித்தியாசம்*

சகல பணியாளர் கடன்களும் சந்தை வட்டி வீதத்திற்கு கீழே வழங்கப்பட்டு நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டன. நியாயப் பெறுமதிக்கும் விநியோகிக்கப்பட்ட தொகைக்கும் இடையிலான வித்தியாசமானது "நாள் 1" வித்தியாசமாகக் கருதப்பட்டு, செயற்திறன்மிகு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி கடன் காலத்தின்போது வருமானக் கூற்றில் பணியாளர் செலவாக இலதாக்கப்படுகின்றது. இத்தொகையானது, வட்டி வருமானமாகவும் காட்டப்படுகின்றது. எனவே, வருமானக் கூற்றில் தேறிய விளைவானது பூச்சியமாகும்.

*4.3.11 ஏனைய நிதிப் பொறுப்புக்கள்*

இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயப் பெறுமதியில் நிர்ணயிக்கப்படாத, வங்கியினால் விநியோகிக்கப்படும் நிதி ஒப்பந்தங்கள் ஏனைய நிதிப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. இங்கே ஒப்பந்த ரீதியான சாராம்சத்தின் ஏற்பாடுகளின் காரணமாக வைத்திருப்பவருக்கு காசு அல்லது நிதிச் சொத்துக்களை வங்கி விநியோகிப்பதற்கான கடப்பாடு ஏற்படுகின்றது அல்லது நிலையான எண்ணிக்கையுடைய சொந்த உரிமை முதல் பங்குகளுக்காகக் குறித்த தொகையுடைய காசு அல்லது வேறு நிதிச் சொத்துக்களை மாற்றுவது அல்லாமல் கடப்பாட்டினைத் திருப்திப்படுத்தக் காரணமாகின்றது.

ஏனைய நிதிப் பொறுப்புக்களில் அடங்குபவை: வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள், வங்கிகளிடமிருந்து வரவேண்டிய தொகை, வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்கள், ஏனையவை மற்றும் தொகுதிக் கடன்கள்.

ஆரம்ப அளவீட்டின் பின்னர் ஏனைய நிதிப் பொறுப்புக்கள் EIR ஐப் பயன்படுத்தி இலதாக்கல் செலவில் அளக்கப்படுகின்றன. இலதாக்கல் செலவுகள் வழங்கப்படுகையில் கொடுக்கப்பட்ட கழிவு அல்லது காப்புறுதிக் கட்டணம் மற்றும் EIR ன் இன்றியமையாத அங்கமான செலவுகள் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு கணிப்பிடப்படுகின்றன.

## 4.4 நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் அங்கீகாரம் அழித்தல்

*4.4.1 நிதிச் சொத்துக்கள்*

பின்வரும் சந்தர்ப்பங்களில் நிதிச்சொத்து ஒன்றின் அங்கீகாரம் அகற்றப்படுகின்றது (பொருத்தமானவிடத்து நிதிச்சொத்தின் பகுதி அல்லது அதேபோன்ற நிதிச் சொத்துக்களின் குழுவின் பகுதி).

- சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெறும் உரிமை காலாவதியாகிவிட்டது.
- வங்கியானது சொத்து ஒன்றில் இருந்து காசுப் பாய்ச்சல்களினைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை மாற்றியுள்ளது அல்லது பெற்றுக்கொண்ட காசுப் பாய்ச்சல்களைக் குறிப்பிட்டுக் கூறும்படியான தாமதமின்றி மூன்றாம் தரப்பொன்றிற்கு 'நகர்த்தும்' ஏற்பாட்டின் கீழ் பூரணமாகச் செலுத்துவதற்கான கடப்பாட்டினை ஏற்றுக்கொண்டுள்ளது அல்லது இந்த இரண்டில் ஏதாவது ஒன்று.
  - வங்கியானது சொத்து ஒன்றின் சகல அபாயநேர்வுகளையும் வெகுமதிகளையும் பெருமளவிற்கு மாற்றியுள்ளது.

  அல்லது
  - வங்கியானது சொத்து ஒன்றின் சகல அபாயநேர்வுகளையும் வெகுமதிகளையும் பெருமளவிற்கு மாற்றவுமில்லை அல்லது வைத்திருக்கவுமில்லை ஆனால் சொத்துக்களின் மீதான கட்டுப்பாட்டினை மாற்றியுள்ளது.

*4.4.2 நிதிப் பொறுப்புக்கள்*

பொறுப்பு ஒன்றின் கீழான கடப்பாடானது நிறைவேற்றப்படுகையில் அல்லது இரத்துச் செய்யப்படுகையில் அல்லது காலாவதியாகையில் நிதிப்பொறுப்பின் அங்கீகாரமானது அகற்றப்படுகின்றது.

ஏற்கனவே இருந்துவருகின்ற நிதிப்பொறுப்பு ஒன்று அதே கடன் பெறுனரின் மூலம் வேறு ஒரு நிதிப்பொறுப்பு மூலமாக பெருமளவு வித்தியாசமான விதிகளின் கீழ் பதிலீடு செய்யப்பட்டால் அல்லது இருக்கின்ற பொறுப்புக்களின் விதிகள் பெருமளவிற்கு மாற்றப்பட்டால் அவ்வாறான மாற்றம் அல்லது திருத்தம் அசல் பொறுப்பின் அங்கீகாரம் அகற்றலாகக் கருதப்படும் மற்றும் புதிய பொறுப்பின் அங்கீகாரமாகக் கருதப்படும். அசல் நிதிப் பொறுப்பின் புத்தகப் பெறுமதிக்கும் செலுத்தப்பட்ட நட்டஈட்டுக்கும் இடையிலான வித்தியாசமானது இலாபத்தில் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

## 4.5 மீள் கொள்வனவு மற்றும் மறுதலை மீள் கொள்வனவு உடன்படிக்கைகள்

குறிப்பிட்ட எதிர்காலத் திகதியில் மீள்கொள்வனவு செய்வதற்காக உடன்படிக்கைகளின் கீழ் விற்கப்படுகின்ற பிணையங்களின் அங்கீகாரமானது நிதி நிலைமைக் கூற்றுக்களில் இருந்து அகற்றப்படுவதில்லை. ஏனெனில் உரித்தாண்மையின் அபாயநேர்வுகளையும் வெகுமதிகளையும் வங்கி பெருமளவிற்குத் தொடர்ந்து வைத்துள்ளது. பதிலாகப் பெறப்படுகின்ற பணமானது நிதி நிலைமைக் கூற்றில் ஒரு சொத்தாக அதனைத் திருப்பிச் செலுத்துவதற்கான பதில் கடப்பாட்டுடன் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. கொடுக்கல் வாங்கலின் பொருளாதார சாராம்சத்தினை வங்கிக்கு வழங்கிய கடனாகப் பிரதிபலித்து மீள் கொள்வனவு உடன்படிக்கையினுள் ஒரு பொறுப்பாக அட்டுறுவான வட்டியும் இதில் உள்ளடங்குகின்றது. விற்பனைக்கும் மீள்கொள்வனவு விலைக்கும் இடையிலான வித்தியாசமானது, வட்டிச் செலவாக கருதப்பட்டு நுஐசுனைப் பயன்படுத்தி உடன்படிக்கையின் ஆயுட்காலத்தின்போது அட்டுறுவாக்கப்படுகின்றது.

மறுதலையாக, குறிப்பிட்ட எதிர்காலத் திகதியில் மீள்விற்பனை செய்வதற்காக கொள்வனவு செய்யப்படும் பிணையங்கள் நிதி நிலைமைக் கூற்றினில் அங்கீகரிக்கப்படுவதில்லை. அட்டுறுவான வட்டி உள்ளடங்கலாக செலுத்தப்பட்ட நட்டஈடானது, கடனாகப் பெற்ற பிணையங்கள் மற்றும் மறுதலை மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மீதான காசுப் பிணையுறுதியினுள் கொடுக்கல் வாங்கலின் பொருளாதார சாராம்சத்தினை வங்கி வழங்கிய கடனாகப் பிரதிபலித்து நிதி நிலைமைக் கூற்றினில் பதியப்படுகின்றது. கொள்வனவிற்கும் மீள் விற்பனை விலைக்கும் இடையிலான வித்தியாசமானது □தேறிய வட்டி வருமானத்தில்□ பதியப்பட்டு உடன்படிக்கையின் ஆயுட்காலத்தின்போது நுஐசுனைப் பயன்படுத்தி அட்டுறுவாக்கப்படுகின்றது.

## 4.6 நியாயப் பெறுமதியினைத் தீர்மானித்தல்

அறிக்கையிடல் திகதியில் செயற்படு சந்தைகளில் விற்பனை செய்யப்பட்ட நிதி ஒப்பந்தங்களின் நியாயப் பெறுமதியானது, கொடுக்கல் வாங்கல் செலவுகளுக்கான கழிப்புகள் இல்லாமல் விலை குறிக்கப்பட்ட சந்தை விலையினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

இயங்குகின்ற சந்தையில் விற்கப்படாத ஏனைய அனைத்து நிதிக்கருவிகளுக்காகவும் நியாயப் பெறுமதியானது பொருத்தமான பெறுமதி கணித்தல் உத்திகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. பெறுமதி கணித்தல் உத்திகளுள் விலைக்கழிவு வழங்கப்பட்ட காசுப்பாய்ச்சல் முறை, சந்தை அவதானிப்பு விலைகள், இருக்கக்கூடிய அதேபோன்ற கருவிகளுடனான ஒப்பீடு மற்றும் ஏனைய பொருத்தமான பெறுமதி கணித்தல் மாதிரிகள் ஆகியவை உள்ளடங்குகின்றன.

நடைமுறைச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களோ அல்லது அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகளோ கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் பெறுமதி கணித்தல் உத்திகளைப் பயன்படுத்தி சில குறிப்பிட்ட நிதிக்கருவிகள் நியாயப் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன. இவற்றின் நியாயப் பெறுமதியானது உண்மையான சந்தைக் கொடுக்கல் வாங்கல்களுக்கான விலைகள் அல்லது உள்ளீடுகளுக்கு எதிராகப் பரிசீலிக்கப்பட்ட பெறுமதி கணித்தல் மாதிரியினைப் பயன்படுத்தியும் வங்கியின் மிகவும் பொருத்தமான மாதிரி ஊகங்களுக்கான சிறந்த மதிப்பீட்டினைப் பயன்படுத்தியும் தீர்மானிக்கப்படுகின்றன.

நிதி ஒப்பந்தங்களின் நியாயப் பெறுமதியின் பகுப்பாய்வும் அவை எவ்வாறு அளக்கப்படுகின்றன எனும் விபரங்களும் குறிப்பு 46ல் வழங்கப்பட்டுள்ளன.

## 4.7 நிதிச் சொத்துக்களின் வலுக்குறைப்பு

நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் குழு சேதத்திற்கு உள்ளாகியுள்ளமைக்கான புறவயமான சான்றுகள் இருக்கின்றனவா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் போதும் வங்கியானது மதிப்பிடுகின்றது. சொத்து ஒன்றின் ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பின்னர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றமையின் காரணத்தினால், சேதம் ஏற்பட்டுள்ளமைக்கான புறவயமான சான்றுகள் இருந்தால், இருந்தால் மாத்திரமே, நிதிச் சொத்து ஒன்று அல்லது நிதிச் சொத்துக் குழு ஒன்று சேதமுற்றிருப்பதாகக் கருதப்படும் (நட்டம் ஏற்படும் நிகழ்வு) அந்த நட்டம் ஏற்படுத்தும் நிகழ்வானது (அல்லது நிகழ்வுகள்) நிதிச் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களில் தாக்கத்தினைக் கொண்டிருந்தால் அல்லது நிதிச்சொத்துக் குழுவில் தாக்கத்தினைக் கொண்டிருந்தால் அவற்றினை நம்பத்தகுந்த முறையில் மதிப்பிட முடியும்.

சேதத்திற்கான சான்றுகளுள் உள்ளடங்குபவை: கடன்பெறுனர் அல்லது கடன் பெறுனர் குழு கணிசமான நிதிச்சிரமங்களுக்கு முகங்கொடுப்பதற்கான அறிகுறிகள் அவர்கள் வங்குரோத்து நிலையினை அடைவதற்கான அல்லது வேறு நிதி அங்கீகாரத்தினை இழப்பதற்கான நிகழ்தகவு வட்டி அல்லது முதன்மைக் கொடுப்பனவுகளில் தவணை தவறுதல் அல்லது நெறி தவறுதல் அத்துடன் நிலுவைகளில் மாற்றங்கள் அல்லது கடன் தவணை தவறுதலுடன் இயைபுறுகின்ற பொருளாதார நிலைமைகளில் மாற்றம் ஏற்படுதல் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களில் அளக்கக்கூடிய குறைவு இருப்பதை அவதானிக்கத்தக்க தரவுகள் சுட்டிக்காட்டுதல்.

### *4.7.1 இலதாக்கப்பட்ட செலவில் பதியப்பட்ட நிதிச் சொத்துக்கள்*

இலதாக்கப்பட்ட செலவில் (வங்கியிலிருந்தும் கடன்களில் இருந்தும் வரவேண்டிய தொகைகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட முற்கொடுப்பனவுகள்) பதியப்பட்ட நிதிச் சொத்துக்களுக்காக வங்கியானது முதலில் தனித்தனியாக முக்கியமான சொத்துக்களின் நிதிச்சொத்துக்களுக்கான சேதத்திற்கான புறவயமான சான்றுகள் இருக்கின்றனவா என்பதை தனியாக மதிப்பிடுகின்றது. தனித்தனியாக முக்கியம் இல்லாத நிதிச் சொத்துக்களுக்காக கூட்டாக மதிப்பீடு செய்கின்றது. தனிப்பட்ட ரீதியில் மதிப்பிடப்பட்ட நிதிச்சொத்துக்கு சேதத்திற்கான புறவயமான சான்று இல்லை என வங்கி தீர்மானிக்கும்போது அதே போன்ற கடன் அபாயநேர்வுப் பண்பினைக் கொண்ட நிதிச்சொத்துக்களின் குழுவினில் சொத்தினை உள்ளடக்கி அவற்றினை சேதத்திற்காக கூட்டாக மதிப்பிடுகின்றது. சேதத்திற்காக தனித்தனியாக மதிப்பிடப்படும் சொத்துக்களுக்கான சேத நட்டமானது ஏற்றுக்கொள்ளப்பட்டால் அல்லது தொடர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவை சேதத்திற்கான கூட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை.

சேத நட்டம் ஏற்பட்டுள்ளதற்கான புறவயமான சான்றுகள் இருந்தால் நட்டத் தொகையானது சொத்தின் புத்தகப் பெறுமதிக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சலின் (எதிர்பார்க்கப்படும், இதுவரையில் நடக்காத கடன் நட்டங்கள் நீங்கலாக) தற்போதைய பெறுமதிக்குமிடையிலான வித்தியாசமாக அளக்கப்படுகின்றது. சொத்தின் புத்தகப் பெறுமதி ஒதுக்கீட்டுத் தொகைக் கணக்கொன்றினைப் பயன்படுத்துவதன் மூலம் குறைக்கப்பட்டு நட்டத் தொகையானது வருமானக் கூற்றினில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. குறைக்கப்பட்ட புத்தகத் தொகை மீது வட்டி வருமானம் தொடர்ந்து அட்டுறுவாவதுடன் சேத நட்டத்தினை அளக்கும் நோக்கத்திற்காக எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களுக்கு கழிவு வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி அட்டுறுவாக்கப்படுகின்றது.

கடன்களை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் யதார்த்தமிகு சாத்தியம் இல்லாதபோதும், மேலும் பிணையுறுதி பயன்படுத்தப்பட்ட போதும் அல்லது அது வங்கிக்கு மாற்றப்பட்ட போதும் கடன்களும் அதனோடு சேர்ந்த இணைந்த ஒதுக்கீட்டுத் தொகைகளும் பதிவழிக்கப்படுகின்றன. தொடர்ந்து வரும் வருடத்தில் மதிப்பிடப்பட்ட சேத நட்டமானது சேதத்தினை அடையாளம் கண்ட பின்னர் நிகழ்ந்த நிகழ்வொன்றினால் அதிகரித்தால் அல்லது குறைவடைந்தால் முன்னர் அடையாளம் காணப்பட்ட சேத நட்டமானது ஒதுக்கீட்டுத் தொகையின் கணக்கினை சீராக்குவதன் மூலம் அதிகரிக்கப்படுகின்றது அல்லது குறைக்கப்படுகின்றது. எதிர்காலப் பதிவழிப்புக்கள் பின்னர் அறவிடப்பட்டால் அறவிடலானது வருமானமாக பற்று வைக்கப்படுகின்றது.

மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிகளுக்கு நிதிச் சொத்தின் அசலான EIR ல் கழிவு வழங்கப்படுகின்றது. கடன் ஒன்று மாறுகின்ற வட்டி வீதத்தினைக் கொண்டிருக்கும்போது சேத நட்டம் எவற்றினையாவது அளப்பதற்கான கழிவு வீதமானது நடைமுறை EIR ஆகும். பிணையுறுதியாக்கப்பட்ட நிதிச்சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதியின் கணிப்பீடானது, அறுதியீடு சாத்தியமான போதும் சாத்தியமில்லாத போதும், பிணையுறுதியினைப் பெற்றுக்கொள்வதற்கும் விற்பதற்குமான செலவுகள் நீங்கலான அறுதியீட்டின் விளைவாகக் கிடைக்கும் காசுப் பாய்ச்சலால் பிரதிபலிக்கப்படுகின்றது.

சேதத்தின் கூட்டு மதிப்பீட்டு நோக்கத்திற்காக நிதிச் சொத்துக்கள் சொத்துவகை, கைத்தொழில்துறை, உரித்தாண்மை வகை, கடந்த காலத்தில் இருந்த அந்தஸ்து மற்றும் ஏனைய பொருத்தமான காரணிகள் போன்ற கடன் அபாயநேர்வுப் பண்புகளின் அடிப்படையில் குழுவாக்கப்படுகின்றன.

சேதத்திற்காகக் கூட்டாக மதிப்பிடப்பட்ட நிதிச்சொத்துக் குழுவின் எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் அக்குழுவில் உள்ள சமமான கடன் அபாயநேர்வுப் பண்புகளைக் கொண்ட சொத்துக்களின் வரலாற்று ரீதியான இழப்பு அனுபவத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. வரலாற்று இழப்பு அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ள நடைமுறை நிலைமைகளின் விளைவினைப் பிரதிபலிப்பதற்காகவும் தற்போது நிலவாத வரலாற்றுக் காலகட்டத்தில் உள்ள

நிலைமைகளின் விளைவுகளை அகற்றவும் தற்போது அவதானிக்கத்தக்கதான தரவுகளின் அடிப்படையில் வரலாற்று இழப்பு அனுபவமானது சீராக்கப்படுகின்றது.

எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களை மதிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் முறையியல்களும் ஊகங்களும் நட்ட மதிப்பீடுகளுக்கும் உண்மையான நட்ட அனுபவத்துக்கும் இடையிலான வித்தியாசத்தினைக் குறைப்பதற்கென கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

*4.7.2 விற்பனைக்குத் தயாராகவுள்ள நிதி முதலீடுகள்*

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின்போதும் விற்பனைக்குத் தயாராகவுள்ள நிதி முதலீடுகளுக்காக முதலீடு ஒன்று சேதமடைந்துள்ளமைக்கான புறவயமான சான்று இருக்கின்றதா என்பதை வங்கி மதிப்பீடு செய்கின்றது.

விற்பனைக்குத் தயாராகவுள்ளதாக வகைப்படுத்தப்பட்டிருக்கும் உரிமை முதல் முதலீடுகளைப் பொறுத்த அளவில் முதலீட்டின் நியாயப் பெறுமதியானது அதன் செலவினை விடக் கணிசமாக அல்லது நீண்டகாலத்திற்கு வீழ்ச்சியடைந்திருப்பதும் புறவயமான சான்றுகளில் அடங்கும். சேதத்திற்கான சான்று இருக்கையில், வருமானக் கூற்றில் முன்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த முதலீட்டின் மீதான சேத நட்டம் நீங்கலாக கொள்வனவுச் செலவிற்கும் நடைமுறை நியாயப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாக அளக்கப்பட்டுள்ள திரட்டிய நட்டமானது உரிமை முதலில் இருந்து அகற்றப்பட்டு வருமானக் கூற்றில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. உரிமை முதல் முதலீடுகள் மீதான சேத நட்டமானது வருமானக் கூற்றினூடாக மறுதலையாக்கப்படுவதில்லை. சேதத்திற்குப் பின்னர் நியாயப் பெறுமதியில் ஏற்படும் அதிகரிப்புக்கள் ஏனைய பூரண வருமானத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

விற்பனைக்குத் தயாராகவுள்ள நிதி முதலீடுகள் மீதான சேத நட்டம் பற்றிய விபரங்களுக்கு குறிப்பு 23னைப் பார்க்கவும்.

*4.7.3 மீள்பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்ட கடன்கள்*

வங்கியானது சாத்தியமானதாக இருக்கையில் பிணையுறுதிகளை உடைமையாக்குவதைவிட கடன்களை மீள் அட்டவணைப்படுத்துவதையே நாடுகின்றது. இதில் கொடுப்பனவுகளின் ஏற்பாடுகளை நீடிப்பதும் புதிய கடன் நிபந்தனைகளுக்கான உடன்படிக்கைகளும் சம்பந்தப்படுகின்றன. விதிகள் மீள்பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்டதும் தவணைகள் திருத்தப்படுவதற்கு முன்னர் கணக்கிடப்பட்டதைபோல் அசலான EIR னைப் பயன்படுத்தி ஏற்பட்ட ஏதாவது சேதங்கள் அளவிடப்பட்டதும் கடனானது இனிமேலும் கடந்தகால நிலுவையாகக் கருதப்பட மாட்டாது. முகாமைத்துவமானது தொடர்ச்சியாக மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்ட கடன்களை மீளாய்வு செய்து சகல தெரிவு அடிப்படைகளும் பூர்த்தி செய்யப்படுகின்றன. மேலும், எதிர்காலக் கொடுப்பனவுகள் நிகழும் சாத்தியம் உள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றது. கடனானது தொடர்ந்தும் தனிப்பட்ட அல்லது கூட்டுச் சேத மதிப்பீட்டுக்கு உட்பட்டதாக இருப்பதுடன் கடனின் அசலான EIR ஐப் பயன்படுத்தி இது கணக்கிடப்படுகின்றது.

*4.7.4 பிணையுறுதிக் கணிப்பு*

நிதிச் சொத்துக்களின் அபாயநேர்வுகளைத் தணிப்பதற்காக சாத்தியமானபோதெல்லாம் வங்கியானது பிணையுறுதியினைப் பயன்படுத்த நாடுகின்றது. பிணையுறுதியானது காசு, பிணையங்கள், நாணயக்கடிதம் உத்தரவாதங்கள், நிலச்சொத்துக்கள், முற்பணங்கள், இருப்புப் பட்டியல்கள், ஏனைய நிதிசாராச் சொத்துக்கள் மற்றும் ஏனைய கடன் ஊக்குவிப்புக்கள், கடன் அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு வடிவில் வருகின்றது.

*4.7.5 மீள் உடமையாக்கப்பட்ட பிணையுறுதி அல்லது சொத்துக்கள் வங்கிக்கு பகிர்ந்தளிக்கப்படுதல்*

கடன் தவணை தவருகின்ற வாடிக்கையாளர்களிடம் இருந்து பிணையுறுதியின் அறுதியீட்டின் மூலமாகக் கையகப்படுத்தப்படுகின்ற அசையாத சொத்துக்கள் அல்லது கடனின் கொடுத்துத் தீர்த்தலின் ஒரு பகுதியாக வங்கிக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்ற சொத்துக்கள் இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு அமைவாக முதலீட்டுச் சொத்துக்களாக கணக்கு வைக்கப்படவில்லை அல்லது வங்கியின் சொத்துக்களின் பகுதியாக கணக்கு வைக்கப்படவில்லை.

## 4.8 நிதி ஒப்பந்தங்களின் குறைநிரப்பீடு

நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப்பொறுப்புக்கள் குறை மதிப்பீடு செய்யப்பட்டு தேறிய தொகையானது நிதி நிலைக் கூற்றினில் அறிக்கையிடப்படுகின்றது. ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைகளைக் குறை மதிப்பீடு செய்வதற்கு தற்போது அமுல்படுத்தக்கூடிய சட்ட உரிமை இருந்தால், இருந்தால் மாத்திரமே மேலும் தேறிய அடிப்படையில் கொடுத்துத் தீர்ப்பதற்கு எண்ணம் இருந்தால் மாத்திரமே அல்லது சொத்தினைக் காசாக்கி கொடுத்து தீர்க்கின்ற இரண்டையும் சம காலத்தில் செய்தால் மற்றும் செய்தால் மாத்திரமே, இதனை நிதி நிலைக் கூற்றினில் அறிக்கையிட முடியும். இரு தரப்பினருக்கிடையில் உடன்படிக்கைகள் ஏற்படும்போது இது பொதுவாக நடைபெறுவதில்லை. ஏனெனில், சம்பந்தப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதிநிலைமைக் கூற்றின் மொத்தமாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

## 4.9 குத்தகைகள்

*4.9.1 நிதிக்குத்தகை வருமானம்*

வாடிக்கையாளர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட மேலும் அவ்வாறான வாடிக்கையாளர்களின் மீது குழுமமானது தன்னிலையாக உரித்தாண்மையுடன் தொடர்புடைய மேலும் சட்ட ரீதியான உரித்து தவிர்ந்த சகல அபாயநேர்வுகள் மற்றும் வெகுமதிகளின் சொத்துக்கள் நிதிக்குத்தகைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. நிதிக்குத்தகையின் கீழ் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய தொகைகள் சேரவேண்டிய குத்தகை வாடகையின் கீழ் உள்ளடக்கப்படுகின்றன. பெற்றுக்கொண்ட ஆரம்ப வாடகைகளை கழித்ததன் பின்னர் குத்தகை மீதிகள் நிதிநிலைமைக் கூற்றினில் குறிப்பிடப்படுகின்றன.

குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் செலவு மீதான பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய மொத்த வாடகைகளின் மிகையானது மொத்த ஈட்டப்படாத வருமானத்தைக் கொண்டுள்ளது. ஈட்டப்படாத வருமானமானது குத்தகைத் தவணையின்போது வருமானமாக எடுத்துக்கொள்ளப்படுகின்றது. இது குத்தகையின் பெறவேண்டிய எஞ்சிய மீதிக்கு விகிதாசாரமாக குத்தகை நிறைவேற்றப்படுகின்ற மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படுகின்றது.

*4.9.2 குத்தகைக் கொடுப்பனவுகள்*

இயக்கக் குத்தகைகளின் கீழ் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் குத்தகையின் காலப்பகுதியின்போது நேர்கோட்டு அடிப்படையில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை ஊக்குவிப்புத் தொகைகள் குத்தகைத் தவணைக்காலத்தின்போது மொத்த குத்தகைச் செலவின் இன்றியமையாத அங்கமாக அங்கீகரிக்கப்படுகின்றன. நிதிக்குத்தகைகளின் கீழ் செலுத்தப்பட்ட ஆகக்குறைந்த குத்தகை கொடுப்பனவுகள் நிதிச்செலவுகளுக்கும் நிலுவையாக உள்ள பொறுப்புக்களின் குறைப்புக்களுக்கும் இடையில் பங்குவைக்கப்படுகின்றன. பொறுப்புக்களின் எஞ்சிய மீதி மீதான தொடர்ச்சியான காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படுகின்ற வட்டி விதத்தினை உருவாக்குவதற்காக குத்தகை தவணையின்போது ஒவ்வொரு காலப்பகுதிக்கும்

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

நிதிச்செலவு ஒதுக்கப்படுகின்றது. நிகழ்சாத்திய குத்தகைக் கொடுப்பனவுகள் குத்தகைச் சீராக்கல் உறுதிப்படுத்தப்பட்டதும் எஞ்சியுள்ள தவணை மீதான ஆகக்குறைவான குத்தகைக் கொடுப்பனவுகளை மீளாய்வு செய்வதன் மூலம் கணக்குவைக்கப்படுகின்றன.

## 4.10 காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

காசு மற்றும் குறுகிய கால நிதி ஆகியவை கையில் உள்ள காசு, வங்கியில் உள்ள மீதிகள், வங்கிகளுடனான ஆட்சேர்ப்புக்கள் மற்றும் 14 நாட்கள் கடன் தவணையில் பெறப்படும் கடன் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. காசு மற்றும் குறுகிய கால நிதிகள் பற்றிய விபரங்கள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களின் 16வது குறிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

## 4.11 அபாயநேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காகவும் இழப்புக் காப்பு வணிகத்திற்காகவும் வைத்திருக்கப்படும் ஒப்பந்தங்கள்

அபாயநேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படுகின்ற நிதி ஒப்பந்தங்கள் வியாபாரச் சொத்துக்களாக அல்லது பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படாத சகல நிதி ஒப்பந்தச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் உள்ளடக்குகின்றன. அபாயநேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படுகின்ற நிதி ஒப்பந்தங்கள் நிதிநிலைக் கூற்றில் நியாயப்பெறுமதியில் அளக்கப்படுகின்றன.

அபாயநேர்வு முகாமைத்துவத்திற்காக வைத்திருக்கப்படுகின்ற சில குறிப்பிட்ட ஒப்பந்தங்களையும் சில ஒப்பந்தம் சாரா நிதிக்கருவிகளையும் குழுமமானது இழப்புக்காப்பீட்டு வணிக உறவுகளுக்காக இழப்புக்காப்பீட்டு வணிக்கக் கருவிகளாக வகைப்படுத்துகின்றது. இழப்புக்காப்பு வணிகத்தின் ஆரம்ப குறித்தொதுக்கலில் குழுமமானது இழப்புக்காப்பு வணிகக் கருவி மற்றும் இழப்புக்காப்பு வணிக விடயம் ஆகியவற்றுக்கிடையிலான உறவினை முறைசார் ரீதியில் ஆவணப்படுத்துகின்றது. இதிலே இழப்புக்காப்பு வணிகத்தினைப் பொறுப்பேற்பதற்கான உபாயமார்க்கமும் அபாயநேர்வு முகாமைத்துவக் குறிக்கோளும் உள்ளடங்குகின்றன. அத்துடன் இழப்புக்காப்பு வணிக உறவின் செயற்திறனை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற முறையும் சேர்கின்றது. இழப்புக்காப்பு வணிகம் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதியில் குறிப்பிட்ட இழப்புக்காப்பு வணிகத்துக்கு உட்படும் விடயத்தின் (விடயங்களின்) நியாயப்பெறுமதியில் அல்லது காசுப்பாய்ச்சலில் ஏற்படுத்தும் மாற்றத்தினை சமப்படுத்துவதில் இழப்புக்காப்பு வணிகக்கருவிகள் செயற்திறன்மிக்கவையாக எதிர்பார்க்கப்படுகின்றதா மேலும் ஒவ்வொரு இழப்புக்காப்பு வணிகத்தினதும் உண்மையான பெறுபேறு 80%-125% இனுள் உள்ளதா என்பதைத் தீர்மானிக்க குழுமமானது இழப்புக்காப்புத் தொடர்பினை ஆரம்பத்திலும் பின்னர் தொடர்ந்தும் மதிப்பிடுகின்றது. எதிர்வுகூறப்பட்ட கொடுக்கல் வாங்கலானது நிகழ்வதற்கு உயர்சாத்தியத்தினை உடையதா மேலும் இலாபம் அல்லது நட்டத்தினை இறுதியில் பாதிக்கும் காசுப்பாய்ச்சலில் உள்ள மாறுபாட்டிற்கு முகங்கொடுப்பதா என்பது தொடர்பாக குழுமமானது எதிர்வுகூறப்படும் கொடுக்கல் வாங்கலின் காசுப்பாய்ச்சல் இழப்புக்காப்பு வணிகத்திற்காக மதிப்பீடொன்றினை மேற்கொள்கின்றது.

இந்த இழப்புக்காப்பு வணிகத் தொடர்புகள் கீழே கலந்துரையாடப்படுகின்றன

### *4.11.1 நியாயப் பெறுமதி இழப்புக் காப்பு வணிகம்*

அங்கீகரிக்கப்பட்ட சொத்து அல்லது பொறுப்பின் அல்லது இலாபத்தினையோ அல்லது நட்டத்தினையோ பாதிக்கும் உறுதியான கடப்பாட்டின் நியாயப் பெறுமதியின் மாற்றத்தின் இழப்புக் காப்பு வணிகத்திலே நிதி ஒப்பந்தம் ஒன்று இழப்புக் காப்புக் கருவியாக நியமிக்கப்படுகையில் நிதி ஒப்பந்தத்தின் நியாயப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் உடனடியாக இலாபத்தில் அல்லது நட்டத்தில், இழப்புக் காப்பு வணிக அபாயநேர்வுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள இழப்புக் காப்பு வணிக விடயத்தின் நியாயாப் பெறுமதியில் ஏற்படும் மாற்றத்துடன் சேர்த்து அங்கீகரிக்கப்படுகின்றது (இலாபம் அல்லது நட்டக் கூற்றிலுள்ள ஒரே லைன் விடயம் அல்லது இழப்புக் காப்பு வணிக விடயமாக ழுஉஐ).

இழப்புக் காப்பு ஒப்பந்தமானது காலாவதியானால் அல்லது விற்கப்பட்டால் அல்லது முடிவுறுத்தப்பட்டால் அல்லது பயன்படுத்தப்பட்டால் அல்லது இழப்புக் காப்பானது இனிமேலும் நியாயப் பெறுமதி இழப்புக் காப்புக் கணக்கீட்டின் தெரிவடிப்படையினை பூர்த்தி செய்யாவிட்டால் அல்லது இழப்புக் காப்பின் நியமனம் மீளப் பெறப்பட்டால் இழப்புக் காப்பு கணக்கு வைத்தலானது துண்டிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் புதுப்பிக்கப்படுவதற்குத் தேவையான விதிகளின் மாற்றம் நீங்கலாக வேறு மாற்றங்கள் இன்றி இரு தரப்பினாலும் சட்டங்கள் அல்லது ஒழுங்கு விதிகளின் விளைவாக ஒரு மத்திய எதிரத்தரப்பொன்றிற்கு ஒப்பந்தம் மாற்றப்படும்போது ஒப்பந்தமானது காலாவதியானதாக அல்லது முடிவுறுத்தப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

செயற்திறன்மிகு வட்டி முறை பயன்படுத்தப்படுகின்ற இழப்புக் காப்பு வணிக விடயம் துண்டிக்கப்படும் வரையிலான எந்தவித சீராக்கல்களும் விடயத்தின் எஞ்சியுள்ள ஆயட்காலத்தின்போதான மீள் கணக்கிடப்பட்ட செயற்திறன் மிகு வட்டி வீதத்தின் பகுதியாக நட்டத்திலோ அல்லது இலாபத்திலோ இலதாக்கப்படுகின்றது.

### *4.11.2 காசுப் பாய்ச்சல் இழப்புக் காப்பு வணிகம்*

இலாபம் அல்லது நட்டத்தினைப் பாதிக்கக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட சொத்து அல்லது பொறுப்புடன் தொடர்புடைய குறிப்பிட்ட அபாயநேர்வுடன் சேர்க்கக்கூடிய காசுப் பாய்ச்சலிலுள்ள மாறுபடும் தன்மையின் இழப்புக் காப்பிலுள்ள இழப்புக் காப்புக் கருவியாக நிதி ஒப்பந்தம் ஒன்று குறித்துரைக்கப்படுகையில், நிதி ஒப்பந்தத்தின் நியாயப் பெறுமதியிலுள்ள மாற்றங்களின் செயற்திறன் மிகு பகுதியானது OCI யில் அங்கீகரிக்கப்பட்டு உரிமை முதலினுள் இழப்புக் காப்பு வணிக ஒதுக்கத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது. நிதி ஒப்பந்தத்தின் நியாயப் பெறுமதியின் மாற்றத்திலுள்ள எந்தவொரு செயற்திறனற்ற பகுதியும் உடனடியாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. OCI யில் அங்கீகரிக்கப்படுகின்ற தொகையானது இலாபம் அல்லது நட்டத்தினுள் மீள்வகைப்படுத்தப்படுகின்றது. ஏனெனில் இழப்புக் காப்பு வணிகத்திற்குட்பட்ட காசுப் பாய்ச்சலாக அதே காலப்பகுதியிலான மீள் வகைப்படுத்தல் சீராக்கல் இலாபம் அல்லது நட்டத்தினைப் பாதிக்கின்றது மேலும் இலாபம் அல்லது நட்டக் கூற்றின் அதே வரி விடயத்தினையும் OCI னையும் பாதிக்கின்றது.

இழப்புக் காப்பு ஒப்பந்தமானது காலாவதியானால் அல்லது விற்கப்பட்டால் அல்லது முடிவுறுத்தப்பட்டால் அல்லது பயன்படுத்தப்பட்டால் அல்லது இழப்புக் காப்பானது இனிமேலும் நியாயப் பெறுமதி இழப்புக் காப்புக் கணக்கீட்டின் தெரிவடிப்படையினை பூர்த்தி செய்யாவிட்டால் அல்லது இழப்புக் காப்பின் நியமனம் மீளப் பெறப்பட்டால் இழப்புக் காப்பு கணக்கு வைத்தலானது துண்டிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் புதுப்பிக்கப்படுவதற்குத் தேவையான விதிகளின் மாற்றம் நீங்கலாக வேறு மாற்றங்கள் இன்றி இரு தரப்பினாலும் சட்டங்கள் அல்லது ஒழுங்கு விதிகளின் விளைவாக ஒரு மத்திய எதிரத்தரப்பொன்றிற்கு ஒப்பந்தம் மாற்றப்படும்போது ஒப்பந்தமானது காலாவதியானதாக அல்லது முடிவுறுத்தப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

*4.11.3 தேறிய முதலீட்டு இழப்புக் காப்பு வணிகம்*

வெளிநாட்டு இயக்கமொன்றிலுள்ள தேறிய முதலீட்டின் இழப்புக் காப்பு வணிகத்தில் இழப்புக் காப்பு வணிகக் கருவியாக நிதி ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தம் சாராத நிதிப் பொறுப்பு நியமிக்கப்படுகையில் இழப்புக் காப்பு வணிகக் கருவியின் நியாயப் பெறுமதியிலுள்ள மாற்றத்தின் செயற்திறன் மிகு பகுதியானது OCIயில் அங்கீகரிக்கப்பட்டு உரிமை முதலினுள் மாற்ற ஒதுக்கத்தினுள் சமர்ப்பிக்கப்படுகின்றது. இழப்புக் காப்பு வணிகக் கருவியின் நியாயப் பெறுமதியிலுள்ள மாற்றத்தின் செயற்திறனற்ற பகுதியானது உடனடியாக இலாபத்தில் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. OCI யில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகையானது வெளிநாட்டு இயக்கத்தினை கொடுத்துத் தீர்த்தமை மீதான மீள் வகைப்படுத்தல் சீராக்கலாக இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படுகின்றது.

*4.11.4 ஏனைய வியாபாரம் சாராத நிதி ஒப்பந்தங்கள்*

நிதி ஒப்பந்தமொன்று வியாபாரத்திற்கு வைத்திருக்கப்படாவிட்டால் மேலும் தகைமை பெறும் இழப்புக் காப்பு வணிகத் தொடர்பில் நியமிக்கப்படாவிட்டால் அதன் நியாயப் பெறுமதியிலுள்ள சகல மாற்றங்களும் இலாபம் அல்லது நட்டம் மூலமான நியாயப் பெறுமதியிலான ஏனைய நிதி ஒப்பந்தங்களிலிருந்தான தேறிய வருமானத்தின் ஒரு கூறாக உடனடியாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

*4.11.5 உட்பொதிந்துள்ள நிதி ஒப்பந்தங்கள்*

நிதி ஒப்பந்தங்கள் வேறு ஒப்பந்த ரீதியான ஏற்பாட்டில் உட்பொதிந்திருக்கலாம் (ஓம்பு ஒப்பந்தங்கள்). பின்வரும் சந்தர்ப்பங்களில் ஓம்பு ஒப்பந்தங்களில் இருந்து வேறாக உட்பொதிந்துள்ள நிதி ஒப்பந்தங்களுக்கு குழுமம் கணக்கு வைக்கின்றது:

- இலாபம் அல்லது நட்டம் மூலமாக ஓம்பு ஒப்பந்தம் தாமே நியாயப் பெறுமதியில் பதியப்படவில்லை.
- உட்பொதிந்துள்ள நிதி ஒப்பந்தங்களின் விதிகள் வேறான ஒப்பந்தம் ஒன்றில் உள்ளடங்கியிருந்தால் நிதி ஒப்பந்தங்களின் வரைவிலக்கணத்தினை அவை பூர்த்தி செய்யும், மேலும்
- உட்பொதிந்துள்ள நிதி ஒப்பந்தங்களின் பொருளாதாரப் பண்புகள் மற்றும் அபாய நேர்வுகள் ஓம்பு ஒப்பந்தத்தின் பொருளாதாரப் பண்புகள் மற்றும் அபாயநேர்வுகளுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டவையல்ல.

உட்பொதிந்துள்ள நிதி ஒப்பந்தங்கள் தகைமை வாய்ந்த காசுப் பாய்ச்சல் அல்லது தேறிய முதலீட்டு இழப்புக் காப்பு வணிகத் தொடர்பின் ஓரங்கமாக இல்லாத சந்தர்ப்பத்தில் அவை இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நியாயப் பெறுமதியிலுள்ள சகல மாற்றங்களுடனும் நியாயப் பெறுமதியில் அளக்கப்படுகின்றன. வேறாக்கப்பட்ட உட்பொதிந்துள்ள நிதி ஒப்பந்தங்கள் ஓம்பு ஒப்பந்தத்துடன் சேர்த்து நிதி நிலைக் கூற்றில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

## 4.12 சொத்து, ஆலை மற்றும் உபகரணம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பெறுமதியிலுள்ள திரட்டிய தேய்வுப் பெறுமானம் மற்றும் திரட்டிய சேதப் பெறுமதி கழிக்கப்பட்டு நாளாந்த சேவைக்கான செலவு நீங்கலாக சொத்து, ஆலை மற்றும் உபகரணமானது செலவில் அல்லது பெறுமதியாக்கத்தில் குறிப்பிடப்படுகின்றது. எதிர்பார்க்கப்படும் பயன்படு ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றம் பொருத்தமானவாறாக கணக்கீட்டு மதிப்பீடுகளில் உள்ள மாற்றமாகக் கருதப்பட்டு தேய்வுப் பெறுமானக் காலத்தினை அல்லது முறையினை மாற்றி கணக்கு வைக்கப்படுகின்றது.

**காசு மாதிரி**

ஆலையும் உபகரணமும் செலவில் குறிப்பிடப்படுகின்றன. திரட்டிய தேய்மானம் மற்றும் பெறுமதியில் ஏற்பட்ட திரட்டிய சேதம் கழிக்கப்பட்டு நாளாந்த சேவைச் செலவு நீங்கலாகக் குறிப்பிடப்படுகின்றது. அங்கீகரித்தல் தெரிவிடப்படை பூர்த்தி செய்யப்பட்டால் செலவு ஏற்படுகையில் அவ்வாறான செலவுகள் உபகரணம் மற்றும் ஆலையின் பாகங்களை பதிலீடு செய்யும் செலவினை உள்ளடக்குகின்றது.

**மீள் பெறுமதி கணித்தல் மாதிரி**

இறையிலி நிலம் மற்றும் கட்டிடங்களின் அனைத்து வகுப்புக்களுக்கும் வங்கியானது மீள் பெறுமதி கணித்தல் மாதிரியினைப் பிரயோகிக்கின்றது. இவ்வாறான சொத்துக்கள் மீள் பெறுமதி கணித்தல் தினத்திலான நியாயப் பெறுமதியாக இருக்கையில் மீள் பெறுமதி கணித்தல் தினத்தினைத் தொடர்ந்து அறவிடப்பட்ட திரட்டிய தேய்வுப் பெறுமானம் மற்றும் சேதம் கழிக்கப்பட்டு மீள் பெறுமதி கணித்தல் தொகையில் பதியப்படுகின்றன.

**மீள் பெறுமதி கணிக்கப்பட்ட சொத்தின் நியாயப் பெறுமதியானது அதன் புத்தகப் பெறுமதியிலிருந்து கணிசமான அளவிற்கு வித்தியாசப்படவில்லை**

என்பதை உறுதிப்படுத்துவதற்காக மீள் பெறுமதி கணித்தலானது ஏழு வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுகின்றது. எந்தவொரு மீள் பெறுமதி கணித்தல் மிகையும் நிதி நிலைக் கூற்றின் உரிமை முதல் பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள மீள் பெறுமதி கணித்தல் ஒதுக்கத்தில் வரவு வைக்கப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தில் முன்பு அங்கீகரிக்கப்பட்டுள்ள அதே சொத்தின் மீள்பெறுமதி கணித்தல் குறைப்பினை அது மறுதலையாக்கும் வரை தவிர. அவ்வாறான சந்தர்ப்பத்தில் அதிகரிப்பானது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. மீள் பெறுமதி கணித்தல் பற்றாக்குறையானது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. அதே சொத்து மீதான முன்னைய மிகையினை பற்றாக்குறையானது சொத்து மீள் பெறுமதி கணித்தல் ஒதுக்கத்தில் நேரடியாக சமப்படுத்தல் தவிர.

**தொடர்ந்து வரும் செலவு**

சொத்து, ஆலை மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உதிரிப் பாகத்தினை பதிலீடு செய்கையில் அந்தப் பாகத்தில் பொதிந்துள்ள பொருளாதார நலன்கள் குழுமத்திற்குப் பாயும் என்பதும் அச் செலவினை உடனடியாக அளக்க முடியும் என்பதும் சாத்தியமாக இருக்கையில் அவ்வாறு பதிலீடு செய்யும் செலவானது அவ்விடயத்தின் புத்தகப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**புனரமைத்தல் செலவு**

எதிர்காலப் பொருளாதர நலன்களைப் புனரமைக்கவோ அல்லது பராமரிக்கவோ சொத்து, ஆலை மற்றும் உபகரணம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்பு என்பவற்றால் ஏற்படும் செலவானது பூரண வருமானக் கூற்றில் ஏற்பட்ட செலவாக அறவிடப்படுகின்றது.

**நடைபெற்று வரும் மூலதனப் பணிகள்**

கட்டிட நிர்மானம், பாரிய ஆலை, இயந்திரம் மற்றும் முறைமை அபிவிருத்தி, மேற்கொள்ளக் காத்திருக்கும் முதலீட்டாக்கம் ஆகியவற்றினால் நேரடியாக ஏற்படும் மூலதனத் தன்மையினைக் கொண்ட செலவுகளே இவையாகும். இவை நிதி நிலைக் கூற்றில் செலவில் குறிப்பிடப்படுகின்றன.

**குத்தகைச் சொத்துக்கள்**

குழுமக் குத்தகை தொடர்பாகத் தன்னிலையாக சகல அபாயநேர்வுகளதும் வெகுமதிகளதும் உரித்தாண்மையினை ஏற்றுக் கொள்கின்றதோ அக்குத்தகைகள் நிதிக் குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தில் குத்தகைச் சொத்தானது அதன் நியாயப் பெறுமதியின் தாழ்வான மட்டத்திலும்

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

ஆகக் குறைவான குத்தகைக் கொடுப்பனவின் நடப்புப் பெறுமதியிலும் அளக்கப்படுகின்றது. ஆரம்ப அங்கீகாரத்தினைத் தொடர்ந்து சொத்தானது இலங்கை கணக்கீட்டுத் தராதரங்கள் (LKAS) 17 - "குத்தகைகள்" ற்கு அமைவாகக் கணக்கு வைக்கப்படுகின்றது.

**பெறுமானத் தேய்வு**

சொத்து மற்றும் ஆலை என்பவற்றின் செலவினை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்படு ஆயுட் காலத்தின் மேல் அவற்றின் எஞ்சிய பெறுமதிக்கு பதிவழிப்பதற்காக நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி பெறுமானத் தேய்வு கணக்கிடப்படுகின்றது. நிதிக் குத்தகைகளின் கீழான குத்தகைச் சொத்துக்கள் குத்தகைத் தவணை அல்லது அதன் பயன்படு ஆயுட்காலம் ஆகிய இரண்டில் குறுகிய ஒன்றில் பெறுமானத் தேய்வடைகின்றது. இது ஆகக்கூடுதலாக 50 வருட குத்தகைக் காலத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. இறையிலி நிலம் பெறுமானத் தேய்வடைவதில்லை. மதிப்பிடப்பட்டுள்ள பயன்படு ஆயுட்காலம் பின்வருமாறு:

| சொத்தின் வகை | பெறுமானத் தேய்வுக் காலம் |
|---|---|
| இறையிலிக் கட்டிடங்கள் | மதிப்பிடப்பட்ட பயன்படு ஆயுட் காலம் |
| குத்தகைக் கட்டிடங்கள் | குத்தகைத் தவணை அல்லது பயன்படு ஆயுட்காலம் ஆகிய இரண்டில் குறுகியது. இது ஆகக்கூடுதலாக 50 வருட குத்தகைக் காலத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ளது |
| தளபாடம், உபகரணம் மற்றும் இயந்திரம் | 20% வருடத்திற்கு |
| இறையிலி மற்றும் குத்தகை மோட்டார் வாகனங்கள் | 25% வருடத்திற்கு |
| முன் செலுத்தப்பட்ட குத்தகைகள் | குத்தகைக் காலப் பகுதியின் போது |

**அங்கீகாரமளித்தல்**

சொத்து, ஆலை மற்றும் உபகரணம் ஆகியவற்றினை விற்றுத் தீர்க்கும் போது அல்லது அவற்றின் பயன்பாட்டிலிருந்து எதிர்காலப் பொருளாதார நலன்கள் எதிர்பார்க்கப்படாதபோது அவை அங்கீகாரமளிக்கப்படுகின்றன. சொத்தின் அங்கீகாரமழித்தலின் போது எழும் இலாபம் அல்லது நட்டம் சொத்து அங்கீகாரமளிக்கப்பட்ட வருடத்தில் வருமானக் கூற்றில் "ஏனைய இயக்க வருமானத்தில்" அங்கீகரிக்கப்படுகின்றது. (தேறிய விற்றுத் தீர்த்தல் வருவாய் மற்றும் சொத்தின் புத்தகப் பெறுமதி ஆகியவற்றிற்கிடையிலான வித்தியாசமாக கணக்கிடப்படுகின்றது)

## 4.13 முதலீட்டுச் சொத்துக்கள்

முதலீட்டுச் சொத்துக்கள் என்பவை வாடகை வருமானத்தினை ஈட்டுவதற்காக அல்லது மூலதனத்தினைப் பெருக்குவதற்காக அல்லது இரண்டிற்குமென வைத்திருக்கப்படும் சொத்துக்களாகும். ஆனால் சாதாரண வியாபார நடவடிக்கைகளிலோ அல்லது உற்பத்தியிலோ அல்லது பண்டங்கள் அல்லது சேவைகளின் விநியோகத்திலோ அல்லது நிர்வாக நோக்கங்களுக்காகவோ முதலீட்டுச் சொத்துக்கள் பயன்படுத்தப்படமாட்டாது.

**ஏற்றுக்கொள்ளலின் அடிப்படை**

முதலீட்டுச் சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நன்மைகள் குழுமத்திற்கு உள்வரும் என்பதும் முதலீட்டுச் சொத்தின் செலவானது நம்பகத் தன்மையுடன் அளக்கக்கூடியதாக இருக்கும் என்பதும் சாத்தியமாக இருக்கும்போது முதலீட்டுச் சொத்தானது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**அளவீடு**

முதலீட்டுச் சொத்தானது ஆரம்பத்தில் அதன் செலவிலேயே அளக்கப்படுகின்றது. கொள்வனவு செய்யப்பட்ட முதலீட்டுச் சொத்தின் செலவானது அதன் கொள்வனவு விலையினையும் நேரடியாக அதனுடன் தொடர்புடைய செலவினையும் உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட முதலீட்டுச் சொத்தொன்றின் செலவானது நிர்மாணமோ அல்லது அபிவிருத்தியோ பூர்த்தியாக்கப்பட்ட திகதியில் அதன் செலவாக இருக்கின்றது.

முதலீட்டுச் சொத்துக்களுக்கு செலவு மாதிரியினை குழுமம் பயன்படுத்துவதானது இலங்கை கணக்கீட்டு நியமம் 40 (LKAS 40) - முதலீட்டுச் சொத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய முதலீட்டுச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள காணிகள் திரட்டிய சேதம் நீங்கலாக செலவினில் குறிக்கப்படுகின்றது மற்றும் முதலீட்டுச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்ற கட்டிடங்கள் ஏதாவது திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் ஏதாவது திரட்டிய சேத இழப்புக்கள் நீங்கலாக செலவில் குறிப்பிடப்படுகின்றது.

## 4.14 புலப்படாச் சொத்துக்கள் மற்றும் நன்மதிப்பு

### *4.14.1 நன்மதிப்பு*

நன்மதிப்பினால் இனங்காணப்படுவது துணை நிறுவனங்களைக் கொள்வனவு செய்த திகதியில் இனங்காணப்பட்ட துணை நிறுவனங்களின் தேறிய சொத்துக்களின் நியாயப் பெறுமதிக்கும் துணை நிறுவனங்களின் கொள்வனவுக்கான கிரயத்திற்கும் இடையிலான வித்தியாசமாகும். துணை நிறுவனங்களின் ஒருங்கிணைப்பினால் பெறப்பட்ட நன்மதிப்பில் ஏதாவது பெறுமதி குறைப்புக்கள் ஏற்படக்கூடிய நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளதா என வருடாந்தம் பரிசீலனை செய்யப்படுகின்றது. அவ்வாறு நிகழ்வுகள் இனங்காணப்படின், அதனை நன்மதிப்புப் பெறுமதி குறைப்பாக நிதிக்கூற்றுக்களில் கிரயத்திலிருந்து கழித்துக் காட்டப்படுகின்றது.

### *4.14.2 மென்பொருள்*

குழுமத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மென்பொருளானது செலவு கழிக்கப்பட்ட திரட்டிய இலதாக்கலிலும் ஏதாவது திரட்டிய சேத இழப்பு ஏற்பட்டிருப்பின் அதிலும் அளக்கப்படுகின்றது.

உள்நிலையாக உருவாக்கப்பட்ட மென்பொருளுக்கான செலவானது சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றது. மென் பொருளின் உருவாக்கத்தினைப் பூர்த்தி செய்து, எதிர்காலப் பொருளாதார நலன்களை உருவாக்கும் வகையில் அதனைப் பயன்படுத்தி அதன் உருவாக்கத்தினைப் பூர்த்தி செய்வதற்கு செலவினை நம்பத்தகுந்த முறையில் அளக்கக்கூடிய ஆற்றலையும் நோகக்கத்தினையும் குழுமம் எடுத்து விளக்குகையிலேயே இவ்வாறு அங்கீகரிக்கப்படுகின்றது. உள்நிலையாக உருவாக்கப்பட்ட மென்பொருளின் மூலதனமாக்கப்பட்ட செலவானது மென்பொருளினை உருவாக்குவதற்கு ஏற்பட்டதென நேரடியாக கூறக்கூடிய சகல செலவுகளையும் மூலதனமாக்கப்பட்ட கடன் பெறல் செலவுகளையும் உள்ளடக்குவதுடன் அதன் பயன்படு ஆயுட் காலத்தின் போது இலதாக்கப்படுகின்றது. உள்நிலையாக உருவாக்கப்பட்ட மென்பொருளானது திரட்டிய இலதாக்கலும் ஏதாவது

சேதங்கள் ஏற்பட்டிருப்பின் அவையும் கழிக்கப்பட்டு மூலதனமாக்கப்பட்ட செலவில் குறிப்பிடப்படுகின்றது. மென்பொருளானது எக்குறிப்பிட்ட சொத்துடன் தொடர்புபட்டுள்ளதோ அதில் உட்பொதிந்துள்ள பொருளாதார நலன்களை அது அதிகரிக்கையில் மாத்திரமே அதன் மீதான தொடர்ந்து ஏற்படும் செலவுகள்

மூலதனமாக்கப்படுகின்றன. ஏனைய சகல செலவுகளும் ஏற்பட்ட செலவாக செலவு வைக்கப்படுகின்றன.

*4.14.3 இலதாக்கல்*

மென்பொருளானது பயன்படுத்துவதற்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள திகதியிலிருந்து அதன் மதிப்பிடப்பட்ட பயன்படு ஆயுட் காலத்தின் போது இலாபம் அல்லது நட்டத்தில் நேர் கோட்டு அடிப்படையில் இலதாக்கப்படுகின்றது. மென்பொருளின் நடப்பு மற்றும் ஒப்பீட்டு காலப்பகுதிக்கான மதிப்பிடப்பட்ட ஆயுட் காலம் ஐந்து வருடங்களாகும்.

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின்போதும் இலதாக்கல் முறைகள், பயன்படு ஆயுட் காலங்கள் மற்றும் எஞ்சிய பெறுமதிகள் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமெனின் சீராக்கப்படுகின்றன.

## 4.15 நிதிசாராச் சொத்துக்களின் சேதம்

**ஏற்றுக்கொள்ளலின் அடிப்படை**

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின்போதும் சொத்து ஒன்று சேதத்திற்கு உள்ளாகக்கூடிய அறிகுறி இருக்கின்றதா என்பதைக் கண்டறிவதற்கு வங்கியானது சொத்தினை மதிப்பீடு செய்கின்றது. அவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் அல்லது சொத்து ஒன்றுக்கு வருடாந்த சேதப் பரிசீலனை தேவைப்பட்டால் வங்கியானது சொத்தின் அறிவிடப்படக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது. சொத்து ஒன்றின் அறவிடப்படக்கூடிய தொகையானது சொத்தொன்றின் அல்லது காசு உருவாக்கும் பிரிவொன்றின் அதனை விற்பதற்கான மற்றும் அதன் பயன்பாட்டில் உள்ள பெறுமதி நீங்கலாக அவற்றின் நியாயப்பெறுமதியின் உயர் தொகையாகும். சொத்து ஒன்றின் அல்லது காசு உருவாக்கப் பிரிவொன்றின் புத்தகத் தொகையானது அதன் அறவிடப்படக்கூடிய தொகையினை மிஞ்சும் போது சொத்தானது சேதமுற்ற ஒன்றாகக் கருதப்பட்டு அதன் தொகையானது அறவிடப்படக்கூடிய தொகையாகக் குறைத்துப் பதியப்படுகின்றது. பயன்பாட்டில் உள்ள பெறுமதியினை மதிப்பிடுகையில் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்கள் முன்வரி கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிவாக்கப்படுகின்றன. சொத்துக்கு குறிப்பிட்டதான அபாயநேர்வு மற்றும் காலப்பெறுமதியின் நடைமுறைச் சந்தை மதிப்பீடு ஆகியவற்றினை முன்வரிக்கழிவு பிரதிபலிக்கின்றது. விற்பனை செய்வதற்கான செலவு நீங்கலாக நியாயப் பெறுமதியினை தீர்மானிக்கையில் பொருத்தமான பெறுமதி கணித்தல் மாதிரி பயன்படுத்தப்படுகின்றது. இந்தக் கணக்கீடுகள் பெறுமதி கணித்தல் பல கூறுகள், பகிரங்கமாக விற்கப்படும் துணைக் கம்பனிகளுக்கான விலைகுறிக்கப்பட்ட பங்கு விலைகள் அல்லது ஏனைய கிடைக்கக்கூடிய நியாயப்பெறுமதிக் குறிகாட்டிகள் ஆகியவற்றின் மூலம் உறுதியாக்கப்படுகின்றன.

**அளவீடு**

நன்மதிப்பு தவிர்ந்த சொத்துக்களுக்கு அவற்றின் முன்பு அடையாளம் காணப்பட்ட சேத நட்டங்கள் இனிமேலும் இல்லாமல் இருக்கின்றனவா அல்லது குறைந்திருக்கலாமா என்பதற்கான அறிகுறிகள் ஏதாவது இருக்கின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் போதும் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறான அறிகுறி தென்பட்டால் வங்கியானது சொத்துக்களின் அல்லது காசு உருவாக்கப் பிரிவுகளின் அறவிடக்கூடிய தொகையினை மதிப்பீடு செய்கின்றது. கடைசியாக சேத நட்டமானது அடையாளம் காணப்பட்டதில் இருந்து சொத்துக்களின் அறவிடப்படக்கூடிய தொகையை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட ஊகங்களில் மாற்றங்கள் ஏற்பட்டால் மாத்திரமே முன்பு அடையாளம் காணப்பட்ட சேத இழப்பானது மறுதலையாக்கப்படுகின்றது. மறுதலையானது வரையறுக்கப்பட்டதாகும் இதனால் சொத்தின் புத்தகப் பெறுமதியானது அதன் அறவீட்டுத் தொகையினை மிஞ்சாது அல்லது முன்னைய வருடங்களில் சேத நட்டம் எதுவும் அடையாளம் காணப்பட்டிருக்காவிட்டால் பெறுமானத் தேய்வு இல்லாமல் தீர்மானிக்கப்பட்டிருக்கும் புத்தகத் தொகையினை மிஞ்சாது. இவ்வாறான மறுதலையானது வருமானக் கூற்றினில் அடையாளம் காணப்படுகின்றது.

நன்மதிப்பு தொடர்பான சேத நட்டங்கள் எதிர்வரும் காலகட்டங்களில் மறுதலையாக்கப்படுவதில்லை.

புத்தகப் பெறுமதியானது சேதத்திற்கு உள்ளாகலாம் என்பதை நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் சுட்டிக்காட்டினால் சேதத்திற்காக வருடாந்தம் நன்மதிப்புக்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. வியாபாரச் சோர்க்கை ஒன்றில் பெறப்பட்ட நன்மதிப்பானது அது பெறப்பட்ட திகதியில் இருந்து வங்கியின் காசு உருவாக்கப்பிரிவு (CGU) அல்லது குழுமத்தின் காசு உருவாக்கப் பிரிவு ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கப்படுகின்றது. இப்பிரிவுகளுக்கு நன்மதிப்பை பெற்றுக்கொள்பவரின் ஏனைய சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டாலும் அல்லது ஒப்படைக்கப்படாவிட்டாலும் இவ்வாறான சேர்க்கையின் கூட்டுச்சக்தியினால் நன்மதிப்பானது நன்மைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நன்மதிப்பு ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பிரிவும் வங்கியினுள் தாழ்வான மட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இதில் உள்நிலை முகாமைத்துவ நோக்கத்திற்காக நன்மதிப்பு கண்காணிக்கப்படுகின்றது. இது "SLFRS 8 - இயக்கப் பிரிவுகளுக்கு" அமைவாக இயக்கப் பிரிவினை விடப் பெரியதல்ல.

CGU வின் ஒரு பகுதியாக நன்மதிப்பு மாறுகையில் மேலும் அப்பிரிவு விற்றுத் தீர்க்கப்பட்டுள்ள பிரிவினுள் உள்ள இயக்கத்தின் ஒரு பகுதியாக மாறுகையில் விற்றுத் தீர்க்கப்பட்டுள்ள இயக்கத்துடன் தொடர்புபட்டுள்ள நன்மதிப்பானது இயக்கத்தின் விற்றுத்தீர்த்தலின் மீதான இலாபம் அல்லது நட்டத்தினைத் தீர்மானிக்கையில் இயக்கத்தின் புத்தகத் தொகையில் உள்ளடக்கப்படுகின்றது. இச்சூழ்நிலையில் விற்றுத்தீர்க்கப்படும் நன்மதிப்பானது விற்றுத்தீர்க்கப்பட்ட இயக்கம் மற்றும் தக்கவைக்கப்பட்ட CGU வின் பகுதி ஆகியவற்றின் சார்பளவு பெறுமதிகளின் அடிப்படையில் அளக்கப்படுகின்றது.

துணைக் கம்பனிகள் விற்கப்படும்போது விற்கப்படும் விலைக்கும் தேறிய சொத்துக்களுக்கும் இடையிலான வித்தியாசமும் திரட்டிய மாற்ற வித்தியாசமும் நன்மதிப்பும் வருமானக்கூற்றினில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

## 4.16 நிதி உத்தரவாதங்கள்

**ஏற்றுக்கொள்ளளுக்கான அடிப்படை**

சாதாரண வியாபாரத்தின்போது வங்கியானது நிதி உத்தரவாதங்களை வழங்குகின்றது. இதிலே நாணயக் கடிதங்கள், உத்தரவாதங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளல்கள் உள்ளடங்குகின்றன. நிதி உத்தரவாதங்கள் ஆரம்பத்தில் நிதிக்கூற்றுக்களில் அதன் நியாயப் பெறுமதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட காப்பீட்டுக் கட்டணங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டதைத்தொடர்ந்து ஒவ்வொரு உத்தரவாதத்தின் கீழான வங்கியின் பொறுப்பானது வருமானக் கூற்றினில் அடையாளம் காணப்பட்ட திரட்டிய இலதாக்கல் நீங்கலாக தொகையின் கூடிய தொகையில் அளக்கப்படுகின்றது. மேலும் உத்தரவாதத்தின் விளைவினால் எழக்கூடிய எந்தவொரு நிதிக்கடப்பாட்டினையும் தீர்ப்பதற்கு செலவின் சிறந்த மதிப்பீடு தேவைப்படுத்தப்படுகின்றது..

**அளவீடு**

நிதி உத்தரவாதங்கள் தொடர்பாக பொறுப்பினில் ஏற்படுகின்ற எந்தவொரு அதிகரிப்பும் வருமானக் கூற்றில் கடன் நட்டச் செலவில் பதியப்படுகின்றது. பெற்றுக்கொள்ளப்படுகின்ற காப்பீட்டுக் கட்டணமானது உத்தரவாதத்தின் ஆயுட்காலத்தின் போது நேர்கோட்டு அடிப்படையில் "தேறிய கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்" என்பதில் வருமானக்கூற்றில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

## 4.17 ஓய்வூதிய நலன்கள்

### *4.17.1 வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்*

*4.17.1.1 1996 - ஓய்வூதியத் திட்டம் -1996*

ஜனவரி 01க்கு முன்னர் வங்கியில் இணைந்து கொண்ட வங்கியின் நிரந்தர பணியாள் உறுப்பினர்கள் இந்த வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் இருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். இத்திட்டத்திற்கான பங்களிப்புகள் தனியாக நிர்வகிக்கப்படும் நிதியத்திற்கு வழங்கப்படுகின்றன. திட்டத்தின் கீழ் நலன்களை வழங்குவதற்கான செலவானது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலக் கணிப்பீட்டுப் பெறுமதி முறையினைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்படுகின்றது. காப்புறுதிக் கணிப்பீட்டினால் ஏற்படும் இலாபங்களும் இழப்புக்களும் குறிப்பிட்ட நிதியாண்டின்போது வருமானங்களாக அல்லது செலவுகளாக அங்கீகரிக்கப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட நலன் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகளில் இருந்து இன்னமும் அங்கீகரிக்கப்படாத கடந்த கால சேவைச்செலவுகள் நீங்கலாகவும் திட்டமிடப்பட்ட சொத்துக்களின் நியாயப்பெறுமதி நீங்கலாகவும் உள்ள தொகையினை கொண்டுள்ளது. இதிலிருந்து இன்னமும் அங்கீகரிக்கப்படாத காப்புறுதிச் செலவு, இழப்புகள், கடப்பாடுகள் நேரடியாகத் தீர்க்கப்படுகின்றன. எந்தவொரு சொத்தினதும் பெறுமதியானது இன்னமும் அங்கீகரிக்கப்படாத எந்தவொரு காப்புறுதிச் செலவினது இழப்பினதும் கடந்தகால சேவைச் செலவினதும் திட்டத்திற்கான எதிர்காலப் பங்களிப்பிலிருந்து திரும்பி நிதியினை வழங்குதல் அல்லது குறைப்பு எனும் வடிவில் கிடைக்கக்கூடியதாகவுள்ள ஏதாவது பொருளாதார நன்மைகளினதும் தற்போதைய பெறுமதி ஆகியவற்றின் கூட்டுத்தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் அண்மைக்காலத்திலே மேற்கொள்ளப்பட்ட காப்புறுதிக் கணிப்பீட்டுப் பெறுமதியானது 2015 டிசம்பர் 31 ஆம் திகதி பியால் எஸ்.குணதிலக்க F.S.A. (USA) அமெரிக்கன் அகடமி ஒப் எக்சுவரிஸ் அன்ட் கன்சல்டிங் அக்சுவரிசினால் (யுஅநசஎடயபே யுஉயனநஅல ழக யுஉவரயசநைள யனெ ஊழளெரடவபைெ யுஉவரயசநைள) மேற்கொள்ளப்பட்டது.

2015 டிசெம்பர் 31இல் உள்ளவாறாக பெறுமதிக் கணிப்பில் பயன்படுத்தப்பட்ட பிரதான நிதி ஊகங்கள் பின்வருமாறு:

| |
|---|
| வட்டி/கழிவு வீதம் 9.5% p.a. |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பு 5% p.a. |
| சகல தரப்பினருக்குமான அடிப்படைச் சம்பள அதிகரிப்பு 7% p.a. |

பணியாளர்கள் பத்து வருட சேவையினை பூர்த்தி செய்ததன் பின்னரும் 55 வயது எனும் சாதாரண ஓய்வூதிய வயதினை அடைந்த பின்னரும் ஓய்வூதியத்தினை பெறுவதற்கான உரித்தினைப் பெறுகின்றனர். ஓய்வூதியத் தொகையின் அளவானது சேவைக்காலத்தின் அளவிற்கு அமைய பின்வருமாறு வழங்கப்படுகின்றது:

| | சேவைக்காலம் | ஓய்வூதியத் தொகை |
|---|---|---|
| (i) | 10 முதல் 20 வருடங்கள் | கடைசியாகப் பெற்ற சம்பளத்தில் 80% |
| (ii) | 21 முதல் 29 வருடங்கள் | கடைசியாகப் பெற்ற சம்பளத்தில் 80% த்துடன் மேலதிக 20 வருடங்கள் ஒவ்வொன்றிற்கும் 1% என |
| (iii) | 30 வருடங்களுக்கு மேல் | கடைசியாகப் பெற்ற சம்பளத்தில் 90% |

ஓய்வூதிய நிதியங்களின் கணக்குகள் தனியாகப் பேணப்பட்டு வருவதுடன் சுயாதீனமான புறநிலைக் கணக்காய்வாளர்களின் வருடாந்தக் கணக்காய்விற்கும் உட்பட்டதாகும். நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது சமர்ப்பிக்கப்பட்ட கணக்குக் கூற்றுக்களையும் கணக்காய்வாளர் அறிக்கையினையும் மீளாய்வு செய்கின்றது. இந்த ஆவணங்கள் வங்கியின் வெளிப்படுத்தல் மீளாய்விற்காகவும் சமர்ப்பிக்கப்படுகின்றது. ஏனெனில், நிதியிடலானது உச்சபட்ச மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கான கடப்பாட்டின்கீழ் வங்கி இருக்கின்றது. நலனைப் பெறுபவர் வாழும் காலம் வரையில் அவருக்கு மாதாந்தம் ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.

*4.17.1.2 பணிக்கொடை*

1996 ஜனவரி 01ல் அல்லது அதற்குப் பின்னர் வங்கியில் இணைந்து கொண்ட ஊழியர்கள் 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டக் கொடுப்பனவுகளின் கீழ் பணிக்கொடையினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர்களாவர். அல்லது அவர்கள் உத்தேச ஓய்வூதியத் திட்டத்தினை பெற்றுக்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்து அதன் மூலமாக பணிக்கொடைக்கான உரிமையினை விட்டுக் கொடுக்கலாம்.

ஓய்வு பெறல் தவிர தொழில் முடிவுறுத்தப்படுகின்ற ஏனைய ஊழியர்கள் 5 வருடங்களுக்கு மேல் சேவையாற்றியிருக்கையில் 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் அவர்களின் தொழில் முடிவுறுத்தப்பட்ட நிதியாண்டின் கடைசி மாதத்தின்போது அவர்கள் பெற்ற முழுச்சம்பளத்தின் ஒன்றரை மடங்கு (1½) எனும் வீதத்தில் தொடர்ச்சியாகச் சேவையாற்றிய ஒவ்வொரு வருடத்திற்காகவும் தொழில் முடிவுறல் பணிக்கொடையினைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

இவ்வாறான பணிக்கொடைக் கொடுப்பனவுப் பொறுப்புகளுக்காக வங்கியினால் மாதாந்த ஒதுக்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 2007 டிசெம்பர் 31 வரை பணிக்கொடைச் சூத்திரத்திற்கு அமைவாக வங்கியானது ஒதுக்கலை மேற்கொண்டது. எவ்வாறாயினும் இலங்கை கணக்கீட்டு தராதரங்களிற்கு அமைய, காப்புறுதிக் கணிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் வங்கியானது பணிக்கொடைப் பொறுப்புக்களுக்காக ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் மக்கள் வங்கியின் துணை நிறுவனங்களும் இணைக்கம்பனிகளும் பணிக்கொடைகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்கின்றன. இதற்கமைய இந்தக் கம்பனிகளில் எவற்றிலாவது ஒரு வருட சேவையினைப் பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு பணிக்கொடைக்கான ஒதுக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த பொறுப்புக்களுக்கு புறநிலையாக நிதியிடப்படுவதில்லை.

### *4.17.2 வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டங்கள்*

வங்கியானது வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ஒன்றினையும் நிர்வகித்து வருகின்றது. இத்திட்டத்திற்கு செலுத்தப்படக்கூடிய பங்களிப்பானது ஊழியர்களினால் வங்கிக்கு வழங்கப்பட்ட சேவைக்கு அமைவானதாக இருக்கின்றது. இவை ஆளணிச் செலவுகளாகப் பதியப்படுகின்றன. செலுத்தப்படாத பங்களிப்புக்கள் பொறுப்புக்களாகக் கருதப்பட்டு அவை அவ்வாறாகவே பதியப்படுகின்றன.

வங்கியானது பின்வரும் திட்டங்களுக்குப் பங்களிப்பு வழங்குகின்றது:

*4.17.2.1 சேமலாப நிதியம்*

வங்கியும் ஊழியர்களும் இந்நிதியத்திற்கு முறையே 12% னையும் 8மூனையும் ஊழியரின் மாதாந்த முழுச்சம்பளத்தில் இருந்து வழங்கி வருகின்றனர் (மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு நீங்கலாக). வங்கியின் சேமலாப நிதியமானது ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு உள்நிலையாக பராமரிக்கப்பட்டு வருகின்றது.

*4.17.2.2 ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்*

வங்கியானது ஊழியரின் ஊதியத்தின் 3மூனை மேலதிகக் கொடுப்பனவு நீங்கலாக பங்களிப்புச் செய்து வருவதுடன் இந்த நிதியமானது ஊழியர் நம்பிக்கை நிதியச்சபையினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

*4.17.3 1996க்குப் பின்னரான ஓய்வூதியத் திட்டம்*

நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக வங்கியானது 1996 ஜனவரி 01இன் பின்னர் வங்கியில் இணைந்து கொண்ட நிரந்தர ஊழியர்களுக்காக புதிய ஓய்வூதியத்திட்டத்தினை ஏற்கனவே இறுதிப்படுத்தியுள்ளது. 2015 டிசெம்பர் முடிவில் உள்ளவாறாக நிதியத்தின் மொத்த தொகையாக 1804 மில்லியன் ரூபா காணப்படுகின்றது.

*4.17.4 விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (1996இற்கு முற்பட்டது)*

தகுதிவாய்ந்த காப்புறுதிக் கணக்கரின் ஆலோசனைக்கு அமைய இத்திட்டத்தின் கீழ் எதிர்காலக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்ய தனியான நிதியம் ஒன்று பேணப்பட்டு வருகின்றது.

## 4.18 ஒதுக்கல்கள்

கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக ஏற்படும் தற்போதைய கடப்பாட்டினை வங்கி கொண்டிருக்கும்போதும் (சட்ட ரீதியானவை அல்லது நன்மை பயப்பவை) மேலும் பொருளாதார நலன்களைக் குறித்துரைக்கின்ற வளங்களின் வெளிப்பாய்ச்சலானது கடப்பாடுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியமாக இருக்கையிலும் கடப்பாட்டின் தொகை தொடர்பாக நம்பத்தகுந்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட முடியுமாக இருக்கையிலும் ஒதுக்கங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. எந்தவாரு ஒதுக்கம் தொடர்பான செலவும் ஏதாவது செலவினை மீள வழங்குதலில் இருந்து தேறியதாக வருமானக்கூற்றினில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 4.19 கடப்பாடுகளும் நிகழ்நிலை சாத்தியங்களும்

அனைத்துப் புலப்படக்கூடிய அபாயநேர்வுகளும் சகல அறிந்து கொண்ட பொறுப்புக்களினதும் தொகையினைத் தீர்மானிக்கையில் கணக்கு வைக்கப்படுகின்றன. வங்கி தனித்தனியாகவோ அல்லது வேறு விதமாகவோ பொறுப்புக் கொண்டுள்ள அதன் துணைக் கம்பனிகள் அல்லது இணை நிறுவனங்களின் ஏதாவது நிகழ்சாத்தியம் மற்றும் மூலதன கடப்பாடுகளில் வங்கியின் பங்கானது பொருத்தமான வெளிக்கூறலுடன் உள்ளடக்கப்படுகின்றன.

நிகழ்சாத்தியப் பொறுப்புக்கள் என்பவை சாத்தியமான கடப்பாடுகளாகும். பொருளாதார நலன்கள் சாத்தியமற்றதாக இருக்கையில் அல்லது பொருளாதார நலன்களை நம்பத்தகுந்த முறையில் அளக்க முடியாமல் இருக்கையில் நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்போதைய கடப்பாடுகள் போன்றவற்றினால் மாத்திரமே இவற்றின் இருப்புக்கள் உறுதிப்படுத்தப்படும். நிகழ்சாத்தியப் பொறுப்புக்கள் நிதிநிலைக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுவதில்லை ஆனால் அவை சேய்மையற்றதாக இல்லாவிட்டால் வெளிக்கூறப்படுகின்றன.

## 4.20 வரிகள்

*4.20.1 நடைமுறை வரிவிதிப்பு*

நடைமுறை வரிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவை நடைமுறை வருடம் அதேபோன்று முன்னைய வருடங்களுக்காக உள்நாட்டு அரசிறை ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக அல்லது செலுத்தப்பட வேண்டியதாக எதிர்பார்க்கப்படும் தொகைகளைக் கொண்டுள்ளது. தொகையினை கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்படும் வரி வீதங்கள் மற்றும் வரிச்சட்டங்கள் ஐந்தொகைத் திகதியில் அல்லது அதற்குப் பின்னர் இயற்றப்பட்டவையாகும். இதற்கமைய 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் அதற்கான திருத்தங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுகளுக்கான 13வது குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் வரிவிதிப்பு நோக்கங்களுக்காக சீராக்கப்பட்ட வருடத்திற்கான இலாபத்தின் அடிப்படையில் வரிவிதிப்பு ஒதுக்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

*4.20.2 பிற்போடப்பட்ட வரிவிதிப்பு*

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரித்தளங்களுக்கும் நிதி அறிக்கையிடல் நோக்கத்திற்கான அவற்றின் புத்தகப் பெறுமதிக்கும் இடையிலான ஐந்தொகைத் திகதியின் போதான தற்காலிக வித்தியாசத்தின் மீது பொறுப்பு முறையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஒதுக்கப்படுகின்றது.

*4.20.2.1 பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு*

சகல தற்காலிக வித்தியாசங்களுக்காகவும் பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

- கொடுக்கல் வாங்கல் நிகழும்போது வியாபாரச் சேர்க்கையாக அல்லாத மேலும் கொடுக்கல் வாங்கலின்போது கணக்கீட்டு இலாபத்தினையோ அல்லது வரிவிதிக்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தினையோ பாதிக்காத கொடுக்கல் வாங்கலில் உள்ள நன்மதிப்பின் அல்லது சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப அங்கீகாரத்தில் இருந்தே பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு எழுகின்றது மேலும்,
- தற்காலிக வித்தியாசத்தின் மறுதலையின் நேரத்தினைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும்போதும் மேலும் முன்னறியக்கூடிய எதிர்காலத்தில் தற்காலிக வித்தியாசங்கள் மறுதலையாக்காது என்பதற்கான சாத்தியங்கள் இருக்கும்போதும் துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகளில் உள்ள முதலீடுகளுடன் தொடர்புபட்டுள்ள வரிவிதிக்கக்கூடிய தற்காலிய வித்தியாசங்கள் சார்பாக பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

*4.20.2.2 பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள்*

சகல கழிக்கக்கூடிய வித்தியாசங்களுக்காகவும் பிற்போடப்பட்ட வரி மதிப்பீடுகள் எற்றுக்கொள்ளப்படுகின்றன. கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசம் மற்றும் பயன்படுத்தப்படாத வரிப்பற்றுக்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களின் முன் கொண்டுவரல்களை, பின்வருவன நீங்கலாக, எதிராகப் பயன்படுத்தக்கூடிய எதிர்கால வரி விதிக்கக்கூடிய இலாபங்கள் இருப்பது சாத்தியமாக இருக்கும்வரை குழுமமானது பயன்படுத்தப்படாத வரிப்பற்று மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களை முன்கொண்டு சென்றது:

- கொடுக்கல் வாங்கல்களின்போது வியாபாரச் சேர்க்கையாக இல்லாத கணக்கீட்டு இலாபத்தினையோ அல்லது வரிவிதிக்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தினையோ பாதிக்காத கொடுக்கல் வாங்கலில் உள்ள சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப அங்கீகாரத்தில் இருந்து எழும் கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசத்துடன் தொடர்புடையதாக பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள் இருக்கையில், அத்துடன்,

» துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகளில் உள்ள முதலீடுகளுடன் தொடர்புபட்ட கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசம் தொடர்பில் முன்னறியக்கூடிய எதிர்காலத்தில் தற்காலிக வித்தியாசங்கள் மறுதலையாகும் மேலும் தற்காலிக வித்தியாசங்களை எதிராகப் பயன்படுத்தக்கூடிய வரிவிதிக்கக்கூடிய இலாபம் கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்பது சாத்தியமாக இருக்கும் வரையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச்சொத்தின் புத்தகப் பெறுமதியானது ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியின் போதும் மீளாய்வு செய்யப்படுகின்றது. பிற்போடப்பட்ட வரிச்சொத்தின் முழுவதுமோ அல்லது பகுதியுமோ பயன்படுத்தப்படுவதை அனுமதிப்பதற்கு போதிய வரி விதிக்கக்கூடிய இலாபம் கிடைக்கக்கூடியதாக இருப்பது இனிமேலும் சாத்தியமில்லை எனும் அளவு வரையில் இது குறைக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்படாத பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின்போதும் மீள்மதிப்பிடப்பட்டு பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள் அறவிடப்படுவதற்கு எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபங்கள் அனுமதிப்பது சாத்தியமானது எனும் நிலை வரையில் இது அங்கீகரிக்கப்படுகின்றது.

அறிக்கையிடல் திகதியின்போது அல்லது அதன் பின்னர் இயற்றப்பட்ட வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு சொத்துக்கள் காசாக்கப்பட்ட அல்லது பொறுப்புக்கள் கொடுத்து தீர்க்கப்பட்ட வருடத்தில் பிரயோகிக்கப்பட எதிர்பார்க்கப்படும் வரி வீதத்தில் பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்களும் வரிப்பொறுப்புக்களும் அளவிப்படுகின்றன.

### *4.20.3 நிதிச்சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (FSVAT)*

2002ம் ஆண்டின் 14ம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பிரிவு 25A மற்றும் அதற்கான திருத்தங்களுக்கு அமைய வங்கியின் மொத்த பெறுமதி சேர்க்கையும் 12மூ நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரிக்கு உட்பட்டது.

### *4.20.4 நிதிச் சேவைகள் மீதான தேசிய கட்டுமான வரி (FSNBT)*

பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பிரிவு 25A இற்கு அமைய அனைத்துப் பெறுமதி சேர்க்கைகளும் நிதிச் சேவைகள் மீதான வரிக்கு உட்பட்டது. 2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேச கட்டுமான வரி சட்டப் பிரிவு 8 இற்கும் அதன் திருத்தங்களுக்கும் அமைய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கணிக்கிடப்பட்ட அனைத்து நிதிச் சேவைகளும் 2மூ தேசிய கட்டுமான வரிக்கு உட்பட்டது.

### *4.20.5 பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)*

2002ம் ஆண்டின் 14ம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பிரிவு 25A மற்றும் அதற்கான திருத்தங்களுக்கு அமைய வங்கியின் மொத்த பெறுமதி சேர்க்கையும் 12% பெறுமதிசேர் வரிக்கு உட்பட்டது.

### *4.20.6 பொருளாதாரச் சேவைக் கட்டணம் (ESC)*

2006ம் ஆண்டின் 13ம் இலக்க பொருளாதாரச் சேவைக் கட்டணச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய குறிப்பிட்ட வீதங்களில் பொறுப்புக்களின் புரள்வுகளின் மீது நுளுஊ செலுத்தப்பட வேண்டியதாகும். செலுத்தப்படுகின்ற நுளுஊயானது வருமான வரிப் பொறுப்பில் இருந்து கழிக்கப்படக்கூடியதாகும். கோரப்படாத எந்தவொரு பொறுப்பும் முன் கொண்டுவரப்பட்டு நான்கு தொடர்ந்துவரும் வருடங்களில் செலுத்தப்படவேண்டிய வருமான வரிக்கு எதிராக குறை நிரப்பப்பட முடியும்.

### *4.20.7 பங்கிலாபங்கள் மீதான பிடித்துவைக்கும் வரி (WHT)*

உள்நாட்டு துணைக் கம்பனிகளின் வரி விதிக்கக்கூடிய இலாபத்தில் இருந்து விநியோகிக்கப்பட்ட பங்கிலாபங்கள் மூலத்தில் 10மூ கழிவினைக் கவருவதுடன் வங்கியின் வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக குறை நிரப்புவதற்கு இவை கிடைக்காதவையாக இருக்கின்றன. எனவே மூலத்தில் கழிக்கப்பட்ட பிடித்துவைக்கும் வரியானது துணைக் கம்பனிகளின் நிதிச் செலவில் திரட்டிய சீராக்கலாக திரட்டிய நிதிக்கூற்றில் சேர்க்கப்படுகின்றது.

### *4.20.8 பயிர்க் காப்புறுதி அறவீடு (CIL)*

2013ம் ஆண்டின் 12ம் இலக்க நிதிச்சட்டத்தின் 14ம் பிரிவின் ஏற்பாட்டுக்கு அமைய 2013 ஏப்ரல் 01ந் திகதியில் இருந்து பயிர்க் காப்புறுதி அறவீடானது (ஊஐடு) அறிமுகப்படுத்தப்பட்டது. வங்கியானது மதிப்பீட்டின் வருடமொன்றிற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு வரிக்குப் பின்னரான இலாபத்தின் 1மூனை செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது.

### *4.20.9 தேசத்தினைக் கட்டியெழுப்பல் வரி (NBT)*

2009ம் ஆண்டின் 9ம் இலக்க தேசத்தினைக் கட்டியெழுப்பல் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அதனைத் தொடர்ந்து வந்த திருத்தங்களுக்கு அமைவாகவும் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளுக்கு அமைவாக பொறுப்புமிகு புரள்வின் மீது 2011 ஜனவரி 1 முதல் 2% எனும் அடிப்படையில் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி செலுத்தப்பட வேண்டும்.

## 4.21 வருமானம் மற்றும் செலவுகளை அங்கீகரித்தல்

பொருளாதார நலன்கள் வங்கிக்கு உட்பாயும் என்பதுவும் மேலும் வருவாயானது நம்பத்தகுந்த முறையில் அளக்கப்படலாம் என்பதுவும் சாத்தியமானதாக இருக்கும் வரையில் வருவாயானது அங்கீகரிக்கப்படுகின்றது. வருமானம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் பின்வரும் குறிப்பிட்ட அங்கீகாரத் தெரிவு அடிப்படையானது பூர்த்தி செய்யப்படவும் வேண்டும்.

### *4.21.1 வட்டி மற்றும் அதேபோன்ற வருமானம் மற்றும் செலவு*

இலதாக்கப்பட்ட செலவில் அளக்கப்படுகின்ற சகல நிதி ஒப்பந்தங்களினதும் விற்பனைக்கு தயாராக உள்ளதாக வகைப்படுத்தப்பட்டுள்ள வட்டியினைக் கொண்டுள்ள நிதிச் சொத்துக்களினதும் இலாபம் அல்லது நட்டத்தின் மூலமாக நியாயப் பெறுமதியில் குறித்தொதுக்கப்பட்டுள்ள நிதி ஒப்பந்தங்களினதும் வட்டி வருமானம் அல்லது செலவானது EIR னைப் பயன்படுத்தி பதியப்படுகின்றது. நிதி ஒப்பந்தங்களின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்தின் மூலமாக அல்லது குறுகிய காலப்பகுதி மூலமாக, எது பொருத்தமானதோ அதன் மூலமாக, மதிப்பிடப்பட்டுள்ள எதிர்காலக் காசுக்கொடுப்பனவுகளை அல்லது பற்றுக்களை நிதிச் சொத்து அல்லது நிதிப்பொறுப்பின் தேறிய புத்தகப் பெறுமதிக்கு மிகச்சரியாகக் கழிவு வழங்குவதே EIR எனும் வீதமாகும். கணிப்பீடானது நிதி ஒப்பந்தத்தின் சகல ஒப்பந்த ரீதியான விதிகளையும் கருத்தில் கொள்வதுடன் ஒப்பந்தத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ள மற்றும் EIR னது இன்றியமையாத பாகமாக இருக்கின்ற கட்டணங்கள் அல்லது அதிகரித்துச் செல்லும் செலவுகள் ஆகியவற்றினை உள்ளடக்குவதுடன் (உதாரணம்: முன்கொடுப்பனவுத் தெரிவுகள்) எதிர்கால கடன் நட்டங்களை உள்ளடக்குவதில்லை.

நிதிச் சொத்து அல்லது இதே போன்ற நிதிச் சொத்துக்களின் குழுவின் பதியப்பட்ட பெறுமதியானது சேத நட்டத்தின் காரணமாகக் குறைக்கப்பட்டதும் சேத நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களுக்கு கழிவு வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி வட்டி வருமானமானது தொடர்ந்தும் அங்கீகரிக்கப்படுகின்றது

*4.21.2 கட்டணங்களும் தரகு வருமானங்களும்*

வங்கியானது அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்ற பரந்த வீச்சிலான சேவைகளில் இருந்து கட்டணங்களையும் தரகு வருமானத்தினையும் ஈட்டுகின்றது. கட்டணங்களும் தரகு வருமானமும் சேவை நிறைவேற்றப்பட்டதும் பெறப்படுகின்றது. குறிப்பிட்ட காலப்பகுதியில் சேவைகளை வழங்குவதற்காக ஈட்டப்படுகின்ற கட்டணங்கள் காலப்பகுதியிலே அட்டுறுவாக்கப்படுகின்றன.

*4.21.3 பங்கிலாப வருமானம்*

பங்கிலாப வருமானமானது வங்கிக்கு கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமையானது நிலைநாட்டப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது.

*4.21.4 தேறிய வியாபார வருமானம்*

வியாபார நடவடிக்கைகளில் இருந்து எழுகின்ற பெறுபேறுகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன. நியாயப்பெறுமதி மற்றும் அதனுடன் தொடர்புடைய வட்டி வருமானம் அல்லது செலவுகளில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக ஏற்படுகின்ற சகல இலாபங்களும் நட்டங்களும் மேலும் வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படுகின்ற நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப்பொறுப்புக்களுக்கான பங்கிலாபங்கள்.

*4.21.5 சொத்தினை விற்பதால் ஏற்படும் இலாபம்/நட்டம், ஆலை மற்றும் உபகரணம்*

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களை விற்பதால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டமானது வியாபாரம் நடைபெறுகின்ற காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டு அது "ஏனைய வருமானமாக" வகைப்படுத்தப்படுகின்றது.

*4.21.6 அரசாங்கப் பிணையங்கள் மற்றும் மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களிலிருந்து கிடைத்த வருமானம்*

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான கழிவுகள்/ காப்பீடுகள் தொடர்ச்சியான கால இடைவெளிகளிலான திரும்பல் விகிதத்தினைப் பிரதிபலிப்பதற்காக காலப்போக்கில் இலதாக்கப்படுகின்றன. திறைசேரி முறிகள் மீதான கூப்பன் வட்டியானது அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மீதான வட்டி வருமானமானது உடன்படிக்கையின் காலப்பகுதியின் போது அட்டுறு அடிப்படையில் வருமானக் கூற்றினில் அங்கீகரிக்கப்படுகின்றது.

*4.21.7 வாடகை வருமானம்*

இயங்கு குத்தகைகள் மீதான வாடகை வருமானமானது தொடர்ந்து இருக்கும் குத்தகைகள் மீதான குத்தகை விதிகள் மீது நேர்கோட்டு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டு ஏனைய "இயக்க வருமானத்தின்" வருமானக் கூற்றினில் பதிவு செய்யப்படுகின்றன.

## 4.22 பிரிவு ரீதியான அறிக்கையிடல்

வங்கியின் பிரிவு ரீதியான அறிக்கையிடலானது பின்வரும் இயக்கப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. வங்கிச்சேவை குத்தகை மற்றும் பயணம் மற்றும் ஏனையவை. மேலே குறிப்பிட்டவை தொடர்பான தகவல்கள் குறிப்பு 47ல் வெளிக்கூறப்பட்டுள்ளன.

## 4.23 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்றானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக காசுப் பாய்ச்சலினை தயாரிக்கும் மறைமுகமான முறையினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. (LKAS 7) - "காசுப் பாய்ச்சல்களின் கூற்று". காசும் காசுக்கு சமமானவைகளும் குறுகிய தவணை, உயர் திரவத்தன்மை முதலீடுகளைக் கொண்டுள்ளது. இவை தெரிந்த காசுத்தொகையாக உடனடியாக மாற்றப்படக்கூடியவையும் அதன் பெறுமானத்தில் புறக்கணிக்கத்தக்க மாற்ற அபாயநேர்விற்கு உட்படக்கூடியதுமாகும். இந்த காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் கையில் உள்ள பணம், வங்கிகளுடனான மீதி, மற்றும் 14 நாட்களுக்கு பெறப்படும் கடன் ஆகியவற்றினை உள்ளடக்குகின்றன.

## 4.24 வைப்புக் காப்புறுதித் திட்டம்

2010ம் ஆண்டின் 5ம் இலக்க வங்கிச்சேவைச் சட்டப் பணிப்புரைகளுக்கு அமைவாகவும் 2010 செப்டெம்பர் 27ந் திகதி விநியோகிக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் காப்புறுதி மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாகவும் உத்தரவுபெற்ற சகல வர்த்தக வங்கிகளும் அவற்றின் வைப்புப் பொறுப்புக்களை 2010 ஒக்டோபர் 01ந் திகிதியில் இருந்து அமுலுக்கு வரும்வகையில் பணச்சட்டத்தின் 32A முதல் 32E வரையான பிரிவுகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட 2010ம் ஆண்டின் 01ம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித்திட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக இயக்கப்படும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தில் காப்புறுதி செய்ய வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றன. காப்புறுதி செய்ய வேண்டிய வைப்புக்களில் பின்வருவன நீங்கலாக கேள்வியும், நேரமும் மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களும் அடங்குகின்றன.

- உறுப்பு நிறுவனங்களுக்கான வைப்புப் பொறுப்புக்கள்
- இலங்கை அரசாங்கத்திற்கான வைப்புப் பொறுப்புக்கள்
- அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகளின் பெறு நிறுவன ஆளுகை தொடர்பான 2007ம் ஆண்டின் 11ம் இலக்க வங்கிச்சேவை சட்டப் பணிப்புரையினால் வரையறுக்கப்பட்டவாறாக பணிப்பாளர்கள், பிரதான முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான வைப்புப் பொறுப்புக்கள்.
- வழங்கப்பட்ட எந்தவொரு வசதிகளுக்கு எதிராகவும் பிணையுறுதியாக வைத்திருக்கப்படும் வைப்புப் பொறுப்புக்கள்
- வங்கிச்சேவைச் சட்டத்திற்கு அமைவாக கைவிடப்பட்ட சொத்து எனும் அர்த்தத்தில் வரும் வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கு நிதிகள் மாற்றப்பட்டுள்ள நிதிக் கம்பனிகள் சட்டத்திற்கு அமைவாக செயற்படாமல் இருக்கும் வைப்புக்கள்

அனுமதிபெற்ற வர்த்தக வங்கிகள் உடனடியாக முன் சென்ற நிதி வருடத்தின் முடிவில் உள்ளவாறாக 14% அல்லது அதற்கு மேற்பட்ட மூலதனப் போதுநிலை வீதத்தினை பேணும்போது தகைமை வாய்ந்த வைப்புப் பொறுப்புக்களின் 0.10% காப்பீட்டுக் கட்டணத்தினை செலுத்த வேண்டும். மேலும் காலாண்டின் முடிவில் இருந்து 15 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய காலாண்டின் முடிவின்போது உள்ளவாறாக தகைமை வாய்ந்த வைப்புக்களின் மொத்த தொகையின் மீது கணிக்கப்பட்ட தொகைக்கு (14க்கு கீழ்ப்பட்ட CIR) சகல ஏனைய அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகளும் அவற்றின் தகைமை பெற்ற வைப்புப் பொறுப்புக்களுள் 0.125% னை செலுத்த வேண்டும்.

## 4.25 தொடர்ந்து நிகழும் நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதிக்கு பின்னர் இடம்பெறுகின்ற சாதகமான மற்றும் சாதகமற்றதான, அறிக்கையிடல் திகதிக்கும் நிதிக்கூற்றுத் திகதிக்கும் இடையில் இடம்பெறுகின்ற, அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் நிகழ்கின்ற நிகழ்வுகள் விநியோகத்திற்காக அதிகாரமளிக்கப்படுகின்றன.

அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் நிகழுகின்ற சகல பொருட்படுத்தத்தக்கதும் முக்கியமானதுமான நிகழ்வுகள் கருத்தில் கொள்ளப்பட்டு பிரயோகிக்கத்தக்கவாறாக சீராக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கான குறிப்பு 44இல் வெளிக்கூறப்பட்டுள்ளன.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

## 4.26 ஒப்பீட்டுத் தகவல்

சிறந்த சமர்ப்பணத்தினை வழங்குவதற்காக தேவையானபோது ஒப்பீட்டுத் தகவலானது மீள்வகைப்படுத்தப்பட்டு நடப்பு வருடத்தின் சமர்ப்பணமானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## 4.27 காப்புறுதித்துறைக்கு தனித்துவமானதான கொள்கைகள்

### *4.27.1 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு மதிப்பீடுகளும் ஊகங்களும் ஆயுட்காப்புறுதி அல்லாத ஒப்பந்தப் பொறுப்புக்கள் ஆயுட்காப்புறுதி அல்லாத ஒப்பந்தப் பொறுப்புக்கள்*

ஆயுட்காப்புறுதி அல்லாத ஒப்பந்தங்களுக்கு அறிக்கையிடல் திகதியின்போது அறிக்கையிடப்பட்டுள்ள எதிர்பார்க்கப்படும் இறுதிச் செலவுக்கான மதிப்பீடுகளும் அறிக்கையிடல் திகதியின்போது ஏற்பட்டுள்ள எதிர்பார்க்கப்படும் இறுதிச் செலவும் ஆனால் இதுவரையில் அறிக்கையிடப்படாததுமான செலவுகளும் உள்ளடங்கிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் (IBNR). உறுதித்தன்மையுடன் இறுதியான கோரிக்கைச் செலவுகள் நிர்ணயிக்கப்படுவதற்கு நீண்டகாலம் எடுக்கலாம். மேலும் சில கொள்கைகளின் வகைகளுக்கு IBNR கோரிக்கைகள் நிதிநிலைக்கூற்றின் பொறுப்புக்களில் பெரும்பாகத்தினை உள்ளடக்குகின்றது.

நிலுவையாக இருக்கின்ற கோரிக்கைகளின் இறுதிச் செலவினை மதிப்பிடுவதற்கு தராதரமிகு காப்புறுதிக் கோரிக்கைகளின் எதிர்வுகூறல் உத்திகளில் பரந்த வீச்சிலான பல உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் Chain Ladder மற்றும் Bornheutter-Ferguson முறைகளும் நிகழ்வுநிலை/தீவிரத்தன்மை முறைகளும் அடங்குகின்றன.

இந்த உத்திகளில் உள்ளார்ந்ததாக இருக்கின்ற பிரதான ஊகம் என்னவெனில் கம்பனியின் கடந்தகால கோரிக்கையின் உருவாக்க அனுபவமானது எதிர்கால கோரிக்கைகளின் உருவாக்க எதிர்வுகூறலுக்காக பயன்படுத்தப்பட்டு அதன்மூலமாக இறுதியான கோரிக்கைச் செலவுகள் எதிர்வுகூறப்படலாம் என்பதேயாகும். எனவே, இந்த முறைகள் செலுத்தப்பட்ட மற்றும் ஏற்பட்ட இழப்புகளின் உருவாக்கத்தினை ஊகிக்கின்றன. மேலும் முன்னைய வருடங்களின் அவதானிக்கப்பட்ட உருவாக்கங்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இழப்பு விகிதாசாரங்களை அடிப்படையாகக் கொண்ட கோரிக்கை ஒன்றிற்கான சராசரிச் செலவுகள் மற்றும் எண்ணிக்கைகளையும் ஆராய்கின்றது. வரலாற்று ரீதியான கோரிக்கைகளின் உருவாக்கமானது விபத்து வருடங்களினால் பிரதானமாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. ஆனால் இவற்றினை மேலும் புவியியல் பிரதேசங்களின் மூலமாகவும் கணிசமான வியாபார லைன்களின் மூலமாகவும் கோரிக்கைகளின் வகைகளின் மூலமாகவும் பகுப்பாய்வு செய்ய முடியும். பாரிய கோரிக்கைகள் பொதுவாக வெவ்வேறாக கவனிக்கப்படுகின்றன. இவை இழந்த சீராக்கல் மதிப்பீடுகளின் முகப்பெறுமதி ஒதுக்கப்படுவதன் மூலம் அல்லது அவற்றின் எதிர்கால உருவாக்கத்தினை பிரதிபலிக்கும் வகையில் வேறாக எதிர்வுகூறுவதன் மூலம் கையாளப்படுகின்றன. அதிகமான சந்தர்ப்பங்களில் கோரிக்கைகளின் பணவீக்கத்தின் எதிர்கால வீதங்கள் தொடர்பாகவோ அல்லது இழப்பு விகிதாசாரங்கள் தொடர்பாகவோ தெளிவான ஊகங்கள் இருப்பதில்லை. மாறாக எந்த எதிர்வுகூறல்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன என்பது தொடர்பான வரலாற்று ரீதியான கோரிக்கை உருவாக்கத் தரவுகளாக தெளிவற்ற ஊகங்களே பயன்படுத்தப்படுகின்றன.

கடந்த காலப் போக்குகள் எதிர்காலத்தில் பிரயோகிக்கப்படாமல் இருக்கும் அளவினை மதிப்பிடுவதற்கு மேலதிகத் தரம் சார்ந்த தீர்மானங்கள் பயன்படுத்தப்படுகின்றன (உதாரணமாக, ஒரு தடவையில் மாத்திரம் நிகழும் நிகழ்வினைப் பற்றிச் சிந்திப்பதற்கு, கோரிக்கைக்கான பொதுமக்களின் மனப்பாங்கு, பொருளாதார நிலைகள், பணவீக்கக் கோரிக்கைகளின் மட்டம், நீதிமன்றத் தீர்மானங்கள் மற்றும் சட்டவாக் கங்கள் மற்றும் பங்குத்தொகுதிக் கலப்பு கொள்கைகளின் தன்மைகள் மற்றும் கோரிக்கைகளை கையாளுகின்ற செயல்விதிகள் போன்ற சந்தைக்காரணிகள்) சம்பந்தப்பட்டுள்ள சகல நிச்சயமற்ற தன்மைகளையும் கருத்தில் கொண்டு சாத்தியமான விளைவுகளில் இருந்து எழக்கூடிய விளைவுகளின் வீச்சிற்கான சாத்தியமிகு கோரிக்கைகளின் மதிப்பிடப்பட்ட இறுதிச்செலவுகளை தீர்மானிப்பதற்கு இது மேற்கொள்ளப்படுகின்றது.

ஈட்டப்படாத பரிசூதியத்தின் ஒதுக்கங்களின் போதுநிலையின் மதிப்பீட்டின்போதே இதேபோன்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள், ஊகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒப்பந்தத்தினால் வழங்கப்படுகின்ற காப்புறுதிச் சேவையின் பாங்கானது நேர ஒதுக்கீடு தவிர்ந்த அடிப்படையில் ஈட்டப்படாத பரிசூதியத்தின் இலதாக்கலை ஒப்பந்தம் தேவைப்படுத்துகின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்கும் தேவைப்படுத்துகின்றது.

### *4.27.2 உற்பத்தி வகைப்படுத்தல்*

காப்புறுதிக் கொள்கையினை வைத்திருப்போருக்கு குறித்துரைக்கப்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வு ஏற்படுகையில் (காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு) அவர்களுக்கு நட்டயீடு வழங்க இணங்குவதன் மூலம் கம்பனியானது வேறு ஒரு தரப்பிடமிருந்து (கொள்கை வைத்திருப்பவர்) கணிசமான காப்புறுதி அபாயநேர்வினை ஏற்றுக்கொள்ளும் ஒப்பந்தமே காப்புறுதி ஒப்பந்தமாகும். ஒரு பொது வழிகாட்டலாக செலுத்தப்பட்ட நலன்களை செலுத்தப்பட வேண்டிய நலன்களுடன் ஒப்பிடுவதன் மூலம் காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு நடக்கவில்லையா என்பதை கம்பனி தீர்மானிக்கின்றது. காப்புறுதி ஒப்பந்தங்கள் நிதி அபாயநேர்வுகளையும் மாற்றக்கூடியவை.

ஒரு தடவை ஒப்பந்தமானது காப்புறுதி ஒப்பந்தமாக வகைப்படுத்தப்பட்டதும் சகல உரிமைகளும் கடப்பாடுகளும் நீக்கப்பட்டாலோ அல்லது காலாவதியாகினாலோ தவிர காப்புறுதி அபாயநேர்வானது அந்தக் காலப்பகுதியின்போது கணிசமான அளவு குறைந்தால்கூட அதன் ஆயுட்காலத்தின் எஞ்சிய பகுதியின்போது அது தொடர்ந்தும் காப்புறுதி ஒப்பந்தமாகவே இருக்கும்.

### *4.27.3 வருமான அங்கீகாரம்*

முழு எழுதப்பட்ட பரிசூதியம் - கணக்கீட்டு காலப்பகுதியின்போது எழுதப்பட்ட ஒப்பந்தத்தினால் வழங்கப்படுகின்ற முழுக் காப்புறுதிக் காலப்பகுதிக்குமான பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய மொத்தப் பரிசூதியத்தினையும் ஆயுள் காப்புறுதி சாராத முழு எழுதப்பட்ட பரிசூதியம் உள்ளடக்குவதுடன் கொள்கை ஆரம்பமாகின்ற திகதியில் இது அங்கீகரிக்கப்படுகின்றது.

**மீள்காப்புறுதி பரிசூதியம்**

கணக்கீட்டுக் காலப்பகுதியின்போது எழுதப்பட்ட ஒப்பந்தத்தினால் வழங்கப்படுகின்ற மீள் காப்புறுதி காலப்பகுதிக்குமான பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய மொத்த பரிசூதியத்தினையும் ஆயுள் காப்புறுதி சாராத மீள்காப்புறுதி பரிசூதியம் உள்ளடக்குகின்றதுடன் கொள்கை ஆரம்பமாகின்ற திகதியில் இது அங்கீகரிக்கப்படுகின்றது. கணக்கீட்டுக் காலப்பகுதிக்கு முன்னர் ஆரம்பமான மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் தொடர்பாக கணக்கீட்டுக் காலப்பகுதியின்போது எழுகின்ற ஏதாவது சீராக்கல்களையும் பரிசூதியம் உள்ளடக்குகின்றது.

ஈட்டப்படாத மீள்காப்புறுதி பரிசூதியம் என்பது அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான அபாயநேர்வுக் காலப்பகுதியுடன் தொடர்புடைய

வருடத்தில் எழுதப்பட்ட பரிசூதியத்தின் விகிதாசாரமாகும். ஈட்டப்படாத மீள்காப்புறுதி பரிசூதியமானது நேரடி காப்புறுதிக் கொள்கைகளுக்கு உள்ளார்ந்ததாக இருக்கின்ற விதிகளின் மீது பிற்போடப்படுகின்றது.

**ஈட்டப்படாத பரிசூதிய ஒதுக்கம்**

ஈட்டப்படாத பரிசூதிய ஒதுக்கமானது வருடத்தின்போது எழுதப்பட்ட பகுதியினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. ஆனால் காப்புறுதியின் காலாவதியாகத விதிகளுடன் தொடர்புடையது. ஈட்டப்படாத பரிசூதியமானது 365 அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது.

### *4.27.4 கோரிக்கைகளும் செலவுகளின் அங்கீகாரமும்*

**முழுக்கோரிக்கைகள்**

ஆயுள் சாராத காப்புறுதிக்கான முழுக்கோரிக்கைகளும் வருடத்தின் போதான சகல கோரிக்கைகளையும் அவை அறிக்கையிடப்பட்டாலும் இல்லாவிடினும் அவற்றினையும் உள்ளடக்குவதுடன் தொடர்புடைய உள்நிலையான மற்றும் புறநிலையான கோரிக்கைகளை செயன்முறைப்படுத்தி தீர்க்கின்றவற்றுடன் நேரடியாகத் தொடர்புபட்ட செலவுகளை உள்ளடக்குகின்றன. மீட்டல் மற்றும் ஏனைய அறவீடுகளுடன் தொடர்புடைய பெறுமானக் குறைப்பு மற்றும் முன்னைய வருடத்தில் நிலுவையாக இருக்கின்ற கோரிக்கைகளுக்கான சீராக்கல்களையும் உள்ளடக்குகின்றன.

நிலுவையாக இருக்கின்ற கோரிக்கைகளுக்கான கோரிக்கைகளின் செலவுகளும் பொறுப்புக்களும் நேரடிக்காப்புறுதி வியாபாரம் தொடர்பாக அங்கீகரிக்கப்படுகின்றன. பொறுப்பானது அறிக்கையிடப்பட்ட ஆனால் இன்னும் செலுத்தப்படாத ஏற்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத கோரிக்கைகளை உள்ளடக்குவதுடன் அந்தக் கோரிக்கைகளை கொடுத்து தீர்ப்பதுடன் எதிர்பார்க்கப்படும் நேரடியான மற்றும் மறைமுகமான செலவுகளையும் உள்ளடக்குகின்றது. நிலுவையாக இருக்கின்ற கோரிக்கைகள் தனித்தனியேயான கோரிக்கைக் கோப்புக்களின் மீளாய்வுகளின் மூலமாகவும் கோரிக்கைகளை கொடுத்துத் தீர்க்கும் இறுதியான செலவில் உள்ள மதிப்பிடப்படும் மாற்றங்கள் மூலமாகவும் மதிப்பிடப்படுகின்றன. கடந்தகால அனுபவங்கள் மற்றும் போக்குகளின் அடிப்படையில் எதிர்காலப் பொறுப்புக்களின் மிகவும் யதார்த்தபூர்வமான மதிப்பீட்டினை உறுதிப்படுத்துவதற்காக ஐடீசே தொடர்பான ஒதுக்கமானது வருடாந்த அடிப்படையில் காப்பீட்டு ரீதியாக பெறுமதி கணிக்கப்படுகின்றது.

**மீள்காப்புறுதி கோரிக்கைகள்**

சம்பந்தப்பட்ட முழு மீள்காப்புறுதிக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தின் விதிகளுக்கு அமைய அங்கீகரிக்கப்படுகையில் மீள்காப்புறுதிக் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

### *4.27.5 மீள்காப்புறுதி*

கம்பனியானது அதன் சாதாரண வியாபாரச் செயற்பாடுகளில் அதன் சகல வியாபாரங்களுக்கும் காப்புறுதி அபாயநேர்வினை இணங்கி ஒப்புவிக்கின்றது. மீள்காப்புறுதி சொத்துக்கள் மீள்காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து வந்துசேர வேண்டிய மீதிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மீள்காப்புறுதியாளர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய தொகைகள் நிலுவையாக இருக்கின்ற கோரிக்கைகளின் ஒதுக்கல்களுக்கு ஒத்திசைவான முறையில் அல்லது மீள்காப்புறுதிக்காரர்களின் கொள்கையுடன் இணைந்துள்ள கொடுத்து தீர்க்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக மதிப்பிடப்பட்டு சம்பந்தப்பட்ட மீள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கு அமைவாகவும் காணப்படுகின்றது.

மீள்காப்புறுதிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின்போதும் அல்லது அறிக்கையிடல் வருடத்தின்போது சேதத்திற்கான அறிகுறி எழும்போது அதிகரித்த அளவில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கம்பனியானது ஒப்பந்தத்தின் கீழ் சேரவேண்டிய சகல நிலுவையான தொகைகளையும் பெறாமலிருக்கச் செய்கின்றதும் மேலும் மீள் காப்புறுதிக்காரரிடமிருந்து கம்பனி பெறும் தொகையில் நம்பத்தகுந்த முறையில் அளக்கக்கூடிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றதும் நிகழ்ந்தமைக்கான புறவயமான சான்று இருக்கின்றதுமான நிகழ்வு மீள் காப்புறுதிச் சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் நிகழ்ந்த காரணத்தினால் சேதம் ஏற்படுகின்றது. சேத இழப்பானது வருமானக் கூற்றில் பதியப்படுகின்றது.

இணங்கி ஒப்புவிக்கும் மீள் காப்புறுதி ஏற்பாடுகள் காப்புறுதி வைத்திருப்பவர்கள் மீது கம்பனி கொண்டுள்ள அதன் கடப்பாடுகளை நீக்காது.

மீள் காப்புறுதிப் பொறுப்புக்கள் மீள் காப்புறுதிக் கம்பனிகளுக்கு சேரவேண்டிய மீதிகளை பிரதிநிதித்துவம் செய்கின்றன. செலுத்தப்படவேண்டிய தொகைகள் சமபந்தப்பட்ட மீள் காப்புறுதி ஒப்பந்தத்துடன் ஒத்திசையும் முறையில் மதிப்பிடப்படுகின்றன.

இணங்கி ஒப்புவிக்கப்பட்ட மற்றும் ஊகிக்கப்பட்ட மீள் காப்புறுதிக்காக பரிசூதியங்களும் கோரிக்கைகளும் முழு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஒப்பந்த ரீதியான உரிமைகள் நீங்குகையில் அல்லது காலாவதியாகுகையில் அல்லது ஒப்பந்தம் வேறு ஒரு தரப்பிற்கு மாற்றப்படுகையில் மீள்காப்புறுதிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அங்கீகாரமழிக்கப்படுகின்றன.

### *4.27.6 பெறப்படவேண்டிய மீள் காப்புறுதி*

பெறப்படவேண்டிய மீள் காப்புறுதிகள் பெறப்படவேண்டிய நேரத்தில் அங்கீகரிக்கப்பட்டு பெறப்பட்ட அல்லது பெறப்படவேண்டிய வருபேற்றின் நியாயப் பெறுமதியிலுள்ள ஆரம்ப அங்கீகாரத்தில் அளக்கப்படுகின்றன. புத்தகத் தொகையானது அறவிடப்பட முடியாததாக இருக்கலாம் என நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் சுட்டிக் காட்டினால் பெறப்படவேண்டிய காப்புறுதியின் புத்தகப் பெறுமதியானது வருமானக் கூற்றினில் பதிவு செய்யப்பட்டுள்ள சேத இழப்புடன் சேதத்திற்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

### *4.27.7 பெறப்படவேண்டிய காப்புறுதி*

பெறப்படவேண்டிய பரிசூதியம் பெறப்படவேண்டிய நேரத்தில் அங்கீகரிக்கப்பட்டு பெறப்பட்ட அல்லது பெறப்படவேண்டிய வருபேற்றின் நியாயப் பெறுமதியிலுள்ள ஆரம்ப அங்கீகாரத்தில் அளக்கப்படுகின்றன. புத்தகத் தொகையானது அறவிடப்பட முடியாததாக இருக்கலாம் என நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் சுட்டிக் காட்டினால் பெறப்படவேண்டிய காப்புறுதியின் புத்தகப் பெறுமதியானது வருமானக் கூற்றினில் பதிவு செய்யப்பட்டுள்ள சேத இழப்புடன் சேதத்திற்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

### *4.27.8 பிற்போடப்பட்ட செலவுகள்*

**பிற்போடப்பட்ட கொள்வனவுச் செலவுகள்** (DAC)

தரகு, ஒப்புறுதி, சந்தைப்படுத்தல் மற்றும் கொள்கை விநியோகச் செலவுகள் ஆகியவை உள்ளிட்ட, புதிய வியாபாரங்களுடன் மாறுபடுகின்றதும் அதனுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்றதுமான புதிய வியாபாரங்களைக் கொள்வனவு செய்யும் செலவுகள் எதிர்காலப் பரிசூதியங்களிலிருந்து இச் செலவுகள் அறவிடப்படக்கூடியவை என்பது வரையில் பிற்போடப்படுகின்றன. ஏனைய அனைத்துக் கொள்வனவுச் செலவுகளும் செலவு ஏற்படுகையில் செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தினைத் தொடர்ந்து, ஆயுள்

காப்புறுதியல்லாதவைகளுக்கான DAC யானது UPR இலதாக்கப்படுகின்றது என்ற அடிப்படையில் காலப் போக்கில் இலதாக்கப்படுகின்றது.

சொத்தில் உட்பொதிந்துள்ள எதிர்காலப் பொருளாதார நலன்களின் எதிர்பார்க்கப்படும் பயன்படு ஆயுட்காலம் அல்லது எதிர்பார்க்கப்படும் நுகர்வின் பாங்கு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் இலதாக்கல் பகுதியினை மாற்றுவதன் மூலம் கணக்கு வைக்கப்பட்டு கணக்கீட்டு மதிப்பீட்டில் உள்ள மாற்றமாகக் கருதப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்கள் காலாவதியாகுகையில் அல்லது இரத்துச் செய்யப்படுகையில் DAC அங்கீகாரமழிக்கப்படுகின்றது.

**மீள் காப்புறுதித் தரகுகள்**

வெளிச்செல்லும் மீள்காப்புறுதி மீது பெறப்படவேண்டிய செலுத்தப்பட எதிர்பார்க்கப்படும் தரகுகள் பரிசூதியத் தவணையின்போது நேர்கோட்டு அடிப்படையில் பிற்போடப்பட்டு இலதாக்கப்படுகின்றன.

4.27.9 காப்புறுதி ஒப்பந்தத் தரகுகள்

**ஆயுள்காப்புறுதி சாரா ஒப்பந்தப் பொறுப்புக்கள்**

ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு பரிசூதியங்கள் அறவிடப்பட்டதும் ஆயுட்காப்புறுதி சாரா ஒப்பந்தப் பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. இப்பொறுப்புக்கள் நிலுவையாகவுள்ள கோரிக்கை ஒதுக்கீடு என அறியப்படுகின்றது. இது அறிக்கையிடப்பட்டாலோ அல்லது இல்லாவிட்டாலோ சம்பந்தப்பட்ட கோரிக்கைகளைக் கையாளும் செலவுகளுடனும் மீட்டல் மற்றும் அறவீடுகளின் எதிர்பார்க்கப்படும் செலவுக் குறைப்புடனும் ஏற்பட்ட சகல கோரிக்கைகளினதும் ஐந்தொகைத் திகதியில் கொடுத்துத் தீர்க்கப்படாத மதிப்பீடு செய்யப்பட்ட இறுதிச் செலவினை அடிப்படையாகக் கொண்டதாகும். சில குறிப்பிட்ட வகைக் கோரிக்கைகளின் அறிவித்தல் மற்றும் கொடுத்துத் தீர்த்தலில் தாமதங்கள் ஏற்படலாம். எனவே இவற்றின் இறுதிச் செலவுகள் ஐந்தொகைத் திகதியில் நிச்சயமாக அறிந்துகொள்ளப்பட முடியாதவையாகும். மேசாமான விலகலுக்கான எல்லையினை உள்ளடக்கியிருக்கக்கூடிய அவதானிக்கப்பட்ட தரவு மற்றும் நடப்பு ஊகங்களை அடிப்படையாகக் கொண்டு பரந்த வீச்சிலான நியமக் காப்பீட்டு கோரிக்கை எதிர்வு கூறல் உத்தியினைப் பயன்படுத்தி பொறுப்பானது அறிக்கையிடல் திகதியில் கணக்கிடப்படுகின்றது.

பணத்தின் நேரப் பெறுமதிக்காகப் பொறுப்பிற்குக் கழிவு வழங்கப்படுவதில்லை. சமப்படுத்தல் அல்லது அழிவுக்கான ஒதுக்கல் எவற்றிற்குமான எந்த ஏற்பாடும் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஒப்பந்தமானது காலாவதியாகுகையில், வழங்கப்பட்டு முடிக்கப்படுகையில் அல்லது இரத்துச் செய்யப்படுகையில் பொறுப்புக்கள் அங்கீகாரமளிக்கப்படுகின்றன.

ஈட்டப்படாத பரிசூதியங்களுக்கான ஒதுக்கல்கள் இதுவரையில் காலாவதியாகாத அபாயநேர்வுகளுக்கான பரிசூதியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. பொதுவாக ஒதுக்கமானது ஒப்பந்தக் காலப்பகுதியின் போது விடுவிக்கப்பட்டு பரிசூதிய வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஈட்டப்படாத பரிசூதியங்களின் மீது எதிர்பார்க்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் பிற்போடப்பட்ட கொள்வனவுச் செலவுகளின் ஒட்டுமொத்த மிகை இருக்கின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் போதும் கம்பனி அதன் காலாவதியாகாத அபாயநேர்வினை மீளாய்வு செய்து பொறுப்புப் போதுநிலைப் பரிசீலனையினை மேற்கொள்கின்றது. சம்பந்தப்பட்ட ஆயுட் காப்புறுதி சாரா தொழில்நுட்ப ஒதுக்கங்கள் தொடர்பான சொத்துக்கள் மீது எழும் என எதிர்பார்க்கப்படும் முதலீட்டுத் திரும்பலை கருத்திற் கொண்ட பின்னர் இக் கணிப்பீடானது ஒப்பந்த ரீதியான எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களின் நடப்பு மதிப்பீடுகளைப் பயன்படுத்துகின்றது. ஈட்டப்படாத பரிசூதியங்களின் புத்தகத் தொகையானது போதாமலுள்ளது என இந்த மதிப்பீடுகள் காட்டினால் பொறுப்புப் பொதுநிலைக்கான ஒதுக்கத்தினை நிறுவுவதன் மூலம் பற்றாக்குறையானது வருமானக் கூற்றினில் அங்கீகரிக்கப்படுகின்றது.

## 4.28 விநியோகிக்கப்பட்ட ஆனால் இன்னும் செயற்படாத கணக்கீட்டு நியமங்களின் விளைவுகள்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனமானது பின்வரும் புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களை விநியோகித்துள்ளது. இவை 2018 ஜனவரி 1இலோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் நிதிக் காலப்பகுதிக்குப் பிரயோகிக்கத்தக்கதாகும். இதற்கமைய குழுமமானது பின்வரும் புதிய தராதரங்களை இந்தத் திரட்டிய நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பிரயோகிக்கவில்லை.

4.28.1 SLFRS 9 - "நிதி ஒப்பந்தங்கள்"

ளுடுகுசுளு 9 - "நிதி ஒப்பந்தங்கள்" LKAS 39லுள்ள தற்போதைய வழிகாட்டல்களைப் பதிலீடு செய்கின்றது - நிதி ஒப்பந்தங்கள்: அங்கீகாரமும் அளவீடும். SLFRS 9 வழிகாட்டலை உள்ளடக்குகின்றது. இதில் நிதிச் சொத்து மீதான சேதத்தினைக் கணக்கிடுவதற்கான புதிய எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு மாதிரி உள்ளடங்குகின்றது.

2018 ஜனவரி 1ல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்தக் அறிக்கையிடல் காலப்பகுதிக்கு SLFRS 9 அமுல்படுத்தத்தக்கதாகும். ஆரம்பத்திலேயே ஏற்று நடைமுறைப்படுத்தல் இதில் அனுமதிக்கப்படுகின்றது.

SLFRS 9 காரணமாக குழுமத்தின் திரட்டிய நிதிக் கூற்றில் ஏற்படக்கூடிய எதிர்காலத் தாக்கத்தினை குழுமம் மதிப்பீடு செய்கின்றது. குழுமத்தின் இயக்கங்களின் தன்மை காரணமாக இத்தராதரமானது குழுமத்தின் நிதிக் கூற்றுக்களின் மீது ஊடுருவிச் செல்லும் தாக்கத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

4.28.2 SLFRS 15 - வாடிக்கையாளர் ஒப்பந்தங்களிலிருந்தான வருமான அங்கீகாரம்

SLFRS 15 - வருமானம் அங்கீகரிக்கப்பட்டதா, எவ்வளவு அங்கீகரிக்கப்பட்டது மேலும் எப்போது அங்கீகரிக்கப்பட்டது என்பதைத் தீர்மானிப்பதற்கு வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் ஒரு பூரண சட்டகத்தினை நிறுவுகின்றது. இது தற்போதுள்ள வருமான அங்கீகார வழிகாட்டல் LKAS 11னையும் LKAS 11 நிர்மான ஒப்பந்தங்களையும் பதிலீடு செய்கின்றது.

2018 ஜனவரி 1ல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிக்கு SLFRS 15 அமுல்படுத்தத்தக்கதாகும். ஆரம்பத்திலேயே ஏற்று நடைமுறைப்படுத்தல் இதில் அனுமதிக்கப்படுகின்றது.

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **5. முழு வருமானம்** | | | | |
| வட்டி வருமானம் (குறிப்பு 6) | 92,403,546 | 84,479,961 | 110,278,180 | 104,180,951 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் (குறிப்பு 7) | 3,712,146 | 3,820,242 | 4,037,408 | 4,129,540 |
| விற்பனையினால் கிடைத்த தேறிய இலாபம் (குறிப்பு 8) | 3,115,216 | 2,508,352 | 3,115,573 | 2,648,889 |
| ஏனைய இயக்க வருமானம் (தேறிய) (குறிப்பு 9) | 4,418,054 | 5,568,927 | 6,399,645 | 7,681,430 |
| **மொத்த முழு வருமானம்** | 103,648,962 | 96,377,482 | 123,830,806 | 118,640,810 |

## 6. தேறிய வட்டி வருமானம்

| | | | | |
|---|---|---|---|---|
| **வட்டி வருமானம்** | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 242,357 | 131,830 | 854,116 | 1,151,366 |
| வங்கியில் பணியில் அமர்த்துதல் | 153,415 | 210,714 | 153,415 | 210,715 |
| வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் ஏனைய நிதிச் சொத்துக்கள் | 6,813,259 | 5,334,623 | 6,813,259 | 5,334,622 |
| கடன்களும் வங்கிக்கு வரவேண்டியவையும் | 5,528,956 | 8,505,256 | 5,528,956 | 8,505,256 |
| கடன்களும் ஏனைய வாடிக்கையாளர்களுக்குச் சேரவேண்டியவைகளும் | 70,341,462 | 61,930,546 | 87,603,874 | 80,611,981 |
| நிதி முதலீடுகள் - முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவை | 7,426,618 | 7,461,705 | 7,426,618 | 7,461,705 |
| நிதி முதலீடுகள் - விற்பனைக்கு வைத்திருக்கப்பட்டவை | 2,154 | - | 2,154 | - |
| பணியாள் கடன்களின் மீது முதல் நாள் வித்தியாசம் | 1,895,326 | 905,287 | 1,895,326 | 905,287 |
| ஏனையவை | - | - | 462 | 19 |
| **மொத்த வட்டி வருமானம்** | 92,403,546 | 84,479,961 | 110,278,180 | 104,180,951 |

**துணைநிலைச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான அரசாங்க பிணையங்கள் மீதான பிடித்துவைக்கும் வரிக்கான தேசிய வரிக்கடன்**

மோசடிகளைக் கண்டு பிடிப்பதும் முறியடிப்பதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அத்தோடு தனது செயற்பாடுகளுக்கு உரிய விதிமுறைகள் மற்றும் சட்டங்கள் என்பனவற்றை இனம் கண்டு அவற்றுக்கு கட்டுப்பட்டு நடப்பதை உறுதி செய்வதும் நிறுவனத்தின் பொறுப்பாகும்.

அறிக்கைகள் மற்றும் விளக்கங்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் முறைப்படி பயிற்றுவிக்கப்படுவதை உறுதி செய்வதும், தகவல் பொறிமுறைகள் முறைப்படி தரவேற்றம் செய்யப்படுவதை உறுதி செய்வதும் அல்லது அறிக்கையிடல் வர்த்தக அலகுகளில் மாற்றங்கள் இருப்பின் அதுபற்றி நடவடிக்கை எடுப்பதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## எமது பொறுப்பு

மேலே விவரிக்கப்பட்டதன் பிரகாரம் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கம்பனியின் நியாயமான உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுருக்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுருக்கள் என்பன பற்றிய தயாரிப்பு மற்றும் சமர்ப்பணம் தொடர்பான நியாயமான ஒரு முடிவை வெளியிடுவது எமது பொறுப்பாகும்.

உறுதிப்பாட்டு தலையீடுகள்
தொடர்பான இலங்கை தரப்படுத்தல் SLSAE 3000 பிரகாரம் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அல்லது வரலாற்று நிதித்தகவல்கள் மதிப்பீடுகள் (SLSAE 3000) தவிர்ந்த உறுதிப்பாட்டு தலையீடுகள் பிரகாரம் நாம் எமது தலையீடுகளை மேற்காண்டிருந்தோம்.

இலங்கை தரப்படுத்தல் தரக்கட்டுப்பாடு 1ஐ நிறுவனம் பிரயோகிக்கின்றது. அதன்படி விரிவான தரக்கட்டுப்பாட்டு முறை பிரயோகிக்கப்படுகின்றது. ஆவணப்படுத்தல் கொள்கைகள், விழுமிய இணக்கப்பாடுகள் தொடர்பான நடைமுறைகள், தொழிற்சார் தரங்கள், பிரசோகிக்கக் கூடிய சட்ட மற்றும் விதிமுறைகள் பற்றிய தேவைகள் தொடர்பாக இவை பின்பற்றப்படுகின்றன.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டு ஒழுக்கவியல் விதிமுறைகளுக்கு இசைவாக நாம் சுதந்திரமாகச் செயற்பட்டுள்ளோம். இந்த நிறுவனமானது நேர்மை, பொதுநிலைத்தன்மை, தொழிற்சார் போட்டி, உரிய பராமரிப்பு, நம்பகத்தன்மை, மற்றும் தொழிற்சார் நடத்தை என்பனவற்றின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

SLSAE 3000 ஆனது உரிய கவனம் செலுத்தப்படும் விடயமான இருவகை அளவுருக்களும் எந்த வகையான பிழைகளும் இன்றி இருக்க வேண்டும் என்பதை நியாயமான உறுதிப்பாட்டுடன் நாம் பெற வேண்டும் என்பதற்கான திட்டமிடலை வகுத்து செயற்பட வேண்டும் என்பதை வேண்டி நிற்கின்றன.

### நியாயமான உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுரு மீதான நியாயமான உறுதிப்பாடு

நியாயமான உறுதிப்பாடு செயற்பாடுகள் பற்றிய எமது தெரிவு செய்யப்பட்ட நடவடிக்கைகள் எமது தீர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டதாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நியாயமான உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுருவில் தவறான ஆவண அறிக்கைகள மூலமான ஆபத்துக்கள் பற்றிய மதிப்பீடுகளையும் இது உள்ளடக்கியது.

இந்த ஆபத்து மதிப்பீடுகளை மேற்கொள்கையில் நியாயமான உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுருவை தயாரிப்பதிலும் வழங்குவதிலும் உள்ள உள்ளக கட்டுப்பாடுகள், சூழ்நிலைகளுக்கு ஏற்ற பொருத்தமான வடிவமைப்புக்களை உறுதி செய்யும் செயற்பாடுகள் ஆனால் கம்பனியின் அறிக்கையை தயாரித்தல் மற்றும் வழங்குதல் விடயத்தில் உள்ளக கட்டுப்பாடுகள் மீது தாக்கம் செலுத்தாத வகையில் முடிவுகளுக்கு வரல் என்பனவற்றிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

நிலைத்தன்மை அறிக்கையின் போது கம்பனி பயன்படுத்திய நியாயமான உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுருவை தயாரித்து வழங்குகின்ற துல்லியத் தன்மையை மதிப்பீடு செய்தல், எடுகோள்களின் பொருத்தம், GRI G4 உள்ளடக்க சுட்டி வழிகாட்டி என்பனவற்றிலும் நாம் அவதானம் செலுத்தி உள்ளோம். நிதி மற்றும் நிதி சார்பற்ற தகவல்களின் தொகுப்பு, அவை பெற்றுக் கொள்ளப்பட்ட மூலங்கள், கம்பனியால் அளவீடு செய்யப்பட்ட நியாயங்களை மதிப்பீடு செய்தல் நியாயமான உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுரு கணிப்பீடுகள் பற்றிய மீள் மதிப்பீடு என்பனவற்றிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

### உறுதி செய்யப்பட்ட நிலைத்தன்மை அளவுருவின் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாடு

எமது வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு செயற்பாடானது வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுரு பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளல் குறிப்பாக வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுரு தயாரிப்புக்கு பொறுப்பான நபர்கள் பற்றிய

விசாரணைகள், முறையானவை எனக் கருதப்படும் பகுப்பாய்வு பிரயோகங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் என்பன இதில் அடங்கும்.

- சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் அதனோடு தொடர்புடைய மட்ட அதிகாரிகளுடன் நேர்காணல். நிலைத்தன்மை மூலோபாயம், கொள்கை விடயங்கள், வர்த்தகம் முழுவதும் அதனை அமுலாக்கல் பற்றிய விடயங்கள்.
- கம்பனியின் பிரதான பங்காளி குழுக்களுக்கான ஆவண விடயங்களில் கம்பனியின் தீர்மான செயற்பாடுகளை புரிந்து கொள்வது பற்றிய முகாமைத்துவ விசாரணைகள்
- வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுரு தயாரிப்பு மட்டத்தோடு தொடர்புடைய தெரிவு செய்யப்பட்ட கூட்டாண்மை மட்ட அதிகாரிகளிடம் விசாரணை
- அறிக்கையில் எல்லா விதமான பொருத்தமான தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என தொடர்பு பட்ட கோடிட்டு காட்டும் மூலங்களோடு மாதிரி அடிப்படையில் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுருவை ஒப்பிடல்
- அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுரு எமது அறிவுக்கும் அனுபவத்துக்கும் இசைவாக உள்ளதா எனவும் கம்பனியின் நிலைத்தன்மை செயற்பாட்டுக்கு ஏற்புடையதா என்பதையும் வாசித்து அறிந்து கொள்ளல்.
- எமது புரிதலின் படி ஏதாவது ஆவண தவறுகளோ அல்லது வேறு ஏதும் தவறுகளோ எமது உறுதிப்பாட்டு செயற்பாடுகளின் ஒரு பகுதியாகவேனும் காணப்பட்டதா என்பதை உறுதி செய்யும் வகையில் அறிக்கையின் நினைவுக் குறிப்புக்களை வாசித்தல்.

வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு செயற்பாடுகளில் பின்பற்றப்படும் நடைமுறைகள் இயல்பிலும் காலநேர அடிப்படையிலும் மாறுபவை. மேலும் விஸ்தீரணத்திலும் குறைவானது. வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு செயற்பாடு அதன் விளைவாக கிடைக்கப்பெறும் உறுதிப்பாட்டு மட்டம் என்பன நியாயமான உறுதிப்பாட்டு செயற்பாட்டு மட்டத்திலும் பார்க்க கணிசமான அளவு குறைவானதாகவே காணப்படும். அதற்கிணங்க நாம் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுருவில் நியாயமான உறுதிப்பாட்டு முடிவை நாம் வெளியிடுவதில்லை.

## எமது அறிக்கையின் நோக்கம்

எமது செயற்பாடுகளின் நிபந்தனைகள் படி இந்த உறுதிப்பாட்டு அறிக்கையானது வங்கியின் பணிப்பாளர்கள் வங்கி நியாயமான மற்றும் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு நிலைத்தன்மை அளவுரு என்பன GRI G4 நியமங்களின் படி தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்து கொள்ள உதவும் வகையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளதே அன்றி வேறு ஏதும் நோக்கங்களோ அல்லது உள்ளடக்கங்களோ இதில் கிடையாது.

## எமது அறிக்கையை பாவிப்பதில் உள்ள கட்டுப்பாடுகள்

வங்கியை தவிர எமக்கு எதிரான உரிமைகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் எந்த தரப்பும் எந்த ஒரு நோக்கத்துக்காகவும் இந்த அறிக்கையை பாவிக்க முடியாது. வங்கியை தவிர இந்த அறிக்கையை அல்லது அதன் பிரதியை (அல்லது ஒரு பகுதியை) பெற்றுக் கொள்ளும் எந்தவொரு தரப்பும் அல்லது அதில் தங்கியிருக்க விரும்பும் எந்த தரப்பும் அவர்களின் சொந்த பொறுப்பிலேயே அதை செய்ய வேண்டும். முழுமையான சட்ட அனுமதியின் பிரகாரம் இந்த சுதந்திரமான அறிக்கை பற்றியோ அல்லது அதில் நாம் தெரிவித்துள்ள முடிவுகள் பற்றியோ வங்கியை தவிர வேறு எந்த தரப்புக்கும் எமது பணி பற்றி நாம் எந்த விதமான பொறுப்புக் கூறவும் கடப்பாடு அற்றவர்கள்.

**பட்டயக் கணக்காளர்கள்**

கொழும்பு
2016 மார்ச் 23

# உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு உள்ளடக்கச் சுட்டி "பொருத்தமானவாறு" தெரிவு : மையம்

| வெளிப்படுத்தல் | GRI சுட்டி | பக்கங்கள் | வெளிக்கள உத்தரவாதம் |
|---|---|---|---|
| **பொதுவான வெளிப்படுத்தல்கள்** | | | |
| உபாயமார்க்கமும் பகுப்பாய்வும் | | | |
| நிறுவனத்தின் மிக முக்கியமான தீர்மானம் வகுப்பவரின் கூற்று | G4-1 | 22 | ஆம் |
| **நிறுவன விபரம்** | | | |
| நிறுவனத்தின் பெயர் | G4-3 | உள் பின் அட்டை | ஆம் |
| அடிப்படைச் சின்னங்கள், உற்பத்திகள் மற்றும் சேவைகள் | G4-4 | 66 | ஆம் |
| நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தின் அமைவிடம் | G4-5 | உள் பின் அட்டை | ஆம் |
| நிறுவனம் இயங்குகின்ற நாடுகளின் எண்ணிக்கையும் பாரிய செயற்பாடுகள் இடம்பெறுகின்ற அல்லது அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களின் நீடுறுதித் தன்மையுடன் தனித்துவமான தொடர்புடைய நாடுகளின் பெயர்கள் | G4-6 | 14 | ஆம் |
| உரித்தாண்மை மற்றும் சட்ட வடிவத்தின் தன்மை | G4-7 | உரிமம் - 5 சட்ட முறைமை - உள் பின் அட்டை | ஆம் |
| சேவையாற்றும் சந்தை (பிரதேச அடிப்படையில், துறைகள் அடிப்படையில், வாடிக்கையாளர்கள் மற்றும் நலன் பெறுவோர் அடிப்படையில்) | G4-8 | 57 | ஆம் |
| அறிக்கையிடும் நிறுவனத்தின் அளவு | G4-9 | 6 மற்றும் 7 | ஆம் |
| வகை அடிப்படையில் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | G4-10 | 82 | ஆம் |
| கூட்டு ஒப்பந்தத்தினால் உள்ளடக்கப்படும் ஊழியர்களின் சதவீதம் | G4-11 | 87 | ஆம் |
| வழங்கல் சங்கிலி | G4-12 | 55 | ஆம் |
| அறிக்கையிடும் காலப்பகுதியில் இடம்பெற்ற முக்கிய மாற்றங்கள் | G4-13 | 14 | ஆம் |
| முன்னெச்சரிக்கை செயற்பாடு | G4-14 | 14 | ஆம் |
| வெளிக்களப் பட்டயங்கள், கொள்கைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் | G4-15 | 14 | ஆம் |
| அங்கத்துவ நிறுவனங்கள் | G4-16 | 14 | ஆம் |
| **அடையாளங்காணப்பட்ட அடிப்படை அம்சங்களும் எல்லைகளும்** | | | |

| வெளிப்படுத்தல் | GRI சுட்டி | பக்கங்கள் | வெளிக்கள உத்தரவாதம் |
|---|---|---|---|
| **பொதுவான வெளிப்படுத்தல்கள்** | | | |
| **அடையாளங்காணப்பட்ட அடிப்படை அம்சங்களும் எல்லைகளும்** | | | |
| நிறுவனத்தின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்குள் உள்ளடக்கப்பட்ட உப நிறுவனங்கள் | G4-17 | 14 | ஆம் |
| அறிக்கையின் உள்ளடக்கத்தையும் அம்சங்கள் மற்றும் எல்லைகளையும் நிர்ணயிக்கும் செயற்பாடு | G4-18 | 14 | ஆம் |
| அடிப்படை அம்சங்கள் | G4-19 | 15 | ஆம் |
| நிறுவனத்தினுள் அடிப்படை அம்சங்களின் எல்லைகள் | G4-20 | 15 | ஆம் |
| நிறுவனத்திற்கு வெளியே அடிப்படை அம்சங்களின் எல்லைகள் | G4-21 | 15 | ஆம் |
| உரையாக்கத்தின் விளைவுகள் | G4-22 | 14 | ஆம் |
| அறிக்கைக் காலப்பகுதியில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகள் | G4-23 | 14 | ஆம் |
| **ஆர்வமுடைய தரப்பினரின் செயற்பாடுகள்** | | | |
| நிறுவனத்துடன் செயற்படும் ஆர்வம்காட்டும் தரப்பினர்கள் | G4-24 | 58 - 61 | ஆம் |
| ஆர்வம்காட்டும் தரப்பினரை அடையாளம் காணும் அடிப்படைகள் | G4-25 | 58 - 61 | ஆம் |
| ஆர்வம்காட்டுவோரின் செயற்பாடுகளுக்கான அணுகுமுறைகள் | G4-26 | 58 - 61 | ஆம் |
| ஆர்வம் காட்டுவோரின் செயற்பாடுகளின் போது முன்னுரிமை வழங்கப்பட்ட தலைப்புகள் | G4-27 | 58 - 61 | ஆம் |
| **அறிக்கையிடல் பரிமாணங்கள்** | | | |
| அறிக்கையிடல் காலப்பகுதி | G4-28 | 14 | ஆம் |
| மிக அண்மைய முன்னைய அறிக்கையின் திகதி | G4-29 | 14 | ஆம் |
| அறிக்கையிடல் சுற்று | G4-30 | 14 | ஆம் |
| அறிக்கை அல்லது அதன் உள்ளடக்கம் தொடர்பான வினாக்களுக்கான தொடர்பு தகவல் | G4-31 | 14 | ஆம் |
| ஏற்புடைய தெரிவுகளைத் தீர்மானித்தல் | G4-32 | 14 | ஆம் |
| அறிக்கையின் உத்தரவாதம் பற்றிய கொள்கை | G4-33 | 14 | ஆம் |
| **ஆளுமை** | | | |
| நிறுவனத்தின் ஆளுகைக் கட்டமைப்பு | G4-34 | 99 | ஆம் |
| **ஒழுக்காற்று மற்றும் நேர்மை** | | | |
| நிறுவனத்தின் ஒழுக்கக் கோட்பாடு மற்றும் ஒழுக்கச் செயற்பாடுகளில் உள்ளடங்கும் பெறுமதிகள், கொள்கைகள், தராதரங்கள் மற்றும் வழிறைகள் | G4-56 | 98 | ஆம் |

| | வெளிப்படுத்தல் | GRI சுட்டி | பக்கங்கள் | வெளிக்கள உத்தரவாதம் |
|---|---|---|---|---|
| **விசேட வெளிப்படுத்தல்கள்** | | | | |
| **பொருளாதார செயற்பாடுகள்** | | | | |
| பொருளாதார செயற்திறன் | பிறப்பிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்ட நேரடிப் பொருளாதாரப் பெறுமதி | EC1 | 80 | ஆம் |
| | நிறுவனத்தின் ஓய்வூதியத் திட்டக் கடப்பாடுகளின் உள்ளடக்கம் | EC3 | 197 | ஆம் |
| சந்தையில் முன்னிலை | முக்கிய செயற்பாடுகள் இடம்பெறும் பகுதிகளில் அடிப்படை சம்பளங்கள் பால் ரீதியிலான வேறுபாட்டுடன் ஒப்பிடுதல் | EC5 | 86 | ஆம் |
| | முக்கிய செயற்பாடுகள் இடம்பெறும் பகுதிகளில் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு பிரதேசத்திலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்ட அளவு | EC6 | 86 | ஆம் |
| மறைமுக பொருளாதார விளைவுகள் | அடிப்படை வசதிகள் மற்றும் துணைச் சேவைகளின் வளர்ச்சி மீதான பங்களிப்பு | EC7 | 80 | ஆம் |
| **சுற்றாடல்** | | | | |
| சக்திவலு வெளியேற்றங்கள் மற்றும் கழிவுகள் | DMA | | 95 | ஆம் |
| | வெளியேற்றப்பட்ட முறை மற்றும் வகையின் அடிப்படையில் மொத்த கழிவுகள் | EN27 | 95 | ஆம் |
| **சமூகம்** | | | | |
| **வேலைவாய்ப்பு** | DMA | | 82 | ஆம் |
| | வயதுக்குழு, பால்நிலை மற்றும் பிராந்திய அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட புதிய ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையும், விகிதமும், ஊழியர் புரள்வும் | LA1 | 83 | ஆம் |
| | தற்காலிக ஊழியர்களுக்கோ அல்லது பகுதிநேர ஊழியர்களுக்கோ வழங்கப்படாத முழுநேர உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட நலன்கள் இயக்கத்தின் முக்கியமான அமைவிடங்களின் அடிப்படையில் | LA2 | 84 | ஆம் |
| | மகப்பேற்று விடுமுறையின் பின்னர் மீண்டும் வேலைக்கு வருதல் சதவீதம் பால் அடிப்படையில் | LA3 | 84 | ஆம் |
| தொழிலாளர்/ முகாமைத்துவம் தொடர்பு | DMA | | 85 | ஆம் |
| | இயக்க மாற்றம் தொடர்பான ஆகக்குறைவான அறிவித்தல் காலப்பகுதி. இதிலே கூட்டு உடன்படிக்கையில் இது குறித்துரைக்கப்பட்டுள்ளதா என்பது உள்ளடங்கலாக | LA4 | 85 | ஆம் |
| பயிற்சி மற்றும் கல்வி | DMA | | 85 | ஆம் |
| | ஊழியர் வகைப்படுத்தல் அடிப்படையில் வருடத்திற்கான சராசரி பயிற்சி மணித்தியாலங்கள் | LA9 | 85 | ஆம் |
| | ஊழியர்களின் தொடர்ச்சியான தொழில் வாய்ப்புக்கு உதவுகின்றதும் அவர்களின் தொழில் முடிவுறுத்தல்களை முகாமைத்துவம் செய்ய உதவுவதுமான திறன் முகாமைக்கான நிகழ்ச்சித்திட்டங்களும் வாழ்க்கை பூராவுமான கற்றல் | LA10 | 86 | ஆம் |
| | தொடர்ச்சியான செயற்திறன் மற்றும் தொழில் வளர்ச்சி அறிக்கைகளைப் பெறும் ஊழியர்களின் சதவீதம் பால் மற்றும் பதவி அடிப்படையில் | LA11 | 86 | ஆம் |

| | வெளிப்படுத்தல் | GRI சுட்டி | பக்கங்கள் | வெளிக்கள உத்தரவாதம் |
|---|---|---|---|---|
| **விசேட வெளிப்படுத்தல்கள்** | | | | |
| ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சமமான கொடுப்பனவுகள் | ஊழியர் வகைப்படுத்தல் அடிப்படையிலும் இயக்க அடிப்படையிலும் பெண்கள் மற்றும் ஆண்கள் அடிப்படைச் சம்பளங்களுக்கிடையிலான விகிதாசாரம் | LA13 | 86 | ஆம் |
| தொழிலாளர் அணுகுமுறைகளும் குறைகளுக்குத் தீர்வுகாணலும் | உத்தியோகபூர்வ ரீதியில் தீர்க்கப்பட்ட குறைபாடுகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட குறைபாடுகள் | LA16 | 86 | ஆம் |
| **மனித உரிமை** | | | | |
| பாகுபாடு இன்மை | பாகுபாடு தொடர்பாக பதிவு செய்யப்பட்ட சம்பவங்களும் அவற்றுக்கான தீர்வுகளும் | HR3 | 87 | ஆம் |
| ஒன்கூடல்கள் மற்றும் கூட்டு பேரம் பேசுதல் சுதந்திரம் | செயற்பாடுகள் மற்றும் வளங்களை வழங்குவோர் அடையாளம் காணப்பட்டு அவர்களுடன் ஒன்றுகூடல் மற்றும் கூட்டு பேரம்பேசுதல் என்பன தவறான முறையில் பயன்படுத்தக்கூடிய இடரை அடையாளம் கண்டு உரிமைகளை பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | HR4 | 87 | ஆம் |
| மனித உரிமைக் குறைபாடுகள் அணுகுமுறை | மனித உரிமை சம்பந்தமான குறைபாடுகள் தொடர்பான பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கை மற்றும் உத்தியோகபூர்வ அணுகுமுறைகள் மூலம் தீர்க்கப்பட்டவை | HR12 | 87 | ஆம் |
| **சமுதாயம்** | | | | |
| பிரதேச வாழ் சமூகங்கள் | DMA | | 92 | ஆம் |
| | உள்ளூர் சமுதாய ஈடுபாட்டுடன் அமுல்படுத்தப்பட்ட இயக்கங்களின் விழுக்காடும் தாக்கமதிப்பீடு மற்றும் திருப்தி நிகழ்ச்சித்திட்டங்களின் விழுக்காடும் | SO1 | 92 | ஆம் |
| | பிரதேச மக்களுடன் பெருமளவில் அல்லது எதிர்பார்க்கப்பட்ட தீய விளைவுகளை ஏற்படுத்திய செயற்பாடுகள் | SO2 | 92 | ஆம் |
| | FS13 | | 93 | ஆம் |
| | FS14 | | 92 | ஆம் |
| ஊழல் ஒழிப்பு | ஊழல் இடர் ஏற்படக்கூடிய செயற்பாடுகளின் மொத்த எண்ணிக்கையும் சதவீதமும் மற்றும் அடையாளம் காணப்பட்ட இடர்களும் | SO3 | 103 | ஆம் |
| | ஊழல் ஒழிப்புக் கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் தொடர்பாக வழங்கப்பட்ட பயிற்சிகளும் தகவல்கள் பரிமாற்றங்களும் | SO4 | 103 | ஆம் |
| | ஊழல் சம்பவங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை | SO5 | 103 | ஆம் |
| இணக்கப்பாடு | சட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு இணங்காமையினால் ஏற்பட்ட தண்டங்களின் பெறுமதி மற்றும் நிதி அற்ற தண்டங்கள் | SO8 | 103 | ஆம் |

| | வெளிப்படுத்தல் | GRI சுட்டி | பக்கங்கள் | வெளிக்கள உத்தரவாதம் |
|---|---|---|---|---|
| **விசேட வெளிப்படுத்தல்கள்** | | | | |
| **உற்பத்திகளின் பொறுப்புடைமை** | | | | |
| **உற்பத்தி மற்றும் சேவைகளுக்கு பெயரிடுதல்** | DMA | DMA | 90 | ஆம் |
| | நிறுவனத்தின் விதிகளுக்கு அமைய சேவைகள் மற்றும் உற்பத்திகளை வகைப்படுத்தல், பெயரிடல் போன்ற நடவடிக்கைகளுக்கு தேவையான தகவல்களும் அத்தகவல்களின் முக்கியத்துவமும் | PR3 | 91 | ஆம் |
| | பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெயரிடல் முறைமை தவறிய சம்பவங்கள் மற்றும் இணங்கப்படாத நிகழ்வுகளின் மொத்த எண்ணிக்கையும் அவற்றின் விளைவுகளும் | PR4 | 91 | ஆம் |
| | வாடிக்கையாளர் திருப்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புக்களின் பெறுபேறுகள் | PR5 | 91 | ஆம் |
| சந்தைத் தொடர்பாடல் | தடை செய்யப்பட்ட மற்றும் சர்ச்சைக்குரிய உற்பத்திகளின் விற்பனை | PR6 | 91 | ஆம் |
| | விளம்பரம், மேம்படுத்தல் மற்றும் அனுசரணை ஆகியவை உள்ளடங்கலாக விளைவுகளின் அடிப்படையில் சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் தொடர்பான தன்னார்வக்கோவைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இயைபுறாமை பற்றிய சம்பவங்களின் மொத்த எண்ணிக்கை | PR7 | 91 | ஆம் |
| வாடிக்கையாளர் தகவல் பாதுகாப்பு | வாடிக்கையாளர் தகவல்கள் வெளியானமை மற்றும் தொலைந்துள்ளமை சம்பந்தமான தீவிர முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை | PR8 | 91 | ஆம் |
| இணக்கப்பாடு | உற்பத்திகள் மற்றும் சேவைகளின் பாவனை தொடர்பான விதிகளுக்கு இணங்காமையினால் இடம்பெற்ற சம்பவங்களினால் ஏற்பட்ட தண்டங்களின் மொத்த பெறுமதி | PR9 | 91 | ஆம் |
| | FS8 | | 96 | ஆம் |
| உற்பத்திக் கோவை | FS6 | | 93 | ஆம் |

# நிதியியல் / வங்கியியல் அருஞ்சொல் விளக்கக்கோவை



## A»

**கணக்கீட்டுக் கொள்கைகள்**
நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து அறிக்கையிடுவதற்காக நிறுவனமொன்றின் முகாமைத்துவத்தினால் தெரிவு செய்யப்பட்டு தொடர்ச்சியாகப் பின்பற்றப்படும் கோட்பாடுகள், விதிகள் மற்றும் செயல்விதிகள்.

**அட்டுறு அடிப்படை**
கொடுக்கல் வாங்கல்களோ அல்லது ஏனைய நிகழ்வுகளோ நிகழ்கையில் காசு அல்லது அதற்குச் சமமானவை பெறப்படவேண்டும் அல்லது செலுத்தப்படவேண்டும் எனக் காத்திருக்காது அந்தக் கொடுக்கல் வாங்கல்களின் விளைவுகளை ஏற்றுக்கொள்ளுதல்.

**இலதாக்கல்**
புலப்படாச் சொத்து ஒன்றின் பயன்படு ஆயுட்காலத்தின்போது அதன் பெறுமானத் தேய்வடையக்கூடிய தொகையினை முறைமை சார்ந்த வகையில் ஒதுக்கீடு செய்தல். பெறுமானத்தேய்வு மற்றும் இலதாக்கல் ஆகிய இரண்டும் ஒரே அர்த்தத்தினை கொண்டுள்ளன.

**காப்புறுதிப் பெறுமதி கணித்தல்**
நிதி ஒன்றின் சாதாரண செலவினையும் காப்புறுதி ரீதியாகத் திரண்ட பொறுப்பினையும் அதன் சொத்துக்களின் காப்புறுதி ரீதியான பெறுமதியினையும் ஏனைய பொருத்தமான செலவுகளையும் பெறுமதிகளையும் கணக்கிடுவதன் மூலம் நிதிப் பெறுமதி கணிக்கப்படுகின்றது.

**இலதாக்கல் செலவு**
ஆரம்பத் தொகைக்கும் முதிர்ச்சித் தொகைக்கும் இடையிலான வித்தியாசத்திலிருந்து சேதத்திற்கான அல்லது சேகரிக்க முடியாமைக்கான கழிவினைக் கழிக்கும் (நேரடியாகவோ அல்லது ஒதுக்கத் தொகைக் கணக்கொன்றினைப் பயன்படுத்தியோ) செயற்திறன்மிக்க வட்டி முறையினைப் பயன்படுத்தி ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின் போது நிதிச் சொத்து அல்லது நிதிப் பொறுப்பு ஒன்றிலிருந்து முதன்மை மீள்கொடுப்பனவுகளை கழித்து மேலும் திரட்டிய இலதாக்கலை சேர்த்தோ கழித்தோ அளக்கப்படும் தொகை.

**இணைக் கம்பனி**
உரிமைக் கம்பனியானது பங்குபற்றலுக்கான அக்கறையினைக் கொண்டுள்ள அதன் இயக்கம் மற்றும் நிதிக் கொள்கைகளில் கணிசமான செல்வாக்கினைக் கொண்டுள்ள துணைக் கம்பனி அல்லாத கம்பனி.

**விற்பனைக்குத் தயாரான நிதிச்சொத்து**
விற்பனைக்குத் தயாரானவையாக அல்லது அவ்வாறு அல்லாதவையாக வகைப்படுத்தப்படும் குறிப்பிடப்பட்ட நிதிச்சொத்துக்கள் (a) கடன்களும் வரவேண்டியவைகளும், (b) முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்இ அல்லது (c) இலாபம் அல்லது நட்டம் மூலமான நியாயப் பெறுமதியிலான சொத்துக்கள்.

## B»

**கழிவு வழங்கப்பட்ட உண்டியல்**
முகப்பெறுமதியினைவிடக் குறைந்த பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள வாக்குறுதிச் சீட்டு அல்லது மாற்றுண்டியல் வித்தியாசமானது உண்டியலின் காலாவதியாகாத தவணையின் போதான வட்டியினைக் குறிக்கின்றது. முதிர்ச்சியின்போது பங்குகளை வைத்திருப்பவர் உண்டியலின் சொந்தக் கணக்கிற்காக அதன் முகப்பெறுமதியினை சேகரித்துக்கொள்வார்.

**மாற்றுண்டியல்**
ஒரு நபரிடம் குறிப்பிட்ட தொகைப் பணத்தினை மூன்றாம் நபருக்கு செலுத்துமாறு நபரொருவர் ஒப்பமிட்டு எழுதிய, நிபந்தனையற்ற கட்டளை. மாற்றுண்டியல் மற்றும் வரைபுகள் ஆகிய சொற்பதங்கள் மாற்றிப் பயன்படுத்தப்படுகின்றன.

## C»

**அழைப்பு வைப்புக்கள் அல்லது அழைப்புப் பணம்**
கோரிக்கை விடுக்கப்படும் போது மீண்டும் செலுத்தப்படவேண்டிய வைப்புக்கள் அல்லது கடனுக்கு வழங்கப்படும் நிதி.

**மூலதனப் போதுநிலை**
கிடைக்கக்கூடியதாக உள்ள நிதிகளின் அடிப்படையில் தமது வைப்பாளர்கள் மற்றும் ஏனைய கடன் கொடுத்தோரின் தேவைகளை ஒரு வங்கியினால் பூர்த்தி செய்யக்கூடியதாக இருத்தல். சர்வதேச கொடுத்துத் தீர்த்தல்களுக்கான வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுக்கமைய வங்கியானது குறித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த அளவிலான மூலதனத்தினைப் பேணிவர வேண்டும்.

**மூலதனப் போதுநிலை விகிதாசாரம்**
சர்வதேச கொடுத்துத் தீர்த்தல்களுக்காக வங்கியினால் உருவாக்கப்பட்டு உள்நாட்டு தேவைப்பாடுகளுக்குப் பொருந்துமாறு இலங்கை மத்திய வங்கியினால் திருத்தப்பட்டவாறான அபாயநேர்வினை அடிப்படையாகக் கொண்ட மூலதனத் தராதரங்களின் சட்டகத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட மூலதனத்தினால் ஆதாரப்படுத்தப்பட்ட அபாயநேர்வு சீராக்கப்பட்ட சொத்துக்களின் விழுக்காடு.

**கடன் அபாயநேர்வு**
நிதிக்கருவிக்கான ஒரு தரப்பு அதன் கடப்பாடு ஒன்றினை நிறைவேற்றத் தவறுகின்ற காரணத்தினால் மற்றைய தரப்பிற்கு நிதி நட்டத்தினை ஏற்படுத்தும் அபாயநேர்வு.

**1ம் தட்டு மூலதனம் (மைய மூலதனம்)**
மைய மூலதனங்களில் அடங்குபவை மூலதன நிதியங்களின் தெரிவு செய்யப்பட்ட விடயங்களாகும். பிரதான மைய மூலதனங்களுள் அடங்குபவை பங்கு மூலதனம், பங்குத் தவணைத் தொகை, நியதிச்சட்ட ஒதுக்க நிதியங்கள், தேக்கிவைத்த இலாபங்கள், பொது ஒதுக்கங்கள், நிலையான மற்றும் நீண்ட தவணை முதலீடுகளை விற்பதனால் ஏற்படுகின்ற வரியின் பின்னரான மிகை/நட்டங்கள்.

**11ஆம் தட்டு மூலதனம் (குறை நிரப்பும் மூலதனம்)**
குறை நிரப்பு மூலதனங்களுள் உள்ளடங்குபவை, அங்கீகரிக்கப்பட்ட மீள் பெறுமதியிடல் ஒதுக்கங்கள், பொது ஒதுக்கங்கள், கலப்பு மூலதன (கடன் உரிமை முதல்) விடயங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட துணை நிலைத் தவணைக் கடன்களாகும்.

**காசுக்குச் சமமானவைகள்**
மிகவும் இலகுவாக அறிந்து கொள்ளப்பட்ட காசுத் தொகைகளாக மாற்றப்படக்கூடிய குறுகிய கால உயர் திரவத்தன்மையினைக் கொண்ட முதலீடுகள். மேலும் இவை பெறுமானத்தில் ஏற்படும் மாற்றத்திற்கான புறக்கணிக்கக்கூடிய அபாயநேர்வுக்கு உட்பட்டவையாகும்.

**வைப்புச் சான்றிதழ் (CD)**
வங்கியில் வைப்புச் செய்யப்படுகின்ற வைப்புக்களுக்கு எதிராக வங்கியினால் விநியோகிக்கப்படும் சான்றிதழ். செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதத்தினையும் வைப்பினைக் கொண்டிருப்பவருக்கு வைப்பானது மீளச் செலுத்தப்படும் திகதியினையும் இச்சான்றிதழ் குறிப்பிடும். வைப்புச் சான்றிதழ்கள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தக்கூடியவையாகும்

**வர்த்தக ஆவணம்**
வங்கியினாலும் கடன் தகைமை கொண்ட கூட்டாண்மைக் கடன்படுனர்களினாலும் விநியோகிக்கப்படுகின்ற பிணையற்ற குறுகிய

# நிதியியல் / வங்கியியல் அருஞ்சொல் விளக்கக்கோவை

கால வாக்குறுதிக் கடிதங்கள்.

**கடப்பாடுகள்**
ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறாக அங்கீகரிக்கப்பட்ட ஆனால் பயன்படுத்தப்படாத கடன் வசதிகள்

**நிகழ் சாத்தியங்கள்**
ஒரு சூழ்நிலை அல்லது நிலைமையின் இறுதி விளைவானது இலாபமாக இருக்குமா அல்லது நட்டமாக இருக்குமா என்பது, நிச்சயமற்றதான எதிர்கால நிகழ்வுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை நிகழ்ந்தாலோ அல்லது நிகழாமல் இருந்தாலோ மாத்திரமே உறுதிப்படுத்தப்படும்.

**கூட்டு நிறுவன ஆளுகை**
கூட்டாண்மை அமைப்புக்கள் ஆளுகை செய்யப்படுகின்ற செயன்முறை. முகாமைத்துவத்தின் மீது அதிகாரம் செலுத்தப்படுகின்ற முறை, அமைப்பின் போக்கு, நிறைவேற்றுச் செயற்பாடுகளின் மேற்பார்வை மற்றும் உரிமையாளர்களுக்கும் ஏனையோருக்குமான வகைப்பொறுப்பு ஆகியவற்றுடன் இது தொடர்புடையதாகும்.

**இணை வங்கி**
வங்கி ஒன்றுக்கு முகவராகச் செயற்படும் வங்கி. இணை வங்கியானது மற்றைய வங்கியின் சார்பில் அந்த வங்கி அமைந்துள்ள பிராந்தியத்தில் பரந்த வகையிலான வங்கிச் சேவைகளை பொதுவாக வழங்குகின்றது.

**செலவு வருமான விகிதாசாரம்**
இயக்கச் செலவுகளை தேறிய வருமானத்தின் விகிதாசாரமாக வழங்குதல்.

**எதிர்த்தரப்பு**
ஒரு கொடுக்கல் வாங்கல்மேற்கொள்ளப்படுகின்ற அல்லது பூர்த்தியாக்கப்படுகின்ற மற்றைய தரப்பு(வங்கி உள்ளடங்கலாக).

**நாட்டு அபாயநேர்வு**
குறிப்பிட்ட நாடொன்றினுள் கடன்படுனர்களுக்கு கடன் வழங்குவதுடன் தொடர்புபட்ட கடன் அபாயநேர்வு. இதிலே சில வேளைகளில் தங்கம் சார்ந்த அபாயநேர்வுகளும் உள்ளடங்குகின்றன.

**குறுக்கு விகிதம்**
ஒரே நாணயம் சம்பந்தப்படுகின்ற இரண்டு வெவ்வேறான விலைக் குறிப்பிடல்களில் இருந்து கணக்கிடப்படும் வெளிநாட்டு நாணய விகிதம்.

**நாணயக் கொடுத்து மாறல்**
இரண்டு நாணயங்களில் உள்ள முதன்மைத் தொகைகளை, பின்னர் ஒரு திகதியில் மீள மாற்றிக் கொள்வதற்காகவும் மாற்றம் நடைபெறும் முறையில் பெறப்படும் நாணயத்திற்கு வட்டிக் கொடுப்பனவினை செலுத்துவதற்காகவும் உடன்படிக்கை மூலம் இணைத்துக் கொள்ளும் நடைமுறை மாற்றும்.

## D »

**பிற்போடப்பட்ட வரி**
நடைமுறை நிதியாண்டு நீங்கலாக நிதி வருடம் ஒன்றின்போது செலுத்தக்கூடியதாக மாறக்கூடிய வரி விதிப்பிற்காக நிதிக்கூற்றிலே ஒதுக்கப்படுகின்ற தொகை.

**பெறுமானத் தேய்வு**
சொத்து ஒன்றின் பயன்படு ஆயுட்காலத்தில் அச்சொத்தின் பெறுமானத் தேய்வடையக் கூடிய தொகையினை முதன்மை வாய்ந்த வகையில் ஒதுக்கீடு செய்தல்.

**பெறுதிகள்**
பின்வரும் மூன்று பண்புகள் அனைத்தையும் கொண்ட நிதிக்கருவி: (a) குறிப்பிட்ட வட்டி வீதம், பிணையங்களின் விலை, பண்டங்களின் விலை, வெளிநாட்டு நாணயமாற்று வீதம், விலைகள் அல்லது வீதங்களின் சுட்டி, கடன் தரமிடல் அல்லது கடன் சுட்டி அல்லது ஏனைய மாறிகள் (உள்ளார்ந்ததென சிலவேளைகளில் அழைக்கப்படுகின்றது) ஆகியவற்றில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக இதன் பெறுமதி மாறுபடுகின்றது. (b) இது ஆரம்பத் தேறிய முதலீட்டினையோ அல்லது ஏனைய வகைகளுக்குத் தேவைப்படுத்தக்கூடியதை விடவோ குறைவானதாக இருக்கின்ற ஆரம்பத் தேறிய தொகைகளைத் தேவைப்படுத்தாது (c) இது எதிர்காலத் திகதியில் கொடுத்துத் தீர்க்கப்படுவது.

**பிணையங்களைக் கையாளல்**
குறுகிய காலத்தில் மீள விற்கப்படும் நோக்கத்துடன் கொள்வனவு செய்யப்பட்டு வைத்திருக்கப்படும் பிணையங்கள்.

**வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்**
ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதிய நலன்களாகச் செலுத்தப்படவேண்டிய தொகைகள் பொதுவாக ஊழியரின் ஊதியம் அத்துடன்/அல்லது சேவை வருடங்கள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்ட சூத்திரத்தினால் தீர்மானிக்கப்படுகின்றன.

**இடைநிலை அகல்வு**
வங்கிச் சேவைத் துறையில் இருந்து நிதியினைத் திரட்டுவதற்கு மாறாக கடன்படுனர்கள் மூலதனச் சந்தைகளில் இருந்து நேரடியாக நிதியினைத் திரட்டுவதை விபரிப்பதற்கு பொதுவாகக் குறிப்பிடப்படும் சொற்பதம். உறுதியான கடன் தரமிடலைக் கொண்ட கடன் படுனர்களினால் மாத்திரமே இது பொதுவாகப் பொறுப்பேற்கப்படுகின்றது.

**ஆவண உண்டியல்**
வார்நாமம் விலைப் பட்டியல் மற்றும் காப்புறுதிக் கொள்கை போன்ற பல்வேறு ஆவணங்களைக் கொண்ட மாற்றுண்டியல்.

**ஆவணக் கடன்**
கொடுப்பனவினைச் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணத்தினைக் குறித்துரைக்கும் நாணயக் கடிதம்.

**வரைபு**
மாற்றுண்டியலுடன் பொதுவாக ஒத்ததாகக் கருதப்படுகின்ற சொற்பதம் ஆனால் சில வேளைகளில் இது வங்கிக்கு உள்ளேயான சூழமைவிலும் பயன்படுத்தப்படுகின்றது. வங்கியாளர் ஒருவரின் வரைபே வரைபாகும். இது கேள்வியின்போது வங்கியினால் பெற்றுக்கொள்ளப்படலாம் அல்லது வங்கியின் சார்பில் பெற்றுக்கொள்ளப்படலாம்.

## E »

**செயற்திறன்மிகு வட்டி முறை**
நிதிச் சொத்தொன்றின் அல்லது நிதிப் பொறுப்பு ஒன்றின் இலதாக்கப்பட்ட செலவினை கணக்கீடு செய்யும் முறை. மேலும் குறிப்பிட்ட காலப்பகுதியில் வட்டி வருமானத்தினை அல்லது வட்டிச் செலவினை ஒதுக்குவதற்கான முறை.

**உரிமை முதல் கருவி**
எந்தவொரு நிறுவனத்தினதும் சொத்தில் அதன் பொறுப்புக்கள் அனைத்தையும் கழித்ததன் பின்னர் இறுதி வட்டியினைக் காட்டுகின்ற எந்தவொரு ஒப்பந்தமும் இதுவாகும்.

## F »

**நியாயப் பெறுமதி**
அறிவார்ந்த, ஆர்வமுடைய தரப்பினருக்கிடையில் சொத்தொன்றை மாற்றக்கூடிய அல்லது பொறுப்பொன்றினைக் கொடுத்துத் தீர்க்கக்கூடிய கிட்டுமானக் கொடுக்கல் வாங்கல்.

**நிலையான கட்டணம்**
சட்ட ரீதியான ஈடுவைத்தலின் கீழ் கொடுக்கப்படுகின்ற குறிப்பிட்ட சொத்தின் மீதான கட்டணம். பொதுவாக இறையிலிச் சொத்து அல்லது குத்தகைச் சொத்து அல்லது ஆலை மற்றும் இயந்திரம்.

**நிதிக்கருவி**
ஒரு நிறுவனத்தின் நிதிச் சொத்தில் அதிகரிப்பினையும் இன்னொரு நிறுவனத்தின் நிதிப்பொறுப்பு அல்லது உரிமை முதல் கருவியில் அதிகரிப்பினையும் கொடுக்கின்ற ஒப்பந்தம்.

**மிதக்கும் கட்டணம்**
பங்கு, கடன்காரர்கள் அல்லது காசு போன்ற சாதாரண அலுவல்களுடன் தொடர்புடைய அவற்றினைத் தொடர்ந்து பயன்படுத்த அல்லது விற்றுத் தீர்க்க கம்பனி அனுமதிக்கின்ற சொத்துக்கள் மீதான முற்கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்காக கடன் கொடுப்பவரினால் எடுக்கப்படுகின்ற கட்டணம். இவ்வாறான கட்டணம் கம்பனியானது தவணை தவறும்போது நிலையானதாக மாறுகின்றது.

**அறுதியான சொத்துக்கள்**
கடன்களின் பூரணமான அல்லது பகுதியான கொடுத்துத் தீர்த்தல்களினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் நேரகாலத்துடன் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் மீள விற்பனை செய்யும் நோக்கத்துடன் வைத்திருக்கப்படும்.

**அந்நியச் செலாவணி வருமானம்**
சொத்துக்களோ அல்லது பொறுப்புக்களோ வெளிநாட்டு நாணயத்திலே குறிக்கப்பட்டு நிலவுகின்ற வீதத்திலே ஐந்தொகையிலே இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படுகையில் அவ்வாறான மாற்றமானது ஆரம்பத்தில் அமுலில் உள்ள அல்லது முன்னைய ஐந்தொகைத் திகதியில் உள்ள விகிதங்களை விட வித்தியாசமாக இருக்கும்போது பதிவுசெய்யப்பட்ட ஈட்டிய இலாபம். அந்நியச் செலாவணி பரிமாற்ற வருமானமானது வெளிநாட்டு நாணயங்களில் வியாபாரம் செய்வதனாலும் கிடைக்கலாம்.

**முன்னோக்கிய ஒப்பந்தம்**
ஒப்பந்தத் திகதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எதிர்காலத் திகதியில் பரிமாற்றத்தினை நடாத்துவதற்கு இரு தரப்பினரையும் கடப்படுத்துகின்ற ஒப்பந்தம்.

**முன்னோக்கிய வீதம்**
உடனடித் திகதிக்கு அப்பால் உள்ள முதிர்ச்சியினைக் கொண்ட நாணயத்தின் விலை. முன்னோக்கிய வீதங்கள் உடனடி வீதங்களைக் கொண்ட ஒரே விலையினைக் கொண்டிருக்கலாம் அல்லது வித்தியாசமானவையாக இருக்கலாம். முதலாவது விடயத்தில் முன்னோக்கிய கட்டணமானது சமமானதாகும். இரண்டாவது விடயத்தில் விலையானது கட்டுப்பணத்தினை விட உயர்வானதாக இருக்கலாம் அல்லது கழிவில் தாழ்வானதாக இருக்கலாம்.

**முன்னோக்கிய வீத உடன்படிக்கை (FRA)**
குறிப்பிட்ட வட்டிவீதச் சுட்டி மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையான வீதம் (உதாரணம் - LIBOR) ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசத்தினை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட திகதியில் கொடுப்பனவுகளை பரிமாற்றிக் கொள்வதற்கான ஒப்பந்தம்.

## G »

**குழுமம்**
குழுமமானது சகல துணைக் கம்பனிகளினதும் முதன்மை நிறுவனமாகும்.

**உத்தரவாதங்கள்**
வாடிக்கையாளர் ஒருவர் மூன்றாம் தரப்பினருக்கு தனது நிதிக் கடப்பாட்டினை நிறைவேற்றத் தவறுகையில் வங்கியானது கொடுப்பனவினை மேற்கொள்ளும் என்கின்ற மாற்றமுடியாத உத்தரவாதத்தினை அடிப்படையில் குறிப்பிடுகின்றது. ஏனைய சில குறிப்பிட்ட உத்தரவாதங்கள் கேட்பு மற்றும் ஆற்றுகை உத்தரவாதம் போன்ற நிதி சாரா பொறுப்புக்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

## H »

**இழப்புக்காப்பு**
சாதகமற்ற விலை நகர்வுகளின் அபாயநேர்வில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் முறை (வட்டி வீதங்கள், விலைகள், பண்டங்கள்).

**முதிர்ச்சிக்காக வைத்திருக்கும் முதலீடுகள்**
நிறுவனமானது முதிர்ச்சி வரையில் வைத்திருப்பதற்கான சாதகமான எண்ணத்தினையும் ஆற்றலினையும் கொண்டுள்ள, ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின் போது நிறுவனமானது வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படுவது அல்லது விற்பனைக்குத் தயாரானது எனக் குறித்தொதுக்குகின்ற அல்லது கடன்கள் மற்றும் வரவேண்டியவைகளின் வரைவிலக்கணத்தினைப் பூர்த்தி செய்கின்ற சொத்துக்கள் தவிர்ந்த, நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடிய கொடுப்பனவுகளையும் நிலையான முதிர்ச்சியினையும் கொண்டுள்ள ஒரு நிதிச் சொத்து.

## I »

**சேதம்**
புத்தகத் தொகையினைவிட அறவிடக்கூடிய தொகையில் வீழ்ச்சி ஏற்படுவதனால் இது ஏற்படுகின்றது.

**முன் காப்பீடு**
ஒப்பந்தத்தில் உள்ள தரப்பினர் ஒருவருக்கு ஏற்படுகின்ற எந்தவொரு நட்டத்தினையும் ஒப்பந்தத்தில் தரப்பாக இல்லாத ஒருவர் ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்ற உடன்படிக்கை. உத்தரவாதம் வழங்குபவர் இரண்டாம் நிலைப் பொறுப்பினை ஏற்றுக்கொள்வதைப்போல் அல்லாது முன் காப்பீட்டினை வழங்குகின்ற நபர் அடிப்படைப் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றார்.

**வட்டி வீத அபாயநேர்வு**
சந்தை வட்டி வீதங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களின் காரணமாக நிதிக்கருவி ஒன்றின் எதிர்காலக் காசுப் பாய்ச்சலின் நியாயப் பெறுமதியில் ஏற்படும் அபாயநேர்வு.

**தொங்கல் வட்டி**
செயலூக்கமற்ற சொத்துக்கள் மீதான வட்டி.

**வட்டி எல்லை**
சராசரி வட்டி - ஈட்டல் சொத்துக்களின் விழுக்காடாக தேறிய வட்டி வருமானம்.

## K »

**பிரதான முகாமைத்துவ ஆளணியினர்**
நிறுவனம் ஒன்றினைத் திட்டமிடுவதற்கும் நடத்திச் செல்வதற்கும் அதன் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரத்தினையும் பொறுப்பினையும் கொண்டுள்ள நபர்கள்.

**பிரதான செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் (KPIs)**
கம்பனி ஒன்றின் முக்கியமான வெற்றிக் காரணிகளைப் பிரதிபலிக்கின்ற ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அளக்கக்கூடிய அளவீடுகளே KPIகளாகும்.

## L »

**நாணயக் கடிதம் (LC)**
மூன்றாம் நபரொருவருக்கு குறிப்பிட்ட தொகைப் பணத்தினை ஆவணத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக வழங்குமாறு கோரி வங்கி ஒன்றிற்கோ அல்லது வங்கிகளுக்கோ வங்கி ஒன்றினால் விநியோகிக்கப்படுகின்ற ஆவணம்.

**திரவத்தன்மை அபாயநேர்வு**
காசு அல்லது வேறு நிதிச் சொத்துக்களை விநியோகிப்பதன் மூலம் கொடுத்துத் தீர்க்கப்படுகின்ற நிதிப் பொறுப்புக்களுடன் தொடர்புபட்டுள்ள கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் நிறுவனமொன்று சிரமங்களை எதிர்நோக்குகின்ற அபாயநேர்வு.

**திரவச் சொத்து விகிதாசாரம்**
பங்குடமையாளர்களின் நிதி தவிர்ந்த மொத்தப் பொறுப்புக்களின் விழுக்காடாக வெளிப்படுத்தப்படும் திரவச் சொத்துக்கள்.

## M »

**சந்தைக்குறி**
நிலைமைகளை அவற்றின் நடைமுறைச் சந்தை அல்லது நியாய விலைக்கு அமைய மேல்நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ மீள்பெறுமதியிடும் கொள்கை.

**சந்தை அபாயநேர்வு**
சந்தை விலைகளில் ஏற்படுகின்ற மாற்றம் காரணமாக நிதிக்கருவி ஒன்றின் எதிர்காலக் காசுப்பாய்ச்சல் அல்லது நியாயப் பெறுமதியானது தளம்பல் அடையும் அபாயநேர்வு. சந்தை அபாயநேர்வானது மூன்று வகையான அபாயநேர்வுகளை கொண்டுள்ளது. நாணய அபாயநேர்வு, வட்டி வீத அபாயநேர்வு மற்றும் ஏனைய விலை அபாயநேர்வு.

**சிறுபான்மையினரின் வட்டி**
தாய்க் கம்பனியினால் துணைக் கம்பனிகளின் மூலமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உரிமை கொள்ளப்படாத உரிமை முதலுடன் தொடர்புடைய துணைக் கம்பனி ஒன்றின் இலாபம் அல்லது நட்டத்திற்கும் தேறிய சொத்துக்களுக்கும் இடையிலான விகிதாசாரம்.

**அடைமானம்**
கடன் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் நிதிச்சொத்தின் மீதான மீள் உரிமை.

## N »

**பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய கருவி**
மூன்றாம் தரப்பு ஒன்றிற்கு கட்டுப்பாடுகளின்றி விற்கக்கூடிய பிணையம் அல்லது வேறு நிதிக்கருவி (பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது). அதாவது வங்கி நோட்டுக்கள், காவி முறிகள், பரிமாற்று உண்டியல்கள், மற்றும் காசோலைகள் ஆகியவை பொதுவாக பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தக்கூடிய கருவிகளாகும்.

**தேறிய வட்டி எல்லை**
சராசரி வட்டியீட்டல் சொத்துக்களின் விழுக்காடாக வட்டி வருமானம்.

**செயலூக்கமற்ற கடன்கள்**
முதன்மைக் கொடுப்பனவு அல்லது வட்டிக் கொடுப்பனவு உரிய திகதியில் செலுத்தப்படாத கடன் அல்லது கடன் பெற்றவர் கடனின் வேறு விதிகள் அல்லது நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யத் தவறுகின்ற கடன். செயலூக்கமற்ற கடன்களுக்கு அட்டுறுவாகாத நிலை பொதுவாக ஒதுக்கப்படுகின்றது.

**நொஸ்ட்ரோ கணக்குகள்**
வேறொரு வங்கியிலே, பொதுவாக ஆனால் அவசியம் என்பதல்ல, ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதி வங்கியிலே, பேணப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்திலான நடைமுறைக் கணக்கு. மற்றைய வங்கியிலே வைப்பானது நொஸ்ட்ரோ கணக்கு என அழைக்கப்படுகின்றது.

## O »

**புறவயமான சான்று**
பகுப்பாய்வு, அளவீடு, அவதானிப்பு மற்றும் ஏனைய முறைகள் மூலமாக நிரூபிக்கக்கூடிய உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட தகவல்.

**ஐந்தொகையில் பதியப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**
சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக ஐந்தொகையில் அடையாளம் காணப்படாத ஆனால் நிகழ்சாத்தியங்களுக்கும் கடப்பாடுகளுக்கும் இடமளிக்கின்ற கொடுக்கல் வாங்கல்கள்.

## P »

**நிலை**
கொடுக்கப்பட்டுள்ள நாணயத்தில் அல்லது வட்டி வீதத்தில் உள்ள தேறிய மொத்தக் கடப்பாடு. நிலையானது சமமானதாகவோ அல்லது சமாந்தரமானதாகவோ (வெளிக்கூறல்கள் இல்லை) அல்லது கூடுதலானதாகவோ (விற்கப்பட்டதை விட அதிகமாக வாங்கப்பட்ட நாணயம்) இருக்க முடியும் அல்லது குறுகியதானதாக (வாங்கப்பட்டதைவிட அதிகமாக விற்கப்பட்ட நாணயம்) இருக்க முடியும்.

**முதன்மை வீதம்**
தனக்கு மிகவும் கடன் நாணயமிக்க கூட்டாண்மை வாடிக்கையாளர்களிடமிருந்து வங்கி அறவிடுகின்ற வட்டி வீதம்.

**வாக்குறுதிச் சீட்டு**
ஒரு நபரினால் இன்னொரு நபருக்கு எழுதப்பட்ட நிபந்தனையற்ற வாக்குறுதி சீட்டாகும். இதில் வாக்குறுதியளிப்பவர் கையொப்பமிட்டு குறிக்கப்பட்ட தொகையினைக் கோரும்போது அல்லது குறித்த அல்லது தீர்மானிக்கப்பட்ட எதிர்காலத் திகதியில் அல்லது உத்தரவின்பேரில் குறிப்பிட்ட நபருக்கு அல்லது கொண்டு வருபவருக்கு வழங்குவதான வாக்குறுதி.

## R »

**சம்பந்தப்பட்ட தரப்பினர்**
ஒரு தரப்பு மற்றொரு தரப்பினைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது குறிப்பிட்ட செல்வாக்கினை மற்றைய தரப்பினர் மீது நிதி அல்லது இயக்கத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக செலுத்துவதற்கு இயலுமான தரப்புக்கள்.

**மீள்கொள்வனவு (Repo)**
விற்பனை மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைக்கான துறைச்சொல்.

**ஒதுக்குச் சொத்துக்கள்**
மத்திய வங்கியுடன் அதன் ஒதுக்கத் தேவைப்பாடுகளை உருவாக்குகின்ற நிதி நிறுவனத்தின் சொத்துக்கள்.

**நேர்மாற்று மீள்கொள்வனவு (Reverse Repo)**
இது ரெபோவின் எதிர்ப்பதமாகும். அதாவது கொள்வனவு மற்றும் மீள்விற்பனை உடன்படிக்கை.

**சுழலும் கடன்**
கடன்படுனரின் தற்றுணிபின் பேரில் தொடர்ச்சியாகப் பணத்தினைப் பெறுவதையும் கொடுப்பனவு செலுத்துவதையும் அனுமதிக்கின்ற விதிகளைக் கொண்ட கடன் நிலை. கடன்படுனருக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற நிதிகள் முதன்மைத் தொகையினை மீளச் செலுத்துவதன் மூலம் நிரப்பப்படுகின்றன.

**அபாயநேர்வு கணிக்கப்பட்ட சொத்துக்கள்**
ஐந்தொகையில் பதியப்படாத சொத்துக்களுக்குச் சமமான, பொருத்தமான அபாயநேர்வுக் காரணிகளினால் பெருக்கப்பட்ட ஐந்தொகையிலுள்ள சொத்துக்களும் கடன்களும்.

## S »

**பிணையாக்கம்**
கடன் ஒன்றினை வழங்குவதன் மூலம் கொள்வனவுக்கு நிதி வழங்குகின்ற வாகனக் கம்பனிக்கு வருமானம் உருவாக்குகின்ற சொத்துக்களின் தொகுதி ஒன்றினை மாற்றுவதை இது சம்பந்தப்படுத்துகின்றது (பொதுவாக கடிதங்கள் அல்லது வர்த்தக ஆவணங்கள்).

**பிரிவு ரீதியான பகுப்பாய்வு**
தொழில் முயற்சி ஒன்றின் பிரிவுகளாக, குறிப்பாக அது இயங்குகின்ற புவியியல் பரப்புக்களின் வெவ்வேறு பிரதேச ரீதியாக நிதித் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்.

**பிரிவு ரீதியான அறிக்கையிடல்**
வங்கிச்சேவை இயக்கங்கள், குத்தகை இயக்கங்கள், பங்குத்தரகு மற்றும் பிணையங்களைக் கையாளுதல், சொத்து மற்றும் காப்புறுதி போன்ற வியாபாரப் பிரிவுகளில் இருந்து பெற்றுக்கொள்கின்ற வருவாய்க்கு அவற்றின் பங்களிப்பினை பிரிவு ரீதியான அறிக்கையிடல் சுட்டிக் காட்டுகின்றது.

**கொடுத்துத் தீர்த்தல் திகதி**
பிணையங்களை உண்மையாகக் காசுக்காகப் பரிமாற்றுதல் செய்தல் பூர்த்தி செய்யப்படுகின்ற பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்ற திகதி.

**குறுகிய நிலை**
சொத்துக்களின் (அத்துடன் அல்லது முன்னோக்கிய கொள்வனவு ஒப்பந்தங்கள்) மீதான பொறுப்புக்களின் (அத்துடன் அல்லது முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள்) மிகை. கொள்வனவுகள் மற்றும் விற்பனைகளின் தேறியவைகள் தேறிய விற்கப்பட்டவை அல்லது மிகையாக விற்கப்பட்டவைக்கு இட்டுச் செல்லும்போது விற்பனையாளர் ஒருவரின் நிலை.

**துணைக்கம்பனி**
வேறொரு தொழில் முயற்சியினால் கட்டுப்படுத்தப்படுகின்ற தொழில் முயற்சியாண்மை நிறுவனமே துணைக் கம்பனியாகும் (முதன்மைக் கம்பனியாக அறியப்படுகின்றது).

**தொங்கல் கணக்கு**
உரிய கணக்கிற்கு வகைப்படுத்தப்பட்டு மாற்றப்படுவதற்கு உட்பட்டதாக வைத்திருக்கப்படும் விடயங்களை தற்காலிகமாகப் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் கணக்கு.

**ஒருங்கு சேர்வமைப்புக் கடன்**
கூட்டு முயற்சி வடிவில் பல வங்கிகள் நிதிகளை வழங்குகின்ற கடன் ஏற்பாடு. இந்த வங்கிகள் இவற்றினைத் தனித்தனியாக வழங்குவதற்கு விருப்பமற்றவையாக அல்லது ஆற்றலற்றதாக இருக்கின்றன. தமது நிதியிடல் மிகவும் உயர்வாக இருக்கின்ற மேலும் அவ்வாறான நிதியிடலுக்கு எந்தவொரு தனித்த வங்கியினாலும் அதன் கடன் தொகுதியினை பாதிப்படையச் செய்யாமல் கடன் உதவி வழங்க முடியாத வாடிக்கையாளர்களுக்கு ஒருங்கு சேர்வமைப்புக் கடன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## T »

**கால வைப்பு**
குறிப்பிட்ட தவணைக்கு பின்பு மாத்திரமே வைப்பினை மீளப்பெறுவதற்கு உட்பட்ட வட்டியினைக் கொண்டுள்ள வைப்புக் கணக்கு.

**மொத்த மூலதனம்**
தட்டு 1 மூலதனத்தினதும் (மைய மூலதனம்) தட்டு 2 மூலதனத்தினதும் (குறைநிரப்பு மூலதனம்) கூட்டுத் தொகை.

**நிதிச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் விற்பனை செய்தல்**
பின்வரும் சந்தர்ப்பத்தில் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிப் பொறுப்புக்கள் விற்பனைக்கு தயாரானவையாக வகைப்படுத்தப்படுகின்றன. (a) அண்மைக்காலத்தில் விற்பதற்காக அல்லது மீள் கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்டது அல்லது பிரதானமாக செலவு ஏற்பட்டது. (b) ஒன்றாக முகாமைத்துவம் செய்யப்படுகின்ற அவற்றுக்கென குறுகிய கால இலாபம் எடுக்கின்ற பாங்கிற்கான உண்மையான சான்று இருக்கின்ற அடையாளம் காணப்பட்ட நிதிக்கருவித் தொகுதியின் பகுதி அல்லது (c) பெறுதிகள் (செயற்திறன்மிகு வைப்புக்காப்பு கருவியாக ஒதுக்கப்பட்ட பெறுதி தவிர).

**கொடுக்கல் வாங்கல் செலவுகள்**
நிதிச் சொத்து அல்லது நிதிப் பொறுப்பொன்றினை பெற்றுக்கொள்ளுதல், விநியோகித்தல் அல்லது விற்றுத்தீர்த்தலுடன் நேரடியாகத தொடர்புபட்ட அதிகரித்துச் செல்லும் செலவுகள்.

**திரைசேரி முறிகள் (T-முறிகள்)**
இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட நீண்ட காலத் திகதியிடப்பட்ட பிணையங்கள். T முறிகள் வட்டிக்கான கூப்பன் வீதத்தினைக் கொண்டுள்ளன.

## V »

**பெறுமதி சேர்க்கப்பட்டது**
வங்கிச் சேவைகளை, அவ்வாறான சேவைகளை வழங்குவதற்கான செலவு நீங்கலாக, வழங்குவதனால் உருவாக்கப்படுகின்ற செல்வமாகும். பெறுமதி சேர்க்கையானது ஊழியர்களுக்கும் அரசாங்கத்திற்கு மூலதனம் வழங்குவோருக்கும் வரிகள் மூலமாக ஒதுக்கப்படுவதுடன் விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிக்காக வைத்திருக்கப்படுகின்றது.

**அபாயநேர்வில் பெறுமதி (VAR)**
வரையறுக்கப்படுகின்ற வைத்திருப்புக் காலப்பகுதியில் சந்தை வட்டியில் அல்லது பரிமாற்ற வீதத்தில் ஏற்படுகின்ற மோசமான நகர்வுகளினால் ஏற்படுகின்ற உள்ளார்ந்த நட்டத்தினை மதிப்பிடுகின்ற அபாயநேர்வு முகாமைத்துவ முறையியல்.

**வொஸ்ட்ரோ கணக்கு**
இன்னொரு வங்கியினால் வங்கியொன்றில் பேணப்படுகின்ற உள்நாட்டு நாணயத்திலான நடைமுறைக் கணக்கு (ஒப்பிடுக நொஸ்ட்ரோ கணக்கு).

**விளைவு வளைவு**
முதிர்ச்சியின் செயற்பாடாக சந்தை வட்டி வீதத்தினைக் காட்டுகின்ற வளைவு. பொதுவாக விளைவு வளைவானது மேல்நோக்கிய வளைவினைக் கொண்டிருக்கும்: வட்டி வீதங்கள் கருவியின் தவணையுடன் அதிகரிக்கின்றன.

# குறிப்புகள்

# கூட்டாண்மைத் தகவல்கள்

**வங்கியின் பெயர்**
மக்கள் வங்கி

**சட்ட வடிவம்**
1961 ஆம் ஆண்டின் மக்கள் வங்கிச் சட்டத்தினால் 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும்.

**தலைமைக் காரியாயலம் (பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்)**
இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை. கொழும்பு 02, இலங்கை.
கேபள் ஜனபேங்
தொலைபேசி: +9411 232 7841 (6 இணைப்புகள்)
+9411 244 6316 (4 இணைப்புகள்)
+9411 248 1481
மின்னஞ்கல் : info@peoplesbank.lk
இணையம்: www.peoplesbank.lk
பெ.சே.வ. பதிவு இலக்கம்: 409000037-7000

**கணக்காய்வாளர்கள்**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
இல. 306/72 பொல்துவ வீதி. பத்தரமுல்ல, இலங்கை
KPMG
(பட்டயக் கணக்காளர்கள்)
32A, சேர் மொஹமட் மக்கன் மார்க்கார் மாவத்தை
த.பெ.இல. 186
கொழும்பு 00300, இலங்கை

**செயலாளர்**
திரு. ரொஹான் பத்திரகே, LLB, MMgt
வங்கியியல் வழக்கறிஞர்

**கூட்டாண்மை வங்கியியல் பிரிவு**
த.பெ.இல. 437,
யஎடட (லேக் ஹவுஸ் கட்டிடம்)
இல. 35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை.
கொழும்பு 10, இலங்கை
தொலைபேசி: +9411 232 0651-6,
+9411 243 7239-41,
+94 112392101-3
மின்னஞ்சல்: infocbd@peoplesbank.lk
SWIFT PSBKLKLX

**கரைகடந்த வங்கியியல் அலகு**
மக்கள் வங்கி, 1ஆம் மாடி,
தலைமைக்காரியாலய கட்டிடம்,
இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை. கொழும்பு 02, இலங்கை.
தொலைபேசி:+9411 220 6703,
+9411 220 6704
தொலைநகல்:+9411 245 8752,
+9411 245 8821
மின்னஞ்சல்: fcbu@peoplesbank.lk
SWIFT PSBKLKLX

**வெளிநாட்டு வாடிக்கையாயர் சேவைகள்**
இல. 59, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை
தெலைபேசி: +9411 233 2746,
+9411 233 4278, +9411 244 6409
மின்னஞ்சல்: +9411 243 4530
இணையம்: fastcash@peoplesbank.lk
nrfc@peoplesbank.lk,
teletran@peoplesbank.lk
SWIFT PSBKLKLX

**மக்கள் வங்கியின் துணைக்கம்பனிகள்**

**பீபள்ஸ் ட்ரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்**
இல. 59, டி ஆர் விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை
தொலைபேசி: +9411 247 0190,
+9411 247 8385, +9411 239 6296
தொலைநகல்: +9411 243 4530
மின்னஞ்சல்: ptravel@peoplesbank.lk
இணையம்: www.peoplestravels.com

**பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.**
இல. 1161 மருதானை வீதி. பொரள்ளை,
கொழும்பு 08.
தொலைபேசி: +9411 263 1631
தொலைநகல்: +9411 263 1000

**பீபள்ஸ் மேர்ச்சன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.**
இல. 21, நவம் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை
தொலைபேசி: +9411 230 0191-4
தொலைநகல்: +9411 230 0190

**மக்கள் வங்கியின் உப-துணைக்கம்பனிகள்**
(பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. இன் துணைக்கம்பனிகள்)

**பீபள்ஸ் இ.ன்சூரன்ஸ் லிமிட்டட்**
இல. 53, தர்மபால மாவத்தை,
கொழும்பு 03
தொலைபேசி
தொலைநகல்

பீபள்ஸ் லீசிங் ப்ரொபர்ட்டி டெவலப்பர்ஸ் லிமிட்டட்
இல. 1161, மருதானை வீதி, பொரள்ளை,
கொழும்பு 08.
தொலைபேசி: +9411 220 6406
தொலைநகல்: +9411 220 6399

பீபள்ஸ் லீசிங் பிலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
இல. 1161, மருதானை வீதி,பொரள்ளை,
கொழும்பு 08

**பீபள்ஸ் மைக்ரோவைனான்ஸ் லிமிட்டட்**
இல. 1161, மருதானை வீதி. பொரள்ளை,
கொழும்பு 08.
தொலைபேசி: +9411 263 1631
தொலைநகல்: +9411 263 1000

**பீபள்ஸ் லீசிங் ஹவ்லொக் ப்ரொபர்டீஸ் லிமிட்டட்**
இல. 1161, மருதானை வீதி. பொரள்ளை,
கொழும்பு 08
தொலைபேசி: +9411 263 1631
தொலைநகல்: +9411 263 1000

optima
Design & Concept by: Optima Designs (Pvt) Ltd.
Printed by: Printel (Pvt) Ltd.

www.peoplesbank.lk

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி